2834.

# T.N.L.A. Debates

OFFICIAL REPORT

VOL: V NO: 1 and 2

April 2 and 4

1985

C

D1
V211,31 N85
N85:5.1&2
136430

73/86

வெளியீடு 27-11-1985 Issued 27—11—1985

2834

24 மே 1985

சட்டமன்ற ... சென்னை-600 009

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 2, 1985 - தொகுதி V எண் 1

Tuesday the 2nd April 1985 - Volume V No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras - 600 009

விலை: ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 paise.

V211.31 'N85
N85.5.1 ф2
136430
சென்னை-600 008.

## உள்ளடக்கம்

2-4-1985

| | பக்கங்கள் |
|---|---|
| (i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் .. .. | i—vii |
| Personnel of the Government of Tamil Nadu .. .. | |
| (ii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. | ix—x |
| (iii) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பெயர்ப்பட்டியல் | xi—xix |
| 1. வினாக்கள்—விடைகள் : | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 1—24 |
| 2. ஒத்திவைப்புத் தீர்மானம்: | |
| சென்னை இராசரத்தினம் ஸ்டேடியத்தில் காவல் துறைப் பணிக்கு ஆட்கள் தேர்வு செய்யும் போது, வந்திருந்தோர் கூட்டத்தை ஒழுங்கு படுத்த காவல் துறையினர் தடியடிப் பிரயோகம் செய்ததாகக் கூறப்படுவது .. | 24—47 |
| 3. அறிவிப்புகள்: | |
| (அ) அண்ணா தொழில் நுட்பவியல் பல் கலைக் கழக ஆட்சிக் குழு—உறுப்பினர் தேர்தல் .. | 47 |
| (ஆ) அரசினர் சட்ட முன்வடிவுகள் (மே.செ.) | 48 |
| (இ) பேரவை அலுவல் .. | 127 |
| . கவன ஈர்ப்புகள் : | |
| (அ) மாநிலத்தின் பல பகுதிகளில் மக்கள் குடிநீர் பஞ்சத்தால் இன்னலுறுவது .. | 48—56 |
| (ஆ) தூத்துக்குடி பழைய துறைமுகத்தில் பணியாற்றி வந்த படகுத் தொழிலாளர்கள் புதிய துறைமுகம் உருவாக்கப்பட்டுள்ளதால் பாதிக்கப் பெற்றுள்ள நிலை .. | 56—61 |

5. வரவு-செலவுத் திட்டம் 1985-86 விவாதம்—(தொடர்ச்சி). பொது 61—126

திரு. கே. எம். தங்கமணி .. .. 61—70
திரு. பொ. அன்பழகன் .. .. 70—78
திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் .. .. 78—85
திரு. பரிதி இளம்வழுதி .. .. 85—92
டாக்டர் கே. சமரசம் .. .. 92—99
திரு. கு. ரமணி .. .. 99—111
திருமதி தா. இராசாம்பாள் .. .. 111—119
திரு. சா. துரைசாமி .. .. 119—126

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 128

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. சுந்தர்லால் குரானா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப் பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப் பாகு கழிவு, தொல் பொருள் இயல், மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக), ஆயத்துறை மற்றும் பயண இசைவுச் சீட்டு.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (நிதி அமைச்சர்)—நிதி, வருவாய், சட்டமன்றம், தேர்தல்கள், புள்ளி விவரங்கள் இளைஞர் அணி மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (மின் துறை அமைச்சர்) மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு, அச்சு காகிதக் கட்டுப்பாடு, எழுது பொருள் அச்சுத்துறை, மற்றும் அரசு அச்சகம்.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்)—தொழிலாளர், கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப் படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

6. மாண்புமிகு திரு. க. இராசாராம் : (தொழில் துறை அமைச்சர்)—பெருந் தொழில்கள், சுரங்கம் மற்றும் கனிவளம், மின்னணுவியல் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்.

7. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் சம்பந்தப் பட்டவை.

8. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (கல்வி அமைச்சர்)—கல்வி, ஆட்சி மொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு.

9. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (வேளாண்மைத் துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண் பொறியியல், வேளாண் பணி கூட்டுறவுச் சங்கங்கள், குடிநீர் வழங்கு மற்றும் கழிவு நீரகற்று வாரியம்.

10. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (சட்ட அமைச்சர்)—சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு மற்றும் கடன் நிவாரணம், (கடன் வழங்கல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உட்பட).

11. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை, சுற்றுசூழல் மாசுக் கட்டுப்படுத்தல்.

12. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்கு வரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ் சாலைகள்.

13. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (உணவு அமைச்சர்)—உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு, மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

14. மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : (கைத்தறித் துறை அமைச்சர்)—கைத்தறி மற்றும் நெசவாலைகள்.

15. மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : (சத்துணவு அமைச்சர்)—சத்துணவு.

16. மாண்புமிகு திரு. தா. வீராசாமி : (வணிக வரித்துறை அமைச்சர்)—வணிக வரிகள்.

17. மாண்புமிகு திரு. என். நல்லுச்சாமி : (வீட்டு வசதித்துறை அமைச்சர்)—வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்று வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

18. மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராம, குடிசை, சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரக தொழில்கள்.

19. மாண்புமிகு திரு. த. இராமசாமி : (மறு வாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர்)—வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்.



2834

20. மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : (ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்)—ஆதி திராவிடர் நலம், மலை வாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.

21. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்)—பிற்பட்டோர் நலம் மற்றும் மீன்வளம்.

22. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (சமூக நலத் துறை அமைச்சர்)—மகளிர் குழந்தைகள் உள்ளிட்ட சமூக நலம், பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம்.

23. மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி : (கதர்த் துறை அமைச்சர்)—கதர், பூமிதானம் மற்றும் கிராம தானம்.

24. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (பொதுப் பணித் துறை அமைச்சர்)—பொதுப் பணித்துறை, சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ஃப்.

25. மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : (கூட்டுறவுத் துறை அமைச்சர்)—கூட்டுறவு.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR OF TAMIL NADU

### THIRU SUNDAR LAL KHURANA.

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. THE HON. DR. M. G. RAMACHANDRAN : (*Chief Minister*)—Public, General Administration, Indian Administrative Service, and other All India Services, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses, Archaelogy, Prohibition excluding grant of Liquor permits, Excise and Passports.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN : (*Minister for Finance*)—Finance, Revenue, Legislature, Elections, Statistics, Youth Service Corps and Ex-servicemen.

3. THE HON. THIRU S. RAMACHANDRAN : (*Minister for Electricity*)—Electricity, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing and Government Press.

4. THE HON. THIRU K. A. KRISHNASAMY : (*Minister for Labour*)—Labour, Animal Husbandry, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. THE HON. THIRU R. M. VEERAPPAN : (*Minister for Information and Religious Endowments*)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest, Cinchona and grant of Liquor permits.

6. THE HON. THIRU K. RAJARAM : (*Minister for Industries*)—Large Scale Industries, Mines and Minerals, Electronics, Science and Technology.

7. THE HON. THIRU P. U. SHANMUGAM : (*Minister for Local Administration*)—Municipal Administration, Panchayats, Panchayat Unions, Community Development and Rural Indebtedness.

8. THE HON. THIRU C. ARANGANAYAGAM : (*Minister for Education*)—Education, Official Language, Tamil Development and Culture.

9. THE HON. DR. K. KALIMUTHU : (*Minister for Agriculture*)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering, Agro-Service Co-operative Societies, Water Supply and Drainage Board.

10. THE HON. THIRU C. PONNAIYAN : (*Minister for Law*)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

11. THE HON. DR. H. V. HANDE: (*Minister for Health*)—Health and Environmental Pollution Control.

12. THE HON. THIRU S. MUTHUSAMY: (*Minister for Transport*)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways.

13. THE HON. THIRU S. THIRUNAVUKKARASU: (*Minister for Food*)—Food, Price Control and Census.

14. THE HON. THIRU V. V. SWAMINATHAN : (*Minister for Handlooms*)—Handlooms and Textiles.

15. THE HON. THIRU R. SOUNDARARAJAN: (*Minister for Nutritions Meals*)—Nutritious Meals.

16. THE HON. THIRU T. VEERASAMY: (*Minister for Commercial Taxes*)—Commercial Taxes.

17. THE HON. THIRU N. NALLUSAMY : (*Minister for Housing*)—Housing and Slum Clearance Boards, Town Planning and Accommodation Control.

18. THE HON. THIRU ANOOR P. G. JAGADEESAN : (*Minister for Rural Industries*)—Rural Industries including Village, Cottage and Small Industries.

19. THE HON. THIRU T. RAMASAMY : (*Minister for Rehabilitation and Employment*)—Employment and Training, Indians Overseas, Refugees and Evacuees.

20. THE HON. THIRU A. ARUNACHALAM : (*Minister for Adi Dravidar Welfare*)—Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

21. THE HON. THIRU M. R. GOVENDAN : (*Minister for Backward Classes*)—Backward Classes and Fisheries.

22. THE HON. THIRUMATHI GOMATHI SRINIVASAN: (*Minister for Social Welfare*)—Social Welfare including Women and Children Welfare, Beggers Home, Orphanages and Correctional Administration.



23. THE HON. THIRUMATHI VIJAYALAKSHMI PALANISAMY : (*Minister for Khadi*)—Khadi, Bhoodhan and Gramdhan.

24. THE HON. THIRU Y. S. M. YUSUF : (*Minister for Public Works*)—Public Works Department, Irrigation including Minor Irrigation and Wakf.

25. THE HON. THIRU K. K. S. S. R. RAMACHANDRAN: (*Minister for Co-operation*)—Co-operation.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

*பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்

*பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்.

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. மா. சின்னராசு.
திரு. செ. செம்மலை.
திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்.
திரு. மு. இராமநாதன்.
திரு. வே. இரா. ஜெயராமன்.

சட்டமன்றப் பேரவை செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

துணை செயலாளர்கள்.

திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.
திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி.ஏ., பி.எல்.
திரு. வி. சீதாராமன், பி.காம்., பி.ஜி.எல்.

குழு அலுவலர்கள்.

திரு. சா. சீனிவாசன், பி.எஸ்சி.
திரு. கு. அ. சீனிவாசன், பி.ஏ.

சார்பு செயலாளர்கள்.

திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ.
திரு. வ. சா. ஜான், பி.ஏ.
திரு. கா. செ. சுந்தரராஜன், பி.ஏ., பி.எல்.
திரு. சாலமன் ஜெயபால், பி.எஸ்ஸி., பி.எல்.

### எஸ்டேட் அலுவர்கள்.

திரு. கே. தியாகராஜன், பி.ஏ.,பி.எல்.
திரு. கேசவராம், பி.ஏ.

### பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்.

திரு. பி. கோதண்டராமன்.

### துணைச் செயலாளர் (பதிப்பாளர்).

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி.லிட்.

### தலைமை நிருபர்.

திரு. வை. இராமச்சந்திரன், எம்.ஏ., எல்.எல்பி.

---

* 27–2–85 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.
** 11–3–85 அன்று நியமனம் செய்யப் பெற்றார்கள்.



### தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப் பட்ட) பெயர்ப்பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 1 அப்துல் சமத், திரு. ஆ.கா.அ. | திருவல்லிக்கேணி. |
| 2 அப்துல் மஜீத். திரு. எச். | வாணியம்பாடி. |
| 3 அரங்கநாயகம், திரு. செ. .. | தொண்டாமுத்தூர். |
| 4 அரிக்குமார், திரு. இரா. .. | பெரணமல்லூர். |
| 5 அருணாசலம், திரு. இரா. ... | நாமக்கல் (செ.வ.). |
| 6 அருணாசலம், திரு. எ. .. | வரகூர் (செ.வ.). |
| 7 அன்பழகன், திரு. க. .. | பார்க்டவுன். |
| 8 அன்பழகன், திரு. கே. .. | ஓமலூர். |
| 9 அன்பழகன், திரு. தி. .. | நாட்ராம்பள்ளி. |
| 10 அன்பழகன், திரு. பொ. .. | இளையான்குடி. |
| 11 ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம். |
| 12 ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி. | ஆண்டிமடம். |
| 13 ஆபிரகாம், திரு. ம. .. .. | ஆலந்தூர். |
| 14 ஆறுமுகம், திரு. அ. .. | வந்தவாசி. |
| 15 ஆறுமுகம், திரு. எச். ஜி. .. | பென்னாகரம். |
| 16 ஆறுமுகம், திரு. ஆர். எஸ். .. | ஓட்டப்பிடாரம் (செ.வ.). |
| 17 ஆறுமுகம், திரு. எ.எஸ்.ஏ., .. | விருதுநகர். |
| 18 ஆறுமுகம், திரு. செ. .. | மதுராந்தகம். |
| 19 ஆறுமுகம், திரு. சேலம் மு. .. | சேலம்-2. |
| 20 ஆனந்த கிருஷ்ணா, திரு. ஜி. | பூந்தமல்லி. |
| 21 ஆனந்தன், திரு. மு. .. | உளுந்தூர்ப்பேட்டை. |
| 22 இரகுபதி, திரு. கோ. .. | காட்பாடி. |
| 23 இரகுமான்கான், திரு. அ. .. | சேப்பாக்கம். |
| 24 இரத்தினம், திரு. எம். வி. ... | பொள்ளாச்சி. |
| 25 இரத்தினவேலு, திரு. சே. .. | முசிறி. |
| 26 இராசமாணிக்கம், திரு. ஆர். | அரூர் (செ.வ.). |
| 27 இராசமாணிக்கம், திரு. எல்ல. | தாம்பரம். |
| 28 இராசரத்தினம், திரு. எப்.எம். | கொளச்சல். |
| 29 இராசரத்தினம் என்கிற மணி, திரு. எம். | விழுப்புரம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 30 இராசாங்கம், திரு. மு. ... | திருவிடைமருதூர். |
| 31 இராசாம்பாள், திருமதி. த. | தலைவாசல் (செ.வ.). |
| 32 இராசாராம், திரு. க. .. | பனமரத்துப்பட்டி. |
| 33 இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம். |
| 34 இராசு, திரு. வி. கே. .. | அரக்கோணம் (செ.வ.). |
| 35 இராசேந்திரன், திரு. எஸ்.என். | தூத்துக்குடி. |
| 36 இராமச்சந்திரன் டாக்டர் எம். ஜி. | ஆண்டிப்பட்டி. |
| 37 இராமச்சந்திரன், திரு. கே. எஸ். எம். | போடிநாயக்கனூர். |
| 38 இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | சாத்தூர். |
| 39 இராமச்சந்திரன், திரு. ச. .. | பன்ருட்டி. |
| 40 இராமச்சந்திரன், திரு. சோ.மா. | அண்ணாநகர். |
| 41 இராமச்சந்திரன், திரு. ப. ந. | பட்டுக்கோட்டை. |
| 42 இராமசாமி, திரு. எஸ்.என். | சாத்தான்குளம். |
| 43 இராமசாமி, திரு. த. .. | இராமநாதபுரம். |
| 44 இராமநாதன், திரு. மு. .. | கோயம்புத்தூர் மேற்கு. |
| 45 இராமலிங்கம் டாக்டர், கே.பி. | இராசிபுரம். |
| 46 இளங்கோவன், திரு. ஈ.வே.கி.ச. | சத்தியமங்கலம். |
| 47 ஈஸ்வரன், திரு. ஆர். .. | வாசுதேவநல்லூர் (செ.வ.). |
| 48 உச்சி, திரு. கே. .. .. | கூடலூர். |
| 49 உத்திராபதி, திரு. பொ. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 50 எத்திராசன், திரு. கி. ... | அச்சரப்பாக்கம் (செ.வ.). |
| 51 கணபதி, திரு. கே. ஆர். .. | சிதம்பரம். |
| 52 கதிர்வேலு, திரு. மா. .. | இராணிப்பேட்டை. |
| 53 கந்தசாமி, திரு. கா. வே. .. | கிணத்துக்கடவு. |
| 54 கந்தசாமி, திரு. பெ. ... | பொங்கலூர். |
| 55 கல்லன், திரு. கே. .. .. | உதகமண்டலம். |
| 56 கலிதீர்த்தான், திரு. சோ. ... | சங்கராபுரம். |
| 57 காளிமுத்து டாக்டர், கா. .. | மதுரை கிழக்கு. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 58 கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம்விளக்கு. |
| 59 கிருஷ்ணசாமி, திரு. வி. இரா. | அணைக்கட்டு. |
| 60 கிருஷ்ணமூர்த்தி, திரு. கி. .. | கும்பகோணம். |
| 61 கிருஷ்ணராஜ், திரு. ஜி. .. | சேலம்-1. |
| 62 குப்புசாமி, திரு. கு. .. | ஒட்டன்சத்திரம். |
| 63 குமர குருபர இராமநாதன், திரு. ச. .. | விளாத்திக்குளம். |
| 64 குமரி அனந்தன், திரு. .. | இராதாபுரம். |
| 65 குமாரதாஸ் டாக்டர், தே. .. | கிள்ளியூர். |
| 66 குருசாமி என்கிற அண்ணாதாசன் திரு. எம். | திருவரம்பூர். |
| 67 கோமதி சீனிவாசன், திருமதி. | வலங்கைமான் (செ.வ.). |
| 68 கோவிந்தசாமி, திரு. ஆர். .. | குடியாத்தம். |
| 69 கோவிந்தசாமி, திரு. ச. .. | எடப்பாடி. |
| 70 கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி. |
| 71 சங்கரலிங்கம், திரு. ச. .. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.) |
| 72 சண்முகம், திரு. இரா. .. | திருத்தணி. |
| 73 சண்முகம், திரு. என். .. | சோளிங்கர். |
| 74 சண்முகம், திரு. ப.உ. .. | மேல் மலையனூர். |
| 75 சண்முகையா பாண்டியன், திரு. | ஆலங்குளம். |
| 76 சந்திரசேகரன், திரு. ஆ. .. | சோழவந்தான். |
| 77 சந்திரசேகர், திரு. மூ. .. | முகையூர். |
| 78 சம்சுல் ஆலம், திரு. வி.எஸ்.டி. | பாளையங்கோட்டை. |
| 79 சமரசம் டாக்டர், கோ. .. | காவேரிப்பட்டினம். |
| 80 சரோஜா, திருமதி. இரா. .. | உப்பிலியாபுரம், (ஆ.வா ) |
| 81 சாமிக்கண்ணு, திரு. தா. .. | செங்கம் (செ.வ.) |
| 82 சித்தன், திரு. என்.எஸ்.வி. .. | திருமங்கலம். |
| 83 சிந்தன், திரு. வி.பி. .. | வில்லிவாக்கம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 84 சிவக்குமார், திரு. ஆ. .. | சமயநல்லூர், (செ.வ.) |
| 85 சிவக்குமார், திரு. எம். .. | கூனூர் (செ.வ.) |
| 86 சிவஞானம், திரு. என். .. | திருவோணம். |
| 87 சிவப்பிரகாசம், திரு. சீ. .. | சேந்தமங்கலம். (ஆ.வா.) |
| 88 சிவராமன், திரு. எஸ். .. | சின்னசேலம். |
| 89 சிவராஜ், திரு. க. .. | ரிஷிவந்தியம். |
| 90 சின்னக்குழந்தை, திரு. மு. .. | ஆரணி. |
| 91 சின்னச்சாமி, திரு. ரா. .. | தர்மபுரி. |
| 92 சின்னசாமி, திரு. வே.கு. .. | பவானிசாகர். |
| 93 சின்னராசு, திரு. க. இரா. .. | கிருஷ்ணகிரி. |
| 94 சின்னராசு, திரு. மா. .. | மேட்டுப்பாளையம். |
| 95 சுந்தரதாஸ், திரு. மா. .. | விளவங்கோடு. |
| 96 சுப்புராயர், திரு. சி. .. | கம்பம். |
| 97 சுப்புராயன், திரு. கு. .. | திருப்பூர். |
| 98 சுப்பிரமணிய ஆதித்தன் என்கிற சுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். | திருச்செந்தூர். |
| 99 சுப்பிரமணியன், திரு. உ. .. | சிவகங்கை. |
| 100 சுப்பிரமணியன், திரு. வீ. .. | கண்டமங்கலம். (செ.வ.) |
| 101 சுவாமிநாதன், திரு. வி.வி. .. | புவனகிரி. |
| 102 செங்காளியப்பன், திரு. ஆர். .. | சிங்காநல்லூர். |
| 103 செங்கோட்டையன், திரு. கு.ஆ. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 104 செங்கோட்டையன், திரு. பெ. | கபிலர்மலை. |
| 105 செம்மலை, திரு. செ. .. | தாரமங்கலம். |
| 106 செல்லமுத்து, திரு. மொ. .. | திருவாரூர் (செ.வ.) |
| 107 செல்லப்பா, திரு. வி.கோ. .. | கடலூர். |
| 108 செல்வராசன், திரு. அ. .. | துறைமுகம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 109 சேகர் என்கிற குலசேகரன், திரு. கே.பி. | பொன்னேரி (செ.வ). |
| 110 சொர்ணலிங்கம், திரு. கா. | திருவாடனை. |
| 111 சோலைராசு, திரு. க. | மருங்காபுரி. |
| 112 சைதை துரைசாமி, திரு. சா. | சைதாப்பேட்டை. |
| 113 சௌந்திரராசன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம். |
| 114 சௌரிராஜன், டாக்டர் கே. | தியாகராயநகர். |
| 115 ஞானசுந்தரம், திரு. சா. .. | மன்னார்குடி. |
| 116 டேனியல்ராஜ், திரு. எஸ். .. | ஸ்ரீவைகுண்டம். |
| 117 தங்கமணி, திரு. மு. .. .. | மாயூரம். |
| 118 தங்கமணி, திரு. கே.எம். .. | திண்டிவனம். |
| 119 தங்கராசு, திரு. ஏ. .. .. | குறிஞ்சிப்பாடி. |
| 120 தங்கராசு, திரு. செ. .. | மங்களூர் (செ.வ.). |
| 121 தங்கவேல்ராஜ், திரு. ப.ம. .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 122 தங்கவேலு, திரு. வி.. .. | வால்பாறை (செ.வ.). |
| 123 தமிழ்மணி, திரு. .. .. | திருப்போரூர் (செ.வ.). |
| 124 தமிழரசன், திரு. கு. .. | பேரணாம்பட்டு (செ.வ.). |
| 125 தனபால், திரு. ப. .. .. | சங்கரி (செ.வ.). |
| 126 தாமரைக்கனி, திரு. இரா. .. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 127 தியாகராசன், திரு. ர. .. | விருத்தாசலம். |
| 128 திருஞானம், திரு. பி. ஆர். | ஏற்காடு (ஆ.வ) |
| 129 திருநாவுக்கரசு, திரு. எஸ். .. | அறந்தாங்கி. |
| 130 திருமலைசாமிக் கவுண்டர், திரு. சு. | உடுமலைப்பேட்டை. |
| 131 தீர்த்தகிரி கவுண்டர், திரு. டி. | மொரப்பூர். |
| 132 தீர்த்தராமன், திரு. ப. .. | பாலக்கோடு. |
| 133 துரை அன்பரசன் என்கிற இராமலிங்கம், திரு. | நெல்லிக்குப்பம். |
| 134 துரை கிருஷ்ணமூர்த்தி, திரு. | தஞ்சாவூர். |
| 135 துரை கோவிந்தராசன், திரு. | திருவையாறு. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 136 துரைராசு, திரு. எஸ் . பி. .. | காரைக்குடி. |
| 137 துரை ராமசாமி, திரு. .. | வெள்ளக்கோவில். |
| 138 தெய்வநாயகம், திரு. எ. .. | மதுரை சென்ட்ரல். |
| 139 தேவராஜ் , திரு. வி. எம். .. | வேலூர். |
| 140 நடராசன், திரு. ஆ. .. | பேரூர். |
| 141 நரசிம்மபல்லவன், திரு. க. | உத்திரமேரூர். |
| 142 நரசிம்மன், திரு. பூ. மு. .. | பள்ளிப்பட்டு. |
| 143 நல்லமுத்து, டாக்டர் க. .. | பெரம்பலூர் (செ.வ.). |
| 144 நல்லுச்சாமி, திரு. என். .. | திருச்சிராப்பள்ளி-2. |
| 145 நாச்சிமுத்து, திரு. கே. பி. .. | மேட்டூர். |
| 146 நாராயணன், திரு. எஸ். .. | திருநெல்வேலி. |
| 147 நாராயணன், திரு. பு. கோ. .. | பவானி. |
| 148 நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | ஆத்தூர். |
| 149 பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர். |
| 150 பரமசிவம், திரு. பா. ந. .. | பல்லடம். |
| 151 பரிதி இளம்வழுதி, திரு. .. | பெரம்பூர். |
| 152 பழனி, திரு. த. .. .. | ஆற்காடு. |
| 153 பழனிச்சாமி, திரு. கா. செ. .. | காங்கேயம். |
| 154 பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர். |
| 155 பாண்டியன், திரு. பி. எச். .. | சேரன்மாதேவி. |
| 156 பாண்டுரங்கன், திரு. மு. .. | கலசபாக்கம். |
| 157 பாப்பா சுப்பிரமணியம், திரு. | குத்தாலம். |
| 158 பாரதி, திரு. ஜி. கே. ஜெ. .. | திருவொற்றியூர். |
| 159 பாரமலை, திரு. க. .. .. | மானாமதுரை (செ.வ.) |
| 160 பாலகிருஷ்ணன், திரு. ச. .. | மொடக்குறிச்சி. |
| 161 பாலகிருஷ்ணன், திரு. வ. .. | சிவகாசி. |
| 162 பாலச்சந்திரன், திரு. வை. .. | பத்மநாபபுரம். |
| 163 பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ.வ.). |
| 164 பாலசுப்பிரமணியன், திரு. எஸ். | அம்பாசமுத்திரம். |
| 165 பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. | வேடசந்தூர். |
| 166 பாலன், திரு. சு. .. .. | எழும்பூர். |
| 167 பாலாஜி, திரு. கே. .. .. | காஞ்சிபுரம். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 168 பாலுச்சாமி, திரு. ஏ. .. | பரமக்குடி (செ.வ.). |
| 169 பாலுசாமி , திரு. அ. .. | திலக்கோட்டை-(செ.வ.). |
| 170 பிச்சை, திரு. மு. .. .. | அருப்புக்கோட்டை. |
| 171 பிரணவநாதன், திரு. அ. .. | கடலாடி. |
| 172 பிரேம்குமார், திரு. ஆ. .. | திண்டுக்கல். |
| 173 புருசோத்தமன், திரு. எஸ். | அரியலூர். |
| 174 புஷ்பராசு, திரு. த. .. .. | திருமயம். |
| 175 பெரியசாமி, திரு. அ. .. | தாராபுரம் (செ.வ.). |
| 176 பெரியசாமி, திரு. ரா. .. | தொட்டியம். |
| 177 பெருமாள், திரு. தெ. .. | கடையநல்லூர். |
| 178 பெருமாள் பிள்ளை, திரு. கோ. | கன்னியாகுமரி. |
| 179 பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | பழனி (செ.வ.). |
| 180 பொன்னுசாமி, டாக்டர், அ. | பெருந்துறை. |
| 181 பொன்னுரங்கம், திரு. ப. .. | ராயபுரம். |
| 182 பொன்னையன், திரு. சி. .. | திருச்செங்கோடு. |
| 183 மணவாளன், திரு. .. .. | திருப்பத்தூர். |
| 184 மணிமாறன், திரு. மா. .. | நன்னிலம் (செ.வ.). |
| 185 மலர்மன்னன், திரு. அ. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 186 மனோகரன், திரு. நாஞ்சில் கி. | புரசைவாக்கம். |
| 187 மனோகரன், திரு. தி.நா.கோ.அ. | திருநாவலூர். |
| 188 மாசிலாமணி, டாக்டர், ந. .. | ஜெயங்கொண்டான். |
| 189 மாதவன், திரு. செ. .. | திருப்பத்தூர். |
| 190 மாதையன், திரு. யு. பி. .. | அந்தியூர் (செ.வ.). |
| 191 மாரிமுத்து, திரு. த. .. | குளத்தூர் (செ.வ.). |
| 192 மாரிமுத்து, திரு. மு... .. | திருப்பரங்குன்றம். |
| 193 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம். |
| 194 முகம்மது கனி, திரு. ஜே. .. | புதுக்கோட்டை. |
| 195 முகம்மது சலீம், டாக்டர், த... | பெரியகுளம். |
| 196 முசிறிபுத்தன், திரு. பி. .. | குளித்தலை. |
| 197 முத்துசாமி, திரு. சு. .. | ஈரோடு. |
| 198 முத்துராமலிங்கம், திரு. பி.கே.எம். | உசிலம்பட்டி. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
| --- | --- |
| (1) | (2) |
| 199 முத்துராமலிங்கம், திரு. பொன். | மதுரை மேற்கு. |
| 200 முத்துவேல், திரு. கே. .. | முதுகுளத்தூர். |
| 201 முத்தையா, திரு. இரா. .. | சேடப்பட்டி. |
| 202 முருகன், திரு. கி. .. .. | செய்யாறு. |
| 203 முருகானந்தம், திரு. டி. என். | செஞ்சி. |
| 204 முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி. |
| 205 யசோதா, திருமதி டி. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 206 ரமணி, திரு. கு. .. .. | கோயம்புத்தூர் கிழக்கு. |
| 207 ரவீந்திரன், திரு. ஏ. எஸ். .. | திருவண்ணாமலை. |
| 208 ராமஜெயம், திரு. ம. நா. .. | வானூர் (செ.வ.). |
| 209 ராமன், திரு. கி. .. .. | ராஜபாளையம் (செ.வ.). |
| 210 ராஜாபாபு, திரு. ஜெ. .. | போளூர். |
| 211 ரெங்கசாமி, திரு. ஆர். .. | கோவில்பட்டி. |
| 212 ரெத்தினராஜ், திரு. எஸ். .. | நாகர்கோவில். |
| 213 லட்சுமி, திருமதி பி. .. | அவினாசி (செ. வ.). |
| 214 வடிவேல், திரு. கு. .. | கரூர். |
| 215 வளர்மதி, திருமதி பா. .. | மயிலாப்பூர். |
| 216 விஜயபாலன், திரு. என். .. | பூம்புகார். |
| 217 விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | வீரபாண்டி. |
| 218 வீராணம்பலம், திரு. க. வெ. | மேலூர். |
| 219 வீரய்யன், திரு. கோ. .. | நாகப்பட்டிணம். |
| 220 வீராசாமி, திரு . தா. .. | ஒரத்தநாடு. |
| 221 வேங்கடரமணன், திரு. டி. ஆர். | தென்காசி. |
| 222 வெங்கடரெட்டி, திரு. டி. .. | ஒசூர். |
| 223 வெங்கடாசலம், திரு. அ. .. | ஆலங்குடி. |
| 224 வெங்கடாசலம், திரு. கி. .. | லால்குடி. |
| 225 வெங்கடாசலம், திரு. டி. எம். | பரகூர். |
| 226 வேணுகோபால், திரு. எஸ். .. | டாக்டர் ராதாகிருஷ்ண நகர். |
| 227 வேணுகோபால், திரு. கே. வி. | தள்ளி. |
| 228 வேலு, திரு. ஈ. வி. கூடலூர் | தண்ட்ராம்பட்டு. |
| 229 ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குநேரி. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
| --- | --- |
| (1) | (2) |
| 230 ஜகதீசன், திரு. ஆனூர், பு.கோ. | செங்கல்பட்டு. |
| 231 ஜெகதீசன், திரு. சு. .. | அரவக்குறிச்சி. |
| 232 ஜெயச்சந்திரன், திரு. சா. .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.). |
| 233 ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி. |
| 234 ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டாறு. |
| 235 பிரான்சிஸ், திரு. ஜி. கே. .. | நியமன உறுப்பினர். |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

| | |
| --- | --- |
| 1. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் .. | அமைச்சர். |
| 2. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே | அமைச்சர். |
| 3. மாண்புமிகு திரு. யா.சை.மு. யூசுப் .. | அமைச்சர். |
| 4. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி .. .. | தலைமை வழக்கறிஞர். |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

*1985 ஏப்ரல் 2, செவ்வாய்க்கிழமை.*

*பங்குனி 20, ரக்தாட்சி–திருவள்ளுவர் ஆண்டு 2016.*

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு
அவ்வ துறைவது அறிவு. ''

உலகம் எவ்வாறு நடைபெறுகின்றதோ, உலகத்தோடு பொருந்திய வகையில் தானும் அவ்வாறே நடப்பதே அறிவாகும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### சைதாப்பேட்டை மழைநீர் வடிகால் திட்டம்.

**40**—(*வினா எண். 221) **திரு. சா. துரைசாமி :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதை சி. ஐ. டி. நகர், மேற்கு சி. ஐ. டி. நகர் பகுதி மழை நீர் வடிகால்வாயை சீரமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்பொழுது மேற்கொள்ளப் படும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) சைதை சி. ஐ. டி. நகர், மேற்கு சி. ஐ. டி. நகர் பகுதியில், மாம்பலம் பெருங்கால் வாயைத் தவிர வேறு மழைநீர் வடிகால்வாய்கள் இல்லை. இந்த மாம்பலம் பெருங்கால்வாயை சீரமைக்கும் திட்டம் எதுவும் மாநகராட்சியில் இல்லை.

(ஆ) இவ் வினாற்கு இடமில்லை.

**திரு. சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைதை சி. ஐ. டி. நகர், மேற்கு சி. ஐ. டி. நகர் என்ற இந்தப் பகுதிகளில் அண்ணா சாலையைக் கடந்து அடையாறு ஆற்றிலே கலக்கின்ற அந்தப் பெருங்கால்வாய் என்பது மிகவும் பழுதடைந்து கழிவு நீரெல்லாம் அங்கே தேங்கி அது ஒரு கூவம் ஆற்றைப்போல விளங்கிக் கொண்டிருக்கிறது. எனவே அந்தப் பெருங்கால்வாயைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1985 ஏப்ரல் 2

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மேற்கு சி. ஐ. டி. பகுதியிலுள்ள தெருக்கள் எல்லாம் சாய்வாக அமைந்திருப்பதன் காரணத்தால் மழை நீர் தேங்க வாய்ப்பில்லை என்று குறிப்பு இருக்கின்றது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது பற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சா. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மழை நீர் தானாகச் சென்று விட்டால் இந்தப் பிரச்சினைக்கே இடம் இல்தல. மழை நீரும் கழிவு நீரும் தானாகச் செல்ல முடியாமல் பெரும் குட்டையாகத் தேங்கிக் கிடப்பதால் சிரமங்கள் ஏற்படு கின்றன. அந்த சிரமத்தைக் குறைக்க வீனாகக் கிடக்கின்ற வீராணம் பைப்புகளை இந்தப் பெருங்கால்வாயிலே பதித்து இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்தக் கால்வாய் தேவையில்லை என்று தான் மாநகராட்சியினர் குறிப்பு அனுப்பியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதுபோல் தேவைப்பட்டால் அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழை நீர் தெருக்களில் தேங்க முக்கியமான காரணம் வாறுகால்களில் எல்லாம் தூரடைந்துபோய் அது ரோட்டோடு ஒன்றாகக் கலந்துவிடுவதன் காரணத்தால்தான் இவ்வாறு தேங்குகின்றது. தென்காசி நகரத்தில் கூட இவ்வாறு வாறுகால்கள் சரியாக தூர் எடுக்கப்படாமல் இருக்கின்றன. எனவே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய நிர்வாகத்தின் கீழ் உடனடியாக இந்த வாறுகால் களைத் தூர் எடுக்கும்படி உத்தரவிடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அவற்றை அவ்வப்போது தூர் எடுத்துக் கொண் டிருக்கிறார்கள். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் எங்கெங்கு அவ்வாறு எடுக்கப்படாமல் இருக்கின்றன என்ற புகாரை அனுப்பினால் அதை அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மா. கதிர்வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூக்கடை பூக்கடையைச் சுற்றியுள்ள பகுதி, பேருந்து நிலையம் ஆகியவை சுகாதாரச் சீர்கேடு அடைந்து துர்நாற்றம் அடிக்கும் நிலையில் இருக்கின்றன அதற்கு அரசு ஏதாவது நட வடிக்கை எடுத்து இருக்கின்றதா? பொதுமக்களின் நலன் கருதி அந்த நிலைமையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



1985 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி மேற்கு சி.ஐ.டி. நகர் பற்றியது. ஆனால் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுவது பேருந்து நிலையம் பற்றி. எனவே தனிக் கேள்வி போடவும்.

திரு. கி. வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி பகுதியில் குறிப்பாகச் சிந்தாமணி பேருந்து நிலையம் அருகில் மழை நீர் தேங்கி நிற்கின்ற நிலை இருக்கிறது. இதைப் போக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வரு வார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, சிந்தாமணி பேருந்து நிலையத்தைப் பற்றி மாண்புமிகு அங்கத் தினர் அவர்களுக்கு இருக்கின்ற அக்கறையைப் பாராட்டுகிறேன். ஆனால் தனிக்கேள்வி போட்டால் நல்லது என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

### ஊராட்சி ஒன்றியங்களின் பொது நிதி

41—(*வினா எண். 1054) டாக்டர் கே. பி. இராமலிங்கம் ; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஊராட்சி ஒன்றியங்களில் பொது நிதி குறைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அதைப் பெருக்குவதற்கு அரசு எடுத்துள்ள நடவ டிக்கை என்ன?

(இ) எத்தனை ஒன்றியங்களில் பற்றாக்குறை உள்ளது, மாவட்ட வாரியாக?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(ஆ) ஊராட்சி ஒன்றியங்களின் நிதிநிலைமையைப் பெருக்க மற்ற ஆதாரங்களை பரிசீலிக்க ஒரு குழு அமைத்து அரசுக்கு பரிந்துரை செய்ய ஊரக வளர்ச்சி இயக்குனரால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

(இ) 71 ஒன்றியங்களில் பற்றாக்குறை உள்ளது. மாவட்ட வாரியாக விவரங்கள் * அவை முன் வைக்கப் பட்டுள்ளது.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர் களே, தமிழகத்தில் 71 ஊராட்சி ஒன்றியங்களில் பொது நிதி குறைந்துள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது தமிழகத்தில் தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்ற அரசாங்கம்

* 129-ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

பணம் கொடுத்து பல்வேறு திட்டங்களை கிராமப்புறங்களில் நிறைவேற்றி வருகின்ற இந்த நேரத்தில் ஊராட்சி ஒன்றிய நிதி ஏன் குறைந்தது என்று விசாரணை நடத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏன் குறைந்தது என்பதைப் பற்றி விசாரிப்பதை விட எப்படி அதைச் சரியாக்குவது என்பது பற்றி விசாரிப்பது தான் சாலப் பொருத்தமாக இருக்கும் என்று கருதி ஏற்கெனவே ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அது விசாரணையில் இருக்கிறது.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, 71 ஊராட்சி ஒன்றியங்களிலும் ஏதாவது தவறுகள் நடந்திருக்குமோ என்று ஐயப்படுகிறோம். அதனால் அந்த 71 ஒன்றியங்களுக்கு மட்டுமல்லாமல், ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கிற பொது நிதியைப் பொறுத்த மட்டிலே அங்கேயிருக்கிற பணிகளை மேற்பார்வையிடுவதற்கென்று ஒவ்வொரு மாவட்ட அளவிலே சட்டமன்ற உறுப்பினர்களும் உயர் அதிகாரிகளும் அடங்கிய குழுவை அமைத்து, அங்கே ஆடிட் செய்கின்ற முறையை அமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதே ஊராட்சி ஒன்றிய நிதிகள் எல்லாம் ஆடிட் செய்யப்பட்டுத்தான் வருகின்றன. இருந்தாலுங்கூட பொதுவாக 71 ஊராட்சி ஒன்றியங்கள் பற்றி மட்டுமல்லாமல், தமிழகத்தில் இருக்கிற 378 ஊராட்சி ஒன்றியங்களின் நிதிநிலைபற்றி ஆராயவும், நடைபெற்ற வேலைகள் எவ்வாறு நடைபெற்றிருக்கின்றன என்பதைப் பரிசீலிக்கவும் தனியாகக் குழு அமைக்கலாமா என்பதுபற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. வி. பி. சிந்தன் : தலைவர் அவர்களே, பரவலாக ஊராட்சி ஒன்றியங்களுடைய நிதி கையாடப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டுகள் இருப்பது அமைச்சருக்குத் தெரியுமா? தேர்ந்தெடுக்கப்படாத நியமிக்கப்பட்டவர்கள் நிதியைச் சூறையாடுவதாகக் கூறப்படுகிற உண்மையை ஆராய்வதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அப்படி ஏதேனும் தவறு நடந்திருக்குமானால், குறிப்பிட்ட இடத்தை, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவாரானால் விசாரிக்க அரசு தயாராக இருக்கிறது. பொதுவாக தமிழகம் முழுவதும் இப்படி தவறுகள் நடந்திருக்குமா என்பதைப் பரிசீலிக்க ஒரு குழு அமைக்கலாமா என்பதைப் பற்றி அரசு யோசித்துவருகிறது.





திரு. குமரி அனந்தன் : சபாநாயகர் அவர்களே, 71 பஞ்சாயத்து ஒன்றியங்களிலே நிதிப் பற்றாக்குறை என்று சொன்னால், தமிழகத்தில் இருக்கிற ஒன்றியங்களில் 20% பஞ்சாயத்து ஒன்றியங்களிலே நிதிப் பற்றாக்குறை என்று பொருள் ஆகிறது. இந்தப் பஞ்சாயத்து ஒன்றியங்கள் இதன் காரணமாக மின் கட்டண பாக்கி வைத்து அதனால் ஊருக்கு விளக்கு போடுவதை மின்சார இலாகா தடை செய்த இடங்களில் அரசாங்கமே அந்தக் கட்டணத்தைக் கட்டி மின்விளக்கைப் போட ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அதுபற்றிய தகவல் இல்லை, தனிக் கேள்வி போட்டால் பதில் சேகரித்து சொல்கிறேன்.

திரு. மா. சின்னராசு : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஊராட்சி மன்றங்களுக்கும் வருகிற வருவாயை—வீட்டு வரியாக இருந்தாலும் சரி, மற்ற வரிகளாக இருந்தாலும் சரி ரெவினியூ இலாகாவைச் சேர்ந்த கிராம நிர்வாக அதிகாரிகள் தான் வசூலிக்கிறார்கள். அதிலும் அவர்கள் போதுமான அக்கறை காட்டாத காரணத்தால்தான் தொடர்ந்து ஊராட்சி ஒன்றியங்களுக்கான நிதி குறைந்திருக்கிறது என்பதை அரசு அறியுமா? அதைக் களைய அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இது வரி வசூலிப்பதைப் பற்றியதாகும். இதுபற்றி பரிசீலிக்கலாம். இருந்தாலும்கூட வருவாய்த் துறை வசூலித்து ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுப்பதுதான் முறையாகும் என்று அரசு கருதுகிறது.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, நிதிப் பற்றாக்குறை உள்ள ஒன்றியங்களில் வேலைகள் நடைபெறாமல் இருக்கின்றனவா ? அதற்கு அரசு என்ன செய்ய இருக்கிறது ? வேறு ஏதாவது உதவிகள் செய்து வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நிதிப் பற்றாக்குறை காரணமாக எந்த ஊரக வளர்ச்சிப் பணி வேலையும் தடங்கலாகி இருக்காது. காரணம் அதற்காக மத்திய அரசும், மாநில அரசும் தனியாக மானியம் கொடுக்கின்றன.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 71 ஊராட்சி ஒன்றியங்களிலே நிதிப் பற்றாக்குறை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நாங்கள் எல்லாம் ஊராட்சி ஒன்றியத்திலே தலைவராக பணியாற்றும்போது டெவலப்மென்ட் டாக்ஸ் என்று போட்டுஅதற்கு மாச்சிங் கிராண்ட் என்று கொடுத்து, ஓரளவு நிதிநிலையை நன்றாக வைத்து இருந்தோம். இப்பொழுது ஊராட்சி ஒன்றி

யங்களுக்கு என்.ஆர்.டி.பி., ஐ.ஆர்.டி.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. போன்ற திட்டங்களின்கீழ் பிரத்தியேக நிதிகள் கிடைக்கின்றன. அப்படியிருந்தும் ஊராட்சி ஒன்றியத்திற்கு நிதிநிலை நெருக்கடி ஏற்படுவதற்கு நிர்வாகக் கோளாறு காரணமா? என்னுடைய அரூர் ஊராட்சி ஒன்றியத்திலே நான் 17 வருஷங்கள், 3 தடவைகள் பணியாற்றினேன். அன்றைக்கெல்லாம் நிதி நெருக்கடி இல்லை. ஆனால், இப்பொழுது நிதி நெருக்கடியினால் மின்சாரக் கட்டணம் கட்டாமல், இணைப்பைத் துண்டித்து விட்டார்கள். இந்நிலையில் நிதிப் பற்றாக்குறையைப் போக்க வருவாயைச் சீர்செய்து, நிர்வாகச் சீரமைப்பைக் கவனித்து, நிதி ஆதாரத்தை மேம்படுத்த அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, வளர்ச்சிப் பணிகளுக்குக் கொடுக்கப்படும் பணம் தனியாகக் கொடுக்கப்படுவதால் அதிலே தடங்கல் இல்லை. ஆனால் ஊராட்சி ஒன்றியங்களுக்கு சொந்த நிதிகளில் பற்றாக்குறை ஏற்படுகிறது. அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய காரணமும் ஒன்றாக இருக்கலாம். அதுபற்றி ஆராய்ந்து பார்க்க, ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு முழுவதும் இருக்கிற ஊராட்சி ஒன்றியங்களில் எல்லா வேலைகளும் சரியாக நடைபெற்றிருக்கின்றனவா என்பதைக் கண்டறிய ஒரு குழு அமைக்கலாமா என்பதுபற்றி அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

**திரு. மு. ஆறுமுகம் :** தலைவரவர்களே, தமிழ்நாடு முழுவதும் ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சொந்தமான ஏரிகள், குளங்கள் ஆகியவற்றில் வனத்துறை மூலம் மரங்கள் வளர்க்கப்படுகின்றன. பின்னால் அந்த மரங்கள் ஏலத்தில் விடப்படுகின்றன. அதைப் போன்று குவாரி (பாறை) வெட்டி எடுக்க அனுமதிக்கப்படுகிறது. இந்த வருவாய் எல்லாம் கடந்த 15 ஆண்டு காலமாக ரெவின்யூ டிபார்ட்மெண்டிலிருந்து ஊராட்சி ஒன்றியங்களுக்கு வரவில்லை. இந்த நிதியை வசூல் செய்து கொடுக்க உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன். அது மட்டுமல்ல, ஊராட்சி ஒன்றியங்களில் குடிநீர் இணைப்புக்கு மின்சாரக் கட்டணம் செலுத்த முடியாத காரணத்தால் மின் இணைப்பு துண்டிக்கப்படுகிறது. அரசு நிர்வாகம் என்பதால் அப்படி துண்டிப்புச் செய்யாமல், வேறு வகையில் பணத்தை வசூல் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் மின் கட்டணம் செலுத்தாததால் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதாக அரசுக்கு தகவல் இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்படி ஒரு புகார் சொல்கிறார்கள். இனி அவ்வாறு நடக்காமல் அரசு பார்த்துக் கொள்ளும் என்று உறுதியளிக்கிறேன். ஊராட்சி ஒன்றியங்களில் நடைபெறும் தவறுகள் பற்றியும் சொன்னார்கள், அது சம்பந்தமாக நான் ஏற்கெனவே பதில் சொல்லிவிட்டேன்.





**திரு. பொ. உத்திராபதி :** தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களுக்கு தன்னிறைவுத் திட்டத்திற்காக ஒரு ஒன்றியத்திற்கு 50 இலட்சம் ரூபாய் கொடுத்தால் அதில் சரிபாதி, அதாவது 25 இலட்சம் ரூபாய் உலக வங்கியிலிருந்து கடன் வாங்கிக் கொடுப்பதாகவும் அதனால் ஒவ்வோராண்டும் 5 இலட்சம் ரூபாயும் அதற்கு வட்டியாக 1.25 இலட்சம் ரூபாயும் சேர்த்து 6.25 இலட்சம் ரூபாய் திருப்பிக் கொடுக்க வேண்டியிருப்பதால் வேலைகள் முழுமையாகத் தடைபடுகின்றன என்று சொல்கிறார்கள். அது உண்மையா? அது உண்மை என்றால் ஊராட்சி ஒன்றியப்பணிகள் தடைபடாமல் இருக்க அரசாங்கமே அந்தப் பணத்தைக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, தனிக் கேள்வி போட வேண்டும்.

**திரு. கூடலூர் இ. வி. வேலு :** தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இருந்தபோது போதுமான பணம் இருந்தது. இப்போது கிராம சேவக்குகள், பி.டி.ஓ-க்கள் இருந்து ஊராட்சி ஒன்றியப்பணத்தைத் தவறாகச் செலவு செய்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, அதைப்பற்றி பரிசீலிக்கத்தான் ஒரு குழு அமைக்கலாமா என்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது என்று ஏற்கெனவே சொன்னேன். விரைவிலே அதுபற்றி அரசு முடிவு செய்யும்.

**திரு. ஏ. தங்கராசு :** தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களின் பொது நிதியை அதிகப்படுத்துவதற்காக முனிசிப்பாலிட்டிகளில் நிரந்தர திரையரங்குகள் கட்ட அரசாங்கம் வழிவகைச் செய்திருப்பதைப்போல, ஊராட்சி ஒன்றியங்களிலும் பேரூராட்சிகளிலும் வசதி வாய்ப்பு இருக்கிற இடத்தில் நிரந்தர தியேட்டர் அமைத்து நடத்த அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களின் வருவாயைப் பெருக்க அது ஒரு வழியாக இருக்கும் என்று நான் கருதவில்லை. நிரந்தர தியேட்டர் கட்டுவதன் மூலம் ஒரு நகராட்சியாலேயே நிதி நிலையைப் பெருக்கிக்கொள்ள முடியவில்லை. நிதிநிலையைப் பெருக்குவதற்கு அதுவும் ஒரு வழியாக இருக்கலாம். ஆனால் நகராட்சிகளினாலேயே வெற்றிகரமாக நடத்த முடியாததை ஊராட்சி ஒன்றியங்களால் நிச்சயமாக நடத்த முடியும் என்று நான் கருதவில்லை.

[1985 ஏப்ரல் 2

திரு. ந. சிவஞானம் : தலைவரவர்களே, பல ஊராட்சி ஒன்றியங்களுக்கு லோக்கல் செஸ் கிராண்ட் அரசாங்கத்திலிருந்து கிடைக்கவில்லை என்று புகார் இருக்கிறது. அதை முறையாகக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, லோக்கல் செஸ் எதுவும் நிறுத்தி வைக்கப்படவில்லை. எங்காவது அப்படி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தால், அதை பரிசீலனை செய்து கொடுக்க ஏற்பாடு செய்யப்படும்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 'ஆஃபர் ஒர்க்ஸ்' செய்கின்ற கிராம சேவக்குகள் சரியாக அந்த வேலைகளைச் செய்யாமல் பில் போட்டு பணத்தை எடுத்துக்கொள்ளும் நிலை இருக்கிறது. இது அந்த கிராம மக்களுக்குத் தெரியாது, ஆகையால், அரசு இதை நன்கு பரிசீலித்து அந்த வேலைகளை அந்த கிராமப்புற மக்களே ஏற்றுச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அதைத்தான் திரும்பத் திரும்பக் குறிப்பிடுகிறேன், கடந்த ஐந்தாண்டு காலத்தில் ஊராட்சி ஒன்றியங்களில் என்னென்ன வேலை நடந்திருக்கிறது, எந்த எந்த திட்டம் முடிந்திருக்கிறது, செலவு எவ்வளவு, தவறு நடந்திருக்கிறதா, எந்த அளவுக்கு நடந்திருக்கிறது என்பதை ஆராய்ந்து அறிய ஒரு குழு அமைப்பது பற்றி அரசின் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னேன். விரைவிலே அந்தக் குழு அமைப்பது பற்றி முடிவு செய்யப்படும்,

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலில் ஒரு குழு அமைத்து விசாரிப்பதற்கு ஏற்பாடு செய்வதாகச் சொன்னார்கள், நன்றி. ஆனால் கடந்த கால அனுபவத்திலிருந்து பல ஊராட்சி ஒன்றியங்களில் ஜெனரல் பண்ட் ஓரளவு ஏராளமாக இருந்திருந்தும், அந்த ஊராட்சிகளில் இருந்து பல்வேறு துறைகள் அந்தந்த இலாக்காக்களுக்கு மாற்றப்பட்டபோது, இந்த நிதிப் பற்றாக் குறை ஏற்பட்டு இருப்பதை அறிவிப்பதோடுமட்டுமல்லாமல், வாக்குறுதி அளித்தபடி மிக விரைவில் நடக்க இருக்கின்ற ஊராட்சித் தேர்தலுக்கு இடையிலே மீண்டும் இந்த இடைத் காலத்தில் இருக்கின்ற அல்லது சேருகின்ற அந்தப் பொதுப் பணத்தை, ஜெனரல் பண்டை தவறாக உபயோகிக்காமல் கண்காணிக்க அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்பதை தான் அறிய விரும்புகிறேன்,



1985 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு, ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நாங்கள் எடுக்க இருக்கின்ற நடவடிக்கைகளின் மூலமாக இது போன்ற தவறுகள் நடக்கும் என்று நாங்கள் நினைக்கவில்லை, ஆனால் ஒட்டுமொத்தமாக எல்லா இடங்களிலும் தவறு நடந்திருக்கிறது என்ற குற்றச்சாட்டை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை, தவறு நடந்திருக்கக்கூடும் என்ற பொதுவான கருத்து இருக்கிறது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன்,

திரு. க. நரசிம்மபல்லவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் பொதுவாக கிராமத்திற்கு வருமானம் அந்தந்தப் பகுதிகளில் உள்ள பழத்தோட்டங்களையும், புளிய மரங்களையும் ஏலம் விடுவதும், சந்தைகளை ஏலத்தில் விட்டு பணம் சேர்ப்பதன் மூலமாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு பணவருவாய் இருக்கிறது. அப்படி இருக்கின்ற சமயத்தில் அந்த வருவாயை முடக்குகின்ற வகையில் ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள கிராம மக்கள் தங்களின் கிராமத்திற்கு அந்த நிதி வேண்டுமென்று, அந்த மரங்களைக் குறைந்த அளவில் ஏலத்தில் எடுத்து, பஞ்சாயத்திற்கு வருமானம் வராத வகையில் தடுத்து விடுகிறார்கள். உதாரணமாக 10 ஆயிரம் ரூபாய்க்கு ஏலம் போகும் என்றால், தொகையைக் குறைத்து, 100 ரூபாய்க்கு எடுத்து, அந்தப் பணத்தை பயன்படுத்திக் கொள்கிறார்கள். இது அரசுக்குத் தெரியுமா ? அப்படி தெரியும் என்றால், அவற்றைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்க அரசு உத்தேசித்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அங்கத்தினர் அவர்கள் விவரமாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். எந்த ஊரிலே அப்படி நடந்து இருக்கிறது என்று தெரிவித்தால் நடவடிக்கை எடுப்பதற்கு வசதியாக இருக்கும்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் ஊராட்சி ஒன்றியங்களில் பாறைகளை வெட்டி எடுக்கும் உரிமையை தனி நபர்களுக்கு விடுவதால் நஷ்டம் ஏற்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். இனி ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிற பாறைகளை வெட்டி எடுத்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பொறுப்பை ஊராட்சி ஒன்றியங்களோ, அல்லது அரசோ செய்து, அதன் மூலம் தனிப்பட்டவர்கள் லாபம் அடையாமல் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அல்லது அரசுக்கு அந்த லாபம் கிடைக்க வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறுதலாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஊராட்சி ஒன்றியங்களில் கரும்பாறைகளை வெட்டி எடுத்து, வெளிநாடுகளுக்கு அனுப்புகின்ற விவரம் வேறு. மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம்

அவர்கள் குறிப்பிட்ட குவாரி என்பது வேறு. குவாரி என்பது, ரோடுகளுக்குப் போடுகின்ற கல், ஜல்லி, போன்றவைகளை உடைப்பதற்காகக் கொடுப்பது. அதனுடைய பணத்தை வசூலித்து ஊராட்சி ஒன்றியங்களுக்கு கொடுக்கப்படவில்லை என்றுதான் அவர்கள் சொன்னார்கள். அப்படி எங்காவது கொடுக்கப்படாமல் இருந்தால், அதை அரசு கொடுப்பதற்கு, அரசிடமிருந்து வாங்கி ஊராட்சி ஒன்றியங்களுக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறைக்கு வரவேண்டிய லோக்கல் செஸ், சில நேரங்களில் வஜா செய்வதன் காரணமாக லோக்கல் செஸ் வசூலிக்க முடியாமல் போகிறது. அப்படி வசூலிக்க முடியாமல் போகின்ற காரணத்தால், அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய அந்த ஈட்டுத் தொகை கிடைக்காமல் போய்விடுகிறது. எனவே வஜா செய்கின்ற காலத்தில் முறையாக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் மாச்சிங் கிராண்ட் தவறாமல் கொடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள தவறான கருத்தைச் சொல்கிறார்கள் என்று கருது கிறேன். இதுபோன்ற வஜா செய்யப்பட்ட இடங்களில், வரி தள்ளுபடி செய்கின்ற இடத்திலே அரசு கொடுக்கின்ற ஈட்டு மானியத் தொகை கொடுத்துக் கொண்டுதான் வருகிறோம். நாம் நிறுத்தி வைக்கவில்லை. வேறு எங்காவது நிறுத்தி இருந்தால் அதைக்கொடுத்து விடலாம்.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பள்ளிக்கூடங்களை அரசு மெயின்ட்டென்னன்ஸ் செய்துகொண்டு இருக்கிறது. மற்ற மாவட்டங்களில் எல்லாம் ஊராட்சி ஒன்றியங்கள் இவைகளை மெயின்டெயின் செய்து கொண்டு இருக்கிறது. அதுபோன்று கன்னியாகுமரி மாவட்டத்திலும் பள்ளிக்கூடங்களை ஊராட்சி மன்றங்கள் மெயின்டெயின் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்,

(முற்பகல் 9-20)

திரு. க. சோலைராசு : தலைவர் அவர்களே, மணப்பாறை போன்ற நகர்ப்பகுதிகள் போன்று நகராட்சிகள், ஒன்றியங்கள் இவற்றிற்கு மக்களுக்கு உதவுகிற முறையில் ஊரக வளர்ச்சிப் பணிகளுக்கு பண வசதி ஏற்படுகிற வகையில் கடைகள் கட்டித் தரப்படுகிற உத்தேசம் அரசுக்கு உண்டா ?



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, கடைகள் கட்டிக்கொடுப்பது பற்றி அரசாங்கம் ஏற்கனவே அதற்கு உண்டான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

திரு. கோ. வீரய்யன் : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களினுடைய வருவாயை அதிகரிக்கும் முறையில் இப்போது நான் அறிவது, ஊராட்சி ஒன்றியங்களிடமிருந்த மீன்பிடிக் குளங்கள் எல்லாம் மீன் இலாகாவிற்கு மாற்றப்பட்டுவிட்டதால் அதன் வருமானம் அங்கே செல்கிறது. அதேபோல் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் வளர்க்கக்கூடிய மரங்கள் வனத் துறைக்குச் செல்கிறது. அப்படி ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் இருந்து கிடைக்கக்கூடிய வருமானம், மீன்பிடிக் குளங்களிருந்து கிடைக்கக்கூடிய வருமானம், மரங்களிலிருந்து கிடைக்கக்கூடிய வருமானம் இவற்றை மீன் இலாகா, வனத்துறை இவற்றிலிருந்து மாற்றித் தரவும் அதேபோல் ஒன்றியப் பகுதிகளின் வருவாயை ஈட்டித் தருகிற வகையில் தென்னை, புளி போன்ற மரங்களை வளர்த்தும் வருவாயை அதிகரிக்க அரசு முன்வருமா? அதேபோல் நிதி ஒதுக்கீடு செய்யும்போது பஞ்சாயத்து எண்ணிக்கையை, மக்கள் எண்ணிக்கையை எடுக்காமல் ஒன்றிய அளவில் மட்டும் எடுத்து நிதி ஒதுக்கப்படுவதால் 25 ஊராட்சி மன்றங்கள் உள்ள ஒன்றியத்திற்கும் 50 ஊராட்சி மன்றங்கள் உள்ள ஒன்றியத் திற்கும் ஒரே தொகை கொடுப்பதால் ஏற்றத்தாழ்வு ஏற்படுகிறது. அப்படிப்பட்ட பாதிப்பு ஏற்படுவதால் மக்கள் தொகை அடிப் படையில் நிதி ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள பேரூராட்சிகளுக்கு வருமானம் இல்லாத காரணத்தால் தெரு விளக்குகளுக்குக்கூட மின்கட்டணம் கட்டாத நிலையில் இருக்கிறார்கள். இதனால் பேரூராட்சிகளில் உள்ள தெருவிளக்குகள், மின்விளக்குகள் எரியாமல் இருக்கின்றன. ஆகவே ஒன்றிய பொது நிதியிலிருந்து பேரூராட்சிகள் கட்ட வேண்டிய மின்கட்டணத்தை கட்டுவதற்கு வேண்டிய ஏற்பாட்டினை அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நல்ல யோசனை, பரிசீலிக்கலாம்.

திரு. சி. பழனிமுத்து: தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங் களில் உள்ள பஞ்சாயத்துக்களில் குடிநீருக்காக ஆழ்துளைக் கிண றுகள், கிணறுகளில் மோட்டார் வைத்து அந்தக் காயில் போய் விட்டால் ஒன்றியத்தில் பணம் இல்லாததால் காயில் கட்டாமல் குடி தண்ணீர் கிடைக்காத நிலை ஏற்படுகிறது. ஆகவே பொது நிதியிலிருந்து அவற்றைச் செய்து கொடுக்க பொதுவாக ஒரு உத்தரவை அரசு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, எங்கேயாவது குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் என்று அஞ்சி உடனடியாக போர்க்கால நடவடிக்கை போன்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று அதிகாரிகளுக்கு ஆணை ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்று எங்கேயாவது நடந்திருக்குமானால் அதை என் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

காளப்பநாயக்கன்பட்டி குடிநீர் வழங்கு திட்டம்.

*42—(*வினா எண் 238)* திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலம் மாவட்டம், காளப்பநாய்க்கன்பட்டி பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டப்பணி துவக்கப்படாததன் காரணம் என்ன ?*

*(ஆ) துத்திக்குளம் கிராமம் இந்தத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுமா ?*

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் (எல். ஐ. சி.) கடனுதவியும், அரசு மானியமும் கிடைக்கப் பெற்றவுடன் இத் திட்டம் செயல்படுத்தப்படும்.

(ஆ) இத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை.

திரு. சி. சிவப்பிரகாசம் : தலைவர் அவர்களே, காளப்ப நாய்க்கன்பட்டி குடிநீர்த் திட்டத்திற்கு மொத்த மதிப்பீடு எவ்வளவு ? அப்பணியை செய்து முடிக்க எவ்வளவு மாதங்களாகும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மதிப்பீடு ரூ. 43.61 இலட்சம், இந்தத் திட்டம் எல்.ஐ.சி.யிடமிருந்து கடன் உதவி கிடைத்தவுடன் தொடங்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. தொடங்கிய பிறகுதான் விரைவில் முடிக்க அரசு ஆவன செய்யும்.

திரு. சி. சிவப்பிரகாசம் : தலைவர் அவர்களே, துத்திக்குளம் கிராமத்தை இந்தத் திட்டத்தில் சேர்ப்பதற்கான காரணம்—நடுக் கோம்பை கிராமம் இத் திட்டத்தில் இருப்பதால் தற்போது நடுக்கோம்பை கிராம குடிநீர்த் திட்டம் எடுக்கப்பட்டுள்ள காரணத்தால் அத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 2.2 இலட்சம் நிதியைக் கொண்டு பக்கத்தில் ஒரு கிலோமீட்டர் தூரத்திலுள்ள துத்திக்குளம் கிராமத்தை இத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, பரிசீலனை செய்யும்.



சென்னைக்கு கிருஷ்ணா நதி நீர்த் திட்டம்.

*43—(*வினா எண் 947)* திருமதி பா. வளர்மதி, திரு. செ. செம்மலை : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சென்னைக்கு குடிநீர் வழங்கும் கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தின் மொத்த மதிப்பீடு எவ்வளவு ?*

*(ஆ) தமிழக அரசின் பங்கு எவ்வளவு ?*

*(இ) தமிழக அரசு இதுவரை செலுத்தியுள்ள பங்குத் தொகை எவ்வளவு ?*

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) மறுபரிசீலனை மற்றும் விரிவான ஆய்வுக்குப் பின் தெலுங்கு—கங்கைத் திட்ட செலவு ரூ. 637 கோடியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) தமிழகத்தின் பங்கு ரூ. 185 கோடியாகும்.

(இ) தமிழக அரசு, ஆந்திர அரசுக்கு இத் திட்டத்திற்காக இதுவரை செலுத்தியுள்ள பங்குத் தொகை ரூ. 35 கோடி.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தால் தொடங்கப்பட்டு, கைவிடப்பட்ட வீராணம் திட்டத்தால் வீராணம் ஏரியின் கொள்ளளவு குறைந்துள்ளதால், சென்னை நகரில் வளர்ந்து வரும் மக்களின் கணக்கைக் கொண்டு, புரட்சித் தலைவர் அவர்களால் உருவாக்கப்பட்ட கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தின் மூலம் சென்னைக்கு எவ்வளவு டி. எம். சி. குடி தண்ணீர் கிடைக்க வழி வகை செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, 15 டி. எம். சி.

திரு செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் சென்ட்ரல் வாட்டர் கமிஷனுடைய கிளியரன்ஸ் கிடைத்தால் அன்றி, 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப் படவும், மைய அரசினுடைய உதவி கிடைக்கவும் வாய்ப்பில்லை என்ற நிலைமை இருக்கிறது. எனவே அந்த நிலையில் ஆறாண்டு காலத்தில் முடிக்கப்பட வேண்டிய இந்தத் திட்டத்தை விரைவாக குறித்த காலத்தில் முடிப்பதற்கு சென்ட்ரல் வாட்டர் கமிஷனுடைய கிளியரன்சைப் பெற, மைய அரசை நம்முடைய அரசு நாடியிருக்கிறதா ? இந்த கிளியரென்சைப் பெறுவதில் ஆந்திர அரசினுடைய நிலை என்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இந்தியப் பிரதமராக இருந்த இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் முன்னிலையில் நாம் இந்தத் திட்டத்தின் தொடக்கத்தை உருவாக்கினோம். ஆகவே, மைய அரசு இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் முழு ஒத்துழைப்பு கொடுக்கும் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்கிறது. அந்த அனுமதியை எதிர்பார்த்து, அந்த திட்ட வேலைகள் துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதிலே ஆந்திர அரசு தனது முழு ஒத்துழைப்பைத் தருகிறது.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் எல்லையில் உள்ள பூண்டி நீர்த்தேக்கம், செம்பரம்பாக்கம் நீர்த்தேக்கம் ஆகியவைகளில் வெட்ட வேண்டிய கால்வாய் வேலை முடிந்துவிட்டதா? இல்லையென்றால், அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணா நதி குடிநீர் திட்டத்திற்கு ஆந்திர அரசின் பங்கு எவ்வளவு? அதை அந்த அரசு செலுத்தி விட்டதா? சென்னை குடிநீர் திட்டத்திற்கு மத்திய அரசின் வாட்டர் போர்டின் அனுமதி வழங்கப்பட்டு விட்டதா? அதற்கு கால்வாய் வெட்டுவதற்காக பல நூறு ஏக்கர் நிலங்கள் வனத் துறை தர அனுமதி மறுத்திருக்கிறதா? அது உண்மையா? அமைச்சர் அவர்கள் இங்கே பேசும்போது, தடை வருமானால் தடம் தோள்களால் தகர்க்கப்படும் என்று சொன்னார்கள். கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தை தடம் தோள்களால் கொண்டு வரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இதிலே ஆந்திர அரசு செலுத்தவேண்டிய பணம் ரூ. 500 கோடி. அவர்கள் ஆறாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் பணத்தை ஒதுக்க முடியாது என்று தெரிவித்து விட்டார்கள். ஆறாவது ஐந்தாண்டு திட்டக் காலம் முடிந்துவிட்டது. ஆகவே, இந்த மார்ச்சு 31 ஆம் தேதிக்குப் பிறகு ஆந்திர அரசு அதற்கு ஒதுக்க வேண்டிய பணத்தை ஒதுக்கித் தரும் என்கிற வகையில் தமிழக அரசு ஆந்திர அரசுக்கு மடல் ஒன்று எழுதியிருக்கிறது. அதிலே எந்தவித சிக்கலும் இல்லை. தமிழக—ஆந்திர எல்லையில் வனத் துறைக்குச் சொந்தமான நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களை வழங்கவேண்டும் என்று இந்த அரசு மைய அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறது. மைய அரசின் உதவி பெறுவதில் எந்தவிதமான சிக்கலும் இல்லை. அண்மையில் மத்திய அரசு குழு மார்ச் 1, 2, 13, 14 ஆகிய தேதிகளில் ஆந்திரத்தில் கிருஷ்ணா நதியிலிருந்து வருகின்ற அமைப்பை பார்வையிட்டுச் சென்றிருக்கிறார்கள். ஆகவே, தடைக் கற்கள் தகர்க்கப்படும். தண்ணீர் நிச்சயமாகக் கிடைக்கும். உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் அதைப் பருகுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.



திரு. சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் பதிக்கப்பட்ட பைப்புகள் எல்லாம் 40 ஆண்டுகளுக்கு முன் பதிக்கப்பட்டவை. அவைகள் பழுதடைந்து இருக்கின்றன. கிருஷ்ணா நதியிலிருந்து நீர் வருகின்ற நேரத்தில், அவைகளை மாற்றி புதிதாக பைப்புகள் அமைக்கின்ற வேலையை அரசு மேற்கொண்டுள்ளதா? அந்தத் திட்டத்திற்கு எவ்வளவு மதிப்பீடு ஆகும்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அந்த வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குரிய செலவுத் தொகையை நாம் திட்டத்தில் சேர்த்திருக்கிறோம். அதுபற்றிய விரிவான ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. ஆ.கா.அ. அப்துல் சமத்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்த பதிலை எண்ணிப் பார்க்கிறபோது, கிருஷ்ணாநதி நீர்த் திட்டத்திற்கு இதுவரையில் மத்திய அரசு அனுமதி தரவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. அந்த நிலையில் நாம் மேற்கொண்டு செலவிடுவது அறிவுடைமை ஆகுமா என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புவதோடு, வீராணம் திட்டம் முற்றும் கைவிடப்பட்டு விட்டதா அல்லது மேலும் அதை ஆராய்வதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்ததைப்போல, இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இந்தத் திட்டத்தை ஒரு கால கட்டத்தில் அறிவித்தார்கள். அதற்குப் பிறகு ஆய்வுகள் நடைபெற்றன. 1983-ல் இந்திரா காந்தி அவர்கள் முன்னிலையில் இந்தத்திட்டத்தை உருவாக்கி, அதில் நம்முடைய முதல்வர் அவர்களும், ஆந்திர முதல்வர் அவர்களும் கலந்துகொள்ளும் ஒரு விழா அங்கே நடைபெற்றது. மைய அரசினுடைய அனுமதியை எதிர்பார்த்து பல பணிகளை செய்து கொண்டிருக்கிறோம். மைய அரசு அதற்கு முழு ஒத்துழைப்பு தரும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அப்துல் சமத் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்—நம்பிக்கை தான் வாழ்க்கையின் நங்கூரம். அந்த வகையில் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறோம். வீராணம் திட்டத்தைப் பற்றி இப்போது கேட்பதில் எந்தவிதமான பயனும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

[1985 ஏப்ரல் 2

(முற்பகல் 9-30)

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணா நதிநீரை செம்பரம்பாக்கம் ஏரியில் தேக்கி சென்னை நகர மக்களுக்கு குடிதண்ணீருக்காக வினியோகிக்க இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நான் தெரிந்துக்கொள்ள ஆசைப்படுவது, செம்பரம்பாக்கம் ஏரியின் மூலம் தான் என்னுடைய தொகுதிக்கு பாசன வசதி அளிக்கப்பட்டு வருகிறது. அது குடிதண்ணீருக்காக பயன்படுத்தப்படுமேயானால், அந்தப்பகுதி விவசாய மக்களுக்கு, பாசனத்திற்கு என்ன மாற்று வழி கண்டு பிடித்திருக்கிறீர்கள் என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, பாசனத்துக்கு உரிய வசதி அதிகமாகுமே தவிர, இத் திட்டத்தால் குறையாது.

திரு. வி. பி. சிந்தன் : தலைவர் அவர்களே, முக்கியமான பிரச்னைகளை நாம் விவாதிக்கிறோம். கேள்விதான் கேட்கிறேன். விழா நடத்துவதால் மட்டும் ஒரு திட்டம் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது என்று எங்களால் நம்ப முடியவில்லை. ஏராளமான விழாக்கள் நடத்தப்பட்டு—திறப்பு விழாக்களைத்தான் குறிப்பிடுகிறேன்—பின் அத் திட்டங்கள் கைவிடப்பட்டதையும், பல ஆண்டுக் கணக்கிலே சில திட்டங்கள் தூங்கிக் கொண்டு இருப்பதையும் நாட்டிலே பார்க்கிறோம். ஆகவே இந்திய பிரதமர் இந்திராகாந்தியை வைத்து ஆரம்பித்த விழா என்று சொன்னால் மட்டும் அமல் நடத்தப்பட்டு விடும் என்று எண்ணி விடுவதற்கில்லை. மைய அரசு இன்னும் அதற்கு அனுமதி வழங்கவில்லை. ஆந்திர மாநில அரசும் அதற்கான முழு ஒத்துழைப்பினை இன்னும் கொடுக்கவில்லை. இந்நிலையில் வீராணம் திட்டம் கைவிடப்பட்டுவிட்டதா ? வீராணம் திட்டத்தின் அலுவலகங்கள் இன்னும் இயங்கிக் கொண்டிருக்கின்றனவே, அத் திட்டம் கைவிடப்பட்டுவிட்டது என்றால் வீண்செலவு ஆவதைத் தவிர்ப்பதற்காகவாவது அந்த அலுவலகங்கள் மூடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கிருஷ்ணா திட்டத்தோடு வீராணத்தையும் போட்டு குழப்ப வேண்டாம். விழா நடத்துவதால் திட்டம் நடைபெறுமா, பல திட்டங்கள் அப்படி விழா நடத்தியும் கைவிடப்பட்டிருக்கின்றனவே என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள். நிச்சயமாக விழா நடத்துவது அந்த திட்டத்தை விழாமல் பாதுகாப்பதற்கு ஒரு முன் ஏற்பாடு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1985 ஏப்ரல் 2]

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்மை பெறத் தக்க நல்ல திட்டம் இல்லை என்று கைவிடப்பட்ட வீராணம் திட்டத்தின் குழாய்கள் வீணாக வீதியில் கிடக்கின்றனவே, அவைகள் மீண்டும் பயன்படுத்தப்படுமா ? திரு. சிந்தன் அவர்களும் கேட்டார்கள்........(மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் குறுக்கு கேள்விகள், பதிலுக்கு பதில் என்பதெல்லாம் கிடையாது. கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : அந்தத் திட்டத்திற்காக துவங்கப்பட்ட அலுவலகங்கள் இன்னும் செயல்பட்டு வருவது வீண் செலவு என்ற வகையில் அந்த அலுவலகங்கள் மூடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, குழாய்களை திரும்ப எடுத்து வேறு வகையில் பயன்படுத்துகிற வரையில் அந்த அலுவலகங்கள் தேவை. ஆகையினால் தற்போது மூடப்போவதில்லை.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணா நதிநீர் திட்டத்திற்கான விழா நடைபெற்ற நேரத்திலே ஆந்திர அரசாங்கமும், தமிழக அரசாங்கமும், அதற்கான வேலைகள்துரிதமாகநடைபெறவேண்டும் என்பதற்காகவிளம்பரம் எல்லாம் செய்தன. அதையெல்லாம் டி.வி.யிலே கூட பார்த்தோம். அந்த வகையில் அது துரிதமாக நடைபெறுவதாகத்தான் தெரிந்தது. இதுவரையில் ஆந்திர அரசும், தமிழக அரசும் எவ்வளவு தூரத்திற்கு வாய்க்கால்களை வெட்டியிருக்கின்றன ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : ஆந்திராவினுள் நடைபெறக்கூடிய பணிகளை ஆந்திர அரசும், தமிழக எல்லைக்குள் நடைபெறக்கூடிய பணிகளை தமிழக அரசும் செய்துகொண்டிருக்கின்றன. ஆந்திராவிற்கு தமிழக அரசு அதற்காக 35 கோடி ரூபாயை கொடுத்திருக்கிறது. அதன் மூலம் அந்த அரசு பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது. அவர்கள் தெலுங்கு கங்கா வாரியம் என்ற அமைப்பை உருவாக்கி பணிகளைச் செய்து வருகிறார்கள். நம்முடைய எல்லைக்குள் நாமும் உரிய பணிகளைச் செய்து வருகிறோம். அதற்குரிய நிலங்களையெல்லாம் கையகப்படுத்தி கால்வாய் வெட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசினுடைய உதவி கிடைக்காத நிலையில் கூட இத் திட்டத்தில் எத்தனை சதவீதப் பணிகள் இதுவரை முடிக்கப்பட்டிருக்கின்றன என்கிற விவரத்தோடு, வாட்டர் கமிஷனுடைய

கிளியரன்ஸ் கிடைப்பதிலே காலதாமதம் ஏற்படுவதற்குக் காரணம், என்வெயர்ன்மெண்டல் எக்ஸ்பெர்ட்ஸ் டீம்-உடைய ஒபினியன் கிடைக்காததுதான் என்று சொல்லுகிறார்களே. அந்த டீம்-உடைய கருத்து அரசுக்கு வந்துவிட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அந்தக் குழு மார்ச் 12, 13, 14 தேதிகளில்தான் வந்து பார்வையிட்டுச் சென்றிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட்டேன். ஆகவே அவர்கள் அது பற்றி சில விவரங்களை நம்மிடத்தில் கேட்டு, அதற்குப் பிறகு அனுமதி வழங்க இருக்கிறார்கள். நிச்சயமாக வழங்குவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. மைய அரசினுடைய அனுமதியை எதிர்பார்த்து பல்வேறு பணிகளை மேற்கொண்டு இருக்கிறோம், ஆந்திர அரசிற்கு 35 கோடி ரூபாயை வழங்கியிருக்கிறோம். அதுபோல நம்முடைய எல்லைக்குள்ளும் 35 கோடி வரையில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

திரு. எல். இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டம் செயல்படுமா செயல்படாதா என்ற கேள்வியை கேட்டிருக்கிறார்கள். இதில் எந்த அளவிற்கு பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை நான் சென்னை பெருநகர் குடிநீர் வடிகால் வாரியத்தின் உறுப்பினராக இருந்த நேரத்தில் சென்று பார்வையிட்டிருக்கிறேன். இப்போதும் இம்மாமன்றத்தில் உள்ள உறுப்பினர்களை அந்த இடத்திற்கு அழைத்துச் சென்று, அந்தப் பணிகள் எவ்வளவு தீவிரமாக நடைபெறுகின்றன என்பதைக் காண்பதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினர் விரும்பினால் எப்பொழுது வேண்டுமானாலும் அமைச்சர் ஏற்பாடு செய்வார்.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணா நிதி நீர்த் திட்டம் பற்றி பேசுகின்றபோது, நெய்வேலியில் இரண்டாவது சுரங்கமும், 3-வது சுரங்கமும் தோண்டும்போது அதிக அளவிற்கு குடிநீர் கிடைக்கின்றது என்றார்கள். வீராணம் திட்டத்திற்கு செய்யப்பட்ட குழாய்கள் வீணாக கிடக்கின்றதால் அந்தக் குழாய்களை பயன்படுத்தி நெய்வேலி நிலத்தடி நீரை சென்னைக்கு கொண்டு வந்து குடிநீர் சப்ளை செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா ? அந்த திட்டத்தினால் சென்னைக்கு பலன் கிடைக்குமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அந்தக் குழாய்கள் பயன்படக்கூடிய நிலைமையில் இருக்கிறதா என்பதே அறிய வேண்டிய ஒன்று.



திரு. அ. பாலுசாமி : தலைவர் அவர்களே, சென்னைக்கு குடிநீர் வழங்க தனியாக ஒரு அமைப்பு இருப்பதுபோல் மதுரை நகருக்கு குடிநீர் வழங்க தனி அமைப்பு ஏற்படுத்த திட்டம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இல்லை.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சென்னையில் கடுமையான நீர் பற்றாக்குறை இருக்கும்போது சென்னை நீர்த் தேக்கமான சத்தியமூர்த்தி நீர்த் தேக்கத்தின் அருகே மாமிச தொழிற்சாலை ஏற்படுத்தப் போவதாகவும், அதன் காரணமாக நீர்த் தேக்கம் கடுமையாக பாதிக்கப்படும் என்ற செய்தி பத்திரிக்கையில் வந்திருக்கிறது. இதைப் பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, மாமிச தொழிற்சாலை பற்றி நாம் தனியாகப் பரிசீலிக்கலாம்.

### புதுக்கோட்டையில் பட்டு வளர்ப்பு திட்டம்.

44—(*வினா எண். 611) திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் பட்டு வளர்ப்பை தீவிரப் படுத்த அரசு எடுத்து வரும் நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. அனூர் பு. கோ. ஜகதீசன் : இம் மாவட்டத்தில் பட்டு வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்த புதுக்கோட்டையில் ஒரு உதவி இயக்குநர் பட்டு வளர்ச்சி அலுவலகம் இயங்கி வருகிறது. அவர் கட்டுப்பாட்டின்கீழ் கீழ்க்கண்ட மையங்கள் பட்டு வளர்ச்சிக்கு பணியாற்றி வருகின்றன:—

| நிலை எண். | மையம். | எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | அரசு பட்டுக்கூடு-அங்காடி | 1 |
| 2 | அரசு பட்டு நூற்பு மையம் | 4 ஏனங்கள் கொண்ட நிலையம். |
| 3 | விளக்கம் மற்றும் பயிற்சி மையம் .. | 1 |
| 4 | கிராமிய அளவிலான இளம் புழு வளர்ப்பு மையங்கள் .. | 3 |
| 5 | தொழில் நுட்ப சேவை மையம் .. | 2 |
| 6 | தொழில் கூட்டுறவு பட்டு நூற்பு சங்கங்கள் .. | 1 |

[1985 ஏப்ரல் 2

2. 1980-இல் 147 ஏக்கராவில் முசுக்கொட்டைச் செடி சாகுபடி செய்ததுபோக தற்போது 980 ஏக்கர் அளவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் பட்டு வளர்ப்புக்கு என்ன அபிவிருத்தித் திட்டங்கள் நடைபெறுகின்றன. பட்டு வளர்ப்பு விவசாயிகளுக்கு என்ன உதவிகள் அரசு செய்து வருகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுகோட்டை, பொன்னமர வதி, விராலிமலை, அறந்தாங்கி, கந்தர்வகோட்டை ஆகிய இடங்களில் 1490 குடும்பங்கள் பயன்பெறத்தக்க அளவில் இத் தொழில் மேம்பாடு செய்யப்பட்டுள்ளது. திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களுக்கான பட்டுத் தொழில் வளர்ச்சி மையம் என்ற வகையில் ஓர் உதவி இயக்குநர் அலுவலகம் ஏற்பாடு செய்யப்பட்டு இயங்கி வருகிறது. புதுக்கோட்டை மாவட்டம் பின்தங்கிய பகுதி என்பதால், 1981—1982ல் வெகு வேகமாக செயல்பட வேண்டும் என்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. இங்கே குறிப்பிட்டுள்ளபடி ஏறக்குறைய $1\frac{1}{4}$ இலட்சம் கிலோகிராம் பட்டுக்கூடு உற்பத்தி செய்யப்பட்டு அதன் மூலம் 10.000 கிலோகிராம் கச்சா பட்டு உற்பத்தியாகக்கூடிய அளவிலே வேலைகள் துரிதமாக இயங்கி வருகின்றன. பட்டு வளர்ச்சி மற்றும் விளக்க மையங்களை ஏற்பாடு செய்வதன் மூலம் ரூ. 5.77 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. வறட்சி மீட்பு பணி என்ற திட்டத்தின்கீழ் ஏறக்குறைய ரூ. 6.36 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது புதுக்கோட்டை மாவட்டத்திற்கும், திருச்சி மாவட்டத்திற்கும் இணைத்து பட்டு வளர்ப்பு அபிவிருத்தி கழகம் ஆரம்பிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். திருச்சி மாவட்டத்திற்கு தனியாக அப்படிப்பட்ட அபிவிருத்திக் கழகம் ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : தலைவர் அவர்களே, இரண்டு மாவட்டங்களுக்கும் பொதுவாக ஓர் உதவி இயக்குநர் அலுவலகம் இன்றைக்கு செயல்பட்டு வருகிறது. புதுக்கோட்டை மாவட்டம் பின் தங்கிய மாவட்டம் என்பதை கருத்தில் கொண்டு அது புதுக்கோட்டையில் அமைக்கப்பட்டுள்ளது. உறுப்பினர் அவர்களின் யோசனையை பரிசீலிக்கலாம்.



1985 ஏப்ரல் 2]

திரு. த. புஷ்பராசு : தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற பட்டை, சேலம் சென்றுவிற்கக்கூடிய ஒருநிலையிலேதான் அந்த உற்பத்தியாளர்கள் இருக்கிறார்கள். இந்நிலைமையை போக்க அரசு புதுக்கோட்டை மாவடடத்திலே அப்படிப்பட்ட சொஸைட்டியை ஆரம்பித்து அதன் மூலம் கொள்முதல் செய்ய அரசு ஆணை பிறப்பிக்குமா ?

(முற்பகல் 9,40)

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : தலைவர் அவர்களே, பரிசீலிக்கும்.

திரு. ந. சிவஞானம் : தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்திலே பட்டு வளர்ப்பு கழகம் ஏற்படுத்துவதைப்போல தஞ்சை மாவட்டத்திலும் ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. சி, சுப்புராயர் : தலைவர் அவர்களே, என்னுடைய கம்பம் தொகுதிக்குப் பக்கத்திலே சின்னமனூர் என்ற ஊரிலே இத்தத் திட்டம் நல்ல முடிவைக் கொடுத்துள்ளது. கம்பம் பகுதியிலே ஒரு ஆராய்ச்சி நிலையம் ஆரம்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : தலைவர் அவர்களே தனிக் கேள்வி போட்டால் விவரம் கொடுக்கலாம்.

திரு. கு சுப்பராயன் : தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலே பட்டு வளர்ப்பு மையங்கள் ஆரம்பிக்கிற திட்டம் அரசிடம் உண்டா ? ஆமென்றால் எந்த எந்த ஊர்களிலே ஆரம்பிக்கும் திட்டம் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : தலைவர் அவர்களே, மூலக்கேள்வி புதுக்கோட்டை மாவட்டத்தைப் பற்றியது. ஆகவே தனியாகக் கேள்வி போட்டால் விவரம் அளிக்கலாம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, பட்டு உற்பத்தியிலே ஒரு வாரத்திற்கு இரவு பகலாக தூங்காமல் இருந்து பட்டுப் புழுக்களுக்கு உணவு போடக்கூடிய நிலைமை இருக்கிறது. அதை உற்பத்தி செய்யக்கூடியவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய பட்டை இலாகாவிற்குக் கொடுக்கிறபோது மிகக் குறைந்த விலைக்குத்தான் வாங்குகிறார்கள், அது மட்டுமல்ல, பணம் உடனடியாகக் கிடைக்கவில்லை என்ற குறைபாடும் இருக்கிறது. ஆகவே இம்மாதிரியான குறைபாடுகளைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

[1985 ஏப்ரல் 2

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : தலைவர் அவர்களே, பட்டுப் புழு வளர்ப்பு என்பது சிரமமான காரியம், முழு நேரமும் செய்ய வேண்டிய காரியம். அது சம்பந்தமாக சொல்லப்படுகிற யோசனையையும் வைத்துக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற யோசனைகளையும் வைத்துக்கொண்டு அந்த பணியிலே ஈடுபட்டு உள்ளவர்களுக்கும் எந்த விதமான பாதகமும் இல்லாமல் செய்யப்படுவதற்கு அரசுபரிசீலனை செய்துவருகிறது.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : தலைவர் அவர்களே பெரியார் மாவட்டத்தில் தளவாடி மலைப் பகுதிகளிலே இந்த பட்டு வளர்ப்புத் திட்டம் சிறப்பாக நடந்து வருகிறது. அங்கே அப்படி உற்பத்தியாகிற பட்டு நூலை கர்நாடக மாநிலத்திலே உள்ள சாம்ராஜ் நகரத்திலே விற்க வேண்டிய சூழ்நிலை அந்த மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையை மாற்றி அந்த நூலை தமிழகத்திலேயே வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : தலைவர் அவர்களே, உரிய கவனம் செலுத்தி ஏற்பாடு செய்யப்படும்.

திரு. த. மாரிமுத்து : தலைவர் அவர்களே, புதுக்கோட்டையில் பல மையங்கள் ஏற்படுத்தி செயல்படுகின்றன என்று சொன்னார்கள். எந்த எந்த இடங்களில் அந்த மையங்களில் எவ்வளவு உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது ? அதன் மூலமாக அரசிற்கு வருமானம் எவ்வளவு வந்திருக்கிறது ? அப்படிப்பட்ட மையங்கள் எல்லா மாவட்டங்களிலும் விரிவுபடுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : தலைவர் அவர்களே, அரசு பட்டு கூடு அங்காடி ஒன்று புதுக்கோட்டையிலே அமைக்கப்பட்டிருக்கிறது. அரசு பட்டு நூற்பு மையம் புதுக்கோட்டையிலே அமைக்கப்பட்டிருக்கிறது. விளக்கம் மற்றும் பயிற்சி மையம், கிராமிய அளவிலான இளம்புழு வளர்ப்பு மையங்கள் சிதம்பர விடுதி, வேகுப்பட்டி, வடகாடு ஆகிய இடங்களிலும் தொழில் நுட்ப சேவை மையம் அறந்தாங்கி, பொன்னமராவதி ஆகிய இடங்களிலும் இன்றைக்குச் செயல்பட்டு வருகின்றன.

திரு. க. நரசிம்மபல்லவன் : தலைவர் அவர்களே, பட்டுத் தொழில் அதிகமாக இருக்கிற காஞ்சிபுரத்தை உள்ளடக்கிச் செங்கற்பட்டு மாவட்டத்தில் பட்டுத் தொழிலை லாபகரமாக செய்வதற்கான வகையில் அங்கே பட்டுப் புழுக்களை அதிகமாக வளர்த்து உற்பத்தி செய்வதற்கு அரசு வாய்ப்புக்களை ஏற்படுத்துமா ?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : தலைவர் அவர்களே, இப்போது எல்லா மாவட்டங்களிலேயும் அதற்கான சாத்தியக் கூறுகளைப் பரிசீலித்து ஒவ்வொரு மாவட்டத்திலேயும் பட்டுப் புழு வளர்ப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.



1985 ஏப்ரல் 2]

டாக்டர் ந. மாசிலாமணி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேள்விக்குப் பதிலாகச் சொல்லுகிறபோது புதுக்கோட்டை மாவட்டம் பின்தங்கிய மாவட்டம், அதேபோன்று திருச்சி மாவட்டமும் இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது. பட்டு வளர்ப்பு திருச்சி மாவட்டத்திலே தீவிரப்படுத்தப்பட்டு இருக்கிறதா ? ஆமெனில் எந்த வகையில் தீவிரப்படுத்தப்பட்டிருக்கிறது ? இல்லையெனில் ஏன் தீவிரப்படுத்தவில்லை ?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திலே இந்தத் திட்டம் தீவிரப்படுத்தப்பட்டு நல்ல வளர்ச்சி அடைந்து இருக்கிறது. உதவி இயக்குநர் அலுவலகம் தான் புதுக்கோட்டையிலே இருக்கிறது என்று சொன்னேன். திருச்சி மாவட்டம் பின்தள்ளப்படுகிறது என்ற கேள்வியே இல்லை.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டு உற்பத்திக்கு ஊக்கம் அளிப்பது போல உற்பத்தி செய்யப்படும் பட்டுக்கு விற்பனை செய்வதற்கு ஒரு உத்திரவாதத்தையும் உரிய விலையும் கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு.கோ. ஜகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை விற்பனை செய்பவர்களுக்கு நல்ல விலை கிடைக்கக் கூடிய அளவுக்கு ஆங்காங்கே மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் விற்பவர்கள் நேரிடையாக நல்ல பொருள்களை நல்ல பட்டுக் கூடுகளை நம்முடைய மையங்களுக்குத் தராமல் வெளியில் கொண்டு சென்று விற்கிற ஒரு தவறான நிலைமை இன்றைக்கு இருக்கிறது. அதைப் போக்க மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சம்பந்தப்பட்டவர்களுடன் பேசி நல்ல முடிவைச் செய்யவேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜெ. ராஜபாபு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி, வேலூர், போளூர் போன்ற இடங்களில் பட்டு உற்பத்தி செய்யும் குடும்பங்கள் 20 ஆயிரம் உள்ளன. ஆகவே, வட ஆற்காடு மாவட்டத்தில் பட்டு வளர்ச்சித் திட்டத்தை தொடங்குமா அரசு என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடங்கி நடத்தப்பட்டு வருகிறது.

திரு. த. புஷ்பராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் பின்தங்கிய மாவட்டம் என்றும் புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரை இந்த பட்டு வளர்ச்சித் திட்டம் சிறப்பாக நடைபெறுகிறது. ஒரு குறிப்பிட்ட இடங்களில்தான் இந்த பட்டு வளர்ச்சி மையங்கள் ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர்

அவர்கள் இங்கே தெரியப்படுத்தினார்கள். இந்தப் பட்டு வளர்ச்சி திட்டத்தை பலயிடங்களில் ஆரம்பித்து இந்த மையங்களை ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டம் முழுவதும் பரவலாக செயல்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அதன் காரணமாக திட்டமிடப்பட்டு 1984-85 ஆண்டு இலக்குகளை நாம் எட்டியிருக்கிறோம்.

திரு. ஜெ. ராஜா பாபு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடஆற்காடு மாவட்டத்தில் எந்த பகுதியில் அந்த பட்டு வளர்ப்பு மையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போட்டால் விளக்கமாக விவரங்கள் தரப்படும்,

திரு, டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுப்பூச்சி வளர்ப்பதில் முன்னோடியாக என்னுடைய தொகுதியில் குற்றாலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அங்கே உள்ள தட்ப வெட்ப சூழ்நிலை பட்டுப் பூச்சி வளர்ச்சிக்கு ஏற்றதாக இருக்கிற காரணத்தால் இப்போது குற்றாலத்தில் உள்ள மையம் கேந்திரமாக மாற்றப்பட்டு விஸ்தரிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு.கோ. ஜகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முழுக்க முழுக்க புதுக்கோட்டை மாவட்டம் சம்பந்தப்பட்ட கேள்வி. தனிக் கேள்விப் போட்டால் விவரமான அறிக்கை தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு .—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

சென்னை இராசரத்தினம் ஸ்டேடியத்தில் காவல்துறைப் பணிக்கு ஆட்கள்தேர்வு செய்யும்போது வந்திருந்தோர் கூட்டத்தை ஒழுங்குபடுத்த காவல் துறையினர் தடியடி பிரயோகம் செய்ததாகக் கூறப்படுவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் அ. ரகுமான் கான், கு. ரமணி, பொ. உத்திராபதி, சு. பாலன், வி. பி. சிந்தன், ஜே. ஹேமச்சந்திரன், எஸ். இராசாராமன், மு. இராமநாதன், டாக்டர் கே. சௌரிராஜன், திருவாளர்கள் டி. ஆர். வேங்கடரமணன், இரா. தாமரைக்கனி, கு. சுப்பராயன் ஆகியோர் "30-3-1985 அன்று சென்னை இராசரத்தினம் ஸ்டேடியத்தில்



போலீஸ் வேலைக்கு ஆட்கள் தேர்வு செய்ய நடைபெற்ற நேர்முகத் தேர்வில் ஆயிரக்கணககானவர்கள் கலந்து கொண்டபோது திடீரென்று கூட்ட நெரிசலை ஒழுங்கு படுத்துகிறோம் என்று சொல்லி சென்னை நகர போலீசார் கடுமையான தடியடிப் பிரயோகம் செய்தும், போலீஸ் குதிரைப் படையைக் கொண்டு தாக்கியும் அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டதால் மனோகரன் என்பவர் போலீசாரின் தாக்குதலுக்கு உள்ளாகி மரணம் அடைந்திருக்கிறார். இன்னொருவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். நூற்றுக்கணக்கானோர் படுகாயம் அடைந்திருக்கிறார்கள் இதனால் பொது மக்களிடையே ஏற்பட்டிருக்கும் பதட்டநிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்ற தீர்மானத்தை மொழிய அனுமதிகோரி முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை ராஜரத்தினம் விளையாட்டு அரங்கில் 30-3-1985 அன்று போலீஸ் வேலைக்கு ஆள் எடுக்க தேர்வு நடைபெற்றது. 1,188 இடங்களுக்கு அந்தத் தேர்வு நடைபெற்றது. ஆனால் 20 ஆயிரம் பேர் அங்கே கலந்து கொண்டதாக எனக்கு தகவல் கிடைத்திருக்கிறது. தேர்வு 30 ஆம் தேதி என்று சொன்னால் 29 ஆம் தேதி இரவே ஆயிரக்கணக்கானவர்கள் அந்த விளையாட்டு மைதானத்தைச் சுற்றி கூடியிருக்கிறார்கள். 30-3-1985 அன்று ராஜரத்தினம் விளையாட்டு அரங்கினுடைய அந்த கதவு திறக்கப்படுகிறது. எல்லோரும் கியூவில் நின்று இருக்கிறார்கள். ஆனால் திடீர் என்று ஆயிரக்கணக்கானவர்கள் நின்றிருந்தாலும்கூட திடீர் என்று குழப்பம் ஏற்பட்டு இருக்கிறது.

(முற்பகல் 9-50)

இந்தக் குழப்பத்திற்கு முக்கியமான காரணம் என்னவென்று கேட்டால், போலீஸ் அதிகாரிகளும், போலீஸ் அதிகாரிகளுக்கு வேண்டியவர்களும், அது போன்று, ரிடையர்ட் போலீஸ் அதிகாரிகளுக்கு வேண்டியவர்களின் வீட்டுப் பிள்ளைகள், உறவினர்களை, கியூவைவிட்டு உள்ளே திணிக்க வைக்கின்ற முயற்சி நடந்திருக்கிறது. அதைப்போலவே ஆளுங்கட்சிக்காரர்களிடமிருந்து பல சிபாரிசுக் கடிதங்கள் பெற்றவர்கள் அடையாளம் காட்டப்பெற்று, அவர்களையும் உள்ளே விடுகின்ற முயற்சிகள் நடைபெற்றிருக்கிறது. அங்கே கியூவில் நின்றவர்கள், அவர்கள் மட்டும் எப்படிப் போகலாம் கியூவிலே நிற்காமலே எங்களை மட்டும் நீண்ட நேரம் காக்க வைப்பதா என்று சொல்லி, அவர்கள் உள்ளே போக முயற்சித்து இருக்கிறார்கள்.

இந்த நிலையிலே, போலீஸ் தன்னுடைய தவறான காரியத்தை திருத்திக்கொள்ளாமல், மாறாக, கடுமையாகத் தடியடிப் பிரயோகம் செய்து இருக்கிறது. குதிரைப் பட்டாளத்தை விட்டு கூட்டத்தை கலைககின்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது. இராஜரத்தினம் விளையாட்டரங்கமும், அதைச் சுற்றிய பகுதியும் ஒரு போர்ச்களமாகவே காட்சியளித்திருக்கின்றது. போலீஸ் வேலை கிடைக்குமென்ற நம்பிக்கையோடு போனவர்களை போலீஸ் கிருகத்தனமாக அடக்குமுறைக்கு உள்ளாக்கியிருக்கிறது. ஏதோ அந்நியநாட்டு இராணுவத்தினரைத் தாக்குவதைப்போல, நிராயுதபாணிகளாக நின்ற அந்தப் போலீஸ் வேலை கிடைக்கும் என்ற நமபிக்கையோடு தேர்வுக்குச் சென்றவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள், குதிரை மிதித்துப் பலர் படுகாயமடைந்திருக்கிறார்கள்.

அதிலும் குறிப்பாக, திருவல்லிக்கேணி ஐஸ் ஹவுஸ் நடேசன் சாலையின் ஒருபகுதி என்னுடைய சேப்பாக்கம் தொகுதியில் வரும் என்னுடைய் தொகுதியைச் சேர்ந்த மனோகரன் என்பவர், திருமணம் ஆகாத இளைஞர், ஒரு போலீஸ்காரருடைய மகன், அவர் இறந்து விட்டார். அவருடைய தகப்பனார் அவருடைய அண்ணன்கூட போலீஸ்காரராக வேலை பார்க்கிறார். இப்படி குதிரை மிதிக்கும், கடுமையான தடியடி பிரயோகம் நடைப்பெற்று அவருடைய காலை ஒட்டிய பகுதியும், தலையை ஒட்டிய பகுதியும் தடியால் மிருகத்தனமாகத் தாக்கப்பட்ட நிலையிலே, மயக்கமுற்றுக் கீழே விழுந்து, இரத்தம் பெருகெடுத்து ஓடி அந்த நிலையிலே மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லபட்டபொழுது, கீழ்பாக்கம் மருத்துவமனையில் அவர் உயிர் துறந்திருக்கிறார்.

அதைப்போல இன்னொருவர் இராஜேந்திரன் என்பது அவருடைய பெயர். அவரும் கடுமையாகத் தாக்கப்பட்டு உயிர் இழந்ததாக அங்கேயிருந்து தேர்வுக்கு சென்றவர்களில் ஒருவர் எனக்கு அந்தத் தகவலைக் கொடுத்தார்கள். இவரும் இறந்திருக்கின்றார் பெயர் இராஜேந்திரன்.

ஆகவே, இப்படி இந்த இரண்டு பேர்கள் மரணம் அடைந்திருக்கிறார்கள் போலீசாருடைய அத்து மீறிய நடவடிக்கையினாலே. அதைப்போல பலர் படுகாயமுற்று ஆஸ்பத்திரியிலேயே அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், இங்கே காவல் துறையைச் சார்ந்தவர்கள் மருத்துவமனைக்குச் சென்று காயமுற்ற யாரையும் இங்கே அனுமதிக்கக்கூடாது என்று சொல்லி அதைக்கூடத் தடுப்பதற்கான ஏற்பாடுகள் பலயிடங்களிலே நடைபெற்றிருக்கிறது.

பேரவைத் தலைவரவர்களே, உங்கள் மூலமாக இது சம்பந்தமாக இந்த அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதெல்லாம், முதலிலே போலீசுக்கு ஆள் எடுப்பதற்காக நடைபெற இப்படிப்பட்ட தேர்வே சட்ட விரோதமானது. காரணம், 12, 000 பேர்கள் போலீஸ்காரர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று



முதலமைச்சரவர்கள் அறிவித்தார்கள். பல ஆண்டுகள் ஆகின்றன. 1978-லே விளம்பரம் செய்யப்பெற்றது, தேர்வு நடைபெற்றது, பட்டியல் தயாரிக்கப்பெற்றது செலக்டட் என்று, இன்னின்னார் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் பட்டியல் அறிவிக்கப்படவில்லை, யாரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

1980ஆம் ஆண்டு தேர்வு நடைப்பெற்றது. விளம்பரம் வழக்கம் போல வந்தது. போலீஸ் வேலைக்கு ஆள் எடுப்போம் என்று சொல்லி எல்லாம் எடுத்தார்கள், ஹெய்ட்டு, வெயிட்டு எல்லாம் பார்த்து எடுத்தார்கள். பட்டியலும் தயாராயிற்று. ஆனால் பட்டியல் வெளியிடப்படவில்லை. இன்னும் சொல்லப் போனால், இதே இராஜரத்தினம் ஸ்டேடியத்திலே பந்தல் கூடப் போடப்பட்டு இந்தத்தேர்வு நடப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஒரு பத்தாயிரம் ரூபாய், இருபதாயிரம் ரூபாய் பந்தல்காரருக்குப் பாக்கி, கமிஷனர் அவர்கள் இன்னும் தரவில்லை என்று சொல்லி இதே சபையிலே கூட அந்தத் தொகை கொடுக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டிருக்கிறேன். அந்தப் பணம் கொடுக்கப்பட்டதா என்பது எனக்குத் தெரியாது. ஆகவே, 1980-லே இது மாதிரியான ஒரு தேர்வு நடைபெற்றது. அதற்குப்பிறகும் ஒரு தேர்வு நடைபெற்றது. இதற்கிடையிலே 1983ஆம் ஆண்டு மெட்ராஸ் ஹைகோர்ட்டிலே ரிட் மனு செய்யப்பட்டு ஸ்டே வாங்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், எங்களுடைய வயது பாதிக்கிறது, இரண்டு முறை நாங்கள் இந்தத் தேர்விலே கலந்து கொண்ட போது எங்களுடைய வயது 24. இப்பொழுது நாங்கள் கலந்து கொள்ள முடியாது. 28 என்று குறைந்த வயதை நிர்ணயித்திருக்கிறார்கள். எனவே, இந்த வயது கூடுதலாகப் போனதற்குக் காரணம் நாங்கள் அல்ல, அரசாங்கம் இதை முறையாக நடத்தாததுதான் காரணம், ஏற்கனவே உள்ள பட்டியலெல்லாம் வெளியிடப்படவில்லை, எனவே இந்தத் தேர்வு நடத்துவதே சட்ட விரோதமானது என்று ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டு ஸ்டே பெறப்பட்டிருக்கிறது.

அந்த நிலையில் இன்றைக்கு போலீஸ் துறையிலிருந்து போலீஸ் தேர்வுக்கு ஒரு விளம்பரம் செய்யப்பட்டு 30 ஆம் தேதி நடக்கிறது என்று சொன்னால் முதலிலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன், இது சண்டெம்ப்ட் ஆப் கோர்ட். இது நீதிமன்றத்தை அவமதிக்கக்கூடிய காரியம். இதை எப்படி அரசாங்கம் அனுமதித்தது என்று தெரிய விரும்புகிறேன்,

இரண்டாவதாகச் சொல்ல விரும்புகிறேன், இந்த இராஜரத்தினம் விளையாட்டரங்கத்திலே குழப்பம் ஏற்பட்டதற்குக் காரணமே போலீஸ்காரர்கள்தான்.

தங்களுடைய பிள்ளைகளையும், தங்களுடைய சொந்தக்காரர்களையும் உள்ளே விடவேண்டும் என்பதற்காக மற்ற பொது மக்களை எல்லாம் நிறுத்தி வைத்துவிட்டு வேண்டியவர்களை உள்ளே திணிக்கின்ற முயற்சி நடைபெற்ற காரணத்தால், ஆளும் கட்சிக்கு வேண்டியவர்களை உள்ளே விடுகின்ற முயற்சி நடைபெற்ற காரணத்தால்தான் இந்தக் குழப்பம் ஏற்பட்டிருக்கின்றது. இன்னொன்றை நான் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தத் தேர்வு நடைபெறுவதற்கு மனுக்கள் கொடுத்தாலே போதுமானது. ஆனால் மனுக்கள் பெறுவதற்கு டோக்கன் கொடுக்கவேண்டும் என்று வைத்திருப்பது தவறு; அது சரியா என்று தெரியவில்லை.

இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். 20 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் அதிலே கலந்துகொள்கிறார்கள் என்று சொன்னால் அவர்கள் அனைவரையும் ஒரே இடத்தில் குவிக்கவேண்டிய அவசியம் இல்லை. வட சென்னை, தென் சென்னை, மத்திய சென்னை என்று மூன்றுப் பகுதியாக பிரித்து மூன்று இடங்களில் தேர்வை நடத்தியிருக்கலாம். எனவே ராஜரத்தினம் ஸ்டேடியத்தில் மட்டும் இவ்வளவு பேர்களைக் குவித்து வைத்தது போலீசார் செய்திருக்கக்கூடிய தவறு.

இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்கு இப்படி இருக்கக்கூடிய நிலையில் நம்முடைய மரியாதைக்குரிய போலீஸ் கமிஷனர் அவர்கள் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். இரண்டு பேர் இறந்துபோய் இருக்கிறார்கள்; போலீசாருடைய தடியடிக்குப் பலியாகி, குதிரை மிதித்து இரண்டு பேர்கள் இறந்திருக்கிறார்கள். நூற்றுக்கு மேற்பட்டவர்கள் காயம் அடைந்திருக்கிறார்கள். ஆனால் நம்முடைய போலீஸ் கமிஷனர் அவர்கள் ஒரு அறிக்கை விட்டிருக்கிறார்கள். அப்படி யாரும் சாகவில்லை; நூற்றுக்கணக்கான பேர் காயம் அடையவில்லை. பத்திரிகைகளில் வந்த செய்திகள் எல்லாம் தவறானவை என்று அவர்கள் அறிக்கை விட்டிருக்கிறார்கள். நான் உங்கள் மூலம் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன், பாதிக்கப்பட்டவர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் சொல்கிறேன். தடியடிப்பிரயோகம் போலீஸ் நடத்தியிருக்கிறது. குதிரைப் படை ஏவிவிடப்பட்டு ஆயிரக்கணக்கான பேர் குயோ முறையோ என்று கத்தி ஒரு ஜலியன் வால பாக் போன்ற நிகழ்ச்சி நடைபெற்றிருக்கின்றது. குதிரை மிதித்த கொடுமைக்கு ஆளாகியிருக்கிறார்கள். மனோகரன் இறந்திருக்கிறார், ராஜேந்திரன் இறந்திருக்கிறார், அதுமட்டுமல்லாமல் இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய போலீஸ் கமிஷனர் அவர்கள் மனோகரன் இறந்ததை ஒருவாறாக மறுநாள் ஒப்புக்கொண்டு அதற்குக் காரணம் போலீஸ் தடியடிப் பிரயோகம் அல்ல, மனோகரன் இறந்ததற்குக் காரணம் குதிரை மிதித்த காயத்தால் அல்ல, அவர் இறந்ததற்குக் காரணம் அவர் நீண்ட நேரம் சாப்பிடாமல் இருந்தார். எனவே மயக்கம் அடைந்து அவர் இறந்து விட்டார். போஸ்ட்மார்ட்டம் சர்ட்டி





பிக்கேட்டில் அவருடைய ஈரல் சரியாக வேலை செய்யவில்லை, பழுதுபட்டிருக்கிறது என்ற தகவல் வந்திருக்கின்றது. அதனால்தான் அவர் இறந்துவிட்டார் என்று போலீஸ் கமிஷனர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்கள் மூலமாக இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எப்போதாவது போலீஸ் தரப்பிலே உண்மைத் தகவல் சபையிலே வைக்கப்பட்டிருக்கிறதா? 150 க்கு மேற்பட்டவர்கள் இந்த ஓராண்டுக் காலத்தில் போலீஸ் லாக்-அப்-பிலே அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்று நான் குற்றச்சாட்டு சொல்கிறேன். ஆனால் போலீஸ் தரப்பில் அது மறுக்கப்பட்டது. இல்லவே இல்லை அது கற்பனை என்று சொன்னார்கள். இது பொது மக்கள் பிரச்சனை என்ற காரணத்தால் சொல்கிறேன். சேலம் கிச்சிலிபாளையத்தில் தெய்வமணி என்ற அரிசனப் பெண் போலீஸ் லாக் அப்-பிலே கொல்லப்பட்டார். ஆனால் அது தற்கொலை என்று....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பிரச்சினை குறித்து அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் என்ன என்றுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமேயொழிய ஒத்திவைத்துவிட்டு விவாதம் நடத்துவதுபோல் நீண்ட நேரம் பேசவேண்டியதில்லை. எனவே சீக்கிரம் முடித்துவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதைச் சொல்ல வந்ததற்குக் காரணம் சேலம் கிச்சிளிபாளையத்தில் நடந்ததைத் தற்கொலை என்று சொன்னார்கள். அதைப்பற்றி விசாரிக்க அரசாங்கம் விசாரணைக் கமிஷன் போட்டது. அந்த அறிக்கையிலே அது கொலை என்று சொல்லப்பட்டது. எனவே போலீஸ் ரிப்போர்ட்டை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டியதில்லை என்பதற்காகத்தான் சொல்கிறேன், ஏற்கெனவே நடந்த அந்தச் சம்பவத்தில் வைக்கப்பட்ட நீதி விசாரணைக் கமிஷன் போலீஸ் ரிப்போர்ட்டிலே சொல்லியதை மறுத்து கொடுத்த அறிக்கை இங்கே டேபிளிலே வைக்கப்பட்டிருக்கின்றது.....

திரு துரை கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் காவல் துறையினர் நடத்திய இன்டர்வியுவில் ஏற்பட்ட சம்பவத்தை ஒட்டி அவையில் விசாரிப்பதற்காக அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று பேசுவதற்கு பதிலாக ஓராண்டு காலத்திற்கு முன்னாலே நடந்த விஷயங்களை எல்லாம், அதாவது லாக்-அப்-லே இறந்தது பற்றியெல்லாம் இங்கே பேசிக்கொண்டிருக்கிறார். எனவே இந்தப் பிரச்சினை குறித்து மட்டும் அவர் பேசுமாறு உங்கள் மூலமாக கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தப் பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காக அவையின் அலுவல்களை ஒத்திவைத்து ஏன் விவாதிக்க வேண்டும் என்பதற்கான காரணங்களைச் சுருக்கமாகச் சொன்னாலே போதும் வேண்டுமானால் ஒன்றிரண்டு ப்ரைமாஃபேசி கேஸை எடுத்துச் சொல்லலாமே தவிர நீண்ட விவாதமாகப் பேசிக்கொண்டிருப்பது தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, போலீஸ் கொடுக்கிற ரிப்போர்ட் உண்மைக்குப் புறம்பாக இருக்கின்றது என்பதைச் சொல்வதற்காகத்தான் ஏற்கெனவே நடந்த சம்பவத்தைச் சுட்டிக்காட்டினேன் அவ்வளவுதான். அந்தச் சம்பவத்தில் விசாரணைக்குப்பிறகு அது கொலை என்று தெரிய வந்தது. அதற்காகத்தான் சொன்னேன். இதை ஏற்றுக்கொண்டு நாவலர் அவர்கள் பதில் சொல்லக் கூடும். போலீஸ் தரப்பிலே கூறப்படுவது உண்மை அல்ல. நீதி விசாரணை வைத்தால்தான் உண்மையான விவகாரம் தெரியவரும். சாதாரணமாக ஒரு நடைமுறை விசாரணை என்ற வகையில் அதாவது ஒரு ஆர்.டி.ஓ. மூலமாக விசாரணை செய்தால் உண்மைகள் வெளிவராது. இன்றைக்கு பாதிக்கப்பட்டிருக்கின்ற குடும்பத்தினர் சாதாரண ஏழை எளிய மக்கள். சாதாரணமாக ஒரு கார் ஆக்ஸிடெண்ட் ஏற்பட்டால்கூட முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதியிருந்லிந்து உதவித்தொகை வழங்குகிறீர்கள். அதுபோல் இந்த மிகப்பெரிய போலீஸ் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கக்கூடிய மனோகரன், ராஜேந்திரன் ஆகியோரின் குடும்பத்தினருக்கு அரசாங்கம் குறைந்தது 10 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை கொடுக்கவேண்டும். உயிரின் மதிப்பு 10 ஆயிரம் அல்ல. ஆனால்

(முற்பகல் 10-00)

அந்தக் குடும்பத்தினுடைய மெண்டல் அகனி, சூழ்நிலை, வறுமை ஆகியவற்றை ஒட்டி, அந்த அரசாங்கம் குறைந்த அளவாவது நிதி உதவி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆனால் இது போலீஸ் அராஜகத்தின் காரணமாக போலீஸ் அடக்கு முறையின் காரணமாக நடந்திருக்கிறது. இந்த நாட்டிலே ஒரு நாயைக் கொல்வதற்குக்கூட யாருக்கும் உரிமை கிடையாது. போலீஸ்காரர்கள் தொடர்ந்து இந்த அடக்குமுறையை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். குற்றவாளிகள் தண்டிக்கப்படுகிறார்களா ? தமிழகத்திலே தொடர்ந்து போலீஸ் அடக்குமுறை ஒரு போலீஸ் ராஜ்யமோ என்று சந்தேகப்படக்கூடிய அளவிற்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவேதான் சொல்கிறேன், கமிஷனர் அவர்கள் சொல்லியிருக்கிற அறிக்கை, போஸ்ட் மார்ட்டம் அறிக்கை எல்லாம் சரியல்ல. இன்னும் சொல்லப்போனால், டாக்டர்களைக்கூட தங்களுக்குச் சாதகமாக போஸ்ட் மார்ட்டம் அறிக்கை தரவேண்டுமென்று



நிர்பந்திக்கின்ற நிலைமைகள் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றன. அதற்கு ஆதாரத்தைக்கூட நான் சொல்லமுடியும். ஆனால் அது ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அப்பாற்பட்டது. இங்கே வழக்கறிஞர்கள் கடுமையாகப் போலீசாரால் தாக்கப்படுகிறார்கள். மாணவர்கள் தாக்கப்படுகிறார்கள் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த விவாதத்தோடு முடித்துக் கொள்ளவேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : இன்றைக்கு மனோகரன் தாக்கப்பட்டிருக்கிறார். இன்றைக்குப் பல பேர்கள் பதவியிலே இருப்பதனால் பாதுகாப்பாக இருக்கிறார்கள். இல்லையென்றால் அவர்கள்கூடத் தாக்கப்படுவார்கள். எனவே, இந்த போலீஸ் ராஜ்யத்தைக் கண்டிக்கின்ற விதத்திலே அவையினுடைய இதர அலுவல்களை ஒத்திவைத்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்க வேண்டுமென்ற கேட்டு அமர்கிறேன்.

திரு. வி. பி. சிந்தன் : தலைவர் அவர்களே, மிக முக்கியமான ஒரு பிரச்சினை என்ற ஒரு காரணத்தினால்தான் ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பிரேரேபித்தேன். இதை சபையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய ஒரு பிரச்சினையாகவே நாங்கள் கருதுகிறோம். காரணம், ஏற்கெனவே இத்தகைய ஒரு நிகழ்ச்சி சென்னை நகரத்தில் நடைபெற்றது உண்டு, தேர்வை ஒட்டி, அன்று இந்தப் பிரச்சினை சம்பந்தமாக அரசு தரப்பிலே சொல்லப்பட்டதெல்லாம் இதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக உத்தரவாதம் கூறினார்கள் இன்றுவரை அது சம்பநதமாக எந்த வித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. இப்படி ஆயிரக்கணக்கானவர்களை வேலைக்கு எடுப்பதாக ஒரு விளம்பரத்தைச் செய்து—விளம்பரத்தாலே நம்பிக்கை உள்ள விளம்பரத்தை மட்டும் ஆதாரமாக வைத்துச் செயல்படுகிற ஒரு அரசாங்கமாக இருக்கிறது என்ற காரணத்தாலோ என்னவோ எனக்குத் தெரியவில்லை இந்த விளம்பரத்தையும் செய்து—ஆயிரக்கணக்கானவர்கள் ஓரிடத்திலே கூடக்கூடிய ஒரு நிலைமை ஏற்படும் என்று அமைச்சர்கள் யாராவது யோசித்தது உண்டா ? அதிகாரிகளை அழைத்துப் பேசியது உண்டா ? ஏன் இது மாதிரி செய்யத் தவறியிருக்கிறது ? 3 இடங்களிலே, 4 இடங்களிலே ரெக்ரூட் செய்ய ஏற்பாடு செய்திருக்கலாம். சென்னை நகரத்தில் இடமில்லையா ? இவை எல்லாம், ஒரு ஆட்டிட்யூட்— ஒரு அணுகுமுறையிலேயிருந்து எழக்கூடியது என்று நான் கருதுகிறேன். அந்தத் தேர்வு நடக்கிற இடத்திலே சிலர் முன்னதாகவே அனுமதிக்கப்பட்டார்கள். நான் கேள்விப்படுவதெல்லாம், அமைச்சர்களுடைய சிபாரிசின்பேரில், ஆளுங்கட்சித் தலைவர்களுடைய சிபாரிசின் பேரில், உயர் தர போலீஸ் அதிகாரிகளுடைய சிபாரிசின்பேரில் சிலர் முன்னதாகவே இடம் பெற்றார்கள். அவர்களுக்கு யார் டோக்கன் கொடுத்தார்கள் ? எப்படி முன்னுரிமை கிடைத்தது

என்ற விவாதம் அங்கே எழுந்தபோதுதான் சல்சலப்பு ஏற்பட்டது கூட்டத்தினால் மட்டுமல்ல, யார் அவர்கள் முன்னே டோக்கன் பெறாமலே உள்ளே சென்றவர்கள் என்பதாலும் இந்நிலை ஏற்பட்டது அப்படி ஒரு முறை கையாளப்பட்டால்--கையாளப் பெற்றிருக்கிறது என்பதே என்னுடைய கருத்து—பாரபட்சமாக அரசும் போலீசும் நடந்து கொண்டிருக்கிறது என்பதைத் தான் இங்கே விவாதிக்க வேண்டும். டோக்கன் கொடுக்கிற முறை எதற்கு என்றே எனக்கு புரியவில்லை ஏற்கெனவே டோக்கன் கொடுத்து தான் இந்தச் சிக்கல் பூரவும் ஏற்பட்டது. டோக்கன கொடுப்பதிலே துர்விநியோகப்படுத்துகிற முறையும் ஏற்பட்டிருக் கிறது. ஆகவே, அப்ளிக்கேசன்.... (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் சற்றுப் பொறுமையாகக் கேட்கவேண்டும். சென்னை நகரில் மிகப் பெரிய பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சபாநாயகர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன் 2 அல்ல, 10 பேர்கள், 12 பேர்கள் செத்துவிட்டதாக வதந்திகள் உலவிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, பொறுப்புணர்ச்சியுடன் இந்தப் பிரச்சனையை நாம் அணுகவேண்டும், அரசியல் காழ்ப்புணர்ச்சி யிலே நாங்கள் யாரும் இந்தப் பிரச்னையைக் கிளப்பவில்லை. போலீஸ் அதிகாரிகள் முறையாக நடக்கவில்லை (குறுக்கீடுகள்) இதைப்பற்றி மன்றத்தில் சொல்லாமல் வேறு எங்கே சொல்வது ஆகவே, போலீஸ் அதிகாரிகளுடைய நடவடிக்கையைக் கட்டுப் படுத்துகிற முறையிலும் (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை முன்னவர் பேசும் போது பதில் சொல்வார். ஆகவே, மற்றவர்கள் அமர வேண்டும். திரு. சிந்தன் அவர்களை கேட்டுக் கொள்வது என்னவென்றால், நீங்கள் ஒரு ஸ்வீப்பிங் அலிகேசன் சொன்னீர்கள், அதுபோன்று சொல்ல வேண்டாம்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, உறுப்பினர்களுக்கு இருக்கிற பாதுகாப்பு அமைச்சர்களுக்கும் தேவைப்படுகிறது. அமைச்சர்கள், சிபாரிசு செய்தார்கள் என்று ஆதாரமில்லாமல் சொல்வது அமைச்சரவையையே குற்றச்சாட்டிற் குள்ளாக்குவது போல இருக்கிறது. ஆதாரத்துடன் சொல்வதுதான் சரியாக இருக்கும். ஒட்டுமொத்தமாகச் சொல்வது பொருத்த மற்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சிபாரிசு லெட்டர் இருந்தால் அதை என்னிடம் காட்டிவிட்டுதான் பேச முடியும். அப்படி லெட்டர் ஏதாவது இருந்தால் இப்போதுகூட என்னிடம் காட்ட லாம். உங்களை பேச அனுமதிக்கிறேன். அப்படி இல்லையென் றால் you should wit-draw. நான் ஏன் இதை எக்ஸ்பன்ச் செய்ய வில்லையென்றால் அப்படியே ஒரு டிஸ்கசனாக (discussion) வரட்டும் என்றுதான் இருந்தேன். நீங்கள் ஆதாரம் இல்லாமல் பேசாதீர்கள். ஆதாரம் இருந்தால் என்னிடம் காட்டிவிட்டு தான் பேசவேண்டும்.





திரு. வி. பி. சிந்தன் : பிரைமா பேசி (Prima facie) கேஸ் உண்டா என்பது தான் இந்த விவாதத்தினுடைய சுருக்கம். (குறுக்கீடு)

திரு அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, யாரும் சிபாரிசு கடிதம் கொடுக்கவில்லை என்று சொல்கிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்கு எப்படி தெரியும்? இருந்தால் என்னிடம் காட்டுங்கள்.

திரு. அ. ரகுமான்கான்: எங்களுக்கு தகவல் கிடைத்திருக்கிறது அதை வைத்துதான் சொல்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு குற்றச்சாட்டைச் சொல் கிறபோது கையிலே ஆதாரமில்லாமல் பேசுவது நல்லதல்ல. அது மரபும் அல்ல. ஏற்கனவே பலமுறை சொல்லி இருக்கிறேன். உறுப்பினர்கள் மீது குற்றச்சாட்டு சொல்ல வேண்டுமென்றால் முதலில் எழுதிக் கொடுக்க வேண்டும். அப்படியில்லாமல் ஆதார மின்றி பேசிவிட்டு போய்விட்டால் செய்திகள் வெளியே வருகிற போது வேறுமாதிரி வரக்கூடும்.

திரு. அ. ரகுமான்கான் : பாதிக்கப்பட்டவர்கள் எங்களிடம் வந்து சொன்னதைத்தான் சொல்கிறோம். அதைக்கூட சொல்லக் கூடாதா? (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்களுக்கு பொது வாகச் சொல்கிறேன். நம்மிடம் வந்து சொல்லக்கூடியவர்களை நம்பி இங்கே பேசுவது சரியாக இருக்காது.

திரு அ. ரகுமான்கான்: அந்தக் கடிதம் காட்டப்பட்டால்.... (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது அந்தக் கடிதத் தைக் காட்டுங்கள். The matter has come to this level. உங்களி டத்தில் கடிதம் இல்லையென்றால் What action I should take against the hon. Member ? (குறுக்கீடுகள்) உங்களுக்கு வாய்ப்பு கொடுக்கிறேன். பொறுப்பு முழுவதையும் என்னிடத்தில் ஒப்படைத்துவிட்டால் நான் எடுக்கிற நடவடிக்கைக்கு நீங்கள் கட்டுப்பட்டாக வேண்டும்.

திரு. வி. பி. சிந்தன் : உங்கள் நீதிக்கு தலை வணங்கு கின்றேன். ஆனால் சொல்லப்படுவது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்களை நாடி பல பேர் வருவார்கள். அது நம்முடைய ஜனநாயகத்திலே இயற்கை. என்னிடத்திலே கூட எத்தனையோ பேர்கள் வருகிறார்கள். நீங்கள் சொன்னால் நடக்கிறதாமே என்று சொல்வார்கள். நாடு இன்றைக்கு இப்படி இருக்கிறது. அதை நம்பி நீங்கள் அலி

டேகஷன்களைச் சொல்லக் கூடாது. எழுத்து மூலமாக ஏதாவது ஆதாரம் இருந்தால் அதை வைத்துச் சொல்ல வேண்டும். இன்றைய ஜனநாயகத்தில் நாம் மக்களிடம் ரொம்பவும் நெருங்கி பழகிக் கொண்டிருக்கிறோம். அதனால் அந்த எண்ணம் வளர்க்கப்பட்டிருக்கிறது. ஆகவே அதை வைத்து அதாரமில்லாமல் குற்றச்சாட்டைச் சொல்ல வேண்டாம்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிந்தன் அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் அவர்களுடைய கருத்தை வலியுறுத்தி எடுத்துச் சொல்வதில் எந்தவிதமான தவறும் இல்லை. ஆனால் அதைப்பற்றி பேசிக்கொண்டு வருகிறபோது போகிற போக்கிலே புழுதிவாரித் தூற்றுவதைப்போல, போலீஸ் வேலைக்கென்று விளம்பரம் செய்தார்கள். விளம்பரத்தையே ஆதாரமாக கொண்டு நடக்கிற அரசு என்றெல்லாம் சொல்கிறார்கள். வேலைக்கு ஆள் சேர்க்கும்போது விளம்பரம்தான் போடுவார்கள். ஒருவேளை உங்களுடைய அரசாங்கத்திலே விளம்பரமே இல்லாமல் தனியாக சேர்த்துக் கொள்வார்களோ என்னவோ ?

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் பேசிவிட்டீர்கள். இந்த விவகாரம் வந்ததற்கே காரணம் உறுப்பினர் பேசுகிற போதே அதை நான் எக்ஸ்பன்ச் செய்யாதது தான். இப்போது நான் எக்ஸ்பென்ச் செய்வதில்லை என்று வைத்திருக்கிறேன். ஆகவே உறுப்பினர்கள் பேசுகிறபோது ரெஸ்ட்ரெயின்டாக காஷியசாக பேச வேண்டும். கையில் ஆதாரம் இல்லையென்றால் பேசவே செய்யாதீர்கள்.

(முற்பகல் 10.10)

**திரு. வி. பி. சிந்தன் :** சபாநாயகர் அவர்களே, நான் பேசியதை மீண்டும் ஒரு முறை குறிப்பைப் பார்த்தால் தெரியும், 10 பேர்களுக்கு மேல் இறந்ததாகச் சொல்லப்படுகிறது என்று சொன்னேன். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நம்மிடம் வரக்கூடிய தகவல்களை எல்லாம் தகவல் அடிப்படையில் இங்கே சொல்லக்கூடாது. சொல்லப்படுகிறது என்றால் நீங்கள் சொல்லியதிலிருந்து வழுகிப் போகிறீர்கள் என்று அர்த்தம். தகவலை வைத்துக்கொண்டு பேசுகிறீர்கள் என்றால்.

"You are not definite about your representation."

**திரு. அ. ரகுமான்கான் :** லத்திச் சார்ஜ் நடந்திருக்கிறது என்பது உண்மை. மனோகரன் இறந்திருக்கிறான் என்பது உண்மை. இன்னும் ஒருவர் இறந்திருக்கிறார், பலர் காயம் அடைந்திருக்கிறார்கள் என்பது எல்லாம் உண்மை. டோக்கன்



பெற்றவர்கள் உள்ளே போயிருக்கிறார்கள். அதோடு எங்களுக்கு கிடைத்தத் தகவல்களையும் சொல்கிறோம். அரசாங்கம் அதை விசாரணை செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இங்கே நீங்கள் பேசும்போது உங்களுக்கு ஒரு டெபனிட் கன்குலுஷன் இருக்க வேண்டும். நீங்கள் சொல்லுகின்ற அலிகேஷன் கான்கிரீட்டாக இருக்க வேண்டும். உங்களுக்கே உண்மை என்று தெரிந்தால் சொல்ல வேண்டும். உங்களுக்கே சந்தேகம் இருந்தால் அதை இங்கே சொல்வது சரியல்ல, இதிலே காங்கிரீட் பாக்ட்ஸ் இருக்கிறதா என்று. முதலில் உங்களை 'சாட்டிஸ்பை' செய்துகொள்ள வேண்டும் ' with doubts don't make representation here,'

**திரு. வி. பி. சிந்தன் :** ஏற்கெனவே ஒருதடவை இத்தகைய நிகழ்ச்சி நடந்து இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எதிர்காலத்தில் தவிர்க்கப்பட வேண்டுமென்று இந்த சபையில் வற்புறுத்தப்பட்டு, அரசும் அதை ஏற்றுக் கொண்டது மீண்டும் அப்படிப்பட்ட ஒரு சம்பவம் ஏற்பட்டிருப்பதால் அதுபற்றி முக்கியமாக விவாதிக்க வேண்டியிருக்கிறது. தலைவரவர்களும் ஒரு வழக்கறிஞர் என்பதால் நான் சொல்கிற பிரச்சினையை புரிந்து கொள்ள முடியும் என்று கருதுகிறேன். இது முக்கியமான ஒரு பிரச்சினையாக இருப்பதால் அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்பதற்கான காரணங்களைச் சொல்கிறோம். நாங்கள் சொல்லுகிற தகவல் ஏற்கெனவே அந்த இடத்தில் டோக்கன் கொடுத்து, டோக்கன் பெற்றவர்கள் உள்ளே சென்றிருக்கிறார்கள். அதுதான் இந்தப் பாதிப்புக்கு முக்கியமான காரணம் என்று எங்களுக்கு பாதிக்கப்பட்டவர்கள் தகவல் கொடுத்திருக்கிறார்கள். எழுத்து மூலம் கொடுக்க வேண்டுமென்றால் அதற்கும் நான் தயார். ஏற்கெனவே ஒருசிலர் உள்ளே நுழைந்துவிட்டார்கள். சிலர் உள்ளே நுழைந்ததுதான் குழப்பத்திற்குக் காரணம், குழப்பத்திற்கு ஆரம்பம் இதை வலியுறுத்துவதற்குக் காரணம் அரசாங்கம் இதுபற்றி விசாரிக்க வேண்டும். இறந்து போனவர்கள் குடும்பங்களுக்கு வழங்கப்பட வேண்டிய நஷ்டயீடு பற்றி மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் கூறியிருக்கிறார்கள்.

இப்போது நடைபெற்றிருக்கிற இந்த சம்பவம் இரண்டாவது தடவையாக நடந்திருக்கிறது. ஆயிரக்கணக்கானவர்கள் வந்திருக்கிற ஒரு இடத்தில் இப்படி டோக்கன் ஒரு சிலருக்குக் கொடுத்து, அவர்கள் உள்ளே நுழைய வேண்டிய அவசியம் என்ன ? ரெக்ரூட்மென்ட் செய்வதில் என்ன பாலிசி கையாளப்படுகிறது? அதை எல்லாம் முன்னவர் அவர்கள் விளக்க வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.

நான் கருத்துக்களைச் சொல்லிக்கொண்டிருக்கிற போது என்னுடைய அரசில் என்ன நடைமுறை என்று கேட்டார்கள். நான் அரசு அமைக்கவில்லை அரசு நடத்தவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவரவர்களே, மேற்கு வங்கத்தில் அவர்களுடைய அரசுதான் நடைபெறுகிறது. அவர்கள் இல்லை என்றால் எங்களுக்கு ஆட்சேபம் இல்லை.

**திரு. வி. பி. சிந்தன் :** மேற்கு வங்கத்தில் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி நடத்துகிறது என்றால் அங்கே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒருவர் ஒரு தொகுதியில் போட்டியிட்டு அந்த அரசை விமர்சிக்க வேண்டும். அதற்குப் பதிலாக இங்கே நான் பேசும்போது உங்களுடைய அரசு என்று சொல்வது முறையல்ல (குறுக்கீடு) நீதிவிசாரணை வேண்டும் என்பதற்காக இத்தகைய நிகழ்ச்சிகளைப் நாங்கள் சொல்கிறோம் மீண்டும் சென்னையில் இப்படிப்பட்ட ஒரு சம்பவம் ஏற்படக்கூடாது என்ற உத்தரவாதத்தை அரசாங்கம் தர வேண்டும் என்பதற்காகச் சொல்கிறோம். இதுபோன்ற பல்வேறு பிரச்சனைகள் பற்றி விவாதிக்க வேண்டியிருப்பதால் சபையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலும் மற்ற இடங்களிலும் 30-3-85-ஆம் தேதியன்று, எழும்பூரிலுள்ள ராஜரத்தினம் ஸ்டேடியத்தில் போலிசுக்கு ஆள் எடுத்திருக்கிறார்கள். ஆனால் தேவைப்படக் கூடியது 1188 தான். அங்கே வந்திருக்கக்கூடிய இளைஞர்களோ, பத்திரிகை செய்திப்படி 20 ஆயிரத்திற்கு மேலாக வந்திருப்ப தாகச் சொல்லப்படுகிறது. இதுபோன்று மற்ற இடங்களிலும் நடந்து இருக்கிறது. தஞ்சாவூர், திருச்சி, மதுரை, நாகப் பட்டினம் போன்ற எல்லா இடங்களிலும் நடந்திருக்கிறது. 1980–லேயிருந்து 1985 வரையிலும் பல இடங்களில் இந்த மாதிரி தேர்வு செய்கின்றபோது எல்லாம் இளைஞர்கள் கட்டுக்கடங் காமல் வருவதும் அதற்கான ஒரு பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்கூட்டியே தயார் செய்யாமல் இருப்பதும் ஒரு தொடர் கதை யாக நடந்து வந்திருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, ஆயிரம் பேர்களை எடுப்பதற்கான கடலூர் என்று நான் நினைக்கிறேன். இதைப்போல குறைந்த இடத்திற்கு அதிகமான இளைஞர்கள் வந்து, அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு ஏற்பாடு செய்ய முடியாமல், கடைசியாக போலிஸ் லத்தி சார்ஜ் செய்து, மண்டை உடைந்து ஆஸ்பத்திரிக்கு செல்லக்கூடிய நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக இந்த ஆட்சியில் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே இப்படி குறைந்த இடத்திற்கு ஆள் தேவைப்படுகிற போது, அதிகமாக இளைஞர்கள் வருகிறார்கள் என்றால், இது எந்த அளவிற்கு தமிழ்நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது என்பதற்கு ஒரு நிரூபணமாக இருக்கிறது. இப்படி அதிகமாக ஆட்கள் வந்தால் எப்படி பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் எப்படி அவர்களை முறைப்படுத்த வேண்டும் என்றும் யோசனை செய்து போலீஸ் அதிகாரிகள் தலைமை சரியான நடவடிக்கை எடுக்கத் தவறியதன் காரண மாகத் தான் இந்தச் சம்பவம் நடந்திருக்கிறது. ஏன் என்றா



அங்கே 20 ஆயிரம் பேர்களுக்கு மேல் வந்திருக்கிறார்கள். வந்த வர்கள் எல்லாம் வரிசையில் நின்றிருக்கிறார்கள். அவர்களை வரிசைப்படுத்துவதற்காக சவுக்கு மரம் நட்டு, கியூ வரிசை செய்திருக்கிறார்கள். அதனால் ஒருவரை ஒருவர் தாண்டிப் போக முடியாது, அப்படி இருக்கும்போது, தனிப்பட்ட டோக்கன் பெற்றவர்களை முன்னாலே அனுப்பியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட காரியங்களால் இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்ட கோபம் வேகமாக மாறி, அதைக் கட்டுப்படுத்த முடியாமல், போலீஸ் குதிரைப் படையை வைத்து அடித்திருக்கிறார்கள். இப்போது நாம் பார்க்கிறோம், மவுண்ட் ரோடிலே கூட்டத்தி னுடைய நெரிசலைத் தடுக்க 4 குதிரைகள் வந்தால், மக்கள் எல்லாம் ஓடுகிறார்கள், அப்படியிருக்கும் போது, 20 ஆயிரம் பேர்களுக்கு அதிகமாக வந்திருக்கும் இளைஞர்கள் மத்தியில் குதிரைப் படையை விட்டு அடிக்கிறபோது, எந்த அளவிற்கு இளைஞர்கள் பாதிக்கப்பட்டு இருப்பார்கள் எந்த அளவிற்கு தாக்கப்பட்டு இருப்பார்கள் என்பதை நாம் நேரிலே போய்ப் பார்த்துதான் தெரிந்துகொள்ள வேண்டும் என்பது கிடையாது, இங்கேயிருந்தும் அதைத் தெரிந்து கொள்ளலாம். எனவே எந்த அளவிற்குத் தாக்குதல் நடந்திருக்கும் ஏன்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அந்தத் தாக்குதலிலே, மனோகரன் என்ற 22 வயதுள்ள இளைஞன் செத்திருக்கிறான். இன்னும் ராஜேந்திரன் என்ற இளைஞன் இறந்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது. இப்படி இறந்ததற்குப் பிறகு, போலீஸ் கமிஷனர் ஒரு அறிக்கை வைக்கிறார். யாரும் இறக்கவில்லை என்று முதல் அறிக்கையில் சொல்கிறார்கள். பிறகு இரண்டாவது அறிக்கையில் மனோ கரன் என்பவர் இறந்திருக்கிறார் என்து சொல்கிறார். அதற்குக் காரணம் என்ன சொலகிறார்கள் என்றால், அவன் சாப்பிட வில்லை, ஈரல் மோசமாக இருந்தது என்று சொல்கிறார்கள். இது நியாயம் தானா ? அதுவும் சென்னையில் உள்ள ஒருவன் இரவு சாப்பிடாமல் எப்படி வந்திருக்க முடியும். தஞ்சாவூரி லிருந்து வந்திருக்கிறான். என்று சொன்னாலும், அவன் சாப்பிடாமல் வந்திருப்பான் ஆனால் சென்னையில் இருக்கிற வர்கள் அதுவும் போலீசுக்கு ஆள் எடுக்கும்போது, வெயிட் எல்லாம் இருக்கவேண்டும் என்று பூவம்பழம் எல்லாம் சாப் பிட்டுத்தான் வருவார்கள். இப்படி வருகிற போது ஒரு போலீஸ் கமிஷனர் தகுந்த பாதுகாப்பு கொடுக்காமல், இறந்த பிறகு இப்படிப்பட்ட அறிக்கை விடுவது, பிள்ளையை இழந்த அந்தப் பெற்றோர்களுக்கு மிகுந்த வேதனையைக் கொடுப்ப தோடு மட்டுமல்லாமல், தமிழக மக்களிடையே உண்மையை மறைப்பதாகும். அப்படிப்பட்ட போலீஸ் கமிஷனரை கண்டிக்க வேண்டும். சர்க்கார் அப்பேர்ப்பட்ட அதிகாரியை எல்லாம் உடனடியாக நீக்கவேண்டும். இப்படிப்பட்ட தவறான அறிக் கையை விடக்கூடாது. இறந்து போன அந்த பையனின்

தந்தை ஒய்வு பெற்ற ஊழியர். அந்தக் குடும்பத்தைக் காப்பாற்றக்கூடிய நிலைமையில் உள்ள அந்த 22 வயது இளைஞன் இப்படி போலீசினுடைய கொடுமையால் இறந்திருக்கின்றபோது, சர்க்கார் எந்தவிதமான நிபந்தனையும் சொல்லாமல், 50 ஆயிரம் ரூபாய் அந்தக் குடும்பத்திற்குக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு போலீஸ் கமிஷனர் இறந்த அந்த குடும்பத்திற்கு அனுதாபம் தெரிவித்து இருக்கவேண்டும். இறந்துவிட்ட அந்தப் பையனுக்கு அனுதாபத்தைத் தெரிவிக்காமல், இப்படி ஒரு தவறான நடவடிக்கையில் ஈடுபட்டு இருக்கிறார். இப்படிப்பட்ட கொடுமைக்கு யார் ஆளானாலும், உடனே போலீஸ் அதிகாரிகள் டாக்டர்களை அனுப்புகிறார்கள். அவர்கள் இப்படித்தான் இறந்தான் என்று ஒரு சர்ட்டிபிகேட்டைக் கொடுக்கிறார்கள். இதுபோன்றுதான் போலீசினுடைய நடவடிக்கைகள் நடந்து கொண்டு இருக்கின்றன. என்ன நடந்தது என்பதை நாம் தீர்க்கமாக தெரிந்து கொள்ளவேண்டும் என்றால் ஒரு நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். எதிர்க்கட்சியில் இருக்கிற நாங்கள் சொல்வதும், இதைப்பற்றி போலீஸ் அதிகாரிகள் உங்களுக்கு எழுதிக் கொடுப்பதும், அதை நீங்கள் இந்தச் சபையில் படிப்பதும் ஒரு வாடிக்கையாக இருக்கிறது. எனவே இப்படிப்பட்ட கொடுமையான சம்பவம் நடைபெறுவதற்குக் காரணமாக இருந்த போலீஸ் அதிகாரிகளைப் பற்றியும், எந்தச் சூழ்நிலையில் அந்த பையன் இறந்தான் என்பதையும், அதற்கான காரணங்களைத் தெரிந்து கொள்வதற்காக, ஒரு நீதி விசாரணைக் கமிஷனை நியமிக்க வேண்டும் என்று அதைப்பற்றி விரிவாக விவாதிக்க வேண்டி இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுகிறேன்.

(முற்பகல் 10-20)

**டாக்டர் கே. சௌரிராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள ஒவ்வொருவரும் வரலாற்றிலே இல்லாத அளவுக்கு இன்று வருத்தப்பட வேண்டிய ஒரு சூழ்நிலை கடந்த 30–ஆம் தேதியன்று கான்ஸ்டபிள் உத்தியோகத்திற்காக தேர்விற்கு ஆட்களை அழைத்திருந்த இடத்தில் நடந்த கோர சம்பவத்தினால் ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவின் வரலாற்றிலேயே ஜாலியன் வாலாபாக் பற்றியும், பிளாக் போல் ஆப் கல்கத்தா என்ற நிகழ்ச்சியைப் பற்றியும், மாப்பிள்ளா டிராஜிடி என்ற நிகழ்ச்சியைப் பற்றியும் படித்திருக்கிறோம். அதுபோல வருங்காலத்திலே சரித்திர ஆசிரியர்கள் ராஜரத்தினம் ஸ்டேடியம் டிராஜிடி என்ற ஒன்றை எழுதாமல் இருக்க வேண்டுமே என்ற எண்ணத்துடன், இந்த அவை அந்த நிகழ்ச்சிகளைப் புரிந்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன், ஒத்திவைப்புத் தீர்மானத்தில் அதை விவாதித்துக் கொண்டிக்கிறோம்.





நாவலர் அவர்கள் எனக்கு முன்னால் எடுத்துச் சொன்னார்கள். 18 வயது முதல் 30 வயது வரை உள்ளவர்கள், தமிழகத்தில் உள்ள ஒட்டுமொத்தமான ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கு என்று, அந்த அடிப்படையிலே பார்க்கிறபோது தமிழகத்திலே இளைஞர் சமுதாயத்தினர் கிட்டத்தட்ட 1 கோடி பேர்கள் இருக்கிறார்கள். 1,200 கான்ஸ்டபிள் உத்தியோகத்திற்காக விண்ணப்பம் செய்கின்றவர்கள் போலிசின் கூற்றுப்படி 8 ஆயிரம், நமக்கு வந்த தகவல்படி 20 ஆயிரம், நாங்கள் எல்லாம் சிறுவர்களாக இருந்தபோது போலீஸ்காரன் உத்தியோகம் என்று சொன்னால் நாங்கள் அதை சட்டை செய்ய மாட்டோம். இன்னும் சொல்லப் போனால், வேடிக்கையாக கிண்டல் பண்ணி பேசுகிறபோது, “டுடுடுடு துப்பாக்கி, போலீஸ்காரன் பெண்டாட்டி” என்று ஒருவரை ஒருவர் விளையாட்டாக கிண்டல் பண்ணிக் கொள்வோம். ஆனால் இன்றைக்கு வேலை கொடு அல்லது சோறு போடு என்று இளம் தலைமுறையினர், 20ஆயிரம் கான்ஸ்டபிள் உத்தியோகத்திற்காக போராடிக் கொண்டிருந்த போது (குறுக்கீடு)

It is not an unparliamentary word. எங்களுடைய மாவட்டத்தில் வழக்கத்தில் இருப்பதுதான் அந்தச் சொல் உங்களுடைய பக்கத்தில் இருக்காது, தஞ்சாவூர் மாவட்டத்தில் அந்தச் சொல் பழக்கமான ஒன்று. நாவலர் அவர்கள் எங்களுடைய மாவட்டத்தைச் சார்ந்தவர் தான். அவருக்கு நன்றாகத் தெரியும்.

You hould sknow the writings on the wall. தமிழகத்திலே வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கும் இளைஞர்கள் லட்சக்கணக்கான பேர்கள் இருக்கிறார்கள் என்பதை நாம் புரிந்துக் கொள்ள வேண்டும். படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்கள் 1200 கான்ஸ்டபிள் வேலைக்காக, 20 ஆயிரம் இளைஞர்கள், உயிரைக் கையிலே பிடித்துக் கொண்டு, இன்டர்வியூவிற்கு வந்து நின்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால்..........

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தமிழகத்தில் மட்டும் தானா..........

**டாக்டர் கே. சௌரிராஜன் :** இப்பொழுது நாம் தமிழகத்தைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறோம். நீங்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருப்பதும் தமிழகத்தில் மாத்திரம் அல்லாது மற்ற மாநிலங்களில் அல்ல......

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே, லட்சக் கணக்கிலே படித்த இளைஞர்கள் வேலையில்லாமல் இருப்பது தமிழகத்தில் மட்டும் தானா? வேறு எங்கேயும் இல்லையா என்றுதான் கேட்டேன்.

டாக்டர் கே. சௌரிராஜன் : எனக்குத் தெரிந்தவரையில் தமிழகத்தில் மட்டும் தான். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடிக்கடி டெல்லிக்குச் சென்று வந்துக் கொண்டிருப்பவர்கள், அவருக்குத் தெரிந்தால் சொல்லலாம்......

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தெரிந்துதான் சொல்கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன் : தெரிந்திருந்தால் அப்பொழுது நீங்களே விவரத்தைச் சொல்லி விடலாம். மற்ற மாநிலங் களிலும் இது மாதிரி இருக்கிறது என்று, என்னைக் கேள்வி கேட்க வேண்டிய அவசியம் இல்லை.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : உங்களுக்கு தெரி கிறதா என்றுதான் கேட்டேன் ?

டாக்டர் கே. சௌரிராஜன் : நீங்கள் சொன்னால் தெரிந்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போதும். இத்தோடு இந்த வாதத்தை முடித்துக் கொள்ளுங்கள். சௌரிராஜன் தொடர்ந்து பேசுங்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, டாக்டர் சௌரிராஜன் அவர்களுடைய வாதத்திற்கு வலுவூட்டு வதற்காகத்தான் இதை நான் சொல்கிறேன். ஜாலியன்வாலா பாக் மற்றும் இன்னும் என்னென்னவோ நிகழ்ச்சிகளை பற்றி யெல்லாம் சொன்னார்கள். அத்தோடு முதுகுளத்தூர் நிகழ்ச்சி யையும் சேர்த்துக் கொள்ளலாம் என்று கேட்டுக் கொள் கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன் : தலைவர் அவர்களே, முது குளத்தூர் ஜாதி கலவரம். அது இந்தியாவினுடைய தலை யெழுத்து, வேலை கொடு, சோறு போடு என்று வந்தவர்கள் லத்தி சார்ஜ் செய்து விரட்டுகிறது என்பது இதுவரையில் நடந்ததாக சரித்திரத்திலேயே கிடையாது. சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவது நம்முடைய காவல் துறையினுடைய வேலை. அவர்கள் துறையிலே வேலைக்காக மனு போடுகின்றவர்கள், நேர்முக தேர்விற்கு வருகின்ற இடத்தில், அவர்களாலேயே சட்டம் ஒழுங்கை காப்பாற்ற முடியவில்லை என்று சொன்னால் தமிழகத்திலே உள்ள மக்கள் நம்முடைய காவல் துறையைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். Tthat only shows lack of farsightedness on the part of the Police Go make proper arrangements and to see that the interviews are conducted properly and in an orderly fashion.





ஆகவே அத்தனை பேர்கள் வருவார்கள், வந்திருக்கிறார்கள், எத்தனை கவுண்டர்கள், எத்தனை இடத்தில் டோக்கன் கொடுத்து இன்டர்வியூ செய்யவேண்டும் என்பதையெல்லாம் கொஞ்சம்கூட சிந்தித்துப் பார்க்காமல், பொறுப்பற்றத் தன்மையில் shirking the responsibility—போலீஸ் அதிகாரிகளது தேர்விற்கு ஏற்பாடு செய்தவர்கள் செயல்பட்டு இருக்கிறார்கள் என்பதை நான் நிச்சயமாக இந்த மன்றத்தின் மூலமாக இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர கடமைப் பட்டிருக்கிறேன்.

சட்டம் ஒழுங்கை பாதுகாக்கின்ற இவர்கள், ' நம் நாட்டிலும், மற்ற பகுதிகளிலும் எப்படி சட்டம் ஒழுங்கை பாதுகாக்கப் போகிறார்கள் என்பதைச் சிந்தித்துப்பார்க்கின்ற போது, தமிழக காவல்துறையின் மீது மக்களுக்கு இருக்கின்ற அந்த கான்பிடென்ஸ்—நம்பிக்கை தளர்ந்து போய்விடும் என்ற அந்த காரணத்தினாலேதான் சொல்கிறேன்.

அடுத்தபடியாக எப்போதும் வழக்கமாக பார்க்கின்ற போலீஸ் ரிப்போர்ட்—போஸ்ட் மார்ட்டம் அவர்கள் சொல் கிறார்கள். 8,000 பேர்கள் தேர்வுக்கு வந்தார்கள். Manoharan, aged 22 from Triplicane died due to exhaustion மிகச் சாமர்த்தியமாக டாக்டர்கள் போஸ்ட் மார்ட்டம் சர்ட்டிபிகேட் கொடுத்திருக்கிறார்கள். எக்ஸ்ஹாஷன் என்பது வெகு நாட்களாக சாப்பிடாமல், கடுமையான வேலை செய் தால் அவனுடைய இதயத் துடிப்புகள் நின்றுவிட்டு செத்து விடுவது. ஆனால். இதிலே அவன் நன்றாகச் சாப்பிட்டுவிட்டு கொழுக்கட்டை போல் வந்திருக்கிறான். போலீஸ் தேர்வுக்கு 5 அடி 7 அங்குலம் உயரம் 200 பவுண்ட் எடை வேண்டும், லாங் ஜம்ப் தெரிந்திருக்க வேண்டும், ஹை ஜம்ப் தெரிந்திருக்க வேண்டும் என்று தெரிந்துள்ள ஒரு இளைஞன் தேர்விற்கு வந்திருக்கிறான். அவனால் 24 மணி நேரம் ஒரே இடத்தில் கியூவிலே நிற்க முடியவில்லை, எக்ஸார்ஷனால் செத்து விட்டான் என்று ஒத்துக்கொள்ள முடியாத ஒரு வாதத்தை போஸ்ட் மார்ட்டம் சர்ட்டிபிகேட்டில் இன்றைக்கு சொல்லி யிருக்கிறார்கள். His liver has been damaged. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை பார்க்கின்றபோது எனக்கு சிரிப்புத்தான் வருகிறது. If the liver has been damaged- ஒன்று அவன் ஜாண்டிசினால் போய் இருக்க வேண்டும் அல்லது டாக்சிச் டிரக்சினால் லிவர் டிபெக்ட்டாகி இருக்க வேண்டும். குடிக்கிறவனாக இருந்தால் ஹெல்த் போய் இருக்கணும். போலீஸ் இண்டர்வியூவிற்கு வருகிறேன் என்று சொல்லி வந்தவன், எக்ஸார்ஷனால் இறந்துவிட்டான் என்று சொல்வது It is something incomprehensible. யாருமே நினைத்துப் பார்க்க முடியாதது. ஆகவே அந்த லிவர் டாமேஜாகி இருக்கிறது என்று சொன்னால்

That must have been damaged only due to the lathi charge or due to ome toxine which he has consumed or tear gas or something like that.

ஆகவே, இவைகளை பார்க்கின்ற நேரத்தில், இந்த நிகழ்ச்சியை அரசாங்கம் ஏதோ ஒரு சாதாரண நிகழ்ச்சி என்று எடுத்துக்கொள்ளாமல் இந்த நாட்டினுடைய வருங்காலத்திலே ஏற்படக்கூடிய விளைவுகளை முன்னோடியாக சிந்தித்து இவைகளை தடுக்கவேண்டும். அந்தப் பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது. நீங்களும் நாங்களும் தோழமை கட்சிகளாக நாட்டினுடைய ஆட்சிப் பொறுப்புக்கு வந்திருக்கிறோம். உங்களுக்கு வருகின்ற இழுக்கு எங்களுக்கும் வரும். ஆகவே முன் எச்சரிக்கையாக உங்களுக்கு சொல்ல விரும்புவது Do not be carried away by the post-mortem statements in the Police Stations. இந்த நாட்டிலே வருங்காலத்திலே மக்கள் உங்களைத் தூற்றக்கூடாது என்ற ஆதங்கத்தின் காரணமாக இதற்கு ஒரு நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யுங்கள். எந்தச் சூழ்நிலையில் அந்த இளைஞன் இறந்தான் என்பதற்கு ஒரு நீதி விசாரணை தேவை. இப்படி இவைகளையெல்லாம் நாம் ஒத்துக்கொண்டு போவதால், இந்த நாட்டிலே அமைச்சர்களால் தோந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் இல்லை. போலீஸ்காரர்களால் நடத்தப்படுகின்ற அரசாங்கத்திற்கு அமைச்சர்கள் தலை வணங்கி நிற்கின்ற நிலைமையை உருவாக்க வேண்டாம் என்று சொல்லி இந்த விவாதத்தின் மீது மேலும் பேசவேண்டியிருப்பதால் அவையின் இதர நிகழ்ச்சிகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, காவலர் தேர்விற்காக இராஜரத்தினம் ஸ்டேடியத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியின்போது ஏற்பட்ட அசம்பாவிதத்தை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தை கொண்டு வந்து இங்கே பேசியிருக்கிறார்கள்.

(முற்பகல் 10.30)

இந்தத் தீர்மானத்தைப்பற்றி ஏன் விவாதிக்கவேண்டுமென்பதற்கான அடிப்படைக் காரணங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த அளவிலேயே இல்லாமல் பிரச்சினைகளுக்குள்ளும் நுழைந்து தங்களுக்குக் கிடைத்த தகவல்களை வைத்து தாங்கள் சொல்லலாம் என்ற முறையிலே சொல்லியிருக்கிறார்கள். இங்கே இருக்கிற அத்தனை பேர்களும் தகவலின் அடிப்படையிலேதான் பேசிக்கொண்டிருக்கிறோமே தவிர மாண்புமிகு உறுப்பினர்களோ மற்றவர்களோ யாரும் நேரடியாகக் கண்டு தெரிந்துகொண்டு சொல்கிற நிலையில் இல்லை. அப்படிச் சொல்கிறபோதும்கூட ஒரு நோக்கத்தை அடிப்படையாக வைத்து களங்கம் கற்பிக்கின்ற சயிலே பேசுவது என்பது அவ்வளவு நல்லதல்ல.





ஆனாலும் ராஜரத்தினம் ஸ்டேடியத்தில் காவலர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக 30-ஆம் தேதி கூட்டப்பட்ட அந்தக் கூட்டத்தின் காரணமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. காவல் துறையைப் பற்றி இங்கே கடுமையாக விமர்சித்திருக்கிறார்கள். ஒரு நாட்டிலேயும் சரி, ஒரு மாநிலத்திலேயும் சரி, எந்த ஒரு நிலையிலேயும் சரி, வேண்டுமென்றே தவறு செய்கிறவர்கள் இருக்கத்தான் இருக்கிறார்கள். ஆகவே காவல்துறை முழுவதுமே ஒட்டுமொத்தமாக திறமையற்றுப் பணிபுரிகிறது என்றோ அல்லது சட்டம் ஒழுங்கைக் காப்பதிலே திறனற்று விளங்குகிறது என்றோ ஒட்டுமொத்தமாகச் சொல்வது சரியான முறையல்ல. காவல் துறையைப்பற்றி எடுத்துக் கூறினார்கள், காவல்துறை ராஜ்யம் நடக்கிறதோ என்ற ஐயப்படவேண்டிய அச்ச நிலை இருப்பதாகவும் சொன்னார்கள். காவல் துறையினர் நல்லமுறையிலே செயல்பட்டு வருகிறார்கள், ஆனால் ஒரு சில நிகழ்ச்சிகள் ஆங்காங்கே அவர்களையும் மீறி நம்மையும் மீறி சில இடங்களிலே காவல் துறையினரையே கொல்லக்கூடிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றிருக்கின்றன. திருட்டு வழக்குகளை அவர்கள் கண்டுபிடிக்கச் செல்கிறபோதும் சரி, கள்ளச்சாராயம் காய்ச்சுவோரைப் பிடிக்கப்போகின்றபோதும் சரி குறிப்பிட்ட வழக்குகளில் குற்றவாளிகளைப் பிடிக்கிறபோதும் சரி சில இடங்களில் காவல் துறையினர், காவல் துறையைச் சேர்ந்தவர்கள் கூட கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்ற வரலாற்றை நாம் பார்க்கிறோம். ஆகவே ஒட்டுமொத்தமாக எடுத்துச் சொல்வது சரியல்ல. அதிலே இருக்கிற நூற்றுக்கு நூறும் ஒழுங்காக நடக்கிறார்கள் என்று நான் சொல்ல வரவில்லை. நான் இதை முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். குறிப்பிட்ட குற்றச்சாட்டைச் சொல்லி அந்த வகையிலே கருத்துக்களை எடுத்துச் சொன்னால் பரவாயில்லை. காவல்துறை பற்றிய மானியம் வருகிறபோது பல்வேறு கருத்துக்களை விரிவாக விளக்கமாகப் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. நம் மாநிலத்தில் காவல் துறையில் ஒரு சில தவறுகள் நடக்கலாம். எப்படி நடந்தது எந்த இடத்தில் நடந்தது என்பதைப் பொறுத்து நாம் முடிவு எடுக்கிறோம், அந்த நிலையிலே அரசுக்கே ஐயப்பாடு ஏற்பட்டால் நீதிவிசாரணைக்கு ஏற்பாடு செய்கிறது. சேலத்திலே ஒரு வழக்கை எடுத்துச் சொன்னார்கள். நீதி விசாரணை வைக்கவேண்டும் என்று எண்ணுகிற நேரத்திலே நீதி விசாரணைக்கு உத்திரவிடப்பட்டு உண்மை கண்டுபிடிக்கப்படுகிறது. பல்வேறு சமயங்களிலே நீதி விசாரணை போடப்பட்டிருக்கிறது. திருநெல்வேலியில் நீதி விசாரணை போடப்பட்டு உண்மை கண்டுபிடிக்கப்படவேண்டுமென்று சொன்னார்கள். ஆகவே அந்த வகையிலே எப்போது போடவேண்டுமோ அப்போது அரசு போட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் ஒட்டுமொத்தமாக குற்றச்சாட்டுச் சொல்வது சரியல்ல. அகில இந்திய அளவில் நடைபெற்ற போட்டியில் காவல் துறையினர் தமிழகத்திலே உள்ள எல்லா மாவட்டங்களிலேயும் உள்ள பல்வேறு காவல் துறையின

பிரிவுகள் 17, 18 இனங்களிலே தங்களுடைய திறன், அறிவு, ஆற்றல் செய்து முடிக்கும் திறன் இவைகளிலே நடத்தப்பட்ட போட்டிகளிலே கலந்துகொண்டு தமிழக காவல் துறையினருக்கு அதிகமான பதக்கங்கள், தங்கப்பதக்கங்கள், வெள்ளிப் பதக்கங்கள், வெங்கலப் பதக்கங்கள் ஆகியவற்றைப் பெற்று ஆல் இண்டியா போலீஸ் பேனர் தமிழகத்திற்குக் கிடைத்திருக்கிறது என்பதைப் பற்றி நாம் பெருமைப்படலாம். அப்படிப்பட்ட சாவல் துறையினர் இருக்கிறபோது சில இடங்களிலே அவர்களையும் மீறி நடக்கிறது. இந்தச் சம்பவத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுக்குக் கிடைத்த தகவல் அடிப்படையில் குற்றச்சாட்டாக சொல்வது நல்லதல்ல, எங்களுக்கும் நல்லதல்ல, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் பேசும்போது அமைச்சர்கள் சிபாரிசு மற்றவர்கள் சிபாரிசு என்று சொன்னார்கள். அவர்களுக்குத் தெரிந்ததைச் சொன்னார்கள் எனக்குத் தெரிந்த வரையில் எந்த அமைச்சரும் சிபாரிசு செய்ததாகத் தெரியவில்லை. அப்படியே செய்தாலும் காவல் துறையினர் கேட்கவேண்டிய அவசியம் இல்லை, எந்த ஒரு சிபாரிசையும் அவர்கள் பொருட்படுத்தவேண்டிய அவசியம் இல்லை. 8 ஆயிரம் 10 ஆயிரம் பேர்கள் கூடுகிற இடத்திலே அமைச்சர் சிபாரிசை நீட்டுவதற்கு வாய்ப்பு இல்லை. ஆகவே ஒட்டுமொத்தமாக குற்றச்சாட்டைச் சொல்லி களங்கம் கற்பிப்பது என்பது இந்த அவைக்கும் நல்லதல்ல, எங்களுக்கும் நல்லதல்ல மாண்புமிகு உறுப்பினருக்கும் நல்லதல்ல, உண்மை கண்டு பிடிக்கப்படவேண்டும் என்பதில் உங்களுக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறதோ அந்த அளவுக்கு ஆளுங்கட்சிக்கும் இருக்கிறது. நேர்மை நடைபெறவேண்டும் என்பதில் எங்களுக்குத் தெளிவு இருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் நியாயங்கள் காயப்படுத்தப்படக்கூடாது என்றும் காயங்கள் நியாயப்படுத்தக்கூடாது என்றும் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே பார்க்கிறபோது எங்களுக்குக் கொடுத்த தகவலை நாங்கள் சொல்கிறோம். உங்களுக்குக் கிடைத்த தகவலை நீங்கள் சொல்கிறீர்கள். 10 பேர்கள் இறந்தார்கள் என்று சொல்கிறீர்கள். ஒருவர் தான் இறந்துவிட்டார், அவர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இறந்துவிட்டார் என்று அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வதில் உண்மை இருக்கிறதா? என்பது அதற்காக நடத்தப்படுகின்ற விசாரணையிலிருந்து வருமானால் அதன்மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு ஆயத்தமாக இருக்கிறது. காவல்துறை எனக்கு இங்கே கொடுத்து இருக்கிற தகவல்படி, அரசுக்கு கொடுத்து இருக்கிற தகவல்படி காவல்துறை இயக்குநரின் அறிவிப்பினை ஒட்டி காலியாக உள்ள தோராயமாக 1188 இரண்டாம் நிலை காவலர் பதவிக்கு நேர்முக தேர்வினை 30–3–1985 அன்று காலை 6 மணிக்கு எழும்பூரில் உள்ள ராஜரத்தினம் விளையாட்டு அரங்கில் நடத்த நகர காவல்துறை ஆணையர் அறிவித்து இருக்கிறார்கள். இந்த



அறிவிப்பு பத்திரிகைகளிலும் வெளியாகி இருந்தது. இத்தேர்வினை ஒட்டி உடல் அளவு சரிபார்த்தல், உடல் திறன் தேர்வு, எழுத்து தேர்வு மற்றைய பரிசோதனைக்காக அவர்கள் அழைக்கப்பட்டு இருக்கிறார்கள். சுமார் 8 ஆயிரம் பேர் 29–3–85 அன்று மாலை முதல் சென்னை நகர இராசரத்தினம் விளையாட்டு அரங்கில் குழுமினார்கள். இவர்கள் பெரும் திரளாக வரக்கூடும் என்பதை முன்கூட்டியே அறிந்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து இடையூறு இன்றி கலந்துகொள்ள மர அடைப்புகள் அவர்கள் பதிவு செய்ய 50 பதிவு மையங்கள் அந்த ஸ்டேடியத்தில் செய்யப்பட்டு இருந்ததாகவும் இங்கே சொல்லப்பட்டு இருக்கிறது. சட்டம் ஒழுங்கினைப் பராமரிக்கவும், கூட்டத்தை ஒழுங்குப்படுத்தவும் முன்கூட்டியே தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. 29–3–85 அன்று மாலை முதல் சென்னை ராஜரத்தினம் விளையாட்டு அரங்கில் பலர் குழுமி இருந்தார்கள். அங்கே நெரிசல் ஏற்பட்டது. அங்கே குதிரைப் படை வைத்ததாகவோ, தடியடி செய்ததாகவோ அப்படிப்பட்ட தகவல்கள் எதுவும் வரவில்லை. ஆனால் அதிலே ஒருவர் எண். 21, டாக்டா நடேசன் சாலை, முதல் சந்து, சென்னை–5 என்ற விலாசத்தில் வசிக்கும் கிருஷ்ணன் என்பவரின் மகன் மனோகரன் என்பவர் இவர் முந்தைய நாள் இரவிலிருந்தே வரிசையில் இருந்தார். இவர் அங்கே காத்து இருந்தபோது 30–3–85 காலை 7 மணி அளவுக்கு சோர்வானதன் காரணமாக மயங்கி விழுந்தார் என்றும் அவர் சிகிச்சைக்கு கீழ்ப்பாக்கம் மருத்துவமனைக்கு உடனே அழைத்துச் செல்லப்பட்டார் என்றும் அங்கே அவர் இறந்து விட்டார் என்றும் ஆகவே அந்த வகையில் ஒருவர் இறந்து பட்டார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அங்கே வில்லைகள் கொடுக்கின்ற பணிகள் 8,060 பேருக்கு அடையாள வில்லைகள் கொடுக்கப்பட்டு முடிந்து இருக்கின்றன. ஆக இதில் பெரிய கலவரங்கள் ஏற்பட்டு வில்லைகள் பெறமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே 8,060 பேர்களுக்கு அவர்களை ஒழுங்குபடுத்த அந்த நிலையில் அவர்களுக்கு வில்லைகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. இதன் காரணமாக வேறு யாருக்காவது வில்லைகள் வழங்கப்படாமல் இருக்குமானால், நாங்கள் சென்றுஅந்த வில்லைகளைப்பெறமுடியாத சூழ்நிலையைப் பெற்றுவிட்டோம் என்று அவர்கள் கருதுவார்களானால் இன்னும் ஒரு வாரத்திற்குப் பிறகு மறுபடியும்ஒருநாள் இதுபற்றி அறிவித்து அப்படிப்பட்டவர்கள் பெறுவதற்கு வாய்ப்புகள் செய்து தர இந்த அரசு இருக்கிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களை எடுத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். நான் சொன்னது எனக்கு வந்து இருக்கிற கருத்துக்களின் அடிப்படையில். புலன் விசாரணையும் செய்யச் சொல்லியிருக்கிறோம். அதுமட்டுமல்ல உயர்மட்ட அதிகாரி ஒருவரை வைத்து விசாரணைச் செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஈடுபட்டு இருக்கிறார்கள். அந்த விசாரணையின் அடிப்படையில் உள்ளபடியே நீதி விசாரணை வைத்தால் தான் முழு உண்மையும் கிடைக்கும் என்ற நிலைமை

வருமானால் அதையும் அரசு செய்வதற்கு ஆயத்தமாக இருக்கிறது. அந்த விசாரணைக் குறிப்பு வரட்டும், வந்த உடனே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை கலந்துகொண்டு அதையும் செய்வதற்கு ஆயுத்தமாக இருக்கிறோம். அந்த விசாரணைக் குறிப்புகள் அந்த உயர்மட்ட அதிகாரியிடமிருந்து வரட்டும். உள்ளபடியே எங்களுக்கும் சந்தேகம் இருக்குமானால் அந்த சந்தேகத்திற்கு இடம் தருகின்ற அளவுக்கு யார் நடந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். ஆகவே அந்த முறையில் இந்த அரசு உயர்மட்ட அதிகாரிகளை வைத்து விசாரணை செய்யச் சொல்லியிருக்கிறது. அந்த விசாரணையின் குறிப்புகள் வந்த உடன் தேவைப்பட்டால் நீதி விசாரணை செய்வதற்கு இந்த அரசு ஆயத்தமாக இருக்கிறது, என்ற காரணத்தால் மேலும் இதுபற்றி விவாதிக்க ஒத்தி வைக்கவேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு பிரச்சினை பற்றி....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பிரச்சினை முடிந்து விட்டது. திரும்பவும் அதுபற்றி பேச அனுமதிக்கும் வழக்கம் இல்லை.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Contempt of Court — எப்படி அனுமதித்தீர்கள். அது பற்றி தகவல் சொல்லவில்லை.

(முற்பகல் 10.40)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் ஒரு சட்டப் பிரச்னையைக் கிளப்பியிருக்கிறார்கள். அது என்ன என்பதை முழுவதும் அறியும் சூழ்நிலையில் இப்பொழுது நான் இல்லை. ஆனாலும்கூட, அப்படி கன்டெம்ப்ட் ஆப் கோர்ட் இருந்தால், காவல் துறையினர் இப்படிச் செய்திருப்பார்களா என்ற சந்தேகம் வருகிறது. ஆகவே, இப்பொழுது சட்ட முறைப்படிதான் நடக்கிறது என்று கருதுகிறேன். ஆனாலும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் இந்தப் பிரச்னையை இப்பொழுது எழுப்பியிருப்பதால் அதுபற்றி ஆராய்ந்தறிந்து, சட்டப்படி என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்வதற்கு இந்த அரசு ஆயத்தமாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : ஏற்கனவே போடப்பட்ட பட்டியல் என்னவாயிற்று ?





மண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது வேறு விஷயம். இதையெல்லாம் மானியக் கோரிக்கையிலே விரிவாகவும், விளக்கமாகவும் பேசலாம். திரு. ரகுமான்கான் அவர்கள் ஏற்கனவே நான்கு முறை பேசியிருக்கிறார்கள்; இன்னும் இரண்டு முறை கூட பிறகு பேசலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சரின் விளக்கத்திற்குப்பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

## 3. அறிவிப்புகள்.

### (அ) அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக ஆட்சிக் குழு— உறுப்பினர் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவில் (Syndicate) இச்சட்டமன்றப் பேரவையின் சார்பில் உறுப்பினராய் இருந்த திரு. ஜே.சி.டி. பிரபாகரன், எட்டாவது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்படாததால் அவ்வாட்சிக் குழுவிற்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து ஒருவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் கோரியுள்ளது.

எனவே வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 8–4–1985 திங்கட்கிழமை பிற்பகல் 3–00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 9–4–1985 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3–00 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 10–4–1985 புதன்கிழமை பிற்பகல் 3–00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை ஒன்றுக்கு மேற்படுமாயின் 12–4–1985 வெள்ளிக்கிழமை காலை 9–00 மணிக்கும் பிற்பகல் 1–00 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

[1985 ஏப்ரல் 2

### (ஆ) அரசினர் சட்ட முன்வடிவுகள் (மே. செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு மற்றும் ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்யப்பெற்று பரிந்துரைகள் ஏதுமின்றி திருப்பி அனுப்பப்பட்டதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

1. 1985-ம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 17/1985).
2. 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 18/1985).
3. 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 19/1985).
4. தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1985).
5. தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 21/1985).

## 4. கவன ஈர்ப்புகள்.

### (அ) மாநிலத்தின் பல பகுதிகளில் மக்கள் குடிநீர் பஞ்சத்தால் இன்னலுறுவது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் கே. பி. இராமலிங்கம், திருவாளர்கள் எஸ். ரெத்தினராஜ், ப. தீர்த்தராமன், ஏ. எஸ். ரவீந்திரன், ஜே. ஹேமச்சந்திரன், டி. தீர்த்தகிரி கவுண்டர், ஆ. பிரேம்குமார், வை. பாலச்சந்திரன், டாக்டர் தே. குமாரதாஸ், திருவாளர்கள் மா. சுந்தரதாஸ், துரை கோவிந்தராசன், டாக்டர் க. நல்லமுத்து, திருவாளர்கள் மு. இராமநாதன், பொன். முத்துராமலிங்கம், கு. சுப்பராயன், க. இரா. சின்னராசு, டாக்டர் கே. சமரசம், திருவாளர்கள் டி. எம். வெங்கடாசலம், என். எஸ். வி. சித்தன், எ. தெய்வநாயகம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக்கொண்டு வருவார்.



1985 ஏப்ரல் 2]

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழகத்தில் குறிப்பாக ராசிபுரம், நாகர்கோவில், கல்குளம், அகஸ்தீஸ்வரம், பாலக்கோடு, மொரப்பூர், திருவண்ணாமலை, தக்கலை, குழித்துறை, திண்டுக்கல், பத்மநாபபுரம், குளச்சல், முகுந்தன்கோடு, மெதுகும்மல், களியக்காவிளை, கொல்லங்கோடு, பலுகல், அம்பாசமுத்திரம் மற்றும் சேரன்மாதேவி பகுதிகளிலுள்ள அரிகேசவநல்லூர், பாறையாடி, பத்மநாபபுரம் காலனி, சத்தியா நகர், வீரவநல்லூர், கிளாக்குளம், சுண்ணாம்புக்கல், பிள்ளைக்குளம், பெரம்பலூர், பூதலூர் பகுதிகளிலுள்ள பல இடங்களில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பஞ்சத்தால் மக்கள் படும் இன்னல்கள் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:—

### அறிக்கை.

இவ்வாண்டு தமிழ்நாட்டில் பரவலாக பல மாவட்டங்களிலும் குறிப்பாக உறுப்பினர்கள் குறிப்பிட்ட இடங்களிலும் மழையின் அளவு வழக்கத்தைவிட குறைந்து பெய்துள்ளது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் கீழே சென்றுவிட்டது. சில நீர் நிலைகள் வறண்டு வறட்சி நிலை ஏற்பட்டு குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் சூழ்நிலை எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், பொதுமக்களுக்கு ஏற்படும் குடிநீர் பிரச்சனையைச் சமாளிக்கும் பொருட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் களப்பணியாளர்கள் ஆங்காங்கே மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் குடிநீர் நிலைமையைப் பற்றி கலந்து பேசி கை பம்புகளுடன் கூடிய ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கத்திட்டம் தீட்டி உள்ளனர். இதன்படி, தமிழகம் முழுவதும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக 7,975 ஆழ்துளைக் கிணறுகள் ஊரகப் பகுதிகளிலும், 1,386 ஆழ்துளைக் கிணறுகள் பேரூராட்சிகளிலும், 447 ஆழ்துளைக் கிணறுகள் நகராட்சியிலும், 4 ஆழ்துளைக் கிணறுகள் நகரியங்களிலும், 3 கட்டங்களில் தேவைக்குத் தக்கவாறு ரூ. 25.032 கோடி செலவில் அமைக்க வாரியம் திட்டங்களைப் பரிசீலனை செய்துகொண்டு இருக்கிறது. இதில் சேலம் மாவட்டத்தில் ஊராட்சிகள் சேர்க்கப்பட்டு உள்ளன, சேலம் மாவட்டத்தில் நகராட்சி, பேரூராட்சிகளில் போடவேண்டிய ஆழ்துளைக் கிணறுகள் பற்றி விவரம் சேகரிக்கப் பட்டு அவைகளும் சேர்க்கப்படும். தமிழக அரசின் ஆணைப்படி தேவைக்குத் தக்கவாறு மாவட்ட ஆட்சியரின் ஆலோசனைப்படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆழ்துளைக் கிணறுகளைப் போர்க்கால அடிப்படையில் அமைத்துக் கொடுக்கும்.

இத் திட்டத்தின்படி, தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் பகுதியில் 40 ஆழ் துளைக் கிணறுகளும், தர்மபுரி மாவட்டம் மொரப்பூர் ஒன்றியத்தில் 21 ஆழ்துளைக் கிணறுகளும், பெரம்பலூர் பேரூராட்சியில் 18 ஆழ்துளைக் கிணறுகளும், நாகர்கோவில், தக்கலை, குழித்துறை, சேரன்மாதேவி, வீரவநல்லூர் ஆகிய நகர் பகுதிகளில் தலா 7 ஆழ்துளைக் கிணறுகளும், ராசிபுரம் நகராட்சிப் பகுதியில் 44 ஆழ்துளைக் கிணறுகளும், திருவண்ணாமலையில் 6 ஆழ்துளைக் கிணறுகளும் மற்றும் பாலக்கோடு ஒன்றியத்தில் 5 ஆழ்துளைக் கிணறுகளும், மேலும் கல்குளம், அகத்தீஸ்வரம், பத்மநாபபுரம், குளச்சல், முகுந்தன்கோடு, விளவன்கோடு பகுதிகள் அடங்கிய கன்னியாகுமரி மாவட்டத்தில் 40 ஆழ்துளைக் கிணறுகளும் அம்பாசமுத்திரம் ஒன்றியத்தில் 8 ஆழ்துளைக் கிணறுகளும், திருநெல்வேலி மாவட்டம் முழுவதும் 652 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க களப்பணியாளர்களிடம் இருந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அறிக்கை கிடைக்கப்பெற்று, அது பரிசிலனையில் உள்ளது. மேலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் குழித்துறை ஆற்று கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்று குளச்சல் நகராட்சிக்கும் 8 பேரூராட்சிகள் மற்றும் விளவன்கோடு வட்டம் 11 வழித்தட சிற்றூர்களுக்கும் பயன் அளிக்கத்தக்க வகையில் ரூ. 400 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் தயார் செய்யப்பட்டு வருகிறது. இத் திட்டம் நிறைவேற்றப்படும்போது இப்பகுதி வாழ் பொதுமக்களுக்கு நிரந்தர குடிநீர் வசதி கிடைக்கும்.

மேலும், திண்டுக்கல் நகராட்சிப் பகுதியில் அரசு ஆணைப்படி குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்க நகராட்சி 12 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க ஆவன செய்து கொண்டு இருக்கிறது. பாலக்கோடு பேரூராட்சியில் குடிநீர் பஞ்சம் தற்சமயம் இல்லை என அறிக்கை வந்துள்ளது.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் 44 ஆழ்துளைக் கிணறுகள், இன்னும் இதர பகுதிகளிலும் ஆழ்துளைக் கிணறுகள் அமைப்பதற்குப் பரிசிலனையில் உள்ளதாக அறிவித்திருப்பதற்காக நன்றி சொல்கிறேன்.

ஆனால் அதே நேரத்தில் ராசிபுரம் நகராட்சிப் பகுதிக்கு பனமரத்துப்பட்டி ஏரியிலிருந்து குடிதண்ணீர் கொண்டுவரப்படுகிறது. அந்த ஏரியில் தண்ணீர் வற்றிவிட்ட காரணத்தால் குடிநீர்ப் பஞ்சம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றது. அதிலே இருந்து தண்ணீர் எடுத்து வருவதற்காக பயன்படுத்தப்படும் மூன்று சேன்ட் ஃபில்ட்டர்ஸ் என்று சொல்லப்படுகின்ற மணல் வடிகட்டிகள் பழுதடைந்திருப்பதால பல காலமாக சேரும், சகதியுமாகத்தான் தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. எனவே அந்த மணல் வடிகட்டிகளைப் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா? அதைப் போலவே சேரன்மாதேவி, வீரவநல்லூர் பகுதியில் விரிவாக்கப்



பட்ட குடிநீர் திட்டத்தில் பல அரிசன மக்கள் வாழ்கின்ற பகுதிகள் எல்லாம் விடப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதிகளும் சேர்த்துக்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி துறை உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது. மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களும் அவரவர்களுடைய தொகுதிகளில் குடி தண்ணீர் தேவையைப் பொறுத்த வரையில் அதற்குரிய பட்டியலை மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மூலமாகவோ அல்லது துறை மூலமாகவோ கொடுத்தால் அரசு அதைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. எஸ். ரெத்தினராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகர்கோயில் நகரசபையில் பல்வேறு பகுதிகளில் தண்ணீரே கிடைக்காமல் கடந்த 15 நாட்களாகத் தண்ணீர், குடம் ஓரு ரூபாய்க்கு விற்கின்ற நிலை இருந்து வருகிறது. ஒருநாள் விட்டு ஓருநாள்தான் வினியோகம் என்று வானொலியில் அறிவிக்கப்பட்டும் அந்த ஒருநாள் விட்டு ஒருநாள் கூட ஒன்றரை மணி நேரம் வினியோகம் செய்யப்பட்டு வருவதால் பல்வேறு பகுதிகளுக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை என்று தொலைபேசியின் மூலமாக எனக்குப் புகார் கொடுக்கப் பட்டிருக்கின்றது. சிதம்பர நகர் பகுதியிலே சிதம்பரநாத நாடார் தெரு, பட்டசாலியன்விளை சைமன் காலனி, கிறிஸ்து நகர், இருளப்பபுரம், வேத நகர், மறவன் குடியிருப்பு ஆகிய பல்வேறு பகுதிகளில் தண்ணீர் கிடைக்கவில்லை. அங்கே குழாய்களில் 15 தினங்களாகத் தண்ணீர் போகாமல் லாரிகளில் வினியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால் அந்த லாரிகளில் வருகின்ற தண்ணீர் எந்த நேரத்தில் வரும் என்று மக்களுக்குத் தெரியாமல் அங்கே அதிகாரத்தை கையிலே வைத்துக் கொண்டிருக்கிற சிலருக்குத்தான் தண்ணீர் கிடைக்கின்ற நிலைமை இருக்கிறது. அரசின் கடைநிலை ஊழியர்களுக்கும், மற்றும் அரசு ஊழியர்களாக இருப்பவர்களுக்கும் தண்ணீர் கிடைக்காமல் மிகுந்த சிரமப்படுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

திரு. எஸ். ரெத்தினராஜ் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது கவன ஈர்ப்புத் தீர்மானமாக இருப்பதால் முழுத் தகவலையும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வண்டும் என்பதால்தான் சற்று விளக்கமாகக் கூறவேண்டிருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கவன ஈர்ப்பில் தகவலுக்காகக் கேட்கின்றபோது, சுருக்கமாகக் கேள்வியைக் கேட்க வேண்டும்.

**திரு. எஸ். ரெத்தினராஜ் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சற்று விளக்கமாகக் கேள்வியைக் கேட்டால் பதில் சொல்வதற்கு உதவியாக இருக்கும் என்ற வகையில் எக்ஸ்ப்ளனேட்டரி கொஸ்டின் என்ற வகையில் கேட்கிறேன். அமைச்சர் அவர்கள் வைத்திருக்கின்ற அறிக்கையில் நாகர்கோயில் நகரசபைக்குத் தண்ணீர் வருகின்ற குழாய்கள் ரிப்பேர் செய்யப்பட்டதாக இல்லை. மேலும் 1980-ஆம் ஆண்டு வாங்கப்பட்ட ஜெனரேட்டரில் மின்சாரம் வருவதில் தடை ஏற்படுவதால் 1982-ஆம் ஆண்டில் அதைப் புதுப்பிப்பதற்கு ஒப்பந்தம் கொடுக்கப்பட்டு அந்த ஒப்பந்தம் இன்னும் நடைபெறாமல் இப்படி பல்வேறு விதமான குளறுபடிகள் இருப்பதன் காரணத்தால் நாகர்கோவிலுக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. இரண்டு குழாய்க் கிணறுகள் போடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு............

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் சுருக்கமாகக் கேள்வி கேட்கவேண்டுமே தவிர ஒரு பிரசங்கம் போல் விளக்கமாகப் பேசிக்கொண்டே இருக்கக் கூடாது.

**திரு. எஸ். ரெத்தினராஜ் :** அதே போல் குமரி மாவட்டத்தில் முழுக்க, முழுக்க எல்லா ஒன்றியங்களிலும் தண்ணீர் தட்டுப்பாடு இருந்துகொண்டிருக்கிறது. லாரிகளில் போதுமான அளவுக்குத் தண்ணீர் விநியோகிக்கப்படவில்லை. குழாய்க் கிணறுகளின் மூலமாக தண்ணீர் பெறுகின்ற நங்கூரான் போன்ற பல்வேறு பகுதிகளில் தண்ணீர் வரவில்லை. எனவே இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் போக்கவும், நகரசபை உடனடியாகத் தண்ணீர் தருவதற்குத் தவறி இருப்பதைப் போக்கவும், ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்பதோடு அனைத்துப் பகுதிகளுக்கும், குழாய்களின் மூலமாகத் தினசரி தண்ணீர் வினியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜெனரேட்டர் பொருத்தவேண்டும் என்று சொல்வதிலிருந்தே மின் பற்றாக்குறை காரணமாகச் சில இடங்களில் தண்ணீர் வழங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது என்பது தெரிகின்றது. அதனால்தான் லாரிகளின் மூலமாக வழங்குகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் சொல்லப்பட்ட கருத்தின் அடிப்படையில் அரசு உரிய அலுவலர்களுக்கு ஆணை பிறப்பிக்கத் தயாராக இருக்கிறது என்று இந்த அறிக்கையிலேயே சொல்லி இருக்கிறேன். குழித்துறை ஆற்றிலிருந்து ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த 400 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்ற செய்தியை நான் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அவர்கள் எடுத்துச் சொன்ன குறிப்புக்களைக் கவனத்தில் கொண்டு அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





(முற்பகல் 10.50)

**திரு. ப. தீர்த்தராமன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் இருக்கிற 10 சட்டமன்ற உறுப்பினர்களில் 5 சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தப் பிரச்சினையைக் குறித்து இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். தர்மபுரி மாவட்டம் மிகவும் வறட்சியான மாவட்டம். அங்கே குடிநீர்ப் பிரச்னை மிகக் கடுமையாக இருக்கிறது என்பதை அங்குள்ள அதிகாரிகளுக்கு நாங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அங்கே எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து நமது அமைச்சர் அவர்கள் ஒரு குறிப்பினை இங்கே தந்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதியான பாலக்கோடு ஒன்றியத்தில் மட்டும் 50 கிராமப் பஞ்சாயத்துக்களும், 4 நகரப் பஞ்சாயத்துக்களும் இருக்கின்றன. இவ்வளவு பெரிய ஒன்றியத்திற்கு ஒதுக்கப்பட்ட ஆழ்துளைக் கிணறுகள் 5 மட்டும் தான். என்பதை அமைச்சருடைய கவனத்திற்கு மீண்டும் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே இருக்கிற சுமார் 350 கிராமங்களில் 140-க்கு மேற்பட்ட கிராமங்களிலே குடிநீர் பிரச்னை கடுமையாக இருப்பது குறித்து இரண்டு மாதங்களுக்கு முன்பு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு முழுமையான விவரம் கொடுத்திருக்கிறோம். ஆனால், அது குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அது குறித்து அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ? அந்த மாவட்டத்திலே எல்லாப் பகுதிகளிலும் இந்தப் பிரச்னை இருக்கிறது. ஆகவே, வறட்சி நிவாரண நிதியை அளித்து, அந்த மாவட்டத்தின் குடிநீர்ப் பிரச்னையைப் போக்க அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, 5 ஆழ்துளைக் கிணறுகள் இப்போது அமைக்கப்பட்டிருக்கின்றன என்ற தகவல் குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர, அது ஐந்தோடு ஏற்கக்கூடியது அல்ல. எங்கெங்கே தேவையோ அங்கே உரிய அளவிலே குழாய்க் கிணறுகளை அமைக்க அரசு உரிய நடவடிக்கையை நிச்சயமாக மேற்கொள்ளும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேவைக்குத் தக்கவாறு போர்வெல்ஸ் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ரூ. 400 இலட்சத்திற்கு குழித்துறை ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்துவர ஒரு திட்டம் தீட்டியிருப்பதாக எல்லாம் அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், இன்று

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1985 ஏப்ரல் 2

பிரச்னை என்னவென்றால், ஒன்று போர்வெல் போடுவதற்கோ அல்லது இந்த வாட்டர் சப்ளை திட்டங்களை அமுல் படுத்துவதற்கோ காலதாமதம் செய்வதற்கான வாய்ப்பிருக்கிறது. தமிழகத்திலே இன்று இராமநாதபுரம், திருப்பூர், திண்டுக்கல் போன்ற பல பகுதிகளிலும் அதே போல் கன்னியாகுமரி மாவட்டத்திலே கூட பல பஞ்சாயத்து யூனியன் பகுதிகளிலும் குடிதண்ணீர் கிடைக்கப் படாத ஒரு நிலைமை இருக்கிறது. இந்த அறிக்கையில், கன்னியாகுமரி மாவட்டத்தினைப் பற்றி குறிப்பிட்டிருக்கும் இடங்களுக்கு அப்பால் மேல்புறம், திருவட்டார், கிள்ளியூர், ராசாக்கமங்கலம் போன்ற பல பஞ்சாயத்து யூனியன் பகுதிகளில் கூட, குடி தண்ணீர் கிடைக்காத நிலைமை இருக்கிறது.

ஆகவே, உடனடியாகத் தண்ணீர் கிடைப்பதற்கு லாரிகளிலே தண்ணீர் சப்ளை செய்யவேண்டுமென்று கேட்ட நேரத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் இதற்குப் போதுமான நிதி ஆதாரம் இல்லை என்று சொல்கிறார். அது உண்மையாக இருக்குமானால், கிராமப் பகுதியிலுள்ள மக்களுக்குக் குடிதண்ணீர் விநியோகம் செய்ய நிதி ஒதுக்கிக் கொடுக்கப்படுமா? இன்றைக்கு வறட்சி நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அதைக் கணக்கில் எடுத்து, குளங்களை ஆழப்படுத்த அரசு தேவையான ஏற்பாடுகளைச் செய்யுமா ? சில அதிகாரிகள் விளையாடுகிறார்கள். விருது நகர் மாவட்டம் அருப்புக்கோட்டை வட்டத்திலே உள்ள குருந்தப்பட்டி, சந்தையூர், நல்லூர்பட்டி ஆகிய கிராமங்களிலுள்ள தாழ்த்தப்பட்டோர்களுக்கு குடிதண்ணீர் சப்ளை செய்யப் படாமல் இருக்கிறது. இப்படி குடிதண்ணீர் பெறுவது இவ்வளவு சிரமமாக இருக்கிற நேரத்திலே அதிகாரிகள் ஏனோ, தானோ என்று நடக்கிறார்கள். ஆகவே, உடனடியாக லாரிகளில் சப்ளை செய்ய வேண்டிய இடங்களிலே லாரிகளில் சப்ளை செய்யவும், கிணறுகளைப் போடவேண்டிய இடங்களிலே கிணறுகளைப் போட்டும், குளங்களை ஆழப்படுத்த வேண்டிய இடங்களிலே குளங்களை ஆழப்படுத்துவதற்கும் நிதி ஒதுக்க நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, லாரிகள் மூலமாக நாம் கிராமப்புறங்கள் அனைத்திற்கும் தண்ணீரை கொடுக்கிற அளவிற்கு நிலைமைகளை நிச்சயமாக உருவாக்க முடியாது. எந்தெந்த இடங்களில் நீர் ஆதாரம் இருக்கிறதோ அவற்றை பயன்படுத்தி ஆழ்குழாய் கிணறுகளை அமைக்கவேண்டுமென்றுதான் நாம் திட்டமிட்டு இருக்கிறோம். இந்த வறட்சிக் காலத்திலே குடிதண்ணீர் வழங்கவேண்டுமென்று ஏறத்தாழ 25 கோடி ரூபாய் அளவிலே நாம் திட்டத்தை தயாரித்து இருக்கிறோம். தாழ்த்தப்பட்டவர்கள் குடியிருப்புகள் ஆனாலும் சரி, அல்லது தண்ணீர் தேவைகளுக்குரிய குடியிருப்புகள் எதுவாக இருந்தாலும் சரி, அதிலே நிச்சயமாக பாகுபாடு காட்டாமல் உரிய அளவிலே நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும். அதற்காக போர்க்கால அடிப்படையிலே நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று அரசு, அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பிக்கும்.



1985 ஏப்ரல் 2]

**திரு. வை. பாலச்சந்திரன் :** தலைவர் அவர்களே, தக்கலை ஊராட்சி ஒன்றியம், தக்கலை நகரம், கொல்லங்கோடு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஆளூர் பேரூராட்சிப் பகுதிகளில் கிணறுகள் 80 அடிகள் 100 அடிகள் அளவிற்கு தோண்டப்பட்டும், அடியிலே பாறைகள் இருக்கின்றன என்று சொல்லப்பட்டு அந்த வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன. அந்தப் பாறைகளை உடைப்பதற்கோ அல்லது அந்தப் பாறைகளை போரிங் செய்வதற்கோ இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, தண்ணீர் ஆதாரம் இருக்குமென்று அரசு கருதுமானால் அந்தப் பாறைகளை உடைத்தெறிந்து நாம் தண்ணீர் கொடுப்பதற்கான ஏற்பாட்டைச் செய்வோம். நீர் ஆதாரம் இல்லாத இடமாக இருந்தால் நாம் வீணாக சிரமப்பட்டு பலனில்லை. வேறு இடத்திலே இருக்கிற நீர் ஆதாரத்தைப் பயன்படுத்தி தண்ணீரைக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யும்.

**திரு. பொன் முத்துராமலிங்கம் :** துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன், கவன ஈர்ப்பு தீர்மானத்தில் என் பெயர்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன் இப்போது நீங்கள் கொண்டு வர முடியாது. திருத்தப்பட்ட பேரவை விதிகளின்படி. கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்த உறுப்பினர்களில் 5 உறுப்பினர்களுக்குத் தான் அனுமதியளிக்க வேண்டுமென்று விதி இருக்கிறது,

**திரு. பொன் முத்துராமலிங்கம் :** துணைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானத்தில், மதுரை மாநகரில் தண்ணீர் பற்றாக்குறை என்று கொடுக்கப்பட்டிருக்கிறது என்னுடைய பெயரால். மதுரை மாநகரில் தண்ணீர் பற்றாக்குறை என்பது குறிப்பிடப் படாமல், என் பெயர் மட்டும் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டால் படிப்பவர்கள் என்ன நினைப்பார்கள் ? மதுரை மாநகரைப் பற்றி பேசாமல் எங்கெங்கோ இருக்கிற ஊர்களைப் பற்றி பேசுகிறாரே என்று என் தொகுதி மக்கள் நினைக்க மாட்டார்களா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** யாரும் அப்படி நினைக்க மாட்டார்கள். இதற்கு காரணம் இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானம் துறையில் அனுமதிக்கப்பட்ட பிறகு தான் நீங்கள் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். ஆகவே உங்கள் பெயரையும் இதில் சேர்க்க வேண்டுமென்று துறையினர் சேர்த்திருக்கிறார்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** துணைத் தலைவர் அவர்களே, பல்வேறு உறுப்பினர்கள் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். நானும் கொடுத்திருக்கிறேன். அந்தந்தப் பகுதிகளைக் குறித்து தான் நாங்கள் அறிவிப்புகள் கொடுக்கிறோம். ஏற்கனவே கொடு

த்தவர்களை மட்டும் எடுத்துக் கொண்டு, எங்கள் பெயர்களையும் அதில் சேர்த்து, நாங்கள் கொடுத்த பகுதிகளை குறிப்பிடவில்லையென்றால் அது சரியாக இருக்காது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைத்தான் சுட்டிக் காட்டுகிறார்கள். அந்தப் பகுதிகளைச் சேர்த்திருந்தால் இந்தப் பிரச்னை வந்திருக்காது. எதிர்காலத்திலாவது அப்படி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : நாம் விதிகளின்படி தான் அவையை நடத்துகிறோம். இதில் ஏதாவது மாற்றம் வேண்டுமானால் உங்கள் தலைவர் மூலமாக அதற்கான ஏற்பாட்டைச் செய்யுங்கள்.

## (ஆ) தூத்துக்குடி பழைய துறைமுகத்தில் பணியாற்றி வந்த படகுத் தொழிலாளர்கள் புதிய துறைமுகம் உருவாக்கப்பட்டுள்ளதால் பாதிக்கப்பெற்றுள்ள நிலை.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ''தூத்துக்குடி பழைய துறைமுகத்தில் பரம்பரையாக பணியில் ஈடுபட்டிருந்த சுமார் 500 தொழிலாளர்கள் புதிய துறைமுகம் உருவாக்கப்பட்டதிலிருந்து தங்கள் தொழிலை இழந்துள்ளதால் மார்ச் மாதம் 15-ம் தேதி முதல் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்துள்ளமையால் அந்தப் பகுதியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

முன்னர் தூத்துக்குடி சிறு துறைமுகம் தமிழ்நாடு துறைமுகத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பொழுது, படகுத் தொழிலாளர்கள் எவரும் மாநிலத் துறைமுகத் துறையினால் பணி அமர்த்தப்படவில்லை. அவர்கள் படகு உரிமையாளர்களாலும், படகு உபயோகிப்பாளர்களாலும் தேவையான சமயங்களில் தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்ட தனிப்பட்ட பணியாளர்கள் ஆவர்.



2. அதன் பிறகு தூத்துச்குடி சிறு துறைமுகம் 1-4-79 முதல் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள தூத்துக்குடிப் புதிய துறைமுகத்துடன் இணைக்கப்பட்டது. இதன் நிருவாகத் தலைவர் தூத்துக்குடித் துறைமுகப் பொறுப்புக் கழகத் தலைவர் (Chairman, Tuticorin Port Trust) ஆவார். இந்தச் சிறு துறைமுகம் அவ்வாறு இணைக்கப்பட்ட வேளையிலும் தமிழ்நாடு துறைமுகத் துறை இந்தத் தொழிலாளர்களைப் பெரிய துறைமுகத்தில் இணைக்கவும் இல்லை. ஏனெனில் அவர்கள் தனிப்பட்ட தொழில்ாளர்களாக—தமிழ்நாடு துறைமுகத் துறையின் கீழ் வராதவர்களாக இருந்தனர்.

3. சென்னையில் உள்ள அண்ணா தொழிற் சங்கத்துடன் இணைக்கப்பட்ட அண்ணா துறைமுக கடல் (படகு) தொழிலாளர்கள் சங்கம் 1-3-85ஆம் நாளிட்ட தனது கடிதத்தில் தங்களுடைய இடர்பாடுகள் பற்றியும் பின்வரும் கோரிக்கைகள் பற்றியும் குறிப்பிட்டு, அதனை புது டில்லியிலுள்ள கப்பல் போக்குவரத்து அமைச்சருக்கு அனுப்பப் பட்டது என தூத்துக்குடி துறைமுகத்தில் தலைவர் தெரிவித்துள்ளார்.

(1) இச்சங்கப் பணியாளர் மேற் கொண்டுள்ள படகுக் கட்டும் தொழிலை அரசு எடுத்து நடத்த வேண்டும் என்றும் பிற இனங்களில் செய்து வருவது போல் இப் பணியை தேசிய மயமாக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(2) பயணக் கப்பலில் பணி புரியும் படகுத் தொழிலாளர்களை அரசு மேற்கொள்வதோடு தூத்துக்குடி கப்பலில் பாரம் ஏற்றி இறக்குவோர் சங்கத்தின் மூலம் பிற தொழிலாளர்களுக்கு நிதியுதவி அளிப்பது போலவே இத் தொழிலாளர்களுக்கு அளிக்கப் பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கப்பல்கள் துறைமுகத்திற்கு உள்ளே வராமல் கடலிலேயே நங்கூரம் பாய்ச்சி, சரக்குகள் சிறு படகுகள் மூலமாக ஏற்றுவதும் இறக்குவதும் உண்டு. சரக்குகளை ஏற்றி-இறக்கும் முகவர்கள், தங்களுக்கு எத்தனை படகுகள் தேவைப் படுகின்றன என்பதை தனியார் உரிமையாளர்களிடம் தெரிவிக்கின்றனர். படகுகள், கப்பல்களிலிருந்து சரக்குகளை இறக்கி தோணித் துறைக்கு கொண்டு செல்கின்றன. படகுகள் சுமை தாங்கும் திறனளவு 150 முதல் 200 டன் ஆகும். சரக்குக் கட்டண விதத்தை படகு உரிமையாளர்கள், அந்தப் படகோட்டியுடனும் சரக்குகளை ஏற்றி-இறக்கும் முகவர்களுடனும் கலந்து ஆலோசித்து முடிவு செய்கின்றனர். இவ்வாறு கிடைக்கக் கூடிய சரக்குக் கட்டணத்தை படகு உரிமையாளர்களும் படகோட்டிகளும் 50 : 50 என்ற அடிப்படையில் பகிர்ந்து கொள்கின்றனர்.

4. தற்போதைய தூத்துக்குடி துறைமுகம், உருவாக்கப் படுவதற்கு முன், பழைய துறைமுகத்தில், தொழிற்சாலைகள் மற்றும் ரெயில்வேக்களுக்குத் தேவையான நிலக்கரி மற்றும் உப்பு

போன்ற பொருட்களை ஏற்றி இறக்கும் பணி அங்குள்ள தொழிலாளர்களால் கையாளப்பட்டு வந்தது. படகு உரிமையாளக்களும் படகு தொழிலாளர்களும் தங்களுக்குள் செய்து கொண்ட ஒப்பந்தப்படி இத்தகைய சரக்குகள் யாவும் தொடர்ந்து பழைய துறைமுகப் பகுதியிலே கையாளப்பட வேண்டும்.

5. 1981-ம் ஆண்டு முதல், துறைமுகத்தில் சரக்கு ஏற்றி இறக்கும் தொழிலாளர்கள் தொழில் தாவா மூலம், தங்களுக்குள்ளாக ஒரு சங்கம் ஏற்படுத்திக் கொண்டு, நாட்டிலுள்ள பெரிய துறைமுகங்களில் வாங்குவது போன்று அதிக அளவில் சரக்குக் கூலி போன்ற சில பயன்களைப் பெற்றனர். தவிரவும் படகுச் சொந்தக்காரர்களும் படகுத் துறை தொழிலாளர்களுமாகச் சேர்ந்து சரக்குக் கட்டணம் மற்றும் இதர இனங்களில் கட்டணத்தை அதிகரித்ததின் விளைவாக சமீப காலத்தில் கப்பலிலிருந்து படகுகள் மூலமாக சரக்குகளை எடுத்துச் செல்லும் செலவினை கணிசமான அளவுக்கு உயர்த்தியுள்ளனர். மேற் குறிப்பிட்ட காரணங்களாலும், பெரிய கப்பல்கள் தங்குவதற்கும் சரக்குப் போக்குவரத்திற்கும், புதிய துறைமுகத்தில் (Major Port) வசதிகள் உள்ளதால் பெரும் பாலான கப்பல் சொந்தக்காரர்கள் புதிய துறைமுகத்தையே விரும்புகின்றனர். இதனால் பழைய துறைமுகத்தில் படகுப் போக்குவரத்து வெகுவாக குறைந்துள்ளது. முன்பு பழைய துறைமுகத்தில் (Old Port) ஆண்டு தோறும் 8 இலட்சம் டன் சரக்குகள் கையாளப்பட்டு வந்தன. தற்போது ஏறத்தாழ 2 இலட்சம் டன் சரக்குகள் கையாளப்பட்டு வருகின்றன. படகுப் போக்குவரத்து குறைந்துள்ளதால், படகு தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்பு கணிசமாகக் குறைந்து விட்டது. இச்சூழ் நிலையில் கப்பல் சொந்தக்காரர்களை துறைமுகத்தில் பழைய பகுதியைத் தான் பயன்படுத்த வேண்டும் என்று அறுதியிட்டுச் சொல்வதற்கில்லையென தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழகம் தெரிவித்துள்ளது.

6. மேலும், பழைய படகுத் தொழிலை தேசிய மயமாக்குவதோ, அல்லது அரசு ஏற்று நடத்துவதோ படகுத் சொந்தக்காரர்களுடன் அரசு கலந்தாலேசித்து கொள்கையளவில் முடிவெடுக்கப்பட வேண்டிய பிரச்சினையாகுமென்றும், இதற்கு படகு உரிமையாளர்கள் விருப்பம் தெரிவிப்பார்களா என்ற ஐயப்பாடு உள்ளதென்றும், தவிர படகுத் தொழிலை தேசியமயமாக்குவதால் படகு உரிமையாளர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென்றும், படகுகளும் நல்ல நிலையில் இல்லையென்பதாலும், தூத்துக்குடி துறைமுகத்தின் பொருளாதார நிலையையும் கருத்திற்கொண்டு பார்க்கும்போது, இத்தொழிலை தூத்துக்குடி துறைமுகப் பொறுப்பு கழகமே ஏற்று நடத்துவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லையென தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புச் கழகத் தலைவர் தெரிவித்துள்ளார். படகுத் தொழிலாளர்களை துறைமுகக் கழகமே ஏற்றுக் கொள்வதைப் பற்றி பரிசிலிக்கும் போது



படகு உரிமையாளர்களுக்கும் படகுத் தொழிலாளர்கள் கூட்டாக தொழிலை நடத்தி வருவதால், தொழிலாளர்களுக்கு போதிய வேலை வாய்ப்பு தருவது படகு உரிமையாளர்களின் பொறுப்பாகுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். எனவே பழைய துறைமுகத்தில் (பகுதி-B) சரக்குகளை ஏற்றி இறக்க பயன்படும் படகுத் தொழிலையோ அல்லது அதில் பணியாற்றும் படகுத் தொழிலாளர்களையோ தங்களுடைய நிர்வாகப் பொறுப்பில் ஏற்று நடத்துவதற்கில்லையென்று தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழகத் தலைவர் அறிவித்துள்ளார்.

7. தூத்துக்குடி துறைமுகத்தில் தற்போது கோரிக்கைகள் விடுத்துள்ள அண்ணா துறைமுக கடல்/படகு தொழிலாளர்கள் சங்கத்தைத் தவிர, தூத்துக்குடி துறைமுகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் போன்ற இதர சிறு சங்கங்களும் உள்ளன. ஆனால் இவை யாவும் தங்களிடையே உள்ள போட்டா போட்டி சர்ச்சைகள் காரணமாக இணைந்து செயல்படவில்லை. தவிர இச்சங்கங்கள் படகுத் தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவு தெரிவிப்பதாகவும் தெரியவில்லை. இவை தவிர, படகு மற்றும் பாய்மரக் கப்பல் உரிமையாளர் சங்கங்களிடையிலும், உள்ள சர்ச்சை, போட்டோ போட்டி காரணமாக பிணைப்பேதும் இல்லை. இவை யாவும், துறைமுகம் B.பகுதியில் (பழைய துறைமுகம்) படகுத் தொழிலாளர்களின் பணியை வெகுவாகப் பாதித்துள்ளன.

8. இந்தப் படகுத் தொழிலாளர்களின் கோரிக்கைகள் பற்றி கவனிக்கும் பொறுப்பு தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழகத் தலைவரையே சார்ந்ததாகும். எனினும், இவர்களுடைய கோரிக்கைகள் துறைமுக நிர்வாகத்தினரால் ஏற்கப் படாத நிலையில், தூத்துக்குடி துறைமுகம் B-பகுதியை (Zone-B) (பழைய துறைமுகம்) துறைமுகத்திலிருந்து பிரித்து அதனை மீண்டும் மாநிலத் துறைமுகத் துறையுடன் இணைப்பதுதான், இப் பிரச்சினைக்கு முடிவு காண வழிவகுக்குமென கருதப் படுகிறது. இதனால் படகுத் தொழிலாளர்கள் நலனும் நன்கு கவனிக்கப்படுமென நம்பலாம். இதைப் பற்றி மத்திய கப்பல் மற்றும் போக்குவரத்து அமைச்சகத்துடன் கலந்தாலோசித்து முடிவெடுக்க இவ்வரசு ஆவண செய்யும்.

(முற்பகல் 11-00)

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையில், பழைய துறைமுகம் படகுப் போக்குவரத்து வெகுவாகக் குறைந்துள்ளது. முன்பு பழைய துறைமுகத்தில் ஆண்டுதோறும் 8 இலட்சம் டன் சரக்குகள் கையாளப்பட்டு வந்தன. தற்போது ஏறத்தாழ 2 இலட்சம் டன் சரக்குகள் கையாளப்பட்டு வருகின்றன. படகுப் போக்குவரத்து குறைந்துள்ளதால் படகுத்

தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்பு கணிசமாகக் குறைந்து விட்டது என்று தெரிவித்திருக்கிறார்கள், ஆகவே, முன்புபோல அந்தத் தொழிலாளர்களுக்கு 8 இலட்சம் டன் சரக்குகள் கையாளப்பட தகுந்த இறக்குமதி ஏற்பாட்டைச் செய்ய மத்திய அரசிடம் மாநில அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவரவர்களே, ஏற்கெனவே அந்த பழைய துறைமுகத்தில் 8 இலட்சம் டன் பொருள்கள் கையாளப்பட்டன. ஆனால் இப்போது புதிய துறைமுகம் மத்திய அரசால் உருவாக்கப்பட்டு, பழைய துறைமுகம் அதோடு சேர்க்கப்பட்ட பிறகு வருகிற கப்பல்கள் எல்லாம் புதிய துறைமுகத்தில்தான் தேவையான வசதிகள் இருக்கும் என்ற உணர்வுடன் கப்பல்களை அங்கே கொண்டு செல்கிறார்கள். அப்படிச் செல்கிறவர்களை பழைய துறைமுகத்திற்கு வரவேண்டுமென்று கட்டாயப்படுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். ஏற்கெனவே இருந்ததைப்போல் அந்த கப்பல்கள் பழைய துறைமுகத்தில் சரக்குகளை இறக்குவதாக இருந்தால் அங்கே இருக்கிற படகுக்காரர்கள் 8 இலட்சம் டன் பொருள்களை கையாள வாய்ப்பு இருக்கும். இப்போது அந்த வாய்ப்பு இல்லை. இருந்தாலும் அந்த படகுக்காரர்கள் நலனைக் கருதி ஏதாவது ஒரு வழிவகையைக் கடைப்பிடிக்க மத்திய அரசிடம் மாநில அரசு கேட்க தயாராக இருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : துணைத் தலைவரவர்களே, இது சம்பந்தமாக சென்னையில் உள்ள அண்ணா தொழிற்சங்கத்துடன் இணைக்கப்பட்ட அண்ணா துறைமுக கடல் (படகு) தொழிலாளர்கள் சங்கம் 1—3—1985 ஆம் நாளிட்ட தனது கடிதத்தில் படகுக் கட்டும் தொழிலை அரசு எடுத்து நடத்தவேண்டும். பயணக் கப்பலில் பணிபுரியும் படகுத் தொழிலாளர்களை அரசு மேற்கொள்வதோடு தூத்துக்குடி கப்பலில் பாரம் ஏற்றி இறக்குவோர் சங்கத்தின் மூலம் பிற தொழிலாளர்களுக்கு நிதியுதவி அளிப்பது போலவே இத் தொழிலாளர்களுக்கும் அளிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டு அதனை புதுடில்லியிலுள்ள கப்பல் போக்குவரத்து அமைச்சருக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, அந்தத் தொழிலாளர்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூப்பிட்டு, அவர்களுடைய கோரிக்கை என்ன என்று கேட்டு, நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்த விரிவான ஏற்பாடுகளைச் செய்வது மட்டுமல்ல. தூத்துக்குடி துறைமுகம் 'பி' பகுதியை (பழைய துறைமுகம்) துறைமுகத்திலிருந்து பிரித்து அதனை மீண்டும் மாநிலத் துறைமுகத் துறையுடன் இணைப்பது தான் இப்பிரச்னைக்கு முடிவு காண வழி வகுக்குமென்று அமைச்சரிடம் கூறியிருப்பதால் இந்தத் துறைமுகப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்த நமது மாநில அரசு மத்திய சர்க்காரிடம் வலியுறுத்தி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மூலமாக நேரடியாக நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவரவர்களே, ஏற்கெனவே தொழிற்சங்கம் இது சம்பந்தமாக விரிவாகக் குறிப்பிட்டு அனுப்பியிருப்பார்கள் என்று கருதுகிறேன். வேண்டுமானால் துறைமுகத் தலைவரை அழைத்து, அந்தத் தொழிலாளர்களை அழைத்துப் பேசச் சொல்லலாம். நேரடியாக நாம் பேசுவது பொருத்தமாக இருக்காது. துறைமுகத் தலைவரை அழைத்துப் பேசச் சொல்லி, அதற்குப் பின்னால் அவர்களுடைய பரிந்துரைகளை மத்திய அரசுக்கு அனுப்பச் சொல்லலாம். பழைய துறைமுகத்தை மாநில அரசிடம் விடுவது பற்றி நாங்களே கூறியிருக்கிறோம். எனவே, இதுபற்றி மத்திய அரசிடம் பேசுவதில் இந்த அரசுக்கு தயக்கம் இல்லை.

## 5. வரவு—செலவுத் திட்டம் 1985-86 பொது விவாதம்—(தொடர்ச்சி)

*திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இந்த ஆண்டு 54 கோடி ரூபாய்க்கு புதிய வரி விதித்திருப்பதாக நம்முடைய நாவலர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். சாராயத்தின் மீதான ஆயத்தீர்வையை உயர்த்தி, அதன் மீது விற்பனை வரியை உயர்த்தி, பல்வேறு வகையான மோட்டார் வாகனங்கள் மீதுள்ள வரியை உயர்த்தி, பெருவகைக் கனிமங்கள், சிறுவகைக் கனிமங்களுக்கு விதிக்கப்படும் உரிமை வரியை உயர்த்தி, இப்படிப் பட்ட வகைகளில் 54 கோடி ரூபாய் வருமானம் என்று நாவலர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த 54 கோடி ரூபாய்க்கான புதிய வரி விதிப்பை நான் இந்த நேரத்தில் வரவேற்கிறேன்.

பலமுனை வரியை ஒழித்து, ஒருமுனை வரியாக்க வேண்டுமென்ற வியாபாரிகளின் நீண்ட நாள் கோரிக்கையை பரிசீலனை செய்து, நல்ல முடிவு கண்டு, தற்போது ஒருமுனை வரியாக ஆக்கியிருப்பதற்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் சமையல் எண்ணெயாகப் பயன்படுத்துகின்ற தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய் போன்றவைகளுக்கும் பலமுனை வரியை ஒழித்து ஒருமுனை வரி ஆக்கவேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதை கருணை உள்ளத்தோடு நாவலர் அவர்கள் பரிசீலனை செய்து, இந்தப் பிரச்சனைக்கு ஒரு தீர்வு காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 1 முதல் 8-வது வரை படிக்கின்ற மாணவர்களுக்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த தினத்திலிருந்து 13.5 கோடி ரூபாயில் இலவச சீருடையும், 11.5 கோடி ரூபாய் செலவில் இலவச புத்தகங்களும் வழங்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதையெல்லாம் நம்முடைய தலைவர் காமராஜர் அவர்கள் ஒரு காலத்தில் செய்ததுதான். ஆனால் இதைத் தொடர்ந்து விடாமல்

சீரிய முறையிலே செய்வதற்கு இந்த நேரத்தில் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆனால் அந்த புஸ்தகங்களும் சீருடைகளும் தகுதி வாய்ந்த மாணவர்களுச்கு மட்டும்தான் தருவோம் என்று சொல்லியிருப்பது சரியாக இருக்காது என்று நான் நினைக்கிறேன். சத்துணவு பெறுகின்ற மாண்வர்களுக்கு மட்டும் என்று இருப்பதை நீங்கள் திருத்தி அனைத்து மாணவர்களுக்கும் வழங்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இயற்கை உரத்திற்கான பலமுனை வரி 5 சதவீதத்தை ஒழித்து விட்டதாக நம்முடைய நாவலர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதனாலே சொற்ப நிலம் வைத்திருப்பவர்கள், சிறு சிறு நில உழவர்கள் லாபம் அடைகிறார்கள் என்று சொல்கிறார்கள், அது வாஸ்தவம்தான். அது உண்மைதான். ஆனால் அதே நேரத்திலே இந்த உழவர்களுக்கு இவ்வளவு பெரிய சலுகை செய்து இருப்பதால் அவர்கள் உள்ளத்திலே ஏற்பட்ட சந்தோசம் இன்றைய தினம் உணவு நெருக்கடியிலே இருக்கின்ற இந்த தமிழகத்தை, உணவுப் பிரச்சனையிலே இருக்கின்ற தமிழகத்தை தன்னிறைவு மாநிலமாக ஆக்குவதற்கு முயற்சி செய்வதற்கான ஒரு நிகழ்ச்சி இது என்று நான் கருதுகிறேன். உழவர்களுக்கு ஊக்கத் தொகையாக குவிண்டாலுச்கு 15 ரூபாய் என்று விலையை உயர்த்தியிருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும். ''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்'' என்று சொல்லக்கூடிய வள்ளுவன் வாக்குக்கு இணங்க, உழவர் பெருமக்களுடைய வாழ்க்கையில் வந்திருக்கக்கூடிய வேதனையை தீர்க்கின்ற வகையில் குவிண்டாலுச்கு 15 ரூபாயை உயர்த்தியிருப்பது ஒரு சந்தோஷமான விஷயம்தான். அந்த வகையிலே மாநில சர்க்கார் செய்திருப்பதைப் போல மத்திய சர்க்கார் என்ன செய்திருக்கிறது என்று சில பேர்கள் கேட்கலாம். நம்முடைய மத்திய அரசிலே இருக்கின்ற பிரதமர் ராஜிவ் காந்தி அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களிலே விவசாயிகளுச்கு முக்கியப் பிரச்சனையாக இருக்கின்ற இந்த விஷயத்தைப் பற்றி பேசியிருக்கிறார்கள் என்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். விவசாயிகள் விவசாயம் செய்கிறபோது, என்ன இடுபொருள்களை இடுகிறார்களோ, அதை எல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு, அவர்களுக்கு விலையை நாம் நிர்ணயிப்போம் என்று சமீபகாலங்களிலே பல்வேறு சந்தர்ப்பங்களிலே அவர்கள் பேசியிருக்கிறார்கள். ஆகவே, பிரதமர் ராஜிவ் காந்தி அவர்கள் சொன்னால், அதைச் செய்து காட்டுவார் என்பது நமக்கு எல்லாம் தெரிந்த விஷயம் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

ஆனால் நம்முடைய தமிழகத்தில் இன்றையதினம் பினாமி நிலம் 2 லட்சம் ஏக்கருக்கும் அதிகமாக இருப்பதாக, புள்ளிவிவரக் கணக்குகள் எல்லாம் நமக்கு எடுத்துக் காட்டுகிறது. பினாமி நிலத்தை ஒழிக்கவேண்டும் என்றும், நில உச்சவரம்பு சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்றும் நம்முடைய தேச பிதா மகாத்மா காந்தி அவர்கள் சொன்னார்கள். உழுபவனுக்கே நிலம் சொந்த



மாக்கப்படவேண்டும் என்ற கொள்கையை பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுடைய தலைமையிலே நடந்த கராச்சி மாநாட்டிலே வலியுறுத்தி, புரட்சிகரமாக தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். அதற்கு பின்னாலே, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் தலைமையேற்ற புவனேஸ்வர் மாநாட்டிலே 10 அம்ச திட்டத்தை அறிவித்தார்கள். அதற்குப் பின்னால் நாடு விடுதலை பெற்ற பின்னால் நம்முடைய பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்களுடைய தலைமையில் 20 அம்ச திட்டத்தை அறிவித்தார்கள்.

ஆகவே தேசப்பிதா மகாத்மா காந்தி அவர்களால், பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களால், அன்னை இந்திரா காந்தி அவர்களால், பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் மற்றும் அனைத்துத் தலைவர்களாலும் பாராட்டப்பட்டு கொண்டு வரப்பட்ட கொள்கைதான் உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற கொள்கையாகும். தமிழகத்திலே மட்டும் 2 லட்சத்திற்கும் அதிகமான ஏக்கர் நிலங்கள் பினாமியாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. தமிழகத்திலே 5 ஆயிரம் வேலி, 6 ஆயிரம் வேலி என்று வைத்துக்கொண்டிருப்பவர்கள் இன்றைய தினம் தமிழக சர்க்காரை பார்த்து சிரித்துக்கொண்டு இருப்பது நமக்கு எல்லாம் தெரியும். அந்த நிலையை உணர்ந்து, இந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தை, பினாமி நில ஒழிப்புச் சட்டத்தை கடந்த சட்டமன்றத்திலே அன்றையதினம் வருவாய்த் துறை அமைச்சராக இருந்த அமைச்சர் அவர்கள் கொண்டு வந்தார்கள். நாம் அனைவருமே ஒன்றாக கூடி ஏகமனதாக ஆதரித்து, அந்த தீர்மானத்தை டெல்லியில் உள்ள குடியரசுத் தலைவருடைய ஒப்புதலுக்காக அனுப்பினோம். இந்தச் சட்டம் உருவாக்கப்படுகிறபோது, எங்கள் தரப்பிலே சொல்லப்பட்ட விவகாரங்கள் என்ன என்பதை சற்று கவனிக்கவேண்டும். அன்றைய தினம் தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த வணக்கத்திற்குரிய தலைவர் எம். பி. எஸ். அவர்கள் வருவாய்த் துறை அமைச்சரிடம் ஒரு கருத்தைச் சொன்னார்கள். நீங்கள் நிறைவேற்றுகிற சட்டம் இந்திய அரசியல் சட்டத்திற்கு புறம்பான அம்சங்கள் இருக்குமானால், அது கோர்ட்டிலே அடிபட்டு விடும் என்று தெரிவித்து இருக்கிறார்கள். ஐயம் தெரிவித்தார்கள். ஆனாலும் கூட நாங்கள் எங்களுடைய ஒப்புதலை ஏகமனதாக தெரிவித்து, மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்தபோது, அந்த சட்டம் ''போன மச்சான் திரும்பி வந்தான் பூமணத்தோட'' என்று சொல்வது போல், அது அப்படியே திரும்பி வந்துவிட்டது. என்ன காரணம் என்று சொன்னால், இந்திய அரசியல் சட்டத்திற்கு விரோதமான அம்சங்கள் அதிலே இருக்கிறது சந்து பொந்துகள், ஓட்டை உடைசல்கள், அதிலே இருக்கிறது, எனவே கோர்ட்டிலே அந்தச் சட்டம் அடிபட்டுவிடும், எனவே திருத்தி அனுப்புங்கள் என்று சொன்னதாக நம்முடைய சட்டமன்றத்திலே சொன்னார்கள். எனவே அந்தச் சட்டத்தை திருத்தி, உடனடியாக தமிழகத்திலே உள்ள சட்ட வல்லுநர்கள், இந்திய சட்ட வல்லுநர்கள் எல்லோ

வரையும் கலந்து தமிழகத்திலே இருக்கிற இடது சாரி முற்போக்கு எண்ணம் படைத்த கொள்கையிலே அழுத்த நம்பிக்கை வைத்திருக்கிற தலைவர்களை அணுகி, ஏகமனதாக ஒரு சட்டத்தை உருவாக்கி, இந்தக் கூட்டத் தொடரிலே அதை நிறைவேற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

பஸ்களை தேசிய மயமாக்கவேண்டும் என்ற கொள்கையை நமது நாட்டிலே நீண்ட நெடுங்காலமாக, இடது சாரி முற்போக்கு வாதிகளாலும், சோஷலிசம் இந்த நாட்டில் வரவேண்டும் என்று சொல்லுகிற சிந்தனா வாதிகளாலும் உருவாக்கப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கொள்கை. அன்றைய தினம் தமிழகத்தில் ஆண்டு கொண்டிருந்த கலைஞர் ஆட்சியிலே, டாக்டர் கலைஞர் கருணாநிதி தலைமையிலே பஸ்களை தேசிய மயமாக்கவேண்டும் என்ற ஒரு சட்டத்தை கொண்டுவந்தார்கள். அந்தச் சட்டம் தமிழகத்திலே நிறைவேற்றப்பட்ட பிறகு சென்னை உயர்நீதி மன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அது கோர்ட்டிலே அடிக்கப் படக் கூடிய ஒரு சூழ்நிலை இருந்தது.

அதற்குப் பிறகு தமிழக அரசு உச்ச நீதி மன்றத்தில் அப்பீல் செய்தபோது, நமக்கு ஆதரவாக, நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கிற முற்போக்கு வாதிகளுடைய எண்ணங்களுக்கு ஆதரவாக, உண்மையான சமதர்ம சமுதாயம் ஆக்கவேண்டும், ஆதிக்க மற்ற சமுதாயத்தை ஆக்குவோம் என்று பேரறிஞர் அண்ணா சொன்னதற்கு இணங்க, ஆதிக்கமற்ற சமுதாயம் வரவேண்டும் என்று சொன்னால், பஸ்களை தேசிய மயமாக்குகிற அந்தக் கொள்கையை நாம் ஏற்றிருக்கிறோம்.

ஆனால் இந்த மசோதா அன்று நமது சட்ட சபையிலே விவாதத்திற்கு வந்தபோது, ஒரு பெரியவர் அவர்கள் அன்றைய தினம் சொன்னார். பஸ் முதலாளிகள் என்ற வார்த்தை இனி தமிழ்நாட்டிலே இடம் பெறாது; தமிழ் அகராதியிலேயே அந்த வார்த்தை இருக்காது. தமிழகத்திலே புற்று நோயாக இருக்கிற கருப்புப் பணத்தை தடுப்பதற்காகவும், ஒழிப்பதற்காகவும், பாட்டாளிகளை பாதுகாப்பதற்காகவும் இந்த மசோதாவைக் கொண்டு வருகிறேன் என்று அன்றைய தினம் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு பண்ருட்டியார் அவர்கள் இந்த மணி மணியான வாசகங்களை உதிர்த்திருக்கிறார்கள்.

எனவே இவ்வளவு பெரிய நம்பிக்கையை அதிலே கொண்டிருக்கிற நீங்கள், இவ்வளவு தீவிரமாக நம்பிக்கை வைத்திருக்கிற நீங்கள் இதுவரை ஏன் அந்தச் சட்டத்தை அமலுக்கு கொண்டு வரவில்லை என்று கேட்கிறேன். அன்றைய தினம் இந்த தீர்ப்பு வந்ததற்குப் பின்னால், சென்னை பட்டணத்திலே பஸ் உரிமையாளர்கள் ஒன்றாகக் கூடி பஸ் பேரணியை நடத்திக் காட்டினார்கள். பஸ்களை எல்லாம் ஆளே இல்லாமல் வெறும் பஸ்



களை மட்டும் பேரணியாக ஓட்டிக் காட்டினார்கள். அன்றைய தினம் பஸ் முதலாளிகள் அதிகாரத்தில் இருந்தவர்களைச் சந்தித்தார்கள். அதிகாரத்தில் இல்லாதவர்களையும் சந்தித்தார்கள். இவ்வளவு நிலைமை வந்ததற்குப் பின்னால் நான் ஐயுறுகிறேன். நான் சந்தேகப்படுகிறேன் உண்மையாக பஸ்களை தேசிய மயமாக்க வேண்டும் என்ற அந்தக் கொள்கையை நீங்கள் கை விட்டு விட்டீர்களோ என்று எண்ணுகிறேன். எனவே பஸ்களை தேசியமயமாக்க வேண்டும் என்ற அந்த கொள்கையில் நீங்கள் ஆழ்ந்த நம்பிக்கையோடு செயலாற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று நாவலர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள், நிதிநிலை அறிக்கையிலே. நாங்கள் எல்லாம் அதை ஒத்துக் கொள்கிறோம். காங்கிரஸ் காரர்கள் அதை ஒத்துக்கொள்கிறார்களா என்று உங்களில் பல பேருக்கு சந்தேகம் இருக்கலாம். அன்றைய தினம் இந்த நாட்டினுடைய விடுதலைக்காக உடல், பொருள், ஆவி என்று மூன்றையும் தியாகம் செய்த, எண்ணற்ற தியாக பெருமக்கள் வழியிலே வந்த காங்கிரஸ்காரர்கள், இந்த நாட்டினுடைய சுதந்திரத்திற்கு இந்த நாட்டினுடைய ஒருமைப்பாட்டிற்கு ஆபத்து வராத வகையில், சுய ஆட்சி வேண்டும், தன்னாட்சி வேண்டும் என்று பிரிவினை கேட்காமல், சில அதிகாரங்கள் மட்டும் வேண்டும் என்று கேட்பீர்களேயானால், காங்கிரஸ்காரர்களாகிய நாங்கள் அதை ஆதரிக்கத் தயாராகத்தான் இருக்கிறோம்.

ஆனால் அதற்கு முன்னால் நான் உங்களை ஒன்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இன்றைய தினம் உங்கள் கையிலே இருக்கிற மாநகராட்சி, நகராட்சி, பஞ்சாயத்து, ஊராட்சி போன்ற அமைப்புகளுக்கு எல்லாம், அதிக அதிகாரங்களை நீங்கள் தராமலே ஏன் தரவில்லை என்று நான் கேட்க விரும்புகிறேன், இதல் இன்னொன்றையும் சொல்ல வேண்டும். சுதந்திரம் வந்த உடனே பஞ்சாயத்துகளுக்கு அதிக அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்று பில்வந்தராய் மேத்தா, அசோக் மேத்தா ஆகியவர்களுடைய பெயரிலே போடப்பட்ட கமிட்டியிலே அந்த அமைப்புகளுக்கு அதிக அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்று சொன்னார்களே, ஏன், அதை நீங்கள் செய்யவில்லை என்று கேட்கிறேன். 10 ஆண்டுகளாக ஊராட்சிகளுக்கு, பஞ்சாயத்துகளுக்கு தேர்தலே இல்லை. அந்த தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புறத்திலே வறுமை கோட்டிற்குக் கீழே வரக்கூடிய ஏழை எளிய மக்களின் வாழ்க்கையில் வளமை வரவேண்டும் என்று தான் மத்திய சர்க்கார் ஐ.ஆர்.டி.பி., என்.ஆர்.ஈ.பி., ஆர்.ஈ. எல்.ஜி.பி. என்ற மூன்று 3 பெரிய திட்டங்களை நாட்டிலே கொண்டு வந்தார்கள் (குறுக்கீடு).

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தங்கமணி அவர்கள் உரையாற்றும்போது மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கேட்கிறார்களே நீங்கள் மட்டும் நகராட்சிகள் ஊராட்சிகளுக்கு அதிக அதிகாரங்களை கொடுக்கிறீர்களா என்று விவாதத்திற்காகப் பேசினார்கள். ஆனால் நாங்கள் கேட்கிற அதிகாரங்கள், வரி வசூலிக்கிற அதிகாரங்களில் பெரும்பாலானவைகளை மத்திய அரசு எடுத்துக் கொண்டு, மாநிலங்களுக்கு நியாயமாக ஒதுக்க வேண்டிய நிதியிலிருந்து குறைத்து, அதையும் மாநிலங்களுக்கு மாநிலம் வேறுபடுததிக் கொடுக்கிறார்களே, அதனாலேதான் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று கேட்கிறோம்.

அதை எந்த அளவிற்கு கூட்டித் தரவேண்டும் என்பதற்காகத் தான் திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் சர்க்காரியா கமிஷனை நியமித்து அதை வரையறுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அந்த சர்க்காரியா கமிஷனில் என்னென்ன தரப்பட்டிருக்கிறது என்பதை ஆராய்வதற்கு மாநில முதல்வர்கள் மாநாட்டை கூட்டி விரைவில் நடவடிக்கை எடுத்து, உடனடியாக மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களை உருவாக்குவதற்கான விளைவுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்கிறோம். நீங்களும் இந்த மாநிலத்திற்கு உள்ளேதான் இருக்கிறீர்கள். ஆகவே, அதற்கும் இதற்கும் சம்பந்தப்படுத்தாதீர்கள் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. எம். தங்கமணி: தலைவர் அவர்களே, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று கூறியபோது, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் இராமலிங்கம் அவர்கள் குறுக்கிட்டு பேசினார்கள். நான் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று நீங்கள் கேட்பதைப்போல, உங்கள் கையிலே இருக்கின்ற, தமிழக அரசின் கையிலே இருக்கின்ற பஞ்சாயத்துக்களுக்கும், மாநகராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் ஏன் அதிகாரங்கள் கொடுக்கவில்லை என்று தான் கேட்டேன். பல்வந்த்ராய் மேத்தா, அசோக்மேத்தா ஆகிய இரண்டு சுதந்திரபோராட்ட வீரர்களுடைய பெயரிலே கமிட்டிகளைப் போட்டு, பஞ்சாயத்துக்களுக்கு சலுகைகளையெல்லாம் அளித்து இருக்கிறார்கள். அந்தக் குழுவிலே தயாரிக்கப்பட்ட அறிக்கையிலே இருக்கின்றபடி நீங்கள் ஏன் அதிகாரங்கள் தரவில்லை என்று கேட்டேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. வறுமைக் கோட்டின்கீழே உள்ளவர்கள்.... (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஒரே ஒரு விளக்கம் மட்டும் கூற விரும்புகிறேன். நாம் மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரங்கள் கொண்ட தன்னாட்சி முறை வேண்டும், இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கு ஊறு நேராவண்ணம், என்று எல்லோரும் சேர்ந்து கேட்க வேண்டிய இடத்தில் இருக்கிறோம். கேட்க வேண்டியவர்களிடம் கேட்கிறோம். நகராட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி மன்றங்



களுக்கும் அதிகாரம்கேட்பது என்றால், நீங்களும் நாங்களும் சேர்ந்து முடிவு கட்டுகின்ற இடத்திலே இருககிறோம். அதை கேட்கின்ற இடத்திலே இருக்கின்றோம், இது முடிவு கட்டுகின்ற இடத்திலே இருக்கின்றோம். நாம் எல்லோரும் சேர்ந்து எது வேண்டுமானாலும் முடிவு கட்டலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, நம்முடைய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. தங்கமணி சொல்வதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஏனென்றால் 20, 30 ஆண்டுகளுக்கு முன்னாலே எடுக்கப்பட்ட முடிவு. இன்றைக்கு எத்தனையோ மாறுதல் வந்திருக்கிறது. அதிகாரம் கேட்பதில் தவறு இல்லை. நாங்களும் ஒத்துழைக்கின்றோம். கேட்கலாம். ஆனால் அடிக்கடி மத்திய அரசை கேட்டுக்கொள்கின்ற இந்த அரசாங்கம் தன்னுடைய கையிலே வைத்திருக்கின்ற அதிகாரத்தை கொஞ்சம் பிரித்துக்கொடுக்கலாமே என்பதைத்தான் உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதைக்கூட உங்களையும் கேட்டுக்கொண்டே செய்கிறோம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, நீங்கள் கேட்பதற்கு நாங்களும் துணை இருக்கிறோம் என்று தான் சொல்லுகிறோம். தன்னிடம் இருக்கின்ற அதிகாரத்தில் ஒன்றிரண்டைத் கொடுத்து வழிகாட்டலாமே என்றுதான் சொல்லுகிறோம்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, பிரித்து கொடுப்பதற்குக்கூட சில அதிகாரங்கள் தேவை. சட்டியிலே இருந்தால்தான் அகப்பையில் வரும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, சட்டியிலே இருப்பதைத்தான் சொல்லுகிறோம். இல்லாததைச் சொல்லவில்லை.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, ஓரிடத்திலே மொத்தமாக குவித்து வைத்துக்கொண்டு, அவர்கள் அதிகாரத்திலே அசீரணப்படுவதைவிட எங்களுக்கு கொடுப்பது நல்லது. அது எல்லோருக்கும் நல்லது என்பது தான் என்னுடைய கருத்து.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, இதே வாதத்தைத் தான் நானும் சொல்கிறேன். நீங்கள் எந்த வாதத்தை மத்திய அரசிடம் எடுத்துச் சொல்கிறீர்களோ, அதே வாதத்தைத் தான் மாநில அரசுக்குச் சொல்கிறோம். நம் கீழே இருக்கின்ற நகராட்சிகளுக்கும், ஊராட்சிகளுக்கும் கொடுக்கலாமே, ஒரு வழி காட்டலாமே.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, மாண்புமிகு சித்தன் அவர்கள் என்னுடைய கருத்தை ஏற்றுக்கொள் கிறார். அதற்கு நன்றி. மொத்தமாக அங்கிருந்து வாங்குவோம், பிறகு பிரித்துக் கொடுப்போம். எல்லோரும் ஒன்றுபட்டு பணி யாற்றுவோம்.

**திரு. கே. எம். தங்கமணி :** தலைவர் அவர்களே, வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்கின்றவர்கள் வாழ்க்கையிலே வளம் பெற வேண்டும், ஏற்றம் பெற வேண்டும் என்று இந்திய சர்க்கார், ஐ.ஆர்.டி.பி., என்.ஆர்.ஈ.பி., ஆர்.ஈ.எல்.ஜி.பி., ஆகிய திட்டங் களைக் கொண்டுவந்து இருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கையிலே எழுச்சி பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டு இருக்கின்ற திட்டங்கள் இவை. இந்தத் திட்டங்களை அமுலாக்கு கின்றபோது, அதிகாரத்தை கையிலே வைத்து இருக்கின்ற அதி காரிகள், பணத்தை சரியாக செலவழிக்கிறார்களா என்று பார்த் தால்—கொள்ளை அடித்தார்கள் என்று நான் சொல்லவில்லை— பங்கு போட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று தான் சொல்ல விரும்புகிறேன்.

இன்றையதினம் மத்தியசர்க்கார் எவ்வளவு பணம் செல வழிக்கிறது, மாநில சர்க்கார் எவ்வளவு பணம் செலவழிக்கிறது என்று நீங்கள் விளம்பரம் செய்யவேண்டும். அதை விட்டுவிட்டு, மத்திய சர்க்கார் தருகின்ற பணத்தை, மாநில சர்க்காரே செல வழிப்பது போன்று ஒரு பிரமையை, ஒரு நாடகத்தை நடத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை கடற்கரையிலிருந்து மைலாப்பூர் லஸ் வரை இன் றையதினம் புதிய ரயில் பாதை ரூ. 60 கோடியில் போடுவதாக திட்ட அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத் திற்கு உரிய விளம்பரம் இருக்கிறதா ? ஒரு விழா உண்டா ? என்று கேட்டால், ஒன்றுமே இல்லை என்று சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

தொழில்கள் தொடங்க வேண்டும். ஏராளமாக தொழில்கள் தொடங்குவதற்கு டெல்லியிடம் அனுமதி கேட்டிருக்கிறோம் என்று அமைச்சர் பெருமக்கள் எல்லாம் இன்றையதினம் சொல்லி இருக்கிறார்கள். எனக்கு முன்னால் இருக்கின்ற நாவலர் அவர்கள் மூலமாக நான் அமைச்சர் பெருமக்களை கேட்டுக் கொள்கிறேன். தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்திற்கு என்னென்ன திட்டங்கள் தேவையோ, அந்தத் திட்டங்களையெல்லாம் டெல்லி பட்டிணத்தில் இருக்கின்ற தமிழ கத்தைச் சேர்ந்த அனைத்துக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்துப் பேசுங்கள். அவர்களிடத்தில் என்னென்ன திட்டங்கள் தமிழகத்திற்கு தேவை என்று நாங்கள் சொல்கிறோம். இந்தந்த வகையில் டெல்லி எங்களை உதாசீனம் செய்கிறது நீங்கள் போரா டுங்கள் என்று சொன்னால் பாராளுமன்ற விவாதங்களில் கலந்து கொள்கின்றபோதோ அல்லது பிரதமர் ராஜீவ் காந்தியிடம் பேசு



கின்றபோதோ, போராடுவார்கள் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். கடைசியாக அம்பாசங்கர் கமிஷனைப்பற்றி ஒரு வார்த்தை சொல்லிவிடுகிறேன். பிற்பட்டோர் நலத்திற்காக பின்தங்கியவர்கள் நலத்திற்காக போடப்பட்ட அந்தக் கமிஷனின் அறிக்கை தமிழக அரசிடம் வந்திருப்பதாக கேள்விப்படுகிறேன். அதைத் தமிழகத்தின் சட்டமன்றத்திலே வைக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-20]

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 60 கோடி ரூபாயில் வர இருக்கின்ற இரயில்வே திட்டத்தைப் பொறுத்தவரையில் விழா நடைபெறவில்லை என்று சொன்னார் கள். அதற்கான ஏற்பாடுகள் கடந்த 3 தினங்களாக செய்யப் படுகின்றன, ஒரு பெரிய விழாவாக அதை நடத்துவதற்கு ஏற்பாடு கள் செய்யப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

**திரு. கே. எம். தங்கமணி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிக்க நன்றி. அந்த அம்பாசங்கர் அறிக் கையிலே ஏற்கெனவே 50 சதவீதம் என்று கொடுக்கப்பட்டிருந் ததைக் குறைத்து 30 சதவீதமாகக் கொடுக்க வேண்டுமென்ற ஒரு சிபாரிசு கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. அது உண்மையா என்பது அந்த அறிக்கை சட்டமன்றத்திலே வைக்கப்பட்டால் தெரியும். அது உண்மையாக இருக்குமானால் அந்த அறிக்கையை புறக்கணித்துவிட்டு மக்களின் நலன் கருதி புதிதாக ஒரு கமிஷனை அரசு நியமித்து அறிக்கையைப் பெற்று அதை அமலாக்கவேண்டு மென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி இந்திராகாந்தி அவர்கள் பிரதமராக இருந்தபோது மண்டல் கமிஷன் அறிக்கையை சமர்ப்பித்திருக் கிறார்கள். அந்த அறிக்கையை அமலாக்கவேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக என்னுடைய தொகுதியைப்பற்றிய சில கருத்துக் களைச் சொல்ல விரும்புகிறேன். திண்டிவனம் தொகுதியிலே குடி நீர்ப் பிரச்சினை பெரிதாக இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். கடந்த 4 ஆண்டுகாலமாக அதைப்பற்றி சட்டமன்றத் திலே வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்தபோதும், அமைச்சர்களிடத் திலே பேசுகின்ற வாய்ப்புக் கிடைத்த போதும் இங்கே விவாதத் திலே பங்கெடுத்துக் கொள்கிறபோதும் சொல்லி இருக்கிறேன். அங்கே மக்கள் நீர்ப் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே கொடுக்கப்படுகிற குடிநீர் 25 ஆயிரம் மக்களுக்கு

தான் இருக்கிறது. 75 ஆயிரம் மக்கள் வாழ்கிற அந்தப் பகுதிக்கு குடிநீர்த் திட்டம் கொண்டுவரவேண்டும். திருவெண்ணைநல்லூர் ஆற்றுப் படுகையிலிருந்து தண்ணீர் கொண்டுவரவேண்டும். அப்படிக் கொண்டுவரும்போது அனந்தபுரம், செஞ்சி ஆகிய இரண்டு ஊர்களுக்கும் தந்துவிட்டு 3வது இடமாக திண்டிவனத்திற்குக் கொடுக்கவேண்டுமென்று நிர்வாகத்தின் சார்பில் திட்டமிடப்பட்டு முடிவு எடுக்கப்பட்டு தலைமைப் பொறியாளரிடம் அது வந்திருக்கிறது. குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு 250 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது, ஆகவே அந்த 250 கோடி ரூபாயில் இந்தத் திட்டத்திற்கும் நிதியை ஒதுக்கி அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியிலே இரட்டணை என்ற கிராமத்திலே உள்ள தொண்டி ஆற்றிலே ஒரு மேம்பாலம் கட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் என் தொகுதியில் சுற்றுப்பயணம் செய்து நன்றி சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். இன்றைய தினம் அங்கே உள்ள ஏரிகளில் தண்ணீர் இல்லை. பயிர்கள் எல்லாம் சாவியாக இருக்கின்றன. என்னுடைய தொகுதியை வறட்சித் தொகுதியாக அறிவித்து அங்கே அரசுக் கடன்கள், கூட்டுறவுக் கடன்கள் எல்லாவற்றையும் ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து வீடூர் அணையிலிருந்து நஞ்சை நிலங்களுக்குத் தண்ணீர் வரவில்லை. ஆகவே உபரி வரியை நீக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்கள் தொகுதியில் ஒரு பால்பதப்படுத்தும் நிலையம் ஏற்படுத்தப்படும் என்ற உறுதிமொழியை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தெரிவித்தார்கள். எனவே அதற்கு உடனடியாக அடிக்கல் நாட்டு விழா செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 10 சர்க்கரை ஆலைகள் நிறுவப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. எங்கள் தொகுதியில் மருந்துக்குக்கூட ஒரு தொழிற்சாலை கிடையாது, ஆகவே திண்டிவனத்திலே ஒரு சர்க்கரை ஆலையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தென் ஆற்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப் படுகிறபோது ஒரு மாவட்டத்திற்கு, வள்ளலார் மாவட்டத்திற்கு திண்டிவனத்தை தலைநகராக அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அங்கே பெண்கள் உயர்நிலைப் பள்ளியொன்று ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. பொ. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1985-86-ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளை வரவேற்றுப் பேசுகின்ற வாய்ப்பினை உருவாக்கிட்ட எனது இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், எனக்கு வாக்களித்து வெற்றியைத் தேடித்தந்த இளையான்குடி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நன்றியையும் வணக்கத்தையும் இந்த அவையின் மூலம் தெரிவித்து கொள்கிறேன்.



வசதி வாய்ப்பற்று விளங்கும் எல்லா மக்களுக்கும் குறிப்பாக ஏழ்மையிலும் வறுமையிலும் வாடும் நலிந்தோர்க்கு நல்வாழ்வு அளிக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன்தான் இந்த வரவு செலவுத் திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

1985-86-ஆம் ஆண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கம் முந்திய பணிகளை நன்கு சீரமைத்து அவற்றின் பயன்களை மக்கள் பெறுவதற்கு முனைந்து செயல்படவேண்டும். உணவு உற்பத்தி, வேலை வாய்ப்பு, உற்பத்தித் திறன் ஆகியவற்றில் முன்னேற்றம் காண்பதற்கு ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளதை வரவேற்கக் கடமைப்பட்டுள்ளேன்.

பொருளாதாரத் துறையில் பெருமளவிற்கு முன்னேற மின்சக்தி போன்ற முக்கிய துறைகளுக்கு அதிக அளவு நிதி ஒதுக்கீடு செய்ய திட்டமிடப்பட்டதை, நலிந்தோரை வறுமைக் கோட்டிற்கு மேல் கொண்டுவர வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கு அதிக அளவுக்கு சிறப்பிடம் அளித்திருப்பதை வரவேற்கின்றேன்.

வேளாண்மை மட்டும் உயர்ந்தால் போதாது. வேளாண்மை தொழில் புரியும் மக்களும் உயர வேண்டும் என்ற அடிப்படையில் விவசாய விளை பொருள்களான புளி, மிளகாய், மஞ்சள், மல்லி, மிளகு போன்ற பொருட்களுக்கு ஒரு முனை வரி விதித்து அதன் மூலம் சிறு வியாபாரிகள் பட்ட தொல்லைகளிலிருந்து அவர்களைக் காப்பாற்றவும், விவசாயத்திற்குப் பயன் படுத்தப்படும் உரத்தின் மீதான 5 சதவித வரி விதிப்பை ரத்து செய்வதாக அறிவித்து இருப்பதை நான் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் ஒரு விவசாயக் கல்லூரி நிறுவவும் இந்தக் கல்வி ஆண்டில் இரண்டாவது கால் நடை மருத்துவக் கல்லூரி துவங்க இருப்பதையும் வரவேற்கின்றேன்.

திரு.வி.க. பரிசு போன்று திருவள்ளுவர், அண்ணா ஆகியோரின் பெயரில் புதிய பரிசுகளை வழங்க அரசு திட்டமிட்டுள்ளதை வரவேற்கின்றேன். சங்க காலப் புலவர்கள் பிறந்த இடங்களில் நினைவுச் சின்னம் எழுப்புகின்ற வகையில் பல்வேறு மாவட்டங்களில் 10 இடங்களில் நிறுவ அரசு திட்டமிட்டுள்ளதை வரவேற்கின்றேன். கண்ணதாசன் நினைவாக காரைக்குடியில் மணிமண்டபமும், திருப்பூரில் விடுதலை வீரர் திருப்பூர் குமரனின் நினைவாலயம் ஒன்றையும் ரூ. 45 இலட்சம் செலவில் கட்ட திட்டமிட்டதை வரவேற்கின்றேன். அதேநேரத்தில் மானங்காத்த மருது சகோதரர்களுக்கு பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தின் தலைநகரான சிவகங்கையில் நினைவுச் சின்னம் அமைத்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மின் உற்பத்தியை அதிகப்படுத்த வட சென்னை மின்திட்டமும், தூத்துக்குடி அனல் மின்நிலைய விரிவாக்கத் திட்டமும் ஏழாவது திட்ட காலத்தில் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்

தான் இருக்கிறது. 75 ஆயிரம் மக்கள் வாழ்கிற அந்தப் பகுதிக்கு குடிநீர்த் திட்டம் கொண்டுவரவேண்டும். திருவெண்ணைநல்லூர் ஆற்றுப் படுகையிலிருந்து தண்ணீர் கொண்டுவரவேண்டும். அப்படிக் கொண்டுவரும்போது அனந்தபுரம், செஞ்சி ஆகிய இரண்டு ஊர்களுக்கும் தந்துவிட்டு 3வது இடமாக திண்டிவனத்திற்குக் கொடுக்கவேண்டுமென்று நிர்வாகத்தின் சார்பில் திட்டமிடப்பட்டு முடிவு எடுக்கப்பட்டு தலைமைப் பொறியாளரிடம் அது வந்திருக்கிறது. குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு 250 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது, ஆகவே அந்த 250 கோடி ரூபாயில் இந்தத் திட்டத்திற்கும் நிதியை ஒதுக்கி அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியிலே இரட்டணை என்ற கிராமத்திலே உள்ள தொண்டி ஆற்றிலே ஒரு மேம்பாலம் கட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் என் தொகுதியில் சுற்றுப்பயணம் செய்து நன்றி சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். இன்றைய தினம் அங்கே உள்ள ஏரிகளில் தண்ணீர் இல்லை. பயிர்கள் எல்லாம் சாவியாக இருக்கின்றன. என்னுடைய தொகுதியை வறட்சித் தொகுதியாக அறிவித்து அங்கே அரசுக் கடன்கள், கூட்டுறவுக் கடன்கள் எல்லாவற்றையும் ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து வீடூர் அணையிலிருந்து நஞ்சை நிலங்களுக்குத் தண்ணீர் வரவில்லை. ஆகவே உபரி வரியை நீக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்கள் தொகுதியில் ஒரு பால்பதப்படுத்தும் நிலையம் ஏற்படுத்தப்படும் என்ற உறுதிமொழியை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தெரிவித்தார்கள். எனவே அதற்கு உடனடியாக அடிக்கல் நாட்டு விழா செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 10 சர்க்கரை ஆலைகள் நிறுவப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. எங்கள் தொகுதியில் மருந்துக்குக்கூட ஒரு தொழிற்சாலை கிடையாது, ஆகவே திண்டிவனத்திலே ஒரு சர்க்கரை ஆலையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தென் ஆற்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப் படுகிறபோது ஒரு மாவட்டத்திற்கு, வள்ளலார் மாவட்டத்திற்கு திண்டிவனத்தை தலைநகராக அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அங்கே பெண்கள் உயர்நிலைப் பள்ளியொன்று ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. பொ. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1985-86-ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளை வரவேற்றுப் பேசுகின்ற வாய்ப்பினை உருவாக்கிட்ட எனது இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், எனக்கு வாக்களித்து வெற்றியைத் தேடித்தந்த இளையான்குடி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நன்றியையும் வணக்கத்தையும் இந்த அவையின் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.





வசதி வாய்ப்பற்று விளங்கும் எல்லா மக்களுக்கும் குறிப்பாக ஏழ்மையிலும் வறுமையிலும் வாடும் நலிந்தோர்க்கு நல்வாழ்வு அளிக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன்தான் இந்த வரவு செலவுத் திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

1985-86-ஆம் ஆண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கம் முந்திய பணிகளை நன்கு சீரமைத்து அவற்றின் பயன்களை மக்கள் பெறுவதற்கு முனைந்து செயல்படவேண்டும். உணவு உற்பத்தி, வேலை வாய்ப்பு, உற்பத்தித் திறன் ஆகியவற்றில் முன்னேற்றம் காண்பதற்கு ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளதை வரவேற்கக் கடமைப்பட்டுள்ளேன்.

பொருளாதாரத் துறையில் பெருமளவிற்கு முன்னேற மின்சக்தி போன்ற முக்கிய துறைகளுக்கு அதிக அளவு நிதி ஒதுக்கீடு செய்ய திட்டமிடப்பட்டதை, நலிந்தோரை வறுமைக் கோட்டிற்கு மேல் கொண்டுவர வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கு அதிக அளவுக்கு சிறப்பிடம் அளித்திருப்பதை வரவேற்கின்றேன்.

வேளாண்மை மட்டும் உயர்ந்தால் போதாது. வேளாண்மை தொழில் புரியும் மக்களும் உயர வேண்டும் என்ற அடிப்படையில் விவசாய விளை பொருள்களான புளி, மிளகாய், மஞ்சள், மல்லி, மிளகு போன்ற பொருட்களுக்கு ஒரு முனை வரி விதித்து அதன் மூலம் சிறு வியாபாரிகள் பட்ட தொல்லைகளிலிருந்து அவர்களைக் காப்பாற்றவும், விவசாயத்திற்குப் பயன் படுத்தப்படும் உரத்தின் மீதான 5 சதவித வரி விதிப்பை ரத்து செய்வதாக அறிவித்து இருப்பதை நான் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் ஒரு விவசாயக் கல்லூரி நிறுவவும் இந்தக் கல்வி ஆண்டில் இரண்டாவது கால் நடை மருத்துவக் கல்லூரி துவங்க இருப்பதையும் வரவேற்கின்றேன்.

திரு.வி.க. பரிசு போன்று திருவள்ளுவர், அண்ணா ஆகியோரின் பெயரில் புதிய பரிசுகளை வழங்க அரசு திட்டமிட்டுள்ளதை வரவேற்கின்றேன். சங்க காலப் புலவர்கள் பிறந்த இடங்களில் நினைவுச் சின்னம் எழுப்புகின்ற வகையில் பல்வேறு மாவட்டங்களில் 10 இடங்களில் நிறுவ அரசு திட்டமிட்டுள்ளதை வரவேற்கின்றேன். கண்ணதாசன் நினைவாக காரைக்குடியில் மணிமண்டபமும், திருப்பூரில் விடுதலை வீரர் திருப்பூர் குமரனின் நினைவாலயம் ஒன்றையும் ரூ. 45 இலட்சம் செலவில் கட்ட திட்டமிட்டதை வரவேற்கின்றேன். அதேநேரத்தில் மானங்காத்த மருது சகோதரர்களுக்கு பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தின் தலைநகரான சிவகங்கையில் நினைவுச் சின்னம் அமைத்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மின் உற்பத்தியை அதிகப்படுத்த வட சென்னை மின்திட்டமும், தூத்துக்குடி அனல் மின்நிலைய விரிவாக்கத் திட்டமும் ஏழாவது திட்ட காலத்தில் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்

திருப்பதை வரவேற்கின்றேன். சென்னை நகரத்திலும் மாவட்டத் தலை நகரங்களிலும் 1,000 குடியிருப்புக்களை ஏழை எளிய மக்களுக்காகக் கட்ட திட்டமிட்டுள்ளதை வரவேற்கிறேன். நம்நாடு என்னும் தோட்டத்திலே நாளை மலரும் முல்லைகளான நல்ல நல்ல பிள்ளைகளுக்கு ரூ. 11.5 கோடிக்கு இலவச பாடப் புத்தகங்களும் ரூ. 13.5 கோடிக்கு சீருடைகளும் வழங்க இந்த பட்ஜெட் வழி செய்திருப்பதை வரவேற்கின்றேன். அத்துடன் பாலர் பள்ளிக் குழந்தைகளுக்கு முறையாக மருத்துவப் பரிசோதனையும் அளிக்கப்படுவதாகச் சொல்லியிருப்பதையும் வரவேற்கின்றேன்.

சிப்காட்டின் ஆதரவில் கும்மிடிப்பூண்டி, கடலூர், புதுக்கோட்டை, மானாமதுரை ஆகிய 4 இடங்களில் தொழில் வளர்ச்சி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதையும் வரவேற்கின்றேன். அதேநேரத்தில் தொழில்கள் செய்ய முன் வரக்கூடியவர்களுக்கு இப்படிப்பட்ட இடங்களில் தொழில் வளர்ச்சி மேலும் வளர வேண்டும் என்றால்---அரசினுடைய கடன் மற்றைய வசதிகளை செய்து தரப்படும் என்று அறிவிப்பதன் மூலம் ஏராளமானவர்கள் அங்கே தொழில் கூடங்களை அமைக்க முன்வருவார்கள், அதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முதியோர் கல்வி நிலையங்களில் மகளிரைச் சேர்ப்பதில் சிறந்து விளங்கும் மாநிலத்தைத் தேர்ந்தெடுத்து மத்திய கல்வி அமைச்சகம் ரூ. 25 இலட்சம் பரிசு வழங்குகின்றது. இத்திட்டத்தின் கீழ் 1983-84, 1984-85 ஆகிய ஆண்டுகளில் தொடர்ந்து இப்பரிசைத் தமிழகம் பெற்றுள்ளதை நான் பாராட்டுகிறேன். காரைக்குடியில் மேலும் ஒரு பல்கலைக் கழகம் நிறுவப்பட இருப்பதையும் நான் பாராட்டுகின்றேன். சேலத்தில் மருத்துவக் கல்லூரி ஒன்றைத் தொடங்க அரசு முடிவு செய்திருப்பதையும் விருதுநகர் சிவகங்கை அரசு மருத்துவ மனைகளில் ரூ. 30 லட்சம் செலவில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு திட்டமிட்டுள்ளதையும் வரவேற்கின்றேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஓரளவிற்கு நெல் உற்பத்திக்கு அடுத்து கரும்பு உற்பத்தியைச் சொல்லலாம். ஆனால் உற்பத்தியாகும் கரும்பை விற்க எங்கள் மாவட்டத்தில் சர்க்கரை ஆலை கிடையாது. மதுரை மாவட்டத்தில் உள்ள அலங்காநல்லூர் சர்க்கரை ஆலைக்குத்தான் கொண்டு வர வேண்டும். அப்படி எடுத்துச் செல்லுகிற நேரத்தில் மதுரை மாவட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து தான் எடுத்துக் கொள்கிறார்கள். எங்கள் மாவட்ட கரும்பை உடனடியாக எடுக்க மறுக்கிறார்கள். அதனால் விளைந்த கரும்பிற்கு தக்க சமயத்தில் கட்டிங் ஆர்டர் கிடைக்கப்பெறாததால் கரும்பு விவசாயிகள் விளைந்து காய்ந்த கரும்பை தீயிட்டுக் கொளுத்த வேண்டிய ஒரு அவல நிலை ஏற்படுகின்றது. அதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். அதைத் தடுக்கின்ற வகையில் இந்த நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள 10 சர்க்கரை ஆலைகளில் ஒன்றை எங்களது முகவை மாவட்டத்தில் நிறுவ **வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.**



இங்கே கவர்னர் உரையின் மீது பேசிய கடலாடி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு பிரணவநாதன் அவர்கள் முகவை மாவட்டத்தைப் பஞ்சப் பிரதேசமாக அறிவிக்க வேண்டும் என்று சொன்னார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிறது ஒத்துக்கொள்கின்றேன். அங்கே வரி வசூலை நிறுத்தி வைக்கவேண்டும் என்பதையும் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அங்கே வாழ்கின்ற ஏழை எளிய விவசாய மக்களுக்கு பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவேண்டும் என்று சொன்னார்கள். அதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அந்த மாண்புமிகு உறுப்பினர் கடந்த 1975 ஆம் ஆண்டில் நடைபெற்ற நிகழ்ச்சியை அவர்கள் என்னுடைய மாவட்டத்தைச் சார்ந்தவர் என்ற காரணத்தால் நான் நினைவுப்படுத்த கடமைப்பட்டிருக்கிறேன். 1975 ஆம் ஆண்டு கடுமையான வறட்சிக்கு இராமநாதபுரம் மாவட்டம் ஆளாக்கப்பட்டது.

(முற்பகல் 11.30)

குடிப்பதற்குத்தண்ணீர் இல்லை. உண்பதற்கு உணவு இல்லை. இருப்பதற்கு இடமில்லை என்ற அவல நிலை இருக்கிறது. எனவே அங்கே வாழக்கூடிய விவசாயிகள் எல்லாம் தங்களுக்குச் சொந்தமான ஆடு மாடுகளையெல்லாம் வந்த விலைக்கு விற்றுவிட்டு, தஞ்சைக்குத் தஞ்சம் புகுந்த நேரம். இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள இரயில்வே நிலையங்களிலேயெல்லாம், பெண்டு பிள்ளைகள் தங்களது மூட்டை முடிச்சுக்களுடன் இரவு பகலாகத் தஞ்சைக்குச் செல்வதற்காகக் காத்துக் கிடந்த அவலக் காட்சிகளை இந்த நாடு மறந்திருக்க முடியாது. அப்படிப்பட்ட நேரத்தில் அந்த இராமநாதபுரம் மாவட்டத்தைப் பஞ்சப் பிரதேசமாக அறிவிக்க வேண்டுமென்று சொல்லி இராமநாதபுரம் மாவட்ட அலுவலகத்தின் முன்னால் இன்றைய வேளாண்மைத் துறை அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு அண்ணன் காளிமுத்து அவர்கள் எங்களுடைய இயக்கத்தின் சார்பிலேயும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் இப்ராகீம் அவர்களும், பார்வேர்ட் பிளாக் கட்சியின் சார்பில் டி.பி.எம். பெரியசாமி அவர்களும் தமிழ்நாடு முஸ்லீம் லீக் கட்சியின் சார்பில் அம்சா முகமது அவர்களும் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்த அன்றையதினம், மூன்று நாட்களாகத் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்த காரணத்தினாலே, சோர்வுற்று, மயக்கமுற்றிருந்த நேரத்தில், அன்றையதினம் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, உண்ணாவிரதம் இருக்கக் கூடியவர்களின் நிலைமை என்ன என்று கேட்க, உண்ணாவிரதம் இருந்த பெருமதிப்பிற்குரிய டி. பி. எம். பெரியசாமி அவர்கள் மூன்று நாட்களாகி விட்டதால் மயக்கம் உற்று இருக்கின்றார் என்று சொல்ல, மறுநாள் காலையில் விமானத்தில் ஓடோடியும் வந்து பழசாற்றைக் கொடுத்து, சாகவிருந்த, அந்த இராமநாதபுரம் மாவட்டத்தைப் பஞ்சப் பிரதேசமாக அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி உண்ணாவிரதமிருந்த அனைத்துக் கட்சித் தலைவர்

களையும் அன்றையதினம் காப்பாற்றியதோடு மட்டுமல்லாமல், அதே மேடையில் புரட்சித் தலைவரவர்கள் தான் சுயமாகச் சம்பாதித்த பணத்திலிருந்து, அதிகமான வெளிச்சத்தின் முன்னால் இரத்தத்தை வியர்வையாகச் சிந்தி சம்பாதித்த பணத்தை, ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாயை இன்றைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் என்னிடத்திலும் கொடுத்து முகவை மாவட்டம் முழுவதும் பாதிக்கப்பட்ட இடங்களில் கஞ்சித் தொட்டிகளைத் திறந்து அந்த மக்களைக் காப்பாற்றுங்கள் என்று ஆணையிட்டார்கள். அப்படி அன்றைய தினம் மாவட்டம் முழுவதும் கஞ்சித் தொட்டிகளைத் திறந்து அந்த மக்களைக் காப்பாற்றுகின்ற பணியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபட்டது.

அப்படி ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற நேரத்தில் புதுக்கோட்டை மாவட்டமும் பஞ்சத்தினால் பாதிக்கப்பட்டு பலபேர் பட்டினியால் இறந்தார்கள் என்ற செய்தி வந்தது. அப்பொழுது ஆளுங்கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒருவர் கூடச் சொன்னார், பாம்பு கடித்து இறந்து விட்டார்கள் என்று. உடனே அன்றையதினம் புரட்சித் தலைவரவர்கள் எங்களோடு தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, புதுக்கோட்டையிலே கஞ்சித் தொட்டிகளைத் திறக்கச் சொன்னார்கள். அதன்படி புதுக்கோட்ட மாவட்டத்திலே பாதிக்கப்பட்ட இடங்களிலே கஞ்சித் தொட்டிகளைத் திறந்து, பாதிக்கப்பட்ட மக்களைக் காப்பாற்றுகின்ற பணியிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபட்டது.

அதைத் தொடர்ந்து மதுரை மாவட்டம், திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் கஞ்சித் தொட்டிகளைத் திறந்து புரட்சித் தலைவரவர்கள் பாதிக்கப்பட்ட அந்த மக்களையெல்லாம் அன்றையதினம் காப்பாற்றினார்கள்.

இராமநாதபுரம் மாவட்டத்தின் என்னுடைய தொகுதியான இளையான்குடி தொகுதி இருக்கக்கூடிய தொகுதிகளிலேயே மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். இளையான்குடி ஒன்றியத்தில் 55 பஞ்சாயத்துக்களும், 151 கிராமங்களும், ஆர். எஸ். மங்கலம் ஒன்றியத்தில் 40 பஞ்சாயத்துக்களும், 261 கிராமங்களும் கொண்டதுதான் இளையான்குடி தொகுதி. இதுவரையில் இரட்டை இலை அந்தத் தொகுதியில் போட்டியிட்டதில்லை. முதன்முறையாக இரட்டை இலை போட்டியிட்டு வெற்றி பெற்றிருக்கிறது. இந்தத் தொகுதியில் ரோடு வசதியில்லாத சாலைகள் தான் அதிகம். இளையான்குடி ஒன்றியத்தில் மேல்நிலை தேக்கத் தொட்டிகள் ஏராளமாகக் கட்டப்பட்டிருக்கின்றன. கடந்த ஆட்சிக் காலங்களில். ஆனால் அங்கேயிருந்து தண்ணீர்தான் வருவதில்லை. சிறுசிறு கிராமங்களில் குடிதண்ணீர்ப் பிரச்சினைதான் அதிகமாக இருக்கிறது. இளையான்குடி நகரத்திற்கு பரமக்குடி ஆற்றிலிலேயிருந்து சுமார் ஒன்றரை கோடி ரூபாய் செலவில் குடிநீர்த் திட்ட வேலை இன்றையதினம் நடைபெற்று வருகிறது. சுதந்



திரம் பெற்று 37 ஆண்டுகளாகியும்கூட இளையான்குடி மக்களுக்குக் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாத அவலநிலை இருந்ததைத் தீர்த்த வர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவரவர்கள் என்பதை நான் இந்த நேரத்தில் நன்றியுணர்வோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதைப்போல, இளையான்குடி நகரத்திற்கு இதுவரையில் பொது அரசு மருத்துவமனை இல்லாமல் இருந்ததை இன்றையத் தினம் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னாலேதான் அங்கே அரசு மருத்துவமனை நிறுவப்பட்டிருக்கிறது என்பதை நான் நன்றியுணர்வோடு சொல்லிக்கொள்ள இந்த நேரத்தில் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆர். எஸ். மங்கலம் ஒன்றியம் மிகவும் பின்தங்கிய நிலையில், மிகவும் மோசமாக இருக்கிறது. கிராம மக்களின் போக்கு வரத்துக்கான சாலைகள் இன்னும் மண் சாலைகளாகக் கூடப் போடப்படவில்லை. இருக்கிற ஒன்றிரண்டு சப்பிச் சாலைகளும் பராமரிப்பின்றிக் கிடக்கின்றன. இன்னும்கூட மழைக் காலங்களில் கட்டிலிலே வைத்துத்தான ஆட்களையும், பொருட்களையும் எடுத்துச் செல்ல வேண்டிய ஒரு அவல நிலை இருந்து வருகிறது.

குடிதண்ணீர்ப் பிரச்னையை எடுத்துக்கொண்டால் ஆர். எஸ், மங்கலம் மிகவும் பின் தங்கிய பகுதியாக இருக்கிறது. கோடை காலங்களில் கிணற்றில் தண்ணீர் இருப்பதல்லை. ஆங்காங்கே சிறு கிணறுகள் வெட்டினால்கூட தண்ணீர் உப்பாக இருக்கிறது. மக்கள் கால்நடைகளுக்குக் கூட குடிதண்ணீரை மைல்கணக்கிலே சென்று எடுத்து வர வேண்டிய ஒரு நிலைமையிருக்கிறது. அங்கே வாழுகின்ற மக்கள் அனைவருமே விவசாயத்தையே நம்பி உழைக்கின்றவர்கள், வானத்தைப் பார்த்து வாழ்பவர்கள். பெரிய கண்மாய்கள், சிறிய கண்மாய்கள். என்று நிரம்பியிருக்கின்ற அப்பகுதியில் மழை பெய்தால்தான் தண்ணீர் உண்டு. எந்த விதமான நீர்ப்பாசனத்தற்கும் வேறு வழியில்லை. வைகை பெய்தால்தான் உண்டு. பொய்த்தால் இல்லை என்பது விதியாகி விட்டது.

இந்த ஒன்றியத்தில் ஆர். எஸ். மக்கலத்தின் பெரிய கண்மாய் பண்டைதொட்டு பெயர் பெற்றது. நாரை பறக்காத நாற்பத் தெட்டு குறிச்சி என்ற பழமொழி இந்த கண்மாய் பற்றி இன்றும் விளங்கி வருகின்றது. நமது மாநிலத்திலேயே மிகப்பெரிய கண் மாய்களில் இதுவும் ஒன்று. 20 கிலோ மீட்டர் நீளமும் 20 மண்டகளையும் கொண்டது இக்கண்மாய். வைகை அணைக் கட்டின் 1/8 பங்கு கொள்பரப்பளவு தண்ணீர் தேக்கி வைக்கக் கூடியது இது. இதன் கீழ் உள்ள 72 சிறிய கண்மாய்களுக்கும் தண்ணீர் தரக்கூடியது. இந்தக் கண்மாயில் மொத்தப் பாசனப் பரப்பளவு சுமார் 10,000 ஏக்கர் உள்ளது. இதைப் புதிதாகப்

பார்ப்பவர்கள் இது கண்மாய் இல்லை, ஒரு மண்ணால் ஆன ஆணைக்கட்டு என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட கண் மாய்க்கு வைகை ஆற்றிலிருந்து ஒரு காலத்தில் தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. வைகை அணைக்கட்டு கட்டியபின் இந்தக் கண்மாய்க்குத் தண்ணீர் கிடைக்க வழியில்லை. அதை அன்றையத் தினம் செல்வாக்குப் பெற்றவர்கள் தட்டிச் சென்று விட்டார்கள். இந்த வாயில்லாப் பூச்சிகள் பறிகொடுத்து நிற்கின்றார்கள்.

கண்மாய்க்குத் தண்ணீர்வர கால்வாய்கள் இருக்கின்றன. ஆனால் தண்ணீர் தேவைப்படும்பொழுது எந்தக் காலத்திலும் தண்ணீர் கிடைத்ததில்லை. ஊரெல்லாம் வெள்ளம் கரைபுரண்டு ஓடும் போதுதான் அந்தக் கால்வாய்களில் தண்ணீர் வருகின்றது. காரணம் ஆர். எஸ். மங்கலம் பெரிய கண்மாய், வைகை அணைக் கட்டின் மூலத் தண்ணீர் பெறும் கண்மாய்களில் சேர்க்கப்படாமல் இருப்பதுதான்.

சுமார் 10,000 ஏக்கர் ஒரே இடத்தில் விவசாயம் செய்யத் தகுதியான நிலப்பரப்பும் அதற்குப் பாசனமும் செய்ய ஒரு மண்ணால் ஆன அணைக்கட்டுப் போல ஒரு கண்மாய் இருந்தும் அந்த ஆர். எஸ். மங்கலம் கண்மாயைச் சேர்ந்த மக்கள் .வருடந் தோறும் வானை நம்பும் வயிற்றுக்காரர்களாக இருக்கிறார்கள். வறட்சி அவர்களுக்குச் சொந்தமாக இருக்கின்றது. அதனால் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களாக இருக்கிறார்கள் இதுபோன்று அந்தத் தொதியில் உள்ள பல்வேறு கண்மாய்களை நம்பி வந்திருக்கின்ற மக்கள் விவசாயத்தை நம்பிக் கடன் பளுவால் அவதிப்படுகிறார்கள்.

எனவே மாமூலாக எல்லா ஒன்றியங்களுக்கும் ஒதுக்கப்படுவது போல் நிதி ஒதுக்கீடு இவ்வொன்றியத்துக்கும் ஒதுக்கினால் அது 'யானைப் பசிக்குச் சோளப்பொறி' ஆகுமே தவிர ஒரு நூற்றாண்டு ஆனாலும் கிராமங்களுக்கு இணைப்புச் சாலை போட முடியாது. இந்தவிஷேச பின்தங்கிய சூழ்நிலையை கருத்தற் கொண்டு இவ்வொன்றியத்திற்கு நிதி உதவி அதிகமாகச் செய்து தருமாறு வேண்டுகிறேன்,

ஆர். எஸ். மங்கலத்தைச் சுற்றி உப்புத் தண்ணீராக இருப்ப தால் குறைந்த பட்சம் நல்ல தண்ணீர் கிடைக்கும் என்று மக்களால் சொல்லப்படுகின்ற சித்தலூர், கண்ணாரேந்தல், ஆர். எஸ். மங்கலம் பெரிய கண்மாய் சிறுகவயல், செங்குடி பகுதிகளில் பெரிய ஆழ் குழாய்க் கிணறுகள் அமைத்துத் தந்து குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று இந்த அவையிலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்தை மட்டுமே தொழிலாகக் கொண்டு வாழ்கின்ற மக்கள் இம்மக்கள் ''உழன்றும் உழவே தலை'' என்று வாழ்கின்ற வேளாண் பெருமக்கள் கேட்பதெல்லாம் என்ன வைகை அணை



கட்டியதால் பாதிக்கப்பட்ட ஆர். எஸ். மங்கலம் பெரிய கண்மாய் மக்கள் இப்பொழுது உலகவங்கித் திட்டத்தின் மூலம் வைகை சீரமைப்புத் திட்டத்தின் மூலமாகவாவது எங்களை வாழ வையுங்கள் என்று கையேந்தி நிற்கிறார்கள். எங்கள் தொகுதி மக்களின் கனவை நனவாக்க ஆர். எஸ். மங்கலம் கண்மாய்க்கு வைகை அணைத் தண்ணீரிலிருந்து நிரந்தர நீர்ப்பாசனம் செய்து தர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

ஆர். எஸ். மங்கலத்தில் பெண்களுக்கான அரசு உயர்நிலைப் பள்ளி ஆரம்பிப்பதற்காக கடந்த மூன்றாண்டுகளாக முயற்சிகள் நடந்துகொண்டுஇருக்கின்றன. அதற்குரிய மக்கள் பங்குத் தொகை யையும் ரூ. 10,000 டெபாசிட் கட்டி மூன்றாண்டுகளாகின்றன, இந்தக் கல்வி ஆண்டிலாவது இக்கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுகின்றேன்.

ஆர். எஸ். மங்கலம் ஆரம்ப சுகாதார நிலையம் முதல் கிரேடாக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்குரிய வசதி களான எக்ஸ்ரே பிளாக், இரத்த சேமிப்பு நிலையம், படுக்கை கசதி செய்து தரப்படவில்லை. எனவே இவைகளை உடனடியாக செய்து தர வேண்டுகிறேன். பெண் டாக்டர் இல்லாத குறையால் மக்கள் அவதிப்படுகிறார்கள், எனவே ஆர். எஸ். மங்கலத்தி லுள்ள ஆஸ்பத்திரியில் ஒரு பெண் டாக்டரை நியமிக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறையிலும் அது பின்தங்கிய பகுதியாக இருக்கின்றது. இந்த ஒன்றியத்திற்குள்ளேயே ஒரு முனையி லிருந்து மறு முனே செல்வதற்குச் சுற்றி, சுற்றி செல்ல ஒருநாள் தேவைப்படுகிறது. எனவே நகரப் பேருந்துகள் விடுவதின் மூலம் இச்குறையை நிவர்த்தி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். தேவகோட்டை டூ தேவிப்பட்டணம் (வழி) மேல்பணையூர், கீழ்பணையூர், ஆயிரவேலி வழியாக திருவொற்றியூர் பாதம்பரியா கோவில் வரை உள்ள மண் ரோட்டை கிராவல் அடித்து மெட்டல் போட்டு பஸ் போக்குவரத்து ஏற்படுத்தித் தரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள் கிறேன்.

ஒட்டுமொத்தத்தில் மாவட்டங்களில் பின்தங்கிய மாவட் டத்தைப் பிரித்து, விஷேச நிதி ஒதுக்குவது போல ஒன்றியங்களில் ஆர். எஸ் மங்கலம் ஒன்றியத்தைப் பின்தங்கிய ஒன்றியமாகப் பிரித்து, அதற்கு விஷேச நிதி ஒதுக்கித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, இந்த ஆண்டு மழை பொய்த்ததால் எனது தொகுதி கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. குடிநீர்ப் பஞ்சமும் ஏற்பட்டுள்ளது. அவர்களுக்கு உணவு, குடிநீர் உதவி களைத் தட்டுப்பாடின்றி பங்கீடு செய்து தரவும் வறட்சி நிவாரணப் பணிகள் மூலமாக வேலை வாய்ப்புகளைத் தந்து அவர்கள்

வாழ்க்கைக்கு வழி செய்து தரவும் வேண்டுகின்றேன். வறட்சி நிவாரணப் பணிகளை உடனடியாக மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறேன். வரி வசூலை உடனடியாக நிறுத்திட வேண்டும் என்று இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வேறு வழியில்லை என்பதையும் கூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11.40

*திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு முதலிலே என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுவரை பேசிய அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் தங்கள் தொகுதியிலே மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து தரப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எதிர்க் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் மட்டுமல்ல, ஆளுங் கட்சியைச் சேர்ந்த நண்பர்களும் சொல்லியிருக்கிறார்கள். இப்படிப் பார்க்கும்போது எத்தனையோ மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள், தன்னிறைவுத் திட்டங்கள் என்று இந்த அரசு நிறைவேற்றி கொண்டிருக்கிறது. இந்த மாதிரித் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டும் கூட அந்தத் திட்டங்கள் சரியான முறையிலே செயல்பட்டு மக்கள் தன்னிறைவு அடைந்ததாகத் தெரியவில்லை.

ஆளுங்கட்சி நண்பர்கள் கூட சில பேர்கள் சொன்னார்கள், சாலைகள் போடுவதிலே அதிகாரிகள் ஏதோ தப்பு செய்து விட்டார்கள் என்று. இப்படிச் சொல்வதை நாம் பார்க்கும்போது அதிகாரிகள் தப்பு செய்வதாலே இவ்வளவு பெரிய பிரச்சனை வந்து விடாது. அதெல்லாம் 1% 2% என்று மக்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி என்றால் எப்படித் தப்பு நடக்கிறது என்று தெரியவில்லை.

நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. ப. உ. ச. அவர்கள் ஒரு குழு நியமிக்கப் போவதாகச் சொன்னார்கள். அப்படி ஒரு குழுவை நியமிக்கும்போது இந்தத் தப்பு எப்படி நடந்தது என்பதைப் பார்த்து, சரியான முறையிலே, இனிமேலாவது நடைபெற வழிவகை செய்து, இந்தத் தன்னிறைவுத் திட்டம் என்பதை மக்கள் தன்னிறைவு பெற ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். தன்னிறைவுத் திட்டம் 50% தான் மக்களுக்குச் சேர்ந்திருக்கிறது என்பது எங்களுடைய தோராயமான கணக்கு, மக்கள் கணக்கு, என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக வரி விதிப்பு. மாண்புமிகு முதல்வர் அவர்கள் 15—9—1985-லேயிருந்து, அண்ணா பிறந்த நாளிலேயிருந்து மதுவிலக்கு அமுல்படுத்தப்படும் என்று சொன்னார்கள். ஆனால், நிதி அமைச்சருடைய நிதி நிலை அறிக்கையிலே சாராயத்



தினுடைய வருமானம் ரூ. 40 கோடியாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படியென்றால் இந்த வருஷம் மதுவிலக்கை அமுல் படுத்தப்போவதில்லை, மது தொடர்ந்து விற்கப்படும் என்பது உறுதியாகிறது. இது ஒரு அரசினுடைய உறுதிமொழி நிறுத்தி வைக்கப்படுகிறது, மீறப்படுகிறது என்று நான் கருதுகிறேன். நிதி அமைச்சர் அவர்கள் இன்னும் மறுபரிசீலனை செய்தாவது, 15—9—1985 முதல் மதுவிலக்கை அமுல்செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போல் மோட்டார் வாகன வரி. ஏற்கனவே மத்திய அரசினுடைய வரவு-செலவுத் திட்டத்திலே மோட்டார் டீசலுக்கு வரி அதிகம் விதித்திருக்கிறார்கள். ஏற்கனவே டயர்கள் எல்லாம் விலை கூடி இருக்கின்றன. தனியார் பஸ் அதிபர்கள், இருக்கைகளுக்கு விதித்துள்ள கட்டணங்களை அரசு குறைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நிலையிலே மோட்டார் வாகன இருக்கைக் கட்டணங்களை இந்த அரசு உயர்த்தி இருப்பது பஸ் கட்டண உயர்வுக்கு வழி செய்வதாக இருக்கிறது. போக்குவரத்துத் துறை அமைச்சர் கூட பஸ் கட்டணம் உயரும் என்று சொல்லியிருக்கிறார். இதையெல்லாம், ஏழைகள், பொதுமக்கள் தாங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, மோட்டார் வாகன வரியை அவசியம் ரத்து செய்ய வேண்டும். பஸ் கட்டணங்கள் கூடாமல் இருப்பதற்கு மோட்டார் வாகன வரியையே ரத்து செய்து விட்டால்கூட நல்லது என்று கருதுகிறேன். இதில் பெரிய வருமானம் வந்து விடுவதாக எனக்கு தெரியவில்லை. ரூ. 40, ரூ. 50 கோடிதான் வருமானம் வருகிறது. ஆயிரக்கணக்கான கோடி வருமானம் வரக்கூடிய இந்த பட்ஜெட்டிலே மோட்டார் வாகன வரியை இன்னும் கொஞ்சம் குறைத்தால் பஸ் கட்டணம் உயராது இருக்க வழி வகுக்கும் என்று சொல்லி, மோட்டார் வாகன வரியை முன்பு இருந்ததைவிட இன்னும் கொஞ்சம் குறைத்து இந்தச் சர்க்கார் அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல் வணிகப் பெருமக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையான ஒருமுனை வரியிலே இந்த அரசு கொஞ்சம் கவனம் திரும்பியிருப்பதைப் பாராட்டுகிறேன். 5 பொருள்களுக்கு ஒருமுனை வரி விதித்திருக்கிறார்கள். இன்னும் எத்தனையோ பொருள்கள் இருக்கின்றன, ஆனால் முதலில் இவை என்று சொல்லியிருக்கிறார்கள். முதலிலே என்று சொல்வதிலே வெல்லத்தை எடுத்துக்கொண்டிருக்க வேண்டும். வெல்லம் குடிசைத்தொழில். வெல்லமானது ஏழை, எளிய மக்கள் தயாரிக்கக் கூடியது சீனிக்குப் பதிலாக உபயோகப்படுத்தப்படுகிறது. அந்த வெல்லத்தை இதில் சேர்ப்பதால் ஒருமுனை வரி என்பது போன்ற பல பிரச்னைகளை உண்டாக்குகிறது. நீங்கள்

ஒருமுனை வரி என்பதை, பர்சேஸ் டாக்ஸ், அதாவது கொள்முதல் டாக்ஸ் என்று 5% போட்டால் இப்பொழுது இருக்கும் வருமானத்திற்கு குறையாமல் வரும் என்று வணிகர்கள் சார்பிலே கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. பல தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. வணிகர்கள் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்து இந்த ஒருமுனை வரியை பர்ச்சேஸ் டாக்சாகபோட்டு 5% ஆக ஆக்க வேண்டுமென்று கேட்டுச் கொள்கிறேன்.

அதேபோல தீப்பெட்டித் தொழில். இந்தத் தீப்பெட்டித் தொழிலை குடிசைத் தொழிலாக மத்தியிலே ஜனதா அரசாங்கம் இருக்கிறபோது அறிவித்து இதற்கு வரிவிலக்கு செய்திருந்தார்கள். இப்போது நான்கைந்து ஆண்டுகளாக குடிசைத் தொழிலான தீப்பெட்டித் தொழிலுக்கு வரி விதித்து இருக்கிறார்கள். வணிகர்கள் இதற்காக போராட்டங்கள், உண்ணாவிரதங்கள் என்று எத்தன்னயோ செய்தும் கூட அந்தப் பிரச்சனை இன்னும் தீர்க்கப்படாமல் இருக்கிறது. ஆகவே குடிசைத் தொழிலான தீப்பெட்டித் தொழிலுக்கு வரியை அவசியம் இந்த அரசு நீக்க வேண்டும். அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற ஏழை, எளிய மக்களை, குறிப்பாக பெண்களை காப்பாற்ற வேண்டும் என்பது எங்களுடைய கருத்தாகும்.

அதேபோல இப்போது பால் விலையை உயர்த்தி இருக்கிறார்கள். விலை திருத்தப்பட்டிருக்கிறது என்று ஒரு அறிக்கையிலே சொல்லி இருக்கிறார்கள். திருத்தியமைக்கப்பட்டது என்றால் அதற்கு என்ன அர்த்தம் என்று எங்களுக்குத் தெரியவில்லை. விலை கூட்டப்பட்டது என்று சொல்லாமல் திருத்தியமைக்கப் பட்டது என்று சொல்கிறார்கள். பால் விலை லிட்டருக்கு 65 பைசா கூடியிருக்கிறது என்றால் சென்னை நகரத்தில் $4\frac{1}{2}$ லட்சம் லிட்டர் விற்கப்படுகிறது என்றால் மாதம் ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் அதிகமாக இங்கேயுள்ள மக்கள் கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. பாலானது சிறிய குழந்தைகள் சாப்பிடக் கூடிய ஆகாரம். சிறார் நலத்திட்டத்தை வைத்திருக்கிற இந்த அரசு பாலுக்கு மேலும் விலையை உயர்த்துவது அவ்வளவு நல்லதாகத் தெரியவில்லை. பால் மாடுகளை வைத்து இருப்பவர்கள் நஷ்டப்படுவதாக எங்களுக்குத் தெரியவில்லை. கிராமப்புறங்களில் பால் டெப்போக்களை வைத்திருக்கிற தனியார் அவற்றை இலாபத்தில்தான் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த நிலையில் பால் விலையை கூட்ட வேண்டிய அவசியமில்லை என்பது எங்களுடைய கருத்து.

அடுத்து முதியோர் பென்ஷன் கொடுக்கிறார்கள். மாவட்டத்தில் தாலுக்கா அளவில் கேட்கிறபோது எங்களுடைய கோட்டா முடிந்து விட்டது என்று சொல்கிறார்கள். அந்தக் கோட்டா என்பது என்னவென்று எங்களுக்குத் தெரியவில்லை. ஒரு வருடம், இரண்டு வருடங்களுக்கு முன்னால் கொடுத்தவர்கள் எல்லாம் இன்னும பென்ஷன் வாங்கமுடியாமல் இருக்கிறார்கள். ஏற்கனவே



இருக்கிற முதியோர்கள் இறந்தால் தான் இவர்களைச் சேர்ப்பார்களா? அல்லது இதற்கு எப்படி நிதி ஒதுக்கப்படுகிறது? கொடுப்பதோ மாதத்திற்கு 35 ரூபாய். இதிலே ஒரு வருடம் இரண்டு வருடமென்று காத்திருக்க வேண்டியிருக்கிறது. அதே போல முதியோர் கல்வித்திட்டம் என்று ஒரு திட்டத்தை வைத்து 5 லட்சம் 6 லட்சம் படிப்பதாகச் சொல்கிறீர்கள். இந்த முதியோர் கல்விக்கு ஆகிற தொகையாவது கொஞ்சம் குறைத்து முதியோர்களுக்கு பென்சன் கொடுக்க வேண்டும். முதியோர்களுக்கு மாதத்திற்கு 100 ரூபாய் கொடுப்பீர்களானால், விலைவாசி உயர்ந்திருக்கிற இந்த நேரத்தில் முதியோர்கள் தங்களுடைய வாழ்க்கையை நல்ல முறையில் கழிப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். இந்த முதியோர் பென்ஷனை மனுக்கள் கிடைத்து ஒரு மாதத்திற்குள் சாங்ஷன் செய்யும்படியான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மின்சக்தியைப் பற்றி சொல்லி இருக்கிறார்கள். புனல் மின் நிலையம், அனல் மின் நிலையம் எல்லாம் சரியாக செயல்பட இன்னும் 2 வருடங்கள் ஆகலாம் என்று சொல்கிறார்கள். ஆனால் மின்துறை அமைச்சர் அவர்கள் மே மாதத்திலிருந்து மின் சக்தி தட்டுப்பாடு இருக்காது என்று சொல்கிறார்கள். அது எப்படி என்று எங்களுக்குத் தெரியவில்லை. ஆனால் நிதிநிலை அறிக்கையில் சொல்கிறபோது 86-ல் முடிக்கப் படும், 1987-ல் முடிக்கப்படும் என்று சொல்லி இருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் சொல்வது நல்லதாக இருக்கவேண்டுமென்று விரும்புகிறேன். ஏனென்றால் மின் சக்தி தட்டுப்பாட்டைப் பொறுத்தவரையில் நாட்டின் முதுகெலும்பாக இருக்கிற விவசாயிகளும், தொழிலாளர்களும், தான் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். விவசாயம் பாதிக்கப்படுகிறது, தொழிற்சாலையில் லே-ஆப் கொடுக்கப்படுகிறது. ஆகவே மின்சக்தியை நல்லமுறையில் உற்பத்தி செய்து நாட்டை வளப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சிறார் நலத்திட்டத்தைப் பற்றி ஒருசில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். சிறார் நலத்திட்டத்திற்காக வருடத்திற்கு 160, 170 கோடிகள் செலவழிக்கிறீர்கள். சிறிது சிறிதாக அதிகப்படுத்தி இப்போது 15 வயதுள்ள குழந்தைகள் வரைக்கும் இலவச சத்து உணவு திட்டத்தை கொண்டு வந்திருக்கிறீர்கள். இது இளைஞர் ஆண்டு. மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது இளைஞர் ஆண்டு என்பதால் இளைஞர்களுக்கும் சத்துணவுத் திட்டம் நீடிக்கப்படும் என்று அறிவித்தாலும் அறிவிக்கலாம், அப்படி அறிவிக்கப்பட்டால் $1\frac{1}{2}$ கோடி பேர்களுக்கு இந்தச் சத்துணவுத் திட்டம் விஸ்தரிக்கப்படலாம். என்ன செய்ய இருக்கிறீர்கள் என்பது எங்களுக்குத் தெரியவில்லை. நான் சொல்ல விரும்புவது எப்படி இந்த அரசு சத்துணவுத் திட்டத்தைப் போட்டு பெருமையாக நினைக்கிறதோ, அந்தப் பெருமையை குழந்தைகளைப் பெற்ற தாய் தகப்பனர்களும் பெறுவதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டும்.

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1985 ஏப்ரல் 2

[முற்பகல் 11.50]

இது இந்த நாட்டு குழந்தைகளை, இளைஞர்களை ஒருபக்கம் சோம்பேறிகளாக ஆக்குகின்ற திட்டம் என்பது என்னுடைய கருத்து. ஆகவே, நான் சொல்வதெல்லாம் இதற்காக நீங்கள் செலவு செய்கிற 200 கோடி ரூபாய் அல்லது 150 கோடி ரூபாயை ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு தொழில் மையங்களை ஏற்படுத்துவதற்குப் பயன் படுத்துங்கள். மத்திய அரசின் அனுமதி இதற்குத் தேவை என்றால் காங்கிரஸ் கட்சி இப்போது உங்களோடு இருக்கிற கூட்டணி கட்சிதான், ஆகவே, அனுமதியைப் பெறுவதில் தடை இருக்காது. ஆகவே, தொழில் மையங்களை ஏற்படுத்தி, சத்துணவு சாப்பிட தகுதி படைத்த குழந்தைகளின் தாய், தந்தையர்களை அங்கே வேலைக்கு அமர்த்தி, அவர்கள் வேலை செய்து, சம்பாதித்து, தங்கள் குழந்தைகளுக்கு சாப்பாடு போட்டார்கள், புஸ்தகம் வாங்கிக் கொடுத்தார்கள், உடை வாங்கிக் கொடுத்தார்கள் என்ற பெருமையை அந்த ஏழை தாய் தந்தையருக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

சத்துணவு கொடுப்பதிலே எனக்கு கருத்து வேறுபாடு இல்லை. நீங்கள் கொடுக்கிற எண்ணிக்கைப் பார்த்தால் நாட்டில் உள்ள அனைவருக்கும் சத்துணவு வழங்குகின்ற சூழ்நிலை இருக்கிறது. குழந்தைகள் எல்லாம் வட்டிலைத் தூக்கிக்கொண்டு செல்ல வேண்டும், உணவு வாங்கிச் சாப்பிட வேண்டும் என்ற நிலை ஒருபுறமிருக்க, எல்லாக் குழந்தைகளும் இலவச உணவு சாப்பிடுவதில்லை. அதனால் இதிலே பல தவறுகள் ஏற்பட வழிவகை இருக்கிறது என்று புகார் வருகிறது. எல்லா மாணவர்களுக்கும் என்றுதான் கணக்கைச் சொல்கிறார்கள். அது சரியல்ல. சாப்பிடுகிறவர்களுடைய கணக்கைப் பார்த்து, அவர்களுக்கு நல்லமுறையில் சாப்பாடு போடலாம். புகார் வராத அளவுக்குச் செய்யலாம். வறுமையிலே இருக்கிறவர்களுக்கு, முடியாதவர்களுக்கு சத்துணவு தரலாம். மொத்தமாக சத்துணவு தரும்போது அரசாங்கத்தின் பணம்தான் வேஸ்ட் ஆகிறது. இதிலே ஒரு மாறுபாடு செய்து, உற்பத்திக்கு இந்தப் பணத்தைச் செலவிடுவதாக இருந்தால் பயனுடையதாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து.

ஏழை மாணவர்களுக்கு இலவச உடை தருகிறோம், புஸ்தகம் தருகிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள், இதில் எவ்வளவு பேர் பயன் பெறுவார்கள் என்று கணக்கெடுத்து, அந்த அளவுக்கு செலவு செய்துவிட்டு மீதி இருக்கிற பணத்தை மற்ற திட்டங்களுக்குப் பயன்படுத்தலாம். குறிப்பாக தகுதி படைத்த முதியோர் எல்லோருக்கும் பென்ஷன் கொடுக்கலாம். கொடுக்கின்ற பென்ஷனை கொஞ்சம் கூட்டிக்கொடுக்கலாம்.



1985 ஏப்ரல் 2] [திரு எ. எஸ். ஏ. ஆறுமுகம்]

அடுத்து, இருப்பது காவல் துறை. காவல் துறையைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு பல வசதிகளை செய்து கொடுக்க வேண்டுமென்பது என்னுடைய விருப்பமும் கூட. ஏனென்றால் விருதுநகரில் இருக்கக்கூடிய டி.எஸ்.பி-க்கு சரியான வீடு இல்லாமல் இருக்கிறார். வாடகைக்கு வீடு கொடுக்கவும் யாரும் தயாராக இல்லை. இப்படி பல்வேறு இடங்களில் வீட்டுவசதி இல்லாமல் இருக்கிறார்கள். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

காவல் துறையினர் எஃப்.ஐ.ஆர். பதிவு செய்வதற்கு முன்னால் சில நடைமுறைகளை கடைப்பிடிக்க இந்த அரசு உத்தரவிட வேண்டும். அடிபட்டவன் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனால் அவனைப் பிடித்து உள்ளே வைத்துவிடுகிறார்கள். ஏனென்றால் அடித்தவன் அடிபட்டவனுக்கு முன்னால் போய் புகார் கொடுத்து விடுகிறான். இந்த நிலைமை இருக்கக்கூடாது. போலீஸ் ஸ்டேஷனில் புகார் கொடுக்கிறார்கள் என்றால் இருவருடைய புகார்களையும் பரிசீலனை செய்து, நியாயம் எந்தப்பக்கம் இருக்கிறது என்று பார்த்து அதன்படி செய்ய அரசு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நினைவாலயங்களைப் பற்றிச் சொன்னார்கள். அதில் கருத்து வேறுபாடு இல்லை. கவிஞர் கண்ணதாசனுக்கும், திருப்பூர் குமரனுக்கும் நினைவாலயம் அமைப்பதிலே எங்களுக்கு மகிழ்ச்சி. ஆனால் இப்படி நினைவாலயங்களை அமைத்தால் மட்டும் போதாது, அவை முறைப்படி பராமரிக்கப்பட வேண்டும். சில தினங்களுக்கு முன்னால் காமராஜர் நினைவாலயத்திற்கு சென்று பார்த்தேன். அது சரியாகப் பராமரிக்கப்படவில்லை. புல் பூண்டுகள் காய்ந்து, பார்ப்பதற்கு அழகாக இல்லை. ஆகவே சரியான முறையில் மெயின்டனன்ஸ் பண்ண ஏற்பாடு செய்ய வேண்டும்.

அது மட்டுமல்ல. அங்கே மக்கள் வந்து தங்கி செல்லக்கூடிய அளவுக்கு மக்களுக்கு நல்ல முறையில் வசதி செய்து தர வேண்டும்.

நினைவுச் சின்னங்களைப் பற்றிச் சொல்வதாக இருந்தால் மதுரையில் உலகத் தமிழ் மாநாட்டின்போது இங்கே அமைக்கப்பட்டிருக்கிற சிலைகள் எல்லாம் கேட்பாரற்ற நிலையில் இருக்கின்றன. அதைப்போன்று மறைமலை அடிகள் சமாதி பராமரிப்பு இல்லாமல் இருக்கிறது. எனவே நினைவாலயங்கள், நினைவுச் சின்னங்களை அமைக்கும்போது தொடர்ச்சியாக அவர்களுக்குப் பின்னால் வரும் சந்ததியினர் கண்டுகளிக்கவும் அங்கே தங்கிச் செல்லவும் நல்லமுறையில் வசதிகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வங்கிகள் ஏழைகளுக்கு கடன் உதவி செய்வது பற்றி ஏற்கெனவே ஒருமுறை சொல்லியிருக்கிறோம். சொல்லியிருக்கிற வரன்முறைகளின்படி வங்கிகள் நடந்துகொள்ள வேண்டும். கட்சி வித்தியாசமின்றி ஏழைகள் யார் வந்தாலும் அனைவருக்கும் உதவி செய்ய வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசுக்குச் சொல்ல வேண்டும். சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கும் சொல்ல வேண்டும்.

குடும்பநலத் திட்டம் பற்றிச் சொல்லும்போது, விதவைகளுக்கும் 50 வயதுக்கு மேற்பட்ட தாய்மார்களுக்கும் கூட குடும்பநலத் திட்ட அறுவை சிகிச்சை செய்யப்படுவதாக புகார் வருகிறது. அரசு அதை சீர்படுத்த வேண்டும். புகாருக்கு இடமில்லாமல் செய்ய வேண்டும்.

குடும்பக் கார்டு பற்றி சொல்லும்போது, ஆயிரம் குடும்பக் கார்டுகளுக்கு ஒரு டெப்போ என்று சொல்கிறார்கள். ஆளுநர் உரையிலே 600 குடும்ப அட்டைகளுக்கு ஒரு டெபபோவை வைக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே 500 குடும்ப அட்டைகளுக்கு ஒரு கடை என்று கொண்டு வந்தால் அது மிகவும் வசதியாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்திலே அந்த கடைகளுக்கு பொருள்கள் கொடுக்கும் போது 100 பர்சென்ட் பொருள்களையும் சப்ளை செய்தால் மக்களுக்குத் தொந்தரவு இல்லாமல் இருக்கும் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அவை முன்னவர் அவர்கள் சொல்லும்போது, அன்பும் ஆதரவும் ஒத்துழைப்பும் வேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள் நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, நாங்கள் எதிர்க் கட்சிகள் தானே தவிர, எதிரிக் கட்சிகள் அல்ல என்பதை உங்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து காமராஜர் மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே எங்களுடைய மாவட்டமானது வானம்பார்த்த பூமியாகும். எங்களுக்கு தண்ணீர் வசதி கிடையாது ஆதலால் மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி கேரளாவிற்கு வீணாகச் செல்லும் தண்ணீரை தடுத்து, அங்கே ஒரு அணையைக் கட்ட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதற்கான முயற்சிகள் எல்லாம் நடைபெற்றது. அதை நீங்கள் எடுத்து விவசாயத்திற்கு தண்ணீர் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதற்கிடையில் இடைக்காலத் திட்டமாக பாபநாசம் சிஸ்டத்திலேயிருந்து, ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், சிவகாசி, விருதுநகர் வழியாக குடிநீருக்கு ஏற்பாடு செய்யவேண்டும். குடிநீரிலே விருதுநகர் ரொம்பவும் பின்தங்கிய தொகுதி, அதேபோல் என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் கல்போது





சின்னவாடி என்ற கிராமங்களிலிருந்து கன்னிசேரி வழியாக வருவதற்கு ஆற்றில் பாலம் இல்லாமல் மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். என்வே என்னுடைய தொகுதியான விருதுநகர் தொகுதியானது மாவட்ட தலைநகராக ஆனது உங்களுக்கு எல்லாம் தெரியும். ஆகவே மாவட்டத் தலைநகருக்கு வருவதென்றால், சிவகாசியைச் சுற்றி, சுமார் 25 கிலோ மீட்டர் சுற்றி வரவேண்டியது இருக்கிறது. ஆகவே அங்கே அவசியம் ஒரு பாலத்தைக் கட்டிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டு, இந்த அளவிலே எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

*திரு. பரிதி இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்த என்னைப் போன்ற சாதாரண இளைஞன் கூட அரசியல் ரீதியாக இந்த நாட்டுக்கு உழைக்க முடியும் என்ற சமுதாய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திய பகுத்தறிவுப் பகலவன், வெண்தாடி வேந்தன், ஈரோட்டுச் சிங்கம், தந்தை பெரியார் அவர்களை இந்த நேரத்திலே நன்றியுடன் நினைவுகூர்ந்து, நினைத்து, 18 ஆண்டுக்காலம் இந்த நாட்டின் அரியணையில் இருந்த தேசியக் கட்சியின் ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைத்து, மாநிலக் கட்சியின் ஆட்சியை துவக்குவதற்கு வழி வகுத்துவிட்டு, இன்று வங்கக் கடலோரம் வெண்மணல் பரப்பிலே 6 அடி சந்தனப் பேழையில் உறங்கியும், உறங்காமலும், உறங்கிக் கொண்டு இருக்கின்ற அறிவுலக மேதை பேரறிஞர் அண்ணா அவர்கள் துயில்கின்ற அந்த திசை நோக்கி, என்னுடைய வணக்கத்தைச் செலுத்தி, 7 ஆண்டுக்காலம் இந்த நாட்டின் அரசுப் பொறுப்பை ஏற்று, தமிழ் இனத்தின் வரலாற்றை வெளி உலகுக்கு எல்லாம் ஒளிவூட்டிக்காட்டிய என்னுடைய இனமானத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் பொற்பாதங்களுக்கு என்னுடைய வணக்கத்தையும் நன்றியையும் காணிக்கையாக சமர்ப்பித்து, என்னை, இந்த அவையிலே உறுப்பினராக பொறுப்பேற்பதற்கு வாய்ப்பு அளித்த, என்னுடைய பெரம்பூர் தொகுதி மக்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே வீற்றிருப்பவர்களிலே, நான்தான் வயதிலே மிகவும் இளையவனாக இருப்பேன் என்று கருதுகிறேன். இதைச் சொல்வதற்குக் காரணம், வீட்டிலே கடைக்குட்டிகளுக்கு கொஞ்சம் அதிகமாக சலுகை கொடுப்பார்கள், அதைப்போல இது என்னுடைய முதல் பேச்சு என்பதால், அருள்கூர்ந்து மணியோசை செய்து, என்னுடைய குரலோசையை கட்டுப்படுத்தவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் வயதிலே இளையவனாக இருந்தாலும் இந்த மாமன்றத்தின் கண்ணியத்தை கட்டிக் காப்பாற்றுவதில் யாருக்கும் இளையவனாகவும், இளைத்தவனாகவும் இருக்க மாட்டேன் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். நான் இங்கே எடுத்து வைக்கின்ற கருத்துக்கள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்படும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லாவிட்டாலும், சொல்லுகின்ற முறையிலே சொன்னால் செவி சாய்ப்பீர்கள் என்ற விளைவின் காரணமாக சில பல கருத்துக்களை எடுத்து வைக்க முற்படுகிறேன். '' இனிய உளவாக இன்னாத கூறல், கனிஇருப்பக் காய்கவர்ந்து அற்று'' என்று வள்ளுவன் கூறிய குறளை இலக்கணமாக எடுத்துக் கொண்டு என் உரையை நிகழ்த்த முற்படுகின்ற நேரத்தில், தமிழ் அறிந்த நாவலரே இந்த அவையின் முன்னவராக கொண்டுள்ள ஆளும் கட்சியினர் '' செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன் கவிகைக்கீழ்த் தங்கும் உலகு'' என்ற குறளுக்கு இணங்க என் உரையை ஏற்பார்கள் என்று நம்புகிறேன். நான் இந்த நிதி நிலை அறிக்கையின் மீது மட்டுமே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முற்படுவதால் மாண்புமிகு நாவலர் அவர்கள் அந்தக் கருத்துக்களை ஆராய்ந்து அறிந்து, ஆவண செய்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே 2,368 கோடி ரூபாய் வருவாய் கிடைக்கும் என்று திட்டமிடப்பட்டு உள்ளது, இது கடந்த ஆண்டை விட 150 கோடி ரூபாய் அதிகம் என்றும் கூறப்பட்டு இருக்கிறது ஆனால் 54 கோடி ரூபாய்க்கு புதிய வரிகள் விதிக்கப்பட்டு, ஏறத்தாழ 264 கோடி ரூபாய் பற்றாக் குறை ஏற்படும் என்ற எதிர்ப்பார்ப்போடு இந்த அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. வரிகள் போடாமல் எந்த அரசாங்கத்தையும் நடத்த முடியாது.

(நண்பகல் 12.00)

அதேநேரத்தில் வரிகள் போடுவதாலேயே அது அரசாங்கமும் ஆகிவிடாது. எந்தெந்த இனங்களுக்கு வரி போடலாம் என்று தீர்மானிப்பது ஒரு அரசாங்கத்தின் உரிமை. அந்த உரிமையை பயன்படுத்தி யார் யாருக்கு வரி விதிப்பது என்பதும் அந்த அரசாங்கத்தை நடத்திச் செல்கிற ஆளும் கட்சியின் மனப்பான்மையை, கொள்கையை, மதி நுட்பத்தைப் பொருத்ததாகும். ஆனால் ஏழை எளிய மக்களை பாதிக்கிற வகையில் வரிவிதிப்பது ஜனநாயக மனப்பான்மை கொண்ட எந்த ஒரு அரசாங்கமும் செய்ய முன் வராது. ஒரு அரசாங்கம் ஏழை எளிய மக்களை பாதிக்கிற வகையில் வரிகளை விதித்து விட்டு அந்த வரிவிதிப்பிற்கு நியாயம் கற்பிக்கப்படுமேயானால் அது மக்கள் விரோத அரசாங்கமாகத்தான் இருக்க முடியும்.

ஜனநாயகத்தில் ஏற்பட்ட விபத்தின் காரணமாக பதவிக்கு வந்துவிடுகிற சில ஏதேச்சாதிகார சக்திகள் தங்களுடைய ஏதேச்சாதிகார எண்ணங்களுக்கும், செயல்களுக்கும் ஜனநாயக முலாம் பூசுவது என்பது அண்மைக் காலமாக இந்த நாடு கண்டுவருகிற





உண்மையாகும். நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையை நல்ல உணர்வோடு தயாரித்திருந்தாலும் நாட்டினுடைய வாட்டத்தைப். போக்கக்கூடிய நல்ல திட்டங்கள் இடம் பெறுவதற்கு இந்திய துணை கண்டத்தின் பொருளாதார நெருக்கடி இடையூறாக இருக்கிறது என்று குறிப்பிட்டிருந்தாலும், ஒரு சில விஷயங்களை மாண்புமிகு நாவலர் அவர்கள் தவிர்த்திருக்கலாம்.

மோட்டார் வாகனங்களுக்கு வரிவிதிப்பதன் மூலம் 10 கோடி ரூபாய் வருவாய் கூடும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பெருவாரியான வாக்குகளைப் பெற்று, மக்களின் நம்பிக்கையைப் பெற்று, பெரும்பான்மையான ஆதரவை பெற்று 3வது முறையாக ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருக்கிறோம் என்று உங்களை நீங்களே சுய விமர்சனம் செய்துக் கொள்கிற நீங்கள், உங்களுக்கு அத்தனை பெருமையையும், அத்தனை புகழையும் தந்த மக்களுக்கு நீங்கள் இந்த வரிவிதிப்பின் மூலம் இவ்வளவு பெரிய தண்டனையை வழங்கலாமா என்று கேட்டுக் கொள்ள ஆசைப் படுகிறேன். நான் நிச்சயமாக நம்புகிறேன், நம்முடைய நாவலர் அவர்கள் அதை விரும்பிச் செய்திருக்க மாட்டார். ஏனென்றால் மாண்புமிகு நாவலர் அவர்கள் இந்த மாமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக 1962–63ல் இருந்தபோது இதே மன்றத்தில் நடந்த நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் கலந்துக் கொண்டு பேசும்போது, சொன்னவார்த்தைகளையே நான் நினைவு படுத்த விரும்புகிறேன்.

எந்த ஒரு ஆட்சியும் தாங்குகிறவர்கள் மீதுதான் வரி விதிக்க வேண்டுமே தவிர தாங்க சக்தி அற்றவர்கள் மீது வரிவிதிக்கக் கூடாது என்று கூறிக் கொள்கிறேன், என்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நேரத்தில் பேசிய நாவலர் அவர்கள் இப்போது நிதியமைச்சராக இருக்கிற நேரத்தில் இப்படிச் செய்யலாமா என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய வயதின் காரணமாக மாண்புமிகு நாவலர் அவர்களுடைய திரு பெயரைச் சொல்ல நான் விரும்பவில்லை. ஆனால் சிலப்பதிகார காலத்திலேயிருந்து அந்தப் பெயருக்கு உரியவர்கள் நீதி வழுவுவது என்பது சரித்திர உண்மையாக ஆகிவிடக் கூடாது என்பதற்காகச் சொல்லுகிறேன். மாண்புமிகு நாவலர் அவர்களே, வாக்களித்த மக்களை ஏமாற்றிவிடாதீர்கள்—அவர்கள் ஏதோ தெரியாமல் செய்து இருக்கலாம்—அதற்காக பஸ் கட்டண உயர்வை அவர்கள் மீது சுமத்தி மக்கள் மீது வரிப் பளுவை போடுவது நியாயமா? அதை அகற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது என்னுடைய கன்னிப் பேச்சு, இதில் யாரும் குறுக்கிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. பரிதி இளம்வழுதி] [1985 ஏப்ரல் 2

பஸ் கட்டண உயர்வு நேற்று முதல் பல்லவன் போக்கு வரத்துக் கழகத்தில், உலக வங்கியின் கடன் காரணமாக அமலுக்கு வந்திருக்கிறது. இன்னும் மத்திய அரசின் பட்ஜெட்டால், பெட்ரோல், டீசல் விலை உயர்வு காரணமாக மேலும் பஸ் கட்டணம் உயர வாய்ப்பு இருக்கிறது. இந்த நிதிநிலையில் நாவலரின் பட்ஜெட்டில் பஸ் கட்டணம் மேலும் உயரும். இப்படியே உயர்ந்துக் கொண்டே போனால் பொது மக்கள் எப்படி தாங்குவார்கள்? மேலும் இந்த வரிவிதிப்பு ஆளும் கட்சி உறுப்பினர்களும் தங்களுடைய ஊருக்கு திருப்பிப் போக முடியாத நிலையை ஏற்படுத்தி விடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சட்டசபை முடிந்து மாண்புகு உறுப்பினர்கள் எல்லாம் ஊருக்குப் போனால் மக்கள் வந்து அவர்களைக் கேட்பார்கள். உங்களுக்கு எதற்காக ஓட்டுப்போட்டோம். உங்களுடைய ஆட்சி வந்த முதல் பட்ஜெட்டிலேயே எங்களுடைய தலையிலே கை வைத்து விட்டீர்களே என்று ஆளும் கட்சி உறுப்பினர்களைப் பார்த்துக் கேட்டால் பாவம் அவர்கள் என்ன செய்வார்கள்? மக்கள் நாவலரையா பார்த்து கேட்பார்கள்? அவர் என்ன பஸ்ஸிலேயா போகிறார்? அவர் காரிலே போவார். பாதுகாப்பு அதிகாரிகள் கூடப்போவார்கள். அவரை அணுகக்கூட மக்களால் முடியாது. அதனால் என்னைப்போன்று சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிற உறுப்பினர்கள்தான் கேட்பார்கள். ஆகவே, ஆளும் கட்சி உறுப்பினர்கள் ஊருக்குப் போக வேண்டாமா? அவர்களைப் பார்த்து மக்கள், உங்களுக்கு இதற்காகவா நாங்கள் ஓட்டுப்போட்டோம் என்று கேட்க மாட்டார்களா? அதை தயது செய்து சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு), இந்த வரி விதிப்பின் மூலம் உங்களுக்கு கிடைப்பது 10 கோடி ரூபாய் இப்போது ஏற்கெனவே 264 கோடி ரூபாய் பற்றாக்குறை இதை ரத்து செய்வதால் பற்றாக்குறை 274 கோடியாக உயரும். இதனால் ஒன்றும் குடிமுழுகி போய்விடாது. பட்ஜெட்டை திருத்தக் கூடாது என்று எந்தவித சட்டமும் இல்லை. அது ஒன்றும் புனிதமான பைபிளும் இல்லை. இதை நம்முடைய நாவலர் அவர்கள் அறியாதவருமில்லை.

இந்திய அரசியலமைப்புச் சட்டமே அடிக்கடி திருத்தப்படுகிறது. மத்திய அரசு கூட வரி விதித்துவிட்டு பின்னால் சலுகை அளித்து இருக்கிறது. ஆகவே, நாவலர் அவர்கள் தனக்கே உரிய பெருந்தன்மையோடு இந்த மோட்டார் வாகன வரி விதிப்பை அடியோடு ரத்து செய்ய வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அப்படி ரத்து செய்வதன் மூலம் உங்களை வாழ்த்த எங்களுக்கு ஒரு வாய்ப்புத் தாருங்கள். இக் கருத்தை ஆளும் கட்சி உறுப்பினர்கள் கூட எதிர்க்க மாட்டார்கள். மாறாக வரவேற்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து பஸ்ஸிலிருந்து இறங்கி என்னுடைய தொகுதிக்கு வந்துவிடுகிறேன்.



1985 ஏப்ரல் 2] [திரு. பரிதி இளம்வழுதி]

அங்கே ரூ. 120 இலட்சம் செலவில் ஒரு பெரியெரல் ஆஸ்பத்திரி கட்ட 1981 ஆம் ஆண்டு மே மாதம் அரசாங்கம் அனுமதி வழங்கியது. அதற்காக கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான இடத்தினை 1982 ஜனவரியில் கையகப்படுத்தினார்கள். ஆனால் தனியாருக்குச் சொந்தமான வேறொரு நிலத்தை இன்னும் கையகப்படுத்தவில்லை. இதன் காரணமாக அந்த வேலை நடைபெறவில்லை. மேலும் அந்தத் திட்டம் 4 ஆண்டுகாலமாக கிடப்பிலே போடப்பட்டுள்ளது. மேலும் இதனை செயல்படுத்துவதற்கு அதிக செலவாகும். இதனால் அரசுக்குத்தானே நட்டம். அரசு திட்டம் போட்டு நிதி ஒதுக்கியும் மக்களுக்குப் பயன்படவில்லையே என்பதை வருத்தத்துடன் கேட்டுக்கொள்கிறேன். மாநிலத்தின் தலைநகரங்களிலே இந்நிலை என்றால் கிராமப்புறத்தில் போடப்பட்டுள்ள திட்டங்களின் கதி என்ன? ஆளுங்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் கூட கேள்வி நேரத்திலே பேசுகின்ற போது சொன்னார்கள். அவர்களுடைய ஊரிலே உள்ள ஒரு திட்டத்தைப்பற்றி குறிப்பிட்டுக் கூறினார்கள். இதைப் போலத்தான் பல திட்டங்கள் இன்னும் வயதிற்கு வராமலேயே இருக்கின்றன. அதாவது நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன எனபதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிசைப் பகுதியிலே அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதற்காக ரூ. 8/-ம், பராமரிப்புக்கு ரூ. 2/-ம் சேர்த்து ரூ. 10/- வாங்குகிறார்கள். ஆனால் என்ன செய்து கொடுக்கிறார்கள்? ஒன்றுமே செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களுடைய தொகுதியில் சத்தியமூர்த்தி நகர், வியாசர்பாடி கல்யாணபுரம் போன்ற பகுதிகளில் கழிப்பிடங்கள் இல்லாமல், குறிப்பாக தாய்மார்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மூச்சுக்கு மூச்சு தாய்க்குலத்தின் பெயரைச் சொல்லுகின்ற நீங்கள் தாய்மார்கள் கஷ்டத்தைப் போக்க வேண்டும். கழிவறை இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். இருட்டுகின்ற நேரம் வருகின்ற வரைக்கும் தங்களுடைய இயற்கை உபாதைகளை அடக்கிக் கொண்டு, அதன் பிறகு சென்று அங்கு வசதியாக வாழ்கின்றவர்களின் வீட்டு ஓரங்களில் சென்று அந்தத் தவறை செய்கிறார்கள். இப்படி கழிவறை இல்லமல் இவர்கள் செய்வது, இவர்களுக்கும் கஷ்டம், அங்கே சென்று கழிப்பதால் அவர்களுக்கும் கஷ்டம். எனவே உடனடியாக கழிவறை வசதியை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தண்ணீர் வசதி, ஸ்டேன்லி நகர், சத்தியமூர்த்தி நகர், போன்ற இடங்களில் நாங்கள் நன்றியறிதலை தெரிவிக்க செல்கின்ற நேரத்தில் வாக்காளப் பெருமக்கள் எங்களைப் பார்த்து கேட்கிறார்கள். நீ தானே வெற்றி பெற்றதாய், நீ தான் தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று, எங்களைத்

தான் கேட்கிறார்கள். நாங்கள் உங்களைத்தான் கேட்போம். கேட்க வேண்டிய இடத்தில் நீங்கள் இருப்பதால் நாங்கள் உங்களிடம் கேட்கிறோம். செய்து கொடுக்க வேண்டிய இடத்தில் நீங்கள் இருப்பதால் செய்து கொடுப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் சினிமாவிலிருந்து சில உதாரணங்களைக் காட்டி பேசினார்கள். எனவே அவர்களுக்கு புரிகின்ற வகையிலே நானும் சினிமாவிலிருந்து ஒரு உதாரணத்தைக் காட்டி பேச விழைகிறேன். நம்முடைய முதல்வர் எம். ஜி. ஆர். அவர்கள் நடித்த ' நம்நாடு ' படம் பார்த்தேன். நம்முடைய முதல்வர் அவர்கள் ஒரு சேரிப் பகுதிக்கு வருவார், வந்தவுடனே பக்கத்திலே கசமுச வென்று சத்தம் கேட்கும். என்ன அங்கே ஒரே சண்டை என்று அவர் பக்கத்தில் உள்ள பெரியவர் ஒருவரிடம் கேட்பார். அவர் சொல்லுவார். எங்களுக்கு ஒரே ஒரு குழாய் தான் இருக்கிறது. அந்தக் குழாயிலே தண்ணீர் பிடிப்பதற்கு தாய்மார்கள் எல்லோரும் ஒருவர் சிண்டை ஒருவர் பிடித்து இழுத்துக் கொண்டிருக்கிறார்கள், அதுதான் சத்தம் என்பார். உடனே எம். ஜி. ஆர். அவர்கள் உங்கள் ஊரில் கௌன்சிலர் இல்லையா? அவரிடம் சொல்ல வேண்டியதுதானே, சொல்லி இன்னொரு குழாய் போட வேண்டியதுதானே, என்று படத்தில் சொல்லுவார். படத்திலே அவர் சொல்லி விட்டார். ஆனால் இதுமாதிரி நாங்கள் சொல்லமுடியவில்லை. எனவே உடனடியாக மாநகராட்சித் தேர்தலை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய நாவலர் அவர்கள் எழுத்து மூலமாக எழுதித் தருகிறேன் என்று இந்த மன்றத்தில் சொல்லியிருக்கிறார்கள். நான் என்னுடைய பேச்சின் முற்பகுதியில் சொன்னதை மறுபடியும் சுட்டிக் காட்டுகிறேன். சிலப்பதிகார காலத்திலிருந்தே இப்பெயருக்கு உரியவர்கள் நீதி வழுவுவது என்பது சரித்திரத்தில் உண்மையாகிவிடக் கூடாது என்பதற்காக நாவலர் அவர்கள், சொல்லியது, சொல்லியபடி மாநகராட்சித் தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது மின்சாரம். இப்போது பள்ளிக்கூட சிறுவர்களுக்கு பரீட்சை நேரம். பரீட்சை நடக்கின்ற நேரத்திலே, மின்சார கட்டுப்பாட்டினால் இரவு நேரங்களில் விளக்குகள் எரிவதில்லை. முதல்வர் அவர்கள் சினிமாவிலே நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி, இந்த நாடே இருக்குது தம்பி என்றும் நல்ல பெயரை வாங்க வேண்டும் பிள்ளைகளே, நம் நாடு என்னும் தோட்டத்திலே நாளை மலரும் முல்லைகளே என்று சொன்னார்கள். லைட் இருந்தால் தானே படித்து பரீட்சை எழுத முடியும், படித்து பாஸாக முடியும்? பிறகு நல்ல பெயரை வாங்க முடியும்? நல்ல பெயரை கடனாகவா வாங்க முடியும்? கடையிலேயா வாங்க முடியும்? எனவே உடனடியாக மின்சார வசதி செய்துதர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





(பிற்பகல் 12.10)

மேலும் தொகுதியிலே இத்தகைய பிரச்சினைகள் இருக்கிறபோது நான் வாக்காளனாக இருக்கின்ற தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திருமதி வளர்மதி அவர்கள் எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. ஆப்ரகாம் பேசியபோது மக்களுடைய கண்ணீர் கதைகளைச் சொன்னார்கள், அப்போது சோகக் கதைகளைச் சொல்வதற்கு இதுதான் இடமா என்று திருமதி வளர்மதி அவர்கள் கேட்டார்கள். மக்களிடம் இருக்கிறவை அவை தான், அவைகளைத்தான் இங்கே சொல்ல முடியும் இங்கே சோகக் கதைகளைச் சொல்லாமல் இன்பக்கதையையா சொல்லமுடியும். மக்களிடத்திலே இருப்பதைத் தான் உங்களிடத்திலே சொல்லமுடியும், ஆகவே 'அரசுப் பொறுப்பிலே இருக்கிறவர்கள் அதைத் தீர்த்துவைப்பார்கள் என்ற நம்பிக்கையில் நாங்கள் இருக்கிறோம். மேலும் திருமதி வளர்மதி அவர்கள் பேசியபோது மயிலாப்பூரில் ஒரு திருவள்ளுவர் கோயில் இருக்கிறது, அந்தக் கோயிலுக்கு அரசு நல்ல விளம்பரம் செய்து அதைச் சுற்றுலா மையமாக ஆக்கித்தரவேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். அதற்காக நான் சந்தோஷப்படுகிறேன். ஆனால் அப்படிச் செய்வதனால் ஏற்படும் விளைவுகளை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படி அதை சுற்றுலா மையமாக்குகின்ற திட்டத்தைச் செயல்படுத்தினால் அந்த இடத்தைப் பெரிதாக்க வேண்டிய நிலை ஏற்படும்போது அதைச் சுற்றியிருக்கிற ஆயிரக்கணக்கான குடிசைகளை பிரித்தெரியவேண்டும். அதுமட்டுமல்ல அதற்குப்பின்னாலே இருக்கிற பி.எஸ். செகன்டரி பள்ளியை இடித்துத் தள்ளவேண்டும் அந்த இடத்தை சுற்றுலா மையமாக்கவேண்டுமென்றால் பேருந்துகள் நிற்கக்கூடிய அளவுக்கு பெரிய இடமாக வசதி செய்து கொடுக்கவேண்டும், சுற்றுலா மையமாக்கப்பட்டால் வெளிநாட்டு பயணிகள் அங்கே வருவார்கள், அவர்களுக்கு வசதியாக இருக்க வேண்டுமானால் இவைகளையெல்லாம் செய்யவேண்டும். ஆகவே அங்கே வாழ்ந்துக்கொண்டிருக்கிறார்களே, அவர்களுடைய வாழ்வில் மண்ணைப் போட்டுத்தான் அதைச் செய்யவேண்டும்.

சத்துணவு திட்டத்தினால் குழந்தைகளுடைய எடை கூடுகிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சத்துணவு திட்டத்தினால் குழந்தைகளுடைய எடை கூடுகிறதோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால் அங்கே இருக்கின்ற அமைப்பாளர்களின் எடையும் ஆயாக்களின் எடையும் கூடியிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதை நான் சொல்வதற்குக் காரணம் உரிய முறையிலே சத்துணவு குழந்தைகளுக்குப் போய்ச் சேரவேண்டுமென்பதற்காகத்தான்.

இளைஞர்கள் ஆண்டாகிய இந்த ஆண்டில் இளைஞர்களுக்கு என எந்தத் திட்டமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சாராயக் கடைகளைத் திறந்தது நீங்கள் தானே என்று

ஒரு உறுப்பினர் பேசினார். சாராயக் கடைகளைக் கொண்டு வந்தது நாங்கள்தான். ஆனால் அவைகளை மூடுவோம் என்று தாய்மீது ஆணையிட்டது நீங்கள்தான் என்பதை அவர்கள் ஞாபகத்தில் வைத்துப் பேசவேண்டும்.

இங்கே அண்ணன் திரு. சமரசம் அவர்கள் பேசிய போது எதிர்க்கட்சியினர் எதற்கெடுத்தாலும் குற்றச்சாட்டுகளைச் சொல்லுகிறார்கள், எதற்கெடுத்தாலும் குற்றச்சாட்டுச் சொல்வது தான் அவர்கள் இயல்பு என்று சொன்னார்கள். கற்பூரப் பாத்தி கட்டி ஜவ்வாது பயிர் வைத்து தண்ணீர் பாய்ச்சினாலும், பன்னீர் பாய்ச்சினாலும் கூட அவர்கள் குற்றச்சாட்டு தான் சொல்வார்கள் என்றார்கள். நான்கூட அவர் இப்படிச் சொல்லிவிட்டாரே குற்றச்சாட்டு சொல்லக்கூடாது என்பதற்காக இந்த நிதிநிலை அறிக்கையை புரட்டிப் புரட்டிப் பார்த்தேன். அதிலே கற்பூரமும் இல்லை, பாத்தியும் இல்லை, ஜவ்வாதும் இல்லை, பயிறும் இல்லை தண்ணீரும் இல்லை, பன்னீரும் இல்லை. என்னைப் பொறுத்த வரையில் இந்த நிதி நிலை அறிக்கை ''ஒய்யாரக் கொண்டையிலே தாழம்பூவாம், அதன் உள்ளே இருக்குமாம் ஈறும் பேனும்'' என்பதைப்போன்று இருக்கிறது என்று தெரிவித்து எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற 1985–86 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தின் மீது நான் எனது கருத்துக்களை இந்த மன்றத்திலே வைப்பதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி சொல்லி சில உணர்வுகளை வெளிப்படுத்த முன்வருகிறேன். சாவுக்கும் சாவு தந்த சரித்திரத் தலைவன், தோல்விக்கும் தோல்வியே கொடுக்கும் தொண்டர்களைப் படைத்தவன், மக்கள் குறை தீர்க்கும் மகான், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையில் பல்வேறு திட்டங்களை, எண்ணங்களை, உணர்வுகளைக் கொடுத்து இருக்கிறார்கள். அதிலே பல, நான் உங்களிடத்திலே சுட்டிக் காட்டுவது சில. பட்ஜெட்டிலே சிறப்பு அம்சங்கள் எனப் பார்க்கிறபோது 1 முதல் 8–வது வகுப்பு வரை படிக்கின்ற ஏழை மாணவர்களுக்கு இலவசச் சீருடை வழங்க 13.5 கோடி ரூபாய், அவர்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்க 11.5 கோடி ரூபாய், சத்துணவுத் திட்டத்திற்காக 163 கோடி ரூபாய், 328 பஞ்சாயத்து ஒன்றியங்களிலே விளையாட்டு மையங்கள் அமைக்க 4 கோடி ரூபாய்—இங்கே இளைஞர் பேசினார், இளைஞர்களுக்கு ஒன்றும் இல்லையென்று, ஆரம்பத்திலேயே வருகிறது, கடைசியிலே அவர் பிரச்சினையைப் பார்த்துக் கொள்ளலாம்—மின்சாரத் திட்டங்களுக்காக 326 கோடி ரூபாய், 1985 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதிக்குப் பிறகு ஓய்வு பெறும் அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியத் தொகைக்கு இருந்த வரம்பு 1,500 என்பது நீக்கப்



பட்டிருக்கிறது. அவர்களுக்குப் பணிக்கொடை 50 ஆயிரத்திற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. அரசு ஊழியர்களுக்கு 4-வது சம்பளக் குழு அமைக்கப்பட்டு அந்த அறிக்கை தமிழ்ப் புத்தாண்டு தினத்திற்குள் அரசுக்குக் கொடுக்கப்பட்டு விரைவில் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே போல் கிராமப்புற நிலம் அற்ற தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு உறுதி என்று சொல்வதற்கு 65 கோடி ரூபாய் ஒருங்கிணைந்த ஊரக திட்டத்திற்கு மைய அரசு உதவி நீங்கலாக 29.52 கோடி ரூபாய், தேசீய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு 53.48 கோடி ரூபாய், பெரியார் வைகை நீர்ப்பாசனத் திட்டத்தை நவீனப்படுத்துவதற்கு 14.05 கோடி ரூபாய், தஞ்சை கால்வாயை உலக வங்கி உதவியோடு ரூ. 102 கோடி செலவில் நவீனமயமாக்குதல், கிராமப்புற குடிநீர் திட்டத்திற்கு 55 கோடி ரூபாய், பாங்க் சார்பிலும், கூட்டுறவு சார்பிலும் 2 தேயிலை தொழிற்சாலை ஏற்படுத்தப்படும். எலக்ட்ரானிக்ஸ் தொழில் வளர்ச்சிக்கு மூலப்பொருட்கள் கிடங்கு ஒன்று பொது வர்த்தக மையம் ஒன்றும் அமைக்கப்படும். சூரிய ஒளி போன்ற வெப்பம் போன்ற இயற்கையால் கிடைக்கும் மின் சக்தி தயாரிக்கும் திட்டத்தை பிரபலப்படுத்த ரூ. 95 லட்சம், நியாய விலைக் கடைகள் மூலம் குறைந்த விலையில் அரிசி வழங்க 90 கோடி ரூபாய், நகரசபைகளில் தன்னிறைவுத் திட்டங்கள் செயல்படுத்துதல், சேலம், நாமக்கலில் கால்நடைக் கல்லூரி அமைத்தல், கல்விக்காக 468 கோடி ரூபாய், சுகாதாரத் திட்டங்களுக்கு 1.97 கோடி ரூபாய், காரைக்குடியில் கண்ணதாசன் நினைவு மண்டபம், 5 கப்பல்கள் வாங்கக்கூடிய நிலைமை, முன்னாள் இராணுவ வீரர்களுக்கு உதவிக்கு தனி நிறுவனம், காந்தி கிராமத்தில், திருப்பூரில் 20 லட்சம் செலவில் மகளிருக்கு தொழில் பயிற்சி நிறுவனம், ஆதி திராவிடர்கள் நலனுக்காக ரூ. 125.60 கோடி செலவில் சிறப்பு திட்டம். இது மட்டும் அல்ல, 10 சர்க்கரை ஆலைகள் நிறுவுதல், இன்னும் பல சீரிய திட்டங்களை இந்த அரசு இந்த நிதி நிலை அறிக்கையில் இன்றைய தினம் டாக்டர் நாவலர் அவர்கள் கொடுத்து இருக்கிறார்கள். ஆனால் இவ்வளவும் படித்துவிட்டு புரட்டிப் புரட்டிப் பார்த்தேன், ஒன்றும் இல்லை என்றும் நான் முன்பு சொன்ன பாட்டில் அரை பாட்டை, குறை பாட்டை சொல்லியிருக்கிறார்கள். கற்பூர பாத்தி கட்டி, அதில் அத்தர், புனுகு, செவ்வாது உரம் இட்டு பன்னீரை தண்ணீராய் பாய்ச்சினாலும் வேம்பு வேம்பாகத் தான் முளைக்கும், ருசிக்கும், கசக்குமே தவிர வேறு ஒன்றும் பார்க்க முடியாது. அதுபோல எவ்வளவு திட்டங்கள் போட்டாலும் அந்தத் திட்டத்தைப் பற்றி சொல்லாமல் தான் என்ன நினைக்கிறோமோ அதனைச் சொல்ல வேண்டும் என்ற அளவிலே தான் அவருடைய பேச்சு இருந்ததே தவிர அதைப் பற்றி கவலைப்படுவதற்கு நியாயம் இல்லை என்றே கருதுகிறேன். இன்னும் ஒன்றைச் சொன்னார்கள். நான் இளையவன், சிறியவன், கடைக்குட்டி, ஆகவே, எங்களுக்கு நீங்கள் ஆதரவு தரவேண்டும் என்று பேசிய பல்வேறு பேச்சுக்

களை ரசித்துக்கொண்டு இருந்தோம். அதில் சில உணர்வுகள் ஏற்றுக்கொள்ளக் கூடிய பல கருத்துக்கள். அதை உதாசீனப் படுத்தவேண்டும் என்று நான் சொல்லமாட்டேன். விளக்கம் அளிக்கவேண்டிய அளவுக்கு பல எண்ணங்கள் இருந்தாலும் வயதுக்கு மீறிய சில பேச்சுக்கள் இருந்தாலும் சட்டமன்ற உறுப்பினர் என்று சொல்லியிருக்கிற காரணத்தால் சிலவற்றை பரிசிலனை செய்ய நாம் தயாராக இருக்கிறோம். ஒன்றை மட்டும் இந்த நேரத்தில் சொல்லவேண்டும் என்று சொன்னால் இந்த நிதி நிலை அறிக்கையைப் பொறுத்தவரை மாநில உரிமைகளை நிலை நாட்டுவதிலே போர்க்கனலாய், மக்களுக்கு சேவைச் செய்வதிலே புதுப் புனலாய், திட்டங்களை நிறைவேற்றி திருப்தி உண்டாக்குவதில் தேன் தமிழ் சுவையாய், மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய ஒரு நிதிநிலை அறிக்கையை டாக்டர் நாவலர் அவர்கள் இங்கே வைத்து இருக்கிறார்கள் என்பதை சொல்வதில் நான் பெருமைப்படுகிறேன். இங்கே பேசுகிறபோது இதில் குறிப்பிட்டு இருக்கிற பல்வேறு பிரச்சினைகள் உண்டு. வதந்திகளை கிளப்பி வாதங்களை உருவாக்கி நியாயங்களை எதிர்பார்த்து இந்த மன்றத்தில் பலர் உரையாற்றினார்கள். நான் அவர்களுக்கு எல்லாம் சொல்லவிரும்புவது, இப்போது நடந்து முடிந்த தேர்தலைப் பொறுத்தவரையில் பல உணர்வுகள் இந்த உலகத்திற்கு எடுத்துக்காட்டப்பட்டு இருக்கிறது. படை பலமா? பண பலமா? பெயர் பலமா? என்று வருகிறபோது பெயர் பலம் தான் இந்த வெற்றிக்கு அடிப்படைக் காரணம் என்பதை மிகத் துல்லியமாக மத்திய மாநில அரசுகளுக்கு நிர்ணயித்து காட்டியிருக்கிறது. பொதுமக்கள் அப்படிப்பட்ட ஒரு கணக்கை கொடுத்து இருக்கிறார்கள் என்பதை இங்கே வந்திருக்கக்கூடியவர்கள் உணர்ந்து பார்க்கவேண்டும்.

இங்கே பல்வேறு திட்டங்களைப் பற்றி விமர்சனம் செய்யலாம். இருக்கின்ற நேரத்தைக் கருதி நான் ஒரு சில கருத்துக்களை முன வைக்க விரும்புகிறேன். இங்கே மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையை வைத்து இருக்கிறார்கள். தொழில் அமைச்சர் வைத்த அந்த அறிக்கையில் மிக முக்கியமாக தமிழகம் தொழில் துறையில் முன்னணியில் விளங்குகிறது என்பது விளங்கும். இந்தியத் துணைக்கண்டத்திலே தமிழ்நாடு நல்ல முறையில் வளர்ச்சிப் பெறுவதும் உலக நாடுகளோடு தொடர்பு கொள்ளக்கூடிய வகையில் இந்தத் தொழில் திட்டங்களை இங்கே அறிவித்து இருக்கிறார்கள். தொழில் வளர்ச்சிப் பெருகக் கூடிய வகையில், ஏற்றுமதி செழிக்கக்கூடிய வகையில் அன்னிய செலாவணி கிடைக்கக்கூடிய வகையில் கல்வியில் மறுமலர்ச்சி ஏற்படக்கூடிய வகையில் 'ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது,' என்ற பழமொழியை முழுமொழியாக ஆக்குகின்ற வகையில் இன்றைய தினம் அறிக்கை வந்திருக்கிறது. ஆகவே தொழில் துறையைப் பற்றி இந்த நிதி நிலை அறிக்கையில் மிகச் சிறப்பாக சுட்டிக்காட்டப்பட்டு இருக்கிறது என்பதை நான் **இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள** கடமைப்பட்டு **இருக்கிறேன்.**





(பிற்பகல் 12·20·)

இங்கே சொல்லியிருக்கின்ற தொழில் துறை, புரட்சித் தலைவரின் ஆட்சி புதிய விடியலின் சாட்சி என்பதனைச் சொல்லக் கூடிய வகையிலேதான் மின்னணு தொழில் பெருகும் காட்சிகள் இருக்கின்றன என்பதனை நான் சொல்லிக் கொள்வதிலே பெருமைப்படுகிறேன்.

அதுமட்டுமல்லாமல் இங்கே இன்னும் பல கருத்துக்களை இதோடு இணைத்துச் சொல்லியிருக்கிறார்கள். உலகத்தமிழர்களின் பாதுகாப்புப் பெட்டகமாகவும் இணைப்பு மையமாகவும், அதனுடைய ஒப்பற்ற நம்பிக்கை நட்சத்திரமாகவும் புரட்சித் தலைவரவர்கள் விளங்குகிறார்கள் என்பதற்கு இங்கே எடுத்து வைத்த தொழில் கொள்கை மிக முக்கியமான சாராம்சம் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

உங்களது கருணையால், புரட்சித் தலைவரின் அருளால் உலகிலே உள்ள மூன்றில் இரண்டு பகுதிகளைச் சுற்றிப் பார்த்து, எனக்குக் கிடைத்த பல்வேறு அனுபவங்களின் அடிப்படையிலே பாரிஸ், இலண்டன், ஹாங்காங் போன்ற இடங்களில் உள்ள தமிழர்களின் வேதனைக் கண்ணீரைத் துடைக்கக்கூடிய வகையிலேயும், தமிழர்களினுடைய கலாச்சாரம் பண்பாடு, பாழாவதைத் தடுக்கக்கூடிய அந்த வகையிலேயும், உலகத்திலே இருக்கக் கூடிய தமிழர்கள் உரிமை பெறக் கூடிய வகையிலேயும், உறவு வைக்கக்கூடிய வகையிலேயும் புரட்சித் தலைவரவர்களின் ஆட்சி இந்தத் தொழில் கொள்கையை வகுத்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன்.

வாயில் வளவனாக இருந்த பலபேர் நீலிக் கண்ணீர் வடிக்கும் நபராகத்தான் ஆட்சி புரிந்திருக்கிறார்களே தவிர இது போன்ற நல்ல பல திட்டங்களை உருவாக்கி, உலகத் தமிழர்களை ஒன்று சேர்க்கக்கூடிய திட்டங்களைக்கூடக் கொண்டுவரவில்லை என்பதனை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளும் வகையிலே இருக்கிறேன்.

பல்வேறு வகையிலே இங்கே பல திட்டங்களைப் பற்றிச் சொன்னார்கள். இங்கே முதன் முதலாகச் சொல்லியிருக்கின்ற பாலிசி என்று வருகின்றபொழுது, கட்டுண்டு வாழோம், பிரிவினை நாடோம், சமநிலையில் இணைவோம் என்கின்ற இந்தக் கொள்கைக்கு ஆணித்தரமாக, அச்சாரமாக இங்கே, இருக்கின்ற நிதி நிலை அறிக்கை வகுக்கப்பட்டு இருக்கிறது.

இங்கே நிதிநிலை அறிக்கையிலே சொல்லுகின்றபொழுது மத்திய மாநில அரசுகளின் உறவுகளைப் பொறுத்து மிக நல்லமுறையில் எடுத்துச் சொல்லியிருக்கின்றோம். மாநில முதலமைச்சர்கள் மாநாடு மட்டும் அல்லாமல், தென்னக உரிமைச் சங்கம், நீதிக் கட்சி என்றெல்லாம் கொண்டிருந்தோமே அந்தக் கட்சிகளினுடைய உணர்வுகளையெல்லாம் வெளிப்படுத்தக் கூடிய வகையிலே அந்தப் பாலிசி வகுக்கப்பட்டிருக்கிறது என்பதனை நான் சொல்லிக் கொள்வதிலே பெருமைப்படுகிறேன்.

அப்படியிருந்தாலும்கூட, இன்றைய தினம் இங்கே கிருஷ்ணா நதித் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள்; காவேரி நதி நீர்த் திட்டத்தைப் பற்றிக் கூடச் சொன்னார்கள். காவேரி நதித் திட்டம் ஒப்பந்தம் ஏற்பட்டது 1924-இல். அப்பொழுதுதான் தமிழகத்திலேகூட ஒரு தலைவர் பிறந்தார் அந்த ஆண்டிலே. அந்தத் திட்டம் காலாவதி ஆகிறது. அப்பொழுதுதான் பிறந்த அவர் இங்கே மிகப் பெரிய தலைவராக, என்னுடைய புகமே இந்த உலகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று சொல்லக்கூடிய நிலையிலே இருந்தார். ஆனால், காவேரித் திட்டத்தை காலாவதியாகக்கூடிய வகையிலே, அவருடைய பொறுப்பற்ற தன்மையையே அன்றைக்கு இருந்த நிலைமை எடுத்துக் காட்டியதே தவிர, அதை நீட்டித்து, நல்ல முறையிலே புதுப்பிக்கின்ற வகைகளைக் காணாமல் விட்டு விட்டார்கள் என்பதை நான் இந்த மன்றத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனாலும்கூட, அப்படிப்பட்டவர்களைப் பார்த்து இந்த நாடு சொல்கிறது. காளானே காளானே, கோமாளிக் காளானே, நேற்று பெய்த மழைக்கு இன்று குடை பிடிக்கிறாயே கோமாளிக் காளானே என்று ஒரு கவிஞன் சொன்னான்.....

*திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபொழுது 1924ஆம் ஆண்டில் ஏற்பட்ட கர்நாடக மாநிலமாகிய பழைய மைசூருக்கும், தமிழகத்திற்கும் ஏற்பட்ட—பழைய மெட்ராஸ் ஸ்டேட்—ஏற்பட்ட ஒப்பந்தம்—1924-இல் ஏற்பட்ட ஒப்பந்தம் 1974-லே காலாவதி ஆயிற்று, அப்படி ஆக விட்டு விட்டார்கள் என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். அது இந்த அவைக்கே நல்லது அல்ல. ஏனென்றால், அது எப்பொழுதும் காலாவதி ஆகவில்லை. காலாவதி ஆகாமல், வேண்டுமானால் காலம் கடந்துகூட, மறுபரிசீலனை செய்து புதுப்பித்துக் கொள்ள இடம் வைத்துத்தான் இந்த ஒப்பந்தம் இருக்கிறதே தவிர, காலாவதி ஆகிவிட்டது என்று சொன்னால், இன்றைக்கு அதனாலே நம்முடைய உரிமைகள் பாதிக்கப்படும்; அது முனைவர் நினைவிலே கொள்ளவேண்டிய ஒன்று. எனவே, காலாவதி ஆகிவிட்டது என்பதைச் சட்டமன்றத்திலே—அதுவும் ஆளுங் கட்சியிலே உள்ள உறுப்பினர்கள் தயவு செய்து சொல்லவேண்டாம் என்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு தலைவரவர்களே, காலாவதி ஆகி விட்டது என்று நான் முடிக்கவில்லை. காலாவதி என்று சொல்லுகின்ற அளவிற்குப் பிரச்னைகள் உருவாகியிருக்கிறதே தவிர, இந்த இடத்தில் முடிக்காமல் விட்டு விட்டார்கள், அதை நீட்டித்துச் செய்யவில்லையே.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு தலைவரவர்களே, வாதம் செய்வதிலே கருத்து இருக்க வேண்டும். அப்பொழுது காலாவதி ஆக வைத்து விட்டார்கள் என்ற கருத்தைத் திரும்பச் சொல்லுகின்ற பொழுது ஏற்படும் விளைவைச் சிந்திக்க வேண்டும். அது காலாவதி ஆகிற ஒப்பந்தமே அல்ல, வேண்டுமானால் ஆளுங



கட்சி அந்தக் கருத்தைச் சொல்லுமேயானால் அதற்கு என்னென்ன மறுப்போ அவ்வளவையும் நான் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இதற்கு விளக்கம் தர வேண்டிய அவசியம் ஏற்பட்டு இருப்பதனால் விளக்கம் தருகிறேன். மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சொல்வதைப் போன்று, 1924-இலே ஏற்பட்ட ஒப்பந்தம் 50 ஆண்டுக் காலத் திற்கு இருக்கும், அதற்குப் பிறகு கூடுதலாகத் தண்ணீர் வருமே யானால் அது இரு சாராரும் கலந்து பேசி ஒரு முடிவிற்கு வர வேண்டுமென்பதுதான் அந்த ஒப்பந்தத்தினுடைய நிலைமை. ஆகவே, அது காலாவதி ஆகிவிட்டது என்பது அல்ல, காலாவதி ஆகாது இருக்கின்ற காரணத்தினாலேதான், அந்த ஒப்பந்தத் தின்படி இப்பொழுது கர்நாடக அரசு நடக்கவில்லை என்பது நம்முடைய குற்றச்சாட்டு. மீறி நடக்கிறார்கள் என்பது நம் முடைய குற்றச்சாட்டு, ஆகவே நமக்குக் கிடைக்க வேண்டிய தன்மைகள் இந்த ஒப்பந்தத்தினுடைய அடிப்படையிலே என்னென்ன கிடைத்தனவோ அது எந்த வகையிலேயும் குறைக் கப்படக் கூடாது என்பது தொடர்ந்து வாதாடப்பட்டுக் கொண்டு வருகின்ற ஒன்று.

அந்த நிலையிலேதான் இருந்து கொண்டிருக்கிறதே தவிர தொடர்ந்து மறுபடியும் ஒரு உடன்பாடு ஏற்படவேண்டும். அந்த உடன்பாட்டின் மூலம் நாம் பாதிக்கப்படக்கூடாது என்ற நோக்கத்தின் அடிப்படையில் தொடர்ந்து இந்தப் பேச்சு வார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது இனியும் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : ஆகவே எந்த நேரத்தில் அந்த நிலையைச் செய்யவேண்டுமோ அது செய்யப்படாத காரணத் தால்தான் அப்படி இருந்தவர்கள் செய்யத் தவறியதன் காரணத் தால்தான் நாட்டு மக்கள் 'மத்தியிலே காளானே காளானே, கோமாளிக் காளானே, நேற்று பெய்த மழைக்கு இன்று குடை பிடிக்கிறாயோ, கோமாளிக் காளானே' என்று கவிஞர்கள் எல்லாம் எழுதுகின்ற அளவுக்கு நிலைமை உருவாகியது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள உண்மையிலேயே வெட்கப்படுகிறேன்.

அடுத்து, இந்த நாட்டிலே நம்முடைய அரசியல் பாலிசி என்று வருகிறபோது பல்வேறு விவகாரங்கள் இருக்கின்றன. அதிகாரிகளின் நடவடிக்கைகள், அரசியல் கருத்துக்கள், அரசு நடைமுறை குறித்து விசாரிப்பதற்கு தனி நீதிமன்றம் தேவை. அப்போது தான் விரைவில் அவற்றைத் தீர்க்கக்கூடிய வகையில் அமையும். அது இல்லாவிட்டால் மத்திய அரசாக இருந்தாலும், மாநில அரசாக இருந்தாலும், எந்தக் கட்சி ஆட்சியாக இருந்தாலும் பல்வேறு பாலிசி மேட்டர் என்று சொல்லக்கூடிய அரசியல் கருத்துக்கள், எண்ணங்கள், உணர்வுகள், திட்டங்கள் நீதிமன்றத் திற்குச் சென்றால் பல்வேறு வகையில் பலவீனப்படுகின்ற நிலையைத்தான் பார்க்க முடிகிறது. அவை தோற்றுவிடுகின்றன.

அது தி.மு.க. ஆட்சியிலும் சரி, கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியிலும் சரி, காங்கிரஸ்கட்சி ஆட்சியிலும் சரி, ஜனதாக்கட்சி ஆட்சியிலும் சரி, எல்லா ஆட்சிக்காலங்களிலும் அப்படிப்பட்ட நிலைமைதான். ஆகவே இதுபோன்ற நிலைமைகள் குறித்து விசாரிக்க தனி நீதி மன்றங்கள் இருந்தாலொழிய அதை நிவர்த்தி செய்ய முடியாது என்பதே எனது கருத்தாகும். ஒரு காலத்தில் வடகலையா, தென்கலையா, எந்த நாமத்தைப் போடுவது என்ற பிரச்சினை வந்தபோது யு-வா, வி-யா என்ற பிரச்சினை வந்த போது அந்த வழக்கு கோர்ட்டுக்குப் போனது. கோர்ட்டிலே எப்படி தீர்ப்புக் கிடைத்தது என்றால் நீ ஆறுமாதங்கள் போட்டுக்கொள், நீ ஆறு மாதங்கள் போட்டுக்கொள் என்றுதான் தீர்ப்புச் சொன்னார்களேயொழிய சமய உணர்வுகள் இல்லாத தன் காரணத்தால் யார், யார் சண்டை போடுகிறார்களோ அவர்களைச் சமாதானப் படுத்தக்கூடிய வகையில், சண்டையைத் தீர்த்து வைக்கக்கூடிய நிலைதான் உருவானது. அந்த நிலை அரசியல் ரீதியாக வந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எனவே தனி நீதிமன்றங்கள் இருக்க வேண்டும். நம்முடைய உரிமை வேறு, உணர்வு வேறு, சட்டம் வேறு சம்பிரதாயங்கள் வேறு, தத்துவம் வேறு, நடைமுறை வேறு. இந்த வகையில் நம்முடைய நாட்டின் கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம் இவை களை எல்லாம் காக்கக்கூடிய வகையில் மத்திய—மாநில அரசு களிலே இருக்கின்ற பல்வேறு உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ளக் கூடிய நிலைமையில் இந்த நாட்டு மக்களின் பரிபூரண தத்துவத்தை முழுமையாகத் தரக்கூடிய வகையில் நாம் இதைக் கொண்டுவர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்லாமல் பல்வேறு முதல்வர்கள் இந்த நாட்டை ஆண்டிருக்கிறார்கள். முதலாவதாக தமிழகத் தைப் பொறுத்தவரையில் முதல்வர் என்ற பொறுப்பு வந்தவுடன் நீதிக்கட்சியைச் சேர்ந்த திரு. சுப்பராயலு ரெட்டி அவர்கள் 1920-21-லே இருந்தார்கள். அவர்தான் முதல் முதலமைச்சர். அதற்கடுத்து ராஜா பனகல், மூன்றாவதாக டாக்டர் சுப்ப ராயன், நான்காவதாக முனுசாமி நாயுடு, ஐந்தாவது ராஜா பொப்பிலி அவர்கள், ஆறாவது பி. டி. ராஜன் அவர்கள், ஏழாவது ராஜா பொப்பிலி அவர்கள் எட்டாவது கூர்மா வெங்கட ரெட்டி நாயுடு அவர்கள், 9-வது ராஜகோபாலாச்சாரி யார் அவர்கள், பத்தாவது டி. பிரகாசம் அவர்கள், 11-வது ஓ. பி. இராமசாமி ரெட்டி அவர்கள், 12-வது குமாரசாமி ராஜா அவர்கள், 13-வது ராஜகோபாலாச்சாரியார் அவர்கள். 14—வது காமராஜ நாடார் அவர்கள், 15-வது பக்தவச்சலம் அவர்கள், 16-வது பேரறிஞர் அண்ணா அவர்கள், 17-வது கலைஞர் கருணாநிதி அவர்கள், 18-வது பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் அவர்கள் என்று வந்தது. 18 என்பது எட்டும் ஒன்றும் ஒன்பது, ஒன்பது என்பது நவக்கிரக நாயகன், வக்கிரக நாயகனுடைய ஆட்சி என்ற காரணத்தால் ஒன்பதால் கூட்டினாலும் ஒன்பதால் பெருக்கினாலும் சரி அவர்



இருக்கும் வரை, அவரது உயிருள்ளவரை அவர்தான் ஆட்சியில் இருப்பார், நாடு அவரைத்தான் நம்பி இருக்கும். அப்படிப்பட்ட நல்ல திட்டங்களை உருவாக்கக்கூடிய மகானாக புரட்சித் தலைவர் அவர்கள் விளங்குகிறார்கள். அந்த அளவில் அரிய பெரிய திட்டமாக இந்த நிதி நிலை அறிக்கை இருக்கின்றது என்பதைச் சொல்லி இதை வரவேற்று அமைகிறேன்.

* **திரு. கு. ரமணி**: மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கை பற்றி இரண்டு மூன்று நாட்களாக இந்த அவையிலே பல்வேறுவிதமான கருத்துக் களை மாண்புமிகு உறுப்பினர்கள் முன் வைத்திருக்கிறார்கள். மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலேயும் இரண்டு உறுப்பினர்கள் முக்கியமான கருத்துக்களை முன் வைத்திருக் கிறார்கள். நானும் சில கருத்துக்களை முன்வைக்க விரும்பு கிறேன்.

இங்கே கொண்டுவந்திருக்கக்கூடிய இந்த பட்ஜெட்டில் 2,368 கோடி ரூபாய் வரவு என்றும் அதற்கெல்லாம் செலவு செய்து பார்க்கும்போது 313 கோடி ரூபாய்க்கு மேல் அடுத்த நிதியாண்டுக்கான இறுதிப் பற்றாக்குறை என்றும் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இங்கே கொடுத்திருக்கிறார்கள். 54 கோடி ரூபாய்க்குப் புது வரிகளைப் போட்டிருக்கிறார்கள். அதில் 5 கோடிக்கு வரிக்குறைப்பும் செய்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் இந்த பட்ஜெட் பற்றிச் சொல்லும் போது தொகுதி விவகாரங்கள் பற்றி இங்கே பேசுவது சரியாக இருக்காது. அப்புரோப்ரையேஷனில் ஒவ்வொரு பகுதியாக அது வரும்போது அதைப்பற்றிப் பேசுவதற்கு எடுத்துக் கொள்ளலாம்.

(பிற்பகல் 12·30)

சில முக்கியமான அடிப்படை நமது மாநிலத்தினுடைய பொருளாதார அமைப்பும் இந்திய நாடு முழுவதும் இருக்கக்கூடிய பொருளாதார அமைப்பும் அதில் இணைந்து, பிணைந்து நிற்கக் கூடிய ஒரு பகுதியாக இருப்பதனால் ஏற்படக்கூடிய விளைவு களைப் பற்றி கொஞ்சம் நாம் சிந்திப்பது நல்லது என்பதற் காகத்தான் இதை நான் கவனத்திற்குக் கொண்டு வர விரும்பு கிறேன்.

இந்தப் பட்ஜெட்டினுடைய அடிப்படையிலே இதிலே பல சாதனைகள் இருக்கின்றன. இதை எதிர்க்கட்சிக்காரர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்கிறார்கள் என்ற விமர்சனங்கள் இருக் கின்றன. எல்லாவற்றையும் தப்பு என்றோ அல்லது எல்லாம் சரியென்றோ யாரும் சொல்ல முடியாது. எதை, எதை வரவேற்க வேண்டுமோ, அதை, அதை வரவேற்று எதில், எதில் குறை இருக்கிறது, பிரச்னை தீர்க்கப்படாமல் இருக்கிறது என்றால் அதை எடுத்துச் சொல்லி விமர்சிப்பதுதான் ஆளுங்கட்சிக்கும்

உதவியாகும். அந்த முறையில் விமர்சனங்கள் வரும்போது அதைத் தவறாக எடுத்துக்கொள்ளக் கூடாது என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். உதாரணமாக, இந்த பட்ஜெட்டினாலே விலைவாசி ஏற்றத்தை தீர்க்க முடியாது, விலைவாசி ஏற்றம் அதிகமாக இருக்கும் அதே மாதிரி, வேலையில்லாத் திண்டாட்டம் இந்த பட்ஜெட்டிலே போதிய அளவுக்குக் கட்டுப்படாத நிலையிலுள்ளது. உலக வங்கியினுடைய கடனை எதிர்பார்த்துதான் பல்வேறு திட்டங்களைப் போட வேண்டியிருக்கிறது. அதற்கு மேல் மத்திய அரசினுடைய அனுகூலமான பதில் அவர்கள் என்ன சொல்வார்களோ என்று நாம் கையேந்தி நிற்க வேண்டியிருக்கிறது. இந்த நிலை இருக்கும் போது தமது மாநிலத்தினுடைய மக்களுடைய வாழ்க்கைக்கு நாம் விரும்பக் கூடிய அடிப்படையான மாற்றங்களை நாம் கொண்டு வர முடியாது. அவர்களுடைய அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது. ஓரளவு திருப்தி அளிக்கக்கூடிய அளவுக்கு நம்மால் காரியங்களைச் செய்ய முடியாது என்பதுதான் சூழ்நிலை. அதைப் பற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே நமது நிதி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய ஒன்றிரண்டு விஷயங்களை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். அவரே சொல்கிறார்....'இந்தியப் பெருநாட்டின் நிலைமையையும், அதற்கு உள்ளடங்கிக் காணப்படும் தமிழ்நாட்டின் நிலைமையையும், எடுத்துக் காட்டும்போது இந்தியா முழுவதையும் பாதிக்கின்ற பிரச்னைகள் தமிழ்நாட்டையும் பெரும் அளவுக்குப் பாதிக்கின்றன. பொருளாதார பற்றாக்குறை, இன்றியமையாப் பொருள்களின் பற்றாக்குறை பொதுமக்கள் தாங்கித் தீர வேண்டிய வரி விதிப்புகள் கட்டுப்படுதலுக்கு உட்படாத விலைவாசிகளின் ஏற்றம், கட்டுக்கடங்காத மக்கள் பெருக்கம் வேலையில்லாத் திண்டாட்டம், எரிபொருள்கள், விவசாய இடுபொருள்கள் கட்டுமானப் பொருள்கள் ஆகியவற்றின் விலை உயர்வு இரயில்வே போக்குவரத்து கட்டண உயர்வு இப்படிப்பட்ட பல்வேறு அம்சங்களை அவர்களே எடுத்துக் காட்டி, வரி விதிப்பு அதிகம் வரத்தான் செய்யும், விலை ஏற்றத்தை நாம் தடுத்து நிறுத்த முடியாது வேலையில்லாத் திண்டாட்டத்தை நாம் சமாளிப்பது என்பது சாத்தியம் அல்ல இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது இது இந்தியாவினுடைய சூழ்நிலை. அதைத் தாங்கித் தீர வேண்டிய நிர்பந்தம் இங்கே இருக்கிற மக்களுக்கு இருக்கிறது என்று அவரே சொல்லியிருக்கிறார். ஏற்கனவே நாம் விவாதம் நடத்தியிருக்கும்படியான ஆளுநர் உரையில் இப்படிப்பட்ட அம்சங்கள் குறிப்பிடப்படவில்லை. ஆனால் இந்த பட்ஜெட் உரையில் இப்படிப்பட்ட அம்சங்கள் வந்திருக்கின்றன. அப்படியானால் நிலைமையினுடைய சீரியஸ்னஸ் எப்படி இருக்கிறது என்பதை இவை சுட்டிக்காட்டுகின்றன. அது போக வேறு பல்வேறுவிதமான நடவடிக்கைகளிலும் அரசு நடத்துகின்ற மறு வாழ்வுத் திட்டங்களிலும் இந்தக் கஷ்டங்களுடைய பிரதிபலிப்புகள் இருக்கின்றன. பலவற்றில் நினைத்தபடி போடுகின்ற திட்டங்களை,



நிறைவேற்ற முடியாத நிலையிருக்கிறது. இந்த அம்சத்தை அவரே எடுத்துச் சொல்கிறார். அதற்கு மேலும் சென்று இன்னும் என்ன சொல்கிறார் என்றால், இவற்றையெல்லாம் சமாளிக்கும்படியான பொறுப்பு இந்த மாநில அரசுக்கு இருக்கிறது என்கிறார். ஏற்கனவே அவர் சுட்டிக் காட்டிய இந்திய நாடு முழுவதும் இருக்கிற சூழ்நிலையில், இவை முழுவதையும் இந்த அரசு எப்படி சமாளிக்கப் போகிறது, எப்படிச் சமாளிக்க முடியும்? இந்த அரசு, ஒரு மாநில அரசுக்குரிய கட்டுப்பாட்டிற்குண்டான எல்லைக் குள்ளாகத்தான் நிற்கமுடியும். இந்த நிலைமையை அவர் சுட்டிக்காட்டினால் அதைச் சமாளிக்க வேண்டிய பொறுப்பும் வளர்ச்சித் திட்டங்கள், நல்வாழ்வுத் திட்டங்கள், நிவாரணப் பணிகள், ஏழ்மைக் கோட்டிற்குக் கீழே கிடந்து உழலுபவர்களை மேலே தூக்கி விடுகின்ற பொறுப்புகள் ஆகியவை மாநில அரசுக்கு உள்ளது என்று சொல்கிறார்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

இந்தப் பொறுப்புகளை நிறைவேற்ற பொருளாதார வசதிகளைப் பெறுவதற்கான வாய்ப்பு, அதற்கான அதிக உரிமைகள் என்பது மிகமிக குறைவாகவே இந்த மாநில அரசுக்கு இருக்கிறது. ஆகவே விஷயம் தெள்ளந்தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மாநிலங்களுக்கு கிடைக்க வேண்டிய அதிக அதிகாரங்கள், நிதியாதாரங்கள் கிடைக்கவில்லை என்றுதான் நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட நிலைமையில் மாநிலங்கள் இருக்கிறபோது அவை எப்படி வாழமுடியும்? மக்களிடத்தில் உறுதிமொழிகளை கொடுத்து ஓட்டு பெற்ற அரசுகள் எப்படி திட்டங்களை நிறைவேற்ற முடியும்? இதைத்தான் அகில இந்திய ரீதியில் எதிர்க்கட்சிகள் பல ஆண்டுகள் அனுபவத்திற்குப் பிறகு ஒன்றுகூடி பேசி, என்ன கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், மத்திய அரசிலே அதிகாரங்கள் குவிக்கப்பட்டுள்ளன? நிதி நிர்வாகத்தின் வாயில்கள் எல்லாவற்றையும் அவர்கள் கையில் வைத்துக் கொண்டு மாநிலங்கள் அவர்களை கெஞ்சி கேட்கிற நிலையில் இருந்தால் மாநில அரசாங்கங்கள் நிலைக்க முடியாது என்பதை எடுத்துக்காட்டி, அரசியல் சட்டங்களில் மாற்றங்கள் செய்யவேண்டுமென்று ஸ்ரீநகர் மாநாட்டில் மாநிலங்கள் அதிக அதிகாரங்கள் பெறுவதற்காக மெமோரண்டம் தயார் செய்து மத்திய அரசுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அடுத்து, கல்கத்தாவில் நடைபெற்ற மாநாட்டில் நாடு முழுவதும் இருக்கிற நிலைமைகள் இப்படி இருந்தால் எந்த மாநில அரசாங்கமும் தப்ப முடியாது என்பதை எடுத்துக்காட்டினோம். ஜனங்களுக்கு நிறைவேற்றப்பட வேண்டிய கோரிக்கைகள் அடங்கிய ஒரு கோரிக்கை சாசனத்தை தயார் செய்து, இந்திய நாட்டு மக்களை அந்த சாசனத்தின் அடிப்படையில் திரட்டி அதிக அதிகாரத்தைப் பெற வேண்டும். மக்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று அந்த மாநாட்டிலே எடுத்துக் காட்டினோம். என்ன துரதிருஷ்டம் என்றால் இந்த அடிப்படை

[திரு. கு. ரமணி] [1985 ஏப்ரல் 2

யிலே காங்கிரஸ் அல்லாத மாநில ஆட்சிகளில் அமர்ந்திருக்கிற கட்சிகளும் அரசாங்கங்களும் இருக்கிற இடங்களில் நீங்களும் இருந்து கொண்டு, ஏற்கனவே நாவலர் அவர்கள் எடுத்துக் காட்டிய விஷயங்களுக்கு தீர்வு காண்பதற்கு சேர்ந்து நிற்க வேண்டியவர்கள்—இந்த அரசாங்கம் இப்போது வேறு விதத்தில் சென்று கொண்டிருப்பதால் புதிய அரசியல் உறவோடு அவர்கள் சென்று கொண்டிருப்பதால் அந்த உரிமைகளைப் பெறுவது என்பது எப்படி சாத்தியப்படும். அவர்கள் இந்த பட்ஜெட்டில் சொல்லக்கூடிய கருத்துக்களை, அவர்களுடைய தோழமைக் கட்சியான காங்கிரஸ் கட்சி ஒப்புக் கொள்ளுமா? அந்த நிலைக்கு இதுபோகுமா என்பது தான் பிரச்னை. இதை அவர்கள் கவனிக்க வில்லையென்றால் எதிர்க்கட்சிகள் மட்டும் இன்று விவாதித்து பயனில்லை. இதுதான் யதார்த்தமான நிலைமை என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்தப் பொறுப்புகளை எல்லாம் நிறைவேற்றக்கூடிய சக்திகள் இன்றைக்கு இல்லை: அதைத்தான் நீங்கள் எடுத்துக் காட்டியிருக்கிறீர்கள். அதற்காக எதிர்க்கட்சியிலே இருக்கிறவர்கள் நாட்டிலே என்ன யோசனை வைத்திருக்கிறார்கள்? ஒட்டுமொத்தமாக நிதியை எப்படி மத்திய அரசு மக்களிடம் திரட்டுகிறதோ அப்படி திரட்டுகிற நிதியிலே மாநிலங்களுக்கு 75 சதமானம் பங்கு கொடுக்க வேண்டும். எட்டாவது நிதிக் கமிஷனுடைய தீர்ப்பை அமலாக்க மாநில அரசாங்கங்கள் வற்புறுத்துவதோடு மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு குறைந்தபட்ச நிதியை பெறவேண்டுமென்றால் மத்திய அரசாங்கம் திரட்டுகிற மொத்த நிதியிலிருந்து 75 சதமானம் மாநிலங்களுக்கு கொடுக்கப்பட வேண்டும். பாக்கி இருக்கிற 25 சதமானம் நிதியைக் கொண்டு மத்திய அரசாங்கம் செயல்பட முடியும். ஒரு பெடரல் செட்-அப்பில் அது போதுமானதாக இருக்குமென்று எதிர்க்கட்சிகள் கோரிக்கைகள் மூலம் தெரிவித்திருக்கிறார்கள். சென்ற முறை பேசியபோது நான் அதைத்தான் எடுத்துக்காட்டினேன். நீங்கள் ஒரு காங்கிரஸ் அல்லாத எதிர்க்கட்சி தமிழ்நாட்டில் கடந்த 17 ஆண்டுகளாக ஆண்டு கொண்டிருக்கிறீர்கள். இன்றைக்காவது இதை நீங்கள் சிந்திக்க வேண்டும். ரொம்ப காலத்திற்கு இப்படியே செல்ல முடியாது, என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இங்கே பல மாண்புமிகு உறுப்பினர்கள் கூட எடுத்துக்காட்டினார்கள். பல திட்டங்களுக்கு உலக வங்கியிலிருந்து கடனைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் மத்தியசர்க்கார் சம்மதத்தின் பேரில் தான் அந்தக் கடனையும் வாங்க முடியும். அப்படியானால் உலக வங்கியின் தயவை நாட, மத்திய சர்க்காரின் கருணாகடாட்சத்தால் அல்லாமல் எப்படி நீங்கள் பொருளாதாரத் துறையில் மாற்றத்தைக் கொண்டு வரமுடியும் என்பதைச் சிந்திக்க வேண்டும்.



1985 ஏப்ரல் 2] [திரு. கு. ரமணி]

(பிற்பகல் 12.40.)

சிலபல நன்மைகள் மக்களுக்கு செய்வதற்காக, முதியோர் பென்ஷன் அல்லது சத்துணவுத் திட்டம் அல்லது குழந்தைகளுக்கு கொடுக்கிற இலவச உடை அல்லது புத்தகம் போன்றவற்றை தப்பு என்று நாம் சொல்லவில்லை. முடிந்த அளவுக்கு கொடுக்க வேண்டிய சலுகைகள்தான். அதை யாரும் வேண்டாம் என்று சொல்லவில்லை, வரவேற்கிறார்கள். நாங்களும் வரவேற்கிறோம். ஆனால் இதிலே விமர்சனம் எப்படி வருகிறது என்றால் இதில் கொடுக்கக்கூடிய பணத்தைக்கூட வேறுவிதமாகப் பயன்படுத்துவதால் அதில் லஞ்சம், ஊழல், திருட்டு நடைபெறுகிறது. மக்கள் கொடுக்கிற வரிப் பணம் கஜானாவிலிருந்து இப்படிப் போகக் கூடாது, அதனுடைய பலன் முழுவதும் மக்களுக்கே போய்ச்சேர வேண்டும் என்பதிலேதான் விமர்சனம் இருக்கிறதே தவிர கொடுப்பது தப்பு என்று சொல்லவில்லை. இப்படிப்பட்ட நல்ல காரியங்களை நாங்கள் வரவேற்கிறோம். அதேநேரத்தில் தவறுகள் நடைபெறக் கூடாது, தவறுகள் நடைபெறுவது தடுக்கப்படவேண்டும் என்பதுதான் எங்களுடைய வேண்டுகோள்.

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு நிதி அமைச்சர் வைத்திருக்கிற இந்த அறிக்கையில் சொன்ன மாதிரி இந்தியா முழுவதும் இருக்கக்கூடிய ஒரு நிலையை விட்டு விட்டு, நீங்கள் மட்டும் இதைத் தாங்கிச் செல்ல முடியாது. இன்றைக்கு இந்திய நாட்டினுடைய நிலைமை எப்படி வந்திருக்கிறது என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். இந்தியப் பொருளாதாரப் பின்னணியைப் பார்க்கும்போது இப்போது நாம் ஒரு பயங்கரமான படுபாதாளத்திற்குள் சென்றுகொண்டிருக்கிறோம். நமக்கு முன்னால் இருப்பது ராஜ பாதை அல்ல, மிகவும் கஷ்டமான பாதை. பணக்காரர்களை மேலும் கொழுக்க வைக்க, ஏழை எளிய மக்களை மேலும் சுரண்டி ஏழைகளாக்க ஒரு பட்ஜெட்டை இன்றைக்கு இந்திய அரசு தயாரித்திருக்கிறது. மத்திய சர்க்கார் போட்டிருக்கிற பட்ஜெட்டைப் பார்த்து, அதிலே சொல்லியிருக்கிற திட்டங்களை, சலுகைகளைப் பார்த்து, யார் யாருக்கு பயனுடையதாக இருக்கும் என்பதைப் பார்த்து, அந்தக் கணக்கை எடுத்துவைத்துதான் நாங்கள் கருத்து சொல்கிறோம். நாங்கள் அகில இந்திய கட்சிதான். அதனால் நாங்கள் பொறுப்போடுதான் சொல்கிறோம். என்ன நடக்கிறது? எப்படி இருக்கிறது என்பது பற்றி நாங்கள் இந்த நாட்டு மக்கள் மத்தியிலே விவாதம் வைக்கிறோம். அப்படிப்பட்ட ஒரு பட்ஜெட்டாக இன்றைக்கு மத்திய சர்க்கார் பட்ஜெட் வந்திருக்கிறது.

சுதந்திரம் அடைந்த 37 வருட காலத்தில் பணக்காரர்களுக்கு இப்படிப்பட்ட சலுகை அளிக்கக்கூடிய ஒரு பட்ஜெட்டை நாங்கள் பார்த்ததில்லை. அப்படி இருக்கும்போது இங்கே நீங்கள் என்ன செய்ய முடியும்? பணக்காரர்களிடமிருந்து வரவேண்டிய 200 கோடி ரூபாய் வருமான வரியை அவர்களுக்கு விட்டுக்கொடுத்திருக்

கிறார்கள். அது மட்டுமல்ல. அவர்கள் மீதுள்ள சர்சார்ஜ் 197 கோடி ரூபாயையும் விட்டுக் கொடுத்திருக்கிறார்கள். இப்படிப் பார்க்கிறபோது கிட்டத்தட்ட 590 கோடி அல்லது 600 கோடி ரூபாயை பெரும்பணக்காரர்களுக்கு விட்டுக்கொடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. பல்வேறு பொருள்களுக்கு சுங்க வரி பாட்டிருக்கிறார்கள்.

திரு. எஸ். வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் இங்கே இருக்கிற மாநில பட்ஜெட் பற்றிப் பேசுவதை விட்டுவிட்டு மத்திய பட்ஜெட்டைப் பற்றி அதிகமாகப் பேசுகிறார்கள். அவர்கள் தயவுசெய்து மாநில பட்ஜெட்டைப் பற்றிப் பேசும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை எல்லாம் பார்லிமென்டில் பேசச் சொல்வோம்.

திரு. கு. ரமணி : சபாநாயகர் அவர்களே, இந்திய நாடு ஒன்று அதனுடைய பட்ஜெட்டிலிருந்து நாம் தப்ப முடியாது என்று நிதியமைச்சர் சொல்லியிருக்கிறார். அதனுடைய ஒரு பகுதியாகத் தான் நான் இப்போது எங்களுடைய கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அதிலே தவறு இல்லை. பொருள்கள்மீது போட்டிருக்கிற சுங்க வரி. (குறுக்கீடு) சபாநாயகர் அவர்களே, இந்தப் பட்ஜெட்டில் இருப்பதை நான் சொல்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, மத்திய சர்க்காருடைய நிதிநிலை அறிக்கையையும் மாநில சர்க்காருடைய நிதிநிலை அறிக்கையையும் ஒப்பிட்டுப் பேசுவதில் தவறு இல்லை. ஆனால் மாண்புமிகு பொதுவுடைமைக் கட்சித் தலைவர் அவர்கள் நாடாளுமன்றத்தில் பேசுகின்ற பேச்சை இங்கே பேசுவது அவ்வளவு சரியானது அல்ல. உங்களுடைய கட்சி அங்கே பேச வாய்ப்பு இருக்கிறது. ஆகவே அங்கே பேசலாம். இங்கே மாநில பட்ஜெட்டைப்பற்றிப் பேசினால் பயனுடையதாக இருக்கும்.

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் தலைவர்கள் பேசப்போகிறார்கள். இன்னும் பேசுவதற்கு ஆள் இருக்கிறது. நாடாளுமன்றத்திலே பேசுகிற பட்ஜெட் அல்ல நான் இங்கே பேசுவது. அந்த வரி விதிப்பினால் இந்த மாநிலத்திற்கு என்ன வந்திருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் நான் பேசுகிறேனே தவிர, வேறு ஒன்றுமல்ல. அதனுடைய தொடர்ச்சியிலேதான் இந்த மாநிலத்தினுடைய பட்ஜெட் வந்திருக்கிறது. இந்த சுங்க வரி விதித்ததால் நாம் அனைவரும் தான் பாதிக்கப்படுகிறோம். தமிழ்நாட்டு மக்களை தப்பிக்க விடுமா? அது விடாது. அதேமாதிரி கூடுதலாக எக்சைஸ் வரி 424 கோடி ரூபாய்க்குப் போட்டு இருக்கிறார்கள். பொருள்கள் உற்பத்தி பண்ணுகிற இடத்திலே போடுகிற வரி, இது நம்மையும் பாதிக்காதா? பாதிக்கும். பஞ்சாலைகள், நூல்கள், துணிக்கு, சர்க்கரைக்கு என்று இப்படிப்பட்ட எல்லாப் பொருள்களுக்கும்



அப்படிப்பட்ட எக்சைஸ் வரி இருக்கிறது. அது நம்மையும் பாதிக்கத்தான் செய்யும். அப்படிப்பட்ட நிலையில் அவர்களுடைய பட்ஜெட்டிலே போடுகிறார்கள். அந்த அடிப்படையிலே பார்த்தால் இதுவரைக்கும் ஒரு பெர்ஸ்பெக்டிவ், ஒரு பார்வை இருந்தது. அந்தப் பார்வை என்பது போய் முற்றிலும் பணக்கார வர்க்கத்திற்கு ஆதரவான ஒரு பட்ஜெட்டாக மாறும்போது, தமிழ்நாட்டினுடைய இந்த அரசாங்கம் என்ன நல்ல காரியத்தைச் செய்யவேண்டும் என்று நினைத்தாலும் அதைச் செய்ய முடியாமல் போகிறது. ஜனங்கள் அனுபவிக்க முடியாமல் போய் வருகிறது. அது தான் என்னுடைய பாயின்ட்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் மத்திய பட்ஜெட்டைப் பற்றிய ஒரு கருத்தை அழுத்தந்திருத்தமாக சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அது பணக்காரர்களுக்கு சலுகைகளைத் தந்திருக்கிறது, ஏழைகளுக்கு கஷ்டத்தைத் தருகிறது என்று சொல்லுகிறார்கள். மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், அவர்கள் சொல்வதில் உண்மையிருக்கிறது. ஆனால் ஒரு பட்ஜெட்டை நாம் பார்க்கிறபோது, வரி போடுவதையும், அதனாலே யாருக்கு சலுகைகள் கிடைக்கிறது என்பதையும் அல்லது யாருக்கு பாரமாக இருக்கிறது என்பதையும் மட்டும் வைத்துப் பேசுவது என்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை நாம் வரவேற்கலாம். ஆனால் ஒரு பட்ஜெட்டைப் போடுகிறபோது, அதனாலே ஏற்படுகிற பொருளாதார பின்விளைவுகளை அடிப்படையாக வைத்து, பொருளாதார முன்னேற்றத்திற்கான ஒரு நல்ல கருவியாக அதைக் கருதி பட்ஜெட்டிலே சிலவற்றைச் சேர்க்கின்ற வழக்கம் உண்டு. இங்கே கூட சாராயத்திற்கு வரி போட்டதைக் கூட எதிர்த்தார்கள். சாராயம் குடிக்கக்கூடாது என்பதற்காக வரியை உயர்த்துவது என்பது தவறு அல்ல. சிகரெட் மீதான வரியை உயர்த்துவது தவறல்ல. அதைப்போல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த மத்திய பட்ஜெட்டைப் பார்க்கின்றபோது, கொடுக்கப்பட்ட சலுகைகளின் மூலமாக சேமிப்பு அதிகரித்து அது முதலீடாக மாறுமானால், அது இந்த நாட்டுக்கு நல்லது. அதன்மூலமாக கறுப்புப் பணம் அதிகமாவது குறையுமானால் அது நல்லது. அந்த அடிப்படையில்தான் பத்திரிகையிலே கட்டுரைகள் எல்லாம் வந்துகொண்டு இருக்கின்றன. ஆகவே ஒரு பட்ஜெட்டைப் பற்றி நாம் விமர்சிக்கின்றபோது, அந்த வாய்ப்பில் நாம் யதார்த்தமான சில சில நிலைமைகளை மட்டுமே வைத்துப் பார்த்தால், தவறுகள் ஏற்பட்டுவிடலாம். ஆகவே இந்த புதிய முறை பட்ஜெட்டானது அவர்கள் எடுத்துக் கொண்டு இருக்கின்ற நோக்கத்தை நிறைவேற்றுவதாக இருக்கிறதா என்பதைப் பார்க்கவேண்டிய நிலையில்தான் இருக்கிறது. ஆகவே இதைப் பற்றி நாம் பேசுகிறபோது, அதையும் நாம் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள். உறுப்பினருக்கு 15 நிமிடங்களுக்கு மேல் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

திரு. கு. ரமணி : எனக்கு அதிகமாக நேரம் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாம் அவையில் பேசுகிறபோது, கட்சிக் கணக்கைப் பார்த்து நேரம் ஒதுக்க வேண்டியிருக்கிறது.

திரு. கு. ரமணி : உண்மையாக சில கருத்துக்களை நாங்கள் சொல்லவேண்டி இருக்கிறது. நமது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பது அவருடைய கருத்து, எங்களைப் பொறுத்தவரையிலும்....

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கருத்து என்று நான் சொல்லவில்லை. பத்திரிகையிலே வந்த கட்டுரைகளில் இப்படியும் கருத்துக்கள் வந்திருக்கின்றன என்றுதான் சொன்னேன்.

திரு. கு. ரமணி : கறுப்புப் பணம் நின்று போகும் அந்தச் சலுகையாலே என்று நீங்கள் நினைக்கலாம். அப்படி நாங்கள் நினைக்கவில்லை. காரணம் இந்தக் கறுப்புப் பணத்தின் ஊற்றே, அந்தச் சலுகைகள் வைத்திருக்கும்படியான முதலாளிகள் கூட்டம் என்பது எங்களுடைய கருத்து. ஆகவேதான் அந்த முறையில் பார்த்து, இந்தப் பிரச்சனைக்கு முடிவு காண முடியாது. நாங்கள் சொல்லக்கூடிய விஷயம், இந்த மாநிலத்தினுடைய பொருளாதாரத்தையும் எப்படிப் பாதிக்கிறது என்பதைத்தான் நாங்கள் எடுத்துக் காட்டுகிறோம். இது இல்லை என்றால் பிரயோசனம் இல்லை. ஒவ்வொன்றுக்கும் நீங்கள் அங்கே போய் கை நீட்டி வாங்க வேண்டியதாக இருக்கிறது.

இப்போது 25 தொழில்களுக்கு லைசென்ஸ் தேவையில்லை என்று கைவிடப்பட்டு இருக்கிறது. இரண்டாவது எம்.ஆர்.டி.பி. ஆக்ட், ஒரு முக்கியமான சட்டம். ஏகபோகங்கள் வளர்ந்து சாதாரணமான தொழில்கள் அழியக்கூடாது என்பதற்காக, இன்றைக்கு அதனுடைய உச்சவரம்பு 100 கோடி ரூபாய் சொத்துக்கு உயர்த்தப்பட்டு இருக்கிறது. அப்படியானால் இதுவரைக்கும் இந்த நாட்டில் இருக்கும்படியான ஒரு 25 பெரும் குடும்பங்களுக்குப் பதிலாக இன்னும் ஒரு 50 குடும்பங்கள் கூட அதிலே சேரக்கூடிய நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட குடும்பங்கள் இந்த தமிழ்நாட்டிலே இருக்கலாம். அந்த மாதிரி நிலைமையிலே இது வந்திருக்கிறது. ஆகவேதான் நாங்கள் சொல்கிறோம். இப்படிப்பட்ட முறையிலே ஒரு பட்ஜெட் ஏற்கனவே இருக்கும்போது, அதிலே அதனுடைய பாரத்தையும் இங்கே



தாங்க வேண்டி இருக்கிறது. நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதற்கு உதாரணமாக எவ்வளவு தூரத்திற்கு இந்தச் சலுகை கொடுக்கப்பட்டது என்பது பற்றி உங்களுக்கு நான் ஒரு விஷயத்தைப் பற்றிச் சொல்ல விரும்பு

(பிற்பகல் 12.50)

கிறேன். "If the Budget gave some concessions to the monopoly houses it was only intended to remove the cumbersome procedure contained in the M.R.T.P. Act.' என்று சொல்லுகிறார்கள். அதை யார் சொல்லுகிறார்கள். மத்திய நிதியமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். இன்று எம்.ஆர்.டி.பி. ஆக்ட்டைக்கூட நாங்கள் மாற்றி 100 கோடிக்கு சொத்துள்ளவர்களுக்கு சலுகை கொடுக்க அதில் இடம் கொடுத்திருக்கிறோம். அது எதற்கு என்று கேட்டால் ரொம்ப சிக்கலான சட்ட நடைமுறை இருக்கிறதே, அதை மாற்றி அமைக்க வேண்டும் என்றுதான் என்று சொல்லுகிறார்கள்.

இதில் நாங்கள் என்ன பார்க்கிறோம் என்று கேட்டால் இப்படி சலுகைகள் பலவற்றை பெரும் பணக்காரர்களுக்கு கொடுத்து விட்டால் நிச்சயமாக அதன்மூலமாக நம்முடைய மாநிலத்திலே நாமும் பாதிக்கப்படுவோம், நமக்கு நம்முடைய பொருளாதாரத்தை ஒழுங்கு படுத்த முடியாது என்ற நிலையில்தான் பார்க்கிறோம்.

அதேமாதிரி பெட்ரோலுக்கு விலை ஏற்றியாச்சு. டீசலுக்கு விலை ஏற்றியாச்சு. இதனால் நாம் என்ன செய்கிறோம்? நம் பஸ்களை ஓட்ட முடியாத சூழ்நிலையில் நாம் கட்டணத்தை உயர்த்துகிறோம். அப்படி 1420 கோடி ரூபாய் விலை உயர்த்தியாச்சு அவர்கள். அதில் மத்திய அரசுக்கு 620 கோடி, 800 கோடி எண்ணெய்க் கம்பெனிக்கு போகிறது. ரெயில்வே பட்ஜெட்டிலே என்ன? நாம் எல்லாம் பணம் கொடுத்துக் கொண்டுதான் பிரயாணம் செய்கிறோம். அதேமாதிரி ஏற்கெனவே சொல்லியிருக்கக் கூடிய....(குறுக்கீடு, கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரமணி, சீக்கிரம் முடித்து விடுங்கள். நீங்கள் நாட்டிலுள்ள எக்கனாமிக்ஸ் பூராவும் பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தால், அதற்கே தனியாக ஒரு நாள் தரவேண்டும்.

திரு. கு. ரமணி : அவர்களுடைய பட்ஜெட்டிலே இருக்கிற குறைபாடுகள் நம்மையும் பாதிக்கிறது என்றுதானே சொல்கிறேன். (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒருவரோடு ஒருவர் நேரிடையாகப் பேசக் கூடாது. திரு. ரமணி, முடித்து விடுங்கள்....

திரு. கு. ரமணி : நான் பேசுவதிலே என்ன தவறு இருக்கிறது என்று அவர்கள் சொல்கிறார்கள் எனப் புரியவில்லை. நாமும் அதனால் பாதிக்கப்படுவதால் தானே சொல்கிறேன்.....(கூச்சல், குழப்பம்)

[1985 ஏப்ரல் 2

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ரமணி அவர்கள் பேசுகிறார்கள் என்றால், அது மாநிலத்தினுடைய வரவு-செலவுத் திட்டமாக இருந்தாலும், மத்திய அரசினுடைய வரவு-செலவுத் திட்டமாக இருந்தாலும், இது மாநில அரசினுடைய சட்டமன்றப் பேரவை. அந்த வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் இந்த மாநில மக்கள் எந்த அளவிற்கு பாதிக்கப்படுகிறார்கள் என்று அவர்களுடைய கருத்தை எடுத்துச் சொல்வதற்கு எந்த உறுப்பினருக்கும் உரிமை உண்டு. ஆனால் இந்த அவையிலே இருந்து கொண்டு மத்திய அரசை குற்றம் சொல்வதற்கு உரிமை இல்லை. இரண்டாவது இங்கே இருந்து கொண்டு மத்திய அரசுக்கு நாம் அறிவுரை சொல்வதற்கு இல்லை. ஆனால் எந்த அளவுக்கு.... (குறுக்கீடு) (கூச்சல், குழப்பம்)

மத்திய அரசினுடைய கொள்கையானாலும் கோட்பாடு ஆனாலும் அவர்கள் நிதியை ஒதுக்கியிருந்தாலும், நிதி ஒதுக்காமல் இருந்தாலும் இந்தந்த வகையில் பாதிக்கப்பட்டிருக்கிறோம் என்று எடுத்துச் சொல்ல உரிமை உண்டு. அந்த பாதிப்புகளை நீக்க வேண்டும் என்ற கருத்தைச் சொல்வதற்கும் உரிமை உண்டு. இதே நிதிநிலை அறிக்கையிலே இன்னின்ன வகையிலே மத்திய அரசு நமக்கு உதவி செய்திருக்கிறது என்று பல இடங்களில் நான் கோடிட்டுக் காட்டியிருக்கிறேன். அதேநேரத்தில் இன்னின்ன வகையில் உதவி செய்ய வேண்டும் என்றும் நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். போதாது என்றும் சொல்லியிருக்கிறேன். அதற்குக் காரணம் இந்த மாநில மக்களைப் பொறுத்தது அது. அதேபோல இந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் இந்த மாநில மக்கள் என்று எடுத்துச்சொல்வதற்கு ரமணி அவர்களுக்கு உரிமை உண்டு. ஆனால் மத்திய அரசை குற்றம் சொல்கிற பண்பு, இந்த அவையிலே இருந்து சொல்லக் கூடாது. அவர்களுக்கு அறிவுரையை இங்கேயிருந்து சொல்லக் கூடாது என்பதுதான்.

*திரு. க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, நாவலர் அவர்கள் சொன்ன விளக்கத்தில் ஒரு சிறு திருத்தத்தை இந்த சட்டமன்றத்தினுடைய உரிமைக்காக நான் தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். மத்திய அரசை குறை சொல்லக் கூடாது என்று கூடச் சொல்வது முறையல்ல. ஏனென்றால் மத்திய அரசை குறை சொல்ல வேண்டிய கட்டம், ஏதேனும் ஒரு நிர்ப்பந்தத்தில் இந்த அவைக்கு வரும். ஆகையினால் இந்த அவையினுடைய காலத்தை முழு அளவுக்கு பயன் படுத்த முடியாத காரணத்தால், நேரக் கட்டுப்பாடு காரணமாக, அவையில் பேசுவதற்குரிய எல்லா நேரத்தையும் அதற்கு செலவிட வேண்டாம் என்று தலைவர் கேட்டுக் கொள்ளலாமே தவிர, மத்திய அரசை குறை சொல்லக் கூடாது என்றோ, அதன் கொள்கையைக் கண்டிக்கக் கூடாது என்றோ இங்கே சொல்லக் கூடாது. ஏனென்றால் இந்த அவை மத்திய அரசைக் கண்டிக்க உரிமை பெற்றது. வேணடுமானால் அது பயன்படாமற்போகலாம். மத்திய



1985 ஏப்ரல் 2] [திரு. க. அன்பழகன்]

அரசுக்கு நேரிடையாகச் சொல்கிற வாய்ப்பு நமக்கு இல்லை என்று சொன்னாலும்கூட, மத்திய அரசால் ஏற்படக்கூடிய பாதகத்தின் காரணமாக இந்த அவையிலேயே கண்டித்து எத்தனையோமுறை பேரறிஞர் அண்ணா அவர்கள் உட்பட பேசியிருக்கிறார்கள் என்பதை தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அந்தக் கருத்திலே தான் சொல்கிறேனே தவிர, இங்கே குறை சொல்லவோ, கண்டிக்கவோ, எதிர்த்து சொல்லவோ, மறுத்துச் சொல்லவோ உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு. குற்றச் சாட்டோ, குறையோ சொல்லுகின்றபோது பதில் சொல்வதற்கு மத்திய அரசு இங்கே இல்லை. மத்திய அரசின் சார்பாக நாமும் பதில் சொல்ல முடியாது. ஆகவேதான் அந்த வகையில் கட்டுப்படுத்திக் கொண்டு கண்டிக்கவோ, மறுத்து சொல்லவோ உரிமை உண்டு, கொள்கை அளவிலே, கொள்கை ரீதியிலே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ரமணி, அவையின் நேரத்தைக் கருதி உடனே முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. கு. ரமணி :** அவையின் முன்னவர் அவர்களும், அவைத் தலைவர் அவர்களும் சொல்வதற்கிணங்க நானும் பேசுகிறேன். இந்த மாநிலத்தின மக்கள் பாதிக்கப்பட்ட விஷயத்தைப் பற்றி சொல்கிறேன். என்.ஆர்.ஈ.பி., ஐ.ஆர்.டி.பி., ஆர்.எல்.ஈ.ஜி.பி. போன்ற திட்டங்கள் நடத்தப்படுகின்றன. அதற்கு நிதி ஒதுக்கீடு போன முறை ரூ, 9,000 கோடி பட்ஜெட்டிலே இருந்தது இந்த முறை கம்மியாக இருக்கிறது. போட்டு இருக்கின்ற திட்டத்திற்கும் நீங்கள் எதிர்பார்க்கிற பணம் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. அதில் சங்கடங்கள் இருக்கின்றன. இதை நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. இதை ஒரு கிரிட்டிசிசம் அதாவது விமரிசனமாக சொல்ல விரும்புகிறேன். அதேமாதிரி பட்ஜெட்டில் ரூ. 3,400 கோடி ரூபாய் பற்றாக்குறை. இங்கே உங்களுக்கு, 1985-86ம் ஆண்டிற்கான இறுதி பற்றாக்குறை ரூ. 300 கோடிக்கு மேல் வரும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அப்படியென்றால், விலை ஏற்றத்தை எப்படித் தடுக்க முடியும்? தடுத்து நிறுத்த முடியாது. அந்த அளவிற்கு நாம் வந்திருக்கின்றோம். இப்படித்தான் தமிழக மக்கள் பாதிக்கப்படுகிறார்கள்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் ;** அரை மணி நேரம் ஆயிற்று. இன்னும் 10 உறுப்பினர்கள் பேச வேண்டும். 1.30 மணிக்கு முடிக்க வேண்டும் என்பதால், நீங்கள் உடனே முடித்தாலும் முடிக்க முடியாது. 30 நிமிடத்திற்கு மேலே கேட்பது நல்லது அல்ல. நீங்கள் இதோடு முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. கு. ரமணி :** எனக்குச் சொல்ல வேண்டிய கருத்துக்கள் இன்னும் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்களை 5 நிமிடம் 10 நிமிடங்களுக்கு மேல் அனுமதிப்பதில்லை. நீங்கள் கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்றால் நேரம் நிறைய ஆகும். இன்றோடு நாம் பொது விவாதத்தை முடிக்க இருக்கிறோம். இதற்கு என்ன முடிவு எடுக்கப் போகிறீர்கள் என்பது தெரியவில்லை. தொடர்ந்து வைத்துக் கொள்ளலாமா என்று கேட்டுச் சொல்கிறேன்.....(குறுக்கீடு) அலுவல் ஆய்வுக் குழுவில் பேசிக் கொள்ளலாம். சரி முடித்து விடுங்கள்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்த பட்ஜெட்டில் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய இன்னும் சில விஷயங்களைப் பற்றிச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். தொழிலாளர்களைப் பற்றி உண்மையாகவே இந்த அரசாங்கம் என்ன செய்யப் போகிறது? எப்படிப்பட்ட கொள்கையை கையாளப் போகிறது என்பது இந்த பட்ஜெட்டிலே இல்லை. இது ஒரு முக்கியமான குறைபாடு. ஏற்கெனவே இந்த மன்றத்திலே நாம் விவாதித்து இருக்கிறோம். இன்று நெருக்கடியான இந்தச் சந்தர்ப்பத்தில் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்கக்கூடிய முறையிலே எந்தவித ஆலோசனையும் இங்கு இல்லை. கிராமத்தில் இருக்கக்கூடிய கூலித் தொழிலாளர்களுக்கும், நிலம் அற்றவர்களுக்கும் சில வசதிகள் என்று இருக்கிறதே தவிர மற்ற விஷயங்கள் இந்த பட்ஜெட்டிலே இல்லை. இதனை நான் ஒரு முக்கியமான குறை என்று தான் பார்க்கிறேன்.

ஏனென்றால் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. தொழிலாளர்கள் கேட்கிறபோனஸ் உரிமைபறிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் அரசு அவர்களுடைய நிலையைப்பற்றி சிந்திக்க வேண்டும்.

அதே மாதிரி, நிலங்களை பங்கிட்டுக் கொடுக்கும்படியான, மிச்ச நிலப் பங்கீடு என்பதற்கு எந்தவிதமான திட்டங்களும் இந்த பட்ஜெட்டிலே சொல்லப்படவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த பட்ஜெட் வந்திருக்கிறது. ஆகவே அது சம்பந்தமாக அரசாங்கம் என்ன செய்யப் போகிறது என்பதை தெளிவாகச் சொல்ல வேண்டியிருக்கிறது. இன்னும் ஓரிரண்டு விஷயங்கள் தான் இருக்கின்றன.....(மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 10 உறுப்பினர்கள் என்னையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், நாங்களும் பேச வேண்டுமென்று. திரு. ரமணி மட்டும் பேச வேண்டும் என்றால், நான் மற்றவர்களை பேச வேண்டாம் என்று சொல்ல வேண்டும். உங்களுக்கு நான் அதிகமான வாய்ப்பைக் கொடுத்திருக்கிறேன். ஒரு பிரதான கட்சிக்கு கொடுக்கக் கூடிய நேரத்தை கொடுத்து இருக்கிறேன்.





(பிற்பகல் 1.00)

திரு. கு. ரமணி : கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையைப் பார்த்தால் இங்கே இருக்கிற பர்சன்டேஜைப் பார்த்தால் குறைவாக இருக்கிறது. இப்பொழுது ஏறியிருக்கிற விலைவாசிகளின் கணக்கைப் பார்த்து இதை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியிருக்கிறது. கல்வியில் அதிகப்படியான தனியார்களுடைய தலையீடு வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதையும் அது நல்லதல்ல என்பதனையும் இந்த அரசாங்கத்திற்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தனியார் துறைக்குக் கொடுக்கவே கூடாது என்று சொல்லவில்லை. ஆனால் தனியார் துறையில் மோசமான நடவடிக்கை நடந்து கொண்டிருக்கிறது. ஒரு எஞ்சினியரிங் கல்லூரியாக இருந்தாலும் மெடிக்கல் காலேஜாக இருந்தாலும் சேர வேண்டுமென்றால் மாணவர் பல ஆயிரக் கணக்கான பணம் கொடுக்கக்கூடிய நிர்பந்தங்கள் இருக்கின்றன, அவைகளை தடுக்கக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, தொழில்கள். பல தொழிற்சாலைகள் பூட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன, சிறு தொழில்கள் நின்று விடுகின்றன. மின்சாரத் தட்டுப்பாட்டினாலே தகராறுகள் பல ஏற்படுகின்றன. நிரந்தரமான ஒரு திட்டத்தைப் போட்டு மின்சாரத்தை தேவையான அளவுக்கு உற்பத்தி செய்ய வேண்டும். மூடப்பட்ட தொழிற்சாலைகளின் நிர்வாகத்தை எடுத்து நடத்தி, பணத்தை விரயம் ஆக்காமல், நல்ல முறையிலே இயங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

*திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய தேசிய காங்கிரஸின் சார்பில் இரண்டாம் முறையாக என்னை சட்ட மன்றத்திற்கு அனுப்பி வைத்த என் தொகுதி மக்களுக்கு மன்றத்தின் சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த 1985–86ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையைக் காணும்போது 1980–முதல் 1984 வரையுள்ள ஆண்டுகளிலே சென்ற முறை இந்த ஆட்சியின் காலத்திலே ஆளுநர் உரையானாலும் சரி, நிதிநிலை அறிக்கையானாலும்சரி, பொது மக்களும் பத்திரிக்கையாளர்களும் மற்றவர்களும் நாளைக்கு ஆளுநர் உரை வரப் போகிறது, நாளைக்கு நிதிநிலை அறிக்கை வரப் போகிறது, என்ன என்ன அறிவிப்புகள் வருமோ என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்த சமயத்திலே சமுதாயத்திலே பல மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய முறையிலே அறிவிக்கின்ற அளவுக்கு விதவைகள் மறுமணம் செய்து கொண்டால் அவர்களுக்குச் சலுகை என்ற முறையிலும் விதவைகளின் பெண்கள் திருமணம் செய்கிறபோது அவர்களுக்கு தாலி வழங்குகிற திட்டமும் கலப்பு மணம் செய்து கொண்டவர்களுடைய பிள்ளைகளுக்கு எஞ்சினியரிங் கல்லூரி மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் அவர்கள் சேர

வேண்டுமென்றால் அவர்களுக்கு என 6 சதவீத ஒதுக்கீடும் இன்னும் பல சமுதாய மாற்றங்களை ஏற்படுத்துகிற அறிவிப்புகளைச் செய்த இந்தப் புரட்சிகரமான அரசு இன்றைய சூழ்நிலையில் இந்த ஆண்டு ஆளுநர் உரையிலும் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும் ஏதாவது அறிவித்து இருக்குமோ என்று துருவித் துருவிப் பார்த்தபோது என்னைப் போன்றவர்களுக்கு ஏமாற்றத்தை அளித்தபோதும் மனநிறைவை அளிக்கும் திட்டங்களை எதிர் பார்த்து அடுத்துவரும் மானியக் கோரிக்கைகளிலே ஏதாவது சமுதாய மாற்றங்களை அறிவிக்கக்கூடிய நிலை வரும் என்று எதிர்பார்த்து இந்த நிதிநிலை அறிக்கையை நான் கண்ணுறுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இதிலே ஏராளமான வரிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன என்று எதிர்க் கட்சியினர் சாடினாலும் கூட என்னைப் பொறுத்த வரையில் சாதாரண மக்களுக்கு அதிகச் சுமை இல்லாமல் அதிகச் சலுகையும் இல்லாமல் தரமான நல்ல நிதிநிலை அறிக்கையாக தயார் செய்யப்பட்டுத் தரப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். நாமக்கல்லிலே ஒரு கால்நடைக் கல்லூரியும், சேலத்திலே ஒரு மருத்துவக் கல்லூரியும், 1ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை படிக்கிற மாணவர்களுக்கு இலவச சீருடையும் புத்தகமும் கொடுப்பது போன்ற நல்ல பல அறிவிப்புகளும், கல்விக்கூடங்களைக் கட்டுவதற்கான அதிகப்படியான தொகையும் ஒதுக்கப்படுகின்ற அறிவிப்புகளும் இந்த நிதிநிலை அறிக்கையிலே இருக்கின்றன. இருந்தபோதிலும்கூட எனக்குள்ள ஏமாற்றமெல்லாம் என்னுடைய பகுதியிலே சுமார் ஆயிரம் ஏக்கருக்கு மேல் சின்னசேலம் ஆட்டு ஆராய்ச்சி பண்ணை இருக்கிறது, அங்கே கால்நடைக் கல்லூரி நிறுவுவதற்காக ஒரு குழு வந்து பார்வையிட்டபோது நானும் சின்னசேலம் மாண்புமிகு உறுப்பினரும் அங்கே தண்ணீர் வசதி இருக்கிறது, நல்ல இட வசதி இருக்கிறது என்றெல்லாம் எடுத்துச் சொன்னோம். நம்முடைய ஆட்சியின் காலத்தில் அங்கே அமைத்தால்—அங்கே எல்லா சௌகரியங்களும் வசதிகளும் இருக்கிறது. ஆத்தூர் தாலுக்காவில் பாலிடெக்னிக் அல்லது கல்லூரி மற்றும் எந்த விதமான முன்னேற்றமும் இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அதை பின்தங்கிய தாலுக்கா என்று அறிவிக்க வேண்டும் என்று பலமுறை நான் போராடிக் கேட்டும் அறிவிக்காத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எங்கள் பகுதியில் உள்ள மக்களுக்கு கல்வி பயில ஒரு வாய்ப்பு அமையும், நாங்கள் எல்லா ஒத்துழைப்பும் தருகிறோம் என்ற நிலையைத் தெரிவித்தும் கூட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நாமக்கல்லில் மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. அருணாசலம் அவர்கள் திருமண வைபவத்தில் அவர்களுக்கு திருமணப் பரிசாக அறிவித்து விட்டார்கள். நாங்கள் ஒரு ஏமாற்றத்தோடு இருக்கிறோம். அடுத்து வரும் காலங்களிலாவது எங்களுக்கு ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரியை வழங்கிட வேண்டும் என்று அன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன்.



அதோடு இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கையை காணும்போது ஆதி திராவிடர்களுக்கு 125.60 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அது அவர்களுக்கு போதாது என்ற ஒரு மனப்பக்குவத்தை நான் எடுத்து உரைக்க கடமைப்பட்டுள்ளேன். ஏன் என்று சொன்னால் மற்ற திட்டங்களை நாம் இங்கே திட்டம் தீட்டி செயல்படுத்தும்போது ஆங்காங்கே மயானத்திற்குச் செல்ல பாதை போடும்போதும், ஊர்களுக்குச் செல்ல பாதை போடும் போதும் லைட் வசதி, வீட்டு வசதி, குடிநீர் வசதி, கல்விச் சாலைகள், சத்துணவு மையம், நியாய விலைக் கடைகள் போன்ற வசதிகள் மற்றவர்களுக்கு செய்யும்போது அவர்களுக்கும் அந்த வசதிகள் கிடைக்க வேண்டும். அவர்களுக்காக அந்தத் திட்டங்கள் தீட்டி வைத்தாலும் கூட அவர்களுக்கு அந்த பங்குகள் போய் சேருவது இல்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால், குடிநீர் கொடுக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்யும் போது ஒரு கிராமத்தில் டாங்க் அமைக்கிறார்கள். மேல் நிலைத் தொட்டிகள் அமைக்கிறார்கள். அதிலிருந்து பைப்புகள் பிரித்துக் கொடுக்கும்போது அங்குள்ள மற்றவர்களுக்கு கொடுக்கின்ற அதே நேரத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ள காலனிகளில் அந்த பைப்புகள் கொடுக்கப்படுவது இல்லை. இப்படிப்பட்ட நிலைமை பல ஊர்களில் உள்ளது என்பதை நான் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். எங்களைப் போன்றவர்களின் வற்புறுத்தலின் பேரில் அப்படியே கொடுத்தாலும் உடனே மற்ற தீய சக்திகளால் அவைகள் துண்டிக்கப்படுகின்றன. அவர்களுக்கு ஒதுக்கியுள்ள தொகை போதாது. ஒதுக்கப்பட்டுள்ள தொகை ஆதி திராவிட மக்களுக்கு மட்டுமா? அல்லது மலைவாழ் மக்களுக்கும் சேர்த்தா? மலைவாழ் மக்களுக்கு ஏதாவது தனியாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறதா என்பதை நான் அறிய ஆசைப்படுகிறேன். இந்த 125 கோடி ரூபாயாவது கண்டிப்பாக அந்த மக்களுக்காக செலவிட வேண்டும். அதைச் செலவழிக்காமல் அரசாங்கத்திற்கு திருப்பிக் கொடுக்க வேண்டிய ஒரு சூழ்நிலையை உருவாக்காமல் இருப்பதற்கு ஒரு கமிட்டி அமைத்து—மற்ற கமிட்டிகளைப் போல் அல்ல தீவிரமாக நல்ல எண்ணம் கொண்டவர்களை கொண்டு இதைச் செயல்படுத்த வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு இலங்கைவாழ் தமிழர்களுக்கு பல நல்ல காரியங்களை மத்திய அரசும், மாநில அரசும் செய்து கொண்டு வருகின்றன. அதை நான் வரவேற்கிறேன். ஆனால் இன்னும் தீவிரமாக அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களின் நன்மைகளைக் கருத்தில் கொண்டு 1977-1980ஆம் ஆண்டுகளில் வந்த, தமிழர்களுக்கு நல்ல பல காரியங்கள் ஆற்ற வேண்டிய சூழ்நிலை இருந்தும்கூட அவர்களுக்கு உரிய முறையில் செய்து கொடுக்கப்படவில்லை என்பதை நான் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். உதாரணமாக சொல்ல வேண்டும் என்றால், அவர்கள் வீடு கட்ட கடன் பெற வேண்டும் என்ற சூழ்நிலையில் பல காலமாக 1977லிருந்து 1985

வரை கஷ்டப்பட்டவர்களுடைய நிலைமை எண்ணிப் பார்க்கும் போது மிகவும் கஷ்டமாக உள்ளது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மனு செய்தால் அல்லது மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மனு செய்தால் அவர் உடனடியாக தனி அதிகாரி ஒருவரை அனுப்பி அந்த மாவட்டத்தில் உள்ள இலங்கை அகதிகள் எவ்வளவு பேர் வீட்டுக்கு கடன் விண்ணப்பித்து இருக்கிறார்கள் என்பதை அறிந்து ஒரு காலக் கெடுவை நிர்ணயித்துக் கொண்டு விண்ணப்பங்களைப் பெற்று உடனடியாக அதற்கு தீர்வு காண வேணடும் என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். அவர்களிடம் ஏதாவது சான்றிதழ் இல்லை என்று சொன்னால் உதாரணமாக சிலோன் அகதிகளா என்பதற்கு மற்றவர்களிடம் சென்று சான்றிதழ் பெறுவதை விட பாராளுமன்ற உறுப்பினர்களிடமோ, சட்டமன்ற உறுப்பினர்களிடமோ சான்றிதழ் பெறலாம் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதோடு இன்றைக்கு கூட்டுறவு அமைப்புகளைப் பொறுத்த வரையில், கூட்டுறவு அமைப்புகளில் நிர்வாகக் குறைகள் உள்ளன. ஆனாலும் கூட என்னுடைய தொகுதியில் சிறுவாக்கம் என்ற இடத்தில் ஒரு பெரிய மோசடி நடந்து இருக்கிறது.

(முற்பகல் 1.10)

அதை சேலம் மாவட்டத்தை சேர்ந்த எஸ். பி. அவர்கள் மிகத் தீவிரமாக நடவடிக்கை எடுத்து நல்லமுறையில் கண்டு பிடித்துக் கொடுத்தார்கள் என்பதற்காக அவருக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

அதோடு, எந்தெந்தக் கூட்டுறவு மையங்களில் இப்படிப்பட்ட மோசடிகள் நடைபெறுகின்றனவோ அங்கெல்லாம் ஒரு தனி அதிகாரியை நியமித்து நல்ல முறையில் இயங்கச் செய்ய வேண்டும். அதாவது, தேர்தல் விரைவாக வரும் என்ற எண்ணத்தோடு, தேர்தல் நடக்கும் வரை இவ்வாறு செய்ய வேண்டுமென்ற இந்தக் கோரிக்கையை வைக்க நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பது என்ற ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். நான் கூறுவதெல்லாம், நெசவாளர்களுக்கு மட்டுமல்ல, சமுதாயத்தில் பின்தங்கிய, பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களான நெசவாளர்களோடு சேர்ந்து குயவர்கள், டோபிகள், மீனவர்கள், பார்பர், மண் ஒட்டர்கள் போன்ற, இன்னும் மற்ற சிறுபான்மையாக இருக்கிற அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் நில ஆர்ஜிதம் செய்து அவர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

நெசவாளர்கள் நிறைந்த பகுதியாகிய ஆரகளூர், வேப்பம் பூண்டி ஆகிய இரண்டு ஊர்களிலும் நெசவாளர் காலனி கட்டிக் கொடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.



அரிசனங்களுக்கு என்று நில ஆர்ஜிதம் செய்யப்படுகிறது. இங்கேயுள்ள ஒவ்வொருவரும் சென்ற முறையும், இந்த முறையும் இதை கட்சி வேறுபாடு இன்றி பலமுறை எடுத்துக் கூறியிருக்கின்றோம். ஆனால் இது இன்று வரையில் முடிந்தபாடில்லை. நான் கேள்விப்படுகிறேன், சுமார் 500-க்கும் மேற்பட்ட கேஸ்கள் நில ஆர்ஜிதம் சம்பந்தமாக இன்றைக்கு நிலுவையாக இருக்கின்றன என்று. முன்பிருந்த சட்டத்தின்படி மாவட்ட ஆட்சித் தலைவர்களே நில ஆர்ஜிதம் செய்து அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற கோரிக்கை இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை. இன்றைக்கு அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு, நில ஆர்ஜிதத்திற்கு வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், இன்றைக்கு நில ஆர்ஜிதத்தில் இரண்டு நபர்கள், தனித்தனி நபர்கள் நிலம் கொடுக்கிறார்கள் என்றால், அதில் ஒருவருடைய நிலத்தை அரசாங்கம் தொகை கொடுத்து எடுத்துக் கொள்கிறது; ஆனால் ஒருவருடைய நிலம் எடுக்கப் படாமல் இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் காலனிகள் ஏற்படுத்த வேண்டுமென்ற ஒரு நிலையில் புரொசீடிங்க்ஸ் நடவடிக்கை ஒரே தேதியில், ஒரே எண்ணில் இருக்கிற காரணத்தினால் எடுக்கப் பட்ட அந்த நிலத்தில் கூட-அரசால் தொகை செலுத்தப்பட்ட அந்த நிலத்தில் கூட அரிசனங்கள் காலனிகள் கட்டிக் கொள்ள முடியாத ஒரு சூழ்நிலை இன்றைக்கிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தக் குறையை உடனடியாக நிவர்த்தி செய்து, நாம் எந்த நிலத்திற்காக தொகை கொடுத்து, அவர்கள் அதைப் பெற்றுக் கொண்டார்களோ, அதையாவது பிரித்துக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து, அவர்கள் வாழும் பகுதிகளில் புதிதாகக் காலனிகள் ஏற்படுத்துகின்ற நேரத்தில், அவர்களுக்குத் தண்ணீர் வசதி இல்லாமல் தயவுசெய்து காலனிகளை நீங்கள் கட்டிக் கொடுக்க வேண்டாம் என்றுதான் நான் மனம் நொந்து உங்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். எல்லாவற்றிற்கும் காரணமாக உள்ள அந்தத் தண்ணீர் பிரச்னை எங்கே சென்றாலும் அவர்களை விரட்டியடிக்கின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், காலனி என்று ஒன்று ஏற்படுவதற்கு முன்பு அங்கே தண்ணீருக்கு வழிசெய்து அவர்களுக்குக் காலனி கொடுக்கவேண்டுமென்ற என்னுடைய அன்பான கோரிக்கையை வைக்கிறேன்.

வெள்ள நிவாரணத்திற்காக மத்திய அரசு கோடி கோடியாகக் கொடுத்திருந்தும்கூட 1984 ஆம் ஆண்டு மார்ச் முதல் வாரத்தில் என்னுடைய பகுதியில், எதிர்பாராத விதமாகப் பல இயற்கைச் சூழ்நிலைகளின் காரணமாக, வறட்சி, வெள்ளம் போன்ற நிலைகளில், 13, 14 ஆண்டுகளுக்குமேல் பாதிக்கப்பட்ட விவசாயிகள், 1984 ஆம் ஆண்டு மார்ச் முதல் வாரத்திலே

திடீரென்று வந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு அவர்கள் வீடு இழந்து, காடு இழந்து, காடுகளெல்லாம் மண்மேடாகிவிட்டது. அங்கேயுள்ள மோட்டார்களெல்லாம் அடித்துச் செல்லப்பட்டு விட்டன. அதேநேரத்திலே பல பாலங்களும், பல ரோடுகளும் அடித்துச் செல்லப்பட்டு விட்டன. இதைப்பற்றி அரசுக்கு நான் பலமுறை தெரிவித்தும் மாவட்ட ஆட்சித் தலைவர் மிகக் கடுமையாக அதை எடுத்துரைத்தும் கூட எங்களுக்கு ஒரு பைசா கூட கிடைக்கவில்லை என்று எண்ணும்பொழுது உண்மையிலேயே மிகவும் வேதனைப்படுகிறேன். ஆனால் 6 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டது. அதை ஏற்கனவே செய்த வேலைக்காக அவர்கள் எடுத்துக்கொண்டார்கள். ஆக இன்றைக்கு அங்கே சாலை இல்லா நிலை; பாலம் இல்லா நிலை, விவசாயிகள் தங்களுடைய விவசாயத்தைத் தொடர்ந்து செய்ய முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அதைப்போக்கி, உடனடியாக வெள்ள நிவாரணத்திற்கு தொகையை ஆத்தூர் தாலூகாவிற்கு ஒதுக்கி இந்த அவலநிலையைப் போக்கவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்குச் சலுகை செய்வதற்காக கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்கின்ற இந்த அரசு, 1972–73–இல் சில இலட்சம் ரூபாய்களை ஆத்தூர் தாலூகாவிற்கு, வெள்ள நிவாரணத்திற்காக, இதேபோன்று நடந்த ஒரு சந்தர்ப்பத்திற்காக் கொடுத்த தொகையைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று பலமுறை கேட்டிருக்கிறேன்.

ஆனால் அது இதுவரையில் அவர்களுக்குக் கிட்டவில்லை. காரணம் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட இடத்தில் மண்ணை நிரப்பி விவசாயம் செய்யக் கொடுக்கப்பட்டது. அது கடனாகக் கொடுக்கப்பட்டது. ஆனால் தொடர்ந்து அங்கே வறட்சியும், வெள்ளமும் ஏற்பட்ட காரணத்தால் அந்தக் கடனை மீண்டும் கட்ட முடியாமல் அவர்கள் தவித்துக் கொண்டு இருக்கிறார்கள். எனவே அதைக் கண்டிப்பாக தள்ளுபடிசெய்ய கேட்டுக்கொள்கிறேன்.

மலைவாழ் மக்களுக்கு பல சலுகைகளை மத்திய, மாநில அரசுகள் செய்திருந்தபோதிலும் கூட என்னுடைய தொகுதியில் வேப்படி பாலக்காட்டிற்கு இதுவரையில் சாலை அமைக்கப்படவில்லை. கூடமலை நரிப்பாடிச் சாலை அமைக்கப்படவில்லை. பூமரத்துப்பட்டிக்கும் சாலை அமைக்கப்படவில்லை. அதை இந்த ஐந்தாண்டிலேயாவது சேர்த்து எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு பாலங்கள் அமைக்கவேண்டிய இடத்தில் பாலங்கள் அமைக்கப்படவேண்டும். 74 கிருஷ்ணாபுரத்தில் உள்ள மக்கள் எட்டு நாட்கள் ஆற்றிலே தண்ணீர் வந்தால் வெளியே வரமுடியாது. ஆக அவசியம் அதற்குச் செய்யவேண்டும் என்று சொன்னபோது அங்கே போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தால் அதைச்செய்ய முடியாது என்று



சொல்லிவிட்டார்கள். கோழி முந்தியா, முட்டை முந்தியா என்று சொல்வதுபோல் அங்கே போக்குவரத்து வசதி ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னால் பாலம் தேவை. எனவே அதைக் கணக்கில் எடுக்காமல் மீண்டும் பரிசீலனை செய்து அங்கே போக்குவரத்து வசதிக்காக ஒரு பாலம் அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பகுதியில் மலைவாழ் மக்கள் அதிகமாக வாழ்கிறார்கள். அவர்களுக்குக் குடிக்க தண்ணீர் கிடைக்கவில்லை. வாழகோம்பையில் ஏற்கெனவே இருந்த டேங்க் ஓட்டையாக இருக்கிறது. தண்ணீர் வெளியே போகிறது என்று சொன்னால் அதைச் சீர் செய்ய எங்களிடம் தொகை இல்லை; அதற்கான திட்டம் இல்லை என்கிறார்கள். அதை அடைத்துக் கொடுப்பார்களோ அல்லது புதிதாக ஏற்படுத்திக்கொடுப்பார்களோ அவர்களுடைய தண்ணீர்ப் பிரச்சினையை அவசியம் தீர்க்க வேண்டும்.

வீரவனூர் அரசு மருத்துவமனை ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டது. நாங்கள் பல காலங்களாகச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். பெண் மருத்துவர் அங்கே நியமிக்கப்படவில்லை. அதோடு அங்கே கட்டிடமும் இல்லை. தம்பம்பட்டியில் நீண்ட நாட்களாக பெண் மருத்துவ அதிகாரி இல்லை. நாம் பல கோடி ரூபாயில் மருத்துவ விடுதிகளை அமைத்து மருத்துவர்களை நியமித்தும் கூட அங்கே பெண்கள் அதிகமாக வருகின்ற ஒரு சூழ்நிலையில் பெண் மருத்துவர் இல்லாத காரணத்தால் அவர்கள் எல்லாம் தலைவாசல், வீரவனூர், தம்பம்பட்டியில் மருத்துவமனைகள் இருந்தும்கூட மீண்டும் ஆத்தூருக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆத்தூரிலே என்ன நிலை என்று சொன்னால் அங்கே தண்ணீர் இல்லை. ஆத்தூர் பகுதியிலே தண்ணீர் இருந்தும் மருத்துவமனைக்குத் தண்ணீர் கொடுக்கப்படவில்லை. அதோடு இரவு நேரங்களிலே அங்கே மின்சார விளக்கு இல்லை. அப்படிப்பட்ட நிலைமைகளை நாம் போக்கினால்தான் குடும்பக் கட்டுப்பாட்டைத் தீவிரமாக எடுத்துக்கொண்டு இருக்கிற நிலையில் மத்திய, மாநில அரசுகள் இவ்வளவு சலுகைகளைச் செய்து கொடுத்தால்தான் அதை நல்லமுறையில் நிறைவேற்ற முடியும் என்று கூறிக்கொள்கிறேன்.

தேர்தல் காலங்களில் பலரும் உணர்ந்திருக்கலாம். பல ஊர்களில் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்து கொடுத்தால் தான் நாங்கள் ஓட்டளிப்போம் என்று மக்கள் சொன்னதைப் பார்த்திருக்கலாம். அதுபோல் சிறுவாக்கலில் ஒரு ஏரி, ஊனத்தூரிலே ஒரு ஏரி, கிருஷ்ணாபுரத்தில் ஒரு பாலம், பெரியேரியில் ஒரு பாலம், நாககுறிச்சியில் தண்ணீர் பிரச்சினை போன்றவற்றிற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். தெடாவூர் என்ற டவுன் பஞ்சாயத்து இருக்கின்றது. அங்கே

நீண்ட நாட்களாகப் போதுமான நிதிவசதி இல்லாத காரணத்தால் உப்புத் தண்ணீராக இருக்கின்ற அந்த இடத்திற்குத் தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்படவில்லை. ஆற்று ஓரமாக ஆற்றின் படுகையிலே ஒரு கிணறை வெட்டி அதன் மூலமாக அவர்களுக்குத் தண்ணீர் கொடுக்கலாம்.

கல்வியைப் பற்றிச் சொல்லவேண்டும் என்றால் கல்வியில் பல்வேறு சலுகைகளை அளித்து வருகின்ற இந்த அரசு இந்தப் புத்தகத்தில் கூட 96 உயர்நிலைப்பள்ளிகளைச் சென்ற ஆண்டு கொடுத்ததாகக் குறிப்பிட்டிருக்கின்றது. அதை நான் தவறு என்று கருதுகிறேன், நூற்றுக்கு மேற்பட்ட பள்ளிகள் கிடைத்திருக்கின்றன. நான் கூட கடைசியாக இரண்டு பள்ளிக்கூடங்களைப் பெற்றிருக்கிறேன். இருந்தபோதிலும் கூட இனாமாகச் சாப்பாடு, இனாமாக உடை, இனாமாகப் புத்தகங்கள் கொடுக்கிற விடுதியில் படிக்கின்ற மாணவர்கள் என்ன பாவம் செய்தார்களோ அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற அந்த உதவித்தொகை அதிகப்படுத்தப்படவில்லை. அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற அந்த உதவித்தொகை நல்லமுறையில் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்குக் கொடுக்கப்படக்கூடிய புத்தகங்கள் அவர்களைச் சென்று சேரவில்லை. அதற்கெல்லாம் மேலாக அரிசன மாணவர்கள் படிக்கின்ற கட்டிடம் என்பதை ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் செல்லுகின்றபோதே கண்டுகொள்ளக்கூடிய வகையில் சாக்கடை நாற்றம், வெளிச்சம் உள்ளே வரக்கூடிய நிலை, மழை பெய்தால் உள்ளே கொட்டுகின்ற நிலை, மின் விளக்கு இல்லாத நிலை, இப்படிப்பட்ட நிலைமைகள்தான் அங்கே இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இவை எல்லாம் நல்ல முறையில் நிவர்த்திக்கப்பட்டு அந்த மக்களுக்கு நன்மை புரியவேண்டும் என்றால் கண்டிப்பாக நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்கள் சொன்னதுபோல் தேர்தல் குறித்த காலத்திலே அதாவது ஆகஸ்ட், செப்டம்பரில் வரவேண்டும். அப்படி வரவேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு பல்வேறு திட்டங்களுக்கான பணம் எல்லாம் ஊர்நல உதவியாளர்களிடத்திலேயும், ஆணையாளர்களிடத்திலேயும் ஒப்படைக்கப்பட்டு அவற்றை அவர்களுடைய கைப்பாவைகளாக நாம் ஆக்கிக்கொண்டிருக்கிறோம்.

(பிற்பகல் 1.20)

அதோடு இந்த ஐ.ஆர்.டி.பி., என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. என்ற திட்டங்களில் எல்லாம் எவ்வளவு வருகிறது, எவ்வளவு போகிறது, என்ன, என்ன செய்கிறார்கள் என்பது மக்களுக்கு மட்டுமல்ல, என் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் கூட தெரிந்துகொள்ள முடியாத சூழ்நிலை இருக்கிறது. குறைந்தபட்சம் இந்த ஆண்டு இதற்காக இவ்வளவு நிதி ஒதுக்கப்படுகிறது என்று அந்த, அந்த ஒன்றியங்களில் போர்டுகள் வைத்து, அதில் டைப் செய்து ஒட்டினால்கூடபோதும்.



மக்கள் விழிப்படைந்து ஏன் இதைச் செய்யவில்லை என்று கேட்கக்கூடிய நிலை வரும். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால் செங்கரப்பட்டியிலே—அது ஒரு டவுன் பஞ்சாயத்து ஏற்கனவே ஆளுங்கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர், அன்புச் சகோதரர் திரு. எஸ். எம். ராஜு அவர்கள் சொந்த ஊர்—ஒரு பாலம் கட்டவேண்டுமென்று சொன்னால், சிலர் கூறுகிறார்கள், ஏற்கனவே பாலம் கட்டி, பில் போடப்பட்டுவிட்டது என்று. ஆனால், நேரிலே பார்த்தது, $1\frac{1}{2}$ ஆண்டுகளுக்கு முன்பு 3 பைப்புகள் இருந்தன. அடுத்த 6 மாதம் கழித்து 2 பைப்புகள் இருந்தன. பிறகு, 6 மாதம் கழித்து, தேர்தலின் பொழுது பார்க்கும்போது 1 பைப்புதான் இருந்தது. நம்முடைய சீப் இன்ஜினியர் அவர்களைச் சந்தித்துப் பாலத்தைக் கட்டுங்கள் என்று சொன்னபொழுது, இந்தத் தேர்தலுக்கு முன் போட்டுவிடுகிறோம் என்று சொன்னார்கள். நான் கூட மகிழ்ச்சியாக பரவாயில்லை, நெடுநாட்களாகச் செய்ய முடியாத ஒரு காரியம், இன்றைக்கு ஆளுங்கட்சியும் நாமும் ஒன்று சேர்ந்து நிற்கின்ற காரணத்தால், செய்து முடித்துவிடுவார்கள் என்று நினைத்தேன். ஆனால், இதுவரையில் அது செய்து முடிக்கப்படவில்லை. ஆகவே, ஒட்டுமொத்தமாக நம்முடைய வரிப்பணத்தால் அந்த பாலம் சீர்செய்யப்படவில்லை. சலுகைகள் சேர வேண்டிய இடத்திற்குச் சேர வேண்டுமென்றால் அது செல்லும் வழியைச் சீர்செய்யவேண்டும். அதற்கு தேர்தல் வரவேண்டும். (மணியடிக்கப்பெற்றது).

*திரு. சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின்மீது பேசுகின்ற வாய்ப்பைப் பெற்றமைக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் ஏழை, எளிய மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிக் கொண்டிருக்கிற தள நாயகர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிற சீருடை வழங்குகின்ற திட்டத்தையும், ஏழை, எளிய மக்கள் உபயோகப்படுத்துகின்ற மஞ்சள், புளி, மிளகாய் போன்றவற்றின் மீது இருக்கிற பலமுனை வரியை ஒருமுனை வரியாக விதித்ததையும் வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

இந்த அரசு ஏழை, எளிய மக்களின் மீது, அன்பு கொண்டு, பரிவு கொண்டு, அவர்களது இன்னல்களை எல்லாம் போக்குகின்ற வகையில் பணியாற்றிக்கொண்டு வருகிறது என்பதை உணர்த்திக் கொண்டிருக்கிற வகையில் பல்வேறு நிலைகளில், பல்வேறு பொருட்களின் மீது இருக்கிற வரிகளை எல்லாம் தளர்த்தி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில், இன்றைக்கு மக்கள் எல்லாம் மிக அத்தியாவசியமாக உபயோகிக் கின்ற தேங்காயெண்ணெய், நல்லெண்ணெய் போன்ற எண்ணெய் களின் மீது இருக்கிற வரியைக் கூட ஒருமுனை வரியாக விதிக்க பரிசீலனை செய்யவேண்டுமென்ற எங்களது நல்லெண்ணத்தைத்

தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கனவே ஒரு முனை வரியாக இருந்த அந்தப் பொருள்களின் மீது 1982 ஆம் ஆண்டிலிருந்து பலமுனை வரி விதிக்கப்படுகிறது. அதை ஒருமுனை வரியாக மாற்றி அமைத்தால் ஏழை, எளியவர்கள் எல்லாம் பலன் பெறுவார்கள் என்கிற ஒரு எண்ணத்தை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நடந்து கொண்டிருக்கிற சட்டமன்றத் தொடரில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சென்னை மாநகரத்தில் இருக்கிற தனியார் தெருக்களுக்கு எல்லாம்—25 சதவீதம் கட்டவில்லையென்றாலும், அந்த 25 சதவீதத்தைத் தவணை முறையில் பெற்றுக்கொண்டு—எல்லாவிதமான அடிப்படை வசதிகளையும் செய்து தர பொதுத் தெருவாக மாற்றித் தர வேண்டுமென்ற கோரிக்கையினைப் பரிசீலிப்பதாகச் சொன்னார்கள். அந்த நடைமுறையைப் பின்பற்றி சென்னை மாநகரம், ஈரோடும், சிறப்போடும், எழிலோடும் விளங்குவதற்கு சென்னை மாநகரத்திலே இருக்கிற தனியார் தெருக்களை எல்லாம் பொதுத் தெருவாக மாற்றி, சாலை வசதி, மின்சார வசதி, குடிநீர் வசதி என்று அனைத்து வசதிகளையும் செய்து தரவேண்டும். அதுவும் நடப்பு நிதியாண்டிலேயே இந்தப் பணிகளைத் தொடங்க வேண்டுமென்பதை எங்களது அன்பு வேண்டுகோளாக இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் அதிகாரிகளுக்கு தொகுதியிலே உள்ள குறைபாடுகளை எடுத்துச் சொல்கிறோம். சில நேரங்களில் புகார் மனுக்களாகவும் கொடுக்கிறோம். அந்த புகார் மனுக்களின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? அவற்றின் மீது நடவடிக்கை இருக்கிறதா அல்லது அந்தப் பணிகள் செய்யக்கூடியவை தானா என்பதையெல்லாம் குறித்து விவரமாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பதிலாக தரவேண்டுமென்ற வகையில் அதிகாரிகளுக்கு அரசு உத்தரவு வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சென்னை மாநகராட்சியின் வருவாய் போதுமானதாக இல்லை என்று சொல்லப்படுகிறது. அந்த நிலையை மாற்றுவதற்கு, மாநகராட்சியின் வருவாயை பெருக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். இன்றைக்கு நேஷனல் ஹைவேசிலும் மற்ற இடங்களிலும் விளம்பர பலகைகளை அதிகமாக தனியார்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதிலிருந்து அவர்கள் ஆயிரக்கணக்கில், லட்சக்கணக்கில் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையை மாற்றி சென்னை மாநகராட்சியே வருவாயைப் பெருக்குவதற்காக அந்த விளம்பரப் பலகைகளை எல்லாம் விளம்பரதாரர்களோடு தொடர்பு கொண்டு எல்லா இடங்களிலும் வைக்கவேண்டும். தனியார்களுக்கு வழங்கப்





படுகிற உரிமைகளை ரத்து செய்யவேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவரும், மாநகராட்சியும் இணைந்து இந்தப் பணியை செய்தால் மாநகராட்சிக்கு மேலும் வருவாய் வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு சென்னை மாநகரத்தில் மக்கள் தொகை பெருகிக் கொண்டே போகிறது. எவ்வளவு தான் வசதிகளையும், மற்றவைகளையும் செய்தாலும் அவை போதுமானவையாக இல்லையென்று சொல்கிற அளவிற்கு மக்கள் தொகை பெருகி இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் சென்னை மாநகரத்தின் மக்கள் தொகையை கண்காணிக்கவும், இங்கு வந்து தங்குபவர்களின் எண்ணிக்கையை கண்காணிக்கவும் ஏற்ற வகையில், அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சென்னை மாநகரில் எல்லா வீடுகளிலும் மின்சார யூனிட் கணக்கை மாதந்தோறும் அலுவலர்கள் பார்த்து, அந்த வீட்டிற்கு எவ்வளவு மின்சாரம் செலவாகி இருக்கிறது என்பதை இதுவரையில் சொல்லி வந்தார்கள். ஆனால் இப்போது அந்தப் பணியை மாதந்தோறும் செய்யாமல் 3 மாதங்கள், 4 மாதங்களுக்கு ஒருமுறை செய்து கொண்டிருக்கிறார்கள். மாதந்தோறும் அந்தக் கணக்கைக் கொடுத்தால்தான் ஏழை, எளிய மக்களுக்கு பில்களை கட்டுவதற்கு வசதியாக இருக்கும். ஆகவே இதில் இப்போது இருக்கும் தாமதத்தை தவிர்த்து, இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கொடுப்பதை மாற்றி, மாதந்தோறும் அந்த பில் கொடுக்கப்பட வேண்டும். அந்த அடிப்படையில் மின்துறை பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு மக்களின் அத்தியாவசியமான பொழுது போக்கு அம்சமாக இருப்பது தொலைக்காட்சி. இந்த நிலை சென்னை மாநகரில் மட்டுமல்லாமல் தமிழகம் முழுவதிலும் இருக்கிறது. அப்படிபட்ட நிலையில் தொலைக்காட்சி நிலையம் ஒளிபரப்புகிற நிகழ்ச்சிகளை குடும்பத்தோடு அமர்ந்து பார்க்கிறபோது சில சங்கடங்களும், இடையூறுகளும் இருந்து வருகின்றன. அந்த நிகழ்ச்சிகளைப் பார்க்கிறபோது திரைப்படத்தைப் பார்த்தாலும் செக்ஸ், மற்ற எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் செக்ஸ் என்ற அளவில் இருந்து வருகிறது. அந்த நிகழ்ச்சிகளை அண்ணன் தங்கையோடு, அம்மா, அப்பாவோடு பார்க்கிறபோது, நிரோத் விளம்பரத்தை போடுகிறார்கள். மக்களின் உணர்வுகளை திசை திருப்பிவிடுகிற வகையில், அல்லது மகிழ்ச்சிகரமாக பார்க்க முடியாத அளவில், ஒரு சங்கோசமான சூழ்நிலையில் நிகழ்ச்சியை பார்க்கும்படியான ஒரு சூழ்நிலை இதுபோன்ற விளம்பரங்களால் ஏற்படுகின்றன. ஆகவே மாநில அரசு மத்திய அரசிற்கு இது குறித்து வலியுறுத்தி, குடும்பத்தோடு மக்கள் அமர்ந்து பார்க்கிற வகையில், அதில் இருக்கிற சிரமத்தை தவிர்க்க, அல்லது

வேறுவகையில் விளம்பரத்தை மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் சொல்லிய சங்கடம் எல்லா குடும்பங்களிலும் இருக்கிறது. நான்கைந்து தங்கைகளோடு ஒரு குடும்பத்தில் உள்ள அண்ணன்கள் தொலைக்காட்சியை பார்க்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

(பிற்பகல் 1.30)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்பெறுகிறது.

**திரு. சா. துரைசாமி :** துணைத் தலைவரவர்களே, அந்தப் பணியின் வாயிலாக நம்முடைய சமுதாயத்தினுடைய நலனைப் பாதுகாக்கின்ற வகையிலும் வளர்ந்து வருகின்ற இளைய தலைமுறையினரைப் பாதுகாக்கின்ற வகையிலும் அந்தப் பிரச்சாரத்தை இந்த அளவுக்கு சங்கோஜம் இல்லாத அளவுக்கு இளம் சிறார்கள் எல்லாம் பாதிக்கப்படாத வகையில் அந்த விளம்பரத்தைச் செய்ய வேண்டுமென்று மத்திய அரசுக்கு நம்முடைய மாநில அரசு வலியுறுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு சென்னை மாநகராட்சியில் பணியாற்றிக்கொண்டிருக்கிற ஊழியர்களுக்கு எல்லாம் அவர்கள் இறந்தால் 10,000 ரூபாய் உதவித்தொகை வழங்கப்படுகிறது. அதே நேரத்தில் இன்றைக்கு எம். எம். டபிள்யூ. போர்டு தனியாகப் பிரிந்து பணியாற்றிக்கொண்டிருக்கிறது. அதிலே பணியாற்றிக்கொண்டிருக்கிற தொழிலாளர்களுக்கு அந்த 10,000 ரூபாய் வழங்கப் படவில்லை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு இந்தப் பிரச்சனையை பரிவுடன் கவனித்து, சென்னை மாநகரத்தை அற்புதமாக, சுகாதாரமாக வைக்க இரவு பகல் என்று பாராமல் பணியாற்றிக்கொண்டிருக்கிற தொழிலாளர்களுக்கு அந்த சலுகை கிடைக்க ஆவன செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு சென்னை மாநகரில் சைதாப்பேட்டைப் பகுதியில் அதிகமாக நெசவாளர்கள் இருக்கிறார்கள். அந்த நெசவாளர்களுக்கு இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் வீடு கட்டும் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தின் அடிப்படையில் கொத்தவால்சாவடித் தெருவில் மாநகராட்சிக்கு சொந்தமான 50 கிரவுண்ட் நிலம் வீணாக இருப்பதை எடுத்து, சைதாப்பேட்டைப் பகுதி நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தை அங்கே அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





அதுமட்டுமல்ல, இன்றைக்கு சென்னை மாநகரம் ஒரு எழுச்சி மிக்க நகரமாக, அழகு மிக்க நகரமாக மாற, சென்னை மாநகராட்சியும் சென்னை பெருநகர் குடிநீர் வடிகால் வாரியமும் இணைந்து, சட்ட விதிகளைத் தளர்த்தியாவது சென்னை மாநகர மக்களை ஆரோக்கியமுள்ளவர்களாகவும் நல்லமுறையில் வாழக் கூடியவர்களாகவும் ஆக்குவதற்கு ஏற்ற ஒரு வாழ்க்கை அமைப்பை ஏற்படுத்திக்கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த சட்டமன்றத் தொடர் கூட்டத்தில் பல்வேறு கருத்துக் களைச் சொன்னார்கள். எனக்கு முன்பாகப் பேசிய பெரம்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இந்த அரசு மக்களுக்கு வரி விதித்திருப்பதனால் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தொகுதிக்குச் செல்ல முடியாத சூழ்நிலை இருக்கிறது என்று சொன்னார். தமிழ்நாட்டின் தளநாயகர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மோட்டார் வாகனங்களுக்கு வரிவிதிப்பு செய்தாலும் தனியார் பஸ் உரிமையாளர்கள் கட்டணத்தை உயர்த்தக்கூடாது என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆனால் உங்களுடைய ஆட்சி காலத்தில் மோட்டார் வாகன வரி விதிக்கப் பட்டபோது தனியார்கள் எல்லாம் கட்டணத்தை உயர்த்த உதவி செய்தீர்கள். அதைப்போன்ற ஒரு நிலைமை இந்த ஆட்சியில் இல்லை. இன்றைக்கு மோட்டார் வாகன வரி விதிப்பு இருந்தாலும் தனியார் பஸ்களில் கட்டணத்தை உயர்த்தக்கூடாது என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். சென்னை மாநகரில் பல்லவன் போக்குவரத்துக்கு கட்டண உயர்வு என்று சொன்னால் அதற்கு அடிப்படைக் காரணம் உலக வங்கி இன்றைக்கு கடன் தர நீங்கள் பஸ் கட்டணத்தை உயர்த்தினால்தான் முடியும் என்று சொல்லுகின்ற சூழ்நிலையினால்தான், இந்த உயர்வு தவிர்க்க முடியாத ஒரு சந்தர்ப்பத்தை இன்றைக்கு ஏற்படுத்தியிருக்கிறது. ஆகவேதான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி இன்றைக்கு இந்த கட்டண உயர்வை செய்திருக்கிறது.

மேலும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு ஏழை எளிய மக்கள் பயனடைய வேண்டுமென்ற அடிப்படையில் பல்வேறு திட்டங்களைத் தீட்டி, பணியாற்றிக்கொண்டிருக்கிறது. கடந்த வாரம் வீட்டுவசதி வாரியத்தினுடைய தணிக்கைக் குழு வீட்டுவசதி வாரியம் ஒதுக்கி இருக்கிற வீடுகளைப்பற்றி அறிக்கை கொடுத்திருப்பதைப்பற்றி சுட்டிக்காட்டி பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். பத்திரிகையிலும் எழுதினார்கள். அதிலும் குறிப்பாக முரசொலியில் 'யார் வீட்டு அப்பன் சொத்து ஆளும் கட்சிக்கு இதை வழங்க' என்று கூட செய்தி வெளியிட்டிருக் கிறது.

நான் அந்தப் பத்திரிகைக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

*    *    *    *

*    *    *    *

(குறுக்கீடு)

திரு. அ. ரகுமான்கான் : பாயின்ட் ஆப் ஆர்டர். மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் துரைசாமி அவர்கள் சொல்கின்ற குற்றச்சாட்டைப் பற்றி எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. அவருக்குக் கிடைத்த ஆதாரத்தின் அடிப்படையில் தகவலின் அடிப்படையில் அவர் இங்கே குற்றச் சாட்டுக்களைச் சொல்வதற்கு உரிமை உண்டு. ஆனால் இந்த அவையில் நீங்களே குறிப்பிட்டு இருக்கிறீர்கள். இல்லாத ஒருவர் மீது குற்றச்சாட்டு சொல்கிறபோது, இங்கே ஆதாரங்களோடு குற்றச் சாட்டுக்களைச் சொல்ல வேண்டும் என்று இரண்டாவது, அவையில் இருப்பவர்கள் அதற்கு பதில் சொல்லுகின்ற நிலை இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டு இருக்கிறீர்கள். ஆனால் இங்கே அவர் சொல்லுகிற குற்றச்சாட்டுக்கு பதில் சொல்வதற்கு சம்பந்தப்பட்ட **அதே நேரத்தில் துரைசாமி அவர்களைப் பற்றி நான் குற்றச்சாட்டு சொன்னேன். காரணம் ஏற்கெனவே இருக்கக்கூடிய கமிட்டி ரிப்போர்ட்டிலே அது குறிப்பிடப்பட்டு, இங்கே சபையிலே வைக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே சபையில் இல்லாதவர்களைப்பற்றி அவர்கள் பதில் சொல்வதற்கு முடியாத நிலையில் சொல்கின்ற குற்றச் சாட்டுக்களை நீங்கள் அனுமதிக்கிறீர்களா, என்பதை மட்டும் நான் கேட்கிறேனே ஒழிய, அவர் பேசுவதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபையிலே இல்லாதவர்களைப் பற்றி உறுப்பினர்கள் யாரும் பேசக் கூடாது. அதைப் பற்றி நான் ஏற்கெனவே பல நேரங்களில் சொல்லியிருக்கிறேன். நான் திரும்பவும் சொல்கிறேன். அவையில் இல்லாதவர்களைப் பற்றி குற்றச்சாட்டு சொல்லக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர் பேசும் போது, அவரைப் பற்றி பிரசுரித்த ஒரு பத்திரிகையைப் பற்றி பேசினார்கள். அதற்கு இடையில் இது வந்து விட்டது.

திரு. அ. ரகுமான்கான் : அந்தப் பேச்சை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையில் இல்லாதவர்களைப் பற்றி யாரும் பேசக் கூடாது. அது அப்படியே வந்து விடுகிறது. அது அப்படியே இருக்கிறது. ஆகவே அதை நீக்குவது என்பது வேண்டாம்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





திரு. அ. ரகுமான்கான் : அவையில் இல்லாதவர்களைப் பற்றி பேசுவது அப்படியே இருக்கலாம் என்பது உங்களுடைய தீர்ப்பானால் அதற்கும் எங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் எடுத்த முடிவிலே பிறழாமல் இருக்க வேண்டும் என்பதால் சொல்கிறேன். பேசும் போது ஒவ்வொருவரும் தங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு பேசவேண்டும் என்பதற்காகத்தான் நான் இந்த விதியை இன்னமும் பின்பற்றிக் கொண்டு வருகிறேன். நீக்க ஆரம்பித்தால் எல்லாவற்றையும் நீக்கிக் கொண்டு இருக்கலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோருக்குமே பொருந்தக் கூடிய, கட்டுப்படுத்தக்கூடிய ஒரு முறையைக் கையாளுவது ஏற்றதுதான். ஆகவே அந்த முறையிலே குற்றச்சாட்டு சாட்டுவதாக இருந்தால்,—தாங்கள் ஏற்கெனவே தீர்ப்பளித்து இருக்கிறீர்கள் தங்களுடைய அனுமதியைப் பெற்று, ஆதாரத்தைக் காட்டி, இந்தக் குற்றச் சாட்டு எழுப்பப் போகிறேன் என்று தங்களுடைய அனுமதியைப் பெற்றதற்குப் பிறகுதான் அதை எழுப்ப வேண்டும் என்ற அந்த முறையை ஆளும் தரப்பாக இருந்தாலும் சரி, எதிர்த்தரப்பாக இருந்தாலும் சரி, எல்லோரும் கடைபிடிப்பதன் மூலம்தான் எதிர் காலத்திலே இந்த அவையை நல்லமுறையிலே நடத்திச்செல்வதற்கு வழிவகை ஏற்படும். ஆகவே வெளியிலே இருப்பவர்களைப் பற்றி சொல்வதாக இருந்தால் முன் கூட்டியே தங்களிடத்திலே அனுமதி பெற வேண்டும். தாங்கள் அனுமதித்த பிறகு வேண்டுமானால் இங்கே சொல்லலாம். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் துரைசாமி அவர்கள் அந்த முறையைக் கடை பிடிக்க வேண்டும். எல்லோரும் கடைபிடிக்க வேண்டும், அப்போதுதான் இந்த அவையை ஒழுங்காக நடத்த முடியும். கண்ட கண்ட குற்றச் சாட்டுக்களை கண்டவர்கள் மீது எழுப்பாமல் இருப்பார்கள். ஆகவே அந்த முறையிலே அதை நீக்கி விடலாம். வேறு ஒரு சந்தர்ப்பத்திலே வேறு ஒரு வாய்ப்பிலே பொருத்தமாக, சரியாக, முறையாக வழியாக வருமானால் அப்போது பேசிக் கொள்ளலாம், இப்போது எடுத்து விடலாம்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எல்லோரும் நீக்கச் சொல்வதால் அதை நீக்கி விடுகிறேன்,

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு முறையைப் பற்றி, விதியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சொல்கிறார்கள்.....

(பிற்பகல் 1.40)

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. துரைசாமி, முடித்து விடுங்கள்.

திரு. சா. துரைசாமி : ஆகவே, முறைகேடுகளை தவறுகளை செய்துக் கொண்டிருப்பவர்கள், மல்லாந்து படுத்து காறி உமிழ்ந்தால் அது தங்கள் மீதுதான் விழும் என்பதை உணர்ந்து இங்கே உண்மையை மறைத்து சொல்லி, குழப்பக் கூடாது என்பதற்காகத்தான் இந்த உதாரணங்களை எடுத்துச் சொன்னேன். அந்த வகையிலேதான் எண்ணற்ற முறைகேடுகளை செய்து, முறை கேடுகளின் மொத்த உருவமாக விளங்கிக் கொண்டிருப்பவர்கள், உண்மையை, நேர்மையை, நாணயத்தைப் பார்த்துக் கேவலமாகச் சொல்லக் கூடாது என்பதற்காகத்தான், இந்த அவைக்கு அந்த உபமானங்களை எடுத்துச் சொன்னேன்.

இன்றைக்கு வீட்டுவசதி வாரியம் அந்த வீட்டை வழங்கியிருக்கிறது என்று சொன்னால், அதனுடைய விவரங்களை வீட்டு வசதி மானியக் கோரிக்கையில் நானும் விரிவாகப் பேசலாம் என்று கருதி, இங்கே ஒத்திவைப்புத் தீர்மானத்தில் பேசுகிற நேரத்தில் திரு. ரகுமான்கான் அவர்கள் சொன்னார்கள். ‘ போலீஸ் சொல்வது உண்மையா, அவர்கள் உண்மையைச் சொல்ல மாட்டார்கள் ’ என்று சொன்னார்கள்.

அது உங்கள் வரலாறு. சிதம்பரம் பல்கலைக் கழக மாணவன் உதயகுமார் இறந்த நேரத்தில், பெற்றோர்களையே பெற்ற மகன் இல்லை என்று சொல்லவைத்த போலீஸ் துறையை நடத்தியவர்கள்தான் என்று சொல்லி, அந்த வரலாற்றை, அந்த அவமானக் காரியங்களை எங்களிடம் எதிர் பார்க்காதீர்கள். தாங்கள் செய்த தவற்றை எல்லாம் நாங்களும் செய்வோம் என்று எண்ணி எண்ணற்ற குற்றச் சாட்டுகளை எங்கள்மீது சுமத்தார்கள். பெற்ற மகனையே இல்லை என்று சொல்ல வைக்கக் கூடிய அப்படிப்பட்ட தவறான அணுகுமுறையில், நியாயமற்ற முறையில் ஆட்சியை நடத்தியவர்கள், நியாயத்தோடும், நேர்மையோடும், இதய சுத்தியோடும் பணியாற்றிக் கொண்டிருக்கிற எங்கள்மீது, அவதூறுகளையும், பொய்புரட்டுக்களையும் எடுத்துச் சொல்வதை நிறுத்தி, மக்களுக்காக நல்ல முறையில் பாடுபட முயற்சி செய்யுங்கள் என்று சொல்லி, முடிக்கிறேன்.



3. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(இ) பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளின் படி பேரவையின் நிகழ்ச்சிகள் கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்கப் பட்டுள்ளன என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்:-

| | |
|---|---|
| 3-4-1985 (புதன்) | மகாவீரர் பிறந்த தினம்—விடுமுறை. |
| 4-4-1985 (வியாழன்) | 1985-86 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்— தொடர்ச்சி. |
| 5-4-1985 (வெள்ளி) | தூய வெள்ளிக்கிழமை—விடுமுறை. |
| 6-4-1985 (சனி) | பேரவைக் கூட்டம் இல்லை. |
| 7-4-1985 (ஞாயிறு) | விடுமுறை. |
| 8-4-1985 (திங்கள்) | 1985-86 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீது விவாதம்—பதிலுரை. |
| 9-4-1985 (செவ்வாய்)<br>10-4-1985 (புதன்) | 1985-86 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்.<br>17—கல்வி. |
| 11-4-1985 (வியாழன்) | அரசினர் சட்ட முன் வடிவுகள்—ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும். |

பேரவை 11-4-1985 அன்று ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் 24-6-1985 திங்கட்கிழமை முதல் கூடி, மானியக் கோரிக்கைகளை விவாதத்திற்கும் வாக்கெடுப்பிற்கும் எடுத்துக்கொள்ளும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை மறுநாள் (4-4-1985) காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.43 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

151. வருவாய்த் துறையின் 7-9-1971 ஆம் நாளிட்ட II-1 எண் 3987 (b)/1971 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 23-6-1984 ஆம் நாளிட்ட 1044 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு வேளாண் நிலங்கள் (பதிவுறு குடிவார உரிமைகள்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1969) 18 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

152. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையின் 29-11-1984 ஆம் நாளிட்ட 1200 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பேற்றது].

153. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் சழகத்தின் 1979-80 ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்,

எதுவுமில்லை.



## இணைப்பு.

[3-ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 4-க்கான விடையைக் காண்க].

1983-84 ஆண்டு நிதிநிலை பற்றி சேகரிக்கப்பட்டுள்ள விபரங்களின்படி மாவட்ட வாரியாக பற்றாக்குறையுள்ள ஒன்றியங்களின் விவரம் பின் வருமாறு:—

| வரிசை எண். | மாவட்டத்தின் பெயர். | | பற்றாக்குறை உள்ள ஒன்றியங்கள் எண்ணிச்கை (1983-84 நிதிநிலை விபரங்கள்படி). |
|---|---|---|---|
| (1) | (2) | | (3) |
| 1 | செங்கல்பட்டு | .. | 8 |
| 2 | கோயம்புத்தூர் | .. | 4 |
| 3 | தர்மபுரி | .. | 2 |
| 4 | கன்னியாகுமரி | .. | இல்லை. |
| 5 | மதுரை | .. | 2 |
| 6 | வடாற்காடு | .. | 9 (செய்யாறு கோட்டம் நீங்கலாக). |
| 7 | நீலகிரி | .. | இல்லை. |
| 8 | பெரியார் | .. | 7 |
| 9 | புதுக்கோட்டை | .. | 3 |
| 10 | இராமநாதபுரம் | .. | 6 (தேவகோட்டை நீங்கலாக) |
| 11 | தென்னாற்காடு | .. | இல்லை (திண்டிவனம் கோட்டம் நீங்கலாக). |
| 12 | சேலம் | .. | 5 |
| 13 | தஞ்சாவூர் | .. | 7 |
| 14 | திருச்சி | .. | 8 |
| 15 | திருநெல்வேலி | .. | 10 |
| | | | 71 |

LIST OF AGENTS FOR THE SALE OF
TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District)
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniapps Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabhu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagohi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-12.


© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

29/85

வெளியீடு 26-10-1985

Issued 26—10—1985

2834

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஏப்ரல் 4, 1985 - தொகுதி V எண் 2

Thursday the 4th April 1985 - Volume V No. 2


சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras - 600 009

விலை: ரூ. 3-50 காசுகள்

Price Rs. 3-50 paise

## உள்ளடக்கம்

4—4—1985


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள் | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 131—158 |
| 2. தகவல் கோரல்— | |
| இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து நடைபெறும் அனைத்துக் கட்சிக் கூட்ட விவரம். | 158—159 |
| 3. ஒத்திவைப்புத் தீர்மானம்— | |
| எண்ணூர் அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட விபத்து. | 159—169 |
| 4. அறிவிப்புகள்— | |
| (அ) அண்ணா பல்கலைக் கழக ஆட்சிக் குழு உறுப்பினர் தேர்தல் .. | 169 |
| (ஆ) பேரவை அலுவல் .. | 241—242 |
| 5. கவன ஈர்ப்புகள்— | |
| (அ) கோவை மாவட்டத்தில் பல ஆலைகள் மூடப்பெற்றுள்ளதால் தொழிலாளர்கள் பாதிக்கப்பெற்றுள்ளது .. | 170—176 |
| (ஆ) கோவை மாநகராட்சி விதித்துள்ள கூடுதல் தண்ணீர் வரி .. | 176—181 |
| 6. வரவு-செலவுத் திட்டம் 1985-86 பொது விவாதம்—(தொடர்ச்சி) | 181—241 |
| திரு. த. புஷ்பராசு | 181—189 |
| திரு. ஏ. பாலுச்சாமி | 189—192 |
| திரு. ப. பொன்னுரங்கம் | 192—203 |
| திரு. எம். அண்ணாதாசன் | 203—209 |
| திரு. தமிழ்மணி | 209—213 |
| திரு. சி. பழனிமுத்து | 213—220 |
| திரு. கு. சுப்பராயன் | 220—225 |
| திரு. எ. வச்சிரவேலு | 226—230 |
| திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம் | 232—235 |
| திரு. க. நரசிம்மபல்லவன் | 235—238 |
| திரு. ஜி. கே. ஜெ. பாரதி | 239—241 |
| 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 242—243 |

## 1985, ஏப்ரல் 4, வியாழக்கிழமை.

பங்குனி 22, ரக்தாட்சி—திருவள்ளுவர் ஆண்டு 2016.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

''ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்"

தக்க வழியில் செய்யப்படாத முயற்சி பலர் துணையாக நின்று (அதை முடிக்குமாறு) காத்தபோதிலும் குறையாகி விடும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### நெல் கொள்முதலில் விவசாயிகள் ஊக்குவிப்பு.

*45—(* வினா எண் 51)—திரு. ந. சிவஞானம், திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—*

நெல் கொள்முதல் நிலையத்தின் மூலமாக் தமிழக விவசாயிகளுக்கு குவிண்டால் ஒன்றுக்கு உரமா ரூ. 15 வீதம் வழங்கியதில் டிசம்பர் முடிய மாநில அரசு வழங்கிய தொகை எவ்வளவு?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் நேரடி கொள்முதல் நிலையங்களில் நெல் வழங்கும் விவசாயிகளுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 15 பெறுமான உரம் வழங்குவதற்கென 1984-ம் வருடம் குறுவை பருவத்திற்கு இவ்வரசு மொத்தம் ரூ. 8 கோடி ஒதுக்கீடு செய்திருந்தது. 31-12-1984 முடிய ரூ. 7.51 கோடி மதிப்புள்ள உரம் பெறுவதற்கான கூப்பன் வழங்சப்பட்டு, ரூ. 7.31 மதிப்புள்ள உரம் வழங்கப்பட்டு விட்டது. உரம் பெறுவதற்கான காலம் 31-3-1985 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, நெல் கொள்முதல் விலையை எவ்வளவு நிர்ணயம் செய்ய வேண்டும் என்று மத்திய அரசை நாம் கேட்டோம். மைய அரசு எவ்வளவு கொள்முதல் நிர்ணயம் செய்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண ரகத்திற்கு ரூ. 125.57 என்று நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டோம். அவர்கள் ரூ. 137 என்று நிர்ணயித்து இருக்கிறார்கள்.

திரு. கி. வெங்கடாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, நெல் கொள்முதல் நிலையம் மூலமாக தமிழக விவசாயிகளுக்கு குவிண்டால் ஒன்றிற்கு ரூ. 15 வீதம் வழங்குவதை சிறிய மிகச் சிறிய விவசாயிகளும் பயன் அடைகின்ற விதத்தில் உரத்திற்கு பதிலாக பணமாக கொடுக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, பணமாகக் கொடுக்கக்கூடாது என்று மைய அரசு தெரிவித்து இருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, கோதுமைக்கு கொள்முதலுக்கு எவ்வளவு விலை நிர்ணயம் செய்கிறது? அரிசிக்கு எவ்வளவு விலை நிர்ணயம் செய்கிறது?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அரிசியைவிட கோதுமைக்கு அதிகம். அதைப்பற்றிய தகவல் இப்போது இல்லை.

திரு. பொ. உத்திராபதி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அறிவிக்கின்றபோது 31—3—1985 வரைக்கும் உரத்திற்கான காலம் நீட்டிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்கள். உரத்திற்குள்ள கூப்பன்களை விவசாயிகள் கையிலே வைத்து இருக்கிறார்களே, இப்போது விவசாயம் கிடையாது. ஆகவே, தண்ணீர் வந்தாலும் அதை உபயோகிப்பதற்கு ஆணை பிறப்பிக்கப்படுமா? மைய அரசையே சொல்லிக் கொண்டு இருக்காமல் இன்றுள்ள விலைவாசி ஏற்றத்தை கணக்கில் கொண்டு எதிர்காலத்தில், அடுத்த பருவத்தில் இந்த விலையை குவிண்டாலுக்கு ரூ. 200 என்று உணர்த்திக் கொடுப்பதற்கு தமிழக அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசை நாம் சொல்வதற்கு காரணம், இதற்கு கொள்முதல் செய்வதற்கான கடனை ரிசர்வ் வங்கியிலிருந்து பெறுகிறோம். ரூ. 110 கோடி பெறுகிறோம். ஆகவே இதை நாமாகவே முடிவு செய்யக்கூடிய கட்டத்தில் நிச்சயமாக இல்லை. மைய அரசு நிர்ணயித்துள்ள விலைக்கு மேலே நாம் கடன் கேட்பது சரியில்லை. மைய அரசு கண்டித்து இருக்கிறது. ரிசர்வ் வங்கியிடம் நாங்கள் கடன் கேட்பதைப் பற்றி யோசிக்க வேண்டும்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 15 வீதம் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் தான் கொடுக்கப்படுகிறது. அது உண்மையா? அப்படியென்றால் ஏன் மற்ற மாவட்டங்களிலும் கொள்முதல் செய்கின்ற நெல்லுக்கு இந்த ஊக்குவிப்புத் தொகை கொடுக்க அரசாங்கம் முன்வரக்கூடாது?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, நாம் ஏகக் கொள்முதல் என்று சொல்லுகின்ற கட்டத்தில் மற்ற மாவட்டங்களிலிருந்து நெல்லை கொள்முதல் எடுக்கின்றோம். இப்போது எங்கெங்கே நெல்லை கொள்முதல் எடுக்கின்றோமோ அங்கெல்லாம் இதையெல்லாம் வழங்குகிறோம்.



திரு. ப. ந. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் விவசாயத்திற்கு போர்வெல் டிரில்லர்ஸின் ஒரு நாள் வாடகை ரூ. 35-லிருந்து திடீரென்று ரூ. 250–க்கு உயர்த்தப்பட்டது அதிகம் என்று பொதுமக்கள் கருதுகிறார்கள். குறைக்கப்படுமா? டெபாசிட் தொகை டிரில்லருக்கு ரூ. 800-லிருந்து ரூ 3,000 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. குறைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்பில்லை.

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு தலைவர் பேரவைத் அவர்களே, விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய இடுபொருளாகக் கொடுக்கக் கூடியதை இப்போது விவசாயிகள் பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதால் அதற்குப் பதிலாக ரொக்கமாகக் கொடுக்க அரசு முன்வருமா ? சென்ற ஆண்டு கொடுத்த அளவுக்கு மேல் உயர்த்தி 35 ரூபாயாகக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இந்த சம்பாப் பருவத்திற்கும் கொடுக்கப்பட இருக்கிறது. அதற்காக 12 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். ரொக்கமாகக் கொடுப்பதிலே இருக்கிற சிக்கலைத்தான் ஏற்கெனவே சொன்னேன். ப்படிக் கொடுக்கக்கூடாது என்று மத்திய அரசு அறிவுறுத்தியிருக்கிறது.

திரு. தி. அன்பழகன்: தலைவர் அவர்களே, இந்த ஊக்க போனஸாகத் தருகிற பணத்தை விவசாயிகளுக்கு மானியமாகத் தர அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து; தலைவர் அவர்களே, உரம் என்பதே மானியமாகத்தான் தருகிறோம்.

திரு. செ. செம்மலை; தலைவர் அவர்களே, ஒரு பக்கம் நெல் கொள்முதலைக் கூடுதலாக்குவதற்கு நெல் உற்பத்திக்கு அதிக அளவிலே முயற்சிகளை மேற்கொண்டிருக்கிற அதே சமயத்திலே நெல் மட்டுமே விளையக் கூடிய விளை நிலங்களை, வீட்டு மனைகளாகப் பிரித்து விற்கப்படுவதைத் தடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து; தலைவர் அவர்களே, அதுபற்றிக் கட்டுப்பாடு விதித்து ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை வெளியிட்டிருக்கிறார்கள்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்; தலைவர் அவர்களே, நீலப் பச்சை பாசி என்ற தாவர உரத்தைத் தமிழக அரசு மிகச் சிறந்த முறையிலே பயன்படுத்தி வருகிறது. அதைக் கண்டுபிடித்த விஞ்ஞானி தமிழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு பேரவைத்

தலைவர் அவர்களுடைய தொகுதியைச் சேர்ந்தவர்தான் என்பது நமக்கெல்லாம் மிக்க மகிழ்ச்சியை அளிக்கக்கூடியதாகும். எனவே அந்த நீலப் பச்சைப் பாசி உரத்தை இதுபோன்று இலவசமாக வழங்குவதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து;** தலைவர் அவர்களே, தேவைப்படுகிறபோது அரசு யோசிக்கும்.

**திரு. எஸ். சிவராமன்;** தலைவர் அவர்களே, நெல் குவிண்டால் ஒன்றுக்கு 15 ரூபாய் மதிப்புள்ள உரம் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதோடு இன்றைய தினம் கள்ளக்குறிச்சி தாலுகாவிலே நெல் லெவி கொடுக்க வேண்டுமென்றால் தரமான நெல்லைக் கொடுக்க வேண்டும், இல்லையென்றால் திருப்பிவிடுகிறார்கள். அங்கே தரம் பார்க்கக் கூடியவர்கள் ஒரு மூடைக்கு 2 ரூபாய் கமிஷன் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இல்லையென்றால் ஈரப்பதமாக இருக்கிறது என்று சொல்லி மறுக்கிறார்கள். அது மட்டுமல்ல தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக கொள்முதல் செய்து ஏற்றிச் செல்கிற நிலையில் லாரிகள் கொடுப்பதில்லை, வியாபாரிகளே லாரிகளில் ஏற்றிக் கொள்ள வேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படி அவர்கள் எடுத்துச் சென்றால் அதற்கான வாடகையைக் கொடுப்பதில்லை. இதனால் நெல் கொடுப்பதற்கு விவசாயிகள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். இந்தக் குறைகளைப் போக்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து ;** தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. த. பழனி ;** தலைவர் அவர்களே, விவசாயத்திற்கு காவிரி நீர் பாய்கின்ற இடங்களிலே எல்லாம் ஆற்று நீரைப் பயன்படுத்துகின்ற இடங்களில் எல்லாம் 15 ரூபாய் போனஸ் வழங்குகிறார்கள். கிணற்று நீர் பயன்படுத்துகின்ற வட ஆற்காடு, தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களிலே உள்ள விவசாயிகளுக்கு போனஸ் தொகை போதாது, ஆகவே மேலும் அதை 50 ரூபாயாக உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து ;** தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. கே. அன்பழகன் ;** தலைவர் அவர்களே, விவசாயிகள் வறட்சி, வெள்ளம் ஆகியவற்றினால் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருவதாலே அவர்கள் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்றால் அவர்களுக்கு கட்டுப்படியான விலை கொடுத்தாக வேண்டும். இதை இந்த அரசு ரிசர்வ் வங்கிக்கு எடுத்துரைத்து கட்டுப்படியான விலையைக் கொடுக்க ஏற்பாடு செய்யுமா ?



**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து ;** தலைவர் அவர்களே, மைய அரசினுடைய விலை நிர்ணயக் குழுவிடம் நாம் தொடர்ந்து இதை வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். தொடர்ந்து தெரிவித்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. எஸ். என். இராமசாமி ;** தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழகத்திலே விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டு உற்பத்தி செய்யக்கூடிய நெல் ஒன்றுக்குத்தான் விலை குறைவாக இருந்து வருகிறது. குவிண்டால் ஒன்றுக்கு 200 ரூபாய் வீதம் விலை விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து ;** தலைவர் அவர்களே, நாட்டினுடைய உற்பத்திச் செலவு இவைகளையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டால் 175 ரூபாய் நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று மத்திய அரசை நாம் வற்புறுத்தி வருகிறோம். மத்திய அரசு கொடுப்பதாக இல்லை.

**திரு. மா. மணிமாறன் ;** தலைவர் அவர்களே, மானியமாகக் கொடுக்கிற உரத்தினை இப்போது விவசாயிகள் வாங்கி வைத்திருக்கிறார்கள். பின்னாலே விவசாயக் கடன் கூட்டுறவுச் சங்கம் மூலமாக கொடுக்கிற நேரத்திலே அவர்கள் உரத்தை வாங்கி செலவழிக்க முடியாத நிலைமை வரும். ஆகவே கூட்டுறவுச் சங்கம் மூலமாக கொடுக்கப்படுகிற பயிர்க் கடனை பின்னாலே பணமாகக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை அமைச்சரிடத்திலே அதைக் கேட்கலாம்.

(முற்பகல் 9—10)

**திரு. துரை கோவிந்தராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நெல்லுக்கு விலை உயர்வு நிர்ணயிப்பது அதனுடைய உற்பத்தியின் செலவின் அளவைக் கொண்டுதான் விலை உயர்த்தப்படுகிறது என்ற ஒரு நிலையை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசு, கோதுமைக்கு உற்பத்திச் செலவு குறைவாகவும், நெல்லுக்கு உற்பத்திச் செலவு அதிகமாகவும் இருக்கிற நேரத்தில், குறைவாக உற்பத்தி செலவு ஆகிற கோதுமைக்கு அதிகமான விலை நிர்ணயிப்பதும், அதிகமாக உற்பத்தி செலவு ஆகிற நெல்லுக்கு குறைவாக விலை நிர்ணயிப்பதுமாக இருக்கிறார்கள். இவைகளை எல்லாம் மனதில் வைத்து மீண்டும் மத்திய அரசை வற்புறுத்தி உற்பத்தி செலவினுடைய வகையில் விலையை நிர்ணயிக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல் உற்பத்திச் செலவை விட கோதுமை உற்பத்திச் செலவு குறைவுதான் என்பதை நாம் சுட்டிக்காட்டி

இருக்கிறோம். இருந்தாலும் கோதுமைக்கு கொடுக்கிற அளவுக்கு நெல்லுக்கு கொடுக்கவில்லை என்ற மனக் குறையை நாம் தெரிவித்து இருக்கிறோம். அதற்கு காரணம் என்ன என்று புரியவில்லை. கோதுமை ஒருவேளை வட நாட்டில் விளைகிறது என்பது காரணமாக இருக்கலாம்.

**திரு ஒ. சுப்புராயர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு குவிண்டால் ஒன்றுக்கு 15 ரூபாய் அளவில் உரமாக கொடுக்கிறார்கள். இப்போது நெல் பயிர்களில் ஏராளமான நோய்கள் தாக்கப்படுவதால், இதை மாற்றி பூச்சி மருந்து மற்ற மருந்துகள் கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கும் வேறு வகையில் நாம் ஏற்பாடுகளைச் செய்து கொண்டு இருக்கிறோம்.

**திரு. வி. பி. சிந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லுக்கு 200 ரூபாய் கொடுக்கவேண்டும் என்று தமிழக அரசு பரிந்துரை சிபாரிசு செய்த பிறகும் இன்றைக்கு 137 ரூபாய் மற்றும் 15 ரூபாய் மட்டும் தான் கொடுக்கப்படுகிறது. மத்திய அரசிடம் மீண்டும் இதை நிர்ப்பந்தித்து இந்த நிலையை வற்புறுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து அந்த விலை நிர்ணயக் குழுவிடம் நம்முடைய அரசின் சார்பில் கருத்துக்களைத் தெரிவிக்கிறோம். தொடர்ந்து வற்புறுத்துகிறோம். வேறு ஏதாவது வழியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால் அதையும் பரிசீலிக்கலாம்.

**திரு சா. ஞானசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரத்திற்குப் பதிலாக பணமாகக் கொடுப்பதற்கு பதிலாக மற்ற விவசாய இடுபொருட்கள் கொடுக்கிற எண்ணம் அரசுக்கு உண்டா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து ;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரமே இடு பொருள்தான்.

**திரு. ஆனந்த கிருஷ்ணா ;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோதுமைக்கு குறைவாக உற்பத்திச் செலவு ஆனாலும் அதிகமாக அதற்கு விலை கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். அங்கே பல மாநிலங்களில் ஆந்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம், பஞ்சாபில் கூட அதிகமான அளவுக்கு நெல் உற்பத்தி ஆகிறது. அந்த மாநிலங்களோடு கலந்து மத்திய அரசு விலையை அதிகப்படுத்துவதற்கு தமிழக அரசு வலியுறுத்துமா ,என அறிய விரும்புகிறேன் ?



**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பஞ்சாப் போன்ற மாநிலங்களில் நெல் என்பதை பணப் பயிராகத்தான் அவர்கள் பயிரிடுகிறார்கள். உணவுப் பயிர் என்ற வகையில் அதை கருதவில்லை. ஆகவே நிச்சயமாக நமக்கு வட மாநிலங்கள் துணையாக வராது.

**திரு எம். அண்ணாதாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நெல் உற்பத்தியை அதிகமாக நம்பியிருக்கிறது. நெல் கொள்முதல் விலையை அதிகமாக நீட்டித்து தரவேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசை நீண்ட காலமாகக் கேட்டும் அது ஏற்காமல் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வட மாநிலத்தில் விளைவதால் கோதுமைக்கு அதிக விலை கொடுக்கிறார்கள் என்ற எண்ணத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலிருந்து நீண்ட காலமாக விவசாயத்துறையில் இந்த நெல்லை அந்த விவசாயிகள் அதிகமாக பயிரிடுகிறார்கள் அதிகமான விலை கிடைக்கவேண்டும் என்ற கோரிக்கை கொடுத்துக் கொண்டு இருந்தும் இது காறும அதை ஏற்காமல் மறுப்பதன் அர்த்தம் என்ன? இவ்வளவு காலமாக கேட்டுக்கொண்டு இருக்கிற அந்த கோரிக்கையை இனி மேலாவது அதை கவனித்து நெல்லுக்கு அதிக விலை நிர்ணயம் செய்ய மத்திய அரசை தமிழக அரசு வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவைகளை எல்லாம் கருத்தில் கொண்டு தான் நாம் மாநில தன்னாட்சி என்பதை வற்புறுத்துகிறோம்.

**திரு மு. ஜான் வின்செண்ட் ;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குவிண்டாலுக்கு 15 ரூபாய் அதிகமாகக் கொடுப்பதை நான் வரவேற்கிறேன். அந்த விலை ஆற்றுப் பாசனத்தில் விளைவதற்கு கட்டுப்படியாகும். ஆனால் மோட்டார் பம்பு செட்டு வைத்து ஆயில் இன்ஜின் மூலமாக விவசாயம் செய்கின்ற விவசாயிகளுக்கு இந்த 15 ரூபாய் கட்டுப்படியாகாமல் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களைப் பொறுத்த வரையில் ரிபசீலனைச் செய்து கூடுதலாக கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து ;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்று நீரா. கிணற்று நீரா என்பது பிரச்சினை இல்லை. கொள்முதல் செய்வதற்கான நெல்லுக்குத் தான் சொடுக்கிறோம்.

### தஞ்சை மாவட்டத்தில் சம்பா தாளடியில் பூச்சி

46—(* வினா எண். 240)—திரு மா. மணிமாறன் ; மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் நடப்பு சம்பா தாளடி பூச்சியால் பாதிக்கப்பட்டது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதனால் ஏற்பட்ட இழப்பு விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து ;** (அ) பூச்சியால் பெரும் பாதிப்பு ஏதும் இல்லை. ஆனால் நெல் பயிரில் மஞ்சள் நிறம் படர்ந்து பயிர் பாதிக்கப்பட்டது.

(ஆ) தஞ்சை மாவட்டத்தில் 24,000 ஏக்டேர் பரப்பில் மஞ்சள் நிறம் படர்ந்து பயிர் பாதிப்பு ஏற்பட்டது. அதில் 14,000 எக்டேரில் மஞ்சள் நிறம் மழை பெய்தவுடன் மறைந்து விட்டது. மீதமுள்ள 10,000 எக்டேரில் ஒரு எக்டேருக்கு சராசரியாக 1 மெ. டன் வரை விளைச்சல் இழப்பு ஏற்பட்டது.

**திரு. மா. மணிமாறன்:** பேரவைத் தலைவரவர்களே, பாதிப்பு அதிகம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். ஆனால் இன்றுவரையில் ஒரு நெல்கூட அறுவடை ஆகவில்லை. ஆகவே, கண்டு முதல் என்னவென்று முறையாக ஆய்வு செய்வதற்கு அரசு என்ன முறைகளைக் கையாண்டது? அரசுக்கு இப்படிப்பட்ட தவறான தகவலைத் தந்தவர்கள் யார்? இப்படி அரசுக்குத் தவறான தகவல்களைத் தந்து, தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்குத் தொடர்ந்து பாதிப்பை ஏற்படுத்துவது நியாயம் தானா? எனவே, இதை மறுபரிசீலனை செய்து, வாய்தா போன்ற நிலையில் உள்ள கிஸ்திகளைத் தள்ளுபடி செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவரவர்களே, வேளாண்மைத் துறை, வருவாய்த் துறை போன்றவைகள் கொடுக்கின்ற விவரங்களின் அடிப்படையில்தான் தகவல்களைத் தெரிவிக்க முடியும். அந்த அடிப்படையில், அவர்கள் எடுத்த கணக்கின்படி தெரிவித்திருக்கிறார்கள். விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டு உதவி செய்வது, அரசு பல்வேறு நிவாரணப் பணி களைச் செய்வது போன்றவற்றிற்குச் சில விதிமுறைகள் இருக் கின்றன. அதற்கு உட்பட்டு நிவாரணம் வழங்குவதில் எந்த விதமான தடையும் இருக்காது.

**திரு. மா. மணிமாறன்:** பேரவைத் தலைவரவர்களே, மஞ்சள் நோய் கண்டதன் காரணமாகக் குறுவைப் பட்டத்தில் மதுரை போன்ற மாவட்டங்களில் பெரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதற்கடுத்து தஞ்சை மாவட்டத்தில் சம்பா தாளடிப் பட்டங் களில் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. எனவே, அங்கே குறுவைப் பட்டத்தில் பாதிப்பு ஏற்பட்டபொழுது, அதை முன்னுதாரண மாகக் கொண்டு அந்தப் பாதிப்பிற்கான காரணங்களைக் கண்டு பிடிக்க, அதைப்பற்றி ஆய்வு செய்ய அரசு தவறி விட்டதா? இல்லையென்றால், இந்தப் புள்ளி விவரங்கள் தவறு என்பதை சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் சொல்கின்ற நேரத்தில், அதைப்பற்றி மீண்டும் பரிசீலனை செய்ய, மறு ஆய்வு செய்ய அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் தெரிவிக்கின்ற கருத்துக் களின் அடிப்படையிலே நாம் திரும்ப விளக்கம் கேட்பதற்கும், ஆய்வு செய்வதற்கும் தயாராக இருக்கிறோம். ஆனால் பெரும் பாதிப்பு இல்லை என்ற தகவலைத்தான் துறை வழங்கியிருக் கிறது. அதற்குரிய அளவிற்கு அவர்கள் பாதிக்கப்பட்டு இருக் கிறார்கள் என்று அரசுக்குத் தெரிவிக்கப்பட்டால் உரிய நிவாரண நடவடிக்கைகளை அரசு நிச்சயமாக மேற்கொள்ளும்.

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் 24,000 எக்டேர் பரப்பில் பாதிப்பு ஏற்பட்டது என்று தகவல் வந்திருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். குறுவை அறுவடையைச் செய்து, அதிலிருந்து வருகின்ற வருமானம் தாளடிப் பயிருக்கே அதிகமாகச் செலவு ஆகிவிடுகின்றது. அப்படிச் செலவு செய்தும், தாளடிப் பயிர் இந்த ஆண்டு மஞ்சள் நோயினால் பெரும்பகுதி பாதிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப் பாதிப்பு ஏற்பட்டிருப்பதற்கு ஒரு காரணம் என்னவென்றால், 6 அணாவிற்குக் கீழே பாதிக்கப் பட்டவர்களுக்கே நிவாரணம் என்று ஒரு காலத்தில் எழுதி வைத்திருக்கிறார்கள். அதை வைத்துக்கொண்டுதான், இப்பொழுது உள்ள அதிகாரிகள் அந்தக் கணக்கின் அடிப் படையில் அரசுக்குக் கணக்கைக் கொடுத்துக்கொண்டிருக் கிறார்கள். எனவே, பழைய விதிகளை மாற்றி தற்போது பாதிக்கப்படும் விவசாயிகளைப் பொறுத்தவரையில், அரசே நேரடியாகப் பார்வையிட்டு, இப்படிப் பாதிக்கப்பட்டிருக்கின்ற விவசாயிகளுக்குக் குறைந்தபட்சம் இந்த ஆண்டிற்காவது அவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கிஸ்தியைத் தள்ளுபடி செய் வதற்கும், வரக்கூடிய ஆண்டிற்கு அவர்களுக்குப் பூச்சி மருந்து களை இலவசமாகக் கொடுப்பதற்கும் மறுபரிசீலனை செய்து ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவரவர்களே, வருவாய்த் துறையோடு கலந்து ஆலோசித்து முடிவு செய்யலாம்.

**திரு. கோ. வீரய்யன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் சொன்னார்கள், 24,000 எக்டேர் பரப்பில் பாதிப்பு ஏற்பட்டது என்று தகவல் வந்திருப்பதாக, ஆனால், சம்பா தாளடி பட்டங்களில் ஏறக்குறைய நான்கைந்து இலட்சம் ஏக்கர்களில் பாதிப்பு ஏற்பட்டு, அதனால் மகசூல் பாதிக்கப்பட்டிருக்கிறது. அமைச்சரவர்கள் சொன்ன விவரத்தின் படியே பார்த்தாலும்கூட, ஒரு ஹெக்டேருக்கு சராசரியாக 1 மெட்ரிக் டன் வரை விளைச்சல் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் பெருமளவிற்குப் பாதிப்புகள் ஏற்பட்டு இருக்கின்றன. ஒன்று, மதுரை மாவட்டத்திலே குறுவை யிலே பாதிப்பு ஏற்பட்டவுடன் தமிழகத்தில் உள்ள மற்ற இடங்களில் அந்த நோய் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக் கையுடன் நடவடிக்கை எடுப்பதுடன், இப்பொழுது பாதிக்கப் பட்டு இருப்பவர்களுக்கு உரிய அளவிற்கு நிவாரணம் வழங்கு

வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புவதோடு, பாதிப்பைப் பற்றி அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவரவர்களே, சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையத்திலிருந்து நிபுணர்களை வரவழைத்து அதுபற்றி என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கலாம், எதிர்காலத்தில் வராமல் தடுக்க கட்டுப்பாடுகளைச் செய்யலாம் என்பது குறித்து துறை அளவில் மேற்கொண்டிருக்கிறோம். பாதிப்பு ஏற்பட்டவர்களுக்கு உரிய நிவாரணத்தை எந்த வகையிலே வழங்கலாம் என்பது இந்தத் துறை மட்டுமே முடிவு செய்யப்படக்கூடியது அல்ல; அதை வருவாய்த் துறை, நிதித் துறை போன்றவைகளோடு கலந்து நிச்சயமாக முடிவு செய்யும். பாதிப்பு அதிகமாக இருக்கிறது என்று உறுப்பினர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதைப்பற்றி மறு விளக்கத்தை அரசு கேட்கும்.

(முற்பகல் 9-20)

**திரு. கே. பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மஞ்சள் நோய் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள விவசாயத்தைக் கூட தாக்கியிருக்கின்றது. எங்களுடைய மாவட்டத்தில் ஆற்று நீரைக் கொண்டு விவசாயம் செய்கின்ற வசதி இல்லை. நாங்கள் எல்லாம் மின்சார மோட்டாரை வைத்துத்தான் விவசாயம் செய்கிறோம். எனவே எங்களுடைய மாவட்டத்தில் இவ்வாறு இந்த நோயால் தாக்குதல் பயிர்களில் ஏற்பட்டுள்ளதால் இலவசமாக மருந்து தெளிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பேரவைத் தலைவர் அவர்களே இந்த மஞ்சள் என்பது ஒரு நோயா அல்லது ஊட்டச்சத்துக் குறைவால் ஏற்படக்கூடிய ஒன்றா என்பதைப் பற்றிய ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. எனவே அதுபற்றிய முழு விவரமும் கண்டறிந்த பிறகு என்ன ஏற்பாடுகளைச் செய்யலாம் என்பதைப் பரிசீலிக்கலாம்.

**திரு. க. பரமமலை:** பேரவைத் தலைவர் அவர்களே, மஞ்சள் நோய் கண்ட இடங்களில் எல்லாம் குறிப்பாக மதுரை, இராமநாதபுரம் போன்ற பகுதிகளில் கண்டுமுதல் மிகவும் குறைந்திருக்கின்றது. 20, 25 மூட்டை கிடைக்கக் கூடிய இடத்தில் 2 மூட்டைகள்தான் கிடைக்கின்ற நிலைமை இருக்கின்றது; அந்த அளவுக்கு மஞ்சள் நோய் கடுமையாகப் பாதித்திருக்கின்றது. அப்படிப்பட்ட இடங்களில் அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட இருக்கின்றது. மேலும் அறுவடை நடந்த பிறகு பாதிக்கப்பட்டிருக்கின்றது என்று தெரிந்த இடங்களில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தபடி விரைவாக விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க என்ன ஏற்பாடுகளை அரசு செய்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பேரவைத் தலைவர் அவர்களே, நெல் ஆராய்ச்சி நிபுணர்களை வைத்து இதை ஏற்றவகையில் தடுக்க ஆலோசனைகளை நாம் பெற்றுக் கொண்டிருக்கிறோம். ஆனால் மழை பெய்கின்றபோது இந்த மஞ்சள் பல இடங்களில் மறைந்துபோய் இருக்கின்றது. இது பற்றிய முழு விவரத்தையும் ஆராய்ந்து உரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** பேரவைத் தலைவர் அவர்களே, பல இடங்களில் இது மஞ்சள் நோய் என்று தெரியாத நிலையிலே இருக்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. அதாவது நெல் மணிகள் நன்றாகப் பிடித்திருக்கின்ற நிலையில் அந்த மணிகள் நன்றாக இருக்கின்றது என்று கருதிவிடுவதும் உண்டு. அப்படி அது மஞ்சள் நோய்தான் என்று தெரிந்து அதற்கு மருந்து அடித்தாலும் அதற்கு சரியான பலன் கிடைக்கவில்லை. இந்த பாதிப்பு ஏற்படுகின்ற போது 200 மூட்டை விளையக்கூடிய இடத்தில் 20 மூட்டை கூட கிடைக்காத அளவில் அத்தனை நெல் மணிகளும் சாவியாகி விடுகின்றது. இது பற்றி அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அப்படி என்றால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்து விவசாயிகளுக்குப் பாதுகாப்பு கொடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பேரவைத் தலைவர் அவர்களே, கவனத்திற்கு வந்ததால்தான் அரசு முழு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற கருத்துக்களையும் ஆராய்ந்து அரசு உரிய நடவடிக்கையை எதிர்காலத்தில் மேற்கொள்ளும்.

**திரு. கு. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பூச்சிகளால் ஏற்படுகின்ற தாக்குதலுக்கு விவசாயிகள் ஒரு போதும் காரணமாவதில்லை. எனவே பூச்சிகளால் ஏற்படக் கூடிய தாக்குதலை ஈடுகட்டுவதற்கு ஒரு குறிப்பிட்ட விழுக்காடாவது நஷ்டத்தை ஈடுகட்டக்கூடிய வகையில் விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பேரவைத் தலைவர் அவர்களே, பூச்சிகளால் ஏற்படுகின்ற தாக்குதலுக்கு அரசாங்கமும் காரணம் அல்ல. அது விவசாயத்திலே தொடர்ந்து ஏற்படக்கூடிய ஒன்று, அதாவது விவசாயத்திலே உரமிடுவது, தண்ணீர் பாய்ச்சுவது என்ற வகையில ஒரு கட்டம் பூச்சிமருந்து அடிப்பதுமாகும். அதிக அளவில் அதில் பாதிப்பு ஏற்படுகிற போது அரசு உரிய நிவாரண நடவடிக்கைகளை நிச்சயமாக மேற்கொள்ளும்.

[1985 ஏப்ரல் 4

திரு. ஆர். ஈஸ்வரன்: பேரவைத் தலைவர் அவர்களே விவசாயிகளுக்கு, மழை இல்லாததன் காரணத்தாலும், மின்சாரம் பற்றாக்குறையின் காரணத்தாலும் ஆயில் இன்ஜின் வைத்து விவசாயம் செய்பவர்களாக அவர்கள் இருப்பதன் காரணத்தாலும் டீசலைப் பாதி விலையில் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, இது மஞ்சள் நோயைப்பற்றிய கேள்வியாகும்.

திரு. எஸ். என். இராமசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.ஆர். 20 விவசாயிகளின் நெற்பயிர் இந்த மஞ்சள் நோயால் நெல்லை மாவட்டத்தில் பாதிக்கப்பட்டிருக்கின்றது. இந்த நோய் காரணமாக ஏக்கர் ஒன்றுக்கு 20 மூட்டை வரவேண்டிய நெல் 4 மூட்டை 5 மூட்டைதான் வருகின்ற நிலை இருக்கின்றது. அதன் காரணத்தால் அவர்கள் வாங்கிய கூட்டுறவுக் கடன்களை வசூல் செய்வதை ஓராண்டு நிறுத்தி வைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதைஅறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றியெல்லாம் கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே ஏற்கெனவே விரிவாக விளக்கம் தந்திருக்கிறார்கள். எனவே நான் அதிலே தலையிட விரும்ப வில்லை.

திரு. மு. இராசாங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் மஞ்சள் நோயால் இதுவரையில் கண்டிராத அளவுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று கடந்த பிப்ரவரி 24, 25 மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அறிக்கை வெளியிடப்பட்டது. அது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அரசுக்கு ஏதாவது பரிந்துரை செய்திருக் கிறார்களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: அதுபற்றிய தகவல் இல்லை.

திரு எம். அண்ணாதாசன்: பேரவைத் தலைவர் அவர்களே, நெற்களஞ்சியம் என்று சொல்லப்படுகின்ற தஞ்சை மாவட்டத் திற்கு அருகாமையில்தான் திருச்சி மாவட்டம் வருகின்றது. அதிலும் குறிப்பாக என்னுடைய தொகுதி அந்த பார்டரிலே இருக்கின்றது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். மஞ்சள் நோய் என்பதைப் பொறுத்தவரையில் நாங்கள் நேரடியாகப் பார்த்ததைச் சொல்கிறேன். பச்சை நிறத்தில் விட்டில் பூச்சி போன்று இருக்கின்றது. அதற்குரிய மருந்தைத் தெளித்தாலும் கூட அது சாக வழியில்லை. இதன் காரணத் தால் என்னுடைய தொகுதியில் விவசாயிகளுக்கு உற்பத்தி அதிக அளவில் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது எனவே அரசு நடவடிக்கை எடுக்கின்ற வகையில் வரி வசூல் செய்வதிலிருந்து அந்த விவசாயிகளுக்கு விதிவிலக்கு அளிப்பதோடு அரசுக்கு நெல் அளப்பதிலிருந்தும் விதிவிலக்கு அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1985 ஏப்ரல் 4]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இது அண்ணாதாசன் தொகுதி பிரச்னை மட்டுமல்ல, பொதுவான பிரச்னை இது. ஆகவே உரிய வகையில் ஆழ்ந்து பரிசீலித்து நடவடிக்கைகள் எடுக்கலாம்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: தலைவர் அவர்களே, நெற் பயிர்களுக்கு சமீப காலங்களில் இதுபோன்ற புதிய, புதிய வியாதிகள் வந்து விவசாயிகளை அதிகக் கஷ்டத்திற்கு உள்ளாக்கு வதற்கு முக்கிய காரணம் அதிகமான அளவில் இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதுதான் என்ற ஒரு பொதுவான கருத்து விஞ்ஞானிகளிடையே அழுத்தமாக இருக்கிறது என்பதை அரசு அறியுமா? ஆகவே இரசாயன உரங்களின் உபயோகத்தைக் குறைத்து தாவர இயல் உரங்களை அதிகப் படுத்த அரசு ஏதாவது திட்டங்களை வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிற ஆராய்ச்சிக் கருத்துக்கள் ஆராய்ச்சியாளர்களுக்குத் தெரிவிக்கப்படும்.

திரு. எஸ். சிவராமன்; தலைவர் அவர்களே, இந்த மஞ்சள் நோய் பற்றி குறிப்பிட்டுச் சொல்லப்பட்டன. பொதுவாக இந்த மஞ்சள் நோய் வருவதற்கு அடிப்படைக் காரணம் பூச்சி மருந்து சரி இல்லை என்பது தான், என் வாதம். காரணம் என்னவென்றால் அந்த நோயைக் கட்டுப்படுத்தக்கூடிய சக்தி இந்த மருந்துக்குக் கிடையாது. இதுபோன்ற நிலைமை என் வயலிலும் இருந்தது. ஒரு ஏக்கருக்கு 40 மூட்டை கண்டுமுதல் இருக்க வேண்டியது நான்கு மூட்டை அளவிற்குத்தான் கண்டு முதல் இருந்தது. ஆகவே பூச்சிக்கொல்லி மருந்து சரியாக இல்லை என்பதுதான் என் கருத்து. எனவே நல்ல தரமான மருந்தை ஒழுங்காக நிர்ணயிப்பதற்கு அமைச்சர் அவர்கள் சற்று கவனம் செலுத்துவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, தற்போது முழுக்கவனத்தையும் செலுத்திக்கொண்டிருக்கிறோம். இதுபற்றி சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவனம் இருக்கக்கூடிய பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு அனுப்பியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ள அந்த ஆராய்ச்சிக் கருத்தை யும் நாம விஞ்ஞானிகளுக்கு எடுத்துச் சொல்லி அதன் மூலம் அவர்கள் என்ன புதிய முடிவைத் தெரிவிக்கிறார்களோ அதையும் நாம் கவனித்து அதைச் செயல்படுத்தலாம்.

திரு. ஜி. ஆனந்தகிருஷ்ணா: தலைவர் அவர்களே, எங்கள் செங்கற்பட் மாவட்டத்தில் இந்த நோய் காரணமாக பெரு வாரியான விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர் களுக்கு ஏதாவது நிவாரணம் அளிக்கப்பட்டிருக்கிறதா? அப்படி நிவாரணம் அளிக்கப்படவில்லை என்றால் அவர்களுக்கும் நிவார ணம் அளிக்க அரசு முன்வருமா? அதுமட்டுமல்ல. மாண்புமிகு

உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் கேட்கிறபோது எல்லோருக்கும் நிவாரணம் அளிக்க முடியாது என்று சொன்னார்கள். உணவு உற்பத்திக்கு நாம் விவசாயிகளைத்தான் நம்பியிருக்கிறோம் ஆகவே பயிர்களுக்கு நோய் ஏற்படும்போது ஒரு 'இன்ஸென்டீவாக' அரசாங்கமே ஏதாவது நிவாரணம் கொடுத்து அல்லது நஷ்டயீடு கொடுத்து அதைச் சரிப்படுத்த முன்வர வேண்டும் என்ற யோசனையை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிற இந்தக் கருத்தின் அடிப்படையில் தான் விவசாயப் பெருமக்களுக்கு எந்தளவிற்கு சலுகைகள் வழங்க முடியுமோ அந்த அளவிற்கு வழங்கிக் கொண்டிருக்கிறோம். இந்த மஞ்சள் நோய் பற்றிய முழுமையான விவரங்களை நாம் கண்டறிந்து இதில் பாதிப்பு எநதளவிற்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை அறிந்து நாம் நிவாரணம் செய்வதற்குரியவகையில் விதிகளுக்கு உட்பட்டிருந்தால் நிவாரணம் வழங்குவதில் எந்தவிதமான சிக்கலும் இருக்காது.

திரு. செ. தங்கராசு: தலைவர் அவர்களே, நெல் அதிகமாக உற்பத்தியாவது திருச்சி தஞ்சை மாவட்டங்களைவிட தென் ஆற்காடு மாவட்டத்தில்தான் அதிக அளவிற்கு உற்பத்தியாகிறது. ஆனால் தென்ஆற்காடு மாவட்டததைப் பொறுத்த வரையில் ஒரு போக விளைச்சலுக்குத் தகுந்தாற்போல்தான் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. தண்ணீர் தீர்வையைப் பொறுத்த வரையில் திருச்சி, தஞ்சை மாவட்டங்களைவிட தண்ணீர் தீர்வை அங்கு அதிகமாக இருக்கிறது என்று விவசாயிகள் என்னிடம் புகார் செய்கிறார்கள். ஆகவே திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் இருப்பதைப்போல் தென் ஆற்காடு மாவட்டத்திலும் தண்ணீர் தீர்வையை சரிசமமாக அல்லது அதேபோல் குறைக்கப்படுமா என அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து தலைவர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டத்தை நாங்கள் குறைத்து மதிப்பிடவில்லை. அங்கேயும் எந்தளவிற்கு சலுகைகள் செய்யவேண்டுமோ அந்தளவிற்கு செய்துகொண்டிருக்கிறோம். மின்துறை அமைச்சர் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்தான். ஆகவே எந்தளவிற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமோ அதை நிச்சயமாக எடுப்போம். தஞ்சை, திருச்சி மாவட்டங்களுக்குக் காட்டப்படுகிற சலுகை தென் ஆற்காடு மாவட்டத்திற்கும் காட்டப்படுவதற்கு உரிய வகையில் அரசு முயற்சியை மேற்கொள்ளும்.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம்: தலைவர் அவர்களே, எங்கள் நெல்லைப் பகுதியில் செந்தாழை என்ற நோய்வந்து 10% தான் விளைச்சல் ஏற்படுகிறது. அதுவும் இதுவும் ஒன்றா அல்லது அது வேறு இது வேறா? இது வேறு என்றால் அதைக் கவனித்து சர்க்கார் தனி நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே அது வேறு இது வேறு. இருந்தாலும் அதையும் கட்டுப் படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. வி. தங்கவேலு: தலைவர் அவர்களே, நெல்லுக்கு மஞ்சள் நோய் கண்டிருக்கிறது என்று நாம் இப்போது பேசிக் கொண்டிருக்கிறோம். இந்த மஞ்சள் நோய் முதன்முதலாக தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படக்கூடிய நெல்லுக்கு எப்போது வந்தது? இந்த நோய்க்கு கண்டுபிடித்திருக்கக்கூடிய மருந்து கலப்படம் செய்யப்பட்ட மருந்தா அல்லது நல்ல மருந்தா என்பதை அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.30)

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நோய் எப்போது வருகிறது என்று தெரியவில்லை. பாதிப்பு வருவதை அறிந்து அதிலே இருந்து விவசாய பெருமக்களை எப்படி பாதுகாப்பது என்ற வகையில் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. க. பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்திற்கு பயன்படுத்துகின்ற உரம், பூச்சி மருந்து போன்றவைகள் நீண்ட நாட்களாக கிடங்குகளில் கிடப்பதனால் அவைகளுடைய உயிரோட்டம் அற்றுப் போய் விடுகிறது. ஆகவே, அவைகளைப் பயன்படுத்துவதனால், விளைச்சல் குறைந்து வருகின்றது என்ற கருத்து நிலவி வருகிறது. அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நீண்ட காலத்திற்கு அவைகளை வைத்துக்கொள்ள வேண்டிய நிலைமை இருக்காது. அப்படி ஒருவேளை சில பகுதிகளில் இருக்குமானால், அரசு அதுபற்றி கவனிக்கும்.

திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாறு பூச்சியினால் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்கு மாவட்ட வாரியாக நிபுணர்குழு, மக்கள் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு நிபுணர்குழு ஏற்படுத்தப்பட்டு, அதன்மூலமாக நிவாரணம் அளிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அதற்குத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு சட்டப் பேரவை தலைநாயகர் அவர்களே. வேளாண்மைத் துறையில் மஞ்சள் நோயினால் பாதிக்கப்பட்டு, அந்த மஞ்சள் நோயினால் பாதிக்கப் பட்ட தாளடி வைக்கோலை கால்நடைகள் சாப்பிடுவதால், கால்நடைகள் பாதிக்கப்படுவதாக எங்கள் செங்கற்பட்டு மாவட்டத்திலே இருந்து தெரியவருகிறது. அப்படி பாதிக்கப்படுகின்ற வேளாண்மை மக்களுக்கு இந்த அரசு ஏதாவது நிவாரணம் அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட தகவல் இல்லை. புதிதாக ஒரு சிக்கலை உருவாக்கி ஒரு அச்சுறுத்தலை உண்டாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. டி. எம். வெங்கடாசலம்: பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் தற்போது இந்த விவசாய மருந்துகள் குறைந்த அளவிலே வேலைசெய்வதாகக் கருதுகிறார்கள். எனவே, நல்ல மருந்துகளைக் கொடுத்து, அந்த நோய் வந்தால் உடனடியாக அதைக் கட்டுப்படுத்துகின்ற அளவிலே செய்வதற்கான முயற்சிகளை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, உரிய தகுதியான மருந்தைத் துறையின் மூலமாகத் தரவேண்டுமென்று பரிந்துரை செய்கிறோம். இருந்தாலும், ஒவ்வொரு முறையும் ஒரு பூச்சைக் கட்டுப்படுத்துகிறபோது, அந்த மருந்தை பயனற்ற முறையில் செய்ய பூச்சிகளும் திட்டமிடுகின்றன. ஆகவே, புதிதாக, தொடர்ச்சியான சில முயற்சிகளை செய்து கொண்டிருக்கிறோம். அந்த வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நடைமுறையில் இருக்கின்ற வித்துக்கள் எல்லாம் அதிகமாக நோயினால் பாதிக்கக்கூடியவைகளாக இருக்கின்றன. நோய் பாதிக்கப்படாத புதிய வித்துக்களை கண்டுபிடிக்க ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அதற்கென விதை சான்றிதழ் தரும் ஒரு தனித் துறை வைத்திருக்கிறோம். அப்படி சான்றிதழ் பெற்ற பிறகுதான், அத்தகைய வித்துக்களைத் தான் விவசாய பெருமக்களுக்கு வழங்கியிருக்கிறோம். இருந்தாலும், அங்கே குறையிருக்குமானால், அதைக் களைவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் மட்டும் அல்ல; தமிழ்நாடு பூராவும் இந்த மஞ்சள் நோய் கண்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுவதில் இருந்து தெரிகிறது. ஆதலால் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு எப்படி ஹெலிகாப்டர் மூலம் விளம்பரம் செய்யப்படுகிறதோ, அவ்வாறு போர்க்கால நடவடிக்கையாக ஹெலிகாப்டர் மூலமாக எல்லா இடங்களிலும், இந்த பூச்சி மருந்தைத் தெளிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அப்படி தெளித்து, நன்றாக இருக்கும் பயிர்களை கெடுத்து விடக்கூடாது. எங்கு பாதிப்பு இருக்கிறதோ, அங்கு நிச்சயமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் விவசாயத்தைப் பொறுத்தவரையில் இயற்கை சீற்றங்களால் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. வெள்ளத்தால், புயலால் வறட்சியால் அந்த பாதிப்பு ஏற்படுகிறது. அது சமயத்தில் அரசு எவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கொடுக்கிறதோ, அதேபோன்று பூச்சியினால் பாதிக்கப்படுகின்ற விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க ஒரு கொள்கை அறிவிப்பு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, பாதிப்பு இயற்கை சீற்றத்தாலா அல்லது பூச்சியினாலா என்பதல்ல. பாதிப்பு பெருமளவில் இருக்குமானால், அதற்குரிய நடவடிக்கையை எடுக்கிறோம். அளவுதான் முக்கியம். எதனால் பாதிப்பு ஏற்பட்டது என்பது முக்கியமல்ல.

### சைதை தொகுதிக்கு நீர் வழங்கல்

47—(*வினா எண். 302) திரு. சா. துரைசாமி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முட்டுக்காட்டிலிருந்து குழாய் மூலம் பெறப்படும் தண்ணீரை சைதை தொகுதியில் மடுவின்கரை, நேரு நகர், காமராஜர்புரம், ஐந்து பர்லாங்கு சாலை, ரேஸ் வியு காலனி போன்ற பகுதிகளுக்கு பயன்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிநீர் வழங்கு வடிகால் வாரியம் ஆலந்தூர் பேரூராட்சிக்கு முட்டுக்காட்டிலேயிருந்து தண்ணீர் வழங்கி கொண்டு இருந்தார்கள். இன்றைக்கு பாலாற்றிலே இருந்து லந்தூருக்குத் தண்ணீர் வழங்குகிறார்கள். ஆகவே, முட்டுக்காடு தண்ணீர் ஆலந்தூருக்குச் செல்லவில்லை. எனவே, இந்தத் தண்ணீரைச் சென்னை குடிநீர் வழங்கு வாரியம் தமிழ்நாடு குடிநீர் வழங்கு வடிகால் வாரியத்திடமிருந்து வாங்கி வழங்கினால் நலமாக இருக்கும் குறிப்பாக, கணேஷ் நகர், செக்கரட்டேரியட் காலனி, மடுவன்கரை, நேரு நகர், காமராஜர்புரம், ஐந்து பல்லாங்கு சாலை, ரேஸ் வியூ காலனி போன்ற பகுதிகள் வழியாகத்தான் அந்தக் குழாய்கள் செல்கின்றன. அந்தப்பகுதிகளுக்கெல்லாம் இப்பொழுது லாரிகள் வாயிலாக நீர் வழங்கப்படுகிறது. அதனால் அதிகமாகச் செலவு ஏற்படுகிறது. அதைத் தவிர்க்கவும் மக்களுக்கு அந்தத் தண்ணீரை முறையாக விநியோகிக்கவும் அரசு இதில் அக்கறை எடுத்துக் கொண்டு, உடனடியாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து சென்னைப் பெரு நகர குடிநீர் வடிகால் வாரியத்திற்கு மாற்ற துரிதமாக நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருப்பதைப் போல இப்பொழுது அந்தப் பகுதிகள் குடிநீர்ப் பெறாமல் இல்லை. அங்கே லாரிகள் மூலமாக வழங்கிக் கொண்டிருக்கிறோம். சில பகுதிகளிலே புதிதாகக் குழாய்களும் போடப்பட்டிருக்கின்றன. இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருக்கிற அந்தக் கருத்தினுடைய அடிப்படையிலே உரிய நடவடிக்கையை எடுப்பதற்கு அரசு பரிசீலிக்கும்.

**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சென்னை மாநகரில் கடுமையான வறட்சி ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, சென்னை மாநகரத்திற்குத் தேவையான குடிநீர் இருக்கிறதா? கடந்த ஆண்டைப் போலவே வழங்குகின்ற முயற்சிகள் மேற்கொள்ளப் படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன். இந்த முட்டுக்காடு தண்ணீரை வெகு விரைவாக இந்தப் பகுதிக்கு வழங்கினால் ஏறத்தாழ 20.000 குடும்பங்கள் பலன் பெறக் கூடிய வகையில் அமையும். ஆகவே, அந்தத் திட்டத்தை வெகு விரைவாக மேற்கொள்ள வேண்டுமென்பதையும் இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கக். காளிமுத்து:** தலைவர் அவர்களே எத்தகைய வறட்சி ஏற்பட்டாலும் தண்ணீர் பற்றாக்குறை நிச்சயமாக ஏற்படாது என்ற உறுதியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதிலே போதுமான அளவிற்குத் தண்ணீர் வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்து இருக்கிற அந்தக் கருத்தினுடைய அடிப்படையிலும் உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்,

**திரு. எல்ல. இராசமாணிக்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, முட்டுக்காட்டிலிருந்து தாம்பரம் தொகுதியின் வழியாகத்தான் சென்னைக்கு இந்த தண்ணீர் வருகிறது. வருகின்ற வழியில் உத்தண்டி, குடுமியாண்டி, ஈஞ்சம்பாக்கம், பாலவாக்கம் நீலாங்கரை போன்ற தண்ணீர் பற்றாக்குறை உள்ள கிராமங்களுக்கு இந்த நீர் வழங்கும் துறையின் மூலமாக ஏற்பாடு நடந்து கொண்டிருப்பதாக அறிகிறோம், அது எப்பொழுது நடைபெறும் என்பதை விளக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர். கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே· அங்கே தண்ணீர் பற்றாக்குறை நிலவுமேயானால் வேறு ஏற்பாடு எதுவும் இல்லையானால் இந்தத் திட்டத்தின் மூலம் தண்ணீர் வழங்குவதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்கும்.

**திரு. கே. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர்ப் பிரச்னையை தீர்க்க வேண்டுமென்பதில் மாண்புமிகு அமைச்சருக்கு இருக்கக்கூடிய ஆர்வம், வேகம்; ஆகியவற்றிற்கு இணையான அளவில் கிராமப் புறங்களிலே



குடிநீர்த் திட்டப் பணிகள் துரிதமாக இல்லை என்பதால் குடிநீர்த் திட்டங்களை விரைவாக முடிப்பதற்கு கால நிர்ணயம் செய்ய அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, இது நாமாகவே கால நிர்ணயத்தை செய்து முடித்து விடக் கூடியது அல்ல. ஆயுள் காப்பீட்டுக் கழகங்கள் போன்றவற்றிடமிருந்தெல்லாம் நாம் கடன் பெறவேண்டியிருக்கிறது. சிலபெரிய திட்டங்களுக்கு உலக வங்கியிடத்திலேயிருந்து கடன் பெற வேண்டியிருக்கிறது· அவைகளை எல்லாம் விரைவிலே பெறுவதற்குரிய நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளலாமே தவிர, கால வரையறை செய்வது என்பது இயலாது. இருப்பினும் தண்ணீர் பற்றாக்குறை தமிழகம் முழுவதும் எங்கும் நிலவாத அளவுப் பார்த்துக் கொள்வதற்கு அரசு உரிய முயற்சி மேற்கொள்ளும்.

**திரு. எஸ். வேணுகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே குடிதண்ணீர் 30 பைசா, 40 பைசா என்று விற்கப்படுகிறது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, அது தவறான தகவல்.

**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டுக்காட்டிலிருந்து குடிதண்ணீர் எடுக்கும் திட்டத்திற்கு அரசு செலவு செய்ய திட்டமிட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு? அதில் பெறப்படும் தண்ணீர் விவசாயத்திற்குப் பயன்பட அரசு அனுமதிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, இது மூலக் கேள்வியோடு தொடர்புடையது அல்ல.

**திரு வி எஸ். டி. சம்சுல் ஆலம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, குடிநீருக்காக ஒதுக்கப்பட்ட தொகையிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும் இந்த நேரத்திலே, கோடை காலத்திலே அந்த வேலைகள் தாமதமாக நடப்பதாக தகவல் இருக்கிறது. ஆகவே, இந்தக் கோடைக்காலத்தை ஒட்டி அந்த குடிநீர் வழங்கும் நடவடிக்கையை துரிதமாக்க மாண்புமிகு அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

**மாண்புமிகு டாக்டர் கா காளிமுத்து:** தலைவர் அவர்களே, மிக துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ம. ஆபிரகாம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலந்தூர் குடிநீர்த் திட்டம் என்பது பாலாற்று குடிநீர்த் திட்டம். அது முந்தைய அரசு காலத்தில் போடப்பட்டது. ஆனால் இன்றுவரையில் அது சரியாக நிறைவேற்றப்படாமல் மக்கள் குடி தண்ணீருக்காக அல்லல்படுகிறார்கள்.

வீதிகளில் இன்னும் குழாய்கள் கூட சரியாக போடப்படவில்லை பொதுமக்களும். வடிகால் வாரிய அதிகாரிகளும் இதன் காரணமாக வீதிகளில் மோதுகிற நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே மக்களுக்கு உடனடியாக தண்ணீர் கிடைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, சில திட்டங்கள் தவறான அடிப்படையில் போடப்படுகிற நேரத்தில் தாமதம் ஆவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இருப்பினும் எந்த வகையிலும், எந்தப் பகுதியிலும் குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்படக்கூடாது என்பதுதான் அரசினுடைய முக்கியமான நோக்கம். ஆகவே அந்த அடிப்படையில் வேறு வகையில் காலதாமதம் இருக்குமானால் அந்தத் தாமதத்தை களைவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. எ. வச்சிரவேலு:** தலைவர் அவர்களே, திருவண்ணாமலையில் 50 லட்சம் ரூபாய் செலவில் குடிதண்ணீர் திட்டம் துவங்குவதாக வாரியத்தின் தலைவர் ஆறு மாதத்திற்கு முன்னாலே தெரிவித்து வந்தார்கள். அந்தத் திட்டம் ஆய்வில் இருக்கிறதா எப்போது நிறைவேற்றப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, திருவண்ணாமலையின் மீது அக்கறை கொண்டிருக்கிற உறுப்பினர் அவர்கள் அதற்காக தனிக்கேள்வி போட வேண்டும்,

**திரு. வி பி. சிந்தன்:** தலைவர் அவர்களே. பல இடங்களில் குறிப்பாக என்னுடைய வில்லிவாக்கம் தொகுதி உள்பட சென்னை நகரத்தின் பல பகுதிகளில் குழாய்கள் அமைக்கப்பட்டு, தண்ணீர் தொட்டிகள் கட்டப்பட்டும், வீட்டு வசதி வாரியத்திடமிருந்து மெட்ரோ அதிகாரிகளிடம் ஒப்படைக்காத காரணத்தால் குடிதண்ணீர் வழங்குவதில் பல இடங்களில் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. அதை தீர்ப்பதற்கு அமைச்சர் அவர்கள் அவசர நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நிலைமை இருக்குமானால் அதை கவனத்தில் கொண்டு அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்:** தலைவர் அவர்களே, குடிதண்ணீர் பிரச்னை தமிழகம் முழுவதிலும் இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். குறிப்பாக என்னுடைய தர்மபுரி மாவட்டத்தில் குடிநீர் பிரச்னை பெரிய அளவில் இருந்து வருகிறது. அது சம்பந்தமாக அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வந்தும், மாவட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்தும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டிருக்கிறோம். ஆங்காங்கு பழுதடைந்திருக்கிற குழாய் கிணறுகளை சரி செய்வதற்கு அவசரகால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து குடிதண்ணீர் வழங்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்தும் இன்னும் சரியான நடவடிக்கைகள் இல்லாமல் இருக்கிறது. பழுதடைந்திருக்கிற குழாய் கிணறுகளை சரி செய்வதற்கு வேண்டிய கருவிகள் கிடைக்காமல் இருக்கிறது. என்னுடைய மாரப்பூர் தொகுதியில் நூற்றுக்கணக்கான குழாய்க் கிணறுகள் பழுதடைந்திருப்பதாக கணக்கு எடுத்திருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டால் அதற்கு தேவையான கருவிகளும், சாதனங்களும் தங்களிடத்தில் இல்லையென்று தெரிவிக்கிறார்கள். அவற்றை வெளியிலேயிருந்து தருவிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே அரசு இந்த நிலையை கவனித்து வேண்டிய கருவிகளைக் கொடுத்து இந்த குடிதண்ணீர் பிரச்னையைப் போக்குவதற்கு தீவிர நடவடிக்கையை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிற அந்தக் கருத்தின் அடிப்படையில் எனக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது, குடிதண்ணீர் வடிகால் வாரியத்திடம் இதற்கு போதுமான அளவிற்கு கருவிகள் இல்லாமல் இருக்குமானால், வேளாண்மை பொறியியல் துறையில் இருக்கிற கருவிகளை அதற்கு மாற்றி உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

**திரு கே. பாலாஜி:** தலைவர் அவர்களே, சென்னை நகரத்தின் குடிதண்ணீர் பிரச்னைக்கு இவ்வளவு வேகமாக கவனத்தைச் செலுத்துவதைப் போல காஞ்சிபுரத்தில்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணைக் கேள்விகள் மூலக் கேள்வியை ஒட்டி எழுப்பப்பட வேண்டும்.

**திரு. கே. பாலாஜி:** தலைவர் அவர்களே, மூலக்கேள்வியை ஒட்டித்தான் கேட்கிறேன். 3 கோடி ரூபாய் அளவில் காஞ்சி மாநகரத்திற்கு ஒரு திட்டத்தைப் போட்டு, ஆய்வு செய்து, 1 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் பணத்தை கட்டி ஒரு ஆண்டு காலமாகியும் அந்தத் திட்டம் இன்னும் துவக்கப்படவில்லை. ஆகவே உடனடியாக அந்தத் திட்டத்தை துவக்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் தொடர்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிற கருத்தைப் பற்றி உரிய தகவலைக் கேட்டு, உரிய நடவடிக்கையை நான் நிச்சயமாக எடுக்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே, தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஆழ்குழாய் கிணறுகளைத் தோண்டுவதற்கு எத்தனை 'ரிக்குகள்' இருக்கின்றன? இருக்கின்ற 'ரிக்குகளை' வைத்து இந்த வறட்சி நேரத்தில் தமிழகம் முழுவதிலும் ஆழ்குழாய் கிணறுகளைத் தோண்ட முடியுமா? அப்படி முடியாவிட்டால் ரிக்குகளை வாடகைக்கு எடுத்தாவது குடிதண்ணீர் பிரச்னையைத் தீர்ப்பதற்கு அரசு முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, வாடகைக்கு எடுப்பதற்கு தேவையில்லை. நம்முடைய துறையில் இருக்கிற கருவிகள், வேளாண்மை பொறியியல் துறையில் இருக்கிற கருவிகள், இவைகள் அனைத்தையும் பயன்படுத்தி உரிய ஏற்பாட்டை நிச்சயமாக செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

48—

பெண்கள் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் பயிற்சிப் பள்ளிகள்.

*வினா எண். 600 திரு சா. துரைசாமி : திரு செ.செம்மலை: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பெண்கள் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் பயிற்சிப் பள்ளிகள் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த இடத்தில் ஆரம்பிக்கப் படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) புதுக்கோட்டை, ஈரோடு, கன்னியாகுமரி, தர்மபுரி ஆகிய நான்கு மாவட்டங்களில் நிறுவிட ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. சா. துரைசாமி: தலைவரவர்களே, இதுவரையில் மல்டி பர்ப்பஸ் ஓர்க்கர்ஸ் எவ்வளவு பேர் எடுக்கப்பட்டுள்ளனர்? இதுவரையில் தாய்சேய் நல விடுதிகள் எத்தனை ஏற்படுத்தப் பட்டுள்ளன என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, இது வரையில் தாய்சேய் நல விடுதிகளைப் பொறுத்தவரையில் — அதற்கு இன்னொரு பெயர் சப் சென்டர்ஸ்—மொத்தம் 5,837 ஏற்படுத்தப்பட்டுள்ளன. மல்டி பர்ப்பஸ் ஹெல்த் ஓர்க்கர்ஸை பொறுத்தவரையில் இதுவரையில 4,870 பேர்களை நாம் தேர்ந்தெடுத்திருக்கிறோம். அவர்களுக்குப் பயிற்சி கொடுத்திருக்கிறேம்.

திரு. சா. துரைசாமி: தலைவரவர்களே, கிராமப்புறங்களில் அவர்களுக்கு பயிற்சி கொடுக்க ஏதேனும் பள்ளிகள் உண்டா? அப்படி என்றால் அவை எத்தனை?

மாண்புமிகு எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, இந்த மல்டி பர்ப்பஸ் ஹெல்த் ஓர்க்கர்ஸைப் பொறுத்தவரையில் மாவட்டத் தலைமை மருத்துவ மனையில் முதலில் பயிற்சி கொடுக்கப்படுகிறது. அதன் பிறகு ஆர்.எச்.டி.ஓ. (ரூரல் ஹெல்த் ட்ரெயினிங் சென்டர்ஸ்) என்று கிராமப்புறங்களில் இருக்கிற ஆரம்பச் சுகாதார நிலையங்களை ஒட்டி இருக்கக்கூடிய பயிற்சி நிலையங்களில் மீண்டும் பயிற்சி கொடுக்கப்படுகிறது. இப்படிப் பட்ட நிலையங்கள் 51 ஏற்படுத்தியிருக்கிறோம். அதில் 49 முடிக்கப்பட்டுவிட்டன, இன்னும் இரண்டு மையங்கள் வெகு விரைவில் தொடங்கப்படும்.



திரு. செ. செம்மலை : தலைவரவர்களே, இந்தப் பயிற்சிக்கான பயிற்சி நிலையங்கள் எத்தனை இருக்கின்றன என்ற விவரத்தோடு புதிய மையங்கள் இரண்டு ஏற்படுத்த இருப்பதில் ஒன்ற சேலம் மாவட்டத்தில் ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தகவலுக்சாகச் சொல்கிறேன். ஏற்கெனவே 1979 ஆம் ஆண்டுக்கு முன்னால் திண்டுக்கல், சேலம், வேலூர், திருச்சி ஆகிய நான்கு மாவட்டங்களில் தொடங்கியிருக்கிறோம். அதிலே சேலம் இடம் பெற்றிருக்கிறது. அது மட்டுமல்ல. அடுத்தபடியாக 4-10-1979-ல் மேலும் 5 இடங்களில் அதாவது காஞ்சிபுரம், கடலூர், நாகப்பட்டிணம், இராமநாதபுரம். திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஏற்படுத்தியிருக்கிறோம். ஆக, 9 இடங்களில் இப்போது செயல் பட்டு வருகிறது. இப்போது புதிதாக மேலும் இரண்டு இடங்களில் ஆரம்பிக்க இருக்கிறோம்.

திரு. செ. செம்மலை : தலைவரவர்களே, மற்ற மாவட்டங்களை விட சேலம் மாவட்டத்தில் இப்படிப்பட்ட பள்ளிகளைக் கூடுதலாக ஆரம்பிக் வேண்டுமென்று சொல்வதற்குக் காரணம் ‘டேனிடா’ திட்டத்தின் கீழ் அதிகமான துணை சுகாதார நிலையங்கள் அங்கே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அங்கே பணியாற்ற போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தால் நாங்கள் இந்த கோரிக்கையை விடுகிறோம். ஏற்கெனவே சேலம் மாவட்ட தலைமை மருத்துவ மனையில், இந்தப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. கிராமப்புறங்களில் பணியாற்றுகின்ற இந்தப் பணியாளர்களுக்கு கிராம சூழ்நிலையில் பயிற்சி பெற ஏற்பாடு செய்கிற வகையில் இன்னொரு பயிற்சி நிலையத்தை சேலம் மாவட்டத்தில் கிராமப்புறத்தில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9—50)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, ஏற்கெனவே சேலத்தில் நாம் தொடங்கியிருக்கிறோம் என்று சொன்னேன் அது மட்டுமல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தகவலுக்காக இன்னொரு புள்ளி விவரத்தையும் கூற விரும்புகிறேன். 1979 ஆம் ஆண்டுக்கு முன்னால் திறக்கப்பட்ட பயிற்சிப் பள்ளிகளில் ஒவ்வொரு ஆறு மாதத்திற்கும் செமஸ்டர் முறையில் 60 பேர்களை எடுத்து பயிற்சி கொடுத்தார்கள். அந்த அடிப்படையில் 1979—ல் 660 பேர்களுக்குப் பயிற்சி கொடுத்திருக்கிறோம். அடுத்தபடியாக 1981 ஆம் ஆண்டு 773 பேர்களுக்குப் பயிற்சி கொடுத்திருக்கிறோம். அதன்பிறகு 1982—ல் 770 பேர்களுக்கும், 1983—ல் 906 பேர்களுக்கும் பயிற்சி கொடுத்திருக்கிறோம்.

1984 ஆம் ஆண்டு. 1,070. பெப்ரவரி மாதத்தில், இந்த ஆண்டு, 540 பேர்களுக்கு நாம் கொடுத்திருக்கிறோம். சேலம் ஹெட் குவார்டர்ஸ் ஆஸ்பத்திரியில் நாம் பயிற்சி கொடுத்தபிறகு,

நான் ஏற்கனவே சொன்ன மாதிரியாக அந்த 51 என்று சொன்னேனே, ஆர்.எச்.டி.சி. யைப் பொறுத்தவரையிலும், உலக வங்கி நிதி உதவி மூலமாக அந்த மையங்களை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். ஆகவே சேலம் தலைமை மருத்துவ மனையில் ஒரு வருஷம் பயிற்சி கொடுத்த பிறகு, இந்த 51 இடங்களில் நாம் ஏதாவது ஒரு இடத்தில் அவர்களை அமர்த்தியிருக்கிறோம். ஆகவே அவர்களைப் பொறுத்தவரையில் கிராமப்புறங்களில் பயிற்சி கிடைக்கிறது. அதே நேரத்தில் ஹெட்குவார்டர்ஸ் ஆஸ்பத்திரிகளிலும் பயிற்சி கிடைக்கிறது.

சேலத்திலே இன்னொன்று ஆரம்பிக்க வேண்டும் என்று சொன்னார்கள். இன்னும், 4, 5 இடங்களில் மாவட்ட தலைமை மருத்துவமனைகளை ஆரம்பித்தால் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மருத்துவமனைகளில் அந்தப் பயிற்சி பெறுவதற்கு வாய்ப்பு இருக்கும். ஆகவே முதல் கட்டமாக மாவட்ட மருத்துவமனைகளில் ஆரம்பித்த பிறகு, இரண்டாவது பிரச்சனையைப்பற்றி யோசிப்பதற்கு நியாயமாக இருக்கும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலேயே நம்முடைய தமிழகத்தில் சேலம், தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களில்தான் இந்த 'டானிடா' திட்டத்தின் கீழ் துணை மருத்துவ நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளன. அந்த மருத்துவ நிலையங்களில் மருத்துவர்களை நியமித்து, கிராமப்புற மக்களுக்கு நவீன வைத்தியம் கிடைக்க வழிவகை செய்யப்படுமா? இந்த ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கின்ற தாய் சேய் நல விடுதிகளில் பல நோக்கு சுகாதாரப் பணியாளர்கள் எல்லாம், அந்தக் கிராமங்களில் தங்கி பணியாற்றுவது இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அதை நிவர்த்தி செய்ய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு கேள்விகளை இணைத்து கேட்டு இருக்கிறார்கள். முதலாவதாக, இந்த தாய்-சேய் நல விடுதிகளில் மருத்துவர்களை நியமிக்கவேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள். உலக சுகாதார நிறுவனம் கூட சொல்லியிருக்கிறது. அந்த இடங்களில் டாக்டர்களை நியமிக்கும் சாத்தியக்கூறு இல்லை, தேவையும் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த இடத்தில், பிரைமரி ஹெல்த் கேர் பார் மதர் அன்ட் சைல்ட் என்ற அந்த வகையில் நாம் கவனித்து செய்கிறோம்.

அடுத்த கேள்வி, அங்கே பணியாற்றுகின்ற பலநோக்கு சுகாதார பயிற்சி பெற்றவர்கள் அங்கேயே இருக்கவேண்டும் என்பது. அந்த இடத்திலே அவர்கள் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் நாம் இரண்டு அறைகளை — ஒன்று சமையல் அறை, மற்றொன்று தங்குவதற்கான அறை — அவர்கள் அங்கே நல்லபடி வசிப்பதற்கு வசதியாக நாம் ஏற்படுத்தியிருக்கிறோம்.



திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மல்டி பர்பஸ் ஹெல்த் ஒர்க்கர்ஸ் ட்ரெயினிங் எடுத்த சில ட்ரெயினிஸ்க்கு இன்னும் வேலை இல்லாத நிலை ஏற்பட்டு இருக்கிறது. அதே நேரத்தில் அந்த மாவட்டத்தில் மலைப் பகுதியில் பேசிக் ஹெல்த் பெசிலிட்டிஸ் கூட இல்லாத நிலையிருக்கிறது. ஆகவே அந்த மலைப் பகுதிகளில் சில சென்டர்களை ஓப்பன் செய்து, அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய முறையில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய அந்த மல்டி பர்பஸ் ஹெல்த் ஒர்க்கர்ஸ் பற்றிச் சொன்னார்கள். அந்த ஒர்க்கர்சைப் பொறுத்தவரையில் அந்த பயிற்சி கொடுத்த உடனே, அவர்களுக்கு வேலை கிடைத்துவிடும். ஏன் என்றால், பற்றாக்குறையாக இருக்கிற காரணத்தால், அவர்களுக்கு உடனடியாக வேலை கிடைத்து விடுகிறது. அதிலே ஒரு சிக்கல் என்னவென்றால், அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலேயே வேலை வேண்டும் என்று கேட்கிறார்கள். எல்லோருக்கும் கன்னியாகுமரி மாவட்டத்தில் வேலை கொடுக்கின்ற சாத்தியக்கூறு இல்லை. ஆகவே அவர்களை வேறு இடங்களுக்கு அனுப்புவார்கள். அவர்கள் அங்கே செல்ல தயாராக இருக்கவேண்டும்.

இன்னும் தாய்-சேய் நல விடுதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று சொன்னார்கள். அது நியாயமான யோசனை. அதைப் பொறுத்தவரையில் நான் ஏற்கனவே சொன்னமாதிரி, இப்போது தமிழகத்தில் 5,837 தாய்-சேய் நல விடுதிகளை ஏற்படுத்தியிருக்கிறோம். அந்த புள்ளி விவரத்தைப் பார்க்கிறபோது, அகில இந்தியாவில், நாம்தான் முதலாவதாக இருக்கிறோம். அதனால் நாம் மன நிறைவு அடைந்து சும்மா இருக்க முடியாது. இன்னும் தீவிரமாக பணியாற்றும் அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் சொல்லக்கூடிய கருத்தும் பரிசீலனைக்குரியது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்து ஒன்றியங்களில் உள்ள மருத்துவமனைகளில் உள்ள செவிலியர்கள் பற்றாக்குறையால், சரியாக வேலைக்கு வராத காரணத்தால், அந்த செவிலியர்களுக்குப் பதிலாக இந்த ஆரம்ப பலநோக்கு சுகாதார பயிற்சி படித்தவர்களை வேலைக்கு அமர்த்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, செவிலியர்களுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கின்ற அந்த பயிற்சி முழுக்க முழுக்க வேறு விதமான பயிற்சி. The training component is entirely different from the training component given to the multipurpose health workers' அந்த மல்டி பர்பஸ் ஹெல்த் ஒர்க்கர்ஸ் பொறுத்தவரையில், 1½ ஆண்டுக்காலம் பயிற்சி கொடுக்கப்படுகிறது. எல்லா விஷயங்களிலும், அதாவது மலேரியாயல் பெரசைட், தொழு நோய், போன்ற சில விஷயங்

களைப் பற்றியும் கொஞ்சமாகச் சொல்லிக் கொடுத்து. அந்த கிராமங்களில் எங்கே வியாதி இருக்கிறது என்பதைக் கண்டு பிடித்து மருத்துவர்களுக்கு எடுத்துக் கொடுப்பதற்காக (to bring this to the attention of the Medical Officers) அதற்காக அவர்களுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, செவிலியர் களுடைய பணியை மல்டி பர்ப்பஸ் ஹெல்த் சர்வீஸ் வொர்க்கர்ஸ் களால் செய்ய முடியாது. மல்டி பர்ப்பஸ் ஹெல்த் சர்வீஸ் வொர்க்கர்ஸ் பணியை செவிலியர்களால் செய்யமுடியாது. இது வேறு அது வேறு. செவிலியர்களைப் பொறுத்தவரையில் ஆண்டு தோறும் நாம் எவ்வளவு எடுத்துக் கொண்டிருந்தோம் என்றால் 350 பேர்களுக்கு பயிற்சிக் கொடுத்துக் கொண்டிருந்தோம். ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற தற்குப் பின்னால், அது நீண்ட நாட்களாக குறைவான எண்ணிக்கையிலேயே இருக்கிறது என்பது உணரப்பட்டு, தற்போது 690 பேர்களுக்கு ஆண்டுதோறும் பயிற்சி அளிக்கின்ற வாய்ப்புக்களை உயர்த்தியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. குப்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பல்நோக்கு சுகாதாரப் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி பெற்ற வர்கள் அரசுப் பணிகளில் வேலை செய்ய முடியாத ஒரு நிலை இருக்கிறதே, எனவே They are also eligible for Government jobs என்ற அளவில் அரசு ஆணை இடுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே ; மாண்புமிகு தலைவர் அவர்களே. ஒட்டன்சத்திரத்தில் இருக்கக்கூடிய அந்தப் பகுதியைப் பற்றி சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். அங்கே ஒரு ஆண்டுக்கு 20 பேர்களுக்குத்தான் பயிற்சி கொடுத்துக் கொண்டிருக்கிறோம். நமக்கு இருக்கக்கூடிய சிக்கல் எல்லாம் நாம் ஏற்கெனவே அரசாங்கத்தின் மூலமாக நம்முடைய வரிப்பணத்தை செலவழித்து பயிற்சி கொடுத்தவர்களுக்கு முதல் இடம் கொடுக்க வேண்டும் என்பதற்காக, அவர்களுக்கு முதலிடம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதற்குப் பிறகு நிச்சயமாக இவர்களுக்கு கொடுக்கக்கூடிய அந்த வாய்ப்பை பரிசீலிக்கலாம். ஆனால் அம்பலிங்கம் என்ற ஊரில் நடக்கும் அந்தப் பயிற்சிப் பள்ளியில் இந்த 20 பேர்கள் கூட, மற்ற வேலை வாய்ப்புகள் அதிகமாகக் கிடைக்கக்கூடிய வழி முறைகள் இருப்பதால், பயிற்சி பெற வருவதில்லை என்று கேள்விப்பட்டேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முழு விவரம் கொடுத்தால் அரசு அதை பரிசீலிக்கும்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகத்தில் பெண்கள் பல்நோக்கு சுகாதாரப் பள்ளிகள் மாவட்ட அளவிலேதான் இருக்கின்றன. அதனை கிராமப் புறங்களுக்கும் மாற்றும் திட்டத்தை அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் அதைத்தான் இங்கே எடுத்துக்கூறியிருக்கிறேன். மாவட்ட மருத்துவமனையிலே ஒரு ஆண்டு அவர்களுக்கு பயிற்சி கொடுக்கப்படும். 12 மாதங்கள் டிரெயினிங். ஆர்.எச்.டி.சி. என்று சொல்லக்கூடிய ரூரல் ஹெல்த் டிரெயினிங் சென்டர் என்ற வகையில் 59-லே 49-ஐ நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். அந்த இடங்களிலே 6 மாதம் டிரெயினிங். இந்த இடங்கள் எங்கே யிருக்கின்றன என்றால், ஆரம்ப சுகாதார நிலையங்களின் கட்டிடத்தை ஒட்டித்தான் இந்தக் கட்டிடம் இருக்கிறது. அதே நேரத்தில், exposed to rural atmosphere என்று சொல்லக்கூடிய அளவுக்கு அந்த மருத்துவமனையில் ஒரு ஆண்டு பயிற்சி கொடுத்த தற்குப் பிறகு, ஆர். எச். டி. சி. என்கிற இந்தப் பயிற்சி தரப் படும். அப்படி கிராமப் பகுதியிலே நல்ல வகையிலே இந்தப் பயிற்சி தரப்படுகிறது.

திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே திண்டுக்கல்லில் ஆரம்பிக்கப்பட்ட பல்நோக்கு சுகாதாரப் பயிற்சிப் பள்ளியில் பயிற்சியாளர்கள் எண்ணிக்கை எத்தனை ? அது இன்னும் கூட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : சராசரியாக ஒவ்வொரு ஆர். எச். டி. சி. சென்டரிலும் நாம் 20 பேர்களுக்கு பயிற்சி கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதைக் கூட்டவேண்டும் என்றால் கட்டிடத்தின் அமைப்பை பொறுத்திருக்கிறது, திடீர் என்று செய்யமுடியாது. அத்தோடு நாம் கூட்டிவிட்டோம் என்றால், அந்தப் பயிற்சியின் தரமும் குறைந்துவிடும். ஆகவே இவ்வளவையும் மனத்திலே கொண்டுதான் நாம் எச்சரிக்கையாகச் செய்ய வேண்டும்.

திருமதி பி. லட்சுமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பயிற்சி பள்ளி கட்டிடத்திற்கு எவ்வளவு செலவு ஆகிறது என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு தலைவர் அவர்களே, நாம் கட்டயிருக்கிற இந்த நான்கு இடங்களுக்கு சராசரியாக ஒரு இடத்திற்கு 8 லட்சம் ரூபாய் செலவாகும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமபுறங்களில் வைத்தியப் பணிகளை விஸ்தரிப்பதற்காக, அரசு எடுத்துக் கொண்டிருக்கும் திட்டங் களில் ஒன்றாக, வைத்தியர்கள் கிராமப் பகுதிகளுக்குச் செல்வ தற்கு தயாராக இல்லை என்ற எண்ணத்தையும் மனத்திலே கொண்டு, அரசு மானியம் பெற்று, அரசு கடன் பெற்று படிக்கக் கூடிய வைத்தியக் கல்லூரி மாணவர்களிடத்தில், கிராமப்புறங் களில் இத்தனை காலம் வைத்தியம் செய்யவேண்டும் என்ற ஒப்பந்தம் பெறுவதற்கான திட்டமும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறியவிரும்புகிறேன்.

[1983 ஏப்ரல் 18

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே. இந்தப் பிரச்னை அகில இந்திய சுகாதார அமைச்சர்கள் மாநாட்டிலே விரிவாகப் பேசப்பட்டது. அங்கே நான் ஒரு யோசனை சொன்னேன். இந்தக் கமிட்டிக்கு அப்போது நான்தான் தலைவராக இருந்தேன். அந்த நேரத்தில் ஒட்டு மொத்தமான ஒரு யோசனையைச் சொன்னேன். கிராமப் பகுதியில் பணியாற்றக் கூடிய டாக்டர்களுக்கு, ஒரு மானியமாக, ஆல் இந்தியா பேசிஸ்லே மத்திய அரசாங்கம் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று சொன்னோம். ஏனென்றால் ஒவ்வொரு மாநிலத்திலும் இது ஒரு பெரிய பிரச்னையாக இருக்கிறது. 20 சதவீதத்திலிருந்து 25 சதவீதம் வரை டாக்டர்ஸ் போஸ்ட்ஸ் ஒவ்வொரு மாநிலத்திலும் கிராமப்பகுதிகளில் காலியாக இருக்கிறது என்ற பிரச்னை அப்போது எடுத்துச் சொல்லப்பட்டது. ஆனால் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் ஒரு நல்ல செய்தி. 300 டாக்டர்கள், 400 டாக்டர்கள் போஸ்ட்ஸ் காலியாக இருந்த நிலையை மாற்றி அதை தற்போது 45 ஆகக் குறைத்திருக்கிறோம். அதுகூட லீவிலே போனதனால் ஏற்பட்ட வேகன்சி. சாதாரணமாக இந்த 45 என்பது எல்லா இடத்திலும் இருப்பது. ஆகவே, முழுக்க முழுக்க இதில் தமிழகம் வெற்றி கண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10.00)

**2. தகவல் கோரல் .**

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து நடைபெறும் அனைத்துக் கட்சி கூட்ட விவரம்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அரசாங்கத்திடம் ஒரு முக்கியமான தகவல் அறிய விரும்புகிறேன். அரசாங்கம் இலங்கைத் தமிழர் பிரச்சனைகள் என்று அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டி சில முடிவுகளை எடுத்து இருப்பதாகத்தெரிகிறது. சபை நடந்துகொண்டிருக்கிறது. அதுபற்றிய விவரங்களை. அரசு அறிவிக்க வேண்டும். ஏற்கனவே சர்வ கட்சிக் கூட்டம் ஏற்பாடு செய்து அனைத்துக் கட்சிப் பிரதி நிதிகளினால் ஒரு மகஜர் டெல்லியிலே கொடுக்கப்பட்டது. அதில் பல கோரிக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவை என்னவாயிற்று? மத்தியசர்க்கார் இலங்கைக்குஇராணுவத்தை அனுப்புகின்ற கோரிக்கையை இந்த அரசு வலியுறுத்துகிறதா என்பதை சபைக்குத் தெரிவிக்க வேண்டும் என்று விரும்புகிறேன். (குறுக்கீடுகள்



1985 ஏப்ரல் 4] [திரு.அ. ரகுமான்கான்]

மன்றத்தலைவர் அவர்களே, இங்கு உள்ள உறுப்பினர்களின் உரிமையைப் பாதுகாக்க நீங்கள் கடமைப்பட்டிருக்கிறீர்கள். சபை நடந்துக் கொண்டிருக்கிறது. அரசாங்கம் அதிலே சம்பந்தப் பட்டிருக்கிறது. அது என்ன முடிவு எடுத்திருக்கிறது என்பதை சபை உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அந்தக் கூட்டத்திலே பல்வேறு கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டு இருக்கலாம். என்றாலும் சபைக்குத் தெரிவிக்கவேண்டும். அது பற்றிய விவரம் வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஏதேனும் ஒரு விதி முறையின அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் கேட்க வேண்டும். இதனை ஒரு ஸீரோ அவரில் எடுத்துக்கொண்டு, எதையும் கேட்கலாம் எதற்கும் பதில் சொல்லலாம் என்று உறுப்பினர் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இந்தக் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. மற்ற அரசியல் கட்சிகளுடைய பிரதிநிதிகள் இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்திலும் இடம் பெற்றிருக்கிறார்கள். இன்னும் முடிவு அடையவில்லை. முடிவு அடைந்ததற்கு பிறகு எடுக்கப்பட்டுள்ள முடிவுகளை அவைக்கு இந்த அரசு அளிக்கும்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்

எண்ணூர் அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட விபத்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் வி. தங்கவேலு, மு. இராமநாதன், குமரி அனந்தன், எஸ்.என். இராமசாமி, டி. ஆர் வேங்கடரமணன், கு. சுப்பராயன், பொ. உத்திராபதி, பொன். முத்துராமலிங்கம், ந. சிவஞானம், சே.எம். தங்கமணி, சி. பழனி முத்து, சு. பாலன், வி.பி. சிந்தன், கோ. வீரய்யன். கு. ரமணி, ஜே. ஹேமச்சந்திரன், ஜி கே.ஜெ. பாரதி, சு.சிவராஜ், சா. ஜெயச்சந்திரன் ஆகியோர் ''எண்ணூர் தெர்மல் ஸ்டேஷனில் பாய்லர் உடைப்பு (பாய்லர் பர்ஸ்ட்) காரணத்தால் சுமார் 17 நபர்கள் ஸ்டான்லி மருத்துவ மனையில் 1-4-1985ல் சுமார் 11.30 மணி அளவில் அவசர சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் மூவரின் உயிர் ஊசலாகிறது. என்ற நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய அனுமதி கோரி முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு வி. தங்கவேலு:

''சமன்செய்து சீர்தூக்குங்கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கணி''

என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க இந்த மன்றத்தில் அமர்ந்து இருக்கக்கூடிய பேரவைத் தலைவர் அவர்களே, மற்றும் இங்கு இருக்கக்கூடிய உறுப்பினர்களே, இந்த அனல் மின்சாரத் தாலே ........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இங்கே என்னை மட்டும் தான் அட்ரஸ் பண்ண வேண்டும்.

திரு வி. தங்கவேலு: அனல் மின் நிலையத்திலே நடந்த நெருப்பு மழை பெய்த நிகழ்ச்சிகளை உங்களுக்கு வரிசைப்படி எடுத்து சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த அனல் மின்நிலையம் என்று சொல்லக்கூடிய நிலையத்தில் நடந்த நிகழ்ச்சி எப். டி. பொறியாளர் கவனக்குறைவு என்று சொல்லக்கூடிய முறையிலே நடந்திருக்கிறது. அங்கே இருக்கிற அதிகாரிகளைப்பற்றிச் சொல்கிறபோது சி.இ.யாக இருப்பவர் திரு ராமன்குட்டி, எஸ்.இ.யாக இருப்பவர் திரு சண்முகம், திரு கிருஷ்ணராஜ் அவர்களும் திரு. வரதராஜ் அவர்களும் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு அங்கே முக்கிய அதிகாரிகளாக இருக்கிறார்கள். கிட்டத்தட்ட 110 அடி உயரமுள்ள அந்தக் கட்டடத்தை அண்ணாந்து பார்க்கிறபோது நம்முடைய தலையிலேயே விழக்கூடிய துருப்பிடித்த நிலையில் தான் அந்தக் கட்டிடத்தின் நிலை இருக்கிறது. அதற்குக் காரணம் அந்த அனல் மின்நிலையம் சரியாகப் பராமரிக்கப்படவில்லை. அங்கே பணிசெய்யக்கூடியப் பணியாளர்களைக் கேட்கிறபோது அவர்கள் குடிப்பதற்குத் தண்ணீர் கிடையாது, டாய்லட் கிடையாது ரெஸ்ட் ஹவுஸ் கிடையாது, 100 பெண்களுக்கு மேலாக அங்கே வேலை பார்க்கிறார்கள். தனியாக அவர்களுக்கு என்று டாய்லட் கிடையாது, குழந்தைகள் காப்பகம் கிடையாது, ஆம்புலன்ஸ் கிடையாது, இப்படி எதைக் கேட்டாலும் இல்லை என்று சொல்லக்கூடிய நிலையிலேதான் அந்த அனல் மின் நிலையம் இருக்கிறது. பாரதிதாசன் சொல்வான் ''காண்பதை எல்லாம் தொழிலாளி செய்தான், அவன் காணத்தகுந்தது வறுமையாம் அவன் பூணத் தகுந்தது பொறுமையாம்'' என்று. அதைப்போல அங்கே இருக்கிற அதிகாரிகள் அந்தத் தொழிலாளர்களின் கழுத்தை நெரித்துவிட்டு அவர்கள் உள்ளக் குமுறலைச் சொல்ல முடியாத அளவுக்கு அந்தத் தொழிற்சாலை, இயந்திரங்கள் இருக்கின்றன என்றால் அதைப்பற்றி அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா இல்லையா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

நான் அங்கே இரண்டு முறை சென்று பார்த்தேன். நாம் பார்ப்பதற்கு நன்றாக இல்லை என்ற சூழ்நிலை இருக்கிறது. முதல் உதவி அகம் என்று போர்ட் போடப்பட்டிருக்கிறது. முன்னாலே வாசல் கதவு வைத்து பர்ஸ்ட் எய்ட் ரூம் என்று போடப்பட்டிருக்கிறது, ஆனால் பின்னாலே போய் பார்த்தால் சிவில் எஞ்சினியர்கள் ஹவுஸ் என்று 5, 6 பொறியியல் வல்லுநர்கள் வேலை பார்த்துக்கொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது. பர்ஸ்ட் எய்ட் ரூம் என்று போர்டு வைத்தாலும் கூட . உள்ளே சென்றால் அப்படிப்பட்ட உதவிக்கு யாரும் அங்கே இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அங்கே 700 பேர்களுக்கு அதிகமானவர்கள் வேலைபார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கான்ட்ராக்ட் லேபரர்ஸ், தற்காலிகமாக வேலைசெய்யக்கூடிய சூழ்நிலையைப் பெறுகிறார்கள். கிட்டத்தட்ட 7 ஆண்டுக்காலமாக மின்சார போர்டிலே தாழ்த்தப்பட்ட மலைசாதி சிறுபான்மை மக்களுடைய தொழிற்சங்கத் தலைவன் என்ற அந்த முறையிலே நான் பல கருத்துக்களை அங்கே உள்ள அதிகாரிகளைச் சந்தித்து எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.



Contract labour system should be abolished in Tamil Nadu என்று பல முறைகள் விண்ணப்பமாக எடுத்துச் சொல்லியுங்கூட அந்த கான்ட்ராக்ட் லேபர்ஸ் பற்றி கவனிக்கப்படாத சூழ்நிலை இருக்கிறது. இப்படி அந்த இலாகாவிலே ஒரு துர்பாக்கிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. தற்காலிக ஊழியருக்கு 7.05ரூபாய் சம்பளம் கொடுத்து விட்டு the intermediaries who are in the name of contractors in this Thermal Station are earning a lot of profit என்பதை நான் மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே 30 பேர்கள் கான்ட்ராக்டர்கள் இருக்கிறார்கள் என்றால் அதைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்கிறபோது 42கோடி ரூபாய் சென்ற ஆண்டு மத்திய அரசு கொடுத்திருக்கிறது.

The Central Government had given Rs. 42 crores, but this Rs. 42 crores has not yet been properly utilised by this Thermal Station for the welfare of the workers. அப்படி 42 கோடி ரூபாயைப் பெற்றுள்ள இந்த அனல் மின்நிலையமானது தொழிலாளர்களுக்கு பாதுகாப்புத்தராத சூழ்நிலை இருக்கிறது, இப்படி எதிர்பாராத நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. இந்த நிகழ்ச்சிகள் தொடர்கதையாக இருக்கிறது. சம்சாரம் இல்லாமல் கூட நாம் வாழ்ந்து விடலாம், ஆனால் அதே நேரத்திலே மின்சாரம் இல்லாமல் வாழமுடியாது என்ற சூழ்நிலையை நாம் பெற்றிருக்கிறோம். இது மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும், மத்திய அமைச்சருக்கும் தெரியும்,

(முற்பகல் 10-10.)

அதே நேரத்தில் நம்முடைய மின்சாரத் துறை வளர்ந்து வரும் ஒரு நல்ல சூழ்நிலையைப் பெற்றிருக்கிறது. இந்த மின்சாரத் துறையில் இன்றைக்கு நேற்றைக்கு இப்படிப்பட்ட நெருப்பு மழை அனல் மின் நிலையத்தில் ஏற்படவில்லை. உதாரணமாக எடுத்துக் கொண்டால் இப்படிப்பட்ட ஒரு சோக நிகழ்ச்சி 1983 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் சாலம்மா என்ற பெண் அங்கே ஏற்பட்ட பைப் உடைப்பின் காரணமாக தீ காயம் பட்டு இறந்து இருக்கிறார்கள். அதையும் அரசின் கவனத்திற்கு நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். கடிதம் எழுதியும் இருக்கிறேன். ஆனால் இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இப்போது 1985 ஆம் ஆண்டில் இந்த சோக நிகழ்ச்சி ஏற்பட்டு இருக்கிறது என்றால் அங்கே பொழிந்த நெருப்பு மழையால் தான். அங்கே இருக்கக்கூடிய எப்.டி. என்று சொல்லக்கூடிய 2 முக்கியமான ஆப்பரேட்டர்கள் செயல்படாததன் காரணமாக இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடந்து இருக்கிறது (மணியடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சீக்கிரம் முடித்து விடுங்கள்.

திரு. வி. தங்கவேலு: I request the Hon. Speaker to give me some more time to express my inner thoughts. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அது மட்டுமல்ல, அங்கே தீக்காயங்கள் பெற்றவர்களை ஸ்டான்லி மருத்துவ மனையில் சேர்த்து இருக்கிறார்கள். அந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள்

சிறுபான்மையின மக்களுக்கு அங்கே சரியான முறையில் டிரீட் மென்ட் கொடுக்கப்படவில்லை. நான் சென்று பார்க்கும்போது அவர்களுக்கு சரியான முறையில் eyelid fuid கொடுக்கவில்லை. அதிகமாக தீக்காயங்கள் 80 சதவீதம் பெற்று இருந்தவர்களுக்கு அதிகமான eylid fuid கொடுத்து இருக்கிறார்கள். அதே நேரத்தில் 40 சதவீதம் தீக்காயங்கள் பெற்றவர்களுக்கும் அதே அளவு eyelid fluid கொடுத்திருக்கிறார்கள். அதே நேரத்தில் அங்கே இருக்கக்கூடிய டாக்டர்கள் செய்யக்கூடிய வேலையை அங்கே இருக்கக்கூடிய மற்ற வார்டு பாய்கள் அவர்களுக்கு செய்து இருக்கிறார்கள். கீழே போடப்பட்டுள்ள ரப்பர் ஷீட் சுத்தமாக இல்லை. அதற்கு அடுத்து தீக்காயம் பெற்ற 3 பேர் இறந்து இருக்கிறார்கள். இன்னும் ஏதாவது கேஷ்சுவா லிட்டி ஏற்படுமா என்று பார்க்கும்போது அவர்களுக்கு மேல் போர்த்தியிருந்த அந்த ஆடைகள் நன்றாக சுத்தமாக இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த தீக்காயங்கள் பட்டவர்கள் இருந்தார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் நமது அரசை கேட்டுக்கொள்ளுவது எல்லாம் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ளுவது எல்லாம் "We want an Experts. Comittee" நமது அரசு வல்லுநர் குழுவை அமைக்கவேண்டும். இந்த வல்லுநர் குழுவின் வாயிலாக இந்த சுற்றுப்புற சூழ்நிலையை நன்கு காப்பாற்ற வழிவகைகளை செய்யவேண்டும் என்பதால் இவைகளை எல்லாம் பற்றி பேச வேண்டும் என்பதால் இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து இது பற்றி விவாதிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, 1-4-85 அன்று எண்ணூர் அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட ஒரு பெரிய விபத்தின் காரணமாக ஏறத்தாழ 18 பேர் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இது மிகவும் கவலைத் தரக் கூடிய ஒரு விஷயமாகும். அதிலே மிகவும் பெண்கள் அதிக மாக பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அந்த அனல் மின் நிலை யத்தில் சாம்பலை வெளியேற்றுவது பகல் 12 மணியிலிருந்து 2 மணி வரை அன்றாட நிகழ்ச்சியாக நடை பெற்று வந்தது. ஆனால் அன்றையதினம் அந்த சாம்பல் வெளிப்படுத்தும் வேலை 2 மணிக்கு மேல்தான் நடைபெறும் என்று ஒரு தவறான தகவல் தெரிவித்ததன் காரணமாக அன்றையதினம் அங்கே வேலை செய்கிற அந்த மக்கள் அந்த பகுதியில் நடமாடிக் கொண்டு இருந்த நேரத்தில் தான் திடீர் என்று அந்த நெருப்பு சாம்பல் அங்கே நடமாடிக் கொண்டு இருந்தவர்கள் மேல் விழுந்து சுமார் 18 பேர் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நேரத்தில் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், இப்படிப்பட்ட இடங்களில் அன்றாடம் வேலை நடைபெறுகிற காரணத்தால் என்றைக் காவது ஒரு நாள் இப்படிப்பட்ட ஒரு விபத்து ஏற்படும் என்று அதிகாரிகள் அறிந்தும் அதைத் தடுப்பதற்கு வழிவகைகளை அதிகாரிகள் எடுக்காமல் இருந்ததால் இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் குற்றச் சாட்டாக சொல்லவிரும்புகிறேன். ஏன் என்றால் அதிகாரிகள் முன் எச்சரிக்கையாக இந்த இடம் விபத்திற்கு உள்ளாகும் இடம் ஆகவே இங்கே யாரும் வரக்கூடாது என்ற அறிவிப்பை



அறிவித்து இருக்க வேண்டும். அப்படி அறிவித்து இருந்தால் மக்கள் யாரும் அந்த இடத்தில் நடமாடி இருக்க முடியாது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக் கிறேன். அந்த பைப்பில் ஓட்டை விழுந்ததன் காரணமாக அந்த விபத்து நடந்து இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. அங்கே உள்ள அதிகாரிகள் என்ன செய்கிறார்கள்? அன்றாடம் இப்படிப்பட்ட பைப்புகளை பார்த்து சரியாக இருக்கிறதா? அல்லது எந்த நேரத்தில் ஓட்டை விழும்? அதை மாற்றுவதற்கு என்ன வழிவகைகளை செய்யலாம் என்று அதிகாரிகள் அதை அறிந்து அதை செய்யவில்லை. அவர்கள் அப்படி செய்யாததன் காரணமாக இன்றையதினம் 18 பேர் பாதிக்கப்பட்டு அதில் ஏறத்தாழ 3 பெண்கள் இறந்து இருக் கிறார்கள் என்பதை காணுகிறபோது இப்படிப்பட்ட ஏழைக் குடும்பத்தில் இருப்பவர்கள் பாதிக்கப்பட்ட காரணத்தால் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு அரசு நல்ல வகையில் நிவாரணம் அளிக்க வேண்டும் அவர்களுக்குப் பெரும் தொகை கொடுக்கப் பட வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நல்லமுறையில் சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். இனிமேலாவது இப்படிப் பட்ட விபத்துக்கள் ஏற்படாமல் தடுப்பதற்கு அதிகாரிகள் ஆவன செய்ய வேண்டும். இந்த சம்பவம் பற்றி இப்படிப்பட்ட விஷயங்களைப் பற்றியெல்லாம் விவாதிக்க வேண்டிய அவசியம் இருப்பதால் இந்தச் சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. 1-4-85 ஆம் தேதி எண்ணூர் அனல் மின் நிலையத்தில் கழிவு சாம்பல் வரும் பைப்புகள் சரியாகச் செயல் படாமல், உடனுக்குடன் கழிவுச் சாம்பல் வெளியே வராமல் கூடங்களில் தேங்கிக் கொள்ளும் நிலை இருந்திருக்கிறது. அங்கே பணிபுரிந்து வரும் ஆபரேட்டர்கள் கவனக் குறைவாக இருந்த காரணத்தால், கழிவு சாம்பல் வெளியே சரியான முறையில் வராமல் தேங்கிக் கொண்டிருந்திருக்கிறது. அந்தத் தேக்கத்தைக் கண்டு கொள்ளாத ஆபரேட்டர்களின் கவனக் குறைவினால், அந்த சாம்பல் வரும் பைப்பின் அருகே ஜன நடமாட்டம் இருந்ததால், அந்தப் பைப்பிலே வந்த சாம்பல் அதிகமாக் வெளிவந்ததன் காரணமாக இதுபோன்ற சம்பவங் கள் நடைபெற்றிருக்கின்றன. அந்த ஆப்பரேட்டர்கள் சரியான முறையிலே அந்த பைப்புகளை கிளீன் செய்து அந்தச் சாம்பலை வெளியேற்றி இருந்தால், இந்த ஆபத்துக்கள் வந்திருக்க இயலாது. ஆகவே, இதுபோன்ற நடவடிக்கைகள் மீண்டும் வராமல் இருப்பதற்காக' இப்பிரச்னை குறித்து விவாதிக்க இந்த மாமன்றத்தின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கும்படி வேண்டுகிறேன்.

திரு. கு. சுப்பராயன்: பேரவைத் தலைவரவர்களே, கடந்த 1-4-1985 ஆம் தேதி அன்றைக்கு எண்ணூர் அனல் மின் நிலையத் தில் கழிவு எரி சாம்பலால் ஏற்பட்டிருக்கின்ற கடுமையான விபத்தால் மூன்று பெண் தொழிலாளர்கள் மரணம் அடைந்திருக்

கின்றார்கள் என்பதோடு இன்னும் ஆறு பெண் தொழிலாளர்களின் நிலைமை ஸ்டான்லி மருத்துவமனையில் கவலைக்கிடமான நிலையில் இருக்கிறது என்ற தகவலும் வந்திருக்கிறது. இந்தச் சம்பவத்தைச் சுட்டிக்காட்டுகின்றபொழுது, இது ஏதோ தனியார் நிறுவனத்தில் எற்பட்ட சம்பவம் அல்ல; அரசுத் துறைக்கு சொந்தமான ஒரு நிறுவனத்தில் நடைபெற்றிருக்கின்ற ஒரு சம்பவம் ஆகும். அரசு ஒரு மாடல் எம்ப்ளாயராக விளங்க வேண்டிய நிலைமையை மறந்து, இந்த விபத்திற்கு அடிகோலி இருக்கிறது என்று கருதுகிறேன்.

குறிப்பாக, இந்தக் கழிவு வெளியேற்றப்படும்பொழுது இந்தக் கழிவு உயிர்ப் பலியை ஏற்படுத்தும் அபாயம் உள்ளது என்று தெரிந்துகொண்டு, அந்த உயிர்ப் பலி ஏற்படாமல் பாதுகாப்பு வளையங்களை நிர்வாகம் ஏற்பாடு செய்யவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆகவே, நிர்வாகக் சோளாறின் காரணமாக, போதுமான உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை காலத்திலே மேற்கொள்ளாததன் காரணத்தினாலே இத்தகைய முறையில் ஒப்பந்தத் தொழிலாளர்கள் மரணம் அடைந்திருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. மேலும் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யாததால் உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அனல் மின் நிலையத்தில், முன்னெச்சரிக்கையோடு, போய்க் கொண்டிருக்கின்ற தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வதற்கு உரிய நடைமுறைகள் அங்கே இல்லை என்பதால் தான் இந்த விபத்து எற்பட்டிருக்கிறது. அதுவும், அரசுத் துறையிலே இந்த விபத்து ஏற்பட்டிருப்பதால், எதிர்காலத்திலே, அரசுத் துறையானாலும் சரி, தனியார் துறையானாலும் சரி, மிக மலிவாக இதேபோன்ற நிகழ்ச்சிகள் நடந்த பிறகு அனுதாப வார்த்தைகளால் மட்டும் அவர்களுக்குத் தேறுதல் சொல்லுவது என்கின்ற நிலைமை மாறி, இத்தகைய உயிர்ப் பலிகள் இனிமேல் ஏற்படாது என்பதற்கு உத்தரவாதம் கொடுக்க வேண்டும் என்பது போன்ற நிலைமைகளைப்பற்றியெல்லாம் விவாதிப்பதற்காக இந்தச் சபையினுடைய இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இதுகுறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. பி. சித்தன். தலைவரவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் தாங்கள் அனுமதிக்க வேண்டுமென்று நான் வேண்டிக்கொள்கிறேன். இதைப்பற்றி விவாதிப்பதற்காக சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன். காரணம், இந்தப் பாதுகாப்பு முறைகள் எல்லாம் அங்கே மீறப்பட்டதன் விளைவாகத்தான் இந்த நிகழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. மின்சார இலாக்காவில் அடிக்கடி இத்தகைய விபத்துக்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

சில மாதங்களுக்கு முன்னால் பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்திலே இதே முறையிலே ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டு ஒன்பது உயிர்களைப் பலி கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.



(முற்பகல் 10-20.)

அப்போதும் அந்தக் கருவிகள் மோசமான நிலையில் இருக்கின்றது என்றும் உடனடியாக பழுதுபார்க்கவேண்டும் என்றும் அதற்குத் தேவையான சேஃப்டி மெஷர்ஸ் அதாவது பாதுகாப்பு முன் ஏற்பாடுகள் நடைபெறவில்லை என்றும் மின்வாரியத் தலைவர், மின் வாரிய அமைச்சர், மின்வாரிய அதிகாரிகள் ஆகியோருடைய கவனத்திற்கு நாங்கள் கொண்டு வந்திருந்தோம். ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதன்பிறது ஓரிரு மாதங்களுக்குப் பிறகு துரதிர்ஷ்டவசமான நிலைமை ஏற்பட்டு 9 பேர் இறந்துவிட்டார்கள். இதே முறையில்தான் எண்ணூர் அனல் மின் நிலையத்திலும் நிகழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. தற்செயலாக ஏற்படுகின்ற நிகழ்ச்சிகள் உண்டு. அதற்கு யாரும், யாரையும் குறை சொல்ல முடியாது என்பதை உணருகிறேன். ஆனால் இது தற்செயலாக ஏற்பட்ட நிகழ்ச்சியாக மட்டும் நாம் கருதிவிடக்கூடாது. பாதுகாப்புக்கான முன்னேற்பாடுகள் முறையாக நடைபெறவே இல்லை. இதுவரையில் அந்தத் தொழிற்சாலையில் கண்டிராத அளவுக்கு அந்த நெருப்புக் கோளம் ஏற்பட்டிருக்கின்றது. அவ்வாறு அந்தச் சாம்பலும், ஸ்பிலிண்டர்ஸும் வெளியே வருவதற்கான காரணத்தை ஆராயவேண்டும்.

ஏற்கெனவே இருந்த இயந்திரத்தில் சில கோளாறுகள் ஏற்பட்டன. நான் டெக்னிக்கல் அடிப்படையிலே போக விரும்பவில்லை. ஆனால் அங்கே வேலை செய்யவேண்டிய கருவிகளை எல்லாம் சரியாகப் பழுது பார்க்காத காரணத்தால் அங்கே இருந்து வெளியே தள்ளப்படவேண்டியவை முறையாகத் தள்ளப்படவில்லை. அந்த நெருப்புச் சாம்பலும் அத்தோடு சேர்ந்த பொருட்களும் அந்தக் குழாய்களிலிருந்து கீழே வந்தால் கீழே ஒரு தண்ணீர்த் தொட்டி உண்டு, அந்தத் தண்ணீர்த் தொட்டியில் அவை விழும், அந்த வகையில் அங்கே ஆபத்து ஏற்படாத முறையில் ஒரு ஏற்பாடு உண்டு. ஆனால் அது முறையாகத் தள்ளப்பட வேண்டும். முறையாகத் தள்ளப்படுகின்ற வைப்ரேட்டர் மற்றும் உள்ளே உள்ள கருவிகள் பழுதடைந்தது குறித்து அந்த இன்ஜினியர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டபோதிலும் அவர்கள் முறையான நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே இதை ஒரு நிகழ்ச்சியாக மட்டும் நான் கருதவில்லை. மின்வாரிய அதிகாரிகளுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டும், மீண்டும், மீண்டும் கொண்டுவரப்பட்டும் கவனிக்கப்படாத ஒரு பிரச்சினையாக இது மாறி இருக்கின்றது.

சமீபகாலமாக இத்தகைய நிகழ்ச்சிகள் அதிகமாகிக்கொண்டிருக்கின்றன. எனவே இதற்குக் காரணம் தொழிலாளர் நல இலாக்காவின் பொறுப்பிலே இந்த ஃபேக்டரிகள் எல்லாம் அவ்வப்போது கண்காணிக்கப்படவேண்டும். அவ்வாறு வேண்டிய அளவுக்கு அவ்வப்போது அந்த இலாக்கா போதுமான முறையில் செயல்படவில்லை. குறிப்பாக அரசினுடைய நிறுவனம் என்றால் அவர்கள் அதைப் புறக்கணித்துவிடுகிறார்கள். இந்த விதிமுறைகள் முறையாகக் கவனிக்கப்படுகிறதா என்பதில்

அவர்கள் போதுமான அளவுக்குக் கவனம் செலுத்துவதில்லை. ஆகவேதான் இதுபற்றி இங்கே விவாதிக்கவேண்டும் என்று வலியுறுத்தவேண்டியிருக்கிறது. மேலும் அவர்களுக்கு இப்போது வழங்கப்படுகின்ற சிகிச்சையும் போதுமானதல்ல. நான் நேற்றையதினமும் அதற்கு முன் தினமும் மருத்துவமனைக்குச் சென்று பார்த்தேன். மிகப்பெரிய அளவுக்குப் பாதிக்கப்பட்ட அந்தத் தொழிலாளர்களுக்கு வெளியிலே இருந்து மருந்து வாங்கிக்கொடுக்கவேண்டிய நிலை இருக்கின்றது. சில மருந்துகளை வாங்கிக்கொடுக்க பணத்தை நானே வசூல் செய்து என்னுடைய பாக்கெட்டிலே உள்ள பணத்தையும் போட்டு மருந்து வாங்கிக்கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. உயிருக்கு ஊசலாடக்கூடிய நிலையில் இருப்பவர்கள் என்று சொல்லப்படக்கூடிய நான்கு பேர்கள் என்று கருதுகிறேன், அவர்களுக்கும் போதுமான பாதுகாப்பு மருத்துவமனையில் கொடுக்கப்படவில்லை.

கான்ட்ராக்ட் தொழிலாளர்களாக அவர்கள் இருப்பதன் காரணத்தால் அவர்களுக்கு ஈ. எஸ். ஐ. வசதி கிடைக்காது. எனவே அவர்களுக்கு முறையாக நஷ்ட ஈடு கொடுக்கின்ற வகையிலும் இத்தகைய விபத்துக்கள் இனி வராமல் இருப்பதற்கு போதுமான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கவேண்டி இருப்பதாலும் இதுபற்றி முறையாக ஒரு விவாதம் நடக்க வேண்டும் என்பதாலும் இந்தப் பிரச்சினை குறித்து விவாதிப்பதற்சாக அவையின் இதர அலுவல்களை எல்லாம் ஒத்திவைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை முன்மொழிய அனுமதி கேட்டு இங்கே பல்வேறு அரசியல் கட்சிகளின் சார்பிலே மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணூர் மின் நிலையத்தில் நடந்த நிகழ்ச்சிகள் குறித்து சில கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். எண்ணூர் அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட அந்த வேதனை தரத்தக்க நிகழ்ச்சி ஒரு எதிர்பாராத வகையில் ஏற்பட்ட விபத்து என்பதை நான் முன்கூட்டியே அறிவிக்க விரும்புகிறேன். எப்படி என்றால் ஒப்பந்தப் பணியாளர்கள் 17 பேர்கள் மழைக்கு அந்த இடத்தில் ஒதுங்கி இராவிட்டால் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது. ஏதோ அது ஏப்ரல் முதல் நாள் எதிர்பாராத விதத்திலே மழையும் பெய்து, சுமார் 11.00 மணி அளவில் இந்த 17 பேரும் மழைக்கு ஒதுங்கிய இடத்திலே இந்த எரி சாம்பலும் வந்து விழுந்து அதனுடைய விளைவாக ஏற்பட்ட சம்பவம்தான் இது.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எவ்வகையில் அத்தகைய எரிசாம்பல் அங்கே வந்து விழுந்தது என்பதைப் பற்றி பத்திரிகைகளிலே வந்த கருத்துக்களையும் எடுத்துக் கூறினார்கள். தொழிலாளர்கள் சார்பாக தரப்பட்ட கருத்துக்களையும் எடுத்துக் கூறினார்கள். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி நான் உண்மையை விளக்குவதுஎன்னுடைய கடமைஎன்று கருதுகிறேன். இந்த விபத்து ஏற்பட்ட பிறகு தொழில் நுட்ப உறுப்பினர் (உற்பத்தித் திறன்) (மின் உற்பத்தி) அவர்கள் இது சம்பந்தமாக எண்ணூர் அனல்



மின் நிலையத்திற்குச் சென்று தீவிரமாக விசாரணை நடத்தினார். அந்த விசாரணையின்பொழுது கிடைத்த தகவல், கொதிகலன், அதாவது பாய்லருக்கு வரவேண்டிய காற்று-ட்ராப்ஃபான் என்று சொல்வார்கள்; அந்தக் கரியைச் சேர்த்து எரிப்பதற்கு காற்று அனுப்புகிற விசிறி—அந்த விசிறிக்கு வரவேண்டிய காபிள் பழுதுபட்டு அந்த விசிறி போதுமான காற்றை உள்ளே அனுப்ப வில்லை. அதனால் எரி உலையில் வாக்குவம் என்று சொல்லக் கூடிய சூனியம் ஏற்பட்டு அது மிகுந்து ஓர் அழுத்தத்தைக் கொதிகலனிலே உருவாக்கி, அது உள்ளே இருந்த எரிவாயு, ப்ளூ காஸ் என்று சொல்வார்கள். அதோடு வெளியே வந்திருக்கிறது. அது வேகமாக வெளியே வந்திருக்கிறது. வெளியே வருவது சாதாரணமாக சூப்பர் ஹீட்டர், வழியாகவும் ப்ரெசிப் பிட்டேட்டர் வழியாகவும்தான் செல்ல வேண்டும். ஆனால், திடீரென்று சூப்பர் ஹீட்டருக்கு அடிப்பக்கத்தில் இருக்கக் கூடிய அந்தப் பைப்பின் வழியாக, கீழே இறங்கி, அந்தப் பைப்பின் கீழே இருக்கக் கூடிய அந்தத் தண்ணீரிலே யாவது அது கரைந்திருக்க வேண்டும். அது கரையாமல் நேராக திடீரென்று வெளியே வந்திருக்கிறது. ஆகையினாலே அது பாய்லர் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்பதை முதலில் நான் தெளிவாக்க விரும்புகிறேன். அது எரி சாம்பலைக் கீழேஇறக்குகின்றஅந்தபைப்பில் பொருத்தப்பட்ட வைப்ரேட்டர் அசைக்கக்கூடிய அந்தத் தன்மை வாய்ந்த அந்த வைப்ரேட்டர்கள் இயங்கவில்லை. ஆகையினாலே தண்ணீர் இருக்கக்கூடிய இடத்திலே போதுமான தண்ணீரும் இல்லை, அந்த இடத்திலேயும் கற்கள் இருக்கின்றன. ஆகவே, அதைப் பராமரிப்பதற்குத் தவறியவர்கள் யார் என்பதைப் பற்றி நிச்சயமாக மின்வாரியம் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், பராமரிப்பு இருந்திருந்தால் மட்டும் இந்த விபத்தை நாம் தவிர்த்திருக்க முடியாது. ஏனென்றால் அது பாய்லரிலே ஏற்பட்டிருக்கக் கூடிய பிரச்சினை.

பாய்லரிலே இந்தகைய உயர் அழுத்தங்கள் திடீரென்று ஏற்படுவதை நமக்குக் காட்டுவதற்காகப் பல்வேறு கருவிகள் பொருத்தப்படுவது இயற்கை. அது செக்கோஸ்லேவியா நாட்டு டிசைனிலே, அதாவது கட்டமைப்பிலே, வாங்கப்பட்ட முதல் இயந்திரம் -60 மெகாவாட் யூனிட். ஆகையினாலே போதுமான நுணுக்கங்களை தெரிவிக்கக்கூடிய கருவிகள் அதிலே பொருத்துவதற்கு வாய்ப்பு இல்லை. இந்த பெட்டர்மென்ட் ஸ்கீம் என்ற வகையிலே ரூ. 42 கோடி அளவிலே நாம் போட்டிருக்கின்றோம். போதுமான கருவிகள் அவ்வப்போது ஏற்படுகின்ற நிலைமைகளைத் தெரிவிக்கின்ற கருவிகளை, அங்கே பொருத்துவதற்கு, அதிலே இனிமேல்தான் வசதிகளை எல்லாம் செய்து வருகிறோம். ஆனால், அதே நேரத்தில் ஒன்றைப் பொதுவாகச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்திலே மட்டுமல்ல, பொதுவாக, நம்முடைய நாட்டிலே குடியிருக்கக்கூடிய நிலைமை, பராமரிப்பு, என்று வருகின்றபொழுது, நம்முடைய தொழில்நுட்ப வல்லுநர்கள் போதுமான அக்கறை காட்டவில்லை என்பதுதான் இதுவரையிலே இருக்கக்கூடிய ஒரு நிலைமை, அதாவது.

'We are very bad maintenance Engineers.' என்று சொல்வார்கள். ஆகையினாலே எப்படி ஒரு விவசாயி காலையிலே எழுந்தால் தன்னுடைய நிலத்தைப் பார்த்துவிட்டு வந்துதான் கஞ்சி குடிக்கிறானோ அதைப்போல், குறிப்பாக, பொது நிறுவனங்களிலே பணியாற்றிக் கொண்டிருக்கின்ற பொறியாளர்களை நான் கேட்டுக்கொள்வது அலுவலகத்திலேயிருந்து கோப்புகளை அனுப்புவது மட்டும் பொறியாளர்கள் வேலை என்று கருதாமல் அவர்கள் தங்கள் கரங்களிலேயும் அழுக்குப்பட வேண்டுமென்ற உணர்வோடு தினந்தோறும் இத்தகைய பிளான்ட் அன்ட் எக்குவிப்மென்ட்ஸ், அதாவது அமைப்புக்களைச் சுற்றிப் பார்த்து அவற்றில் ஏற்படுகின்ற பழுதுகளைப் போக்கிக்கொண்டே வருவார்களானால் இத்தகைய திடீரென்று ஏற்படுகின்ற நிகழ்ச்சிகள் நிச்சயமாகத் தடுக்கப்படும். இதை மின்வாரியத்தைப் பொறுத்தவரையிலும் அந்தப் பொறியாளர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே அந்த எரி சாம்பலைக் கீழே விழ வைக்கின்ற பைப்பிலே ஏற்பட்டிருக்கக்கூடிய அந்த மெயின்டெனன்சை யார் சரிவர செய்யவில்லை என்பதற்கான பொறுப்பையும் மின்வாரியம் யார் அதற்குச் சம்பந்தப்பட்டிருக்கிறார்களோ அவர்கள் மீது சுமத்தும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நான் முன்பே சொன்னதைப்போல இந்த விபத்து அப்படி அவர்கள் அங்கே சென்றிருக்காவிட்டால் நடந்திருக்காது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலன் அவர்கள் பேசுகிறபொழுது யாரும் நடமாட வேண்டாம் என்று அங்கே போர்டு போட்டிருக்கலாம் என்றார்கள்.

(முற்பகல் 10-30.)

போர்டில் போடுவதையெல்லாம் நாம் கடைப்பிடிப்பது இல்லை. சாலைகளில் குறுக்கே செல்லாதீர்கள்; சுரங்கப்பாதை வழியாகச் செல்லுங்கள் என்றால் யார் சுரங்கப்பாதை வழியாகச் செல்கிறார்கள்? ஆகவே அதனால் மட்டும் இதனை தவிர்த்திருக்க முடியுமா என்பது சந்தேகம். ஆனாலும் அத்தகைய யோசனைகளை எங்கெங்கு அமல்படுத்த வேண்டுமோ அதை அமல்படுத்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். அவர்களுக்கு உரிய மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது. அந்த 17 பேர்களில் 9 பெண்கள், 8 ஆண்கள். அதிலே மூன்று பேர்கள் இறந்து விட்டார்கள். ஆறு பேர்கள் நிலைமை மோசமாக இருந்து வருகிறது. அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், நானும் ஸ்டான்லி மருத்துவமனைக்குச் சென்றிருந்தோம். அங்கே டாக்டர்களிடம் உரிய சிகிச்சை அளிக்க வேண்டுமென்று வற்புறுத்தி இருக்கிறோம்.

எண்ணூர் அனல் மின் நிலையத்தை நானும் நேரில் சென்று பார்த்ததில் எந்த வகையில் அந்த விபத்து ஏற்பட்டது என்பதைக் கண்டறிய முடிந்தது. அதிகாரிகளிடத்தில் அதுபற்றி பேசியிருக்கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் தங்கவேலு அவர்கள் சொல்கிறபோது, அந்தக் கட்டிடமே தலைமீது இடிந்து விழுமோ என்ற நிலையில் இருக்கிறதென்று அச்சப்பட்டார்கள். அதெல்லாம் இடிந்து விழாது. அவர்கள் அந்த அச்சத்தை அனாவசியமாக உருவாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். பராமரிப்பிற்காகவும், பாதுகாப்பிற்காகவும் என்னென்ன நடவடிக்கைகளை அரசுத் துறைகள் மேற்கொள்ளவேண்டுமோ அவைகள் கட்டாயமாக மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



இதிலே ஆபத்திற்குள்ளான, அவதிக்குள்ளான பணியாளர்கள் ஒப்பந்த பணியாளர்கள் என்ற காரணத்தால் மின்வாரியம் நேராக இழப்பீடு தருவது என்பது இயலாத காரியம். இருந்தாலும்கூட அதற்கு பொறுப்பிருக்கிறது என்றகாரணத்தால் அந்த ஒப்பந்தக்காரர் மூலமாக என்னென்ன இழப்பீடுகளுக்கு அவர்கள் உரிமை படைத்தவர்களோ அவற்றைப் பெற்றுத்தரும். மாண்புமிகு முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்களிடத்தில் இத்தகைய பிரச்னைகள் இருக்கின்றன என்று சொன்னபோது அவர்கள் தனது நிதியிலிருந்து இறந்தவர்களுக்கு இரண்டாயிரம் ரூபாயும், காயமுற்றவர்களுக்கு 500 ரூபாயும் என்ற வகையில் முதலமைச்சர் நிதியிலிருந்து ஒரு இடைக்காலப் பரிகாரமாக அவர்கள் தந்திருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்க செய்தி. ஆகவே அரசின் சார்பில் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதால் அவையை ஒத்திவைத்துதான் விவாதிக்க வேண்டுமென்று அவசியம் நிச்சயமாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

## 4. அறிவிப்புகள்

### (அ) அண்ணா பல்கலைக் கழக ஆட்சிக்குழு—உறுப்பினர் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அண்ணா பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு (சிண்டிகேட்) ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று 2—4—1985 அன்று பேரவையில் செய்த அறிவிப்பில் கீழ்க்கண்ட மாற்றங்களை அறிவிக்கிறேன். வேட்பு மனுக்களைத் திரும்ப பெறுவதற்கான தேதி 10-4-1985 புதன் கிழமை காலை 11-00 மணி எனவும், வாக்கெடுப்பு தேவைப்படின் 11—4—1985 வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கும் பிற்பகல் 1—00 மணிக்கும் இடையே கோட்டையில் உள்ள சட்ட மன்றக் குழுக்கள் கூடும் அறையில் நடைபெறும் எனவும் நான் அறிவிக்கிறேன். வேட்பு மனுக்களைப் பெறுவதற்காக குறிப்பிட்ட நாள் மற்றும் வேட்பு மனுக்களை ஆய்வு செய்வதற்காக குறிப்பிட்ட தேதிகளில் மாற்றம் எதுவும் இல்லை.

## 5. கவன ஈர்ப்புகள்

(அ) கோவை மாவட்டத்தில் பல ஆலைகள் மூடப்பெற்றுள்ளதால் தொழிலாளர்கள் பாதிக்கப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் மா. சின்னராசு, ஆ. நடராசன், வி. தங்கவேலு, ஜே. ஹேமச்சந்திரன், கு. ரமணி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டத்திலுள்ள ராமகிருஷ்ணா இண்டஸ்ட்ரீஸ், வசந்தா மில்ஸ், ஜனார்த்தனா மில்ஸ், ஸ்ரீஹரி மில்ஸ், திருப்பூர் காட்டன் மில்ஸ், தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ், பத்மா மில்ஸ் ஆகியவை மூடப்பட்டுள்ளதால் அத்தொழிலாளர்கள் வேலை இழந்து துன்பப்படும் நிலை குறித்த" அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை

கோவை மாவட்டத்தில் தற்போது செயல்படாமல் உள்ள சட்டமன்ற அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள தொழில் நிறுவனங்களின் விவர அறிக்கை வருமாறு:—

(1) இராமகிருஷ்ணா இண்டஸ்ட்ரீஸ்: இந்நிறுவனத்தில் 250 நிரந்தரத் தொழிலாளர்கள் மற்றும் 95 தற்காலிக தொழிலாளர்கள் பணியாற்றி வந்தனர். பங்குதாரர்களிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் இந்நிறுவனத்தை கலைத்துவிட உயர் நீதிமன்றத் தீர்ப்பு பெற்று இருந்தனர். இதன் பேரில் தொழிலாளர்கள் உச்ச நீதிமன்றத்திற்கு ரிட் மனு மூலம் முறையீடு செய்ததில் நிறுவன கலைப்பில் தொழிலாளர்களையும் ஒரு பாகமாக கருதி அவர்களது கருத்தையும் கேட்க வேண்டுமென்றும் தீர்ப்பு வழங்கியது. இந்நிறுவனத்தை 27-12-1981 முதல் கலைப்பு அலுவலர் ஏற்று நடத்தி வந்தார். தொழில் மந்தத்தாலும் நிதி சரியில்லாததையாலும் அனைத்து தொழிலாளர்களுக்கும் லேஆப் விட்டு தொழிலாளர்களுக்கு ஊதியம் கூட வழங்க இயலாத நிலையில் தொழிற்சாலை கடந்த 3–9–1984 முதல் மூடப்பட்டது.

(2) பத்மா மில்ஸ், காளப்பட்டி: 4000 கதிர்களைக் கொண்ட இந்நிறுவனம் 110 தொழிலாளர்களுடன் இயங்கி வந்தது. நிதி நெருக்கடி காரணமாக 25–2–1981 முதல் இயங்கவில்லை. பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு தலா ரூ. 200/— வீதம் முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து அளிக்க 14–9–1984 அன்று அரசு ஆணையிட்டு நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது.



(3) தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ், ஆனைப்புதூர், கோவை.— 4000 கதிர்களையும் சுமார் 250 தொழிலாளிகளையும் கொண்ட இவ்வாலை நிதி நெருக்கடியால் 8–6–81 முதல் செயல்படவில்லை. பாதிக்கப்பட்ட தொழிலாளிகளுக்கு தலா ரூ. 200/— வீதம் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 4-8-84 அன்று அரசாணை மூலம் நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது.

(4) கோவை ஜனார்த்தனா மில்ஸ் லிமிடெட்.—25,936 கதிர்களையும் சுமார் 700 தொழிலாளிகளையும் கொண்ட இவ்வாலை மெதுவாக வேலை செய்தல், வன்முறை செயல்கள் ஆகியவற்றில் ஈடுபட்டதாகக் கூறி 7–8–83 முதல் கதவடைப்பு செய்தது. இவ்வாலை நலிவுற்ற நிலை அடைந்து பாதிக்கப்பட்ட தொழிலாளிகளுக்கு தலா ரூ. 200/- வீதம் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 5-5–84 நாளிட்ட அரசு ஆணை மூலம் நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது.

நிர்வாகம் இந்த ஆலையை தொடர்ந்து நடத்த வாய்ப்பு உள்ளது என்று முறையிட்டதின் பேரில் தொழிலாளர் துறை இணை ஆணையர் (நிர்வாகம்) சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சு வார்த்தை மேற்கொண்டுள்ளார்.

(4) வசந்தா மில்ஸ் லிமிடெட், கோவை.— 47,521 கதிர்களையும் 366 தறிகளையும் சுமார் 1,765 தொழிலாளிகளையும் கொண்ட இவ்வாலை பஞ்சு இல்லாமை நிதிப் பற்றாக்குறை தொழிலாளிகளின் நிதானமாக வேலை செய்யும் போக்கு மின்சார வெட்டு, பஞ்சு விலையேற்றம், நூலுக்கு சரியான விலை இல்லாதது சிக்கன சீரமைப்பு பற்றி ஒப்பந்தம் செய்ய சங்கங்கள் ஒத்துழையாமை காரணங்கள் காட்டி 12-11-84 முதல் செயல்படவில்லை. ஆலையில் தொடர்ந்து ஏற்படும் நஷ்டத்தை தவிர்த்து உற்பத்தியை பெருக்க முடியாத காரணத்தினால், வங்கிகள் மேலும் நிதி உதவி அளிக்க முன்வரவில்லை என்றும், இந்த ஆலையை ஒரு நலிவுற்ற ஆலையாக அறிவித்து உத்தரவிட வேண்டுமென்றும் நிர்வாகம் கோரியது. தொழிற்சங்கங்களின் சார்பில், நிர்வாகத்தின் கருத்துக்களை ஏற்பதற்கில்லையென்றும், தொழிலாளர்கள் வேலை பார்த்த காலத்திற்கு உண்டான சம்பளத்தையும், போனஸ் தொகையையும், உடனடியாக பட்டுவாடா செய்ய வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது, கோவை தொழிலாளர் துறை துணை ஆணையர் இப்பொருளில் பேச்சு வார்த்தைகள் மேற்கொண்டுள்ளார். இதன் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

(5) ஸ்ரீஹரி மில்ஸ் லிமிடெட், ஒண்டிபுதூர், கோவை.— 27,216 கதிர்களையும் சுமார் 657 தொழிலாளிகளையும் கொண்ட இந்நிறுவனம் ஜனவரி, பிப்ரவரி, மார்ச் 1984 ஆகிய மூன்று மாதங்களுக்கு தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்கப்படவில்லை என்ற காரணத்திற்காக 8–4–84 முதல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வந்தனர். இப்பிரச்சினை குறித்து கோவை தொழிலாளர் துறை துணை ஆணையர் மற்றும் கோவை மாவட்ட ஆட்சியாளர் முன்பு பேச்சு வார்த்தைகள்

நடைபெற்றன. அப்பொழுது நிர்வாகத்தின் சார்பில் இண்டஸ்ட்ரியல் ரிகன்ஸ்டிரக்ஷன் கார்ப்பரேஷனிலிருந்து ரூ. 1.2 கோடி முன்பணம் கேட்கப்பட்டுள்ளது என்றும், அந்தப் பணம் இல்லாமல் ஆலையை நடத்த இயலாது என்றும் தெரிவிக்கப்பட்டது. இதற்கிடையில் தொழிலாளர்கள் 17—8-84 முதல் வேலை நிறுத்தத்தை விலக்கிக்கொண்டனர். ஆனால் நிர்வாகம் அவர்களுக்கு வேலை அளிக்க இயலாத காரணத்தால், ஆலை இயங்கவில்லை. மேலும் இந்த ஆலையை 29-9-84 நாளைய 1185 எண்ணிட்ட தொழிற் துறை அரசு ஆணையின் மூலம் 1—10—84 லிருந்து ஒரு வருடத்திற்கு தமிழ்நாடு நிவாரண சட்டத்தின் கீழ் ஒரு நிவாரண ஆலையாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆலையை மீண்டும் இயக்குவது பற்றிய பிரச்சினையில் 4-2—85 அன்று கோவை மாவட்ட ஆட்சியாளர் நிர்வாகப் பிரதிநிதியிடம் பேசியபோது பம்பாயிலுள்ள நிதி நிறுவனத்திலிருந்து பணம் பெற முயற்சி செய்வதாக அவர் கூறினார். மேற்கொண்டு நிலைமை கண்காணிக்கப்பட்டு வருகிறது. பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 200 அளிக்க 23-3-85 அன்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

(6) திருப்பூர் காட்டன் ஸ்பின்னிங் அண்ட் வீவிங் மில்ஸ் லிமிடெட்.—திருப்பூர். 15,386 கதிர்களையும் சுமார் 500 தொழிலாளர்களையும் உடைய இந்நிறுவனம் 21—10—84 முதல் நிதி நெருக்கடியின் காரணமாக நிர்வாகம் தொழிலாளர்களுக்கு வேலை அளிக்கவில்லை. அவர்களுக்கு லேஆப் கொடுக்கப்பட்டு வருகிறது. இப்பிரச்சினையில் கோவை தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்பு பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றது. 3-8—84 நாளிட்ட தொழில் துறை அரசு ஆணையில் இந்த ஆலை ஒரு நிவாரண நிறுவனமாக 3—8—85 வரை அறிவிக்கப்பட்டுள்ளது. கோவை தொழிலாளர் துறை துணை ஆணையர் இருதரப்பினரிடமும் பேச்சு வார்த்தை மேற்கொண்டுள்ளார்.

2. பொதுவாக நிதி நெருக்கடி காரணமாக இந்த பஞ்சு ஆலைகள் இயங்காமல் உள்ளன. ஆலையை மீண்டும் திறந்து இயக்குவதற்கு இந்த நிர்வாகங்கள் கோரும் சில முக்கியமான சலுகைகள் பின்வருமாறு:—

(1) போதிய நிதி உதவிக்கு வங்கிகள் மூலமோ அல்லது வேறு நிதி உதவி அளிக்கும் நிறுவனங்கள் மூலமோ அரசு ஏற்பாடுகள் செய்தல்.

(2) மின்கட்டணத் தொகை, பிராவிடண்ட் பண்ட், இ.எஸ்.ஐ., விற்பனை வரி, கூட்டுறவுப் பண்டக சாலைக்குச் சேர வேண்டிய தொகை முதலியவற்றில் தவணை முறையில் செலுத்துதல்.

(3) ஆலையில் சிக்கன சீரமைப்பு அடிப்படையில் புதிய வேலைப்பளு புகுத்தப்பட்டு அதன் அடிப்படையில் உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டும். இதற்கு தொழிலாளர்கள் ஒத்துழைக்க வேண்டும்,



(4) தொழிலாளர்களுக்குத் தற்காலிக சம்பள வெட்டு, சட்டப்படி சேரவேண்டிய தொகைகள் (ஈட்டிய சம்பளப் பாக்கி உட்பட) தவணை முறையில் தொழிலாளர்களுக்கு வழங்குதல்.

(5) ஆலைகளைத் தமிழ்நாடு நிவாரணச் சட்டங்களின் கீழ் ஓர் நிவாரண நிறுவனமாக அறிவித்தல்.

(6) நிதிநிலைமை பாதிக்கக்கூடிய கோரிக்கைகளை தொழிலாளர்கள் ஓர் குறிப்பிட்ட காலத்திற்கு (சுமார் 5 வருடம்) எழுப்பக் கூடாது.

(7) சுயமாக வேலையிலிருந்து ஓய்வு பெறும் திட்டத்தின் மூலம் தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் குறைத்தல்.

(8) ஆலை இயங்காத காலத்திற்கு ஊதியம் இல்லை.

தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டவரை சிக்கன சீரமைப்பு புகுத்துதல், சுயமான ஓய்வு பெறும் திட்டம், கோரிக்கைகள் எழுப்புவதற்குத் தடை மற்றும் இதர பண சம்பந்தப்பட்ட பிரச்சினை ஆகியவைகளில் இரு தரப்பினருடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி அதன மூலமே தீர்வு காண முடியும். தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் ஆலைகளை சீராக இயக்குவதற்கு மேற்கூறப்பட்ட நிபந்தனைகளை ஓரளவாவது ஏற்றுக்கொள்ள வேண்டி இருக்கும்.

இவ்வரசை பொறுத்தமட்டில் ஏற்கனவே 7-12-83-ல் பத்மா மில்ஸ், தமிழ்நாடு ஸ்பின்னிங் மில், ஜனார்தனா மில்ஸ் ஆகியவற்றை தேசியமயமாக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சரும் மைய அரசைக் கோரியிருந்தார். மைய அரசும் பருத்தித் துணி தொழிலுக்கான ஒரு குழுவினை அமைத்துள்ளது. மையஅரசின் தொழிலாளர் துறைச் செயலரும் 11-3-85ல் நலிந்த ஆலைகளை பொறுத்தமட்டில் மெற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் பற்றி விவாதிக்க ஒரு கூட்டம் கூட்டியிருந்தார், மைய அரசும் மூடப்பட்ட ஆலைகளில் இயங்கக் கூடியவைகளைத் திறப்பதற்கான வழி வகைகளை ஆராய்ந்து வருகிறது.

**திரு. மா. சின்னராசு:** தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் வைத்துள்ள அறிக்கையில் மூன்று மில்களை பத்மா மில்ஸ், தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ் மற்றும் ஜனார்த்தனா மில்ஸ் ஆகியவற்றை நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் மூலமாக எடுத்து நடத்த வேண்டுமென்று 7.12-1983-ல் தெரிவித்திருப்பதாக தெரிவித்து இருக்கிறார்கள்.

ஆனால் 11-3-85-ல் தான் மைய அரசுத் தொழிலாளர் நலத்துறைச் செயலாளர் இங்கே வந்து கூட்டத்தை நடத்தியிருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த காலதாமதத்தை தவிர்த்து, இந்த மூன்று மில்களை மட்டுமல்லாமல் எஞ்சியிருக்கிறஇரண்டு மில்களையும் கூட தேசியப் பஞ்சாலை நிறுவனமே எடுத்து நடத்த வாய்ப்பும் வசதியும் இருக்கிறது.

ஏற்கெனவே நடத்திக்கொண்டிருக்கிற மில்களின் வாயிலாக கணிசமான இலாபம் இருக்கிறது. ஆகவே இந்த மில்களை தேசியப் பஞ்சாலைக் கழகத்தின் மூலம் எடுத்த நடத்த வேண்டுமென்று மாநில அரசு வலியுறுத்த வேண்டும்.

அதைப்போன்று வசந்தா மில்லைப் பொறுத்தவரையில் தொழிலாளர் நல ஆணையர் மூலம் ஒப்பந்தம் ஏற்படுத்தும் சூழ்நிலை இருக்கிறது என்று நான் அறிகிறேன். அந்த ஒப்பந்தத்தையும் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்

அது மட்டுமல்ல. நலிவுற்ற நிறுவனங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிற திருப்பூர் காட்டன் மில்ஸ், ஸ்ரீஹரி மில்ஸ் ஆகியவற்றையும் தமிழ்நாடு டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் மூலம் எடுத்து நடத்த அரசு ஆவண செய்ய முன்வருமா? ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நிவாரண நிதியிலிருந்து தொழிலாளர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டதை வரவேற்கிறேன் மாண்புமிகு அமைச்சரவர்கள் நான் எழுப்பியிருக்கிற வினாக்களுக்கு உரிய விளக்கம் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, கோவையில் மூடப்பட்டிருக்கிற 6 மில்களில் ஜனார்த்தனா மில்ஸ் வசந்தா மில்ஸ் ஆகிய இரண்டு ஆலைகளைப் பொறுத்தவரையில் வருகிற 9–ந்தேதியன்று ஜாயின்ட் கமிஷனர் ஆப் லேபர், சென்னை அவர்கள் முன்னால் பேச்சுவார்த்தை நடைபெற இருக்கிறது. அந்தப் பேச்சுவார்த்தையின்போது ஒரு நல்ல முடிவு ஏற்படும் என்று அரசு எதிர்பார்க்கிறது.

திருப்பூர் காட்டன் மில்ஸ், ஸ்ரீஹரி மில்ஸ் ஆகிய இரண்டு மூடப்பட்ட ஆலைகள் சம்பந்தமாக இன்று காலை அதாவது 4-4-85 அன்று காலை கோவையில் துணைத் தொழிலாளர் நல ஆணையாளர் (டெபுடி கமிஷனர் ஆஃப் லேபர்) முன்னிலையில் பேச்சு வார்த்தை நடந்துக்கொண்டிருக்கிறது. அநேகமாக அந்தப் பேச்சு வார்த்தை மன நிறைவோடு முடிவுறும் என்று எதிர்ப்பார்க்கிறோம்.

பத்மா மில்ஸ், தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ் ஆகிய இரண்டு மூடப்பட்ட ஆலைகளைத் திறந்திட இதுவரை அரசு முயற்சி எடுக்கவில்லை. ஏறத்தாழ 400 தொழிலாளர்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நிர்வாகம் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லைஎன்றாலும்அரசு மூடப்பட்ட ஆலைகள் சம்பந்தமாக நிவாரண முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்தப் பேச்சுவார்த்தைகளில் சுமூகமான முடிவை நிர்வாகம் அளிக்கவில்லை என்றால் ஏற்கெனவே 1983 ஆம் ஆண்டில் கோவையில் இலட்சுமி மில்ஸ், ஜோதி மில்ஸ் ஆகிய இரண்டு ஆலைகளையும் எந்த அடிப்படையில் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதோ அதே அடிப்படையில் மூடப்பட்ட ஆலைகளைத்திறக்க சாத்தியக்கூறு உண்டா என்பதை அரசு பரிவுணர்வோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. ஆ. நடராசன்: தலைவரவர்களே, தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் ஒருசில விளக்கங்களைத் தந்தார்கள். இந்த ஆலைகளைப் பொறுத்தவரையில் கடந்த 4 ஆண்டுகாலமாக மூடப்பட்டிருக்கின்றன. சில ஆலைகளில் 200 ரூபாய் வீதம் உதவித் தொகை தந்திருந்தாலும் 4 ஆண்டு காலம் அந்தத். தொழிலாளர்கள் துன்பத்திலும் துயரத்திலும் இருக்கிறார்கள்.அவர்களுக்கு இந்த 200 ரூபாய் உதவித் தொகை என்பது மிக மிகக் குறைவாக இருக்கிறது. அடுத்து வேலைப் பளுவைக் கூட்டுவதற்கும், சம்பளத்தை குறைப்பதற்கும் 5 ஆண்டு காலத்திற்கு நிதி சம்பந்தப்பட்ட கோக்கைகளை எழுப்பக்கூடாது என்பதற்கும், மின் கட்டணம், பிராவிடன்ட் பன்ட், இ.எஸ்.ஐ. விற்பனை வரி போன்றவற்றைத் தவணை முறையில் கட்டுவதற்கும் ஆலைகள் திட்டமிட்டு இப்படிபட்ட ஆலைகளை மூடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் இந்த ஆலைகளைத் திறப்பதற்குத் துரிதமான நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கே. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, ஏற்கெனவே நான் எடுத்துச் சொன்னதைப்போல, இன்றும் வருகிற 9-ந்தேதியன்றும் பேச்சுவார்த்தை நடைபெற இருக்கிறது. அதன் பிறகு உரிய நடவடிக்கையை அரசு எடுக்கும்.

(முற்பகல் 10–40)

திரு. வி. தங்கவேலு: தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில் இராமகிருஷ்ணா இன்டஸ்ட்ரிஸ், வசந்தா மில்ஸ், ஜனார்த்தனா மில்ஸ், ஸ்ரீஹரி மில்ஸ், திருப்பூர் காட்டன் மில்ஸ், தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ், பத்மா மில்ஸ் ஆகிய இந்த ஆறு ஆலைகளும் எப்போது பார்த்தாலும் தொழில் செய்ய முடியவில்லை என்று சொல்லி, பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டு,ஆலைகளை மூடுகின்ற வகையிலே பணியாற்றுகிறார்கள் நிர்வாகிகள். அப்படி பார்க்கிறபோதுகூட இந்த ஆலையள் ஊழியர்களை நம்பி, சொந்தக்காரர்களை நம்பி சரியாக நடக்கவில்லை. ஆனால் இப்படிப்பட்ட ஆலைகளுக்கு, தேசிகமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து பல கோடிக்கணக்கான ரூபாய்கள் நீண்டகாலக் கடனாகத் தரப்பட்டிருக்கிறது. அப்படித் தந்தும், அந்த ஆலைகள் மூடப்படுகிறது என்றால், தொழிலாளர்கள் நலனுக்காக அந்த ஆலைகள் சரியாக நடத்தப்படவில்லை என்பது தெரியவருகிறது. இனியாவது இப்படி ஆலைகள் மூடப்படுகிற போது அதிலே தொழிலாளர்கள் நலனுக்காக தொழிலாளர்களை வைத்து நடத்தக்கூடிய அளவிற்கு கூட்டுறவுத் தொழிலாளர், சங்கத்தின் சார்பாக இந்த ஆலைகளை அவர்களுக்குத் தந்துந்த 6 ஆலைகளையும் எப்போதும் மூடாதவாறு ஏற்று நடத்துவதற்கு ஆவன செய்வார்களா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் டெல்லியில் நடந்த பட்ஜெட் தொடர்க் கூட்டத்தில் டெல்லியில் உள்ள நிதியமைச்சர் அவர்கள், அது போன்ற சிக்மில்களுக்கு பொறுப்பாக இருக்கின்ற

மேனேஜ்மெண்ட்கள் மீது மிகுந்த கடுமையாக இருப்பதற்காக ஒரு சட்டம் கொண்டு வர இருப்பதாகத் தெரிவித்து இருக்கிறார்கள். அதற்குப் பிறகு இப்படிப்பட்ட நிலைமைகள் உருவாகாது என்று கருதுகிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே விவர அறிக்கையில் 5-வது பக்கத்திலும், 6-வது பக்கத்திலும் கொடுக்கப்பட்டு இருக்கக்கூடிய யோசனைகள், முதலாளிகள் இன்று என்ன நிபந்தனைகளைத் தொழிலாளர்கள் தலையில் கட்டுவதற்கு முயற்சிக்கிறார்களோ, அந்த நிபந்தனைகள் தான் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. இது தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் பெரிய சிரமத்தை ஏற்படுத்துவதற்கு காரணமாக இருக்கிறது என்ற காரணத்தால், அந்த நிபந்தனைகளை அரசு எற்றுக் கொள்ளாமல், விவர அறிக்கையின் முதல் பக்கத்திலே குறிப்பிடப்பட்டு இருப்பதைப் போல உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் இப்படி மூடுவதற்கு முன்னாலே தொழிலாளர்களைக் கலந்து, தொழிலாளர்களுக்கு என்னென்ன முறையில் பாதுகாப்பு, நிவாரணம் அளிக்க வேண்டுமோ, அந்த முறையில் ஏற்பாடுகளை செய்து விட்ட பிறகு தான் அந்த ஆலைகளை மூடுவதற்கான விதிகளை அல்லது சட்டத்தை இயற்றுவதற்கு அரசு தயாராக இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, மைய அரசு இதைப்பற்றி மனதில் அக்கறை கொண்டு, அண்மையில் பருத்தி, துணித் தொழில்களுக்கு ஒரு சிறப்புக் குழுவை அமைத்து இருக்கிறது. அது மட்டுமில்லாமல், கடந்த மார்ச் 11–ஆம் தேதி, மைய அரசின் தொழிலாளர் துறையின் செயலாளர், அனைத்து இந்தியாவில் உள்ள மாநிலங்களின் தொழிலாளர் துறைச் செயலாளர்களின் கூட்டத்தை ஏற்பாடு செய்து, அதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அந்தக் கருத்தை மையமாக வைத்து விவாதித்து இருக்கிறார்கள். அடுத்த 2 வாரங்களுக்குள்ளாக மீண்டும் அவர்கள் கூடி ஆராய இருக்கிறார்கள். அப்போது இந்தப் பிரச்சனை மைய அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படும்.

(ஆ) கோவை மாநகராட்சி விதித்துள்ள கூடுதல் தண்ணீர் வரி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு: அறிவிப்புக் கொடுத்த உறுப்பினர் திரு. மு. இராமநாதன் இருக்கையில் இல்லை. திரு. கு. ரமணி அவர்கள் அதனை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ''கோவை மாநகராட்சியில் தற்போது விதித்துள்ள கூடுதல் தண்ணீர் வரியானது பொது மக்கள் தாங்க முடியாத அளவிற்கு மீறிய வரி விதிப்பாக இருக்கின்ற நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத்மதுறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே,

கோயம்புத்தூர் மாநகராட்சியில் சிறுவாணி குடிநீர்த் திட்டம் ரூபாய் 21.65 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு அரசு ரூ. 16.65 கோடியும், ஆயுள் காப்பீட்டுக் கழகம் ரூ. 5.00 கோடியும் கடனாக வழங்கி உள்ளன. இககடன் 22 ஆண்டுத் தவணைகளில் 8½% வட்டியுடன் செலுத்தப்படவேண்டும். அதற்கு கோவை மாநகராட்சி வழி வகை செய்ய வேண்டியுள்ளது. தண்ணீர்க் கட்டண உயர்வு 1-11-78-லிருந்து உயர்த்த நகரமன்றம் தீர்மானித்தது. எனினும், இது தள்ளி வைக்கப்பட்டு இறுதியில் 1-4-83 முதல் அமுல்படுத்தப்படுகிறது. இதன் விவரம் கீழ் வருமாறு:—

| வ.எண் | இனம் | முன்பிருந்த விகிதம். | உயர்த்தப்பட்ட விகிதம். |
|---|---|---|---|
| 1. | வீட்டு இணைப்புகளுக்குத் தண்ணீர்க் கட்டணம் (domestic) | 4500 லிட்டருக்கு ரூ. 1.60 | 4500 லிட்டருக்கு ரூ. 5/- (குறைந்த பட்சம் ரூ. 6/-) |
| 2. | வீட்டு இணைப்பு அல்லாத இனங்களுக்கு (Non-Domestic) | 4500 லிட்டருக்கு ரூ. 3.00 | 4500 லிட்டருக்கு ரூ. 10/– (குறைந்த பட்சம் ரூ. 20/-) |

2. கோயம்புத்தூர் நகராட்சி மாநகராட்சியாக மாறுவதற்கு முன்பு சொத்து வரி ஆண்டுக்கு 24% ஆக இருந்தது. இதில் தண்ணீர் கட்டணம் 8¾% அடங்கியிருந்தது. மாநகராட்சிச் சட்டத்தில் குறைந்த பட்சம் சொத்து வரி 36% ஆகும். இதில் தண்ணீர் வரி 13%. இவ்வரி 1–10–1983 முதல் அமலுக்கு வந்து உள்ளது. சிறுவாணித் திட்டத்தினால் விளையும் நன்மையையும் அதனால் மாநகராட்சிக்கு ஏற்பட்டுள்ள செலவையும் பொறுப்பையும் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்க்கும் போது தண்ணீர் விகிதமும் (Rate) கட்டணமும் அளவோடுதான் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து 1985-86 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மீதான விவாதம்..

திரு. ப. பொன்னுரங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கம் பெற கேள்வி கேட்க அனுமதிக்க வேண்டும். நமது ரூல்ஸ்ஸே......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் வேண்டாம். ரூலை நானே படிக்கிறேன். Provided that if the Member who has given notice is unavoidably. absent, any other mdmber, with the permission of the Speaker may call the attention of the Minister on his behalf. என்று இருக்கிறது. (குறுக்கீடு)

நாம் இதுவரையில் இந்த ரூலை பாலோ பண்ணிக் கொண்டு வந்தோம். இப்பொழுது உங்களை கேள்வி கேட்க அனுமதித்தால், இனிமேலே உறுப்பினர்கள் நோட்டீஸ் கொடுத்து விட்டுப் போய் விடுவார்கள், வேறு ஒருவரை வைத்துக் கேள்வி கேட்டுக் கொள்ளலாம் என்ற நிலை வந்து விடும்.... (கூச்சல், குழப்பம்)

திரு. கு. ரமணி; நீங்கள் கேள்வி கேட்க அனுமதிக்கலாம். உங்களுடைய டிஸ்கிரிஷன் பவர் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது ஒரு பொதுப் பிரச்னை என்ற வகையில் தான், நோட்டீஸ் கொடுத்த் மெம்பர் இல்லையென்றாலும் உங்களை எழுப்ப அனுமதித்தேன். அமைச்சர் அறிக்கையைத் படித்தார். அத்துடன் அப்படியே விட்டுவிட்டு, வேறு ஒன்றிற்குப் போவதுதான் இதுவரை நாம் கடை பிடித்து வந்த மரபு. அந்த மரபை பின்பற்றாமல் இப்போது நாம் முறையை மாற்றி விட்டால், நோட்டீஸ் கொடுத்து விட்டால் போதும், யார் வேண்டுமானாலும் கேள்வி கேட்டுக் கொல்ளலாம் என்று இங்கேயும் பிராக்சி வந்து விடும். இங்கே பிராக்சி வேண்டாம். (குறுக்கீடு) மரபு இருக்கிறது......

திரு. ப. பொன்னுரங்கம்: மரபு இருக்கட்டும். ரூல்ஸ் இருக்கிறதே. மரபைத் தவறாக இதுவரையில் பின்பற்றி வந்திருந்தால், தொடர்ந்தும் அதையே பின்பற்ற வேண்டுமா? ரூல்ஸிலே கொடுக்கலாம் என்று இருக்சிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; ஒரு மரபை 40 ஆண்டுகளாகப் பின்பற்றுகிறோம். ஒரு நல்ல காரணத்திற்காக ஒரு நல்ல முன்மாதிரிக்காகத்தான் நான் இப்போது அனுமதிக்க மறுக்கிறேன். நாம் பேசிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் உங்களைக் கேள்வி கேட்க விட்டிருக்கலாம. ஆனால் இதே முறையைப் பின்பற்றினால் எதிர்காலத்திலும், நோட்டீஸ் கொடுத்தவர் வராவிட்டால், வேறு யாரையாவது வைத்து இரண்டு கேள்விகள் கேட்டுக் கொள்ளலாம் என்று வந்து விடும். நோட்டீஸ் கொடுத்தவர் கண்டிப்பாக வரவேண்டும் என்று தான் இந்த மரபு பின்பற்றப்படுகிறது....(குறுக்கீடு)



திரு. ப. பொன்னுரங்கம் : ரூல்ஸை நான் படிக்கிறேன்....

திரு. கு ரமணி : உங்களுக்கு டிஸ்கிரீஷன் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான், நோட்டீஸ் கொடுத்தவர் இருக்கையில் இல்லை என்று சொல்லிவிட்டு, வேறு யாரையும் அழைக்காமலேயே இதைத் தள்ளியிருக்கலாம். அதுவும் என்னுடைய டிஸ்கிரிஷனில்தானே இருக்கிறது......(குறுக்கீடு) கோயம்புத்தூர் நகராட்சியைப் பற்றியது ஆயிற்றே என்றுதான் திரு. ரமணியைக் கொண்டு வர அனுமதித்தேன்......(குறுக்கீடு) அப்படி இல்லாமல் நானே பார்த்துவிட்டு, உறுப்பினர் இருக்கையில் இல்லை என்று சொல்லி ஆட்டோமெடிக்காக விட்டிருக்கலாம்.

திரு. ப. பொன்னுரங்கம் : அது எப்படி விட முடியும்? ரூல்ஸ் இருக்கிறதே. நோட்டீஸ் கொடுத்த மெம்பர் இல்லை என்றால், தள்ளிவிடலாம் என்று இருக்கிறதா என்ன ? நீங்கள் ரூல்ஸை இதுவரையில் தப்பாகப் பின்பற்றியிருக்கிறீர்கள். தொடர்ந்தும் அதையே பின்பற்ற வேண்டுமா ? நான் படிக்கிறேன் ரூல்ஸை......

(முற்பகல் 10-50)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னிடம் வாதம வேண்டாம். இது நான் கொடுத்த தீர்ப்பு. (குறுக்கீடு) அதனை பிராக்சியாக்க வேண்டாம். சில முறைகளை நாம் பின்பற்றினாலும், சில நேரம் சில முறைகள் ரூலை ஓவர்டேக் பண்ணித்தான் போகிறது. இதற்கு அனுமதித்தால், இது ஒன்றுக்கு மட்டும் கொடுத்துவிட்டு அதற்கு மேலே இது பிரிசிடெண்ட்டாக கிடையாது. இனிமேல் உறுப்பினர் இடத்தில் இல்லையென்றால், இது போய்விடும். இப்போது நான் அலௌவ் பண்ணிவிட்டால், இதுதான் முதலும் கடைசியுமாக இருக்க வேண்டும். இல்லையென்றால், எல்லோருமே கவன ஈர்ப்பு எழுதிக்கொடுத்துவிட்டு ஊருக்குப போய்விடுவார்கள். நான் ஒரு மரபைக் காப்பாற்ற வேண்டும் என்று நினைக்கிறேன். அதற்கு எல்லோரும் ஒத்துழைத்தால் நல்லது. அவை மரபுக்காக நான் சொன்னேன். தவறான மரபு என்று எப்படி சொல்வது ?

திரு. ப. பொன்னுரங்கம் : ரூலுக்கு அகேன்ஸ்ட்டாக இருந்தால் தவறான மரபுதானே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சில நேரம் சின்ன கோர்ட்டிலே கொடுக்கும் தீர்ப்புக்குக் கூட எதிர்ப்பு இல்லை. இங்கு எதிர்ப்பு ஜாஸ்தியாக இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவருகிறவர்கள் தான் அமைச்சருடைய கவனத்தை ஈர்க்க வேண்டும் என்பது விதி. கவன ஈர்ப்பு கொண்டுவருகிறவர்கள் அவையிலே இல்லை என்றால் மாண்புமிகு தலைவர் அவர்கள் விரும்பினால், அவருடைய விருப்பப்படி வேறு ஒருவரை அந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைப் படிக்க விட்டுவிட்டு பதில் சொல்ல விடலாம். இது மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு இருக்கின்ற உரிமை. மாண்புமிகு உறுப்பினர் கவன ஈர்ப்பு கொண்டு வந்தபோது, கவனத்தை ஈர்க்காத நிலை இருக்கும்போது அமைச்சர் அவர்களை நீங்கள் பதில் சொல்ல விட்டுவிட்டதன் காரணமாக இன்று மட்டும் அந்தத் தொகுதியோடு தொடர்புடைய ஒருவரைத் தாங்கள் துணைக் கேள்வி கேட்பதற்கு அனுமதிக்கலாம். ஏனென்றால் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற அளவுக்கு அனுமதித்தாகிவிட்டது. முடிந்தாகி விட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே கூட Provided further that the Speaker suo motu may direct that the statements on the matter may be made if the importance of the subject so warrants. என்று இருக்கிறது. நானே கூடச் செய்திருக்கலாம். நான் ஜனநாயகத்தை கொஞ்சம் அதிகப்படுத்தினேன். சிலது என் மனத்திற்குத்தான் தெரியும். அதைச் செய்ய விடமாட்டேன் ன்கிறீர்கள்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, நீங்கள் மற்ற உறுப்பினரை உங்களுடைய டிஸ்கிரிஷன். அது பிரகாரம் கூப்பிட்டது நல்ல அம்சம். காரணம் இந்தப் பிரச்சினை. அப்படிப் பட்ட முக்கியமான பிரச்சினை. நான் எழுந்து அவருடைய அட்டென்ஷனை ஈர்த்தேன். அவர் ஸ்டேட்மெண்ட் வைத்தார். ஒரு கேள்வி......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு கேள்வியை இன்றைக்கு அனுமதிக்கிறேன். பியூச்சரில் கிடையாது. இது என்னுடைய தீர்ப்பு.

திரு. இரா. தாமரைக்கனி : எல்லோரையும் நீங்கள் அனுமதிக்க வேண்டும். எதிர்க் கட்சிக்கு ஒரு நியாயம், எங்களுக்கு ஒரு நியாயமா ?

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்த விஷயம் மிக முக்கியமான பிரச்சனை. கோவை மாநகரத்தினுடைய 7, 8 இலட்சம் மக்கள் சம்பந்தப்பட்ட மிக முக்கியமான பிரச்சனை. எனவே தான் இதுபற்றி கேட்டேனே தவிர முறையை மீற வேண்டும் என்று அல்ல. நீங்கள் அனுமதித்து விட்டீர்கள், வரவேற்கிறேன்.

அமைச்சர் அவர்களிடம் நான் கேட்கும்போது சிறுவாணி நீருக்கு இவ்வளவு செலவாச்சு என்றுசொல்லுகிறார். மாநகராட்சி என்று ஆன பிறகு, அதனால் ஏற்படுத்தப்பட்டிருக்கும்படியான வரி விகித உயர்வு, அதுஅல்லாமல் சிறுவாணி நீர் கிடைத்ததால்



இருக்கும்படியான செலவு முழுவதையும் ஜனங்களிடமிருந்து தண்ணீருக்கு விலையாக வாங்குவது சாத்தியம் இல்லை. இன்று அவர்களுக்குக் கிடைக்கும்படியான ப்ரீ அலவன்ஸ் தண்ணீர் மிகக் குறைவு. 270 லிட்டர் தான் பிரி அலவன்ஸ் ஒரு நாளைக்குக் கிடைக்கிறது. இப்படிக் குறைந்த அளவுக்குக் கொடுத்தும் 2, 3, 5, 10 மடங்கு என்று வரியை — அது மாநகராட்சியாகிவிட்டது என்ற காரணத்திற்காக — உயர்த்தி இருப்பது ஒரு அநீதியான உயர்வு என்று மக்கள் மத்தியிலே கருத்து இருக்கிறது. ஆகவே தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் கவுன்சில் வருகிற வரைக்கும் அதை உயர்த்தாமல் முன்பு இருந்தமாதிரியே வைப்பதற்கு அரசு முன்வரவேண்டும். ஏற்கெனவே ஒரு முறை இப்படி உயர்த்தியபோது அமைசசர் அவர்கள் சொல்லியதை ஏற்றுக்கொண்டு உத்தரவிட்டிருக் கிறார்கள். அதே முறையிலே இதற்குச் செய்யவேண்டும். இப்போது ஹைகோர்டிலே கேஸ் போடப்பட்டு நிறுத்தப் பட்டிருக்கிறது. நான் குறிப்பிட்ட மாதிரி அமைச்சர் அவர்கள் அதை உயர்த்தாமல் இருக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதற்குத் தேர்ந்தெடுக்கப்பட் குழு வருகிற வரைக்கும் ஆயுள் காப்பீட்டுக் கழகம் நமக்குக் கொடுத்த தொகையைக் கேட்காமல் இருந்தால் அதைத் தள்ளிப்போடுவதைப்பற்றி அரசு பரிசீலிக்கும். ஆனால் கடனும் கடனுக்கு வட்டியும் சேர்த்து அவர்களுக்கு நாம் கட்டவேண்டியிருக்கிறது. வரி அதிகமாகிறது என்றால் வசதியும் அதிகமாகிறது என்றுதான் பொருள். ஆகவே அதையெல்லாம் உத்தேசித்துத்தான் கட்டணம் உயர்த்தப்பட்டு இருக்கிறது. அதை நிறுத்துவதற்கு இல்லை.

## 6. வரவு-செலவுத் திட்டம் 1985—86 பொது விவாதம் (தொடர்ச்சி).

திரு. த. புஷ்பராசு : தலைவர் அவர்களே, 1985—86 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது எனது உரையை நான் ஆற்றுவதற்கு முன்பு உலக அரங்கில் இந்திய நாட்டினுடைய அந்தஸ்தை உயர்த்துவதற்காகவும் இந்திய நாட்டிலே உள்ள கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்து வதற்காகவும் இரவு பகல் என்று பாராது பாடுபட்ட இந்திய நாட்டினுடைய ஒருமைப்பாட்டைக் காப்பதற்காக தன்னுடைய உயிரைக் கொடுத்த அன்னை இந்திராகாந்தி அவர்களை வணங்கி என்னை உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த திருமயம் தொகுதி மக்களுக்கு நன்றியைத் தெரிவித்து உரையைத் தொடங்குகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இந்த நிதிநிலை அறிக்கையில் விவசாயிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பதற்காக நான் அரசைப் பாராட்டுகிறேன். இந்த நிதிநிலை அறிக்கைப் பிரகாரம் வருகிற ஆண்டுகளிலே 4850 குழாய்க் கிணறுகள் போடப்படும் என்று அறிவித்திருக்

கிறார்கள். தமிழ்நாடு என்று எடுத்துக் கொண்டு பார்ப்போமானால் அவை போதாது என்பது என் கருத்து. கிராமப் புறங்களிலே உள்ள அனைத்து ஏரிகளிலும் ஒரு ஏரிக்கு ஒரு குழாய்க் கிணறு என்ற அடிப்படையில் அமைத்துக் கொடுத்தால் கிராமப்புறங்களிலே வறட்சி நீங்கி வளம் ஏற்படும். குறிப்பாக கிராமப்புறங்களிலே உள்ள ஏழை எளிய விவசாயிகள் தங்களுடைய வயல்களிலே குழாய்க் கிணறுகள் போடுவதற்கு வட்டியில்லாத கடன் கொடுத்து அதன் மூலம் அவற்றை அமைப்பதற்கான ஏற்பாட்டை அரசு செய்யவேண்டும்.

கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை நாம் தெளிவாக ஆராய வேண்டும். கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக பல திட்டங்களைப் போட்டு செயல்படுகிறோம். மத்திய நிதியிலிருந்தும் மாநில நிதியிலிருந்தும் பணத்தை ஒதுக்கித் திட்டங்களைச் செயல்படுத்துகிறபோது எந்த அளவுக்கு அக் கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு உதவியிருக்கிறது என்பதை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக பாதி அளவுகூட கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு செலவு செய்யப்படவில்லை என்பதையும் கிராமப்புற மக்களுக்கு முழுமையான வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என்பதையும் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய சூழ்நிலையில் கிராமப்புறங்களிலே அன்றாடப் பிரச்சினையாக உள்ள குடிநீர், தெரு விளக்கு வசதி, போக்குவரத்து வசதி இவைகளைப் பொறுத்த வரையில் எந்த நிலையில் கிராம மக்கள் இருக்கிறார்கள் என்று இங்கே பேசிய அனைத்து உறுப்பினர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

(முற்பகல் 11-00)

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். நான் பொதுவாக, இந்த குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்பதற்காக நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதன் முதலாக பதவி ஏற்றபோது இந்த அவையில் எடுத்துச் சொன்னதை நான் நினைத்துப் பார்க்கிறேன். அப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கிராமங்களில் இருக்கின்ற தாய்மார்கள் பலர் 1 கிலோ மீட்டர், 2 கிலோ மீட்டர், 3 கிலோ மீட்டர் என்று குடிநீருக்காக அலைந்துகுடிநீரைக் கொண்டு வருகின்ற நிலையை இந்த அரசு போக்கும் என்று எடுத்துச் சொன்னார்கள். அதற்குப் பலதிட்டங்கள் தீட்டி அந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு பல ஆயிரக்கணக்கான ரூபாயை ஒதுக்கி இங்கே செயல்படுத்தி வந்தார்கள். அப்படி செயல்படுத்தி வந்து இருந்தாலும் இன்றைக்கு அந்தக் குடிநீர் பிரச்சினை கிராமங்களில் தீர்க்கப்படவில்லை என்பதை நினைக்கும்போது உண்மையிலேயே நமக்கு வேதனை தருகிறது என்பதை இந்த நேரத்தில் நான் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் என்றால், பல ஆயிரக்



கணக்கான ரூபாயை அங்கே செலவு செய்து மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டி 1 ஆண்டு, 2 ஆண்டுகள், 3 ஆண்டுகள் இன்னும் சில இடங்களில் 4 ஆண்டுகள் என்ற விகிதத்தில் இயங்காமல் எந்தவித வசதியும் இல்லாமல் அந்தக் கிராம மக்களுக்கு எந்தப் பயனும் இல்லாமல் இருக்கின்ற நிலையை அரசுக்குச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஏன் என்றால், இன்றைய சூழ்நிலையில் கிராம மக்களுக்குக் குடிநீருக்காக போடப்பட்டு இருக்கின்ற கைப் பம்புகள் 6 மாதம், 7 மாதம் என்று இயங்காமல் அங்கே இருக்கின்றன என்பதை நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். இந்தநிலையைப் பார்க்கும்போது கிராம மக்கள் என்னநினைக்கிறார்கள்? குடிநீர் வடிகால் வாரியம் என்று ஒன்று இருக்கிறதா? ஊராட்சி ஒன்றிய அமைப்புகள் தமிழகத்தில் செயல்படுகின்றனவா என்ற நிலையில்அவர்களுக்குச் சந்தேகம் வருகிறது.

அதோடு அந்த அமைப்புகளில் அதிகாரிகள் இருக்கிறார்களா? அவர்கள் அரசிடமிருந்து நம்முடைய வரிப் பணத்திலிருந்து சம்பளம் பெறுகிறார்களா என்ற ஒரு சந்தேகம் மக்களுக்கு ஏற்படுகிறது. அரசு இவைகளை எல்லாம் நினைத்துப் பார்க்க வேண்டும். ஏன் என்றால் ஆண்டுக்கணக்கில் இயங்காமல் நீர்த் தேக்கத் தொட்டிகள் மட்டும் கட்டிவிட்டு புள்ளி விவரத்தைக் கொடுத்து விட்டால் அந்த புள்ளிவிவரங்கள் கிராம மக்களின் குடிநீர்ப் பஞ்சத்தை போக்கிவிடுமா என்பதை அரசு நினைத்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை எவ்வளவு விரைவில் செயல்படுத்த முடியுமோ அவ்வளவு விரைவில் செயல்படுத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். ஒரு மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி ரிப்பேர் ஆகிவிட்டால் குறைந்தது ஒரு வாரத்தில் ரிப்பேர் செய்து விடலாம். என்ன காரணத்தாலோ ஆண்டுக் கணக்கில் அதை, செய்யாமல் அதை இயக்காமல் இருக்கிறார்கள். இந்த நிலையை அரசு உணர்ந்து அதை உடனடியாக செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்றைய சூழ்நிலையில் தெரு விளக்குகள் பிரச்சினையைப் பொறுத்த வரையில் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் முதலில் பொறுப்பு ஏற்றவுடன் இந்தத் தெரு விளக்குகளை கிராமப்புறங்களில் சரியாக இயங்கச் செய்வதற்கு எப்படி எப்படி செய்யலாம் என்று உறுப்பினர்களிடம் ஆலோசனை கேட்டு பல வழிகளில் அதை செய்து கொடுக்க முயற்சி செய்தார்கள். ஆனாலும் இன்றைய சூழ்நிலையில் கிராமப்புறங்களில் முழுமையாக ஒரு வாரம் தெரு விளக்குகள் எரியாத சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் அரசுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த நிலையைப் போக்குவதற்கு அரசு அந்தக் கிராமங்களில் தெரு விளக்குகளுக்கு பயன்படுத்துகிற பொருட்களை தரமான பொருட்களாக வாங்கி உபயோகிக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேநேரத்தில் இன்றைய அளவில் ஒரு அதிகாரியை நியமித்து அந்தத் தெரு விளக்குகளைப் பராமரிக்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, போக்குவரத்து வசதி: கிராமப்புறங்களில் இருக்கின்ற மக்களுக்குப் போக்குவரத்து வசதி செய்து கொடுப்பதற்கு மாநில அளவிலேயும், மத்திய அளவிலேயும் செலவழிக்கப்பட்டாலும் அங்கே கிராம மக்களுக்கு முழுமையாக நாம் போக்குவரத்து வசதியைச் செய்து கொடுக்கமுடியவில்லை என்ற நிலையை இங்கே நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஏன் என்றால் அங்கே நிதியை ஒதுக்கி அந்தச் சாலைகள் பராமரிப்பு, கல் பரப்புதல் போன்ற வேலைகளை எடுத்துக்கொள்ளும்போது அங்கே இருக்கின்ற ஒப்பந்தக்காரர்களின் வசதிக்காக அந்தச் சாலைகள் ஒதுக்கப்படுகின்ற நிலையை அரசுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஏன் என்றால் ஒப்பந்தக்காரர்கள் எந்த வேலையை எடுத்து செய்தால் லாபம் அதிகமாக கிடைக்கும் என்று பார்தது அந்த ஒரே காரணத்திற்காக மக்களுக்குப் பயன் இல்லாத போக்குவரத்து வசதி அதிகம் இல்லாத சாலையை எடுத்து அவர்கள் மராமத்து பார்கின்ற ஒரு நிலையை அரசு மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்குப் புதிதாக எடுக்கும் சாலை வேலைகளையும், அல்லது சாலைகளுக்குக் கல் பரப்புதல், மராமத்து செய்தல் போன்ற வேலைகளையும் அந்தந்ததொகுதியினுடையசட்டமன்றஉறுப்பினர்களின் ஆலோசனைகளைப் பெற்றுச் செய்ய வேண்டும் என்று அதிகாரிகளுக்கு அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். இம்மாதிரியான நிலைமைகளை நாம் செய்யவில்லையென்றால் நிச்சயமாக எத்தனையாண்டுகள் ஆனாலும் கிராமப் புறங்களில் அந்தச் சாலைப்போக்குவரத்தைச் சரிவர செய்து கொடுக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ஒன்றிய அளவில் மட்டுமல்லாமல், அந்தச் சாலைகளில் வேலை செய்கின்ற ஒப்பந்தக்காரர்களாக, உங்களுடைய வளர்ச்சியை விரும்பாத சில கட்சிகளைச் சார்ந்தவர்கள் ஒப்பந்தக்காரர்களாக இருக்கிறார்கள் என்று சொல்லி, அவர்கள் மூலம் செய்யப்படும் வேலைகள் எந்த அளவிற்கு இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, இந்த விஷயத்தில் அரசு முழு கவனம் செலுத்தி மக்களுக்குச் சாலை வசதி முழுமையாகக் கிடைக்கும் வகையில் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்த வரையில், இந்தத் திட்டம் நல்லத் திட்டமாகும். எங்களது பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் கொண்டு வந்த மதிய உணவுத் திட்டத்தை விரிவாக்கி, அதை எல்லாத் தரப்பு மக்களின் குழந்தைகளும் பலன் பெறும் அளவிற்குச் சத்துணவுத் திட்டத்தை உயர்த்தியிருப்பதில் நாங்கள் உண்மையிலேயே பெருமை அடைகிறோம்; மகிழ்ச்சி அடைகிறோம். இந்தத் திட்டத்தில் இருக்கின்ற ஒருசில குறைபாடுகளை நீக்கி இந்தச் சத்துணவுத் திட்டம் நல்ல முறையில் செயல்பட அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ள முன் வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



முன்னாள் இராணுவத்தினரின் வாழ்க்கைத் தரத்தை நிரந்தரமாக உயர்த்துவதற்கான பல திட்டங்களை இங்கே அறிவித்திருப்பது கண்டு நான் உண்மையிலேயே பாராட்டுகிறேன். அந்த முன்னாள் இராணுவத்தினரின் நிலையை நாம் பார்க்கின்ற பொழுது, கஷ்டம் வருகின்றபொழுது கடவுளை நினைக்கிறோம், அதேநேரத்தில் நாட்டிற்கு ஆபத்து வருகின்றபொழுது இராணுவத்தினரை நினைப்போம் என்கின்ற மனப்போக்கு இல்லாமல் இன்றைக்கு அரசே முன்வந்து அவர்களுக்குப் பல சலுகைகளையும், திட்டங்களையும் அறிவித்திருப்பதைக் கண்டு நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் முன்னாள் இராணுவத்தினருக்கு இலவசமாக வீடுகள் கட்டிக்கொடுக்கின்ற திட்டத்தையும் இந்த அரசு செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அல்லது எதிர்க்கட்சியைச் சார்ந்த எங்களைப் போன்றவர்களாக இருந்தாலும் சரி, தமிழகத்திலே உள்ள பெண்கள், தாய்க்குலம் அதிகமாக வாக்களித்து நம்மை இங்கே அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் தமிழகத்தில் உள்ள பெண்களின் நிலை என்ன என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். 40 வயது கடந்தும்கூட திருமணம் என்பதை நினைத்துப் பார்க்கக்கூட முடியாத அளவிற்கு பெண்களின் நிலை இன்றைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது என்பதை அரசு உணர வேண்டும். இதற்குக் காரணம் வரதட்சிணைக் கொடுமை என்பதை நாம் நன்றாக அறிவோம். இந்த வரதட்சிணைக் கொடுமை என்பது தமிழகத்திலே உள்ள பெண்களை, பெண்களின் நிலையை எந்த அளவிற்குக் கீழே தாழ்த்தியிருக்கிறது என்பதை உணர்ந்து அரசு செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வரதட்சிணைக் கொடுமையை ஒழிப்பதற்காக இன்றைக்கு இந்திய அளவில் பல சட்டங்கள் இருந்தாலும்கூட அந்தச் சட்டங்களை முறையாகச் செயல்படுத்தாததன் காரணமாக இந்த வரதட்சிணைக் கொடுமையின் காரணமாக இன்றைக்குப் பெண் சமுதாயம் எந்த அளவிற்குக் கீழே தள்ளப்பட்டு, பிற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை அரசு உணர்ந்து, தயவு தாட்சண்யம் இன்றி இந்த வரதட்சிணைக் கொடுமைகளை ஒழிப்பதற்கான சட்டங்களை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

இன்னொன்றையும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். இங்கே ஒருவரே பல பெண்களைத் திருமணம் செய்துகொள்கின்ற நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்டவர்களைக் கடுமையான சட்ட திட்டங்களைக் கொண்டு தண்டிக்கக்கூடிய வேண்டிய வகையில் அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஏதோ போலிச் சாமியார் என்று ஒரு சில நிகழ்ச்சிகள் நடப்பதைப் பத்திரிகைகளில் நாம் பார்க்கிறோம். ஒரு ஆசிரமம் அமைத்து, அதில் கொண்டுக் கணக்கிலே இருக்கிறார்கள், ஒருசில நிகழ்ச்சிகளைச் செய்

கிறார்கள். அதை நம்பிச் செல்லுகின்ற ஒருசில பெண்களின் வாழ்க்கையைக் கெடுக்கின்ற அளவிற்கு நிகழ்ச்சிகள் நடக்கின்றன என்று சொல்லும்பொழுது, போலீஸ் இலாக்கா என்ன செய்து கொண்டிருந்தது என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். ஏதோ ஒரு நிகழ்ச்சி அங்கே நடந்துகொண்டிருந்தது. அதை எந்த வகையிலேயாவது போலீஸ் இலாக்கா, சி.ஐ.டி. இலாக்கா ஆராய்ந்து கண்டுபிடித்திருக்கலாம். ஆனால், கடைசியாக, பாதிக்கப்பட்ட ஒரு பெண் சொன்னபொழுதுதான் அம்மாதிரி நிகழ்ச்சிகள் நடைபெற்றிருப்பது தெரியவந்திருக்கிறது. எனவே, போலீஸ் இலாக்காவினர் தங்கள் கடமையை மறந்துவிட்டார்களோ என்று நினைக்கின்ற அளவிற்கு இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் தமிழகத்திலே நடந்துகொண்டிருக்கின்றன என்பதை நினைவுபடுத்தி, எவ்வளவு விரைவிலே இம்மாதிரியான நிகழ்ச்சிகள் நடைபெறாமல் தடுக்க முடியுமோ அந்த வகையில் நடவடிக்கைகளை எடுத்துச் செயல்படுத்துவதற்கான திட்டங்களை வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விதவைகளுக்கு மறுவாழ்வு அளித்து, அவர்களை மறுமணம் செய்துகொள்ளக் கூடியவர்களுக்கு அரசாங்கம் பல சலுகைகளை அளித்திருக்கிறது. அப்படி விதவைகளை மறுமணம் செய்து கொள்பவர்களுக்கு இன்னும் பல காரியங்களைச் செய்து, சமூகம் அதை ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு விதவைகள் மறுமணத்தை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11–10)

தாழ்த்தப்பட்ட மக்கள் நிலையைப் பற்றி இங்கே பேசிய அனைவரும் எடுத்துச் சொன்னார்கள். என்னதான் திட்டங்களைத் தீட்டினாலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான அந்தத் திட்டங்களின் முழுப் பலனும் அவர்களுக்குப் போய்ச் சேரவில்லை என்று நினைக்கிறபோது வேதனையாகத்தான் இருக்கின்றது. எனவே இந்த நிலையை அரசாங்கம் போக்கவேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் குறிப்பாக அவர்களுடைய அன்றாடப் பிரச்சினைகளான குடிதண்ணீர், சாலைப் போக்குவரத்து, தெரு விளக்கு, ஆகிய பிரச்சினைகளை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும். இவற்றைத் தமிழகம் இந்த ஆண்டு செய்துமுடிக்க வேண்டும். அதற்கான திட்டங்களைத் தீட்டி அரசு செயல்பட வேண்டும்.

அடுத்து இளைஞர்கள் பிரச்சினை பற்றி ஒருசில திட்டங்களை அறிவித்து இருக்கிறீர்கள். இப்படி இளைஞர்களின் வளர்ச்சிக்கு உதவவேண்டும் என்ற வகையில் திட்டங்களை அறிவித்திருந்தாலும் அந்த இளைஞர்களின் நிலையை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். 15 வயதுக்கு மேற்பட்ட சிறிய இளைஞர்கள் கூட குடிப்பழக்கத்திற்கு பலியாகி தாங்கள் என்ன நிலையிலிருக்கிறோம் என்பதையே மறந்திருக்கின்ற நிலைமை இருக்கின்றது. எனவே அரசு இப்படிப்பட்ட நிலைமையை உணர்ந்து அந்த மாதிரி



இளைஞர்களின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி 10 பேர், 15 பேர் சேர்ந்து குடித்துவிட்டு அந்த வழியாகச் செல்கிற போலீஸ்காரர்களைக் கூட கிண்டல் செய்கின்ற அளவுக்கு நிலைமை உருவாகி இருக்கின்றது என்பதை நினைவுப்படுத்தி அவர்களைக் கடுமையாகத் தண்டித்து அந்த நிலையைப் போக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை): இன்னும் 10 உறுப்பினர்கள் பேசவேண்டி இருக்கின்றது. எனவே இத்துடன் உங்கள் பேச்சை முடித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. த. புஷ்பராசு: மாற்றுத் தலைவர் அவர்களே, அடுத்து இலங்கைப் பிரச்சினையைப்பற்றி சொல்ல விரும்புகிறேன். இலங்கையிலே இன்றைக்குத் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகள் நமக்கெல்லாம் வேதனையைக் கொடுக்கின்றன என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொண்டு அந்த இலங்கைப் பிரச்சினையை ஒரு சில அரசியல் கட்சிகள் தங்களுடைய கட்சியின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தக்கூடிய நிலையை எண்ணி உண்மையிலேயே மனம் வேதனைப்படுகின்றது. இலங்கையிலே உள்ள தமிழ் மக்கள் அனைவரும் நமது உடன்பிறப்புக்கள் என்ற நிலையில் அந்தப் பிரச்சினையை அணுகி மத்திய அரசு எடுத்துக்கொள்கின்ற முயற்சிக்கு எல்லாம் உறுதுணையாக இருந்து கட்சிப் பாகுபாடின்றி அந்தப் பிரச்சினையைத் தீர்க்கின்ற நிலையை ஏற்படுத்தவேண்டும்.

புதுக்கோட்டை மாவட்டம் வறட்சியல் பாதிக்கப்பட்டிருக்கின்றது. அந்த மாவட்டத்தில் ஏற்படுகின்ற வறட்சியை நிரந்தரமாகப் போக்குகின்ற வகையில் காவிரியிலிருந்து வருகிற உபரி நீரை எடுத்து எங்கள் மாவட்டம் பயன்படுத்தக்கூடிய வகையில் 188 கோடி ரூபாயிலே ஒரு திட்டம் தீட்டப்பட்டது. அந்தத் திட்டத்தை 7–வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்து அதை நிறைவேற்ற அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும்.

தொழிற்சாலைகள் புதுக்கோட்டை மாவட்டத்தினுடைய எல்லையிலே ஆரம்பிக்கப்படுகின்றன. அந்த நிலைமையைப்போக்க வேண்டும். அந்தத் தொழிற்சாலைகளில் வேறு மாநிலத்தவர்களுக்கும், வேறு மாவட்டத்தினருக்கும்தான் வேலைவாய்ப்பு கொடுக்கப்படுகின்றது. அந்த நிலைமையை அரசு உணர்ந்து புதுக்கோட்டை மாவட்ட மக்களுக்கு 50 சதவீதம் வேலை வாய்ப்பு கொடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

புதுக்கோட்டை சமஸ்தானமாக இருந்தபோது அங்கே மன்னராட்சியை எதிர்த்து நடந்த போராட்டத்தில், அதாவது புதுக்கோட்டை சமஸ்தானத்தை இந்திய யூனியனோடு இணைக்கவேண்டும் என்று நடந்த போராட்டத்தில் ஈடுபட்ட

போராட்ட வீரர்களுக்குப் பென்ஷன் தரவேண்டும். இந்தக் கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயரகுநாத தொண்டமான் அவர்கள் 29-1-1983 அன்று இந்தச் சபையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்பதை நான் நினைவுபடுத்துகிறேன். எங்கள் மாவட்டத்தின் தலைநகரான புதுக்கோட்டை நகரத்திற்கு நூறாண்டுக் காலமாக குடிதண்ணீர் வழங்கிக் கொண்டிருக்கின்ற புதுக்குளத்தை உடனடியாக சுத்தம் செய்ய வேண்டும். அந்தக் குளத்திற்கு மேலே தொழுநோய் மருத்துவமனை இருப்பதால் அந்த மருத்துவமனையில் அசுத்தங்கள் எல்லாம் கலந்து ஆபத்து ஏற்படுத்தக்கூடிய நிலைமை இருக்கின்றது. எனவே அந்தத் தொழுநோய் மருத்துவமனையை வேறிடத்திற்கு மாற்ற ஏற்பாடு செய்ய வேண்டும்.

புதுக்கோட்டையிலே டி.வி. அஞ்சல் நிலையம் அமைக்க மத்திய அரசிடம் மாநில அரசு கோரிக்கை எழுப்பவேண்டும். புதுக்கோட்டை மாவட்டத்தில் பல இடங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்ற அரசு அலுவலகங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்குப் பக்கத்திலே உள்ள இடங்களில் கட்டிடங்களைக் கட்டி ஒரே இடத்தில் இருக்கும் வகையில் ஏற்பாடு செய்யவேண்டும்.

புதுக்கோட்டை நகரத்தில் சுற்றுலா வாரியத்தின் மூலமாக ஹோட்டல் தமிழ்நாடு ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திருமயம் தொகுதி மிகவும் பிற்பட்ட வறட்சி மிகுந்த தொகுதியாகும். இந்தத் தொகுதியிலே ஒரு காகித தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டும். காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்க எல்லா வசதிகளும் அரிமளம் ஒன்றியத்தில் இருக்கின்றது. திருமயம் தொகுதியில் வறட்சியைப் போக்க அரிமளம், கூடலூர் அருகே வெள்ளாற்றின் குறுக்கே ஒரு அணை கட்ட வேண்டும். பொன்னமராவதி யூனியனில் வார்பட்டு அருகில் பிரான்மலையிலிருந்து வருகின்ற தண்ணீரைத் தேக்க அங்கே ஒரு அணை கட்டித்தர வேண்டும். இதன் மூலமாக 2 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சரித்திரப் புகழ்பெற்ற திருமயத்தைச் சுற்றுலாத் தலமாக ஆக்கித் தியாகச் செம்மல் சத்தியமூர்த்தி பெயரில் ஒரு நூலகம் ஏற்படுத்த வேண்டும். திருமயம் தாலுக்கா தலைநகராக இருந்தும் எந்த வசதியும் செய்யப்படவில்லை. இந்த நிலையைப் போக்க திருமயத்தை பேரூராட்சி மன்றமாக அரசு உயர்த்தித்தர வேண்டும். தாலூகா மையத்திலே உள்ள பேருந்து நிலையத்தை வசதிமிக்க பேருந்து நிலையமாக அரசு உயர்த்தித்தர வேண்டும்.

பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஒன்றைத் திருமயத்திலே தொடங்க வேண்டும்.



பொன்னமராவதி பகுதியிலே இருக்கிற மின் பற்றாக் குறையைப் போக்குவதற்கு துணை மின் நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டும்.

திருமயம் தொகுதியிலே புதுக்கோட்டை மாவட்டம் வடகாடு கிராமம் என்னுடைய சொந்தக் கிராமம். இங்கே உள்ள ஆளுங் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடாசலம் அவர்களும் எனது கிராமத்தைச் சேர்ந்தவர். எனது கிராமம் 9,000 ஜனத்தொகை கொண்டது. கிராமத்தைச் சுற்றியுள்ள கிராமங்களை எல்லாம் சேர்த்து மொத்த ஜனத்தொகை 25,000 பேர்கள் இருக்கும். இருந்தாலும் அங்கு எந்த வைத்தியவசதியும் இல்லை. எனவே வடகாடு கிராமத்திலே ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமயம் தாலூகாவை, இரண்டாகப் பிரித்து, ஒன்றை பொன்னமராவதி தாலூகா என்று ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அளிக்கப்பட்ட வாய்ப்புக்கு நன்றி கூறி உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. ஏ. பாலுச்சாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் இந்த அவைக்கு வருவதற்குக் காரணமாயிருந்த எங்களது இதய தெய்வம், தமிழகத்தின் நிரந்தர முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய பாதங்களைத் தொட்டு வணங்கி, வாக்குகளை அளித்த, நல்ல இதயங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, 1985-86 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது எனது கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

புரட்சித் தலைவரிடம் நாட்டு மக்கள் எதை எதிர்பார்த்து, வாக்குகளை வாரித் தந்தார்களோ, அவர்களது எண்ணம் நிறைவேறும் வகையில், நன்றியைத் தெரிவிக்கும் வகையில், நிதி நிலை அறிக்கை அமைந்துள்ளது. அதை நான் பரமக்குடி தொகுதி மக்களின் சார்பாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பரந்து விரிந்து கிடந்த இராமநாதபுரம் மாவட்டத்தை நிர்வாக நலன் கருதி மூன்றாகப் பிரித்த, பரமக்குடி வருவாய்க் கோட்டம் தந்த, புரட்சித் தலைவருக்கு எனது தொகுதி மக்களின் சார்பாக முதலிலே நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு இராமநாதபுரம் மாவட்டம் வறட்சியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. வேலை தேடி வேறு மாவட்டங்களுக்குச் செல்லும் அவலநிலை காணப்படுகிறது. வறட்சியின் தன்மையைக் கண்டறிய ஒரு குழு அமைத்து, வறட்சி நிவாரணப் பணிகளை உடனடியாகத் துவக்க வேண்டுமாய்கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு ஆண்டும் இராமநாதபுரம் மாவட்டம் வறட்சியால் பாதிக்கப்படுவது

வாடிக்கையானது. எனவே, புதிதாகத் தொடங்க இருக்கும் 10 சர்க்கரை ஆலைகளில், மக்களுக்கு நிரந்தரமாக வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு, பரமக்குடியில் ஒரு சர்க்கரை ஆலை துவங்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியாவின் பாதுகாப்பு நலன் கருதி, இராமநாதபுரத்திற்கு அருகில் உள்ள உச்சப்புளி விமானதளத்தை விரிவுபடுத்தி செயல் படுத்தவும், சேதுக்கால்வாய்த் திட்டத்தை உடனடியாக நிறை வேற்றவும் மத்திய அரசை வலியுறுத்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் இரண்டு கலைக் கல்லூரிகள்தான் உள்ளன. ஒன்று இராமநாதபுரத்திலும் மற்றொன்று கமுதியிலும் உள்ளது. எனவே, பரமக்குடியில் ஒரு கலைக் கல்லூரியும் தொழில் கல்லூரியும் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புதிதாக வருவாய்க் கோட்டம் அமைக்கப்பட்டிருப்பதால் அரசு அலுவலர்கள் குடியிருக்க வீடு இல்லாமல் அவதிப்படு கிறார்கள். அவர்களுக்கு வீட்டுவசதி வாரியத்தின் கீழ் வீடுகள் கட்டித்தர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

கிராமங்களில் வீட்டு வசதிச் சங்கங்களின் கீழ் கொடுக்கப் படும் தொகையை ரூ. 10,000 ஆக உயர்த்தித் தர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே உள்ள நைனார்கோவில், சத்திரக் குடி, பார்த்திபனூர் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் போதுமான கட்டிட வசதி இல்லை. அக்குறையைப் போக்கி, கட்டிடங்களைக் கட்டித் தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் நலத்துறையிலிருந்து சத்திரக்குடியில் ஒரு மாணவர் விடுதியும் பரமக்குடியில் ஒரு மாணவர் விடுதியும் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நைனார் கோவிலிலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாய் மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எல்லா கிராமங்களிலும் ஏறத்தாழ மேல்நிலைத் தொட்டிகள் கட்டப்பட்டு குடிநீர் வழங்கப்படாமல் இருக்கின்றன. கூடிய விரைவில் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

இராமநாதபுரத்திற்கு அருகிலே உள்ள காவலூரில் வைகை ஆற்றின் குறுக்கே ஒரு அணையைக் கட்டி, தண்ணீரைத் தேக்கி விவசாயிகள் பயனடையச் செய்ய வேண்டுமாய் இந்த அவையின் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.



பரமக்குடி தொகுதியில் வைகை ஆற்றின் கரையில் உள்ள உரப்புளி, கள்ளிக்கோட்டை, நெம்மேலி, அஸ்தினாபுரம் செல்லூர், நாகாச்சி போன்ற ஊர்களில் பெருவெள்ளக் காலங்களில் ஊருக்குள் வெள்ளம் புகுந்து ஆபத்தான நிலை ஏற்படுகிறது. வருங்காலத்தில் அவ்வாறு ஏற்படாதவண்ணம் ஆற்றுப் படுகை ஓரங்களில் தடுப்புச் சுவர்களைக் கட்டித் தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

நைனார்கோவில்-தேளிப்பட்டணம் சாலை பல ஆண்டுக் காலமாய் தார் போடப்படாமல் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அதனால் போக்குவரத்து சரிவர செய்ய இயலாத நிலை இருக்கிறது. அதனால் 50-க்கு மேற்பட்ட கிராம மக்கள் அவதிப் படுகின்ற நிலை உள்ளது. எனவே, அந்தச் சாலை முழுவதும் உடனடியாக தார் போட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

பரமக்குடி நகராட்சியின் சுகாதார நலன் கருதி பாதாள சாக்கடைத் திட்டத்தை அங்கு அமுல்படுத்த வேண்டுகிறேன். கோட்ட வருவாயாகப் பரமக்குடி உயர்ந்திருப்பதனால் தலைமை மருத்துவமனைக்குப் போதுமான வசதி செய்து தர வேண்டு கிறேன். மருத்துவ மனைக்குச் சென்று வர போதுமான போக்கு வரத்து வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பரமக்குடி தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பரமக்குடி எமனேஸ்வரத்தை இணைத்து, வைகை ஆற்றின் குறுக்கே பாலம் ஒன்று கட்டித் தர வேண்டுகிறேன்.

(முற்பகல் 11-20)

எமனேஸ்வரம் பகுதியில் ஒரு காவல் நிலையமும், ஒரு மருந்தகமும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நெசவாளர்கள் அதிகமாக வாழ்கிற பரமக்குடி யில் அடிக்கடி அவர்கள் நெய்கிற துணி தேக்கமடைகிற நிலை ஏற்படுகிறது. இந்த நிலைமையைக் கருத்தில் கொண்டு, குறித்த நேரத்தில் கொள்முதல் செய்து அவர்கள் வாழ்வு வளம் பெறச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் குடியிருக்க மேலும் வீடுகளைக் கட்டித் தரவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையில் பணிபுரிகின்ற ஊழியர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுகிற சலுகைகளைப்போல வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் போக்குவரத்துத் துறையில் சாதாரண நடத்துனராக பணிபுரிந்தவன். என்னை சட்டமன்ற உறுப்பினராக்கிய தொழி லாளர்களின் ஒளிவிளக்காம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு மீண்டும் நன்றி தெரிவித்து, போக்குவரத்துத் துறையில் பணி புரியும் தொழிலாளர்களின் குறைகளை அறிய ஒரு குழுவை நியமித்து அவர்களை பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இலங்கைப் பிரச்னையில் பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்ட போதிலும், அவர்கள் பிரச்னைகளை உடனடியாக தீர்ப்பதற்கு தனியாக ஒரு அமைச்சர் அவர்களை நியமித்த புரட்சித் தலைவரின் தாயுள்ள அன்பை பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நிலையில் நிதிநிலையறிக்கையை வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

திரு. ப. பொன்னுரங்கம்: மாற்றுத் தலைவர் அவர்களே. இந்த நிதிநிலை அறிக்கையில் என்னுடைய கருத்துக்களை வைக்க விழைகிறேன். நாவலர் அவர்கள் தந்திருக்கிற நிதிநிலை அறிக்கையில் பாரா 21-ல் ஒரு சிறு தவறு இருக்கிறது. அதை அவர்கள் திருத்திக் கொள்வார் என்று கருதுகிறேன். பாரா 21-ல் பால் பெருக்குத் திட்டம் என்று இருக்கிறது. ஆனால் ஆங்கிலத்தில் "Operation Flood Programme" வெள்ளப் பெருக்குத்திட்டம் என்று இருக்கிறது. அதனை பால் பெருக்குத் திட்டம் என்று திருத்திக் கொள்வது நல்லது என்று கருதுகிறேன்.

அடுத்து நிதிநிலை அறிக்கையில் நாவலர் அவர்கள் சொல்கிற பொழுது சில சங்கடங்கள் இருக்கிறது என்று தெரிவித்து இருக்கிறார்கள். அதற்கு இரண்டு காரணங்கள். ஒரு காரணம், எட்டாவது நிதிக்குழு நமக்கு நிதியை வழங்குகிறபோது, 'பெர்கேபிட்டா இன்கம்' என்ற முறையில் வகுத்த முறை நல்ல முறையல்ல என்பது. இதே எட்டாவது நிதிக்குழுவைப் பற்றி கடந்த டிசம்பர் மாதத்தில் சட்டமன்றக் கூட்டத்தில் ஒழுங்குப் பிரச்னை மூலமாக நானே கேள்வி கேட்டேன். மேற்கு வங்காளத்தில் ஜோதிபாசு சர்க்கார், தாங்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறோம் என்ற காரணத்தால் தங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களை நிதியமைச்சர் தலைமையில் அனுப்பி ஜனாதிபதி அவர்களை சந்தித்து இருக்கிறார்கள். மக்களைத் திரட்டி, போராட்டம் நடத்தி இருக்கிறார்கள். நாம் வாளா இருக்கிறோமே, இது முறைதானா இது சரிதானா என்று கேட்டேன்.

மாண்புமிகு நாவலர் அவர்கள் இதே கருத்தை நான் கேட்பதற்கு ஓரிரு வாரத்திற்கு முன்பாக அவர்கள் வெளியே பேசி பத்திரிகையில் வந்திருந்ததை அன்றையதினம் சுட்டிக் காட்டினேன். நாவலர் அவர்கள் எனக்கு அளித்த பதில் எட்டாவது நிதிக்குழுவின் முடிவு இறுதியானது' என்று சொன்னார். எட்டாவது நிதிக்குழுவின் முடிவு இறுதியானது என்பது மேற்கு வங்க சர்க்காருக்குத் தெரியாதா? அல்லது ஜோதிபாசுவிற்கு தெரியாதா? அல்லது அங்கேயுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியாதா? தெரிந்திருந்தும் அந்தச் சர்க்கார், ஜோதிபாசு அவர்கள், மேற்கு வங்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் கிளர்ச்சிகளில் எல்லாம் ஈடுபட்டிருக்கிறார்கள், என்பதை இந்த நேரத்தில் என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.



அடுத்து நாவலர் அவர்கள் சந்தேகப்படுவது, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் இன்னும் முடிவாக்கப்படவில்லை. not yet been finalised. நமக்கு எந்த அளவிற்கு நிதி ஒதுக்குகிறார்கள் என்பது நமக்குத்தெரியாது. தெரியாத இந்தக் காலக்கட்டத்திலே நிதிநிலை அறிக்கை வைக்கிறபோது நாவலர் அவர்கள் மொத்த சங்கடப்பட்டுக் கொண்டே சொல்கிறார்கள். என்ன சொல்கிறார் என்றால், In arriving at the closing deficit for the next Financial year one major handicap .....not an ordinary handicap.....for the Government has been the fact that the Plan Outlay for next year......that is this year, from April 1st. .... has not yet been finalised by the Union Planning Commission nor has any clear indication...... இண்டிகேஷன் கூட கிடையாது. நாம் பட்ஜெட் போட்டுவிட்டோம். நிதி ஒதுக்கீடு வருகிறபோது பெரும்பாலும் பிளானிலேதான் ஒதுக்கிக்கொண்டு வருகிறோம். பள்ளிக்கூட மாணவர்களுக்கு சீருடை வழங்கவும், புத்தகங்கள் வழங்கவும் நாம் பிளானிலேதான் ஒதுக்கி இருக்கிறோம். எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர், திரு உத்திராபதி அவர்கள் என்று நினைக்கிறேன், பேசுகிறபோது செப்டம்பரிலே வேண்டாம்; ஜூனிலே தாருங்கள். பள்ளிகள் திறக்கப்படுவது ஜூன் மாதமாகத்தான் இருக்கும். அந்த நேரத்தில் கண்டிப்பாகக் கொடுக்க முடியாது? ஏனென்றால் மத்தியிலே எவ்வளவு பணம் திட்டத்திற்கு ஒதுக்குவார்கள் என்று தெரியாது. அந்த எண்ணத்தினால்தான் 'பிளான்ஸ் ஃபைனல் ஆகவில்லை என்பதை எதிர் பார்த்தோ என்னவோ அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் மாதம் என்று சொல்லியிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். அதோடு.. 'nor has any clear indication been given regarding the increased assistance that would be available from Government of India for 1985-86 which is the first year of the Seventh Plan.' என்று முடிக்கிறார். ஆக இந்த இரண்டு சங்கடங்களுக்கும் மத்தியில்தான் இன்றைய நிதிநிலை அறிக்கையை நாவலர் அவர்கள் வைத்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, நமக்கு இப்படிப்பட்ட வளர்ச்சித் திட்டங்களுக்குப் போதிய நிதி ஆதாரங்கள் வேண்டும். புதிய திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும், அதற்குப்போதுமான நிதி ஆதாரங்கள் வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்கிற ஒரு வாய்ப்பையாவது ஏற்படுத்தியிருக்கிறீர்களா என்றால் இல்லை. அதே நேரத்தில் பிற மாநிலங்கள், குறிப்பாக ஆந்திர மாநிலம், கர்நாடக மாநிலம் ஆகிய மாநிலங்களின் முதலமைச்சர்கள் எல்லாம் எந்த அளவுக்கு மத்திய சர்க்காரால் மாநிலங்கள் வஞ்சிக்கப்படுகின்றன என்பதையும் வஞ்சிக்கப்படுகிறபோது தங்கள் கருத்தை எப்படி எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதையும் இங்கே எடுத்துக் காட்ட நான் ஆசைப்படுகிறேன். "மாநிலங்களின் வளர்ச்சித் திட்டங்களுக்கு மத்திய அரசு போதிய நிதி உதவி தராவிட்டால் இரத்தப் புரட்சி நடக்கும்" என்று சொன்னது யார்? ஆந்திர முதலமைச்சர் என். டி. இராமாராவ் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

இங்கே என்ன புரட்சி நடக்கிறது? புரட்சி, புரட்சி என்று தான் சொல்கிறீர்களே தவிர வேறு ஒன்றும் இல்லையே. மாநிலம் வஞ்சிக்கப்படும்போது இரத்தப் புரட்சி நடக்கும் என்று ஆந்திர முதலமைச்சர் சொல்கிறார்.

அடுத்து, கல்வி, பொருளாதாரம் மற்றப் பிரச்சனைகளில் டெல்லிக்கு அதிகாரம் இருந்து பயன் இல்லை. மாநில அரசுகளும் தங்கள் கடமைகளை ஆற்ற அனைத்து அதிகாரங்களையும் கொடுப்பதில் தவறு இல்லை. மாநிலங்களில் ஆட்சி செய்ய மாநில அரசுகள் இருக்கின்றன. மத்தியில் ஆட்சி செய்ய மத்திய அரசு இருக்கிறது. ஆனால் மத்திய அரசுக்கு ஆட்சி செய்ய ஏது மாநிலம்? இல்லை. அதற்கு இடமே இல்லை. இதைச் சொல்வது யார்? மாநிலங்கள் விஷயங்களில் எல்லாம் மத்திய அரசு தலையிடுவது அரசியல் சட்டத்திற்கு முரணானது. மாநிலங்களுக்கு உரிய அதிகாரங்களைக் கொடுக்க மத்திய அரசு கடமைப் பட்டிருக்கிறது என்று டாக்டர் இராமகிருஷ்ண ஹெக்டே, கர்நாடக முதலமைச்சர் சொல்கிறார். நம்மிடம் அந்த நிலை இல்லையே. நாம் அஞ்சி அஞ்சி சாகிறோம். ஏன் இந்த நிலை? சொல்லவேண்டியதை துணிந்து சொல்ல வேண்டும். துணிந்து கேட்கவேண்டும். வேறு மாநிலங்கள் நமக்கு நல்லமுறையில் வழி காட்டும் போது அதைப்பின்பற்றி நாமும் செல்ல வேண்டாமா? ஏன் அஞ்சவேண்டும்?

அது மட்டுமல்ல நான் ஏற்கெனவே சொன்னேன். நாம் ஒரு முடிவுக்கு வந்துவிட வேண்டும். ஃபாமிலி பிளானிங் மூலம் மக்கள் பெருக்கம் இங்கே குறைவாக இருப்பதால் பெர்காபிட்டா இன்கம் அதிகமாக இருக்கிறது. அதனால் நமக்கு கிடைக்கின்ற உதவி குறைக்கப்படுகிறது. மக்கள் பெருக்கம் குறைவினால், பிற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது நம்முடைய மாநிலத்தில் பெர் காபிட்டா இன்கம் கூடுதலாக இருக்கிறது. அதனால் நிதி ஒதுக்கீடு குறைகிறது என்றால் நாம் கேட்க வேண்டாமா? குடும்ப நலத் திட்டம் ஒரு தேசியத் திட்டம். அதை நாம் நல்லமுறையில் செயல்படுத்துகிறோம், பெருமைப் படுத்துகிறோம். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் இந்தியத் துணைக் கண்டத்திலேயே தலைசிறந்த மாநிலம். முதலிடம் வகிக்கும் மாநிலம் தமிழ்நாடு தான் என்று பீத்திக் கொள்கிறோம், பெருமைப்படுகிறோம். ஆனால் நாம் வஞ்சிக் கப்படுகிறோம். நிதி ஆதார ஒதுக்கீட்டில், இப்படி நல்லமுறையில் குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்துவதினால், நாம் வஞ்சிக்கப்படுகிறோம். ஆகையால் இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை நாம் தொடர்ந்து செயல்படுத்த வேண்டியது அவசியம்தானா என்ற எண்ணம் ஏற்படாதா? உங்களுக்கு அந்த எண்ணம் வர வில்லையா? ஆக, மாநில சர்க்கார் இதை எல்லாம் எடுத்துக் காட்டி, நாட்டின் நன்மையைக் கருதி செய்யப்படுகிற திட்டத்தை முன்னணியில் நின்று செய்கிறோம். அதற்கு இப்படிப் பட்ட தண்டனையா என்று மத்திய அரசை வற்புறுத்தி ஏன் நீங்கள் கேட்கவில்லை?



அடுத்து, மாண்புமிகு நாவலர் அவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையில் இலங்கைத் தமிழர்கள் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். அப்படி சொல்ல வேண்டிய அவசியம் ஏன் வந்தது, முதலிலே 40 கோடி ரூபாயும் இப்போது 66 இலட்சம் ரூபாயும் ஒதுக்கியிருப்பதால் இந்த அறிக்கையில் இலங்கைத் தமிழர் பிரச்சனை வருகிறது. அப்படி வருகிறபோது இதைப்பற்றி கூற விமர்சனத்தில் ஒன்றை மட்டும் நான் கூற விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)
(முற்பகல் 11-30)

இலங்கைத் தமிழ் மக்கள் பிரச்சனையில் நம்முடைய அணுகுமுறை எப்படி இருக்கிறது? அண்மையில் பத்திரிகையில் பார்த்தோம். செய்தியை கேட்டோம். வெளிநாட்டிலிருந்து வந்த விமானம் ஒன்றில் பெருமளவுக்கு ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு அந்த விமானம் திருவனந்தபுரத்திற்கு வந்து சேர்ந்தது. அதிகாரிகள் அதை தடுத்து நிறுத்தினார்கள். ஆனால் டெல்லியிருந்து வந்த உத்தரவினால் அந்த விமானம் அப்படியே இலங்கைக்கு அனுப்பப்பட்டது. அந்த விமானத்தில் எதற்காக அவ்வளவு ஆயுதங்கள் கொண்டு வந்தார்கள். இலங்கைத் தமிழர்களை சுட்டுக்கொல்வதற்காகப் பயன்படுத்தப்படுகிற ஆயுதங்கள் அவை.

அந்தஆயுதங்களைக் கொண்டு வந்த விமானத்தை அதிகாரிகள் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். அவர்களுக்கு சட்டம் தெரியாதா? விதி தெரியாதா? தெரிந்துதான் நிறுத்தியிருக்கிறார்கள். ஆனால் டெல்லியில் இருந்து வந்த உத்தரவின் கீழ் அந்த விமானம் இலங்கைக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டு இருக்கிறது. இது மத்திய சர்க்காருடைய அணுகுமுறை. அது இலங்கைத் தமிழர்களை மட்டும் சுடுவதற்காகவா? இராமேஸ்வரத்தில் இருக்கக் கூடிய தமிழர்களைச் சுட பயன்படவில்லையா? 2 மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படவில்லையா? தமிழ்நாட்டு மீனவர்களைச் சுட்டுக் கொல்லவும் அது பயன்படுத்தப்பட்டு இருக்கிறது.

அதுபோன்று ஒரு செய்தியை அண்மையிலே பத்திரிகையிலே பார்த்தேன். ஒரு படகிலே 2 இளைஞர்கள் ஆயுதங்களை எடுத்துச் சென்றார்களாம். உடனே படகைப் பிடிக்கிறார்கள். தமிழ் இளைஞர்கள், இலங்கையைச் சேர்ந்த தமிழர்கள், படகை பிடித்து, அவற்றை விட்டுவிட்டார்களா என்றால் அதுவும் நம்முடைய ரோந்துக்கு வந்த ராணுவம் பிடித்து மாநில சர்க்காரிடம் தருகிறது. மாநில சர்க்கார் அவர்களை சிறையிலே வைத்திருக்கிறது. ஆகவே—மாநில சர்க்காரும், மத்திய சர்க்காரும் இலங்கைத்தமிழர்களுடைய பிரச்சனையில் அவர்களுடைய அணுகுமுறை எப்படி இருக்கிறது என்பதை என்னால் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. இங்கே கூட பேசினார்கள். அரசியல் கட்சி வளர்ச்சிக்காக இந்த இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சனை பயன்படுத்தப்படுகிறது என்ற குற்றச்சாட்டை எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள் சொன்னார்கள்,

(திரு. ப. பொன்னுரங்கம்) [1985 ஏப்ரல் 4

அண்மையில் ராஜ்ய சபா நிகழ்ச்சியில் நடைபெற்ற சம்பவத்தை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்தச் சம்பவத்தில் திரு பண்டாரே அவர்கள் போய் வந்தவுடன், ஒரு அறிக்கை ராஜ்ய சபாவில் வைக்கப்பட்டது. அந்த அறிக்கையை வைத்தவர் எக்ஸ்டர்னல் அப்பேர்ஸ் மினிஸ்டர்'' திரு ஆலம் கான் என்பவர் அவர் வைத்த பிறகு, அங்கே விவாதம் நடைபெறுகிறது. அந்த விவாதத்திலே ஒருவர் சொல்கிறார்கள்.

'... the Government must not shut its eyes to the realities of the situation. There was gross violation of human rights by Sri Lanka, which was throwing dust in the eyes of the World. Does not the Indian Government know that Mr. Jayawardane has lost control and is a prisoner in the hands of the army, Mr. Bhandari asked. He criticised Mr. Khan for drafting the statement in a vague fashion and asked the Government to come out with a time-bound programme.,

யார் தெரியுமா! இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம்.பி. டைம் பவுண்ட் புரா கிராம். அவருக்கு இருக்கின்ற உணர்ச்சி நமக்கு இல்லையே? இது அரசியல் கட்சி வளர்ச்சிக்கா சொல்லப்படுகிறது.

அதுமட்டுமல்லாமல், இன்னொருவர் சொல்கிறார். நான் அதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

"The Minister should not have used the word "Violence in his statement when there was genocide in Sri Lanka"
வயலன்ஸ் என்ற வார்த்தையை பயன்படுத்தினாலே கோபம் வருகிறது. ஏன் தெரியுமா?

'in his statement when there was 'genocide in Sri Lanka'.

'genocide' அங்கே இனப்படுகொலை நடக்கிறது. கலவரம் அல்ல. இனப் படுகொலை நடக்கிறது என்று சொல்கிறார். "He said the Government's soft approach would not yield results and called for direct action. யார் தெரியுமா? சொன்னால் வருத்தப் படமாட்டீர்கள், என்று கருதுகிறேன். அருமைச் சகோதரர், ராஜ்ய சபா உறுப்பினர், தங்கபாலு. ஆகவே அவர்கள் கட்சி வளர்ச்சிக்காக இதை பயன்படுத்துகிறார்களா? அடுத்து இன்னொருவர் பேசுகிறார். அதையும் நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்றத்திலே சொல்லப்பட வேண்டிய விதத்திலே சொல்வது செய்ய வேண்டிய காரியத்தைச் சுட்டிக்காட்டுவதற்காக. அதைக் கட்சி வளர்ச்சிக்காக என்று குறை சொல்வது வீதியிலே வெறும் விளம்பரத்திற்காக செய்யப் படுகிறபோது.



1985 ஏப்ரல் 4]

திரு. ப. பொன்னுரங்கம்: அவையிலேயும் சொல்லலாம். மக்களுடைய ஆதரவைத் திரட்டுவதற்காக வெளியிலேயும் சொல்லலாம். அடுத்து, The Minister's statement was the most irresponsible one since 1972. He said Mr. Jayawardane was not the real power in Sri Lanka, which was now controlled by the Buddhist Clergy. You are not allowing us to feel that we are part of the heritage. Mr. John told the Minister and demanded to know whether the Government was prepared to take military action to solve the problem. வலம்புரி ஜான் கேட்டு இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு அங்கே சொல்லுகின்ற தைரியம் கூட இங்கே இல்லை என்றால், நாம் தமிழக மக்களுக்குத் துரோகம் செய்தவர்களாக ஆகமாட்டோமா? ஆகவே தான் நான் இதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட உணர்வுகளை எல்லாம் நாம் எடுத்திருக்கிறோமா? இங்கே சாஃப்ட் அப்ரோச். அந்த சாஃப்ட் அப்ரோச் கூடாது என்றுதான் சொல்கிறேன். நீதிபதி கிருஷ்ணய்யர் என்ன சொல்லியிருக்கிறார்? 'இலங்கை தமிழர் பிரச்சனையில் மத்திய அரசு தலையிட வேண்டிய உரிய சமயம் இதுதான்' என்று கிருஷ்ணய்யர் சொல்கிறார். மேலும், 'ஈரான் போர் சம்பந்தமாக தூதுக் குழு அனுப்பப்படுகிறது. இங்கே இலங்கையிலே தமிழ் இனம் அழிக்கப்படுகிறது, ராஜீவ் சுண்டு விரலைக் கூட அசைக்கவில்லையே என்று ஹெக்டே கூறுகிறார். யார் வார்த்தை இது. ஹெக்டே அவர்களின் சொல். உண்மையான வார்த்தை. ஈரான் போருக்கு தூது போகிறது, இலங்கை தமிழர் பிரச்னையில் நடவடிக்கை எடுக்க முடியாதா என்று ஹெக்டே சொல்கிறார்? அங்கு என்ன தமிழர்களா இருக்கிறார்கள். அந்த உணர்வு நமக்கு இல்லையே. ஆனால் அவர் துணிந்து சொல்கிறார்.

மேலும் சொல்லுகிறார், ''தென் மாநில முதலமைச்சர்களை கூட்டவேண்டும்.'' என்று. நாம் நினைத்தோமா இப்படி இதுவரையில். எவ்வளவு துணிச்சலான கருத்து. ஆகவே, இப்படி இலங்கைத் தமிழர் விவகாரத்தில் நாம் முறையான நடவடிக்கை எடுக்கவில்லை என்பது என்னுடைய தாழ்மையானக் கருத்து.

அடுத்து வேறு ஒரு விவகாரம். பாரா 19-ல், ஒரு விவசாயக் கல்லூரி 1984-85-ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படுவதைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். நானும் அது எங்கே என்று தேடி பார்க்கிறேன். காணவில்லை. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அதை விளக்கிச் சொன்னால் நல்லது. 1984-85-லே ஆரம்பித்திருப்பதாகச் சொல்லப்பட்ட அந்த வேளாண்மைக் கல்லூரி, இதுவரையில் எங்காவது பங்ஷன் ஆகிறதா? 'To continue research and dissemination of improved techinques for agricultural production one more Agrcultural College was sanctioned in 1984-85 and preliminary works have been commenced.' என்று இருக்கிறது. எங்கே அதை ஆரம்பித்திருக்கிறார்கள் என்று நம்முடைய நாவலர் அவர்கள் சொல்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் இருக்கிற கிள்ளைவளவன் என்ற ஊரில் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அந்தக் கல்லூரியில் பயிற்சி பெறுவதற்கு மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கோவையில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்குரிய கட்டிட வசதி அமைந்தவுடன் அவர்கள் அங்கே அனுப்பப்படுவார்கள்.

திரு. ப. பொன்னுரங்கம்: அடுத்து வீட்டு வசதி. இதிலேயும் ஒரு விஷயத்தை நான் மாண்புமிகு நாவலர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எதிர்காலத்தில் இவைகளைத் திருத்திக் கொள்ளலாம் என்ற நல்ல எண்ணத்தோடுதான் சுட்டிக் காட்டுகிறேன். இதில் ஆறாவது திட்டக் கால இறுதிக்குள் நெசவாளர்களுக்கு 5.000 வீடுகள் கட்டுவதென்று கருதப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆறாவது ஐந்தாண்டு திட்டக் காலம் சென்ற மார்ச் மாதத்தோடு போய் விட்டது. இப்பொழுதுதான் வீடு கட்டிக் கொடுக்கலாம் என்று கருதுகிறோம். எப்பொழுது கட்டிக் கொடுக்கப் போகிறோம்? இதுபோன்ற குறைபாடுகள் மாற்றப்படவேண்டும் என்று நிதியமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இதுபோல '7 வது திட்டக் காலத்தில், இம் மாநிலத்தில் மேலும் பத்து சர்க்கரை ஆலைகள் தொடங்கப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது' என்று இருக்கிறது. இது 7—வது திட்டக் காலத்தின் முதல் ஆண்டுத் தொடக்கம். இதில் ஏதாவது ஒரு இடத்தில் குறிப்பிட்டு இங்கே சர்க்கரை ஆலை வருகிறது என்று ஏதாவது ஒன்றிற்காவது போட்டிருக்கலாம் இல்லையா? அப்படி போட்டிருந்தால் பத்து சர்க்கரை ஆலைகளும் படிப்படியாக வரும் என்று எதிர் பார்க்கலாம். ஆனால் இல்லையே. அதனால் இந்தத் திட்டம் முறையாக அமல் நடத்தப்படுமா என்ற சந்தேகம் ஐயப்பாடு வருகிறது.

அடுத்து, பாரா 34. இதற்கு கட்டாயம் நிதியமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லியாக வேண்டும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய எண்ணங்களையே குலைக்கிற வகையில் வார்த்தைகள் உள்ளன. நான் படிக்கிறேன்.

'Preliminary ac ion was initiated in 1984-85 itself on preparation for launching from 1985-86 the revolutiona y scheme for making school education lif oriented. Revised School curriculum and syllabus intune with the concepts of the new scheme of Chief Minister's Life Oriented Education are being prepared by expe t cowmittces and nem vocational courses a e being introduced. The scheme involves a massive outlay and assistance is being sought f om the World Bank andfrom the Government of India'.



How can you int oduce it? You have stated that massive outlay and assistance is sought. They are being prepared by Expert Committees. அது என்ன புது கோர்ஸ்? அந்தக் கோர்ஸை இன்டிரட்யூஸ் பண்ணுகிறீர்களா? பாடமுறைகளே இன்னும் தயாராகவில்லை, வல்லுநர் குழு தயாரித்துக் கொண்டிருக்கிறது. இன்னும் கர்ரிகுலமே தயார் செய்யப்படவில்லை? How can you start it? இதையெல்லாம் தயாரிக்காமல் எப்படி இந்த ஆண்டே ஆரம்பிக்கப்போகிறீர்கள்? அது மட்டுமல்ல, "The Scheme involves a massive outlay and assistance is being sought from the World Bank and from the Government of India'. பெரும் தொகை தேவைப்படுகிறது? இதற்கு கிளியரன்ஸ் கவர்ன்மெண்ட் ஆப் இந்தியாவிலே கொடுத்துவிட்டார்களா? வோர்ல்ட்டு பாங்கிலே கடன் கிடைத்துவிடும் என்று உறுதியாகச் சொல்ல முடியுமா?

(முற்பகல் 11-40.)

முதலமைச்சர் அவர்களின் தொழிற் கல்வியோடு சேர்ந்த வாழ்க்கைக் கல்வி, முதலமைச்சர் அவர்களின் புரட்சிகரமான திட்டம் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குகின்ற இது போன்ற திட்டங்களைக்கூட ஏற்றுக்கொள்ளக்கூடாதா என்று எதிர்தரப்பிலே சுட்டிக்காட்டினார்கள். ஆனால் அதற்கு முரண்பட்டதாக இந்த அறிக்கை இருக்கிறது என்பதை என்னால் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது.

நாவலர் அவர்கள் அடிக்கடி ஆளும் கட்சித் தரப்பிலும், எதிர் கட்சித் தரப்பிலும் இருப்பவர்களைப் பார்த்து, வெளியிலே நடப்பதைப் பற்றி பேசாதீர்கள், நிதி நிலை அறிக்கையின்மீது பேசுங்கள் என்றார். அதனால் நானும் நிதி நிலை அறிக்கையின் பாரா 44 ஐ பற்றி பேசுகிறேன். நான் நாவலர் அவர்களை மெத்த பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். Unde the scheme of self-su ficiency for municipal ties Government had sanctioned a sum of Rs. 500 lakhs in 1984-85 for the implementation of the scheme for 30 municipalities under Phase III. 1560 works were taken up for execution. நான் அங்கே தான் வருகிறேன். அடுத்து ரொம்ப அழகாக அதிகாரிகள் தந்திருக்கிறார்கள். A provision of Rs. 5.00 crores has been made in 1985-86. 1984–85-ல் ரூ. 500 இலட்சம், 1985-86-ல் ரூ. 5 கோடி. நம்முடைய நாவலர் அவர்களுக்கு ஆங்கில இலக்கணம் நன்கு தெரியும். அவர் பேச்சை நான் கேட்டிருக்கிறேன். முதலில் நௌன் போட்டார். "for execution." Then "to execute" பிறகு நௌன் வெர்பாகி விட்டது. வெர்பாக மாற்றிவிட்டார்கள் என்பதைத் தவிர வேறு எதுவும் இல்லை என்பதை என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது!......(மணியடிக்கப்பெற்றது) நீங்கள் என்னை அனுமதிக்க வேண்டும். இது என்னுடைய கன்னிப்பேச்சு. ......(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் பழைய மெம்பர். இது உங்களுடைய கன்னிப் பேச்சாகாது. 20 உறுப்பினர்கள் பேர் கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, திரு. ப. பொன்னுரங்கம் கன்னிப்பேச்சு என்று சொல்கிறார். இப்படிப்பட்ட முதிர் கனிகளை நாங்கள் எப்படி ஏற்றுக் கொள்வது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் முடியுங்கள். 20 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, தேர்தல் நேரத்திலே ஒரு கருத்து சொல்லப்பட்டது. அது என்ன கருத்து என்றால் குடும்பத்தில் ஒருவருக்கு வேலை. இந்த குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை எப்படி என்றால் This Centrally sponsored programme intends to provide employment to atleast one person per family for a period of not less than 100 days in a year. ஒரு வருடத்திலே 100 நாட்கள் அவர்களுக்கு வேலை கொடுப்பார்கள். என்ன வேலை? கொத்தனார் வேலையா? நான் கூட வீடு கட்டும்போது வேலை கொடுக்கிறேன். குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை என்பது இதுவா என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய நாவலர் அவர்கள் புள்ளிவிவரத்திலே நல்ல திறமைசாலி. இந்த புள்ளிவிவரத்தில் எப்படித் தவறினார்கள் என்று தெரியவில்லை. ஏனென்றால் அவர் சொல்கிறார்.

The Government have decided to open 20 hostels for Backward classes and 15 hostels for Adi-Dravidars at a total cost of Rs. 23 Lakhs. 35 ஹாஸ்டல்களுக்கு ரூ. 23 இலட்சம். பிராக்டிகலாக ஒத்துக்கொள்ள முடியுமா? ஒரு வீடு கட்டுவதற்கே ரூ. 50,000 ரூ. 60,000 என்று ஆகிறது. ஒரு ஹாஸ்டலுக்கு ரூ. 65,000 நடக்குமா? இது உறுதிப்பாடான திட்டமா? நடப்பதற்காக சொல்லப்படவில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பிற்பட்டோர்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் விடுதிகள் திறக்கப்படுகின்றன. விடுதிகள் அரசுக் கட்டிடங்களாகத் திறக்கப்படுவதில்லை. ஏறக்குறைய 600 சில்லறை விடுதிகளில் நானூற்றுச் சில்லறை விடுதிகள் வாடகைக் கட்டிடங்களில் இருக்கிறது. அதற்கென்று தனியாக கட்டிடங்கள் ஒதுக்கும் போது, படிப்படியாக கட்டிடங்கள் கட்டுவோமே தவிர எடுத்த எடுப்பிலே கட்டிடங்கள் கட்டிக் கொடுப்போம் என்று சொல்லவில்லை. அப்படிச் சொன்னால், உறுப்பினர் சொல்வதுபோல் இந்தத் தொகை போதாது. அது மெல்ல மெல்லதான் நடைபெறும். தற்போது வாடகைக் கட்டிடங்களில் அந்த விடுதிகள் திறக்கப்படும்.



திரு. ப. பொன்னுரங்கம்: சர்க்கரைக்கு விலை ஏறியிருக்கிறது. தேயிலைக்கு, காபிக்கு விலை ஏறியிருக்கிறது. ஆனால் பாலுக்கு அட் எ ஸ்ட்ரெச் 65 பைசா ஏற்றியிருக்கிறார்கள். தேயிலைக்கு டாக்ஸ் ஆட்டோமெடிக்காக வருகிறது. காரணம் டீசல் விலை, டயர் விலை ஏறியவுடனே லாரிகளிலே தேயிலை வருகிற காரணத்தினால் விலை ஏறுகிறது. அதைப்போலவே வேகனிலே வந்தால் ரயில்வே பேர் ஏறிவிடுகிறது. ஆனால் நாம் எல்லாம் காலையில் எழுந்தவுடன் காபி, டீ சாப்பிடுகிறோம். குழந்தைகளுக்குப் பால் வாங்கிக் கொடுக்கிறோம். அதற்குப் போய் அட் எ ஸ்டிரெச் 65 பைசா ஏற்றியிருப்பது சரியல்ல, இங்கே பால்வளத் துறை அமைச்சர் இல்லை, இருந்தாலும் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் அவர்களிடம் சொல்லி அதைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எலக்ஷன் மேனிபெஸ்டோவிலே சொன்னதைப் பற்றி நான் அன்றைக்கே கேட்டேன். படிப்படியாக நிறைவேற்றுவோம் என்று மாண்புமிகு அமைச்சர் திரு. சௌந்திர ராசன் அவர்கள் சொன்னார்கள். புரபஷனல் டாக்ஸை எடுக்க வேண்டுமென்று சொன்னீர்கள், ஒருவேளை பட்ஜெட்டிலே கொஞ்ச கொஞ்சமாக வரும் என்று நினைத்தேன், கார்ப்பரேஷனுக்கு முதலிலே வரும், பிறகு முனிசிபாலிடிக்கு வரும், பிறகு பஞ்சாயத்துக்கு வரும், அது படிப்படியாக வரும் என்று நினைத்தேன், ஆனால் ஒன்றுமே இல்லை. ஆகவே தேர்தல் வாக்குறுதிகளைக் காப்பாற்றுகிறவர்களாக நீங்கள் இல்லை.

போலீஸ்காரர்களுக்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் போலீஸ் ஸ்டேஷன் கட்டப்படும் என்று சொல்லப்படுகிறது. போலீஸ் ஸ்டேஷன் கட்டினால் அவர்களுக்கு அது டிரஸாக மாறுமா? அது அவர்களுக்கு உணவாக மாறுமா? இந்த நிலை துர்பாக்கியமான நிலைமை. அவர்களும் மனிதர்கள்தான், என்.ஜி.ஒக்கள் அவர்களுக்காக இந்த பட்ஜெட்டிலே நீங்கள் சொல்லாவிட்டாலும் அலாக்கேஷனிலே அது இருக்கிறது நான் பார்த்தேன். போன தடவை அலாக்கேஷனிலே இருந்தது. ஆனால் எனக்கு சந்தேகம் என்னவென்றால் அலாக்கேஷனிலே இருந்தாலும் தருவார்களா இல்லையா என்ற சந்தேகம் இருக்கிறது. போலீஸாருக்கு சப்சிடி காஸ்டிலே உணவு கொடுக்கிறோம். ஆரம்ப நிலையிலே 24 கிலோ அரிசி, 4 கிலோ சர்க்கரை, 4 கிலோ எண்ணெய் என்று கொடுத்து போலீஸார் 60 ரூபாய் கொடுத்தார்கள் அதற்காக. ஆனால் இப்போது அதை 80 ரூபாயாக ஆக்கியிருக்கிறார்கள். ஆனால் கொடுப்பது என்ன தெரியுமா? 24 கிலோ அரிசியென்பது இன்றைக்கு 16 கிலோ அரிசிதான் கொடுக்கப்படுகிறது. 4 கிலோ சர்க்கரை கொடுத்தாலும்கூட எண்ணெய் 4 கிலோ கொடுக்கப்பட்டது இன்றைக்கு 1 கிலோதான் கொடுக்கிறோம். ஆகவே இப்படிப்பட்ட நிலை இருக்கிறது. ஆகவே சப்சிடி காஸ்டிலே நிறைய அவர்களுக்குத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

மேலும் சில பொருட்களுக்கு சிங்கிள் பாயின்ட் வரியாக்கியதற்காக பாராட்டுதல் வியாபாரிகளால் மாண்புமிகு அமைச்சர் திரு. வீராசாமி அவர்களுக்கு நடத்துகிறார்கள், எனக்குத் தெரியும். நல்லது செய்தால் பாராட்டலாம். ஆனால் வியாபாரிகளின் நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கிற வணிக நல வாரியம் என்று மாண்புமிகு முதல்வர் எம். ஜி. ஆர். அவர்கள் 1980 ஆம் ஆண்டு அமைச்சரவைக் கூட்டத்தை முடித்துவிட்டு வெளியே வருகிறபோது வணிக நல வாரியம் அமைக்கப்படும் என்று சொன்னதுபற்றி இந்தப் பத்திரிகையிலே செய்தி வந்த அன்றைய தினமே நான் இங்கே கேட்டேன், ஆனால் இன்றைக்கும் அதை நடைமுறைப்படுத்தவில்லை, ஆகவே வியாபாரிகளின் நீண்டநாள் கோரிக்கையாக இருக்கிற வணிக நல வாரியத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வேக்கன்சீஸ் பில் அப் செய்வது பற்றிச் சொல்ல விரும்புகிறேன். எத்தனையோ வேக்கன்சீஸ் பில் அப் செய்யப்படாமல் இருக்கிறது. அவை சாதாரண வேக்கன்சீஸ் ஆக இருந்தால் பரவாயில்லை, ஹைகோர்டிலே நிலைமை பேரவைஸ் ஆகக்கூடிய முறையிலே ஹைகோர்ட் ஜட்ஜுகளே போடப்படாத நிலைமை இருக்கிறது, இருப்பதே 25 அதிலே 6 வேக்கன்ஸீஸ் பில் அப் பண்ணவில்லை என்றால், மேலும் 1984–85 இல் 4 ஜட்ஜ் ரிடையராகப் போகிறார்கள். அதற்காக நான் உங்களை மட்டும் சொல்லவில்லை. மத்திய சர்க்காரையும் சொல்கிறேன், துரிதமான நடவடிக்கை எடுப்பதன் மூலம் இதுபோன்ற நிலைமைகளைத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே சில பொருட்களுக்கு எக்ஸம்ப்ஷன் என்ற முறையிலே இருக்கிறது. ஆனால் பட்ஜெட்டிலே சொல்லப்படாத முறையிலே Entertainm nts Tax Bill பாஸாகியிருக்கிறது, Prawns. Frogs,-- இவைகளுக் எல்லாம் வரிப்போட்டு பில் பாஸாகியிருக்கிறது. pipes, Hoses flevible pipes இவைகளுக்கு எல்லாம் அடிஷனல் டாக்ஸ் போட்டு பில் பாஸாகியிருக்கிறது. பட்ஜெட்டிலே காட்டாமல் தனிப்பட்ட முறையிலே மசோதாக்கள் மூலமாக வரியை உயர்த்திருக்கிறீர்கள் என்பதை சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியாது, இன்னொன்றையும் சொல்லவிரும்புகிறேன். அரசாங்கத்திற்கு தெரிந்து நடக்கிறது என்று நான் சொல்லவில்லை. குடிசை மாற்று வாரியத்தின் நடவடிக்கை பற்றிச் சொல்கிறேன். இண்டியன் ஆயில் கார்ப்பரேஷன் பைப் லைன்கள் மேலே குடிசைகள் கட்டப்பட்டிருக்கின்றன. அவற்றை அகற்றுவதற்காக, 9,24,000 அந்த நிறுவனம் கொடுத்திருக்கிறது, இதைத் தவிர அரசு உலகவங்கியிலிருந்து கடன் வாங்கியிருக்கிறது. அதை 3 வருடம் டெபாசிட் செய்ய வேண்டும். ஆனால் ஒருவருடம்தான் டெபாசிட் செய்திருக்கிறது குடிசைமாற்று வாரியம். அதன்மூலமாக 2,49,126 ரூபாய் நஷ்டம் வாரியத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. அதைப்போலவே வள்ளீஸ்வரன் கோயில் திட்டத்திலே கடைகள் கட்டப்பட்டிருக்



கின்றன. அங்கே வியாபாரிகள் போகவில்லை, காரணம் ஜனங்கள் வாங்கவராத இடத்திலே கடைகளைக் கட்டியிருக்கிறார்கள், ஆனால் வியாபாரிகள் போகவில்லை, அதனால் நட்டம், இதில் இன்னொரு விநோதம் என்ன தெரியுமா? அந்த கடைகளை கட்டி அதை பூட்டி வைத்து இருக்கிறார்கள். அலாட்மெண்டு செய்து விட்டு பூட்டி வைத்து இருக்கிற கடைக்கு மின்சார கட்டணம் 4 ஆயிரத்து சொச்சம் நம்முடைய போர்டு கட்டியிருக்கிறார்கள். மின்சாரம் பயன்படுத்தாத கடைகளுக்கு மின்சாரக் கட்டணம் கட்டியிருக்கிறார்கள். பூட்டியிருக்கிற கடையில் எப்படி மின்சாரம் செலவாகியிருக்கும். இதை நினைத்துப் பார்க்க வேண்டாமா? இந்த கடைகளை முறையாக கொடுக்கத் தவறியதன் காரணமாக உரிய நேரத்தில் அலாட்மெண்டு செய்யாததன் காரணமாக ஒரு பிரிவில் 4,390 ரூபாய் நஷ்டம். அடுத்த பிரிவில் 11,268 ரூபாய் நஷ்டம். பூட்டி இருந்த கடைக்கு கரண்டு சார்ஜ் 4,480 ரூபாய் நஷ்டம். "Thirumangalam Phase II Scheme-Allolment was not made in due time-Due to adm nistrative reason and due to delay in allotment up to 31-3-1984 Rs. 12,260 loss" நஷ்டம் யாருக்கு?

(முற்பகல் 11.50)

வாரியத்திற்கு சொந்தமாக 10 வண்டிகள் இருக்கின்றன. அதை அதிகாரிகள் யூஸ் செய்யலாம். அப்படி 10 வண்டிகள் இருந்தும் அங்கு இருக்கிற அதிகாரிகள் அதையும் பயன்படுத்திக்கொண்டு அவர்கள் டி.ஏ. வாங்கியிருக்கிறார்கள். டிராவலிங் அலவன்ஸ் என்ன என்று விளக்கம் ஆடிட் ரிப்போர்ட்டில கேட்டால் பில் கொடுக்கவில்லை. எந்த வண்டியில் பயணம் செய்தார்கள் என்றும் சொல்லவில்லை. செகரட்டரிக்கு புரவிஷன் கிடையாது. புரவிஷன் இல்லாத செகரட்டரி பில் போட்டு வாங்கியிருக்கிறார். அவரவர்கள் பில் போட்டு வாங்கும் வாரியமாக இருக்கிறதே தவிர குடிசை மாற்று வாரியமாக ஒழுங்காக இல்லை என்பதை நான் மெத்த பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

அடுத்து, கடர்கரை நகர் திட்டம், ஏ. இ. கோயில் தெரு திட்டம். அட்கோ திட்டத்தின் மூலம் வீடு கட்ட நிலம் வாங்கிவிட்டார்கள். நிலம் வாங்கிய பிறகு வீடு கட்டும் திட்டத்தை கைவிட்டு விட்டார்கள். அதனால் ஏற்பட்ட நஷ்டம் என்ன என்று கேட்டால் நிலம் வாங்கின பிறகு டாகுமெண்டு சார்ஜ் 35,000 ரூபாய். Soil Test, Publication of tenders, etc. Rs. 1,62,631.92.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களுக்கு கொடுத்தது போல் எல்லோருக்கும் நேரம் கொடுத்துக்கொண்டு இருந்தால் யாருமே பேச முடியாது. மற்றவற்றை டிமாண்ட் ஸில் பேசிக்கொள்ளலாம்.

திரு. எம். அண்ணாதாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள்

சமர்ப்பித்துள்ள 1985-86 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது திருச்சி மாவட்டம், திருவரம்பூர் தொகுதியின் சார்பில் 2-வது முறையாக மிகப் பெரிய தொழிலாளர்கள் பகுதியிலிருந்து என்னை இந்த மாமன்றத்திற்கு தேர்ந்து எடுத்து அனுப்பிய அந்த வாக்காள பெருமக்களுக்கும் என்னை இந்த மாமன்றத்திலே 2-வது முறையாக கலந்து கொள்கின்ற வாய்ப்பினை அளித்து அங்கே இருந்து என்னை ஆசிர்வதித்து வெற்றிப்பெறச் செய்த மாண்புமிகு புரட்சித் தலைவர் இதய தெய்வம் அவர்களுக்கும் முதற்கண் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள் கிறேன். இங்கே எனக்கு முன்னல் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் அவர்களுடைய பாணியிலே அழகாக இங்கே பல குற்றச்சாட்டுகளையும் சொன்னார்கள். இங்கே பல கருத்துக்களையும் சொன்னார்கள். அவர்களுக்கு நான் மிக்க பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் ஏழரை ஆண்டுக் காலம் இந்த ஆட்சியை நடத்தினீர்கள் என்பதை மறந்திருக்கமாட்டீர்கள். எங்களுடைய தானைத் தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு இந்த நாட்டு மக்களினுடைய நல்வாழ்விற்கான திட்டங்களை எவ்வளவு தெளிவாக, 1977–க்குப் பின்னால் ஒவ்வொரு நிதி ஆண்டிலேயும் தந்தார்கள் என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். அந்தக் காலகட்டத்திலேயிருந்து இன்றைய வரைக்கும் நீங்கள், நிதி நிலை அறிக்கையிலே ஒன்றுமே இல்லை, ஒன்றுமே இல்லை, இது ஒரு அறிக்கையா, இது ஒரு திட்டமா, இது நடக்குமா என்றுதானே கேலி பேசினீர்கள். இப்படி நீங்கள் கேலி பேசிப் பேசியே, 1977-க்குப் பின்னால், இந்த 1984ஆம் ஆண்டு கடைசி மாதத்திலே நடைபெற்ற தேர்தல் காலம் வரையில் நீங்கள் படிப்படியாகத் தள்ளப்பட்டுக் கொண்டே வந்திருக் கின்றீர்கள். உங்களிடத்திலே ஒன்றுமே இல்லை, ஒன்றுமே இல்லை, ஒன்றுமே இல்லை என்ற நிலைக்கு மக்கள் வந்து, அந்த மக்களாலே தள்ளப்பட்டு இந்த மன்றத்திலே நின்று கொண்டிருக்கிறீர்கள் என்பதைத் தயவுசெய்து மறந்து விடாமல் நீங்கள் கருத்துக்களைச் சொன்னீர்களேயானால் மிச்சம் மீதி இருக்கின்ற அந்த இடத்தையாவது, உங்களுடைய தானைத் தலைவர் காலத்திலே பாதுகாத்துக் கொள்வதற்காக வாவது ஒரு வாய்ப்பு இருக்கும் என்பதை மிக்க பணிவோடு நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்களுடைய தானைத் தலைவர் புரட்சித் தலைவர் அவர்கள் அழகாகத் தெளிவாகத் தெரிந்துதான் நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு நிதியமைச்சரவர்களோடு கலந்து ஆலோசித்தும், நிபுணர் குழுவோடு பேசியும் தான் திட்டங்களை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் மட்டும் இந்தத் தமிழகத்திலே இன்றைக்கு இருக்கின்ற நிபுணர்கள் அல்லாது வெளிநாடுகளிலே இருந்தவர்களைக் கொண்டு வந்து இங்கே நிதி நிலை அறிக்கையை தயாரிக்கவில்லை என்பதைத் தயவு செய்து மறந்து விடாதீர்கள். சட்டம் படித்து விட்டோம்,



நாம் நீண்ட கால அனுபவத்திலே இருக்கிறோம் என்ற மமதையோடு பேசுவீர்களேயானால் நிச்சயமாக நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன், இந்த நாட்டு மக்கள் மிகப்பெரிய அறிவாளிகளாக, தெளிந்தவர்களாக இன்றைக்கு உருவெடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு நடந்து முடிந்ததேர்தலே சாட்சி என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

எங்களுடைய தலைவரவர்கள் நன்றாகச் சிந்தித்துத்தான் செய்திருக்கிறார்கள்.

''உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கும் நிலை''

என்றான் பொய்யாமொழிப் புலவன் வள்ளுவன். அதாவது உழவருடைய கை, தொழில் செய்யாமல் மடங்கியிருக்குமானால், விரும்புகின்ற எந்தப் பற்றையும் விட்டுவிட்டோம் என்று கூறும் துறவிகளுக்கும் வாழ்வு இல்லை என்பதைப் பொய்யாமொழிப் புலவன் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் எடுத்து வைத்த கருத்தை எங்களுடைய புரட்சித் தலைவர் தெரிந்து தான், இந்த நாட்டிலே உள்ள ஏழை எளிய விவசாய மக்கள் வாழ வேண்டுமென்பதற்காக, விவசாயத் துறையில் அதிகமாக அக்கறை காட்டி, 1977க்குப் பிறகு இந்தத் தமிழ் மண்ணிலே இந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்குச் செய்திருக்கின்ற நன்மைகளை, அந்த விவசாயப் பெருமக்கள் பெற்றிருக்கின்ற நன்மைகளை நாங்கள் கோடிட்டுக் காண்பிக்க வேண்டு மென்றால் எங்களுக்கு நேரம் போதாது. நாங்கள் ஆளும் கட்சியிலே இருப்பதால் மணியடிக்கப்பட்டு உட்கார வைக்கப்பட்டு விடுவோம். ஆனால், நீங்கள் நீட்டித்துக்கொண்டே பேசுவதற்கு உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவேதான், புள்ளி விவரக் கணக்குகளை இங்கே நான் சொல்ல முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறேன்.

இந்தக் காலகட்டத்திலே விவசாயிகளுக்குக் கடனை ரத்து செய்திருக்கிறதே, அதை மறுக்க முடியுமா? மேட்டுப் பகுதி நிலங்களை விளை நிலங்களாக மாற்றி, விவசாய உற்பத்தியிலே கூடுதலான நிலையைப் பெற்றிருக்கின்றது என்ற கணக்கு நிதி நிலை அறிக்கையிலே காண்பிக்கப்பட்டிருக்கிறதே. அது உண்மை இல்லையா? தயவுசெய்து சிந்திக்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த, அதுவும் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. மலர்மன்னன் அவர்கள் இங்கே ஆரம்பத்திலே தன்னுடைய கன்னிப் பேச்சிலே பேசுகின்றபொழுது காகிதப் பூ மணக்காது; காகிதச் சட்டம் இனிக்காது என்று சொன்னார்கள்.

(நண்பகல் 12.00)

நான் மிகப் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன், ஞாபகப் படுத்த விரும்புகிறேன், மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, காகிதப்பூ மணக்காது என்ற அந்தச் சொல்லை உங்களுடைய

தலைவர், நாங்கள் எல்லாம் முன்னாலே தலைவராக ஏற்றுக்கொண்ட கலைஞர் அவர்கள்தான் சொன்னார்கள். அவர்கள் காகிதப்பூ நாடகத்தைத் தமிழ்நாட்டிலே நடத்தினார்கள், அதற்குப் பின்னாலே இன்னொன்றையும் அவர்கள் எழுதினார்கள் ''மறக்க முடியுமா'' என்ற திரைப்படத்திலே. ''காகித ஓடம் கடல் அலை மீது போவது போலே மூவரும் போவோம்' என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். உங்களுடைய தலைவர் எழுதிய அந்தக் காகித ஓடம் கடல் அலை மீது போவது போலே போவோம் என்று சொன்னாரே, இன்றைக்கு உங்களுடைய நிலை என்ன? எங்களோடு இருந்த ரைட் கம்யூனிஸ்ட், லெஃப்ட் கம்யூனிஸ்ட் உங்களோடு சேர்ந்தது. ஆக அப்படி நீங்கள் மூன்றுபேரும் அந்தக் கடல் அலை மீது காகித ஓடம் எப்படி போகுமோ அதுபோல நாட்டு மக்கள் மத்தியிலே இருந்து நீங்கள் ஒதுக்கப்பட்டு போய்க்கொண்டிருக்கிறீர்கள் என்பதைத் தயவுசெய்து மறந்து விடாதீர்கள்.

இன்னொன்றையும் நான் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். இங்கே பேசிய அந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காகிதச் சட்டம் இனிக்காது என்று சொன்னார்கள். நீங்கள் ஆண்ட காலத்திலே சட்டங்களை எல்லாம் காகிதத்திலே சொல்லாமல் தங்கத் தகட்டிலேயா இந்த மன்றத்தில் வைத்தீர்கள்? எனவே காகிதத்திலே நீங்களும் நிதிநிலை அறிக்கையை வைக்கவில்லையா என்று கேட்க விரும்புகிறேன். எங்களுடைய தானைத் தலைவர் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் திட்டம் எப்படிப் பட்டது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். 1985-86 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை நீங்கள் நினைக்கிற சீவிச் சிங்காரித்து அத்தரும், ஜவ்வாதும் அணிகலன்களும் அணிந்து ஆடம்பரமாக வாழும் மேற்குடி மக்களுக்காக அல்ல. இந்த நிதிநிலை அறிக்கை அள்ளி முடிந்து அழகாகக் கொண்டையிட்டு, அசல் மல்லிகை, முல்லை மலர்களை அடுக்கி பல வண்ணப் பூக்களால் தொடுக்கப்பட்ட தஞ்சாவூர் சதம்பம் போன்ற மலர்களை அணியக்கூடிய ஏழை, விவசாயத் தொழிலாளர்கள், நடுத்தர மக்கள் போன்றவர்களுக்கான அழகான நிதிநிலை அறிக்கை இது. அந்த வகையிலே அந்த மக்களுக்காகக் கொண்டுவரப்பட்ட திட்டங்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் வைக்கப்பட்டிருக்கின்றன.

நான் கேட்க விரும்புகிறேன், இதற்கு முன்னால் எந்தத் தலைவர் ஆட்சிக் காலத்தில் இப்படி விவசாயப் பெருங்குடி மக்களின் கடனைத் தள்ளுபடி செய்தார்கள். இந்தக் காகிதத் திட்டம் மணக்காது என்று சொல்கிறீர்களே, நான் கேட்க விரும்புகிறேன், நீங்கள் உங்களுடைய ஆட்சிக்காலத்தில் எந்தத் திட்டத்தை மணக்க வைத்தீர்கள். கூவத்தை மணக்க வைப்போம் என்று பல நிகழ்ச்சிகளை நடத்தினீர்கள். வேறு எந்த மணம் வந்தது என்பதைத் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



தொழிலாளர் வர்க்கம் கொடுக்கின்ற குரலுக்கு உடனடியாகப் பரிகாரம் காணக்கூடிய வகையில் அதாவது தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும் என்ற உன்னத கருத்துக்கேற்ப இந்த நாட்டிலே ஒரு அரசை உருவாக்கித் தந்தவர் எங்களது இதய தெய்வம் புரட்சித்தலைவர் தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் பல அடுக்கடுக்கான கருத்துக்களை இங்கே எங்களால் செல்ல முடியும். ஆனால் என்னுடைய தொகுதியிலே உள்ள ஒரு சில கருத்துக்களை மட்டும் நான் இங்கே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

என்னுடைய தொகுதியில் கல்லுடைக்கும் தொழிலாளர்கள் கிட்டத்தட்ட 5 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள். அந்தக் கல்லுடைக்கும் தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று புரட்சித்தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கனிமங்களைப் பொறுத்த வரையில் தமிழ்நாட்டில் எந்தக் கனிமத்திற்குக் கட்டாயம் வரி விதிக்கவேண்டுமோ அதற்குததான் வரி விதிக்கப்பட்டிருக்கின்றது. அதை நாங்கள் வரவேற்கிறோம்.

தமிழ்நாட்டுக்குத் தேவையான. அன்றாடம் தேவையுள்ள கற்கள், அதாவது சிறுசிறு கற்கள், அதாவது சாம்பல் நிறத்திலே உடைக்கப்படுகிற கற்கள், அதற்கு ஒரு சதுர அடிக்கு ரூ. 1-60 வரியாக விதிக்கப்படுகிறது. அதோடு மட்டுமல்லாமல், உள்ளூர் வரி, உள்ளூர் மேல் வரி, என்று அதற்கு மேலும் வரி விதிக்கப்படுவதால் அந்தத் தொழிலாளிகள் பாதிக்கப்படுகிறார்கள். அவர்கள் தொழிற்சங்கங்கள் மூலம் அல்ல, கூட்டுறவுக் கல் உடைக்கும் தொழிலாளர்கள் என்ற அமைப்பின் மூலமாக அரசுக்குக் கோரிக்கை வைத்திருந்தார்கள். அதை அரசு நிராகரித்திருக்கிறது. நான் மிகப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன், அந்தப் பகுதி தொழிலாளர் பகுதி, கல் உடைக்கும் தொழிலாளர் மிகுந்த பகுதியாக அது இருப்பதால், அரசு மீண்டும் பரிசீலனை செய்து ரூ. 1.60 என்ற ஒருமுனை வரியை மட்டும் வைத்துக்கொண்டு, மற்ற, அதிகப்படியான வரியை ரத்து செய்ய பரிசீலனை செய்யவேண்டுமென்று மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் மத்திய அரசாங்கம் மிகப் பெரிய தொழிற்சாலையைக் கொண்டு வருவதற்கு அனுமதி அளித்திருக்கிறது. ரூ. 170 கோடியில் கனரக உலோகக் கலவை ஊடுருவித் தொழிற்சாலை என்னுடைய தொகுதியிலே வர இருக்கிறது என்பதை மேதகு ஆளுநர் உரையிலே சொன்னார்கள். அதற்காக நான் மத்திய அரசாங்கத்திடம் முயற்சி செய்து பெற்றுத் தந்திருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பிலே மட்டுமல்ல, திருச்சி மாவட்டத்தின் சார்பிலேயும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று அதே திருச்சியில் இரண்டாவதுரெயில் பெட்டித் தொழிற்சாலை அமைப்பதற்கு மத்திய அரசு அனுமதி வழங்க வேண்டுமென்று தமிழக அரசு மூலமாகக் கேட்கப்பட்டுள்ளது. இந்த மன்றத்தின் வாயிலாக மத்திய அரசை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதற்கும் அனுமதி அளித்து இந்த இரண்டாவது ரெயில் பெட்டித் தொழிற்சாலை உருவாவதற்கு வழிவகை செய்யவேண்டும். அதனால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பு உண்டு. அதை இந்த மாமன்றத்தின் மூலமாக இங்கே மிக்க பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் இங்கே சொல்லி என்னுடைய உரையை முடிக்கலாம் என்று கருதுகிறேன். அதாவது, என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற தொழிற்சாலைகள், வரப்போகின்ற தொழிற்சாலைகள், இவைகளை எல்லாம் மனதிலே கொண்டு பார்த்தால், இன்றைக்கு நெருக்கடியான நிலை பெருகிக்கொண்டே வருகிறது. மக்கள் தொகை மிக மிக அதிகமாகப் பெருகுவதால் ஒவ்வொரு ஆண்டும் குடிதண்ணீர் பற்றாக்குறைக்கு ஆளாகிற மக்கள், என்றைக்குமே போதவில்லை, போதவில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதை மனதிலே கொண்டு பொன்மலை நகராட்சி என்னுடைய தொகுதியிலே இருக்கிறது; அந்தப் பொன்மலை நகராட்சியிலே நீண்ட காலமாக வைத்த கோரிக்கை, புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலே 1980-வது ஆண்டுக்குப் பிறகுதான், ரூ. 1 கோடியே 90 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு திட்டத்திற்கு அனுமதி வழங்கி குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படை செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகளைத் துரிதமாக முடித்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அரசும் முனைப்பாக முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த இணைப்போடு, என்னுடைய தொகுதியிலே ஆலந்தூரும் சேர்ந்திருக்கிறது; அதோடு அரியமங்கலம் பேரூராட்சி, திருவரம்பூர் பேரூராட்சி, உக்கலை, இன்னும் வேம்பூர் போன்ற கிராமங்கள் உள்ளடங்கியிருப்பதால், அந்த காவிரிக் குடிநீரை அப்பகுதிகளுக்கும் கொடுப்பதற்கு அரசு அனுமதி வழங்கிட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அதிகாரிகளை துரிதப் படுத்தி, வேகமாக அந்தத் திட்டத்தைச் செய்து கொடுத்தால், அந்தத் தொகுதி மக்கள் குடிநீர்ப் பிரச்னை தீர நல்ல வழி ஏற்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, இந்த அளவிற்குப் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன், வணக்கம்.

திரு அ. ரகுமான்கான்: மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. அண்ணாதாசன் அவர்கள் இங்கே திருச்சியிலே கோச் பாக்டரி ஒதுக்கீடு செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். அவருக்கு அந்தத் தகவல் தெரியுமோ, தெரியாதோ' எற்கனவே மத்திய சர்கார் பஞ்சாபுக்கு ஒதுக்கி விட்டது.



திரு. எம். அண்ணாதாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே கோச் பாக்டரியை அமைக்க வேண்டுமென்று சூரியூருக்குப் பக்கத்தில் காந்தலூர் கிராமம் பக்கத்தில் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. அதை நான் தெரிந்தவன்; அதனால் அங்கே வருகிறது என்ற நம்பிக்கையில் இங்கே கோரிக்கையாகக் கேட்கிறேன்.

(பிற்பகல் 12—10)

*திரு. தமிழ்மணி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எட்டாவது நிதிநிலை அறிக்கையை ஆதரித்தும், வரவேற்றும் என்னுடைய கருத்துக்களை தெரிவிப்பதற்கு முன்னால், என்னை அரசியல் வாழ்வில் ஆளாக்கிய வெண்தாடி வேந்தர் ஐயா அவர்களை வணங்கி, வங்க கடல் ஓரம் துயில் கொண்டிருக்கும் தங்க நிகர் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, கருவிலே இருக்கும் உயிருக்கும் முதுமை நிலைந்த நிலைமைக்கும் கரும்பாம் புரட்சித் தலைவர் காலம் கன்னித் தமிழ் நாட்டில் பொற்காலம் என்று கூறி, அந்தப் பொற்காலத்தைப் படைத்திட்ட தானைத் தலைவர், தங்கத் தலைவர், இனியத் தலைவர், இதயத் தலைவர், டாக்டர் புரட்சித் தலைவர் பாதம் வணங்கி, எங்களை எல்லாம் உறுப்பினராகும் வாய்ப்புக்கு வழி செய்த வள்ளலாம் அருளாளர் அண்ணன் ஆர். எம். வீ. அவர்களுக்கு நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து. மயிலையில் இருக்கிற என்னை திருப்போரூரில் போட்டியிடுகிற வாய்ப்பை உருவாக்கிய ஆட்சி மன்றக் குழுவிற்கும் அந்தத் தொகுதியிலிருந்து நான் வெற்றி பெற எனக்கு பாடுபட்ட அருமை கழக உடன்பிறப்புகளுக்கும், தேசிய காங்கிரசைச் சேர்ந்த அருமை சகோதரர்களுக்கும் குறிப்பாக பெற்ற நல் தாய்மார்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். காலிலே பிறந்தவர்கள் என்று வர்ணிக்கப்பட்ட எங்களைப் போன்ற சாதாரணமானவர்கள் எல்லாம் இந்த ஹாலிலே பேசுகிற சந்தர்ப்பத்தை சட்டத்தின் ரெயிலாக உருவாக்கிய டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கு தனித் தொகுதியைச் சார்ந்தவன் என்ற முறையிலே என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ள விழைகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய எதிர்க்கட்சியிலே இருக்கிறவர்கள் தங்களை எதிர்க்கட்சிகளாக ஆக்கிக்கொண்டு சிலபல உணர்வுகளை எல்லாம் உணர்ச்சி வயப்பட்டுப் பேசினார்கள். குறிப்பாக எட்டாவது நிதிக்குழு அறிக்கையில் ஒன்றுமே இல்லை என்று அழுத்தமாக வாதிடுவதாகச் சொன்னார்கள். எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்திருக்கிற இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றை மட்டும் சொல்கிறேன். எல்லோருக்கும் எல்லாமும் வேண்டும் என்ற நம்பிக்கையிலே இந்த மன்றத்திற்கு வந்திருக்கிற நான்,

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு"

என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க அத்தகைய நிலையில் உடைய அரசை இன்றையதினம் 20-ம் நூற்றாண்டின் பொற்கால அரசை எங்களுடைய இன்முகம் காட்டும் இனிய தலைவர் படைத்திருக்கிறார் என்று சொன்னால் அது மிகையாகாது. அத்தகைய அரசை பார்த்து குறைகளைச் சொல்வது சரிதானா? என்று எதிர் முகாமிலிருக்கிற அருமைச் சகோதரர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு வள்ளுவன் சொன்ன இன்னோரு குறளையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இடித்து எடுத்துச் சொல்கிற சக்தியைப் பெற்றவர்கள் தான் எதிர்க்கட்சிகளே தவிர எதையோ பேசி, எதையோ செய்துவிட்டுச் செல்வது அவ்வளவு சிறந்ததாக இருக்காது என்று வள்ளுவன் சொல்கிறான். அந்த வகையில் இன்றையதினம் பாமரமக்களின் பொற்கால உதயத்திற்கு பூபாள ராகமாக இருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையை பக்கத்திற்குப் பக்கம் பயன்தரும் பாங்கினை பார்த்து நான் வரவேற்று சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

புரட்சித் தலைவரின் அமைச்சரவையில் இன்றையதினம் புதிய வரிகளைப் போடவில்லை என்றாலும், இருமுனை வரியை ரத்து செய்து ஒருமுனை வரியாக செய்திருக்கிறார்கள். அந்த நிலையை உருவாக்கியதற்காக வியாபாரிகள் தங்களுடைய நன்றிக்கடனை வெளியிலிருந்து செலுத்துவதைப் பார்க்கிறோம்.

இன்றையதினம் கல்விக்காக அதிக அளவிற்கு மானியத்தை ஒதுக்கி இருக்கிறார்கள். அதேபோல சேற்றிலே விவசாயிகள் கால் வைக்கவில்லையென்றால் நாம் எல்லாம் சோற்றிலே கை வைக்க முடியாது என்ற நிலையை உருவாக்கிய அந்தத் தலைவர் ஏற்கனவே கடவுளின் நேரடித் தொழிலாளர்கள் விவசாயிகள் என்ற எண்ண உணர்விலே தன்னுடைய கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். அந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கெல்லாம் பல்வேறு நன்மைகளைச் செய்திருக்கிறார்கள். உரத்தின் மீது இருந்த வரிக்கும், மின்சாரத்திற்கு புதிய சலுகைகளைச் செய்து சிறு விவசாயிகளுக்கு வேண்டிய உதவிகளையும் செய்து இன்றைய தினம் உன்னத அரசை அமைத்து இருக்கிறார்கள். இப்படி சொல்லிக்கொண்டே போனால் பல்வேறு நன்மைகளைச் செய்திருக்கிறார்கள். அரிசி விலையை ரூ. 1.75 என்று நிர்ணயித்து இருக்கிறார்கள் என்று சொன்னால் அது ஏழை எளியவர்களுடைய பட்ஜெட்டாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் செய்திருக்கிறார்கள்.

'ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்பேன்' என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஏழையின் சிரிப்பிலே இன்பத்தைக் காண்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்திலே மாண்புமிகு எதிர்க்கட்சி சகோதரர்களுக்கு ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன்,



நீங்கள் எதைச் சொன்னாலும், எதைச் செய்தாலும் அது சரியாக இருக்கும். ஆனால் நாங்கள் எதைச் செய்தாலும் அது உங்களுக்குத் தப்பாகத் தெரியும் என்றால் இது எதைக் காட்டுகிறது என்பதை நீங்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் பொன்னுரங்கம் அவர்கள் பேசும்போது நாங்கள் ஏதோ மத்திய சர்க்காரைப் பாரத்து அச்சப்படுகிறோம், ஆயாசப்படுகிறோம் என்பதைப்போலச் சொன்னார்கள். நாங்கள் யார்? உங்களுக்குத் தெரியாதா? உங்களுக்கு என்ன தைரியம் இருக்கிறதோ அதே தைரியம் எங்களுக்குமிருக்கிறது. உங்களை விட நாங்கள் எதிலே சோடை போனோம், சொத்தை போனோம் என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும். நீங்கள் நினைககிறமாதிரி நாங்கள் சோடையும் இல்லை, சொத்தையும் இல்லை. நீங்கள் ஏற்கனவே என்னென்ன சொன்னீர்கள்? 'அன்னை இந்திரா காந்தியே வருக, வருக; இனிய ஆட்சி தருக, தருக' என்று சொன்னதை எல்லாம் நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இந்திரா காங்கிரஸ் கட்சியோடு நீங்கள் இணைந்திருக்கும்போது நீங்கள் என்ன சொன்னாலும் அது நல்லது; இந்திராகாந்தி நல்லவர். இந்திரா காங்கிரஸ் கட்சி எங்களுடன் இருந்தால் அவர்கள் கெட்டவர்கள். நாங்கள் சொல்வது தவறுஎன்று தயவு செய்து மக்கள் மத்தியிலே சொல்ல வேண்டாம்.

பாரதியார் சொல்வார், "வாய்ச்சொல்லில் வீரரடி கிளியே இவர் வஞ்சனை செய்வாரடி கிளியே" என்று. இன்றைக்கு அத்தகைய ஒரு நிலையில் நீங்கள் இருந்துக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை நீங்கள் உணரவேண்டும். இப்படி எல்லாம் வெளியே சொல்லி, நீங்கள் தப்பித்துவிடலாம் என்று எண்ணவேண்டாம். எனக்கு முன்னாலே பேசிய அருமை சகோதரர் பரிதி இளம்வழுதி பேசும்போது மக்கள் தெரியாமல் ஏதோ உங்களைத் தேர்ந்தெடுத்து விட்டார்கள்; உண்மை தெரிந்தால் உருட்டி விடுவார்கள் வெளியே என்று சொன்னார். "இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்" என்றவள்ளுவர் கருத்தைச்சொன்னார். மக்கள் நன்றாகத்தெரிந்துதான் இன்றைக்கு உங்களை வெளியே வைத்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் முதலிலே உணர்ந்துகொள்ள வேண்டும். இன்றைக்கு தமிழ்நாட்டு நிர்வாகத்தை சக்திவாய்ந்த மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களால்தான் நிர்வகிக்க முடியும் என்று கருதி, புரட்சித் தலைவர் கையிலே ஆட்சியை ஒப்படைத்து உங்களை எதிர் முகாமிலே உட்கார வைத்திருக்கிற தமிழக மக்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதி பற்றி சில கருத்துக்கள் கூற ஆசைப்படுகிறேன். செங்கை மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டம். அந்த செங்கை மாவட்டத்தில் என்னுடைய திருப்போரூர் தொகுதி மிகவும் நோய்வாய்ப்பட்ட தொகுதி. அந்தத்

தொகுதி மக்களுடைய நீண்ட நாள் வேண்டுகோள்களை நான் இப்போது மாண்புமிகு முன்னவர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

செங்கை மாவட்டத்தில் பல தொழிற்சாலைகள் இருந்தாலும் அங்கே விவசாயப் பெருங்குடி மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் நிலப்பட்டா விரைவிலே வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஏழை எளிய விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் 50 ஆண்டு 60 ஆண்டு காலம் புறம்போக்கு நிலத்தில் தரிசு நிலத்தில் குடியிருந்து வருகிறார்கள். குடியிருப்பு மனை இல்லாமல் அப்படிப்பட்ட இடங்களில் குடியிருக்கிறார்கள். அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா இல்லாமல் அவதிப்படுகிறார்கள், வேதனைப்படுகிறார்கள். பட்டா இல்லாததால் அரசாங்கம் கொடுக்கிற சில சலுகைகளை அவர்கள் அனுபவிக்க முடியவில்லை. ஆகையால் அப்படிப்பட்ட ஏழை எளிய மக்களுக்கெல்லாம், விவசாயப் பெருங்குடி மக்களுக்கெல்லாம், ஆதிதிராவிட மக்களுக்கெல்லாம் நிலப்பட்டா வீட்டுமனைப்பட்டா கொடுக்க தமிழக அரசு உறுதுணையாக இருந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. எனது தொகுதியில் பல்வேறு கிராமங்கள் இருக்கின்றன. அந்த கிராமப்புறங்களில் அதிக அளவில் படிக்காதவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு பொருளாதார வசதி இல்லை. பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய அந்த ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள் படிப்பதற்கு வசதி படைத்தவர்கள் இருக்கின்ற சென்னை மாநகரில் இருப்பதுபோன்ற பஸ்கட்டண சலுகை இல்லை. சென்னையில் இருப்பவர்கள் வசதி படைத்தவர்கள், படித்தவர்கள். அவர்களுக்கு பஸ் கட்டண சலுகை இருக்கிறது; டோக்கன் சிஸ்டம் இருக்கிறது ஆனால் கிராமப்புறத்தில், வசதியற்ற நிலையில் இருக்கிற குழந்தைகள் படிப்பதற்கு இந்த வசதி இல்லை. ஆகவே கிராமப்புறங்களில் இருக்கிற ஏழை எளிய மக்களுக்கு எல்லாம் பஸ்கட்டண வசதி கிடைக்கின்ற வகையில் தமிழகத்தின் தளநாயகர், தானைத் தலைவர், தங்கத் தலைவர், எங்கள் இனியத் தலைவர் புரட்சித் தலைவர் அவர்கள் உறுதுணையாக இருந்து, தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. என்னுடைய தொகுதியில் 9 மீனவர் குப்பங்கள் இருக்கின்றன. அந்த மீனவர் குப்பங்களில் இருள் சூழ்ந்து காணப்படுகிறது. அந்த இருளைப் போக்க வேண்டும், அவர்களுக்கு வசதி செய்து கொடுக்கவேண்டும். அதற்காக அங்கே சோடியம் விளக்குகளைப் போட்டு, மீன்பிடிக்க விளக்கு வசதி செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே அங்கே இருக்கின்ற மீனவர்களுக்கு குடியிருக்க வீடு கட்டிக்கொடுத்திருக்கிறார்கள். அந்த வீடுகளுக்கு இப்போது தவணை முறையிலே வாடகை வசூலிக்கும் நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதை ரத்து செய்து, வீடு கட்டுவதற்கு ஆன தொகையை மானியமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



(பிற்பகல் 12-20).

அது மட்டுமல்ல, என்னுடைய திருப்போரூர் நகரத்திற்கும் பக்கத்திலே இருக்கின்ற நெம்மேலி என்ற குப்பத்திற்கும் ஒரு பெரிய இடைவெளி இருக்கின்றது சுமார் 2 ஆயிரம் மக்கள் அன்றாடம் சென்று வருகிற ஒரு நிலையிருக்கிறது. எனவே அந்த இடத்திலே ஒரு பெரிய பாலம் கட்டி அந்தப் பகுதி மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக என்னுடைய திருப்போரூர் நகரத்திலே தண்ணீர் பிரச்சனை பெரிய அளவிலே இருக்கிறது. ஏற்கெனவே 33 லட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டம் தீட்டப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு, அமுலுக்கு வந்தாலும், நடைமுறைக்கு செயல் முறைக்கு வரவில்லை. ஆகவே தமிழக அரசு, புரட்சித்தலைவர் அரசு, திருப்போரூர் நகரத்தினுடைய தண்ணீர் பிரச்சனையை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், என்னுடைய தொகுதியில் உள்ள மானாம்பதி என்ற கிராமத்திலே ஏராளமான நிலங்கள் பாசன வசதியில்லாமல் இருக்கின்றன. அவைகளுக்கு தண்ணீர் தேவைப்படுகின்றது. இன்றையதினம் அங்கே உள்ள ஏரிகள் எல்லாம் தூர் எடுக்கப்படாமல், மதகுகள் செப்பனிடப்படாமல் இருக்கின்றன. ஆகவே அந்தப் பணிகளை துரிதமாக செய்ய நடவடிக்கை எடுத்து, உடனடியாக தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பல்வேறு கிராமங்களில் உற்பத்தி செய்கின்ற பொருள்களை விவசாயிகள், சந்தைக்கும், விற்பனை செய்கின்ற இடங்களுக்கும் கொண்டு செல்வதற்கு வேண்டிய போக்குவரத்து வசதியில்லை. ஆகவே, போக்குவரத்து வசதிகளை பல்வேறு கிராமங்களுக்குச் செய்து கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய திருப்போரூர் நகரத்திலே ஒரு மருத்துவமனை ஒன்று இருக்கிறது. ஆனால் அந்த மருத்துவமனை நல்ல முறையிலே நடைபெறவில்லை. அங்கே நிரந்தரமாக மருத்துவ அதிகாரிகளையும், பெண் மருத்துவ அதிகாரிகளையும் போட்டு, அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு மருத்துவ வசதி கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டும் என்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், என்னுடைய தொகுதி மலைப்பகுதிகள் நிறைந்த பகுதி. அங்கே கல் உடைக்கும் தொழிலாளர்கள் நிறைய பேர்கள் இருக்கிறார்கள்..... (மணியடிக்கப்பெற்றது.)

*திரு. சி. பழனிரூத்து: பேரவைத் துணைத்தலைவர் அவர்களே 1985-86ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த அறிக்கையில் ஏழை மக்கள், பாமர

மக்கள் விவசாயப் பெருங்குடி மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்வதற்காக மத்திய அரசு எல்லாவிதமான சலுகைகளையும் கொடுத்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஆகவே அவர்கள் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் தேசிய கிராமப்புற நில மற்றோர் வேலைவாய்ப்புத் திட்டம், ஆகிய திட்டங்களைக் கொடுத்து, ஏழை எளிய விவசாயிகளுக்கு மாசிவ் புரோகிராம் என்ற திட்டத்திலே பல திட்டங்களைக் கொடுத்து, நம்முடைய தமிழக மக்களுடைய, விவசாய பெருங்குடி மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்வதற்காக, அவர்களுடைய வேளாண்மைப் பொருள்கள் உற்பத்தி உயர்வதற்காக பல வழிவகைகளைச் செய்திருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையிலே ஏழை மாணவர்களுக்கு இலவச சீருடை என்பதற்கு 13.5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, 1 முதல் 8 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு என்று சொல்லியிருக்கிறார்கள். அதேபோல் ஏழை மாணவர்களுக்கு இலவச பாட புத்தகங்கள் என்பதற்காக 11⅓ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு உள்ளது. ஆகவே இந்த இரண்டையும் நான் வரவேற்கிறேன். ஆனால் அவைகள் உரிய காலத்திலே, உரிய சமயத்திலே கொடுப்பதுதான் நியாயமாக இருக்கும். ஆகவே காலம் கடந்து கொடுக்காமல், உரிய காலத்தில் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மத்திய அரசாங்கம் இலங்கைத் தமிழர் பிரச்னையில் உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது. அதற்காக இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கூட மத்திய அரசு, இலங்கைத் தமிழர்களுக்காக, 9 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். அதோடு நம்முடைய இலங்கைத் தமிழர்களுக்காக திருவனந்தபுர சட்டமன்றத்தில் கேரள அரசின் முதல்வர் மாண்புமிகு கருணாகரன் அவர்கள், இலங்கை அகதிகளின் புனர் வாழ்விற்காக கேரள அரசு எல்லா வகையிலும் உதவும் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

அதேபோல் நம்முடைய அரசும் எல்லாவிதமான நடவடிக்கையும் எடுக்கும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. தமிழகத்தின் நிதிநிலை அறிக்கையிலே எடுத்த எடுப்பிலேயே மத்திய அரசால் ஏற்பட்ட பாதிப்பை விவரித்து இருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையின் விளைவால் ஏற்பட்டு உள்ள பலன்களைப் பற்றி நிதியமைச்சர் அவர்கள் ஒரு வார்த்தை கூட குறிப்பிடப்படவில்லை. விலைவாசி உயர்வு, இரயில் கட்டண உயர்வு போன்ற நிலைமைகள் இருந்தாலும், மத்திய அரசால் கொண்டு வரப்பட்டுள்ள பயிர் பாதுகாப்புத் திட்டம், நிலமற்றோர் விவசாய தொழிலாளர்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டம், போன்ற திட்டங்களைப் பற்றி ஏதும் குறிப்பிடப்படவில்லை.

இன்று கூட நான் பார்த்தேன். விளையாட்டுப் போட்டிகளுக்காக மத்திய அரசு மாநில அரசுகளுக்கு அதிக நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். புதிய விளையாட்டு அரங்கங்கள் அமைப்பதற்கு தற்சமயம் 5 லட்சம் ரூபாயிலே என்று இருப்பதை 20 இலட்சமாக ஒதுக்கியிருக்கிறார்கள். விளையாட்டு அரங்கங்களை புதுப்பிக்க



1 லட்சம் ரூபாயிலிருந்து 5 லட்சமாக உயர்த்தியிருக்கிறார்கள். கிராமங்களிலுள்ள விளையாட்டு அமைப்புகளுக்கு 600 ரூபாயிலிருந்து 1,300 ரூபாயாக ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகவே இந்த ஆண்டு இளைஞர் ஆண்டு என்று குறிப்பிட்டு, 15 வயதிலிருந்து 35 வயது உள்ளவர்களை கணக்கில் எடுத்துக் கொண்டு உள்ளார்கள். அதிலே 4 கோடி ரூபாய் மாநில அரசு அதற்கு ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகவே இந்த பணம் 378 ஊராட்சி ஒன்றியங்களுக்கு சமமாக பகிர்ந்து எல்லா யூனியன்களுக்கும் விளையாட்டு அரங்கம் ஏற்படுத்தப்படுமா? அல்லது சில ஊராட்சி ஒன்றியங்களுக்கு மட்டும் விளையாட்டு அரங்கம் அமைக்கப் பயன்படுத்தப்படுமா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

எல்லா ஊராட்சி மன்றங்களிலும் இந்த விளையாட்டு அரங்கம் ஏற்படுத்துவதற்கு இந்த அரசு வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாடு முழுவதும் இப்பொழுது கடுமையான வறட்சி நிலவி வருகிறது. குடி தண்ணீர் கிடைப்பது எல்லா இடங்களிலும் தட்டுப்பாடாக உள்ளது. ஆத்தூர் நகரைப் பொறுத்தவரையில் வாரத்திற்கு 2 நாட்களுக்குத்தான் குடிதண்ணீர் வினியோகம் செய்யப்படுகிறது இது போல எல்லா இடங்களிலும் குடிதண்ணீர் பற்றாக்குறை இருப்பதனால், போதிய ஆழ் துளை கிணறுகளையும் புதிதாக, போட்டுத்தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் சுமார் 70 ஆயிரம் ஜனத்தொகை கொண்ட ஆத்தூர் நகருக்கு வாரத்திற்கு இரண்டு முறை தண்ணீர் கொடுப்பது என்பது மிகவும் துர்பாக்கியமான நிலைமை ஆகும். ஆகவே, மேட்டூரில் இருந்து காவிரி தண்ணீரைக் கொண்டு வரும் திட்டம் 1984 ஆம் ஆண்டே நவம்பர் மாதம் அரசு அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால் இன்று வரை வேலை செயல்படவில்லை அதற்கு விரைவான வகையில் நடவடிக்கைகளை எடுத்து, அடிக்கல் நாட்டு விழாவும் நடத்தி, தேவையான வழி வகைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த திட்டத்தில் ஆத்தூர் வரை தண்ணீர் கொண்டு வரப்பட வேண்டும் என்று இருப்பதை தலைவாசல் வரையில் நீட்டித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆத்தூர் அரசு பொது மருத்துவமனை என்பது சேலம் மாவட்டத்திலேயே இரண்டாவது பொது மருத்துவமனையாக உள்ளது. 120 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகச் செயல்படுகிறது. ஆனால் இந்த மருத்துவமனையில் குடிக்க தண்ணீர் இல்லை, மின்சார விளக்குகள் எரிய மின்சாரம் இல்லை என்ற நிலைதான் இருக்கிறது. இந்த மருத்துவமனையில் தண்ணீர் இல்லாததால் நோயாளிகள் பெரிதும் கவலைபடுகிறார்கள். நேற்றைக்கு முன்தினம் கூட, ஒரு தாய்க்கு பிரசவம் ஆனபோது குழந்தையைக் கழுவுவதற்கு கூட அங்கே தண்ணீர் இல்லை என்ற நிலை இருந்தது. ஆகவே அங்கே தண்ணீர் வசதிகளைச் செய்துக் கொடுப்பதற்கு இந்த அரசு எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துக் கொள்ளவேண்டும்

என்று கேட்டுக் கொள்கிறேன். இது குறித்து ஆத்தூரில் இருக்கிற பி. டபிள்யூ டி அலுவல்களில் கேட்டால் தண்ணீர் எங்களுக்குத்தான் இருக்கிறது, அதைக் கொடுக்க இயலாது என்று கூறுகிறார்கள். இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் இருந்தும் தண்ணீர் கிடைக்காத நிலை இருக்கிறது. இந்த மருத்துவமனைக்கு தண்ணீர் கொடுப்பது மிக இன்றியமையாத ஒன்று. ஆகவே மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன், உரிய நடவடிக்கை எடுத்து அந்த நோயாளிகளுக்கு உடனடியாக தண்ணீர் கிடைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அதைவிட சிறிய மருத்துவமனைகளுக்கு கூட நிறைய நிதி ஒதுக்கி எல்லாவித சலுகைகளையும் செய்து வருகிறீர்கள். ஆனால் இந்த மருத்துவமனைக்கு செய்யாமல் இருப்பது வருந்தத் தக்கது. அதுபோலவே அந்த மருத்துவமனைக்கு அருகில் உள்ள போலீஸ் குடியிருப்புகளை வேறு இடத்திற்கு மாற்றி, அந்த இடத்தையும் இந்த அரசு மருத்துவமனைக்கே ஒதுக்கவேண்டுகிறேன். போலீஸ் குடியிருப்பிற்காக வேறு இடத்தை அரசு கையகப்படுத்தியுள்ளது. ஆகவே, இந்த இடங்களில் போலீஸ் அதிகாரிகளுக்கு குடியிருப்புகளைக் கட்டித்தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல என்னுடைய தொகுதியில் பெத்தநாயக்கன் பாளையம் என்னும் பேரூராட்சியிலே கடந்த 8 ஆண்டுகளாக 12 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை ஒன்றைக் கட்டவேண்டும் என்று மீண்டும் மீண்டும் விண்ணப்பங்கள் கொடுத்துக் கொண்டு வருகிறோம். அரசு அதிகாரிகளிடம் கேட்டால் அதை பார்ட்-2 ஸ்கீமிலே சேர்த்துக் கொள்ளலாம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் சேர்க்கவில்லை. அமைச்சர்களைக் கேட்டால், சேர்த்துக் கொள்வோம் என்று பதில் சொல்லிவிடுகிறார்கள். 8 ஆண்டுகளாக இதற்காக கோரிக்கைகளை விடுத்தும் இதுவரையில் நடைபெறவில்லை. இந்தப் புறக்கணிப்பு ஏன் என்று எனக்கே புரியவில்லை, எல்லாவற்றிற்கும் நம்முடைய நாவலர் அவர்கள் காட்கில் விதிகளை பயன்படுத்தி பேசி வருகிறார்கள். அதையும் எங்களுடைய தொகுதிக்கு எடுத்துக் கொண்டு, எல்லாவிதமான சலுகைகளையும் செய்துதர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான பெத்தநாயகக்கன் பாளையம் மருத்துவமனையிலே நாள் ஒன்றுக்கு 200 உட்புற நோயாளிகள் வந்து சிகிச்சை பெறுகிறார்கள். அப்படியும் அந்த ஊரிலே போதுமான படுக்கை வசதிக் கொண்ட கட்டிடம் ஒன்றைக் கட்டித்தருவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை. என்னுடைய தொகுதியில் மல்லிகரை, ஆரியபாளையம் ஆகிய இரண்டு ஊர்களிலும் ஆரம்ப பொது சுகாதார நிலையங்கள் உள்ளன. இவைகளின் தரத்தை உயர்த்தித் தர வேண்டும் என்றும், அதற்குரிய நடடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.



ஆத்தூரில். அரசு மேல் நிலைப் பள்ளி என்று ஒன்று ஆண்களுக்கும், பெண்கள் மேல்நிலைப் பள்ளி என்று பெண்களுக்கும் இரண்டு உண்டு. அரசு மேல்நிலைப்பள்ளியில் 3 ஆயிரம் மாணவர்களுக்கு மேல் படிக்கிறார்கள். அதிலே ஆசிரியர்கள் 120 பேர்கள் உள்ளார்கள். அதை இரண்டாகப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது மேல்நிலைப் பள்ளியாகட்டும், உயர்நிலைப் பள்ளியாகட்டும், எல்லா ஊர்களிலுமே பள்ளிகளுக்கு போதிய கட்டிட வசதி இல்லை என்ற குறை இருக்கிறது. ஆகவே அவைகளுக்கு போதுமான கட்டிடங்களைக் கட்டித்தருவதற்கு இந்த அரசு முழு கவனம் செலுத்தி இன்னும் அதிக நிதி ஒதுக்கீடு செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது 7—வது ஐந்தாண்டு திட்டத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் 10 வரப்போவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டத்தில் ஒரு சர்க்கரை ஆலையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆத்தூர் வட்டத்தில் ஒரு பாலிடெக்னிக் கல்லூரியையாவது அல்லது அரசு ஐ.டி.ஐ. கல்லூரியையாவது ஏற்படுத்தி தரவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன். ஆத்தூரிலே அறிஞர் அண்ணா கலைக் கல்லூரி ஒன்று உண்டு. அந்தக் கலைக் கல்லூரியின் கட்டிடம் 72 ஆம் ஆண்டிலே கட்டப்பட்டுள்ளது. மாணவர்கள் படிப்பதற்கு போதிய கட்டிட வசதி இல்லை. அந்தக் கல்லூரியில் கெமிஸ்ட்ரி வகுப்பு உள்ளது. ஆனால் அது ஒரு நேரம் மட்டும் தான் நடக்கிறது. போதிய இட வசதி இல்லாததால், காலையில் ஒரு வகுப்பும், மாலையிலே ஒரு வகுப்பும் கெமிஸ்ட்ரி படிக்கக் கூடிய அளவுக்கு ஷிப்ட் முறையில் கல்லூரியை நடத்துகிறார்கள். ஆகவே, இந்தக் கல்லூரிக்கு போதிய கட்டிடம் கட்டுவதற்கு தேவையான நிதியை இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12.30)

தாட்கோ மூலம் வீடுகள் ஏழை எளிய மக்களுக்கு கட்டிக் கொடுக்கப்படுகிறது. 8 ஆண்டுகளாக இந்தத் தாட்கோ மூலம் வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு நான் முயற்சி செய்கிறேன். இது வரையிலும் ஒரு வீடு கூட இந்த தாட்கோ மூலம் கட்டித்தரப் படவில்லை. காரணம் செல்வாக்கு படைத்த சட்டமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் எல்லா வீடுகளையும் அவரவர்கள் தொகுதியிலே கட்டிக்கொண்டார்கள். 5,000 வீடுகளை சில அமைச்சர்களே எடுத்துக் கொண்டார்கள். எங்களைப் போன்ற ஒன்றும் அறியாத, செல்வாக்கு இல்லாத உறுப்பினர்களுடைய நிலை என்னாவது என்பது புரியவில்லை. எல்லா பகுதிகளுக்கும் தாட்கோ மூலம் வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சி. பழனிமுத்து] [1985 ஏப்ரல் 4

மைய அரசின் மூலம் நடத்தப்படுகின்ற தேசிய வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ், வீடு கட்டிக் கொடுப்பதில் ஒரு ஊராட்சிக்கு 50 வீடுகள் என்று ஒதுக்கியிருக்கிறார்கள். அது போன்று தாட்கோ மூலம் ஏதாவது ஒரு நிர்ணயம் செய்து 100 வீடுகளோ, 50 வீடுகளோ கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நகராட்சி சாலைக்கு அரசு மானியம் வழங்க வேண்டும். நகராட்சி சாலைகள் மிகவும் பழுது அடைந்த நிலையில் உள்ளது. எந்தச் சாலையை பார்த்தாலும், செப்பனிடப்படாமல் இருக்கிறது. ஆத்தூரிலிருந்து 13, 14 நம்பர் டவுன் பஸ் செல்லு கின்ற சாலையைப் பார்த்தால், அது பற்றி கேட்டால், நகராட்சியிலே சம்பளத்திற்கே பணம் இல்லை, நாங்கள் எப்படி செப்பனிடுவது என்று கூறுகிறார்கள் ஆகவே அந்த முறையிலே நகராட்சிகளுக்கு அரசு மானியம் கொடுக்க வேண்டும்.

என்னுடைய பகுதியில் அம்மாபாளையத்தில் குடிநீர் பிரச்சனை பல ஆண்டுகளாக இருக்கிறது. ஜவ்வரிசி மில் இருப்பதால் அந்த அம்மாப்பாளையம் ஊராட்சியில் கழிவுநீர் முழுவதும் ஆற்றில் கலந்து விடுகிறது. 5,000 ஜனத்தொகை உள்ளது. அப்பகுதி மக்களுக்கு அந்த சாக்கோ தண்ணீர் போய் ஆழ்துளை கிணறில் புகுவதால் அந்தத் தண்ணீர் குடிப்ப தற் தகுதியில்லாத நிலையில் இருக்கிறது. ஆழ் துளை கிணறு களை அந்தப் பகுதியிலே போட்டு தண்ணீர் வசதியை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பைத்தூர் ஊராட்சியிலுள்ள மலைவாழ் மக்கள் பலர் அதிகமாக வசிக்கக்கூடிய இடம். 1982 ஆம் ஆண்டில் சாலை அமைக்கப்பட்டது. அது முற்றுப்பெறாமல் இருக்கிறது. அந்த பைத்தூர் மலையில் உள்ள தவளப்பட்டி, வானாவரம், சல்லுக் கட்டு, முருகம் ஆகிய ஊர்களுக்கு சாலைகள் அமைத்துத்தர வேண்டும். தேசிய வேலைவாய்ப்பு மற்றும் கிராமப்புற நிலம் அல்லாத ஏழை விவசாய வேலைவாய்ப்புத் திட்டங்கள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது நில உடைமை மேம்பாட்டுத் திட்டம் என்று எல்லா பகுதி களிலும் கொண்டு வந்துள்ளோம். நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்திலே வருகின்ற அதிகாரிகள் ஒருவருக்கு நிலப் பட்டா இருந்தால், அந்த இடத்திலே நிலத்தை விற்றிருந்தால், அந்த நிலத்தை விற்றவர் தன்னுடைய டாக்குமெண்ட்டை கொண்டு போய் காண்பித்தால், பதிவு செய்யவில்லை என்பதால், மாற்றம் செய்யாமல் இருப்பதால் அவருக்கு அந்த இடத்தை நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தினால் பதிவு செய்துகொடுக்க முடிய வில்லை என்று கூறுகிறார்கள். அந்த இடத்தை தரிசாக விட்டு விடுகிறார்கள். ஆகவே நல்லது செய்கிறேன் என்று கூறி, இப்படிப்பட்ட திட்டத்திலே பலவிதமான சிக்கல்கள் இருக் கின்றன. அதிலும் ரிசம்ஷன் தாசில்தார் என்று போட்டு உள்ளார்கள். 'டி' கார்டு பெற்று, ஹரிஜன மக்கள், தாழ்த்தப் பட்டவர்கள் அந்த நிலங்களை 10 ஆண்டுகள் கழித்து விற்க



1985 ஏப்ரல் 4] [திரு. சி. பழனிமுத்து]

வேண்டும். மாற்றுவதாயின் ரிசம்ஷன் தாசில்தாரை சென்று பார்க்க வேண்டுமாம். இது மிகவும் தேவையற்ற ஒன்று. நாம் ஏழை எளிய ஹரிஜன மக்களுக்கும், மற்றவர்களுக்கும் கொடுத்த வற்றை நாம் திரும்ப எடுத்துக்கொள்ளவில்லை. அப்படி இருக்கும்போது திரும்ப இந்த அலுவலகத்திற்கு வந்தால் பணம் அதிகமாக செலவாகிறது. அதுபோன்ற சூழ்நிலை வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்திலே கால்நடை மருத்துவ கல்லூரி ஒன்று 1985-86-ல் ஆரம்பிப்பதை நான் வரவேற்கிறேன். மருத்துவக் கல்லூரி ஒன்றும் சேலத்திலே ஆரம்பிப்பதை வரவேற்கிறேன். சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் வட்டத்தை பின் தங்கிய வட்டமாக தமிழக அரசு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நமக்கு இந்த ஆண்டு இளைஞர் ஆண்டு என்று குறிப்பிடுவ தால் இரயில்வேயில் மைய அரசு 6 பேர் ஆயிரம் கிலோ மீட்டர் பிரயாணம் செய்தால் அவர்களுக்கு பாதி கட்டணச் சலுகை கொடுத்துள்ளார்கள். அதுபோல் நம்முடைய தமிழக அரசு போக்குவரத்துத் துறையிலே இருக்கின்ற போக்குவரத்துக் கழகங்களுக்கு 500 கிலோ மீட்டர், ஆயிரம் கிலோ மீட்டர் சென்றால் அவர்களுக்கு பாதி கட்டணம் சலுகை அளிக்க வேண்டும். புதிய உயர்நிலைப் பள்ளிகள் கடந்த ஆண்டு 94 என்று குறிப்பிட்டுள்ளார்கள். என்னுடைய பகுதியில் ஆரிய பாளையம், கல்பகனூர் ஆகிய இரண்டு ஊர்களுக்கும் புதிய உயர்நிலைப்பள்ளியைத் துவக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். பள்ளிக்கு ஊதியத் தொகை ரூ. 25,000 பணம் கட்டி 10 ஏக்கர்கள் நிலங்கள் கொடுத்தும் இதுவரையில் துவக்கப் படவில்லை.

ஆகவே புதிய உயர்நிலைப் பள்ளிகளை இந்த ஆண்டிலாவது துவக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து காடு வளர்ப்புத் திட்டத்திலே எங்கள் பகுதியிலே பெரியகல்ராயன் மலைப்பகுதி இருக்கிறது, அங்கே கெரவாங்காடு என்ற பகுதியிலும் இன்னொரு பகுதியிலும் 4–3–85 அன்றும் 12–3–85 அன்றும் வீடுகள் தீப்பற்றி எரிந்து 100 வீடுகள் எரிந்துவிட்டன. ஹட்கோ மூலமாக அந்த வீடுகளை கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து காடு வளர்ப்புத் திட்டங்கள் மூலமாக ஏழை எளிய மக்கள் வசிக்கக்கூடிய பகுதிகளிலே அவர்கள் தரிசு நிலங்களிலே மரங்களை காடுகளை வளர்க்கிறார்கள். ஆனால் அதிலே வன இலாகாவினர் தலையிட்டு அந்த மக்களுக்கு துன்பங்களையும் தொல்லை களையும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதையெல்லாம் தடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து ஆடு மாடுகள் மேய்வதற்கு மேய்ச்சல் தரையாகப் பயன்படுத்துகிற போது அவர்கள் செடிகளை மரங்களை நடுகிறார்கள். அந்த இடங்களிலே வன இலாகாவினர் மரங்களை நடுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். அங்கே அந்த மக்கள் 200, 300 ஆண்டுக்காலமாக வாழ்கிறார்கள். அவர்களுக்கு ஒதுங்கு வதற்கு இடத்தை ஒதுக்க வேண்டுமென்று கேட்டும்கூட இதுவரை கொடுக்கப்படவில்லை, அதையும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து முதியோர் உதவித் தொகைகள் விண்ணப்பிக்கிறவர்களுக்கு உடனடியாகத் தொகை கொடுக்கப்படுவதில்லை. அது 80 ஆயிரமாக இருந்தது 2,80,000 ஆக இப்போது உயர்ந்திருந்தாலும் அதற்காக அங்கே போதிய இளநிலை உதவியாளர் இல்லை. 8 ஆயிரம் விண்ணப்பங்கள் என்னுடைய பகுதியிலே நிலுவையிலே இருக்கின்றன. ஆகவே அந்தப் பணியைச் செய்வதற்கு போதுமான இளநிலை உதவியாளர்களை நியமிக்க வேண்டுகிறேன். முதியோர் உதவித் தொகை வேண்டுமென்று விண்ணப்பம் கொடுக்க வேண்டுமென்றால் 25 ரூபாய் செலவிட வேண்டியிருக்கிறது. அந்த மனுக்கள் அடிக்கடி காணாமல் போகின்றன என்று சொல்கிறார்கள். ஆகவே அதிகமான உதவியாளர்களை நியமிக்க முதியோர்களுக்கு உதவித் தொகைகளை உடனடியாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஆரியபாளையம், கல்பனூர், கரிப்பட்டி ஆகிய இடங்களிலே உயர் மேல்நிலைப் பள்ளிகளை துவங்க வேண்டும் என்று அரசை கேட்டுக் கொள்கிறேன். எனக்குப் பேச வாய்ப்புக் கொடுத்தமைக்காக நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் முன்வைக்கப்பட்டிருக்கிற இந்த நேரத்திலே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக பொதுவான சில கொள்கை விமர்சனங்களை நான் முன்வைக்க விரும்புகிறேன். குறிப்பாகப் பல்வேறு பிரச்சினைகளைப்பற்றி அந்த அந்த மானியக் கோரிக்கைகள் வருகிறபோது விரிவாக எடுத்துச் சொல்ல வாய்ப்பு இருக்கிறது என்பதால் சில முக்கியமான கொள்கைப் பிரச்சினைகளை நான் பேரவை முன் வைக்க விரும்புகிறேன்.

குறிப்பாக இந்த நிதிநிலை அறிக்கையிலே பல்வேறு திட்டங்களுக்கான நிதியைச் சேகரிப்பதற்கான முறையாக உலக வங்கியிடம் அதிகபட்சமாக அணுகியிருக்கிறது என்பதை நான் வேதனையோடு தெரிவிக்க விரும்புகிறேன். ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை நிறுவுவதற்காக 102.44 கோடி ரூபாய் பெறுவதற்காக உலகவங்கிக்கு மதிப்பீடுகளை அனுப்பியிருப்பதும், தஞ்சை காவிரியை நவீனப்படுத்துவதற்காக 102 கோடி ரூபாய் உதவி கோரப்பட்டிருப்பதும், வாழ்க்கை முறையோடு ஒட்டிய கல்விமுறையை உருவாக்குவதற்கான திட்டத்திற்காக உலகவங்கியிடம் நிதிஉதவி கோரப்பட்டிருப்பதும், பெரிய நகரங்களுக்கு நீர் வழங்குவதற்காக 10 கோடி ரூபாய் உலக வங்கியிடம் கோரப்பட்டிருப்பதும் சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்திற்காக ஸ்வீடிஷ் அனைத்து நாட்டு மேம்பாட்டு அமைப்பின் உதவியுடன் ஒரு பெருந்திட்டம் செயல்பட்டிருப்பதும் இந்த நிதிநிலை அறிக்கையிலே இந்த வாசகங்களையெல்லாம் பரிசீலித்து பார்க்கிறபோது அநேகமாக தமிழ்நாடு நிதித்துறை உலகவங்கியோடு இணைக்கப்பட்டிருக்கிறதோ என்ற ஒரு அச்சம் ஏற்பட்டிருக்



கிறது. உலகவங்கியிடம் கடன் பெற்றுத் திட்டங்களை தீட்ட வேண்டாம் என்பது நம்முடைய கருத்தல்ல. ஆனால் கடன் பெறுகிறபோது உலகவங்கி என்பது வெறும் வட்டிக்குக் கடன் கொடுக்கிற பாங்க் அல்ல. உலகத்தின் பல்வேறு நாடுகளின் அரசியலிலே தலையீடு செய்வதற்குரிய ஒரு ஏகாதிபத்திய நிதி அமைப்பு என்ற முறையில் அந்த ஏகாதிபத்திய நிதி அமைப்பிடம் கடன்பெற்று இருப்பது எந்த நிபந்தனைகளின் அடிப்படையில் என்பதை இந்தப் பேரவையிலே வைக்க வேண்டுமென்று நான் ஒரு பிரஜை என்ற முறையிலே கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். கடன்பெறுவதற்கான நிபந்தனைகள் என்ன என்ன என்பதை இந்தப் பேரவை முன் வைக்க வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஏன் இதை வலியுறுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்றால், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் பஸ் கட்டணம் உயர்த்தப்படும் என்று. பஸ் கட்டணம் உயர்த்த பிரஷர் எங்கிருந்து வருகிறது. பஸ் கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்று சொல்லி இந்த மாநில அரசு முடிவு எடுப்பதற்கு முன்னர் இந்த மாநில அரசுக்கு அந்த சிந்தனை உருவாவதற்கு முன்னர் உலக வங்கி என்ன சொல்கிறது. நீங்கள் நகரத்தில் நீர் கொண்டுவருகிற திட்டத்திற்கு கடன் வேண்டுமானால் பஸ் கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்று உலக வங்கி தமிழக அரசை நிர்ப்பந்திக்கிறது என்று நான் கருதுகிறேன். இந்த மாநிலத்தில் பஸ் கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்று நிர்ப்பந்திக்கிற அதிகாரம் உலக வங்கிக்கு எப்படி போயிற்று? அந்த அதிகாரத்தை அவர்கள் எப்படி பெற்றார்கள். ஆக நீங்கள் பெற்று இருக்கிற, இந்த மாநில் அரசு பெற்று இருக்கக்கூடிய கடன்களால் இவ்வளவு துயரங்கள் மாநிலத்திற்கு ஏற்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளுவதற்கு அந்த நிபந்தனையை சபைக்கு தெரிவிக்க வேண்டும் என்று நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

(பிற்பகல் 12.40)

அடுத்து இதைப்பற்றி குறிப்பிடுகிறபோது சிலர் கருதுகிறார்கள் வட்டிக்கு தானே கடன் வாங்குகிறோம், வணிக நோக்கத்திற்கு தானே கடன் வாங்குகிறோம் என்ற தவறான கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இந்தியாவின் வரலாற்றைப் படித்துப் பார்த்தவர்களுக்குத் தெரியும். இந்திய நாட்டை நீண்ட காலம் அடிமைக் கொண்ட வெள்ளைக்காரன் முதலில் வாள் எடுத்து போர் புரிந்து இந்த ஆட்சியை கைப்பற்றவில்லை. இந்த மண்ணுக்குள் வெள்ளையன் கால் எடுத்து வைத்தது வணிக நோக்கத்தோடுதான். கிழக்கு இந்திய கம்பெனி முதலில் சந்தையை தேடி வந்து பின்னர் இந்த நாட்டை ஆண்டார்கள் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். எனவே ஒரு அரசியல் நோக்கத்தோடு நடத்தப்படுகின்ற ஏகாதிபத்திய அமைப்பு இந்த மாநிலத்திற்கு கடன் தருகிறது என்றால் அதன் உள்ளே மறைந்து கிடக்கிற அரசியல் அபாயத்தை எச்சரிக்க வேண்டிய ஒரு பொறுப்பு உணர்ச்சி இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு உண்டு என்ற முறையில் நான் இந்த கருத்தை முன் வைக்கிறேன்.

அடுத்து 7–வது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்த வரையில் 7 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் திட்டம் தயாரிக்கப் பட்டு இருப்பதாக சொல்லப்படுகிறது. இந்த 7 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் தயாரிக்கும் திட்டத்தின் நகலை டிராப்ட்டை இந்தப் பேரவைக்கு வைக்கவேண்டும் என்று நான் வலிவறுத்த விரும்புகிறேன். இந்த மாநிலத்தினுடைய தேவைகள் உண்மை யிலேயே பூர்த்தி ஆக்க வேண்டிய தேவைகள் பின்னுக்குத் தள்ளப் பட்டு விடுகிறது இந்த மாநில அரசால். எந்த தேவைக்கு முதலிடம் கொடுக்கப்படுமோ அந்தத் தேவைக்கு முதலிடம் கொடுக்காத ஒரு அசட்டைப் போக்கு இந்த மாநில அரசின் நடவடிக்கையால் விளங்குகிறது, 7 ஆயிரம் கோடி செலவிட இருக்கின்ற அந்த நகல் திட்டத்தை இந்த பேரவைக்கு விவாதத் திற்கு வைக்கவேண்டும் என்றும் நான் வற்புறுத்துகிறேன்.

அடுத்து காவல் துறையைப் பற்றி நான் வேதனையோடு சொல்ல விரும்புகிறேன். நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் வைத்து இருக்கிற இந்த அறிக்கையில் காவல் துறையைப்பற்றி 77–வது பாராவில் சொல்லப்பட்டு இருக்கிறது. இதை படித்துப் பார்க்கிற போது உண்மையிலேயே நான் வேதனையோடு சில விஷயங்களை சொல்ல விரும்புகிறேன். எந்த அர்த்தத்தில் நிதி யமைச்சர் அவர்கள் அந்த விஷயத்தைப் போட்டு இருக்கிறார்கள் என்பதும் எனக்குப் புரியவில்லை. அண்மைக்கால ஆண்டுகளில் காவல் துறையின் பணி குறிப்பிடத்தக்க அளவில் மாற்றம் அடைந்துள்ளது. சட்டம்–ஒழுங்கு, குற்றத் தடுப்பு ஆகியவற்றைச் செயற்படுத்துவதுடன் நலிந்த பிரிவினரைப் பாதிக்கும் சிவில் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் போன்ற சமூகச் சட்டங்களைச் செயல்படுத்துவதில் காவல்துறை தீவிரமாக ஈடுபட்டுள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். மக்களின் ஜனநாயக உரிமைகளை ஒடுக்குவதில் தீவிரமாக ஈடுபட்டு இருக்கிறதே தவிர சட்டம் வழங்கியிருக்கிற சட்ட உரிமைகளை பரிப்பதிலும் சட்ட சித்திர வதைகள் செய்வதிலும் தான் காவல் துறை முதலிடம்பெற்றிருக்கிற இந்த நிலையில் அவர்கள் முதுகை தட்டிக் கொடுத்தால் என்ன பொருள். கோழி காலில் கச்சைக் கட்டிவிட்டு ஆட விட அனுமதிப்பது போல் நீங்கள் இந்த முறையில் காவல் துறைக்கு ஊக்கம் தருவது அபாயகரமான எதிர் விளைவுகளை தோற்று விக்கும் என்பதை மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு எச்சரிக்க கடமைப்பட்டு இருக்கிறேன், என்ன நடத்தியிருக்கிறார்கள்? ஆவடியில் என்ன சட்டம் ஒழுங்கை பாதுகாத்து இருக்கிறார்கள்? சாத்தூரில் என்ன சட்டம் ஒழுங்கை பாதுகாத்து இருக்கிறாகள். இந்த மாநிலத்தில் எங்கே சட்டம் ஒழுங்கை பாதுகாத்து இருக்கிறார்கள்? நான் கவர்னர் உரையில் பேசுகிறபோது குறிப்பிட்டேன், உச்ச நீதி மன்றம் கண்டனம் தெரிவித்து சட்ட விரோத சித்திரவதை நிறைந்த ஒரு தன்மையில் இந்த மாநில போலீசார் இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை தெரிவித்து நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார்கள். அதற்கு பின்னாலும் இப்படி ஒரு ஊக்கம் கொடுக்கிற போக்கில் நிலைமை நிலவுமானால் அது சரியல்ல என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.



திருப்பூர் குமரனுக்கு 45 அலட்சம் ரூபாய் செலவிலே நினை வாலயம் எழுப்புவதற்காக நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள் மிக்க மகிழ்ச்சி. ஒதுக்கப்பட வேண்டிய விஷயத்திற்கு ஒதுக்கி யிருக்கிறீர்கள். ஆனால் அந்தக் குமரன் ஏன் இறந்தான்? பிரிட்டிஷ்காரர் கொடுத்த தடியடியால்; பிரிட்டிஷ் போலீஸ் தாக்கிய காரணத்தால் மண்டை உடைந்து செத்தான். இந்தத் தேசத்தைக் காதலித்ததால்; இந்த தேச மக்களின் முன்னேற்றத் திற்கான போர்க்களத்தில் போலீஸ்காரரால் அடிபட்டு செத்த குமரனுக்கு நினைவாலயத்தை வைக்க இருக்கிறீர்கள். ஆனால் எந்த மக்களை அந்தக் குமரன் நேசித்தானோ, அந்த மககளை அந்தக் குமரனை அடித்த அதே தடிகளால், அதே பயிற்சியால், அந்தக் குமரன் போராடிய தேசீய விடுதலை கிடைத்ததற்குப் பின்னரும் அடிப்பது நியாயம்தானா? தேசீய விடுதலைக்குப் பின்னரும், செக்கிழுத்த சிதம்பரனுக்குப் பின்னர், அவனை அடித்த போலீஸ், அதைப்போல திருப்பூர் குமரனை அடித்த போலீஸ், சுப்பிரமணிய சிவத்தைச் சித்திரவதை செய்த போலீஸ், தேசீய விடுதலை வாழ்க்கையில் அதே பிரிட்டிஷ் பயிற்சியில், சுதந்திர பாரதத்திலே சித்திரவதை செய்வது நியாயம்தானா? அந்தச் சித்திரவதை தொடருகின்றபொழுது இப்படிப்பட்ட புகழுரை பொருத்தமானதுதானா என்பதை நிதியமைச்சரவர் களின் சிந்தனைக்கே விட்டுவிடுகிறேன். காவல்துறைக்கு இப்படி முதுகைத் தொடுகின்ற போக்கு, காவல் துறையை ஊக்கப் படுத்துகின்ற போக்கு என்ன விளைவுகளை ஏற்படுத்தும் என்பதைப்பற்றி மீண்டும் எதிர்காலத்தில் சிந்திக்க வேண்டுமென் பதற்காக இன்னொரு விஷயத்தையும் சொல்ல விரும்புகிறேன்.

நண்பர்கள் சிலரால் சில விஷயங்களை ஜீரணித்துக் கொள்ள இயலாது. டெல்லி ஹைகோர்ட்டிலே ஒரு தீர்ப்பு கொடுத்திருக் கிறார்கள் சமீப காலத்தில். குற்றத் தடுப்பு எப்படி இருகக வேண்டும் என்பதற்கு அவர்கள் கொடுத்திருக்கின்ற தீர்ப்பு இந்த மாநில அமைச்சரவையால் நிச்சயமாகப் படிக்க வேண்டிய ஒரு தீர்ப்பாகும். அந்தத் தீர்ப்பிலே குறிப்பிட்டிருக்கின்றார்கள்: ''மனிதத் தன்மை, சமூக உணர்வு, நாகரீகப் போக்கு ஆகியவை கொண்ட குற்றத் தடுப்பு பார்வை வேண்டும் காவல் துறைக்கு'' என்று சொல்கிறார்கள். இத்தகைய பார்வையோடு இந்தத் தமிழ்நாட்டின் காவல் துறை திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், சட்டத்தின் மெய்யான உள்ளடக்கமே. குற்றவாளி கள் தப்பித்துக் கொண்டாலும், நிரபராதி தண்டிக்கப்பட்டு விடக் கூடாது என்பதுதான். எனவே, அத்தகைய முறையில் இருக்க வேண்டுமென்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து ஒரேயொரு விஷயம். தமிழ்நாட்டில் ஏராளமான சாலை விபத்துக்கள் தினசரி நடைபெறுகின்றன. நூற்றுக்கணக் கான மக்கள் மடிந்து கொண்டிருக்கிறார்கள். இந்த அரசுக்கு இது புலப்படவில்லையா? இந்த அபாயகரமான சாலை விபத்து களைத் தடுப்பதற்குப் புத்திசாலித்தனமாக திட்டங்களை இந்த

நிதிநிலை அறிக்கையிலே வைத்திருக்க வேண்டுமா இல்லையா? வாகனங்கள் பெருகி விட்டன; சாலைகள் குறுகிக் கிடக்கின்றன; அதிக நேர வேலையின் காரணமாக டிரைவர்கள் தூக்கம் இழந்து தூக்கத்திற்கு ஆளான நிலையில் விபத்துக்கள் ஏற்படுகின்ற அபாயங்கள இருக்கின்றன. ஆகவே, இப்படிப்பட்ட விபத்துக் களைத் தடுப்பதற்கு என்ன வழி என்பதை நீங்கள் செய்திருக்க வேண்டுமா இல்லையா? அதுபற்றி ஒன்றும் செய்யவில்லை. ஆனால் அதுபற்றிச் சிந்திக்காமல் வேறு பல விஷயங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் பேசுகின்ற பொழுது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். 25 அமைச்சர்கள் இருக் கிறார்கள: 25 அமைச்சர்கள் என்றால் 5 பிளஸ் 2 ஆக மொத்தம் 7. 7–ஆம் நம்பர் என்பது முதலமைச்சரவர்களுக்குப் பொருத்த மான ஒரு எண் என்று பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் பாசறையிலே பயின்று, ஒரு புதிய பகுத்தறிவு விளக்கத்தைக் கொடுத்தார்கள். ரொம்ப மகிழ்ச்சி. அந்தப் பகுத்தறிவு விளக்கத்தின் அடிப்படையிலேயே, இலட்சிய நம்பரின் அடிப்படை யிலேயே அரசாட்சியை நடத்த முடியாது; அடிப்படையான பொருளாதாரக் கொள்கைகளோடு நடத்த வேண்டும். அந்தப் பொருளாதார ஞானத்தோடு திட்டங்களை முன்மொழிவதற்கான முறையில் என்ன நடந்திருக்கிறது? வேலையற்றோர் எண்ணிக்கை மிக அதிகமாக உள்ள மாநிலம் தமிழ் மாநிலம். அவர்களுக்கு வேலைவாய்ப்புக்கான திட்டங்களைப் பற்றி அதிகமாக என்ன சொல்லப்பட்டிருக்கின்றது? அதற்குத் தேவையானவை இருக் கின்றனவா? இல்லை. வறுமைக் கோட்டிற்குக் கீழே இலட்சக் கணக்காக உள்ள மாநிலம் தமிழ் மாநிலம். அவர்களின் மேம் பாட்டை, வெறும் வார்த்தைகளால், வெறும் வாக்குறுதிகளால், எந்தவிதமான முன்னேற்றத்தையும் உருவாக்க முடியாது. ஆனால் அவை மட்டும்தான் இருக்கின்றன.

54 கோடி மட்டும் தானே வரி போடப்பட்டிருக்கிறது என்று கூடச் சொல்கிறார்கள். ஆனால் திரைப்படத் துறையிலே சொல்லுவார்களே, மாய அடி, மாயாவிகள் கொடுக்கிற அடி போல, பட்ஜெட்டிலே சொல்லப்பட்ட வரி உயர்வுக்கு மாறாக, பஸ் கட்டணம் உயர்வு; பஸ் கட்டணம் உயரும் என்று பட்ஜெட்டிலே சொல்லப்பட்டதா? சர்க்கரையின் விலை ஏறும் என்று பட்ஜெட்டிலே சொல்லப்பட்டதா? பால் விலை ஏறும் என்று பட்ஜெட்டிலே சொல்லப்பட்டதா? இதெல்லாம் என்ன? கண்ணுக்குப் புலப்படாத மாய இடிதானே. ஆகவே, இந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, பட்ஜெட்டில் சொல்லப்படாத சில விஷயங்களை மக்கள் தலையிலே சுமத்தி இருக்கிறது என்பதைப் பார்க்கும்பொழுது என்ன நினைக்கத் தோன்றுகிறது? வெறுமனே ஆளுங்கட்சி நண்பர்கள் தங்கள் முதுகைத் தாங்களே தட்டிக் கொள்கிறார்கள். ரொம்ப மகிழ்ச்சி. நம்மை நாமே போற்றிக் கொள்வதால் பயன் இல்லை; எதிர்த் தரப்பிலே இருக்கின்ற மக்களின் தரப்பிலே இருந்து மக்களின்



உணர்வுகளைப் பிரதிபலிக்கக் கூடிய தார்மீகப் பொறுப்பை மேற்கொண்டிருக்கின்ற எதிர்க்கட்சிகள் என்ன கருத்தை முன் வைக்கின்றன என்பதை ஜனநாயகப் பூர்வமாகக் காது கொடுத்து கேட்டு, கருத்துக்களைச் சமராடி முறியடிக்க வேண்டுமே தவிர, கருத்துக்களைச் சொல்ல அனுமதிக்காமல் நிர்ப்பந்திப்பது என்பது சரியான வழிமுறைஆகாது என்பதையும் சொல்லிக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12.50.)

இறுதியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசு என்ன கருதுகிறது என்பதைச் சொல்கிறேன். விளம்பரங்களைச் செய்வதில் இந்த அரசுக்கு அளவற்ற வேட்கை என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். திருப்பூர் இரண்டாவது குடிநீர்த் திட்டத்தைப்பற்றி வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே பதிலளித்தார்கள். இன்னும் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திலிருந்து உரிய கடன் பெறப்படவில்லை என்று சொன்னார்கள். ஆனால் 13–12–1983 அன்றே அடிக்கல் நாட்டப்பட்டுவிட்டது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால். என்ன அவசரம்? திட்ட மதிப்பீட்டுக்கு உரிய நிதியைச் சேகரிக்கும் முன்னரே ஏன் அவசரப்படுகிறீர்கள்? அந்த நிதியைச் சேர்ப்பதற்கு முன்னாலே, சேகரிப்பதற்கு முன்னாலே இவ்வளவு அவசரப்படுகிறீர்களே, அதற்கு என்ன அர்த்தம்? உங்களுக்கு திட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்பதைக் காட்டிலும் விளம் பரத்திலே அளவற்ற வேட்கை நிலவுகிறது என்பதுதானே உண்மை. இவற்றை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும் என்பதைச் சொல்லி மற்ற விஷயங்களை மானியக் கோரிக்கையிலே விரிவாகச் சொல்லலாம் என்று கூறி, நன்றி கூறி முடிக்கிறேன்.

திரு. மா. சின்னராசு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களால் அடிக்கல் நாட்டப் பட்ட அந்தத் திட்டப் பணிகள் ஏற்கெனவே துவக்கப்பட்டிருக் கின்றது. எல்.ஐ.சி யிலிருந்து வாங்கப்படுகின்ற அந்தக் கடன் தான் வரவில்லையே தவிர நில ஆர்ஜிதம் செய்வது மற்றும் அதற்கு வேண்டிய ஆய்வுப் பணிகளைச் செய்வது என்பது இரண்டாண்டுகளாகத் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது என்பதையும் மேட்டுப்பாளையம் ஹெட் ஒர்க்கிற்காகக் கூட நிலத்தை ஆர்ஜிதம் செய்கின்ற வேலைகளை எல்லாம் துவக்கி யிருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போடப்பட்ட டுக்குடிநீர் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். ஆனால் நிதியினைச் சேகரிப்பதற்கு முன்னாலேயே அடிக்கல் போட்டிருக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதுதான் நான் சொன்ன கருத்தாகும்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பாகக் கொடுக்கப்படுகின்ற மானியம், ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து பெறப்படுகின்ற கடன் இந்த இரண்டையும் சேர்த்துத்தான் இந்தத் திட்டத்திற்கு பயன்படுத்த இருக்கிறோம். எனவே அரசு மானியம் என்பதை நான் முன்னமேயே அறிவித்து அந்தத் திட்டம் தொடங்கப்படலாம் என்பதற்கு உள்ளாட்சித் துறைலிருந்து அதற்குரிய ஆணை வெளியிடப்பட்டு அந்த ஆணை வெளியிடப்பட்ட அடுத்த திங்களில்தான் முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் பேசுகிறபோது விளம்பரத்தில் இந்த அரசுக்கு ரொம்ப வேட்கை என்று பேசினார்கள். பல ஆண்டுகளுக்கு முன்னாலே சொல்லியிருக்க வேண்டிய கருத்து.

திரு. இ. வி. வச்சிரவேலு: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 20 நிமிடங்கள் எனக்கு ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையைத் துவக்குகிறேன். மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, 1985–86-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை வரவேற்று எனது உரையைத் துவக்குகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் புரட்சித் தலைவர் அவர்களின் ஆலோசனையின்பேரில் இங்கே அளித்திருக்கின்ற மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களுக்கு வணக்கத்தை முதலிலே தெரிவித்துக்கொண்டு, இந்த அரசு விவசாயிகளுக்கு உதவவேண்டும் என்ற நோக்கத்தோடு தான், விவசாயிகளின் விளைபொருளுக்கு உரிய விலை கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்காக 102.44 கோடி ரூபாயை ஒதுக்கி இருக்கின்றது. கிராமப்புறங்கள் நல்ல நிலையில் வளம் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் கிராமங்கள் அனைத்திற்கும் குடிநீர் கொடுக்கவேண்டும் என்ற நல்லெண்ணத்தில் 177.69 கோடி ரூபாய் ஒதுக்கி 7,226 கிராமங்கள் பயனடைகின்ற ஒரு சீரிய திட்டத்தை இன்றைக்குத் தந்திருக்கிறார்கள்.

அதோடுமட்டுமல்ல. விவசாயப் பெருங்குடி மக்கள் பெரிதும் நம்பி வாழ்கின்ற மின்சாரத்துறை மேலும் வளம் பெறவேண்டும் என்பதற்காகத்தான் 100 கோடி ரூபாயை இந்த ஆண்டு அதிகப்படியாகச் செலவு செய்வதற்காக இந்த அரசு ஒதுக்கி இருக்கின்றது.

இந்த ஆண்டு இளைஞர் ஆண்டு என்ற காரணத்தால், ஊராட்சி ஒன்றியங்களில் எல்லாம் இளைஞர் மையங்கள் உருவாக்கப்பட்டு ஆரோக்கியமான இளைஞர்களை எதிர்காலத்தில் உருவாக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடுதான் இன்றைக்கு இளைஞர் மையங்களை உருவாக்குகிற திட்டத்தைப் பற்றி இந்த நிநிதிலை அறிக்கையிலே சொல்லி இருக்கிறார்கள்.





இலங்கை அகதிகளைப் பற்றி எதிர்க்கட்சி நண்பர்கள் இங்கே அழுதுகாட்டினார்கள்; ஓலமிட்டார்கள். அவர்களுக்கெல்லாம் சொல்லிக் கொள்வேன். இலங்கை அகதிகளின் வாழ்வு மலர வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்த அரசு தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் என்ற கழகத்தைத் துவக்கி அதன் மூலம் பல்வேறு திட்டங்களை இன்றைக்கு உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

ஆதிதிராவிட மக்களின் மேம்பாட்டிற்காக இந்த நிதிநிலை அறிக்கையிலே 125 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். உயர்நிலைப் பள்ளிகளின் கட்டிடங்கள் இடைதயடுத்து முழுமையாகச் செப்பனிட வேண்டும் என்ற நோக்கத்தோடு, அவற்றைப் பழுதுபார்க்கவேண்டும் என்ற நோக்கத்தோடு ஒரு கோடி ரூபாய் இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அதேநேரத்தில் அந்தப் பள்ளிகளுக்கெல்லாம் நம்முடைய அரசுக் குழாய்க் கிணறுகளை அமைத்துத் தண்ணீர் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு, தொழில் துறையிலே ரூ. 108 கோடி திட்டச் செலவில், லைனியர் ஆல்கையல் பென்ஜின் தயாரிக்கும் தொழிற்சாலை உருவாக்க இருக்கிறார்கள். அது என்னுடைய சொந்தத் தொகுதியாக தண்டராம்பட்டு தொகுதிக்குக் கிடைத்திட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, நடைமுறையிலே சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் கணக்கை மட்டும் காட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். என்னைப் பொறுத்த அளவிற்கு அரசாங்க அதிகாரிகள் வருகிற நேரத்தில் அவர்களுடைய சொத்துக் கணக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். அதன்பின் 3 ஆண்டுக்கொருமுறை அவர்களுடைய சொத்துக் கணக்கையும் காட்டுவதற்கு இந்த மாமன்றத்திலே ஒரு சட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழ்நாட்டு மக்களுக்கு சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிலே உறவினர்கள் அதிகம். இருந்த ஒரு கப்பலும் பழுதடைந்துவிட்ட காரணத்தால் அதைப் பழுது பார்ப்பதற்கும் நாளாகும். அப்படிப் பழுது பார்ப்பதென்றாலும் காலம் அதிகமாகும் என்ற காரணத்தால், ஒரு புதிய கப்பலை வாங்கி, பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயரிட்டு, கப்பல் போக்குவரத்துக் கழகத்தை மீண்டும் துவக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த காலத்தில் சொல்வார்கள், ஏசுபிரான், கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும் என்று சொன்னார் என்று. இன்றையதினம் புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல், ஏசுபிரான் போல, கேட்காமலேயே சில திட்டங்கள் கொடுக்கப்படும் என்றுதான் தன்னிறைவுத் திட்டம், சத்துணவு திட்டம் என்பன போன்ற இன்னும் எத்தனையோ திட்டங்களை அறிவித்தார்கள்.

உள்ளாட்சி மன்றத் தேர்தல் வேண்டுமென்று இந்த ஆட்சியைப் பார்த்துக் கேட்டார்கள். இரண்டுமுறை தேர்தல் நடைபெறும் என்று அறிவித்தார்கள். மாற்றுக் கட்சியினர் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள், கோர்ட்டிலே ஸ்டே வாங்கி விட்டார்கள். அதோடு நிறுத்தி விடாமல், இன்றைக்கு உள்ளாட்சித்துறை அமைச்சராக இருக்கிற அண்ணன் ப.உ.ச. அவர்கள், மீண்டும் ஒருமுறை நான் தனி அதிகாரி நியமனம் என்று சொல்லி, சபைக்கு வரமாட்டேன் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, உள்ளாட்சித் துறை தேர்தல் வர இருக்கிறது. ஆனால், இலங்கை வாழ் மக்களுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர் ஒன்றைக் குறிப்பிடுகிறார், மாணவர் சமுதாயமே நீங்கள் போராட வாருங்கள் என்று கூப்பிட்டிருக்கிறார். என்னைப் பொறுத்த வரையில் எனக்கு என்ன பயம் என்றால், இன்றைக்கு உள்ளாட்சித் தேர்தல் வரவேண்டுமென்று முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்திலே மாணவர்களை அழைத்து, போராட்டங்களை உருவாக்கி, அதன்மூலமாக, உள்ளாட்சித் தேர்தலை எப்படியாவது நிறுத்திவிடலாமா என்று கருதுகிறார்கள். எனவே, மாற்றுக் கட்சித் தலைவர்களையும் உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்கிறேன், தயவுசெய்து உள்ளாட்சித் தேர்தலை நடத்த வழி விடுங்கள். அந்த வகையிலே புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல், பொற்கால ஆட்சியிலே உள்ளாட்சித் தேர்தல் நடைபெறுவதற்கு வழிவிடுங்கள்.

இங்கே பேசிய கோவை திரு. இராமநாதன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள், காசிலே இந்தி இருக்கிறது, என்று. தமிழ் எழுத்து இருக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய கருத்தும். ஆனால் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், காசிலே தமிழ் எழுத்து வேண்டுமென்று கேட்கிற நண்பர், இன்னொன்றையும் சொன்னார். ஏதோ மத்திய அரசாங்கம் புலியைப் போலவும், ஏதோ இங்கே ஆளுகிற மாநில சர்க்கார் புலி வாலைப் பிடித்து ஆடிக் கொண்டிருக்கிறது. புலி ஆடுவது ஒரு ஆட்டம் என்று சொன்னால், புலியைப் பிடித்து ஆடுகிறவன் அதை பாலன்ஸ் செய்து 3 முறை ஆட வேண்டுமென்று இங்கே ரசனையாகச் சொல்லிக் காட்டினார். அவருக்குச் சொல்லிக் கொள்ள விரும்புவதெல்லாம், புலியினுடைய வாலைப் பிடித்து ஆடியவர்கள் நாங்கள் இல்லை; எங்களுக்கு ஆடத்தெரியாது. ஆடத் தெரிந்தவர்கள், அதைக் கண்டு பயந்தவர்கள் இங்கே ஆடிக் காட்டினார்கள். எங்களுக்கு புலி ஆட்டம் தெரியாது. ஆனால் நீங்கள் புலி ஆடிய வரலாறு உண்டு.

பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன், 1980-ஆவது ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் முடிந்தபிறகு, பாராளுமன்ற உறுப்பினர்களில், கோவை திரு. இராமநாதன் கட்சியைச் சேர்ந்தவர்களும் இருந்தார்கள். டெல்லிப் பேரரசு, உலகத்திலே எங்கெங்கே எல்லாம் இந்திப்பரவி



இருக்கிறது என்பதைக் கண்காணிப்பதற்காக ஒரு தூதுக் குழுவை அனுப்புகிறது எதற்காகப் போகிறது என்றால், உலகத்திலே எங்கெங்கே எல்லாம் இந்தி பரவி இருக்கிறது என்று பார்ப்பதற்காக அதைக் காணுவதற்காக, நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினர் மாண்புமிகு திரு. கோவை இராமநாதன் அவர்களுடைய இயக்கத்தைச் சேர்ந்த இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள், இந்தி எங்கெங்கே எல்லாம் பரவி இருக்கிறது என்பதைப் பார்ப்பதற்காக, தமிழ்நாட்டிலிருந்து போனார்கள். இதை நான் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம் அவர்கள்தான் காசிலே இந்தி இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இதை நான் சொல்வதற்குக் காரணம், வாலைப் பிடித்து நாங்கள் ஆடவில்லை, வாலைப் பிடித்து எப்படி ஆட வேண்டுமென்று கற்றுக் கொண்டவர்கள், உலகத்திலே இந்தி எங்கெங்கே எல்லாம் பரவி இருக்கிறது என்பதைப் பார்ப்பதற்காக அனுப்பப் பட்டார்கள்.

அதோடு மட்டுமல்ல, குட்டி மணியைப் பற்றி இங்கே பேசினார்கள். அவர்கள் ஆட்சியில் இருந்த நேரத்தில் வேதாரண்யத்திலே ஒரு இளைஞன் கைது செய்யப்படுகிறான்; என்னவென்று? பாஸ்போர்ட் இல்லையென்று. கைது செய்த உடனே டெல்லிப் பேரரசுக்கு எழுதுகிறார்கள். வேதாரண்யத்திலே குட்டிமணி என்ற இளைஞன் கைது செய்யப்பட்டிருக்கிறான். அவனிடம் பாஸ்போர்ட் இல்லை, இலங்கையிடம் ஒப்படைக்கலாமா என்று கேட்டிருக்கிறார்கள். அவர்கள் சொன்னார்கள், உங்களுடைய இஷ்டம், என்று.

(பிற்பகல் 1-00)

ஆனால் அன்றைக்கு ஆட்சியில் இருந்தவர்கள், இல்லை, இல்லை நீங்கள் சொல்லுங்கள் நாங்கள் உங்கள் வாலைப் பிடித்து ஆடுகிற பழக்கம் அப்படி தான்; எனவே நீங்கள் சொல்லுங்கள், நாங்கள் கைது செய்கிறோம் என்று சொல்கிறார்கள். உடனே டெல்லி பேரரசு உங்களுடைய இஷ்டம் என்று சொல்லி விடுகிறார்கள். எனவே அன்றைக்கு குட்டிமணியை கைது செய்து, தமிழன் என்ற உணர்வில்லாமல் கைது செய்து இன்றைக்கு இருக்கிற இலங்கைப் பிரச்சினைக்கு அடித்தளம் நாட்டியவர்கள், இன்றைக்கு வாலினைப் பிடித்து எப்படி ஆடவேண்டுமென்று காட்டினார்கள்.

அதோடு மட்டுமல்ல. எங்களைப் பொறுத்தவரையில் தமிழ் பேசுவது என்பது ஒரு மனிதன் மூன்று வேளையும் சாப்பிட்டு ஆரோக்கியமாக இருப்பது; ஆங்கிலம் பேசுவது என்பது அவனுக்கு உடல்நலம் குன்றி வைத்தியம் பார்ப்பதைப் போன்றது. இந்தி பேசுவது என்பது ஆலகால விஷத்தை சாப்பிடுவதற்கு ஒப்பாகும். அந்த முறையில்தான் தொலைக்காட்சியில் தேசிய நிகழ்ச்சியை நீட்டக்கூடாது என்பதற்காக இந்த மன்றத்தில் நம்முடைய அண்ணன் ஆர். எம். வி. அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பேரிலே தான் அது நிறுத்தப்பட்டிருக்கிறது.

அதோடு மட்டுமல்ல. அவர்கள் ஆடிய ஆட்டம் இந்தியப் பேரரசிடத்தில் நல்ல பெயர் வாங்க வேண்டும் என்பதற்காக முன்பே குறிப்பிட்டார்கள். இந்திராகாந்தியே வா; நிலையான ஆட்சியை தா; என்று நாடகம் போட்டார்கள். வாலை பிடித்து ஆடினார்கள். ஏனென்று சொன்னால் அந்தத் தலைவர் மீது ஒரு வழக்கு இருந்தது. கோதுமை பேர ஊழல், பூச்சி மருந்து ஊழல் என்று இரண்டு வழக்குகள் இருந்தன, அந்த வழக்குகளை எப்படியாவது வாலைபிடித்து ஆடி வாபஸ் வாங்கலாம் என்ற நோக்கத்தோடு செய்தார்கள். அப்படி வாலைப்பிடித்து ஆடி வாபஸ் வாங்கவும் செய்தார்கள் என்பதை மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்கள் புரிந்து கொள்ள வேண்டும். எங்களைப் பொறுத்தவரையில் வாலைப்பிடித்து ஆடுகிற அரசு புரட்சித் தலைவர் அரசல்ல. வாலைப்பிடித்து ஆடி கோதுமை பேர ஊழலையும், பூச்சி மருந்து ஊழலையும் வாபஸ் பெற்றவர்கள் இன்றைக்கு வாலைப்பிடித்து ஆடியதாக எங்களை சொல்லியுள்ளார்கள். அப்படியே வாலைப்பிடிக்கிற ஒரு வாய்ப்பு எங்களுக்கு கிடைக்குமானால், புரட்சித் தலைவர் வாலைப்பிடிப்பார்கள் என்று சொன்னால், அந்தப் புலியினுடைய வாலை நறுக்குவதற்காகத் தான் பிடிப்பாரே தவிர, அதைப் பிடித்து ஆடுவதற்காக எங்களுடைய புரட்சித் தலைவர் பிடிக்க மாட்டார் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் சுப்புராயன் ஒன்றை குறிப்பிட்டார். ஏதோ பஸ் கட்டணம் உயர்ந்துவிட்டது என்று சொன்னார். அவர் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் எந்தக் கட்சியோடு கூட்டணி வைத்து வந்தீர்களோ அந்தக் கட்சி ஒரு காலத்திலே ஆண்டபோது தனியார் பஸ் முதலாளிகளை எல்லாம் அவ்வப்போது அழைத்து அதிகக் கட்டணம் வசூல் செய்ய சொன்னது அவர்கள் தான். அவர்களோடு தான் நீங்கள் கூட்டு வைத்திருக்கிறீர்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். தனியார் பஸ்கள் தான் அதிகமாக கிராமப் பகுதிகளில் ஓடிக் கொண்டிருக்கின்றன. எனவே அந்தக் காலத்தில் ஆண்டவர்கள் தான், எங்களுக்கு முன்பு ஆண்டவர்கள் தான் உங்களுடைய கூட்டாளிகள். பஸ் கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்ற நோக்கத்தோடு அவ்வப்போது தனியார் முதலாளிகளை அழைத்து அதிகக் கட்டணம் வசூலித்தவர்கள் அவர்கள் தான், என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்றைக்கு புரட்சித் தலைவரின் ஆட்சி தான் பொற்கால ஆட்சி. புரட்சித் தலைவர் தான் நாங்கள் கண்ட ஏசுபிரான். எங்கள் புரட்சித் தலைவர் ஆட்சி உள்ளாட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு உங்கள் மாணவர் போராட்டங்களை நிறுத்தி வழிவிடுங்கள் என்று கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு துணைத் தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.



திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, இந்த பரப்புகிற கமிட்டியிலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்ததாகச் சொன்னார்கள். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் எம்.பி.-க்கள் அதில் இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இரண்டாவது, இந்திரா காங்கிரசோடு கூட்டு சேர்ந்தது வழக்குகளை வாபஸ் வாங்குவதற்காகத் தான் என்று சொன்னார்கள். இப்போது நீங்கள் கூட்டு சேர்ந்திருப்பது ரே கமிஷன் எரிசாராய ஊழல் வழக்கை திரும்பப் பெறவேண்டும் என்பதற்காகவா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளில் இந்தி எந்த அளவிற்கு பரவி இருக்கிறது என்பதைப் பார்ப்பதற்காக அனுப்பப்பட்ட குழுவிலே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தான் இடம் பெற்றிருந்தார்களே தவிர அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் இடம் பெறல்லை.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கக்கூடிய கருத்து உண்மைக்கு புறம்பாக இருந்தால் அவர்மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்படும் என்று கருதுகிறேன். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்கள் அதிலே இடம் பெற்றிருக்கிறார்கள். இதை என்னுடைய நினைவின் அடிப்படையில் சொல்லவில்லை. அதற்கான பட்டியலை உங்கள் அனுமதியோடு நாளைக்கு தரவிருக்கின்றேன். அடுத்தது ரே கமிஷன் விவகாரத்திற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தன்னைப் போலவே மற்றவர்களையும் எடுத்துக்கொள்ளக் கூடாது. நீங்கள் எதற்காக கூட்டு சேர்ந்தீர்கள் என்பதைத் தான் மாண்புமிகு உறுப்பினர் வச்சிரவேலு சுட்டிக்காட்டினார்கள். நீங்கள் அதற்கு எதிர் கேள்வியாக ரே கமிஷன் என்று கேட்கிறீர்கள். நீங்கள் சேர்ந்த விவகாரம், அதிலே ஏற்பட்ட சிக்கல்கள் அவைகளைப் பற்றி பதில் சொல்லியிருக்க வேண்டுமே தவிர இங்கே எதிர்க் கேள்வி தொடுத்து பயனில்லை. நாங்கள் அதற்காக கூட்டு சேரவில்லை.

திரு. வி. பி. சிந்தன் : துணைத் தலைவர் அவர்களே, இரண்டு பேரும் கூட்டு சேர்ந்தது தவறு என்று கூறுகிறவன் நான்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : அதனால் தான் நீங்கள் எப்போதும் போல இருக்கிறீர்கள்.

**திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையில் பேசுவதற்கு முன்பாக என்னை இந்த மன்றத்திலே கலந்து கொண்டு, இந்த நடவடிக்கையில் தொடர்பு கொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித்தந்த இறைவனுக்கும், அதற்கு உறுதுணையாக இருந்த தொகுதி வாக்காளர்களுக்கும் ஏதோ ஒரு காரணத்தால் எனக்கு வாக்களிக்காத எனது தொகுதி மக்களுக்கும் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் நன்றி கூறி, எனது உரையை தொடங்குகிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 1985-86 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை இந்த அவையிலே வைத்து, பல்வேறு விளக்கங்களைத தந்திருக்கிறார்கள். முதன் முதலாக என்னுடைய கருத்துக்களிலே, மது வரியை உயர்த்தியிருப்பதைப் பற்றிக் கூற விரும்புகிறேன். எங்களுடைய கொள்கைப்படி மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் தேர்தல் அறிக்கையில் இந்த ஆண்டு செப்டம்பர் 15-ம் நாளிலிருந்து கண்டிப்பாக மதுவிலக்கை அமுல்படுத்துவோம் என்று கூறியிருக்கிறார்கள். அவை நிறைவேற்றுகின்ற வகையில் கண்டிப்பாக மதுவிலக்கைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, விவசாயத் துறையிலே நான் குறிப்பாக ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறேன் விவசாயத்தில் நெல்லை மாவட்டம் உலகத்திலேயே ஒரு சிறந்த தன்னிறைவு மாவட்டம். எங்கள் மாவட்டத்திலேயே உற்பத்தியாகி, எங்கள் மாவட்டத்திலேயே கடலில் சங்கமம் ஆகிற நீர்வளம் மிக்கது நெல்லை மாவட்டம்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாவட்ட பிரிவினை வந்த பின்னால் அந்தப் பெருமை உங்களுக்கு வராது.

திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம் : இப்போது அந்தப் பெருமை எங்களுக்கு உண்டு. இடவபாதி காலத்தில் அதிகமாக மழைநீர் வரும். மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகிற ஆற்றில் நீர் அதிகமாக வந்து, கடலிலே வீணாகச் சென்று கலந்து, விவசாயத்திற்குப் பயன்படாமல் போய் விடுகிறது. எங்களுடைய மாவட்டத்தில் இன்றைக்கு பெரிய அணை என்று சொல்லப்படுபவை தாம்பரவருணி அணையும் அதற்கு அடுத்து மணிமுத்தாறு அணையும் இருக்கின்றன. இப்போது அந்தப் பகுதி மக்களின் நீண்டகால கோரிக்கையாக இருப்பது பச்சையாறு அணைத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பது.

தாம்பிரவருணி, மணிமுத்தாறு பாசனக் கருத்தரங்கில் நெல்லை மாவட்டத்திலிருந்து ஏகமனதாக இந்த அணைத் திட்டத்தைக் கட்டித் தர வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பியிருக்கிறோம், அதை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு, அதிகமாக செலவு இல்லாத காரணத்தால், அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



பச்சையாறு திட்டம் நிறைவேற்றப்பட்டால் இந்த மநிலத்திற்குள்ள உணவு நிலைமையில் எங்கள் மாவட்டம் தன்னிறைவு செய்யக்கூடிய அளவு வசதி ஏற்படும். அது மட்டுமல்லாமல் அந்த பச்சையாறு திட்டத்தினால் பல குளங்கள் நீர்ப் பெருகி, ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் விவசாயம் செய்வதற்கு ஏற்ற வகையில் பயனடையும், குடிநீருக்கும் உதவியாக இருக்கும் என்பதை இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் பல்கலைக் கழகங்கள் பல ஆரம்பிக்கப்பட்டு தமிழ் நாட்டில் சிறப்பாக நடந்து வருகின்றன. மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் கிட்டத்தட்ட நூற்றுக்கு மேற்பட்ட கல்லூரிகள் இயங்கி வருகின்றன. அதனால் அதை இரண்டாகப் பிரித்து மேலும் ஒரு பல்கலைக் கழகத்தை ஏற்படுத்தினால் நிர்வாக முறைக்கு நன்றாக இருக்கும். பாளையங்கோட்டையைத் தலைநகராகக் கொண்டு அந்த புதிய பல்கலைக் கழகத்தை இயங்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் தனியார்களுடைய பேருந்துகளுக்கு அனுமதி அளித்து, ஒரு குறிப்பிட்ட அளவு அவர்கள் வைத்து நடத்திக்கொள்ளலாம் என்ற வகையில் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு நடைமுறையில் அப்படி இல்லை. ஒன்றில் எல்லாவற்றையும் அரசுடைமையாக்க வேண்டும். அல்லது நீங்கள் வாக்களித்தபடி தனியார்கள் பேருந்துகளை நடத்த நல்ல வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-10)

குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில் நல்ல குறிக்கோள்களை இந்த நிதிநிலை அறிக்கையிலே வைத்திருக்கிறார்கள். இப்போது மேலப்பாளையம் நகராட்சியைப் பொறுத்தவரையில் 1 கோடி ரூபாய்க்கு மேல் திட்டமிடப்பட்டு, குடிநீர் திட்டம் நடந்து வருகிறது. ஆனால் அதனுடைய வேலைகள் சுணக்கமாக நடைபெறுவதால், அந்தப் பகுதி மக்கள் குடிநீருக்காக மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆதலால் அந்த நடவடிக்கைகளை துரிதமாக எடுத்து, அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் நெல்லை மாவட்டத்திற்கு சட்டப் படிப்புக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

காவலர்களுக்கு நிறைய மானியம் ஒதுக்கியிருக்கிறார்கள் இந்த நிதிநிலை அறிக்கையில், ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் செம்மலை அவர்கள் ஆளுநர் உரை மீது நன்றி கூறும் தீர்மானத்தின் மீது பேசும்போது, காவலர்களுக்கு இந்த அரசு நிறைய சலுகைகளைச் செய்து இருக்கிறது, அவர்கள் இந்த அரசுக்கு விசுவாசமாக நடந்து கொள்ள வேண்டும் என்று

சொன்னார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அப்படி என்றால் அரசுக்கு அவர்கள் உறுதுணையாக இல்லை என்பது அவருடைய கருத்திலேயிருந்து தெரிய வருகிறது. ஏன் இதை நான் கூறுகிறேன் என்றால் நான் தனிப்பட்ட முறையில் பாதிக்கப்பட்டவன் என்று கூறி அதற்காக சில காரணங்களை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல நினைக்கிறேன். தேர்தலிலே போட்டியிடும்போது, சில வன்முறைச் சம்பவங்கள் நடந்தன. அந்த நேரத்தில் காவலர்களிடம்......

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : துணைத் தலைவர் அவர்களே, தேர்தலைப் பற்றி ஏற்கனவே வழக்கு மன்றத்திலே வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிற நேரத்திலே, வழக்குக்கு குந்தகம் ஏற்படுகின்ற வகையில் மாண்புமிகு உறுப்பினர் அதை இங்கே பேசலாமா என்பதைப் பற்றி தீர்ப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வழக்கில் இருப்பது சம்பந்தமாகப் பேச வேண்டாம்.

திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம் : நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், நாங்கள் முறையீடு செய்யும்போது, அவர்களைக் கூப்பிட்டு எச்சரிக்கை செய்திருந்தால், இப்படி எல்லாம் வன்முறைச் சம்பவங்கள் நடைபெறுவதற்கு ஏதுவாக இருந்திருக்காது என்பதற்காகத்தான் இந்தச் சம்பவத்தைச் சொல்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். இந்த நாளில் சம்சாரத்தைவிட மின்சாரம் ரொம்பவும் முக்கியமானது என்று. எல்லாத் துறைகளிலும் மின்சாரம் இப்போது உபயோகத்தில் இருப்பதால் இந்த மின்சாரத்துறையிலே அரசு சரியான கவனம் செலுத்தி, மின்சாரம் தமிழ்நாடு முழுவதும் நல்லமுறையில் கிடைக்கச் செய்வதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் என்னுடைய பாளையம்கோட்டை தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருக்கிறது. எனவே இந்த பாளையம் கோட்டை தாலுக்காவையும், சங்கரன்கோவில் தாலுக்காவையும் பிற்பட்ட பகுதியிலே சேர்க்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் பாளையங்கோட்டை ஒன்றியத்தைப் பொறுத்த வரையில் அநேக பாலங்கள் கட்டப்படாமல் இருக்கின்றன. அவைகள் எல்லாம் தீவுகளைப் போல் காட்சியளிக்கின்றன. ஒரு அவசரமான பேறுகாலத்திற்குச் செல்ல வேண்டும் என்றால் கூட அவர்கள் அந்த மெயினான பாதைக்கு வரமுடியாமல். ஊரைச் சுற்றி வரவேண்டிய நிலைமையிருக்கிறது. இதைப்பற்றியெல்லாம் திட்டம் தீட்டி நிறைவேற்றும்போது ஒரு லட்சம்



ரூபாய்க்கு அதிகமான தொகை ஏற்பட்டால், அதை அரசிடம் அனுமதி பெற்றுத்தான் அந்த வேலையைச் செய்யவேண்டும் என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். இதுபற்றி நான் துணைக்கேள்விகள் கூட இங்கே கேட்டு இருக்கிறேன். அரசு அதற்கான அனுமதியை உடனடியாக வழங்கும் என்று அமைச்சர் அவர்கள் எனக்கு உத்தரவாதம் தந்திருக்கிறார்கள். அந்த அளவிலே உடனடியாக அனுமதியை வழங்கி அந்தப் பாலங்களைக் கட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பாளையம்கோட்டை நகராட்சியைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட நிறைய புறநகர்ப் பகுதிகள் ஏற்பட்டு வருகின்றன. 20 ஆண்டுகளுக்கு முன்னாலே ஏற்பட்ட பெருமாள்புரம் போன்ற ஊர்களுக்குக் கூட இன்றுவரையில் குடிநீர் வினியோகத்தைச் செய்ய முடியாத நிலைமையிருக்கிறது. அங்கே என்.ஜி.ஓ. காலனியில், 'ஏ' காலனி, 'பி' காலனி, இ.பி. காலனி, கே.டி.சி. காலனி போன்ற காலனிகள் புறநகர்ப் பகுதிகளில் அதிகமாக ஏற்பட்டு வரும் இந்தச் சூழ்நிலையில், அங்கே குடிநீர் வழங்குவதற்கு அதிகமான தாமதங்கள் ஏற்படுகின்றன. சரியான முறையில் குடிநீர் வழங்க முடியவில்லை. அங்கே விளக்கு வசதி செய்து தர முடியவில்லை. பாதை வசதி கூட செய்து தர முடியவில்லை. இதைப்பற்றி அரசாங்க அதிகாரிகளைக் கேட்கிறபோது, அடுத்த வருஷம் செய்கிறோம், அடுத்த வருஷம் செய்கிறோம் என்று அவர்கள் காலம் தாழ்த்திக் கொண்டு இருக்கிறார்களே தவிர, முறையாக நடவடிக்கை எடுக்கவில்லை. இதற்கு எல்லாம் காரணம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அந்தப் பொறுப்பிலே இல்லாத காரணத்தால், தனி அதிகாரிகளால், அந்தக் காரியங்களைச் செய்ய முடியாத நிலை இருக்கிறது, என்று கூறி உடனடியாக உள்ளாட்சித் தேர்தல்களை நடத்துவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கல்வி திட்டத்திற்கு அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்து வளரும் குழந்தைகளுக்கு இலவச படிப்பும், இலவச புத்தகமும் இலவச சீருடைகளும் கொடுப்பதற்காக இந்த அரசு அறிவித்திருக்கிறது. அறிவித்தபடி செயல்படும்போது நடைமுறையில் சில குறைபாடுகள் ஏற்படும். ஆகவே, அவைகளை நல்ல முறையில் கண்காணித்து சீராக நிறைவேற்றித்தர வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்தத் தனி அதிகாரிகளுடைய பதவி நீட்டிப்பினால், அவர்களுடைய பொறுப்பற்ற முறைகள் வளர்ந்து கொண்டே போவதனால்தான் திரும்ப திரும்ப நான் இதைச் சொல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே உள்ளாட்சித் தேர்தல்களை உடனடியாக நடத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பு வழங்கியதற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்

திரு. க. நரசிம்ம பல்லவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நல்லோர் பலரும் பொறுப்பேற்று, இம்மாநிலம் நலமுடன் வாழ, நற்பெயரோடு வாழ்ந்து வழி

நடத்திச் சென்ற, இம்மாமன்றத்தின் உள் நுழைந்து, பணியாற்றுவதற்கு வாய்ப்பு அளித்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருபொருளாய், காரண கர்த்தாவாக உள்ள, அமெரிக்காவில் மூன்றாம் பிறையாக உதித்து, இன்றைய தினம் தமிழகத்தின் முழுநிலவாய் ஒளி வீசிவரும், மூன்றாம் முறையும் முதலமைச்சராக இருக்கும் எங்களுடைய தானைத் தலைவர். புரட்சித் தலைவர், இதய தெய்வம் அவர்களுடைய பொற் பாதங்களுக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்து; உலகத்திலே உத்திரமேரூர் கல்வெட்டு மூலம், உள்ளாட்சித் தத்துவத்தை, தேர்தல் முறைகளை வித்திட்டு வழங்கிய உத்திரமேரூர் தொகுதி அனைத்து பொது மக்களுக்கும், குறிப்பாக தாய் குலத்திற்கும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப் பட்ட வகுப்பு மக்களுக்கும், எனது நெஞ்சார்ந்த வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தமட்டில் ஏழைகளை பாதிக்காத அளவில் கனிப் பொருள்களின் மீதும் ஏழைகள் பயன்படுத்தக் கூடாத வகையில் இருக்கின்ற சாராயத்தின் மீதும், வரிகளைப் போட்டு உயர்த்தியிருப்பதை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் ஒரு முனை வரியின் மூலமாக மிளகாய், தனியா போன்ற பொருள் களுக்கு முதல் கட்ட வரி விதிப்பை மட்டும் இந்த விலைவாசி ஏற்றக்காலத்தில், அமல் படுத்தியிருப்பதை பாராட்டி வரவேற்க்க் கடமைப்பட்டிருக்கிறேன்,

மூன்று வேளையும் கூழைக் குடித்து வாழ்கிற சமுதாயத்தினர், அம்மா என் குழந்தைக்கு சோறு கொஞ்சம் கொடுங்கள் என்று வசதிப்படைத்தவர்கள் வீட்டுக்கு சென்று கையேந்துகிற நிலைமைமையைப்போக்க, பிள்ளைக்கு உண்ண உணவே இல்லை எங்கே என் பிள்ளை படிக்கப் போகிறது என்று தாய் மார்கள் ஏங்கும் நிலைமை இருக்கிற குடும்பங்களில், இன்றையதினம் சத்துணவு திட்டத்தின் மூலமாக ஒளி விளக்கு ஏற்றி வைக்கப் பட்டிருக்கிறது. இந்த சத்துணவு திட்டத்தின் மூலமாக உணவு அளிக்கப்பட்டு, நல்லமுறையில் குழந்தைகளுக்கு பயன்பெற்று, எதிர்கால சந்ததியினரை உருவாக்குகிற வகையில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வரும் என்ற வகையில் இந்த நிதிநிலை அறிக்கையிலே கொண்டு வந்திருப்பதை வரவேற்று பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அண்ணாவின் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற தத்துவத்தின் அடிப்படையில் நடந்து செல்கிற நிலையில் பொது மக்களுடைய மனம் புண்படாத வகையில், இன்றைய தினம் அழிந்து வந்த ஆலயங்கள் அனைத்தும் அழகு படுத்தப்பட்டு, பொது மக்கள் மனம் திருப்தி அடைகிற வகையில் நடந்திருப்பதை வரவேற்று பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அதே நேரத்தில் இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழும் இலக்கணம் படைத்தவன் தொழிலாளி என்று புரட்சித் தலைவர் அவர்கள் பாடியதற்கு இணங்க இன்றைய தினம் தமிழகத்தைப் பொறுத்தவரையில் இருக்கிற நிதிநிலையைப் பொறுத்து, எந்த அளவிற்கு சிறப்பாக ஆட்சிதனைச் செய்ய முடியுமோ, அந்த வகையில், எந்தத் துறையானாலும், அது மின்சாரத் துறை யானாலும், விவசாயத் துறையானாலும், கல்வித் துறை யானாலும் அந்தந்த துறைக்கும் சிறப்பான முறையில் மக்களுடைய உள்ளங்களை குளிர வைக்கிற அளவில் எப்படி ஆட்சி செய்ய முடியுமோ, அந்த அளவுக்கு ஆட்சி செய்துக் கொண்டு வருகிற இந்த அரசு இன்றையதினம் உபரியாக மின்சாரம் உள்ள மற்ற மாநிலங்களை விட, ஏழை எளிய மக்கள் பயன் பெறுகிற வகையில் ஒரு விளக்கு மின் திட்டத்தை அறிவித்ததுடன், ஏழை விவசாயிகளுக்கு இலவச மின்சார வசதிகளையும் செய்து தரும் வகையில் கொண்டு வந்திருப்பதை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுகிறபோது இங்கே புரட்சி இல்லை மிரட்சி தான் இருக்கிறது என்று கூறினார்கள். அதைப்பற்றி நான் ஒன்று கூறிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். தமிழக மக்கள் எல்லாம் இன்றையதினம் ஆட்சிப் பொறுப்பை நம்பி ஒப்படைத்திருக் கிறார்கள் என்றால், அதுவும் மூன்றாம் முறையாக, அவர் களுக்கு அந்த புரட்சி தெரிந்திருக்கிறது. அதனால் ஒப்படைத் திருக்கிறார்கள். உங்களுக்கு வேண்டுமானால் அவர்களிடம் சென்று பாடத்தைக கற்றுக் கொள்ளுங்கள் என்று கூறிக் கொண்டு, அடுத்து என்னுடைய தொகுதிப் பிரச்னையாக சிலவற்றை நான் கூறிக் கொள்ள முன்வருகிறேன்.

(பிற்பகல் 1—20)

அகில இந்தியா அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு முதல் முதலாக நமது புரட்சித் தலைவர் அவர்கள் காஞ்சியினுடைய மண்ணை தொட்டு விட்டு, உத்திரமேரூருக்கு வருகை தந்து நன்றி கூறுகிற கூட்டத்தில் கலந்துக் கொண்டார்கள். அந்தக் கூட்டத்திலே உத்திரமேரூர் பகுதியை பொறுத்த அளவில் 7 அடி வண்டல் மண் தூர்ந்து இருக்கிறது. அதை தூர் எடுப்பதற்கு ஆவன செய்வதாக அன்றைய தினம் கூறிவந்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் இன்றையதினம் கரைகள் எல்லாம் வலுப் படுத்தப்பட்டிருக்கிறது. தூர் வாருவது மட்டும் கொஞ்சம் தாமதமாகி இருக்கிறது. அதனை செய்து எங்களுடைய பகுதி களுக்கு விவசாயம் மேம்பாடு அடையச் செய்ய வேண்டும். எங்கள் பகுதியில் எடைமிச்சி கால்வாய்த் திட்டம் என்று ஒரு திட்டம் ஏற்கனவே உருவாக்கப்பட்டு நடைமுறையில் தாமதமாகி இருக்கிறது. அந்தத் திட்டத்தை உருவாக்கினால் பாலேஸ்வரம் என்ற இடத்தில் இரண்டு மலைகளுக்கு இடையே

ஒரு அணை கட்டி அதன் மூலம் பல கிராமங்களும், பல்லாயிரக் கணக்கான நிலங்களும் பயன்பெறுகின்ற சூழ்நிலை இருக்கிறது. அதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் பழைய சீவாத்திக்கும் திருமுக்கூடலுக்கும் இடையில் பாலாற்றின குறுக்கே ஒரு பெரிய அணையை கட்டுவதற்கு கடந்த 2, 3 ஆண்டுகளுக்கு முன்பாக அது சர்வே செய்யப்பட்டு அப்படியே நிற்கிறது. அதையும், விரைவுபடுத்தி அந்த அணையைக் கட்டித் தந்தால் அந்த பாலாற்றின் இருமருங்கிலும் உள்ள கிராம மக்கள் நல்ல பலன் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் வெள்ளிவளம் கிராமத்திற்கு தெற்கே பாலாறும் வடக்கே வேகவதி ஆறும் ஓடுவதால் மழைக் காலத்தில் அந்த கிராமங்கள் தீவு போன்று தத்தளிக்கின்ற ஒரு நிலை இருக்கிறது. வெள்ளிவளம் தாங்கிக்கும் இடையே ஒரு சிறிய மேம்பாலம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வேலியூர் சிறுவாக்கம் செல்லும் வழியில் பம்பக் கால்வாய் குறுக்கே சிறிய மேம்பாலம் கட்டித்தர வேண்டும். தமிழகத்தில் ஊராட்சி ஒன்றியங்களிலேயே உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம் மிகப் பெரியது. 74 பஞ்சாயத்துக்களை உள்ளடக்கியது ஆகும். நிர்வாக வசதி பொருட்டும், கிராம வளர்ச்சிப் பொருட்டும் இதை அவசியமாக இரண்டாகப் பிரித்துக் கொடுக்க வேண்டும். கிராமப் பகுதிகள் அதிகமாக உள்ள என் தொகுதியில் அடிக்கடி தீ விபத்து ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே தயவு செய்து தாலுக்கா அந்தஸ்த்தில் உள்ள உத்திரமேரூர்க்கு தீ அணைப்பு நிலையம் ஒன்றை கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சுமார் 30 வருடங்களுக்கு மேலாக உரிமையியல் நீதி மன்றம் உத்திரமேரூரில் இயங்கி வந்தது. தற்சமயம் தாலுக்காவாக ஆக்கப்பட்டு இருப்பதால் மீண்டும் நீதிமன்றம் வேண்டும் என்பது பொது மக்கள் கோரிக்கை. வாலாஜாப் பேட்டை பேரூராட்சிக்கு சித்த வைத்தியம் மட்டும் தான் இருக்கிறது. அங்கே ஒரு அரசு மருத்துவமனை அமைத்துக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

உத்திரமேரூர்க்கு பக்கத்தில் அச்சரப்பாக்கம், வந்தவாசி, மதுராந்தகம் போன்ற இடங்களுக்கு உத்திரமேரூர் மையமாக உள்ளதால் கல்லூரி ஒன்று அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உத்திரமேரூரிலிருந்து சென்னைக்கு புக்கத்துறை கூட்டு ரோடு வருகின்ற வழியில் தார் சாலையை அகலப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)



*திரு ஜி. கே. ஜே. பாரதி: மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய தலைநாயகர் அவர்களே, நிதி நிலை அறிக்கையினுடைய எழுச்சிமிக்கபேருரையை ஆற்றுகின்ற வாய்ப்பை தந்ததற்கு உள்ளபடியே பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த நிதி நிலை அறிக்கை வளமாக, நலமாக மக்களுக்கு பயன்படுகின்ற அளவுக்கு ஏற்ற மிக்க தரத்தை அளித்து உள்ளது என்பதை உளப்பூர்வமாக பாராட்டுகிறேன். நடுவண் அரசினுடைய 20 அம்சத் திட்டத்தை எழுச்சியோடு செயல்படுத்தியதற்காக நடுவண் அரசிடம் பரிசு பெற்றிருப்பதையெல்லாம் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் கல்விக்காக ரூ. 468 கோடி வழங்கி இங்கே முதியோர் கல்வித் திட்டத்தையும் நமக்கும் சிறப்பாக அள்ளி வழங்கியதற்கு நடுவண் அரசு ரூ. 25 இலட்சம் பரிசு தற்திருக்கிற எழுச்சியினை பார்க்கிறோம். தமிழகத்திலே, தமிழ் பல்கலைக் கழகம் உருவாக்கி தமிழர்களுடைய இதயங்களில், தமிழுக்குத் தனித் துறையை ஏற்படுத்தி சிறப்பு செய்து இந்த அரசை பாராட்டி தமிழுடைய விழாவை கொண்டாடுகின்ற நாமெல்லாம் பூரிப்பு அடைகிறோம், பெருமை அடைகிறோம் என்று சொல்லி, கண்ணதாசன் நினைவுச் சின்னத்தையும், நம்முடைய மதிப்பிற்குரிய.திருப்பூர் குமரனுக்கு நினைவுச் சின்னத்தையும் வைக்க இருக்கிறார்கள். 'எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்'' என்று பாடினானே அந்த எழுச்சிமிக்க கவிஞனுக்கு நினைவு விழா.

அடுத்து கொடி காத்த குமரன், எந்த நிலையிலும்தான் கொடியை விடமாட்டேன் என்று ஆர்ப்பரித்த எழுச்சிமிகு போர் வீரனுக்கு நினைவுச் சின்னம் எழுப்ப இருக்கிறார்கள், இப்படிப் பட்ட எழுச்சிமிகு நிதிநிலை அறிக்கையை இங்கே வைத்திருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் எண்ணூர் அனல் மின்நிலையத்திலே ஒரு மாபெரும் விபத்து ஏற்பட்டிருக்கிறது. காலையிலே மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் வெகு அழகாக அதற்குப் பதில் சொன்னார்கள். அங்கே இறந்து விட்ட மூன்று பேர்கள் தாய்க்குலத்தைச் சேர்ந்தவர்கள். அதுவும் 20 வயதுக்கு கீழே உள்ளவர்களும் அங்கே இருக்கிறார்கள். சட்டப்படி 20 வயதிற்கு மேற்பட்டவர்கள்தான் பணியிலே அமர்த்தப்பட வேண்டும். ஆனால் அங்கே 15 வயது, 16 வயது இளைஞர்கள் கூட வேலை செய்கிறார்கள். ஒப்பந்தக்காரர்கள் ஒரு குறிப்பிட வயதுக்கு மேற்பட்டவர்களைத்தான் பணிக்கு அமர்த்தவேண்டுமென்ற அறிவுரையினை அரசு அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே பணியாற்றுகிறவர்கள்(ஸ்டாப் அமெனிட்டிஸ்)என்பது எதுவும் இல்லை. அதையெல்லாம் கொடுப்பதற்கு அரசு தயாரக இருக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அந்த விபத்து நடைபெற்ற நிலையிலே ஹோஸ் பைப் தடைபட்டுத் தான் அந்த விபத்து ஏற்பட்டிருக்கிறது அவைகளையெல்லாம்

தடுக்கின்ற முறையிலே அரசு ஆபரேட்டர்களை நியமிக்க வண்டும், அரசு எவ்வளவுதான் ஆணைகளை வெளியிட்டாலும் கூடஅதிகாரிகள் மெத்தனமாக இருக்கிறார்கள். ஆகவே அதையும் அரசு கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

சென்னை மாநகரத்திலே மிகப் பெரிய வீடியோ சென்டரை வைத்துக்கொண்டு புளு பிலிம்கள் காட்டி இளைஞர்களைப் பாழடிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அதைத் தடுக்கவேண்டும். அது மட்டுமல்ல, பெரிய ஹோட்டல்களிலே காபரே போன்ற நடனங்களை நடத்தி இளைஞர்களின் நெஞ்சங்களிலே நச்சுத் தன்மையைப் பரப்புகின்ற தன்மையை அறவே போக்கிடவேண்டும். காட்டன்பெட் என்ற சூது இழிவினை இழிவான தன்மையை கடந்த அரசு நிறுத்தி வைத்திருந்தது. மீண்டும் அது தலைதூக்க ஆரம்பித்து இருக்கிறது. அதை தலை தூக்கவிடாமல் செய்ய வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் துணை சூப்பிரண் டெண்டெண்ட் ஆப் போலீஸ், துணை கலெக்டர் ஆகிய பதவிகள் போன்றவற்றிற்காக ஏ குரூப் தேர்வு நடந்தது 1982 ஆம் ஆண்டு. அப்போது நடந்த தேர்வையொட்டி உயர்நீதி மன்றத்திற்கு வழக்குச் சென்ற காரணத்தினால் அந்தத் தீர்ப்பின் முடிவை 1985 ஆம் ஆண்டுதான் வெளியிட்டிருக்கிறார்கள். இடையிலே 1983, 1984 ஆண்டுகளிலே தேர்வு எழுதமுடியாமல் பாதிக்கப் பட்ட இளைஞர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மீண்டும் தேர்வு எழுதுவதற்கு வயது வரம்பைத் தளர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் முன்பே இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள், ஆகவே விரைவிலே அதைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சர்வீஸ் கமிஷனில் தேர்வு எழுதுவதற்கு இளைஞர் களுக்கு வாய்ப்புக் கொடுக்கிற முறையிலே அவர்களுடை வாழ் விலே அவர்கள் வளம் பெறுவதற்காக 10 ஆயிரம் இளைஞர்கள் மீண்டும் வேலை வாய்ப்பைப் பெறுவார்கள் என்பதால் 1 வயது, 2 வயது வித்தியாசம் என்ற காரணத்தினால் அவர்கள் வேலை வாய்ப்பை இழக்கக்கூடிய நிலைமை இருப்பதால் அதை ரிலாக்ஸ் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் பல் வேறு கோணங்களிலே பார்க்கிறபோது மிகப் பெரிய தொழிற் கூடங்கள் நிறைந்த பகுதியாக இருக்கிற காரணத்தினால் அங்கே ஒரு என்சினியரிங் கல்லூரி இருந்தால் சிறப்பாக இருக்கும். அதை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். என்னுடைய தொகுதி ஹைலி பொல்யூட்டட் ஏரியா வாக இருக்கிறது. நாங்கள் அங்கே வாழ்வதற்கு தவம் செய் திருக்க வேண்டும். அங்கே உள்ள தொழிலாளர்கள் நல்ல வகை யில் எல்லா வளமும் பெறத்தக்க வகையிலே எல்லா வளத்தையும் இந்த அரசு செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



என்னுடைய திருவொற்றியூர் தொகுதியில் 1½ லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். அங்கே ஒரு காவல் நிலையம்தான் இருக்கிறது. 52 கான்ஸ்டபிள்கள்தான் இருக்கிறார்கள். அதை சென்னை நகரக் காவல் துறையோடு இணைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கயவர்கள், திருடர்கள் அறவே ஒழிக்கப்பட்டு விட்டார்கள். ஆனால் பிக்பாக்கெட் அதிகமாக இருக்கிறது. அது தலை தூக்காமல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அந்தக் காவல் நிலையத்தை சென்னை நகரக் காவல் துறை யோடு இணைக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப் பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

(பிற்பகல் 1-30)

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

## பேரவை அலுவல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்; பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2-4-1985 அன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி 24-1-1985 முதல் பேரவை நிகழ்ச்சிகள் கீழ்க்கண்டவாறு நடைபெறும் என்பதைபேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

| | |
|---|---|
| 24-6-1985<br>திங்கட்கிழமை | 1985-86 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும்<br>20 — வேளாண்மை<br>49 — குடிநீர் வழங்கல்<br>50 — வேளாண்மை குறித்த மூலதனச் செலவு |
| 25-6-1985<br>(செய்வாய்க்கிழமை) | 18 — மருத்துவம்<br>19 — பொதுச் சுகாதாரம்<br>பேரவை மாலையிலும் கூடும்- |
| 26-6-1985<br>(புதன்கிழமை) | 24 — தொழில்கள்<br>51 — தொழில் வளர்ச்சி குறித்த மூல தனச்செலவு |
| 27-6-1985<br>(வியாழக்கிழமை) | 3 — மோட்டார் வண்டிகள்-சட்டங்கள் நிர்வாகம்<br>39 — சாலைகளும் பாலங்களும்<br>40 — சாலைப்போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும். |

| | | |
|---|---|---|
| | 54 — | சாலைகளும் பாலங்களும் குறித்த மூலதனச் செலவு. |
| | 55 — | சாலைப் போக்குவரத்துப்பணிகளும் கப்பல் போக்குவரத்தும் குறித்த மூலதனச் செலவு. |
| 28-6-1985 (வெள்ளிக்கிழமை) | 5 — | முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் |
| | 6 — | பத்திரப்பதிவு |
| | 10 — | பால் வழங்கு திட்டங்கள் |
| | 22 — | கால்நடை வளர்ப்பு |

மற்ற மானியக் கோரிக்கைகள் என்று எடுத்துக் கொள்ளப்படும் என்பது குறித்து பின்னர் அறிவிக்கப்பெறும். 24-6-1985 அன்று காலை 10-00 மணிக்கும், அடுத்து வரும் நாட்களில் வழக்கம்போல் காலை 9-00 மணிக்கும் பேரவை கூடும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 8-4-1985 காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

154. வருவாய்த் துறையின் 7-9-1971 ஆம் நாளிட்ட II-1 என் 3987 (b)/1971 ஆம் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 16-6-1984 ஆம் நாளிட்ட 996 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்விளை நிலங்கள் (பதிவுரு குடிவார உரிமைச்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1969) 18 (4) பிரிவின் கீழ்,பேரவை முன் வைக்கப் பெற்றது].

155. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக் கட்டளைகள் சட்டத்தின் 36-வது பிரிவின் வழிவகைகளிலிருந்து சில கோவில்களுக்கு விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 4-8-1984 ஆம் நாளிட்ட 853 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு அறக்கட்டளைகள் துறையின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].



பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்—தொடர்ச்சி.

156. இந்துசமய-அறக்கட்டளைகள் சட்டத்தின் 36-வது பிரிவின் வழிவகைகளிலிருந்து திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலுக்கு விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 1-8-1983-ஆம் நாளிட்ட 860-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

157. இந்துசமய-அறக்கட்டளைகள் சட்டத்தின் 36-வது பிரிவின் வழிவகைகளிலிருந்து மதுரை மாவட்டம், பழனி தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானத்திற்கு விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 23-6-1984-ஆம் நாளிட்ட 679-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு அறக் கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

158. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் 1983-84-ஆம் ஆண்டிற்கான பத்தாம் ஆண்டறிக்கை [1959-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

159. மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம்1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

(ஆ.) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள் எதுவுமில்லை—

சென்னை-600 008.
139430

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District)
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P N Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P Bagchi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

---

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.